விஷ்ணுமயம்.

ஸ்ரீ மகா பாகவதம்.

நெல்லி நகர் அருளா[illegible] ம[illegible]

ஸ்ரீ வரதராஜ ஐயங்கார் அருளியது.

இரண்டாம் புத்தகம்.

இஃது

கோயமுத்தூர் நேடிவ் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்
பாம்பரை வித்துவான்

பவாநி பாலபாரதி முத்துசாமி ஐயர் அவர்கள்

கோயமுத்தூர் வித்துவான்
ம-ா-ா-ஸ்ரீ கந்தசாமி முதலியார் அவர்கள் மாணாக்கர்
ஷை யூர் லண்டன் மிஷன் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள்

காளப்பட்டி வித்துவான்

ல. வே. திருமலைகொண்ட நாயக்கர் அவர்கள்

என்னும் மூவராலும்
பலதேச ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு பரிசோதிக்கப்பட்டு
அச்சிட்ட பிரதிக்கிணங்க,

ஷை. வித்வான் ல. வே. தி. அவர்கள் குமாரர்

தி. வி. சிங்கிரி நாயக்கர் அவர்களிடம்

அநுமதிபெற்று,

பி. நா. சிதம்பர முதலியா ரவர்களது

சென்னை குயப்பேட்டை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

முகவுரை.

இம்மகா பாகவதத்தில் கண்ணன் சரிதங் கவின்பெறக் கூறப் பட்டிருக்கின்றது. இங்ஙனங் கண்ணன் சரிதங்கூறிய பாகவதங் கள் இதிகாசம், புராணம், சம்மிதை, உபசம்மிதை, விஷ்ணு ரக சியம், விஷ்ணுயாமளம், கௌதமசம்மிதை என எழுதிறத்தின வென்ப. அவற்றுள் தமிழுலகுணர மொழிபெயர்க்கப்பட்டன இதி காச பாகவதம் புராணபாகவதம் என்னும் இரண்டுமேயாம். அவற் றுள் சூர்ணிகைகள், விருத்தங்கள், பத்தியங்கள், வாக்கியங்கள், தண்டகங்கள் என்பவற்றானிறைந்த இருநூறத்தியாயங்களையுடைய 12 கந்தங்களாக வியாச முனிவராற் செய்யப்பட்ட இதிகாச பாக வதம் சற்றேறக்குறைய ஐயாயிரம் செய்யுள்களால் மொழிபெயர்த் தியற்றப்பட்டுள்ளது. அறிஞர்புகழும் ஆரியப்பப்புலவரா லியற் றப்பட்ட இது கோமளபுரம் இராஜகோபால பிள்ளையவர்களால் சிலகாலத்தின்முன் பரிசோதித்து அச்சியற்றப்பட்டு வெளியுலாவு கின்றது. அதற்கு நெடுநாள் முன்முதற்கொண்டு இவ்விதிகாச பாக வதத்தின்படி எழுதப்பட்ட தமிழ்நடை அச்சுவாய்த்தோன்றி தமிழ் நாடெங்கும் உலாவுகின்றது.

புராணபாகவதம். 36000 சுலோகமுடைய இதை இயற்றி னாரும் வாதராயணமுனிவரேயாம். இதில் 25 கீதைகளடங்கியிருக் கின்றன. எம்பெருமான் திருவவதாரங்களில் ஆறு திருவவதாரங் களின் சரித்திரம் விரிவாகக்கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு அத்தி யாயத்திற்கும் தலைப்பில் கடவுள் வாழ்த்துண்டு. பெரும்பாலும் அநுட்டிப்பு சுலோகங்களாலும் சிறுபான்மை பிறவற்றாலும் அ மைந்த அறுநூறு அத்தியாயங்களையுடையது. கந்தம் என்னும் பகுப்பு இதில் இல்லை. தசாவதாரங்களும் இதிற்கூறப்பட் டிருக் கின்றன. இச்சரித்திரங்களைக் கூறினார் நாரதபகவான். கேட்டார் உருக்குமிணிப் பிராட்டியார். இதற்குத்தான் மகாபாகவதம் என்று பெயர். பின்னர் இதனைச் சுகமுனிவர்கூறப் பரிக்ஷித்துக் கேட்ட னன் என்ப. வியாசர்செய்த புராணம் பதினெட்டனுளொன்றாகிய விம்மகாபாகவத புராணத்தைத் தமிழுலகுணர்ந்துய்ய மொழிபெ யர்த்தியற்றினார் நெல்லிநகர் அருளாளதாசரென்னும் மதுரகவி ஸ்ரீவரதராஜ ஐயங்கார். அவர் இதை சற்றேறக்குறைய 9000

செய்யுள்களாலியற்றி இற்றைக்கு 350 வருஷங்களின் முன் சுப கிருதுவருஷம் சித்திரைமீ குருவாரம் உத்திராட நக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில் திருவரங்கத்தில் அரங்கேசர் முன்னிலையில் அறிஞர்களறிய அரங்கேற்றினர் என்ப. அது இம் மகாபாகவதத்தின் திருவரங்கப்படலத்தில் உள்ள

ஆயுமறையோரெண்ணவருஞ்சகார்த்த மாயிரத்துநானூற்றோடறு பத்தஞ்சார், தூயசுபகிருதுதனின்முதன்மாதத்திற் றுலங்குகுருவாரத் துத்திராடநாளி, னேயமுடனெல்லிநகர்வரதராச னிகரிலரங்கத்திலர வணையினேங்கு, நாயகன்முன்னறிஞர்மகிழ்ந்திடவேவாசு தேவகதை யரங்கேற்றிலனுற்றனே.

என்னும் செய்யுளால் விளங்குகின்றது.

இம்மகாபாகவதத்தை அச்சிடவேண்டுமென்று புங்கத்தூர்க் கந்தசாமிமுதலியார் என்பவர் சற்றேறக் குறைய 25 வருஷங்களுக்குமுன் முதற்கொண்டு வருந்தி முயற்சித்து இற்றைக்கு நாலைந்து வருஷங்களின் முன் 4664 செய்யுள்களை மாத்திரம் அச்சியற்றி வெளிவிட்டார். எஞ்சியதையும் விரைவில் வெளிவிடவேண்டுமென்று எண்ணியிருந்த அவர்கருத்து முடிவெய்து முன் அவர் ஆயுள் முடிவெய்தினமையின் அது வெளிவராதொழிந்தது. அதை வெளிப்படுத்துமாறு ம-ள-ள-ஸ்ரீ, இராமசாமி முதலியாரவர்களைப் பலரும் பலமுறையும் தூண்டினமைபற்றி அவர்களும் அதிற் கருத்தைச்செலுத்தி விரும்பியபடி நாங்களும் பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு இயன்றவரை பாடுபட்டுப் பரிசோதித்துச் சிற்சில பிரதிகளிற் காணப்படுமாறு வயினதேயப் படலத்தையும் உடன் சேர்த்து வெளிப்படுத்தினோம். என்றாலும் ஒரு சிறிதும் பிழையறப் பரிசோதித்தோமென்பேமா! இல்லை, இல்லை. இறைவனெறித்தொழிந்த ஒருவராலும் அஃதியலாமை ஆருமறிவர். இப்பதிப்பில் ஏதேனும் குறைகள் காணப்படின் அவற்றை நேரே எங்களுக்கு அறிவிப்பவர்களிடத்து மிக்க நன்றியுடையர்களாய் வந்தனஞ்செலுத்துவதுடன் அவற்றைத் திருத்தி மறுபதிப்புப் பதிப்பிக்கும்போது பதிப்பிப்போம்.

பா. மு.
ச. தி.
கா. ல. வே. தி.

1891. விகுர்திஷு.

28-3

விஷ்ணுமயம்.

ஸ்ரீமகாபாகவதம்.

சுருக்கம்.

மலரவன் படைத்தவிம்மாநிலத்திலே, எந்நாட்டினுஞ்சிறந்து விளங்கும் விதர்ப்பநன்னாட்டிலே, குண்டினபுரத்தைத் தனக்கு இராஜதானியாகக் கொண்டு அந்நாட்டை ஆண்டுகொண்டு வீடஎன்ஞோர் மன்னவன் இருந்தான். அவன் அரசர்க்கு வேண்டுங் குணங்களில் அணுவளவுங் குறைதலில்லாதவனுய் அழகுறு செங்கோல் வழுவா தோச்சி வருங்காலத்தில் அச்சுதன்றிருவருளால் உருக்குமன் முதலாகவைவர் புத்திரர்களைப் பெற்றிருந்தும் ஓர்பெண்மகவு தனக்கில்லாக்குறையை நினைந்து பெரிதும் வருந்தி, அதுகாலையில் அவன்மனைவியும் அவ்வாறு மனம்வருந்திக் கண்ணீர்வீழ்த்தக்கண்டு "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவமீண்டு முயலப் படும்," என்றபடி பெண் மகவீன்று தன்குறை தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அரசை அமைச்சர் மாட்டு விடுத்து மனைவியுடன் காடுசென்று ஈரடியாலே மூவுலகளந்த வெம்பிரானை நோக்கிப் பல நாளாகப் பகர்தற்கரிய பெருந்தவஞ் செய்தனன். அத்தவத்திற்கிரங்கி அரிமுன்னின்று நீவேண்டியவரம் யாதென, எம்பெருமானே மலர்மகளையொத்த வடிவுடன் குணங்களிலுங் கற்பிலும் வானத்தும் வையத்தும் ஒப்புயர்வில்லாதவளாக ஓர் பெண்மகவை அருளுவதோடு நற்குண நற்செய்கையுடன் எழின்மிகுத்தவனுய் ஒப்புயர்வின்றி விளங்கும் ஒருவனே யவன் மகுணனும்படியும் அருள்புரியவேண்டும் என இறைஞ்ச அங்ஙனமாகுக என வரந்தந்து விதர்ப்பனுற்பன் முறையும் வணங்கப்பட்டு அவன்முன் மறைந்து மலரவண் மதிமுகநோக்கி நீ முன் சீதையாய்ப் பிறந்தபோது பிரிவுற்றதுபற்றி வருந்தினுயாதலின் அதுதீர்ப்பது கருதி முன் நான் யாதவர் குலத்திற்பிறக்கின்றேன். பின் நீ விதர்ப்பமன்னன் மகளாகென்று கூறக்கேட்டு மலரவண் மனமிசைந்தனள். அரியருள்பெற்ற

அரசனும் மனைவியோடு குண்டினபுரம்போய் அருமகவீனுங்காலம் எப்போது வாய்க்குமென்று ஆவலுடன் எதிர்பார்த்திருக்க நாலாண்டு கழிந்து நாரணன் யாதவகுலத்திற் சனித்தபின் விதர்ப்பன் மனைவி கருவுற அவளது மணிவயிற்றில் மலர்மகள் மன்னினள். பத்துத்திங்களுங்கழிந்து பிறந்து உரியகாலங்களில் சிறப்புகள்செய்யப்பெற்று உருக்குமணிஎனப் பெயருடையளாய்க் கின்னரரெனக் கீத வேழிசை கற்றுக்கலை மகளுள நாணுமாறு புராணங்கள் பலவோதி ஒப்பிலையெனும்படி வாழ்ந்துவருங்கால், அரிதாள்பணியும் அன்புநிறை யந்தணனான நாரதமுனிவன் வீணையேந்திய கையுடையனாய் உருக்குமணிப்பிராட்டியார் திருமுன்பு வருதலும் பிராட்டியார் எழுந்து அடிபணிந்து ஆதனத்திருத்திப்பின் தாமிருந்துமுனிவரைநோக்கி ஸ்வாமி தேவரீரிண்டடைதற்குஅடியேன்முன்செய்த தவத்தைநோக்கின் அளவில்லாததேயாகும் என்று கூறி மூவரென மூவுலகத்தையும் அளித்தழித்தளிக்கும் இறைவன்யாவன்? அவன் யாண்டுளன் என்பது சிறக்க உரைக்குதி எனக்கேட்டனள். உடனே முனிவரும் பெருமகிழ்ச்சியடைந்து அவ்வரியின் இருப்பு முதலியவற்றையும் ஆதிமூலமென்றழைத்த ஆனையினிடரகற்றி யாதரித்ததையுங்கூறினர். அதுகேட்ட பிராட்டியார் காதலித்துக் கேட்கப் பின்னும் அரிசெயலையும் அவனடியார் செயலையும் பலவாறுகச் சொல்லிக்கொண்டு வருபவர் தசரதராமசரித்திரஞ் சொல்லக்கேட்டுப் பிராட்டியார் முனிவர் தலைவரைநோக்கி எந்தையே அவ்விராமனை நிகர்ப்பார் இப்போது இவ்வுலகில் யாரேனும் உளரோஎனக் கேட்ப முனிவர் மனமகிழ்ந்து அத்தன்மையார் ஒருவருண்டு. யாரெனில் விற்றொழிலாலும் வடிவினாலும் மிக்கருணத்தாலும் கற்றுநின்ற நூலுணர்வினாலும் ஒப்புயர்வின்றி விளங்கும் துவரை மன்னன் என்றுகூறியருளினர். அதுகேட்டுப் பிராட்டியார் அம்மன்னன்யார்? பிறந்தகுலமென்ன? அரசுசெய்யும் பாரெது? அவன் பெயரென்ன? அவன் பகைவர்களை வென்ற வரலாறுஎன்ன? விவரமாக விளம்பவேண்டுமென்று வினவ நாரதமுனிவர் மகிழ்ந்து வடமதுரைமன்னன் போசன்மகனாகிய உக்கிரசேனன்மகள் தேவகி வயிற்றில் கண்ணன் திருவவதாரம்செய்தது முதலாகிய கிருஷ்ண சரித்திராமிர்தத்தைப் புகட்டப் பிராட்டியார் செவிவாயாகவுண்டு தேக்கி மனமோடாவி யக்கண்ணன் கழலிணைபற்ற வழகிய சித்திரம்போலசைவறவிருந்தனர். பின் நாரதமுனிவர் கண்ணன் குணநிசயங்களைக் கட்டுரைத்துப்பாவாய் அவ்வண்ணல்முன் மிதிலையிற் சென்று சிலைமுறித்துச் சீதையை மணந்தாற்போல் துவரையம்ப

தியினின்று இவன்வந்து நின்னை மணப்பனென்று வேதமொழிக ளால் வாழ்த்திச்சென்றனர். அத்தவனடிபணிந்து அனுப்பிய பிராட் டியார் கண்ணன்மீது காதல்கொண்டு கலையிழந்து சோர்வுறமேகலை தலமிசை விழமெல்ல மனிமீதுள நன்மலர் வெந்து பொடியாகமார் பிலணியாரங்கள் வெடிபடப் பரந்தாமன் வடிவங்களை நினைந்து பல வாறுபிதற்றிச் சோர்வுற்றனர். சேடிகள் அதுகண்டு பனிநீர் தெ ளித்துயிர்மேவச்செய்யச் சேடியர்களைநோக்கி மங்கைமீர் என்னு யிரிருக்கச்செய்யவேண்டுவீரேல் கண்ணன் வடிவத்தைக் கவினுற வரைந்துதருமின் என்றனர். உடனேயவர்கள் அவ்வாறுசெய்து தரக்கண்டு கண்ணனையே நேரிற்கண்டாற்போல அகமிகமகிழ்ந்து அப்படம்முன்னிலையாகப்பேசி வருந்தினர். அதுகாலையில் விதர்ப்ப மன்னன் தன்மகளின் பருவம்நோக்கி மணம்புரிவிக்குங் கருத்து டையனாய் அமைச்சர் முதலாயினாரைக்கூட்டித் தன்மங்கைக்குமகு ணனாவான் யாரெனவினவலும், அவர்கள் அரசனைநோக்கிவேந்தே! உலகத்தில் தந்தைதன் மகளுக்குக் கல்வியுடையவனே கணவனாக விரும்புவான். தாயோ தனமுடையானே மருமகனாக வேண்டுவாள். மடந்தையோ மன்மதனையொத்த வழகுடையானே கணவனாக வேண்டுமென்று விரும்புவாள். இம்முத்திறத்தினரது விருப்பத் திற்கும் இசைந்தநாயகன் துவரைமன்னனாகிய கண்ணன்தானென் றுகட்டுரைத்தார்கள். உடனே விதர்ப்பமன்னன்மகன் உருக்குமின் என்பவனெழுந்து சினந்து அவ்வவைமுன் கண்ணனையிழித்துப் பலசொல்லி "என் தங்கையைச்சேதிபராசன் மகன் சிசுபாலனுக் கேயன்றிக் கண்ணனுக்குக் கொடுக்கலொட்டேன். நாளையதினமே சிசுபாலனுக்குக் கொடுப்பேன்," என்றுசொல்லி யுடனே வருமா றுசிசுபாலனுக்குத் தூதேவி மறுநாளில் உருக்குமிணி திருமண மென்று ஊரெங்கும் முரசறையும்படி கட்டளையிட்டான். அது கேட்டுப் பிராட்டியார் சகிக்கலாற்றாதவராய் மனமிகநொந்து "என் தந்தைவலியில்லான். தமயனோ வறனிலாத வதிபாவி, வேறுதுணை யுங்காணேன். நந்தனருண்மைந்த நீ என்னையடைந்தருள்" என்று சொல்லி, "காளமுகில் வண்ணன்வரும் வகைகாணேன். நாளையெ னது முன்னோன் அதிபாதகமியற்றுவனே. அதன்முன் நானே எனதுயிரைமாய்ப்பேன். இதுவே செயத்தருங்கருமம்" என்று கூறியயர்ந்தார். அதுகண்டு சேடியர்கள் வருந்தி எடுத்தணைத்து ஏற்றிடுமுபசாரங்கள் செய்து உயிர்ப்பித்து அவர்களுள் மன்மதன விலாசியென்பாள் பிராட்டியை நோக்கிப்பாவாய் நான்முகனையொத் தநம்புரோகிதரை இப்போதே கண்ணனிடம் தூதேவினால் உன்

கருத்திடேறும் என்றுரைக்க, பிராட்டியார் இசைந்து புரோகிதனை யழைப்பித்து தன்கருத்தைக் கண்ணனறியும்படி வரைந்துடனே துவரைபோய் மீளும்படியனுப்பினர். அவனும் உடனே துவாரகையடைந்து கண்ணபிரானிடம் தான்வந்தவரலாறுகளை வகுத்துரைத்துப் பிராட்டியார் வரைந்துவிடுத்த திருமுகத்தையுங் கைக்கொடுத்தனன். கண்ணனதை யன்போடேற்றுப் படிப்பித்து அடங்கியவையறிந்து அகமகிழ்ந்து அந்தணனைநோக்கிப் பிராமணேத்தமா நாளையதினம் யான்அங்குவந்து யாவர்தடுப்பினும் அம்மங்கையை மணம்புரிவேன். இச்சங்கதியை நீ முன்சென்று அவட்கு அறிவி என்று அனுப்பினன். புரோகிதர் சென்றனரோ நமக்கென்னவென்று நடந்துவிட்டனரோ அவர்தான் போய்ச் சொல்லினும் கண்ணன் நம்மை ஓர்பொருட்டாய் எண்ணிவருமோ தவிர்ந்திடுமோ என்று வருந்தியிருந்த பிராட்டியாரிடம் அந்தணன்வந்து கண்ணன் கூறியவற்றைச் சொல்லுதலும், பிராட்டியார்கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்றவ் வேதியர்க்கு வேண்டுவன வெறுப்பநல்கி கண்ணன் எப்போது வருமோவென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். முன் உருக்குமின் அனுப்பிய தூதுவர் விரைந்து சேதிபராசன்மகன்சிசுபாலனிடம் சென்று உருக்குமின் தந்தவோலையினைத்தருதலும் அதைப்படிப்பித்து அறிந்து பெருமகிழ்ச்சியடைந்து உடனே சிசுபாலன் நால்வகைச்சேனையும் புடைசூழக் குண்டினபுரம் அடைந்தனன். தந்தவக்கிரன், சாலுவன், மகதராசன், சராசந்தன், சேதிபன், பவுண்டரன் முதலியவர்களும் உடன்வந்தனர். இவர்களெல்லாரையும் உருக்குமின் என்பவன் எதிர்கொண்டழைத்து மண்டபத்திருத்தி அர்க்கியாசமனுதியுபசாரங்கள் செய்ய மகிழ்ந்திருந்தனர். பின்சிசுபாலன் மணக்கோலங் கொண்டதறிந்து உருக்குமின் உட்சென்று தன்றுயையழைத்துத் தங்கையை மணக்கோலஞ்செய்து அழைத்து வரும்படிசொல்ல அத்தீச்சொல்லில் விருப்பமற்றவன்னையானவள் தன்மடந்தையிருக்கும் இடத்தை யடைந்தனள். அக்காலையிற்பிராட்டியார் கண்ணனின்னும் வரவில்லையேயென்று மனம்வருந்துபவர், சேதிபன்மகன் சிசுபாலன் வந்தானென்பது கேட்டு விடந்தலைக்கொண்டாற்போலப் பெருவேதனைப்பட் டிருப்பதைக்கண்டு விதர்ப்பன்மனைவி. தன்மகளையழைத்துக் கண்ணீர்விட்டுத் தன்மகனைவைது பிராட்டியாரை நோக்கிப் பெண்ணே வருந்தாதே கண்ணன்வந்து மணம்புணரும் என்று கூறி, அம்பிகையானவள் இந்த மாநகர்தனில் சிந்தையினினைத்த வரங்களை நினைத்தபடி நினைக்குமுன்கொடுப்பவள் அவளைச்சென்று நீ வணங்கி வரம்

வேண்டினால் உடனே கண்ணன்றேர்மீது வரும் என்றுரைத்துத் தேற்றினாள். உடனே பிராட்டியார் அவ்வாறே பகவதியின் கோயிலடைந்து தொழுது வரங்கேட்க விரும்புதலும் அன்னைமகிழ்ந்து நீராடிக் கலைபுனைந்து கலன்களணிந்து வழிபாட்டிற்கு வேண்டுவனவற்றை எடுப்பித்துக்கொண்டு சிவிகையிடைச் சியுடனே பகவதி கோயிலடைந்தனள். கோயில்சென்றதாயும் தனயளும் விதிமுறையின்படி பகவதியை வழிபட்டுக் கருதியவரம் வேண்டிநிற்குங்காலையில் கண்ணன்தேரினின்றும் இழிந்து பாதசாரியாக வருவதுகண்டு பிராட்டியார் பெருமகிழ்ச்சியுற விதர்ப்பன் மனைவிகண்டு கண்ணனென்றறிந்து "யாதவகுமரா, உன்னையல்லாமல் ஒன்றையும் என் மகள் உள்ளத்தில் உயர்வாகவுன்னியற்றியாள் நீயிவள் நாயகன் நீயிவளை நாயகியாகக்கொண்டு வாழ்த்தி என்உயிரனையாளாகிய விவளைக்காக்குதி," என்றுரைத்துப் பிராட்டியாரைப் பிடித்துக்கண்ணன் கையிலீந்தாள். உடனே பிராட்டியார் தன்காலிடைப்பணியக் கண்ணன் களிப்படைந்து எடுத்தணைத்துப் பிராட்டியாருடன் தேரேறினன். அதுகண்டு தூதுவர் விரைந்தோடிமண்டபத்தினிடத்துச் சிசுபாலனோடு மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும் உருக்குமினடிபணிந்து அஞ்சலிசெய்து பிராட்டியாரைக் கண்ணன் தேரின்மீது எடுத்துவைத்துச் செல்கின்றானென்று சொல்லக் கேட்டு, எழுந்துநின்று மிகவெகுண்டு, யாவர் காக்கினும் யாதவன்றனை இன்று வென்று வடிவுமிகுத்தவுருக்குமிணியை மீட்டுவரேனேயாயின் அவ்விடையனாகிய வவ்விழிகுலத்து யாதவனுக்கு அடிமையாவேன் என்றதிறுதியாகிய சபதங்களைச்சொல்லினான். அதுகேட்டு சராசந்தன் "எனக்குப் பன்முறையுந் தோற்றோடிக்கடனடுவைத் தனக்கிடமாகக்கொண்ட இழிதகையானைக் கடிந்து நான் இன்று சிறைவைப்பே" னென்றான், அதுகேட்டுத்தந்தவக்கிரன் முனிந்து "நந்தன்மைந்தனை நான் தனியாகவே முந்திவெல்வே" னென்றான். இவ்வாறே சாலுவன் பவுண்டரன், சேதிபன் என்பவர்களும் தனித்தனி நான்தொலைப்பேன், நான் வெல்வேனென்றுரைக்க, உடனே போருக்காயத்தமாய் உருக்குமின் எழுந்தனன். எழுந்து தன்முன்னின்ற சேனைவீரர்களை நோக்கி, மதியேதுமிலாதஇடையன் எங்கையைக்கொண்டு செல்லுவதன் முன்படையோடு சென்று தடுமின்என்றுரைக்கக்கேட்டு உடனே நால்வகைச் சேனைகளுங்கூடியார்த்தெழுந்து சென்றனர். உருக்குமினும் சேதிபதினையர் சூழ்ந்துவர ஆரவாரித்துக் கொண்டுவந்தனன். உருக்குமினுடைய சேனைவீரர்கள் கண்ணனையடைந்து உருக்குமிணியைவிட்டுச்

செல்லென்றுகூறி எதிர்த்துப் போருக்குத் தொடங்குதலும், கண்
ணன் குறுநகைபுரிந்து வில்வளைத்து யாவரும் அஞ்சும்படி நாணொ
லியெழுப்பி அம்பெய்தலும் வீரர்கள் பலருமடிந்து வீழ்வதுகண்டு
ஒருவர்பின் ஒருவராக வந்தெதிர்த்த பவுண்டரன், சாலுவன், தந்த
வக்கிரன், மகதராசன், சிசுபாலன் இவர்களையுந் தோற்றோடச்செய்
தனர். உடனே உருக்குமின் வெகுண்டு சேனைசூழச்சென்று கண்
ணனையெதிர்த்துப்பலவம்புகளை யெய்யக் கண்ணனும் வில்வளைத்
துச் சிற்சிலவம்புகள்எய்து உருக்குமினுடைய வம்புப்புட்டிலும்
வில்லுந்தேரும் குதிரைகளும் கவசமும் அழித்து அவன் மார்பி
னுய் ஊடுருவச்செய்ய உடலெங்கும் குருதிபெருக்கெடுக்க, உருக்
குமின் மெலிந்து தேரின்மீது மூர்ச்சித்து வீழ்ந்தான். அது கண்டு
வருந்திய உருக்குமிணியைநோக்கி பாவாய் இவனுக்குயிர் போயி
லது உயிர்பிழைப்பான் என்றுகூறித் தன்அணிநெடுந்தேரையோட்
டியவணின்றும் அகன்றுசென்றனர். அப்போது பலராமர் தேரே
றியெதிர் வரக்கண்டுகண்ணன் பிராட்டியோடு அவனடிபணிந்துதே
ரேறி மகிழ்ந்துசென்றார். பின் சிறிதுநேரம் சென்று உருக்குமின்
மூர்ச்சைதெளிந்து மாடுமேய்த்தவன் சமயம்பார்த்து ஓடினான்.
போகுமுன் தடுப்பேனென்று சொல்லிவரச்சிசுபாலன்முதலினோர்
களும் சூழ்ந்துவந்து எதிர்த்தார்கள். அதுகண்டு பலராமன் எதிர்த்
துச்சென்றுஅவர்களையெல்லாம் பின்வாங்கியோடச்செய்து அடர்ந்
துவந்த உருக்குமினைப்பற்றி வாயிற்குருதிசோரநெருக்கி மார்பில
டித்துத் தலைதிருகப்போகுந் தருணத்தில் பிராட்டியார்கண்டு கண்
ணினீர்வாரவருந்தி அச்சுதனடிபணிந்து "வசுதேவனருண்மைந்த,
என்முன்னோன் மடிவதன்முன் விரைந்துசென்று பலராமரைவிலக்
கியருள்க," எனவேண்டினாள். உடனே கண்ணனும் விரைந்து
சென்று "அரியயனிந்திரன் கடல்எழுந்த விடமுண்ட சிவன் என்
பவர்களும் உன்னோடெதிர்த் தமராற்றார்கள். அங்ஙனமாக சில
மொரு சிறிதுமிலாத விப்பாலனையோ நீ முனிதி! சிங்கஞ்
சிறுநரியோடெதிர்க்குமா? இவனையுய்யவருள்" என்று வேண்டு
தலும் பலராமரும் அத்தியனை விடுத்தனர். அதுகண்டு தேவர்கள்
நகைத்து மலர்மழைபொழிந்தனர் உயிர் தப்பியோடிய வுருக்கு
மினும் தேரேறிக் கண்ணனை நோக்கிச் செல்லாதே எனவுரைத்
துக் கண்ணனது தேரின் பாகன்மீதும், பரிகளின்மீதும் அம்புகளை
யெய்ய கண்ணனும் குறுநகைசெய்து வில்வளைத்து அம்பு எய்து
உருக்குமின் தேரும் வில்லும் சிதைந்து வீழச்செய்தனர். உடனே
உருக்குமின் கட்கமெடுத்துக் கடுகெனவருதலும் கண்ணனோரம்

பால் அதைப்பொடி படுத்தினன். அது பொடிபடவும் உருக்குமின் மற்போர் புரிவேனென்று பரந்தாமன் தேரினிடைத்தாவிக் கண்ணனைக்கட்டிப் பிடித்தலும் அச்சுதன்கண்டு இவன்வீரம் நன்றுஎன்று அவனைப்பிடித்து இருகைகளையும் வாரினாலே தேர்க்காலிற்கட்டி அவன் சிகையை யுலகோர்கண்டு நகைக்கும்படி ஐந்துபாகமாச் சிறைப்பித்துப் பிராட்டியைநோக்கி மின்னுகின்ற வாள்போலும் விளங்குகின்ற விழியாளே, விதர்ப்பமன்னன்மகளே உன்முன்னவனது வீரத்தைப்பார் என்றுநகைத்தனன். உருக்குமின் பாரின்மீது பங்கமுற்றுத் தலையிற் சிகையைந்துகொண்டு தங்கைநாணுமாறுநிற்றலைக்கண்டு பலராமர்விரைந்துவந்து கண்ணனைநோக்கி "தம்பிகாபிறுகொண்டவனைக் கட்டியதன்றி உன்னுயிரன்னுளது உடன்பிறந்தானென்று சிறிதும்நினையாமல் தலைமயிரையும் ஐந்துபங்குறச் சிறைப்பித்தனையே! துட்டனாயினும் துன்மதியுடையோனாயினும் நமக்குக்கட்டத்தைக் கொடுப்போனாயினும் உனது கற்புடையமனையாகிய வட்டமாமதிபோல் விளங்கு முகத்தையுடைய உருக்குமிணிக்காக அவனைவிட்டு நமதுநகர்க்குச்செல்வதே நன்" றென்று சொல்லியவன் கட்டறுத்து ஐஞ்சிகையை யொருசிகையாக்கி அன்போடு அவனைநோக்கி உன்மைத்துனன்விளையாட்டாகச்செய்ததை மனங்கொள்ளேலென்று தேற்றி அனுப்புதலும், நாணமிழந்த உருக்குமினும் கண்டோர் நகைப்பரேயென்று தான்முன்னுரைத்த சபதத்தை நினைந்து குண்டினபுரம் செல்லாமல் காட்டகத்துள்போசகடம் என்னும் நகரத்தில் தன்வீரங்குறைந்து தங்கினன். உருக்குமினுடைந்தோடலும் உம்பர் மலர்மழை பொழியக் கண்ணன் திருவுடன்தேரேறி வழியகத்துள்ள வளப்பங்களை வாள்விழி மங்கைக்கு வகுத்துரைத்துக்கொண்டே துவாரகையடைந்து தேரினின்று மிறங்கி யந்தணர் அருமறையோத வழகிய திருக்கோவிலடைந்து அரிவையர் திலகமாகிய பிராட்டியாருடன் தந்தையாகிய வசுதேவரை வணங்கினன். அதுகண்ட வசுதேவரும் ஆனந்தக்கண்ணீர் பொழிதர மைந்தனை யெடுத்தணைத்து மகிழ்ந்தனர். பின்கண்ணன் திருவொடுந்தேவகி யடிமிசைப்பணிய அன்பொடு மைந்தனையும் மருகியையும் மலர்க்கரங்களா லெடுத்து மார்போடணைத்து மகிழ்வுற்றனள். அவ்வாறு ரோகிணிமுதலிய தாய்மார்கள் தாள் பணிந்து மகிழ்ச்சியூட்டி மன்னவர் மறையவர் மாதவர் மகிழ்ந்தினிதிருப்ப மண்டபமதனில் வீற்றிருந்தனன். அரசனாகிய உக்கிரசேனனும், அக்குரூரனும், உத்தவனும் அமைச்சர்களும் கண்ணனையும் கமலத்திருவையும் களிகூரக்கண்டனர். அந்தணர் ஆசிவழங்

கினர். அரிவையர் கருப்புரதீபமேந்தினர். தேவர்கள் பூமழைபொழிந்தனர். அக்காலையில் வசுதேவன் கர்க்கனைநோக்கி மாயவனும் மலர்மகளும் மணம்புணரக் குற்றமற்ற முகூர்த்தம் விரைந்து செப்புகவென்றலும் கர்க்கமாதவன் மகிழ்ந்து காளையாகிய கண்ணன் கமலமலர் மங்கையை மணத்தலுக்கு நாளையே நன்றெனவுரைத்தனன். அதுகேட்டு வசுதேவர் மனமகிழ்ந்து அத்தினபுரத்திலுள்ள தருமனுக்கு மவன் சுற்றத்தார்க்கும் வியாசமுனிவர்க்கும் நந்தனுக்கும் சோதைக்கும் மற்றிடங்களிலுள்ள கொற்றவர்க்கு மணவோலைபோக்கினர். மணவோலைகண்ட மன்னவர்களெல்லா மனமிக மகிழ்ந்து துவரையம்பதியடைதலும் அதன்முன்பே நகரத்தை அணிபெறச்சிங்காரித்துப் பின்குறித்தகாலத்திலே கர்க்கனிருந்து ஓமாதிகள் விதிவழிப்படி நடத்த மாதவன் மலர்மங்கையை மணம்புணர்ந்து தந்தைதாயர் தாள்களிலும் மற்றுள பெரியோர்பாதங்களிலும் வணங்கி மற்றவர்களை வாழ்த்தி ஊர்செல்வார்க்கு விடைதந்து உருக்குமிணிப்பிராட்டியாருடன் கூடி உவந்தினிதிருந்தனன்.

இப்படி நிகழுநாளில் ஓர்நாள் கண்ணன் இராஜசபையில் வீற்றிருக்கும்போது சத்திராசித்து மன்னன்தான் கதிரவனைநோக்கித் தவம்புரிந்துபெற்ற எண்கலப்பொன்னை யீனும் சமந்தக மணியை மார்பிடையணிந்து வரக்கண்ணன்கண்டு இம்மணியினை உக்கிரசேனனுக்குக் கொடுஎன்றுகூற இசையாதுசென்றனன். பின்சிலநாட்சென்று சத்திராசித்துமன்னன் தன்தம்பி பிரசேனனை அச்சமந்தகமணி மார்பிலணிந்து குதிரையேறிச் செல்லுமாறு வேட்டைக்குவிடுக்கக் காட்டில் அவனை ஓர்சிங்கம்கொன்று மணியைக் கவ்விச் செல்ல அதுகண்டு கரடியரசன் சாம்புவன் அச்சிங்கத்தைக்கொன்று மணியைக்கொண்டு சென்று தன்மகள் சாம்புவதிக்கு மார்பிலணியும் பொருட்டுத்தந்தனன். பின் மற்றவர்களுடன் தன்தம்பி மீளாமைகண்டு சத்திராசித்து மன்னன்வருந்தி மாதவன்கேட்டபோதே மணியைக்கொடாமையால் தம்பியைவதைத்து மணிகவர்ந்தான்என்று அழுவதுகேட்டுக் கண்ணன் கடுகெனக் காடுசென்று நடந்தவையறிந்து சாம்புவனுடன்சமர்செய்து அவன்தன்னை மாயவனென்றறிந்துவணங்க அவன்விருப்பத்தின்படி அவனை வைகுண்டத்திற்கேற்றி அவன்மகள் சாம்புவதியை அழைத்துக்கொண்டு துவாரகையடைந்து சத்திராசித்துவுக்குநடந்தவண்ணமுரைத்துமணியையீந்து அரண்மனையடைந்து சாம்புவதியை விதிப்படி மணந்து மகிழ்ந்திருந்தனன். பின் சத்திராசித்து மன்னன் தன்தம்பியிறந்த

வாறறிந்து விளை கண்ணன்மீது பழிநினைந்தோமேயென்றுவருந்திக் கண்ணனிடம்சென்று உனக்கு என்மகள் சத்தியபாமையைத் தர விரும்புகின்றேனென்னலும் கண்ணன்விரும்ப வசுதேவர் சத்திராசித்துவைநோக்கி உன்மகளை என்மகனுக்குத் தருதனன்றென்ன உடனே நாணிச்சயித்து விதிப்படி விவாகம்நடத்தக் கண்ணன்பார் மடந்தையாகிய சத்தியபாமையை மணந்து மகிழ்ந்திருந்தனன். இவ்வாறிருக்கையில் திருதராட்டிரனால் அனுப்பப்பட்டு அத்தினபுரத்திருந்து வந்ததூதுவர், வாரணுசியில் ஐவரும் அன்னையுடன் அரக்குமாளிகையில் எரிந்திறந்தொழிந்தார்கள் என்று கூறக்கேட்டடனே அத்தினபுரியடைந்து அரவக்கொடியோன் முதலியவர்கள் பாண்டவர்கள் இறந்தொழிந்தார்களென்று அகத்து மகிழ்ச்சியுற்றிருப்பினும் புறத்துக்கடல் கொள்ளாக்கவலை யுடலிடைக்கொண்டார் போலத்தழுவியழ ஐவரும் அஞரின்றியுயிர்த்திருத்தலை அறிந்துள்ளோனுதலின் தானும் கபடமாகவே தழுவிஅழுது இறந்தோர்க்குச்செய்யும் கிரியைகளை ஐவர்க்குச்செய்வித்து வீற்றிருந்தான். அதுசமயத்தில் அக்குரூரன் சததனுவாவைப்பார்த்து அன்பனே நீயும் கிருதவன்மாவும் இருப்பவும் சத்திராசித்து மன்னன் தன்மகளைக்கண்ணனுக்கே தந்துவிட்டானே, அத்தீயோனைக்கொன்று அவனிடத்துள்ள சமந்தகமணியைக்கொண்டு தருவாயாகில் நலமென்றுரைக்கச் சததனுவாவும் இணங்கி இரவிடைசென்று கன்னமிட்டுப்புகுந்து ஆண்டுரங்குகின்ற சத்திராசித்துவைக்கொன்று மணி கவர்ந்து மனையிடைச்சென்றனன். பின் சத்தியபாமை இஃதுணர்ந்து தன்னத்தன் இறந்தமைக்கு இரங்கி என்தந்தையைக்கொன்றானை என்கொழுநனல் கொல்விப்பேனென்று கட்டுரைத்து அத்திப்பதியடைந்து அன்பனிடம் உரைக்கக்கேட்டு அரிவையைத் தழுவியழுது துவாரகையடைந்தனன்.

உடனே சததனுவா அக்குரூரனைநோக்கிக் கண்ணன்கடுத்து வந்திருக்கின்றனனே, செய்யுமாறு யாதென்ன, அக்குரூரன் சததனுவாவைநோக்கி நீ ஏன் சத்திராசித்துவைக்கொன்றனை உடனே கண்காணுது செல்லெனக்கேட்டு அச்சமந்தகத்தை அக்குரூரனிடம் கொடுத்துவிட்டு குதிரையேறி விரைந்துசென்றனன். பின் சத்திராசித்துவைக்கொன்முன் சததனுவா என்றுணர்ந்து கண்ணன்பால் வண்ணனுடன் தேரேறித் தொடர்ந்துசெல்ல மிதிலையை அடுத்த சோலையிடத்தில் ஏறியகுதிரை இறந்துவிழ காலிற்காற்றுகப்பறத் தலும் கண்ணனும் தேரிழிந்து துரத்தி கையாழியாலவன் கழுத் தரிந்து அவனிடத்து மணிகாணுது திரும்பி மணிகாணேனென்று

அலாயுதனுடன்கூற அவன்அதில் ஐயுற்றுக் கண்ணனைநோக்கிசத்
திராசித்துவின் மணிக்குரியான் நீயேயன்றி யானன்று. மணிகாணா
விட்டால் மகிழ்வுடனின்னூர்க்குச் செல்லென்று மிதிலையிற்போத
னும் கண்ணன்கண்டு வேறூரிடமாவது அம்மணிகண்ட பின்னாயி
னும் ஊர்வந்துசேர்கஎன்று துவரையடைந்து சத்திராசித்துவை
பெரியிடையிட்டு யிருபுனற்கிரியையும் செய்வித்து எந்திழை துன்
பம்துடைத்தினிதிருக்கையில் அக்குரூரன் அம்மணிகொண்டு அஞ்
சிக்காசியடைந்து வேள்விபுரிந்து தானமீந்திருப்பதறிந்து அச்ச
மின்றி ஊர்வருமாறு அன்பரிடம்கூறியனுப்ப அவனும் உடன்வந்
துபணிந்துமணியையீய அதைஅவனிடம் கொடுத்தனன். பின்மிதி
லையிற்சென்ற பலராமன் வெகுலாசுவ மன்னவனால் எதிர்கொண்ட
மைக்கப்பெற்று மகிழ்வுடனிருந்து தான்பயந்த பானுமதிப்பெண்
ணைப்பாம்புக்கொடியோனுக்குப் பரிவுடனுதவிக்களித்திருப்பவன்,
இவற்றையெல்லாங் கேள்வியுற்றுத் துவரையடைய அக்குரூரன்
அம்மணியை அலாயுதனிடம்கொடுப்ப அவன்அதைசத்தியபாமைக்
குக்கொடுத்தான். பின்கண்ணபிரான், உருக்குமிணி, சாம்புவதி,
சத்தியபாமை இவர்கள் தன்னைச்சூழ்ந்திருக்க மகிழ்ந்தினிதிருந்த
னன். முன் அரக்குமாளிகையில் இறவாது உயிர்தப்பிய பாண்ட
வர்கள் துரோபதை சுயம்வரத்தில் வெளிப்பட்டுப்பார்த்தன் ஒருவ
ராலுமியலாத வில்லைவளைத்துக் கயலையெய்ய அன்னையுரையின்படி
துரோபதையை யைவரும்மணந்து அத்தினபுரியடைந்து பெரிய
தந்தை உத்திரவின்படி இந்திரப்பிரத்தம் சேர்ந்தவுடன் தருமன்
தன்வரலாறுகளைச்சொல்லித் தூதேவக் கண்ணனறிந்து சாத்தகி
யுடன் தேரேறி இந்திரப்பிரத்தமடைந்து பெரியோர்களையும் சிறி
யோர்களையும்வணங்கியும் வாழ்த்தியும் அளவளாவிப்பின் பார்த்த
னுடன் சோலைபடைந்துகளித்திருக்கையில்அருச்சுனனிடைஅனற்
கடவுள் அந்தணவடிவங் கொண்டடைந்து விரும்பியபடி அவன்
அரும்பசிதணிக்கக் காண்டாவனமுதவி ஈண்டமுகில்தடுத்துநின்று
காண்டீபவில்லும் கவனமான்றேரும் கொடியும் கனற்கடவுள் தரவும்
அவ்வெரியிடைத்தப்பிய மயனால் நீரெனப்பளிங்கும் பளிங்கென
நீரும்தோன்றும் பெருமண்டபம் நிருமிக்கவும்பெற்றுமகிழ்ந்தபின்
விசயனுடன் தேரேறி காட்டிடைவேட்டைவிரும்பிச்சென்றுவேட்
டையாடி நீர்குடைந்து இருப்பவன் சோலையுள் அருச்சுனனால் கா
ளிந்திதவம்புரிவதறிந்து அவள்முன்னின்று அவள்வேண்டுதலுக்
கிசைந்து தேரேற்றி இந்திரப்பிரத்தமடைந்து வேதவிதிப்படி
கர்க்கனெய்தி ஓமாதிகள்செய்யக் காளிந்தியை மணம்புணர்ந்து சில

நாள் அங்கிருந்து பாண்டவர்களிடம் விடைபெற்றுத் துவரையடைந் துதாய்தந்தைய ரடிபணிந்து தேவியர்தற்சூழ மகிழ்ந்தினிதிருந் தனன்.

பின் கண்ணபிரான் அவந்திமன்னன் மகள் மித்திரவிந்தை சுயம்வரமென்று அம்மன்னவன்விடுத்த தூதுவரால்அறிந்து அங்கு சென்று அவ்வரிவையங் குற்றவர்களைப்பார்த்துவந்து தன்கழுத் தின்மாலையிட அதுகண்டு அரசர்கள் ஆற்றாதுபோருக்கெழ அவர் களைத்தோற்றோடச்செய்து அம்மித்திரவிந்தையை மணந்துஅவள் தந்தைகொடுத்த அரும்பொருள்களைப்பெற்றுத் துவாரகையடைந் தான். பின்கவுசலராசன் தான்பெற்ற நாக்கினசித்து என்னும் பெண்ணை தன்னகரத்துள்ள எழுவிடைகளையும் ஒருசேரத் தழு வுவோனுக்கு மணம்புணர்த்துவேனென்று முரசறைவித்ததுகேட் டுஆண்டடைந்து அக்கவுசலமன்னன்விடுத்த எழுவிடைகளும் தம் மிடம் வருவாரைச் சினந்துநோக்கி இடியெனவதிர்த்துக் கோட்டாற் பாயவருவதுகண்டு அரசர்களெல்லாம் ஓடினாராகக் கண்ணன் எழு ருவங்கொண்டு ஒருகணத்தில் அவ்வெழுவிடைகளை வாலைப்பற்றிச் சுற்றிக்கொன்று நாக்கினசித்தால் மாலைசூட்டப்பெற்று மண்டபம டைந்து விதிவழி மணம்புணர்ந்து நாக்கினசித்துடன் தேரேறிவழி யில்தடுத்த அரசர்களை அருச்சுனன் முறியடிக்கமகிழ்ந்து துவரை யடைந்தனன். பின் சுரதகீர்த்திமன் பெற்றபத்திரை கண்ணன்மீது காதல்கொண்டு அவன் வரலாறுகளை வீணையினிசைத்துப்பாடி அ வன்வடிவத்தை அழகுபெறஎழுதி அதுமுன்னிலையாகசிற்சிலபேசி அயருங்காலையில் ஆண்டடைந்து அவன்விரும்பியபடி அவளைத்தே ரேற்றித்துவரையடைந்து விதிவழிப்படி மணம்புணர்ந்தனன். பின் பத்திரராசன்மகன் பிரகசேனன் என்பான்பெற்ற இலக்கணையென் பாள் இயல்புறு புராண சாத்திரங்களெல்லாம் எழில்பெறக்கற்று கண்ணன் கழலிணைநினைந்து அவனைமணம்புணரக்கருதி வருந்தி யிருந்தாளாக அம்மன்னவன் தூயதனுவளைத்தியலுமச்சம் வீழ்த் தாருக்கென்மகளை மணம் புணர்ப்பேனென்று முறசறைவிப்பது அறிந்து ஆண்டடைந்து வீரரெண் விசயனங்கர்கோன் சேதிபன், முதலினோர் எய்துவீழ்த்தொணாது நின்றகயலைவீழ்த்தி இலக்கணை யை மணம்புணர்ந்து அம்மன்னவன் ஈந்தபொருள்களுடன் துவரை யையடைந்து தேவியர்தற்சூழ மகிழ்ந்தினிது வீற்றிருந்தனன். பின் நரகாசுரனால் சிறையிடப்பட்ட பார்த்திபர் பதினாறாயிரவரும் தங்களைச் சிறைநீக்கி ஆட்கொள்ளுமாறு வேண்டித் தூதேவுதலும்

அவர்கள் துன்பம்நீக்குவதாகக்கருதிச் சத்தியபாமையுடன் கலுழன் மீதிவர்ந்துசென்று நரகாசூரனது எழுவகைமதிலும் பழுதுபடச் செய்து முரன்முதலிய படைத்தலைவரைக்கொன்று எதிர்த்துவந்த நரகனுயிர் தொலைத்து பூதேவி வேண்டுகோளின்படி சேய்க்குமுடி சூட்டி நரகனால் சிறையிடப்பட்ட அரசர்களுடன் அவ்வரசர் மடந்தைகளும் மலர்முகங்கொண்டு வணங்கிச்சூழக் கண்ணன் கலுழன் மீதேறிச் சத்தியபாமையுடன் துவரையடைந்து பதினாறாயிரமண்டபங்களில் ஏகமுகூர்த்தத்தில் பதினாறாயிரம்பெயரையும் நான்முறைப்படிமணந்து மகிழ்ந்திருந்தான். இங்ஙனநிகழுநாள்களுள் ஓர் நாள் கண்ணன் உருக்குமிணிப்பிராட்டியாரைநோக்கி, மாதே, சேதிபன்முதலியபேரரசர்கள் நின்னை விரும்பியிருந்தார்களாக நீஅவர்களைவிடுத்து என்னைவிரும்பியடைந்தமை என்னபேதமை? இனியாயினும் உன்னெழிற்கொத்த மன்னவனை யடையெனப்பரிகாசமாகக்கூற அதுகேட்டுச் சகிக்கலாற்றாது வருந்திய பிராட்டியாரைத் தழுவித்தேற்றியிருக்கையில் நாரதமுனிவர்வந்து ஆசிவழங்கக்கண்ணன்எழுந்து பிராட்டியுடன்வணங்கிச் செயத்தகு முபசாரமனைத்துமியற்றிஇருக்க முனிவர் கண்ணனிடம் ஓர் பாரிசாதமலரைத்தர அதைப் பரந்தாமன் பிராட்டியாரிடம் கொடுத்தலும் அதை அவர் வாங்கி முடியிடைச் சூட்டிக்கொள்ளக்கண்டு முனிவர்பிராட்டியை நோக்கிப்பெண்ணே, இப்புட்பம் நின்முடியேற நெடுந்தவஞ்செய்ததுபோலும். உனக்கு அஃதோர்பொருட்டோ என்றுகூறிச் சிதரனிடம் விடைகொண்டுசென்றுசத்தியவாமையின் மனையிடையடைந்துஅவளை நோக்கிப் பெண்ணேகண்ணன் யாவரினும் நின்னிடையன்புடையோன்போனடிப்பினும் உருக்குமணியிடத்தேதான் அதிகப்பிரியமுடையனா யிருக்கின்றனன் இன்றுநான் தந்த அரிய பாரிசாதமலரையும் அவளளகத்திற்றான் சூட்டினன் என்றுரைத்துச்சென்றனர். பின்சத்தியவாமை பெரிதும்வருந்தி யிருந்தகாலையில்கண்ணன் ஆண்டடைந்து அமளியின் மிசையடைந்து அரிவையைத்தழுவலும் அவள்சிறிப், பொய்யை மெய்போலக்கூறி ஆயப்பெண்களைஅணையும் ஆழிக்கையாநின் மாயமாங்கலவி விரும்பிலேன் நீ இவண் நீங்குவாயாக என்னலும் நாரதமுனிவனவின்ற கலகச்சொல்லாற்கலங்காதே வானுலகத்துள்ள பாரிசாதவிருக்ஷத்தையே நின் முன்றிலிற் பதிப்பேனென்றுதேற்றியணைந்து மற்றைநாட் கருடன் மீதிவர்ந்து பொன்னுலகத்தெய்தி இந்திரன்சபையிற் கண்ணன் அவனாற்பூசிக்கப்பட்டிருக்கையில் இந்திராணியாற்பூசிக்கப்பட்டு அவளிடம் இருந்த சத்தியபாமையைச் சசிபார்த்து நாமிருவரும்

சூதாடுவோம். நான் சூதிற்றோற்றால் உனக்குப் பாரிசாத மலரீவ னென்ன சத்தியவாமை நான்தோற்கிற் சமந்தகமணியை யீவ னென்றாள். பின் இருவரும் சூதாட சத்தியவாமை வென்று பாரி சாதமலரைப்பறிக்க விடுத்த மடந்தையரை அம்மலர்காக்குந் தெய் வப்பெண்கள் வெருட்டியோட்டலும் முனிந்து கண்ணனை அழைத் துவணங்கி நடந்தவற்றைக் கூறக்கண்ணன் கடிதிற்சென்றுபாரிசா தத்தை வேரோடும்பிடுங்கி கலுழன்மீது வைத்துக்கொண்டு சத்தி யவாமையுடன் பெயர்ந்திடுவதுகண்டு தடுத்த தேவர்கள் தோற் றோடச்செய்து துவரையடைந்து பெரியோர்களைவணங்கி சத்திய வாமையின்முன்றிலிற் பாரிசாதத்தைப்பதித்து மகிழ்ந்திருந்தனன்.

இந்திரப்பிரத்தத்தில் தருமனிருந்து அரசாண்டுவரும் நாள் களுள் ஓர்நாள் பிராமணர் பசுக்களை வேடர்கவர்ந்தாரென்று பார்த் தன்கேட்டு அதைஉரைசெய்பத் தருமனிடம்சென்று அவனுடன் ஓராசனத்திருக்கும் துரோபதையைக்கண்டு முன்வியாசரால் ஏற் பட்ட நியமனத்தின்படி தீர்த்தயாத்திரைசெய்து வருபவன் உரக லோகத்தெய்தி உலூபியைமணந்து மதுரையையடைந்து பாண்டி யன் பாவைசித்திராங்கனையை மணந்து மதுரைநீங்கி முக்கோல் கொண்டு நான்மறையோனாகிப் பன்னிருநாமம் பண்புடன்றரித்து காவியுடுத்து வைணவத்துறவிபோல் வேடம்பூண்டு துவரைப்பதி யுட் புகுதல்கண்டு பலராமன் பங்கயநாபனுடன் சென்றடிவணங்கி அழைத்து சுபத்திரையிருக்குமிடத்து இருத்தி ஈண்டெங்கை சுயம் பாகஞ்செய்யன்ன நீயருந்தியருள் என்றுகூறி விடைபெற்றுச்செல் லலும் ஆசனத்தின்மீது பெருந்துறவிபோலிருந்தனன். அக்கபட சன்னியாசியைச் சுபத்திரையடைந்து வணங்குதலும் எழில் கண் டாற்றாதவனாப் காமனம்பால்போவது வருவதாயிருந்த ஆவியுடன் ஆசிவழங்கி யிருந்தவனுடன் உரையாடிச் சுபத்திரை அவன்பார்த் தனென்றுணர்ந்து நாணி உட்சென்று மையல்தலைக்கொண்டு வருந் தினள். அதுகாலையில் பிரபாசப் பேர்நதியின் மேகஞ்சொரிதலும் புதுநீராட மாயவன், அலாயுதன் தந்தை தாயினர்முதலினோர் எல் லவரும் அவ்வாற்றின் சலத்திடைச் சென்றனர். அற்றை நான்மா லைகுறுகுதலும் பார்த்தனும் சுபத்திரையு மையல் தலைக்கொண்டு வருந்தாநிற்க உடனே கண்ணன்அடைந்து அருச்சுனனைத் தழுவி எங்கையைநினக்குத் தருவனென்றுசொல்லி நினைக்குமுன் அமரர் கணம்புடைசூழ இந்திரன் வருதலும் தவமியன்அடைந்து விதி வழிப்படி ஓமாதிகள் செய்யச் சுபத்திரையைப் பார்த்தனுக்குமணா

முடிப்பித்துச் சீதனப்பொருள்கள் பலவுந்தந்து பார்த்தனை விடிந்த பின் ஊர்போகுமாறு உரைத்து பிரபாசக்கரைக்குச் சென்றிருந்தனன். பார்த்தன் அற்றையிரவிற் சுபத்திரையுடன் கூடியிருந்துமற்றைநாட்காலையில் தேரேறிச் செல்லத்தடுத்த படைவீரர்கள்பின் பின்வாங்கச்செய்யத் தூதுவரோடிநடந்தது இன்னதென்று அலாயுதனுடன் கூறுதலு மவன்வெகுண் டெழுதலும் கண்ணன் தடுக்கத் தணிவெய்தினன். பின்பார்த்தன் தேரைச் செலுத்திக் கொண்டு இந்திரைப் பிரத்த மடைந்து சுபத்திரையுடன் பெரியோரை வணங்கி யினிதிருந்தனன். பின் சூரியகிரணம் சம்பவிக்க அலாயுதனும் கண்ணனும் தேவியரும் தம் தந்தையரும் சூழ்ந்து தீர்த்தமாடுவது கருதிச் சமந்த பஞ்சகம் சென்றார்கள். அரவக் கொடியோன் முதலினோரும் ஐவரும் அவர் அன்னையும் பாரியரும் நந்தனும் அசோதையும் அணுக ஒருவரோடொருவர் அளவளாவியிருக்கத் துரோபதை கண்ணன் தேவியரை நோக்கி நீவிர் கண்ணனை மணந்தவரலாறுகூறுமின் என அவர்கள் எண்ணிரண்டாயிரத்து நூற்றெட்டுப்பெயரும் தாந்தாம் கண்ணனை மணந்த வரலாறு கூறக் கேட்டுத் துரோபதை உலூகி சித்திராங்கனையிவர்கள் மகிழ்ந்தினிதுற்றனர். பின்புலத்தியன் அகத்தியன் முதலாமுனிவர் வருவது கண்டு கண்ணன் வணங்கி விடுத்தலும் அவர்கள் அவனை நோக்கி நீயும் சாதாரணர்போல் நடித்திருக்கின்றாய்போலு மெனக் கூறிச் செல்பவர்களைப் பணிந்து வசுதேவன் யான் பவமறுத்துயர்பதம் பெறும் வழி கூறுமின் என நாரதனகைத்துக் கங்கைக் கரையினுள்ளான் வேறொரு கூவலை விரும்புமாறு கண்ணனைப் பிள்ளையாகப்பெற்ற இவன் வேறுதவம் விரும்புகின்றானென்றனன். அதுகேட்டு முனிவர்கள் வசுதேவனை நோக்கி உலகத்திற் பிறந்தோர்கள் கழிக்கவேண்டிய கடன்கள் மூன்று. அவைகளாவன முனிவர்கடன், பிதிர்கடன், தேவர்கடன் என்பனவாம். அவ்வற்றுள் அருநூலின்படிப் பிரமசாரியஞ்செய்து முனிவர்கடனையுஞ் சுதர்களைப்பெற்றுப் பிதிர்கடனையும் அகற்றினை. இனி வேள்விசெய்து தேவர்கடனை யகற்றுதியேல் கதியிடைப் புகுதுவை யென்றுரைசெய மகிழ்ந்து பணிந்து மாமக நடத்துவது கருதித் தவர்களைவரித்து எழில்பெற்ற சாலையிடை யடைந்து மகத்தினை விதிவழிச்செய்து முடித்து அவபிரதங்குடைந்தாடி அனைவர்க்கு வேண்டுவனதந்து விடுத்து அலாயுதன் முதலியோருடன் துவரையடைந்தனன். பின் கண்ணன் சபாமண்டபத்தில் பிரசேனன் முதலினோர் சூழ்ந்திட வீற்றிருக்கையில் நாரதமுனிவ

னடைந்து நீ யதிகனென்றுரைக்க ஆண்டிருந்த முனிவர்களிதே தென, விளக்குதியென்று கண்ணனைக் கேட்டனும் அவன் நாரத னைக்கொண்டு அதன்றன்மை விளக்கித் தன்பதமடைய விரும்பிய தந்தையைப் பின்னர் என் தாயுடன் அடைகுதி என்றுரைத்து தன் தாய் விரும்பியபடி அவடாயர் அறுவரையும் கொணர்ந்து கொடுத் தனன். பின் தேவகி யவர்களுக்கு தன் இருதனப் பாலை யீய அவர் கள் சாப நீங்கிக் கண்ணன் கழலிடைப் பணிந்து தாயையும் வணங்கி விமானத்தேறி மரீசியிடம் அடைந்து பணிந்தனர். அது கண் ணன் செயலென்றறிந்து துதித்த வன்னையை பின்னர் என்பதமுறு வென்றவன்மனத்தை மாயையான் மறைத்தனன்.

பின் தேவியார் புடைசூழ உவந்திருக்குங் கண்ணனை ஓர்நாள் உருக்குமிணி முதலாந் தேவிமார் வணங்கி எங்களுக்குப் புத்திர பாக்கியம் அருளெனக் கயிலையி லரனை நோக்கித் தவம்புரிந்து வரம் பெற்றுநம் குறை நீக்குவேனென்று அலாயுதன் சாத்தகி முதலி னோரைப் பார்த்துப் பவுண்டரனுல் திங்குறு வகை நகரைக் காத் திருங்கள் என்றுரைத்து வழிக்கொண்டு செல்பவன் யமுனநதி மந் தாகினியுடனே யமர்ந்திடுங் கூலத்திடை வருதலைக்கண்ட கண்டா கருணன் தான்துதித்திருக்கும் பரந்தாமன் இவனே யென்றுன்னி எதிர்கொண்டு சென்று ஓர் பிராமணப் பிணத்தை முன் வைத்து நீ இதை அமுது செய்தருள் என்று வேண்ட அவன் தன்மை யறிந்து கொலை முதலிய தீச்செயல்க ளிருப்பினும் தன்னிடத்தில் திடபக்தி யுடையானென்று நினைத்து அவன் வேண்டியபடி அவ னுக்கும் அவன் தம்பிக்கும் அழியாப்பதவி யுதவிக் கயிலை யடைந்து தவம் புரிந்து விடையவன் முன்னின்று வரந்தந்து வணங்கப் பெற் றுத் துவாரகை யடைந்து பெரியோரை வணங்கி இளையோரை வாழ்த்தித் தேவியர்அவாவெலாந்தணிய பதினாறாயிரத்து நூற்றெட் டுருவாகிக் கூடிக் குலாவி மகிழ்ந்தினி திருந்தனன். பின் சிவபெரு மானை நோக்கி யருந்தவஞ் செய்து பூசித்து அரியுருவம்பெற்ற பவுண்டரன் கவுத்துவ மாலையும் கனகாம்பரமும், நாற்கரமும், பஞ் சாயுதமும், கருடவாகனமும் கொண்டு அழகுடன்றிரியு நாள்கலி லோர்நாள் தனதவைக்கண் வந்த நாரத முனிவனை நோக்கி இவ் வுலகினுள்ளா ரெல்லாரும் என்னை வாசுதேவ னென்கின்றனர். துவாரகையினுள்ள இடையனும் வாசுதேவனென்று திரிகின்ற னன். அதலால் நீ உடனே இந்திரன் முதலிய இறைவர் உலகங் களிற் சென்று என்னை வாசுதேவனென் றுரைக்குதியென்ன, முனி

வர்பிரான் நீயோனே நோக்கிச் சூரியனே மின்மினி நிகர்க்கில் நீ விந்தை நாயகனே யொப்பாய் என்று கூறுதலும் பவுண்டரன் முனிந்து நீ முனிவனுயினும் இவ்வார்த்தைக் கூறியதற்குக் கொன்றே யிருப்பேன் நீ சாபமிடுவாயென்று விட்டேன், எழுந்துபோதியென்றலும் நாரதன் எழுந்து அவனகன்று துவரை யடைந்து கண்ணனிடம், பவுண்டரன் சபை யிடை நிகழ்ந்த வற்றைக் கட்டுரைத்தனன். நாரதன் நீங்கு முன்னே பவுண்டரன் ஓர் தூதுவனே யழைத்து நீ துவாரகையிற் சென்று, பீதாம்பரம், பஞ்சாயுதம், வாசுதேவப் பெயர்களை விட்டு என்னைச் சரணடைந்துய்தி என்று கண்ணனிடம் சொல் என்று அனுப்பினன் அத்தூதுவனும் விரைந்து சென்று, துவரையடைந்து பவுண்டரன் கூறிய வற்றைக் கூறுதலும் மாதவன் நகைத்து, நானிவற்றையெல்லாம் விடுகின்றேன் பவுண்டரனே யிங்கு வரச்சொல்லென்று கூறுதலும், தூதுவன் கடிதிற்சென்று பவுண்டரனிடங் கூறக்கேட்டவன் முனிந்து காசிமன்னனுடன் கலவியன் கடிதுசெல்ல, தான் பஞ்சாயுதங் களையுமேந்திக் கருடன் மீதிவர்ந்து நால்வகைச் சேனையும் புடைசூழ்ந்து வரத் துவாரகையடைந்தது கண்டு கண்ணன் தேரேறிச் சென்று சேனைகளை யழித்து சிலபோது விளையாட்டாகப் போர் புரிந்து ஆழிவிடுத்துப் பவுண்டரன் முடித்தலை துணிக்கக்கண்டு வெகுண்டு வந்த காசிராசன் சிரமறுத்து காசித்தெருவிடை விட்டனன். அவ்விருவரும் மடிந்தது கண்டு கலவியன் தேரேறி வருவது கண்டு பலராமன் சென்று அலத்தான் மோதித் தேரையழிக்கக் கதைகைக்கொண்டு வருதலும் கலப்பையான் மோதியதனையிருகூறுக்க அவன் அஞ்சியோடிக் கடலுட்புகுந்து ஒளித்துப்போனன். பின்பால் வண்ணனுடன் பங்கய நாபன் மாதவர்களெல்லா மாசிகள் மொழியவானேர் ஆவலங்கொட்டியார்ப்பக் கிளையோர் வாழ்த்தத்துவரை யெய்தி யிருந்தனன்.

காசி வீதியிற் காசி மன்னன் தலையுருண்டிட அவன் மகன் சுதக்கணன் அதுகண்டு இது செய்தான் வாசுதேவனென்றறிந்து அதற்குப் பிரதிசெய்ய விரும்பி அரனே நோக்கித் தவம்புரிய அவன் முன்னின்று கூறியபடி அபிசாரயாகம் செய்து அதனுள் பன்னிரண்டு யோசனை நீளமும் பரப்புமுடையதாய் எழுந்த கிருத்தியைத் துவாரகையிற் சென்று கண்ணனைக் கொன்று மீடியென விரும்பத் தேவர் முதலினேர் அஞ்ச வருவதுகண்டு வடவையோ, கடுவோ, அரனெற்றித் தழலோ பாரோடு திசையைச் சுட்டு

விசும்பை யளாவித் துவரையினடைந்தது என்றுரைக்கச் சூதுவி ளையாடிக் கொண்டிருந்த கன்னன்கேட்டு கிருத்தியின் வரலாறறி ந்து விரலுகிர் தெறித்துப் பின்னும் விளையாடிக்கொண்டிருக்க அவ் வுகிர் ஆழியாய்ச்சென்று அக்கிருத்தியை யழித்தது. பின்பலரா மர் ஆயர்பதிசென்று நந்தனையு மசோதையையும் காண விரும்பின ராய்க் கன்னனிடம் கூறிச்சென்று அவ்விருவரையும் பணிந்து அவர்களால் தழுவப்பெற்று அவர்கள் கன்னனைநினைந்து வருந்த அவர்களுக்கு கன்னனது வெற்றிகளைக்கூறிச் சிறிது நாள்களில் கன்னன் அவர்களைக்காணுமாறு ஆண்டெய்துமென்று கூறித் தே ற்றி மகிழ்ந்திருந்து வசந்தகாலம் வந்தெய்தப் பலராமன் ஆயப் பெண்களுடன் பூங்காவடைந்து வாருணமதுவுண்டு அழைத்தவு டன் வராத காளிந்தி யாற்றை அலப்படையானிழுத்து ஆண்டுற்ற மயிந்தன்றம்பி துவிந்தனைக்கொன்று நந்தனையும் அசோதையையும் அடிபணிந்து விடைபெற்றுத் துவரையடைந்து அன்னை பிதாக்களை அடிபணியக் கன்னன் உருக்குமிணிப் பிராட்டியாருடன் அவனடி பணிந்து வாழ்த்தப்பெற்று மகிழ்ந்தினிதுறையும் நாளில் (முன் அரனுதல் விழித்தியாலிறந்த மதனன் அன்று அமரர்களுடன் இர திசென்று வேண்ட அதற்கிரங்கி அரன்கூறியபடி) உருக்குமிணிப் பிராட்டியாரின் மணிவயிற்றின் மன்னினன். பிராட்டியார் கரு வுற்றதுகண்டு எல்லாரும் மகிழ்ந்தினிதிருக்க ஆறுமாதமானபின் வேதவிதிப்படி செய்யவேண்டிய சடங்கைப் பிராட்டியாருடன் ஓ ராதனத்திருந்து இயற்றி உரியகாலத்தில் குமரன் சனிக்கப்பெற்று மதனன் என்றுபேரிட்டு அந்தணர் முதலினோர்க்கு வேண்டுவன வெறுப்ப நல்கினன். உருக்குமிணிப் பிராட்டியார் தனயனுடன் மகிழ்ந் தேழ் தினம்வரையிற் செல்ல முன், மதனன் அரனுதல் விழித்தியா லெரிந்தவுடனிரதியைப் பற்றிச்சென்ற சம்பரன் துவா ரகையிற் பிராட்டியார் மணிவயிற்றில் மதனன் சனித்தமையை நாரதமுனிவரால் அறிந்துவந்து மதனனைக் கைக்கொண்டு சென்று கடலிடைவீசினன். பின் அம்மதனன் கடலகத்துள்ள ஓர் மீனால் விழுங்கப்பட்டு அதனை வலைஞர்பிடித்துச் சம்பரனிடம்தர அவன் அதைச் சமைப்பதற்காகப் பரிசாரகரிடத்துக்கொடுக்க அவர்கள் அதைப்பிளந்து கண்டகுழவியை, இரதியானவள் தன்கற்பழியா வண்ணம்படைத்து வைத்திருந்த மாயாவதி யிடைக்கொடுப்ப அக் குழவி மதனனென்று நாரதனால்அறிந்து இரதிதேவி அக்குழவி யை வளர்த்து மாயம்பலவும் பயிற்றிப்பதினாறுண்டானவுடன் உண் மையறிவிக்க மதனன் தேவியுடன் தேரேறிச் சம்பரனைக்கொன்று

துவாரகையடைந்து பெரியாரடிபணிந்து வாழ்த்தப்பெற்றுக் கர்க்க னெய்தி யோமம்பண்ண நாமகரணுதி சமஸ்காரங்கள் செய்யப்பெற் று ரதியைமணந்து மகிழ்ந்தினிதிருந்தனன். கண்ணன் உருக்குமி ணிமுதலிய பதினாறாயிரத்தொரு நூற்றெட்டு மாதர்களும் தனித் தனிபப்பத்துக்குமரர்களைப்பெற அவர்கட்கு மிகமகிழ்வூட்டிமகிழ்ந் திருக்குநாளில் நாரதமுனி கண்ணன் தன்மையறிய ஒவ்வொருவீட் டினும்சென்று விடுகள்தோறும் கண்ணன் ஓரோர்செயல் செய் திருந்து தன்னைவணங்கி யுபசரித்ததுகண்டு வாழ்த்திச்சென்றான். நாரதனைப் பணிந்தனுப்பிச் சிறுவர்களுடன் மகிழ்ந்தினி திருக்கு நாளின் மதனனிரதியுடன்கூடி அநிருத்தனைப்பெற அளவிலா நிதி யுதவி அகமகிழ்ந்தனன்.

சாளுவதேசத்தையாளும் பிரமதத்தன் மகார்களான அங்கி சடிபிகர்கள் அரனைநோக்கி அருந்தவஞ்செய்து திவ்வியாத்திரங்க ளையும் பிங்கிருடி கும்போதரனென்னும் பெயருடைய பூதங்களி ரண்டையும் அரனுதவப்பெற்று ஒருநாள் சனார்த்தன மறையோ னுடன் கானில் வேட்டைகருதிச்சென்று வேட்டையாடிச்சிறப்புறு காசிபன் விதிப்படிசெய்யும் சத்திரயாகம்நோக்கிச் செல்லுபவர்கள் தவஞ்செய்யும் துருவாசனையும் சூழ்ந்த முனிவர்களையும் சனார்த் தனமறையோன் தடுப்பவுங்கேளாது இகழ்ந்து இடருறுத்த அம் முனிவர் குழாம்புடைசூழந் துருவாசன் துவரையடைந்து கண்ண னிடம் கூறியிழந்த ஆடையாதிகள் உதவப்பெற்றிருந்தனர். அங்கி சன் அரசர்களெல்லாரிடத்தும் திரைவாங்கித் தன்தந்தையை ராஜ சூயயாகம்செய்விக்க நினைத்து சனார்த்தனவேதியனை நோக்கி நீகண் ணனிடம்சென்று உப்புடன் இங்குறுமாறுரையென்றுகூறி விடுக் கச்சனார்த்தனன்அக்கொடியோனுக்கஞ்சித் துவரையடைந்து அங் கிசன் கூறியவற்றைக்கூறலும் கண்ணன்கேட்டு புட்கரசரசினு ளைப் போர்க்குவரச்சொல்என்று சனார்த்தனனுடனுரைத்து சாத் தகியையும் அவனுடன்அனுப்பி உரைப்பித்து அங்கிசன் போர்வி ரும்பியதறிந்து அவனைப் புட்கரசரசில் கொல்வதாகக்கூறி முனிவர் களை அடிபணிந்து அனுப்பினன். சாத்தகியும் சனார்த்தனனும் சாற்றியதுகேட்டு அங்கிசன் அநுசனுடன் நால்வகைச்சேனைகளை யும்புடைசூழப்புட்கரசரசில் எய்த அதன்முன்பே சாத்தகி கிருத வன்மாமுதலினோர்சூழப் படையுடன் சென்றிருந்தகண்ணன் சாத் தகிமுதலினோரால் அங்கிசன்படைகளை அழித்துகொடும்போர்புரி கும்போதரன் பிங்கிருடியென்னும் பூதங்களையழித்து அங்கிச

னுடன் போர்புரிந்து அவன் காளியமடுவிற்குதிக்கத் தானும் அத னுட்குதித்து அவனைக்கொன்று மீண்டனன். அவன்தம்பிடிபிகன் தமயனைக்காணுதுகண்ணனைக்கேட்டுக் காளிந்தியிற்றேடிக் காணுது கரையேறிக் கண்ணனைநோக்கி நீயே என்தமயனைக் கொன்ருயென் றழுதரற்றி நாவைப்பிடுங்கிக்கொண்டிறந்தனன். இவ்வாறு அங்கி சடிபிகர்களிறந்ததுகண்டு எல்லோருமகிழ்வுறக் கண்ணன் புட்கர சரசில் எய்தியதறிந்து நந்தனு மசோதையும் ஆயர்குழாங்கள்சூழ அடைதலும் கண்ணன்அகமகிழ்ந்து நந்தனையும் அசோதையையும் அடிபணிந்து ஆயர்களைத்தழுவி அளவளாவியிருந்து பழமைபேசி விடைபெற்றுத் துவரைஅடைந்தனன். பின்மாதவன் மக்களுக்கு மணமுடித்து மனமகிழ்ந்திருக்கு நாள்களுள் ஒருநாள் பானுசாம் பன் முதலினேர் வேட்டையாடச் சென்றவர் காட்டகத்துள்ள ஓர் பாழ்ங்கிணற்றில் ஓர்பெரிய ஓந்திகண்டு கயிற்ருற்கட்டி அனைவரும் இழுத்து வராதிருந்தமைகண்டு வீடுசென்று கண்ணனிடம் கூறக் கேட்டடனே தேரேறிச்சென்று அதன்வாலினைத்தொடலும் அவ் வுருமாறி அழகுறு பூருவவடிவமுற்று நின்ருனைக்கண்டுன் வரலா றுரையென அவன்கண்ணனைநோக்கி அடிபணிந்து தான் அயோத் தியில் அரசுபுரிந்திருந்த சூரியவம்சத்தில் இக்குவாகு மன்னன் மகன் நிருகராசன் என்பதையும் தான்வைதிகப் பிராமணன் ஒரு வனுக்குத் தானஞ்செய்த பசு அவனைத்தப்பி தன்னிரையடைந்த தறியாது அதை மற்றொரு வேதியனுக்குகொடுக்க வேதியர் இரு வரும் அதன்பொருட்டுக் கலாய்த்து ஒருபசுவையே இருவருக்குந் தானங்கொடுத்ததற்காகத் தன்னை ஓந்தியாமாறு சபித்ததையும்கட் டுரைத்துவணங்கிச்சென்றனன். பின்கண்ணன் அரண்மனைஅடைந் திருந்து ஓர்நாள் உத்தவனைப்போசகடநகர்க்கனுப்பி உருக்குமின் பேத்தி உருக்குமிஎன்பாளைத் தன்பேரன் அநிருத்தனுக்குப்பெண் பேசி அலாயுதன் முதலினேருடன் அங்குசென்று மணமுடித்த னன். அக்காலையில் உருக்குமின் கலிங்கமன்னனேடு கலந்துபேசி பலராமனுடன் சூதாடி இருமுறையும்தோற்றும் தான்வென்றதா கக் கூறியதுமன்றிப் பலராமன் சூதிற்ருேற்றிலேனென்று பொய் யும் கூறினனெனப் பறைசாற்றுமாறுரைக்கப் பனைக்கொடியோன் வெகுண்டு அக்கொடியோனைக்கொன்று கலிங்கனையும் அடித்துத் துரத்திவிட அஃதறிந்து வருந்திய பிராட்டியைத்தேற்றி உருக்கு மினுக்கு உத்தரகிரியைகள் செய்வித்து அவன் மகனுக்குமுடிசூட் டிஊரடைந்தனன். பின் துரியோதனன் மகள் இலக்கணைசுயம்வரத் துக்கு மற்றஅரசர்களுடன் சாம்பனும் சென்றிருக்க இலக்கணை

அவனைவிரும்பி மாலையிடலும் துரியோதனன் கோபித்து அவனை யிழித்துரைபாடிச் சிறைப்படுத்தநாரதனால் அஃதறிந்து கண்ணன் வெகுண்டெழுந்ததுகண்டு அலாயுதன் தடுத்திருத்தித் தான் அத்தி பதியடைந்து அரவக்கொடியோனுடனயந்துபேசி அவ னிணங்கா மையால் அத்தினுபுரத்தைப்பேர்த்துக் கங்கையில் வீழ்த்தப் புகு தலும் அரசர்களுடன் அரவக்கொடியோனஞ்சி விளைந்ததை விடு மனால்அறிந்து அலாயுதனை அடைந்துபணிந்து அவன்கூறியபடி தன்னரிவையைச் சாம்பனுக்கு மணம்புணர்த்துப் பொருள்கள்பல சிதனமாகத்தர மகிழ்ந்து மைந்தனுடன் துவரையடைந்தான்.

மாலோனுக்கு மூவடிமண்ணுதவிய மாவலிமைந்தர் நூற்று வருட் தலைவனுய்ச்சிறந்த வாணுசுரன் கயிலையங்கிரியில் வீற்றிருக் கும்கண்ணுதற்கடவுளைவணங்கிப் பூசித்து யாவர்பொரினும் அரன் வந்து காக்குமாறு வரம்பெற்றுச் சோணிதபுரத்திற்கும் பாண்ட மந்திரியுடனிருந் துலகாண்டுவருபவன் கயிலையடைந்து காளகண் டனைஇறைஞ்சித் தன்கைத்தினவுதிருமாறு போர்செய்வாரையருள வேண்ட அதுசோணிதபுரத்தின் சிகரத்திற் கட்டியுள்ளகொடிகீழ் விழுங்காலத்து வாய்க்குமென்று வகுக்கக்கேட்டு மகிழ்ந்தூர் சென் றிருந்தனன். பின் அவன்மகளாகிய அழகிற்சிறந்த உடாங்கனை யென்பாள் நாடோறும் கயிலையெய்தி உமையவளுள்ள மகிழவீணை யிசைத்து வருபவள் உருத்திரன் உமாசமேதனாக உறைவதுகண்டு எனக்கோர் கணவன், எப்போதுவாய்க்குமோ என நினைப்ப, அம் பிகை அஃதுணர்ந்து உடாங்கனையைநோக்கி, நீ கனவில் ஓர் நாய கனைக் காண்குவை அவனே உன்னைமணப்பனெனக் கேட்டு மகிழ்ந் துதனதிருக்கைசேர்ந்தவள் பொன்மணி மண்டபத்திற் மென்மலர மளிமிசைத்துயில் புரிகையில் ஓர்சோலையில் அரசிளங்குமரனொரு வன்றன் குழலிடை நன்மலர் புனையக்கனவுகண்டு விழித்து அக்கு மரனைக்காணுது வருந்த அஃதறிந்த சித்திரரேகை பலர்வடிவங்க ளையும் வரைந்து காட்டி அவள் விரும்பிய மன்னவன் அநிருத்த னென்றறிந்து இரவிடைத் துவாரகை சென்று உருக்குமியுட னுறங்கு மநிருத்தனைக் கொண்டுவந்து உடாங்கனையின் மணிமண் டபத்தின் மஞ்சமீதுவைத் துடாங்கனையுடன் கூறக்கேட்டுச்சென் று அநிருத்தனுடனே கூடிக்குலாவி யிருந்தனள். இதைச்சில காரியராலுணர்ந்த வாணுசுரன் தன்மகள் மனையிலிருக்கும் மானிட னைச் சிறைப்படுத்துங்கள் என்று சிற்சில படைவீரர்களை அனுப்ப அவர்கள் அவ்வநிருத்தனுடன் போர்க்காற்று திரிந்ததறிந்து வா

ணன் தானே சென்று நெடுநேரம் போர்புரிந்து அவனை வெல்ல முடியாமல் கும்பாண்ட மந்திரி கூறியபடி மறைந்துநின்று நாகபாசத்தாற் கட்டிச் சிறைப்படுத்தினன். அங்கே துவாரகையில் சித்திரலேகை அநிருத்தனை எடுத்துக்கொண்டு வந்தபின் உருக்குமிவிழித்துக் கணவனைக்காணு தரற்றக்கேட்ட உருக்குமிணிமுதலிய பலரும் அழுதிடக்கண்ணன் தேற்றி அநிருத்தனையாவர்கொண்டுசென்றிருப்பினு மீட்டு வருவோமென்று வெகுண்டுரைத்த சாத்தகி முதலினோர் சொற்கிசைந்து நாரதமுனிவர் வாணாசுரன் அநிருத்தனைச் சிறைப்படுத்திய இறுதியாகிய செயல்களை யுரைக்கக் கேட்டு, அலாயுதனும் சாத்தகியும் மைந்தர்களும், சேனைகளும் சூழச்சென்று வாணன் கரங்களைத்துணித்து அரன் வேண்டியபடி நாற்கரம் விடுக்க வாணன், கண்ணன் கான்மிசையிற்பணிய மகிழ்ந்து அவன் கூறியபடி உடாங்கனையை அநிருத்தனுக்கு மணம் புணர்த்து மகிழ்ந்து துவாரகையடைந்து வப்புடனிருந்தனன். பின் ஓர்நாள் ராஜசபையில் கண்ணன் விற்றிருக்கையில் மகதனாற் சிறையிடப்பட்ட இருபதினாயிர மன்னவரும் மகதனைக்கொன்று தங்கள் துன்பம் துடைக்குமாறு வேண்டி அனுப்பிய ஓர் தூதுவன் வந்து கண்ணனை வணங்கித்தான் வந்த வரலாறுரைத்துக் கொண்டிருக்கையில் நாரத முனிவர் வந்து கண்ணனை வாழ்த்தித்தருமன் தந்தை விரும்பியபடி இராஜசூயயாகஞ்செய்ய நினைத்து அறிவிக்குமாறு அனுப்பினமை கூறினர். அதுகேட்டு இந்திரப்பிரத்தமடைந்து தருமனுடன் கூறி வீமனையும், விசயனையும் அழைத்துக்கொண்டு வேதிய வேடங்கொண்டு மகதனிடம் சென்று அவனிடம் போரிரந்து வீமனுல் அவனைக்கொல்வித்து அரசர்கள் சிறைநீக்கி அவன் மகனுக்கு முடிசூட்டித் தருமனது வேள்விக்கு வருமாறு வழுத்திவிட்டு வீமனையும் விசயனையும் அழைத்துக்கொண்டு இந்திரப்பிரத்தம் போய்ச்சேர்ந்தனன்.

பின் தருமன் வடக்கில் வாசவன் மைந்தனையும் கிழக்கில் வீமனையும் தெற்கில் சகாதேவனையும் மேற்கில் நகுலனையும் விடுத்து நாற்றிக்கிலுள்ள அரசர்களை வென்று திறைகொடெய்துமாறு செய்யப் பணிக்கவும் அவர்கள் சென்று அவ்வாறு புரிந்து வருதலு மகிழ்ந்து மண்டலத்தரசர்களும் மாதவரும் வந்தபின் வேதவிதிப்படி வேள்வி தொடங்கித் திக்குபாலகர் முதலினோர் மகிழ வேள்வியை முடித்தபின் அக்கிரபூசையை யார்க்களிப்பதென வினவ சகாதேவன் அது வாசுதேவனுக்கே வழங்கவேண்டுமென்றுரைக்

கத் தருமன் மகிழ்ந்தது செய்யத் துணிதலும் சேதிபனுகிய சிசு பாலன் கண்டு வெகுண்டு கண்ணனை இழித்துப்பல பிதற்றலும் அவன் தாய் வேண்டியவாறு அச்சிசுபாலன் கூறிய இழிமொழிகள் நூறெண்ணிப்பின் அவனைப் போருக் கழைத்து அவனுடன் சிறிது நேரம் போர் புரிந்து ஆழியாலவன் கழுத்தரிந்து அவனுயிர் சோதியா யெழுந்து தன்னடி யடையச்செய்து தருமனல் வேள்வியினக்கிர பூசையேற்றினிதிருந்தனன். பின் தருமன் அந்தணர் முதலினோர்க்கு அளவில்லாப் பொருள்தந்து அனுப்பி மகிழ்ந்தினி திருக்க ஐவருடன் அஞ்சன வண்ணன் மகிழ்ந்தினி திருந்தனன். அக்காலமுன் பிராட்டியாரைத்தேரேற்றிவருகையில் உருக்குமினுடன் கூடிக்கண்ணனுடன் போர்புரியவந்து தோற்றோடிய சாலுவன் அரனை நோக்கித் தவம் புரிந்து வரம்பெற்றுச்சேனை புடைசூழத் துவரையடைதலும் அங்குள்ள மாரவேள் முதலினோரெதிர்த்துப் போர்புரியும் தன்மையை தூதுவர் கூறக்கேட்டுக்கண்ணன் உடனே சத்தியபாமையுடன் தேரேறித்துவாரகையடைந்து சாலுவனுடன் போர்புரிந்திருந்தபடியே அத்தினபுரியில் அரவக்கொடியோன் ஆஞ்ஞையின்படி, அவன், அனுசன்செய்த மானபங்கம் சகிக்கலாற்ருது, தன்னைக்குறித்தோலமிட்ட பாஞ்சாலிக்கு, ஆடையக்ஷயமாக்கிப் பின், ஆழியேவிச்சாலுவன், முடிதுணித்தனன். பின் எதிர்த்துவந்த தந்தவக்கிரனையும், அவன் தம்பி விடூரதனையுங்கொன்று, வசுதேவன் முதலினோரை வணங்கி மகிழ்ந்திருந்தனன். சாலுவன் துவாரகை அடைந்தது கேட்டுக் கண்ணன் இந்திரபிரத்தம் விட்டு வந்தபின் அரவக்கொடியோன், ராசசூய யாகத்திற்குத்தான்வந்து, நீரும் பளிங்குந்தோன்ருது தடுமாறியதுகண்டு துரோபதை நகைத்ததைப்பற்றிப்பெரு வருத்தத்தையுடையவனுய் ராசசூயத்தில் தான்கண்ட தருமன் வாழ்வைப்பற்றிச் சகிக்காதவனுகச் சகுனியோடுகூடி யோசித்துக்கபடமாகப் பாண்டவர்களைத் திருதராட்டிரனல் விதுரனையனுப்பித் தருவித்து சகுனியோடுச் சூதாடுமாறுசெய்து, தருமன் நாடுநகரங்களையும், உடன்பிறந்தாரையும், தன்னையும், மனைவியையும் பணையமாகவைத்துத் தோற்றுவிட, அரவக்கொடியோன் ஐவரையும் இழிவுபடுத்தி, அவரில்லாளாகிய துரோபதையை அவையிடை இழுத்து, மானபங்கப்படுத்த அப்போது உண்டாகிய, கெட்ட உற்பாதங்களையும் துச்சாதனன் உரிந்தசேலை இடையருது வளர்ந்ததுங்கண்டு, திருதராட்டிரன் அஞ்சி நாடுமுதலியதந்து ஐவரையும் அனுப்ப, அரவக்கொடியோன், பொறுக்காது மீண்டும் அழைத்துக் காட்டிற் பன்

னிரண்டு வருஷமும் நாட்டில் மறைந்து ஓர்வருஷமும் ஆகப்பதின் மூன்று வருஷமும் கழித்துவந்தால் நாட்டையுதவுவேன் என்று கூறிவிடுக்கத் தருமன், அன்னையை அத்திப்பதியி லிருத்தி அந்தணர் புடைசூழ அநுசருடன் துரோபதைவரக் கானகமடைந்தனன்.

அஃதறிந்து கண்ணன் காடுசென்று ஐவரையும் அவரில்லாளையும் தேற்றித் துவரையடைந்தனன். அதன்பின் ஐவரும் அந்தணர் சூழச்சென்று காசிபமுனிவர் ஆச்சிரமத்தையடைந்து வணங்கி, ஆசீர்வதிக்கப்பெற்று, மகிழ்ந்திருக்குநாளில், வியாசமுனிவர் அங்குவந்தனர். ஐவருமவரடியில்விழ, அவர் ஐவரையும் வாழ்த்தியபின் காசிபமுனிவர் அவரைநோக்கி, சந்திரகுலத்துவந்த குருகுலமரபு கூறுக என அவர் அரவக்கொடியோன் சூதாட, ஐவரையும் விதுரனால் அழைத்துவந்து வஞ்சச்சூதாடி வெல்ல ஐவரும் காசிபமுனிவர் ஆச்சிரமமடைந்த திறுதியாகிய குருகுல சரித்திரங்களைக்கூறக் காசிபமுனிவர் மகிழ்ந்துகேட்டார். பின் தருமன் எழுந்து வியாசனடிபணிந்து அரவக்கொடியோனால் எய்தும் இடர் ஒருவும் வழிகூறுக எனவும் வாதராயணர் அன்போடுநோக்கி தக்கன் மகத்தையழித்த சிவபிரானைக்காணி னற்கணையிவனென்றார். பின் தக்கன் மகங்கெடுத்த வரலாற்றை அம்முனிவர் பிரான் கூறக் கேட்டு மகிழ்ந்து அவர்மொழிப்படி, அரனை நினைந்து தவம்புரியுமாறு அருச்சுனனைக்கயிலைக்குவிடுக்க அவனும் அங்குசென்று விபூதிருத்திராக்கதாரியாய் ஒருமைமனத்துடன் பரமசிவனைநோக்கித் தவம்புரிந்து பாசுபதாத்திரம்பெற்று அமரர்கோன் விரும்பியபடி அமருலகெய்தி இந்திரன் வேண்டியவாறு தேரேறிச்சென்று அசுரரைவதைத்துவந்து அரியாசனத்தி லிந்திரனுடன் சரிபெற விருந்து மவுலிசூட்டப்பெற்று ஊர்வசி நடனங்கண்டு மகிழ்ந்துகோயிலிடையடுத்துச் சென்றுரங்குவானிடை இந்திரன் சொல்லியபடி அவ்விடைவந்த உருப்பசிக்கு இணங்கானாய் அவள்சாபத்தாற்பேடியாகிப்பின் இந்திரன் கூற்றுக்கிணங்கி உருப்பசி அவ்வடிவை அகற்றலும் கரந்துறையும் காலத்தெய்திக் கழியவருளென்ன அவள்அவ் வண்ணமேயருளினாள். பின்பார்த்தன் பாண்டுவைக்கண்டு உரையாடி மகிழ்ந்து தன்பிரிவுபற்றி வருந்தி வியாசரால் தேற்றப்பட்டிருந்த தருமன்முதலினோர் முன்சென்று மகிழ்ந்திருந்தனன். பின் வீமன் பாஞ்சாலியின்பொருட்டு சுகந்தியமலர்கொண்டுவர அளகாபுரி செல்லும்வழியில் மாருதியைக்கண்டு பின்நடக்கும் பாரதயுத்தத்தில் பார்த்தன் தேரின்மீதிருந்து காக்குமாறு வரம்பெற்று அ

ளகாபுரியடைந்து தடுத்தாருடன் போர்புரிந்துவென்று மலர்பறித்து வந்து பாஞ்சாலியின் முடிசூட்டினன். பின்பொருநாள் அவள் விரும்பியபடி பாரிசாத மலருங்கொணர்ந்து தந்தனன். பின்பொருநாள் வீமன் மாதவசியொருவன் அருந்துமாங்கனியைக் கொய்துவிடத் தருமன் முதலினோர் அத்தவசி சபிப்பானேயென் றஞ்சும்போது அஞ்சனவண்ணன் அடைந்து ஐவரையும் அவரில்லாளையும் தத்த முள்ளத்துள்ளதைக் கூறுமாறுரைக்க வவருமவ்வாறேகூறக் கனி முன்போல் மரம்பொருந்தியது. அத்தினபுரியிலரவக்கொடியோன் ஆயிரம்வித பதார்த்தங்களுடன் துருவாசமுனியை யுண்பித்துக் காட்டிற்சென்றுதருமனிவ்விதமுண்பியானேல்சபித்தேகுதியென்று வேண்ட முனிவனிசைந்துவந்து தருமனைநோக்கிப் பொற்கலத்தின் ஆயிரம்வருக்க பதார்த்தங்களுடன் அன்னமளியாயேல் சபிப்பனென்றுரைக்க முனிவனை நீராடி வருமாறுவேண்டவு மவன் நீராடிச் சென்றனன். சென்றவுடன் ஐவரும்வருந்தி யஞ்சனவண்ணனைநினைத்தலும் அவனும் உடனேவந்து காரைச்சாகம் இஞ்சிமே தித்ததியிவைகளுடன் அன்னத்தை யூனுவிலையில் முனிவனுக்கிடுதலும் ஊனுவிலைபொற் கலநிகர்த்ததென்பதும் காரையிஞ்சி தயிர் இவை யாயிரம் பதார்த்தசமமாமென்பதும் உணர்ந்த துருவாசன் அன்புடனருந்திச்செல்ல மகிழ்ந்தினிதிருந்தனர். பின் துரியோதனன் சித்திரசேனனால் கட்டுண்டு செல்வதை பானுமதியின் அழுகையாலறிந்து தருமன் வீமன் மறுத்தலும் விசயனைப் பாணிக்க வவன்சென்று மீட்டுவந்தனன். தருமனால் தலைதப்பிச் செல்கின்ற துரியோதனன் தன்னைநோக்கித் துரோபதை நகைத்ததுபற்றி வருந்திச் செல்பவனைக்கண்டு சயித்திரதன் தான் துரோபதையைப் பற்றித்தருவேன் என்றுகூறிக் காட்டில்வந்து சமயம்பார்த்து அவளைப்பற்றித்தேர்மேன்மீடலும் பீமன் ஓடிவந்து உதைத்து தலையில் ஐஞ்சிகையாக்கி இழுத்துவந்து தருமன்முன் விடுதலும் அவன்விடச்சொல்ல மார்பின் மோதிவிடுத்தான். பின் சிந்துபதி சிவனைநோக்கித் தவம்புரிந்து ஒருதினத்தில் மட்டும் ஐவரைச் செயிக்குமாறு வரமும் தண்டும் கொன்றைமாலையும்பெற்று அத்தினபுரியடைந்து நடந்தவற்றை யுரைக்கக்கேட்டுத் துரியோதனன் காளமா முனிவரைக்கூவி அபிசாரயாகஞ்செய்து ஓர் பூதத்தை எழுப்பிவிட, அது காட்டிற்புகுமுன் கண்ணன் திருவருளால் ஐவருமிறந்துவிடக்கண்டு, அப்பூதம் வெகுண்டுசென்று, காளமாமுனியையே கொன்று சென்றது.

பின் ஐவரும், நடுவனுல் உயிர்பெற்ருர்கள். இவ்வாறு பன்னிரண்டு வருஷமுங்கழிய ஐவரும் விடஜலம் பருகி யிறந்தார்களென்றுகூறுமாறு அந்தணரைவிடுத்துவிட்டு, ஐவரும் அவரில்லாளும் மாறுவேடம்பூண்டு விராடநகரில் வதிந்தனர். அங்கிருக்குங்காலையில் துரோபதையின்மீது காதல்கொண்ட கீசகனையும் அவனுடன் பிறந்தாரையும் வீமன் வானுலகத்தேற்றினன். மாடுபிடி சண்டையில் வெற்றிகொண்டபின், மறைந்து கழிக்கவேண்டிய ஒருவருஷமுமுடிய வெளிப்பட்டு, தங்கள் நாடுதருமாறு உலூகனைத் துரியோதனனுடனனுப்பி யவனிசையாமையை யறிந்து வாசுதேவனைப் படைத்துணைபெற்றுத் தருமன் கண்ணனையும் ஒருமுறை தூதனுப்பினன். கண்ணனும் அத்தினபுரியடைந்து விதுரன் மனையிற்றங்கி மற்றைநாள் துரியோதனன் அவையிடைச்சென்று ஐவர்க்காக நாடிரந்து அதற்கவன் சிறிது மிசையாமையை யறிந்து குருக்கேத்திரத்தில் ஐவருடன் போர்க்கு வரக்கை யறைந்து தரவேண்ட அவன் வெகுண்டுரைத்த புன்மொழிகளைக்கேட்டு இளநகைபுரிந்து அவை ஒரீஇவிதுரன் மனையடைந்திருந்து அவன் தன் வீட்டில் கண்ணனுக் கிடந்தந்துபசரித்தது பொருளுய்த் துரியோதனன் வெகுண்டுரைத்த பழிமொழிக்காற்ருது விதுரன் வில்முறித்தெய்தியதை, அவனுல் உணர்ந்து மகிழ்ந்து அன்றிரவிற் பொய்யாசனம்வகுத்துத் துரியோதனன் மற்றைநாள் தூதுவரால் அழைப்பிக்க அங்குசென்று அவ்வாதனத்தின் மீதிருந்துவீழ்ந்து விசுவரூபமெடுத்து உள்ளிருந்த மல்லர் முதலாயினரை வதைத்துப் பின் பலரும் வணங்க முனிவுதவிர்ந்து அவ்வவைவிட்டு வெளிப்படும்போது அசுவத்தாமனை அரவக்கொடியோன்நம்பாவண்ணம்செய்து கண்ணன் கவசகுண்டலங்களை இந்திரனந்தணவடிவங்கொண்டிரவவும், கண்ணன் மைந்தன் என்பதைக் குந்திக்குணர்த்தி அரவப்படை ஒருமுறையன்றி மறுமுறையெய்து அருச்சுனனைக் கொல்லாவண்ணம் வரம்பெறவுமியற்றி விராடபுரியடைந்து வியாளகேதனன் கூறியதை ஐவரிடம் அறைந்து மகிழ்ந்தனன். பின் துரியோதனன் களப்பலியூட்ட நியமித்திருந்த அமாவாசியைக் கண்ணன் முன்னையநாளாக்கி அன்று அரவானை பலியூட்டுவித்து எழக்குரோணி சேனையுடன் விராடபுத்திரனுகிய சிவேதனைச் சேனுபதியாக்கி ஐவருடன் குருக்கேத்திரபூமி சென்றனன்.

அன்று குருக்கேத்திரத்தில் கூடியிருந்தவர்களைநோக்கி இவ்வளவுபேரையும் நாம் கொலைபுரிய வேண்டுமே யென்றெண்ணி

மயங்கிய அருச்சுனனுக்குக் கீதையுபதேசித்துத் தேற்றிப் போர் புரியச்செய்தனன். அற்றைநாளில் அருஞ்சமர்செய்து துரியோதனனுடைய சேனைபதினொலக்குரோணியில் நாலக்குரோணி சேனையையழித்து ஐவருடைய எழக்குரோணியுடன் சமமாக்கிய சிவேதனை விடுமன் வஞ்சித்துக்கொல்ல மற்றைநாள் பாஞ்சாலன் மகன் துஷ்டத்துய்மனைச் சேனுபதியாக்கித் தருமன் போர் புரிந்தனன். பின் மூன்றுநாள் விடுமன் வலிய போர்தொடுக்கப் பார்த்தன் வாளாவிருக்கக் கண்ணன் அரவக்கொடியோனுடன் அன்றுரைத்த மொழிதவறி ஆழிகை எடுத்துத் தேரினின்றும் இறங்கிச் செல்ல அதுகண்டு தேரிழிந்து விடுமன் வணங்க மகிழ்ந்து கண்ணன் தேரேறினுன். பின் பத்தாநாள் பரியந்தம் இருதிறத்தார்க்கும் போர் நடந்து அத்தினத்தில் அரவக்கொடியோன் சேனுபதியாகிய விடுமன் விழ்ந்துவிட அடுத்தநாள்முதல் துரோணன் அச்சேனைக்கு அதிபதியாயமர் நடத்திவந்தனன். பதின்மூன்றுநாளில் துரோணன் முதலினோர் சூழ்ந்து சயித்திரதனுல் அருச்சுனன் மகன் அபிமன்னுவைக் கொன்றுவிட அருச்சுனன் அஃதறிந்து மற்றைநாள் அத்தமிக்குமுன் அச்சிந்துபதி சிரங்கொய்யாவிடில் நிவிழ்வனென வஞ்சினம் கூறுதலும் கண்ணன் தன் மைத்துனனுகிய பார்த்தனை கயிலைக்கழைத்துச் சென்று அரனருள் பெறுவித்தழைத்துவந்து பதினுன்காநாள் சாயுங்காலத்தே கதிரவனை ஆழிகொடு மறைத்து அருச்சுனனுல் செயித்திரதனையும் அவன்றந்தையையும் கொலைபுரிவித்தனன். பின் கண்ணன் பதினைந்தாநாள் துஷ்டத்துய்மனுல் துரோணனிறக்க அவன்மைந்தன் அசுவத்தாமன் வெகுண்டெய்த நாராயணுத்திரத்திற்கு ஐவரைத்தப்புவித்து பதினுறுநாள் சேனுபதிப் பட்டம்பெற்ற கர்ணன் அன்றுபெரும் போர்செய்து மற்றைநாள் சல்லியனைத் தேர்ச்சாரதியாகப் பெற்று மகா உக்கிரத்துடன் போர்புரிந்து நாகாத்திரத்தைப் பார்த்தனுடைய கண்டத்திற்படுமாறு குறியிட்டு எய்கையில் தேரைப் பூமியில் அழுத்தமிழ்வித்தனன். பின் வேதிய வேடம்பூண்டு கர்ணனிடம்சென்று அவன்செய்துள்ள தர்மங்களைத் தானமாகப்பெற்று அவனுயிர்போக்கி பின் ஐவர்க்கும் உண்மைகூறி அவர்களுடன் தானும் அழுதிருந்தனன். பின் பதினெட்டாநாள் சேனுபதியான சல்லியனை அன்று தருமன்கொன்றுவிடத் துரியோதனன் கண்டு அங்குதேரை விட்டுவிட்டுக் காட்டிற்சென்று ஓர் மடுவின் மூழ்கி இறந்தவர்கள் பிழைக்கும்படி தனக்கு இந்திரன்கூறிய மந்திரத்தைச் செபித்திருக்கையில் அசுவத்தாமன் துரியோதனனைத்தேடி

வந்து மடுவின்கரையில் நின்று பலவாறு கூவிக்கூவிப்பார்த்து அவ
னை அங்கில்லையென்று நினைத்து வீடுமனிருக்குமிடம் சென்றான்.
துரியோதன னெதிர்த்தொழிந்த தம்பியரை வானேற்றிய வீமன்
போர்க்களமெங்குந்தேடி அரவத்துவசனைக் காணாது ஒற்றரால்
அறிந்து மற்றவர்களுடன் மடுவின் கரையடைந்து பலநிந்தைகூறி
அத்தண்ணீரிலிறங்கிக் கலக்கப்புகத் துரியோதனன் மந்திரமறந்து
கதையுடன் கரையேறி என்னுடன் போருக்கு வருவாரெனக்
கண்ணன் அவனைநோக்கி உன்னிளைஞரெல்லாரையும் கொன்ற
வாயுசேயுடன் போர்செய்யென இசைந்தான். இருதிறத்தாரும்
போர்புரியச் சமந்தபஞ்சகத்திடையுற அக்காலைமுன் தீர்த்தயாத்
திரைசென்ற பலராமனும், விதுரனும், ஆண்டுற அவர்களடியில்
அரவத்துவசன் தருமன் முதலினோர்பணியக் கண்ணன் அண்ண
னைவணங்கித் தன்னைவணங்கிய விதுரனை வாழ்த்திமகிழ, விதுர
னும், பலராமனும் நாடுதந்து வாழுமாறு துரியோதனனுக்குரைக்க
அவனிணங்காது போர்செய்ய அவனை வீமன் அடித்து வென்று
வீழ்த்தினான்.

வீமனாலடியுண்டுவீழ்ந்துசாகுந்தருவாயிலிருந்த துரியோதன
னிடம், கண்ணன், தருமன், பால்வண்ணன், விதுரன், இவர்வரத்துரி
யோதனன் கண்ணனைவணங்கி உன் பெருமையறியாத என்னைக்
காரணமாகக் கொண்டு எல்லாரையுமழித்த தேவா! என் பாவ
மகற்றுவதுன் பாரமென்றோதித் தருமனைநோக்கி என் தாய் தந்
தையரை ஆதரி என்றுசொல்லிப் பால்வண்ணனை வணங்கி விதுர
னைநோக்கி நான்வைதசொல்லைப் பொறுத்தியென்றுரைத்து விடை
கொடுத் தவர்களையனுப்பினான். பின் அசுவத்தாமன் அமர்க்கள
த்தில் துரியோதனன் வீழ்ந்துவிடக்கண்டமை யறிந்து சென்று
அவனனுமதிபெற்று அவ்விரவிற் கிருபையுடன் பாசறைசென்று
அங்குகாத்திருக்கும் பூதத்தை வெல்லமாட்டாது அரனருள் பெ
ற்று மீண்டு சென்று அதனுள் உரங்குகின்ற துட்டத்துய்மன்
முதலினோரைக்கொன்று ஐவர் அங்கில்லாமையறியாது அவர்மைந்
தர்களை அவர்களென்றுன்னித் தலையரிந்து கொடுசென்று ஐவர்
முடிகொணர்ந்தேனென்று துரியோதனனிடம்புகல அவன்பார்த்து
அந்தோ அவர்மைந்தனைக் கொன்றுவந்தனையே என்மீது வீண்
பழிசுமத்திய முனிவனே, நீ நின்னிருக்கை செல்தி யென்றனுப்
பித் தன்குலத்துமைந்தர்கள் மடிந்தார்களேயென்று மனம்வருந்தி
உயிர்துறந்தான். அசுவத்தாமனும் அந்தோ அறிவிலாதென் செய்

தோமென்று வருந்திப் பாரத்துவாசன் ஆச்சிரமமடைந்தான். முனிவராச்சிரமமடைந் துரங்கிய பாண்டவரும் பாஞ்சாலியும் பரந்தாமனுடனெழுந்து இரவிற் பாசறையினடந்தவற்றைத் தூதுவர் உரைக்கக்கேட்டுவருந்தி பாசறையடையப் பாஞ்சாலி தன்மைந்தரு முன்னேனும் மடிந்ததுகண்டு மனஞ்சகியாது இவரை இரவிடைக்கொன்ற அசுவத்தாமன் முடியையறுத்து என்தாளால் மிதிக்காவிடிற் றீப்புகுவேனென்றுரைக்கப் பார்த்தனும் பங்கயநாபனும் தேரேறிப் பாரத்துவாசனிருக்கையடைந்து வணங்கி வாழ்த்தப்பெற்று நடந்தனவற்றைக் கண்ணன்கூற அசுவத்தாமன் உடனே வெகுண்டு தேரேறி அபாண்டவமென்று அயன் படையை விட அருச்சுனனும் அஃதெய்ய இருபடையும் பெரும்போர் செய்யத் தேவர்களஞ்சி அருள்செய்யுமாறு கண்ணனை வேண்ட அவன் இருவரையும் போரொழிக்குமாறுரைத்து அயன்படை அழைத்துக்கொள்ளுமாறுரைக்க உடனே அருச்சுனன் தன்னதை மீட்டதுகண்டு அசுவத்தாமனை நின்னதை யகற்றுதியென, யான் அகற்றவறியேனென்று கூறலு முத்தரை வயிற்றுக்கருவிதற் கிலக்கென்றேதிக் கண்ணனகைத்தனன். பின்பார்த்தன் பலபகழியேவியவன்றேராதியழித்து நாகாத்திரத்தாற் பிணித்துத்தருமனிடம் கொண்டுவிடமாயவன் அறன்சுதனை நோக்கி இவ்வசுவத்தாமனைக்கொல் என வாயுபுத்திரன் அதுசெய்யப்புகத் துரோபதையது கண்டிறைஞ்சி வீணே இவன்றாயும் என்னைப்போல் வருந்துவதிற் பயனென்னையென்று தடுப்ப உதிட்டிரனும் அவ்வாறேகூற விசயன் மார்பில் மோதிப் போதி என்றுவிடுத்தான். பின் அசுவத்தாமனெய்த பிரமாத்திரம் அபிமன்பாரி வயிற்றிற்சென்று கருவைக்கலக்கப் பங்கயநாபன் அங்குட்டவடிவாய் அவளுதரத்திருந்து காத்தான் பின் அக்கருப்பிண்டம் நிலன்விழ உத்தரையும் மற்றோரும் மனம்வருந்தக் கண்ணன் அவர்களைத்தேற்றி இப்பிண்டத்தை பெண்மயலில்லார் யாரேனும் மிதித்தால் நற்குமரனுமென்று நவின்று தானிந்க்கு முன்னடந்த மாதவரைநோக்கி மாதரிடத்து மனம் வையார் இதனை மிதியுங்களென்ன அவரொருவருமிசையாராக மாதர்தோள் புணர்ந்து மைந்தரைப் பெற்றிருப்பினும் அவர் மயலாழாதவன் தானேயென்றுரைத்து அக்கருப்பிண்டத்தை மிதிக்க அது ஓர் சிறந்த குமரனுய்ப் பிறந்தது. அதுகண்டு, மாதவரும் பாஞ்சாலியும் மனமகிழ்ந்திட அம்மைந்தனுக்குக் கண்ணன் பரிட்சித்து எனப் பேரிட்டனன். பின் தருமன் வானடைந்த வீட்டுமன் வியாளகேதனன் முதலிய சுற்றத்தார் பலர்க்கும் தவுமியன் செய்வித்தபடி உத்திரக்

கிரியை செய்வித்து அத்திப்பதியடைந்து கண்ணனுல் முடிசூட்டப் பெற்று அரியாசனத்தேற மகிழ்ந்தினிதிருந்தனன்.

கண்ணன் துவாரகையடைந்து தந்தை தாயரைவணங்கித் தேவியர் புடைசூழ மகிழ்ந்தினிதிருந்தனன். பின் கண்ணன் மிதிலைமன்னன் வெகுலாசுவ மன்னனுக்கும் சுருதி தேவனுக்கும் ஏககாலத்தில் தெரிசனந்தந்து கதியுதவிவந்து செல்வம் வேண்டிவந்த குசேலமாதவனை அன்புட னுபசரித்து மகிழ்வுற விருந்தான். பின் பொருநாள் கண்ணன் வேள்விசெய்ய நினைத்து முனிவர் பலரை வரித்து பாண்டவர் முதலினோர் வருதல்கண்டு மகிழ்ந்து மகத்தினுக்கடைந்த மாதவரைவணங்கி மகத்தினைத்தொடங்கப்போமுன் ஓர் வேதியனடைந்து தன் மனைவிபெற்ற பிள்ளைகள் மூவரும்பிறந்தவுடனந்தரமாய் மறைந்ததுகூறி தன்மனையாள் அப்போது கொண்டிருக்கும் கருவும் அவ்வாறு ஆகாவண்ணம் பாதுகாக்காவிடி லுயிர் துறப்பேனென்று மாயனுடன்கூறப் பார்த்தன் பார்த்துப் பிரசவ காலமென்னுடனுரை நான் காப்பேனென்றுரைத்தனன். அது கேட்டுச் சென்றமறையவன் மனைவியின் பிரசவ காலமறிந்து வந்துரைக்கப் பார்த்தன் பாசுபதாத்திரத்தாற் காக்கவும் சனித்த பிள்ளையுடலோடுஞ் சேணிடைப்பெயர்ந்தது கண்டு மறையவன் வருந்திப் பார்த்தனை யிகழ்ந்து மாயவனுடனுரைக்க அவன்கேட்டு அருச்சுனனுடன் தேரேறி வேதியனையு மழைத்துச்சென்று எல்லாவுலகமுங்கடந்து அங்கேயிருவரையும் இருத்தித் தத்துவமூர்த்தியிடையடைந்து வேதியச்சிறுவரைவேண்ட அம்மூர்த்தியங்குள்ள மாதர் காணுமாறு கண்ணன் பூமியிற்செய்தவற்றை நடித்துக்காட்டுகவென அவ்வாறே செய்து வேதியச்சிறுவரையும் பெற்றுவந்து அந்தணனுக்குதவிய வந்தணனையும் அருச்சுனனையு மழைத்துக்கொண்டு எழு நாழிகைக்குமுன் துவரையடைந்து வேள்விமுடித்து மகிழ்ந்து வந்தோரையெல்லாம் உபசரித்தனுப்பி மகிழ்ந்திருந்தனன்.

பின்பு பாரந்தீர்க்கப்பிறந்த கண்ணன் யாதவகுலத்தாரை யழிக்க நினைத்து முனிவரை வருமாறுன்னுதலும் அவர்கள் புண்டரீகாச்சிரமத்தெய்துங்காலையில் அரிதிருக்குமரர்கள் சாம்பனை ஓர் கருவுற்ற மாதாகப்புனைந்து அம்மாதவரிடம் அழைத்துப்போய் இம்மாது பெறும்பிள்ளையாணோபெண்ணோ அறைமின் என்று வினவ அவர்கள் வெகுண்டு இவள் பெறுவது உங்கள் குலத்தை யழிக்கு மிருப்புத்தடியென்றார்கள். உடனே ஒரயத்தடி சாம்பன்

வயிற்றினுழக்கண்டு அஞ்சியோடி உக்கிரசேனனிட முரைப்ப அவன் அதை அராவி அதன்முனையோடு கண்ணன் கூறியபடி கட லிடையிடுவித்தனன். அவ்வயப்பொடியெல்லாம் வாட்கோரையாய் முளைத்தன. அயத்தண்டின் ஓர் துனியை விழுங்கிய மீனை ஓர் வேடன் பிடித்துப்பிளந்து அதனுட்கண்ட அயத்துண்டை கணை நுனிக்குப்பியாயமைத்து காட்டிற்றிரிந்தனன். பின் நாரதமுனி பலநாளாகத் துவரையிலிருப்பதுகண்டு கேட்ட வசுதேவனிடம் நாரதன் தனக்கு ஒருநாளுக்கதிகமாக ஓரிடத்திலு மிராதவாறு சாபம் நேர்ந்தவரலாற்றையுரைத்து அவனுக்குக் கதிபெறுமாறு ரைத்து சென்றபின் துவாரகையினுண்டாகிய கெட்ட உற்பாதங் களைக்கண்டு உத்தவன் கண்ணனை வணங்கி அனைவரையும் அழித்து நீ வைகுந்தம் அடைதியோவென்றுகேட்கக் கண்ணன் இத்துவா ரகை இன்னும் எழுதினத்துட் கடலுண் மூழ்கும் இங்குள்ளா ரெல்லாரும் இறப்பர். ஆதலின், நீ இங்கிராதே, வதரிகாச்சிர மஞ் செல்லென்றுரைத்துப் பின் அவன் விரும்பிக்கேட்ட இயம நியமாதிகளை இன்னின்னவென்று விளக்கி வதரிகாச்சிரமமடைந்து பரோபகாரமாகவிருந்து தவம்புரிந்து கதியடையுமாறு கட்டுரைத்து விடுத்தனன். பின் கண்ணன் துவாரகையினுண்டாகிய உற்பாதங் களைக்கண்டு, பலவித தானங்கொடுப்பது கருதிப் பிரபாசதீர்த்தத் துற்றுப் பலவகைத்தானமீந்து எல்லாருடனும் உபவாசித்திருந்து மற்றைநாள் பாரணைபண்ணினபின் சாத்தகியும் கிருதவன்மாவும் மதுவினைப்பருகி ஒருவரோடொருவர் போர்செய்து மடிய மற்ற வர்களும் அயப்பொடியான் முளைத்தவாட்கோரையால் அடித்துக் கொண்டு போர்புரிவதுகண்டு கண்ணனும் அவனண்ணனும் தடுக்க அவர்கள் இவர்களோடெதிர்த்தாராகப் பாலவண்ணன் வாட்கோரை யால் அவர்களெல்லாரையும் கொன்றழித்தனன்.

பின்பவன் அறிவுபெற்று யோகியற்றி அனந்தனுகி வைகுந்த மடைந்தனன், பின் கண்ணன் பூபாரந்தீர்ந்ததென்றோரரசமரத்து நிழலிலிருக்க அவன்கால் புறுப்போற்றோற்ற முன் அயமுனையை அம்புமுனையாக்கொண்ட வேடன் அதனுல் எய்ய அதுகாலின் பெருவிரலிலழுந்தத்தைத்தது. பின்பவ்வேடன் உண்மையறிந்து கண்ணன் கழலிணைபணிந்து எம் எருமானே நினக்கு இடர்புரிந்த என்னைக் கொலைபுரிதி என்றனன். கண்ணன் அதுகேட்டுமகிழ்ந்து அவ்வேடனைக் கதியிடைச்செலுத்தினன். கண்ணன் அங்கிருப்ப தறிந்து தேர்கொண்டுவந்த தாருகனைநோக்கி நீ உடனே என் தாய்

தந்தையரிடம்சென்று எதுகுல வீரர்கள் வெகுண்டு ஒருவரோ டொருவர் போர்புரிந்திறந்ததும் பால்வண்ணனும் நானும் வைகுண் டமடைந்ததும் சொல்லித் துவாரகை கடலுள் மூழ்குவதன்முன் அங்குள்ளாரை மதுரையிற் கொண்டுபோய் விடுத்து அநிருத்தன் மகனுக்கு முடிசூட்டுமாறு விசயனுடன் கூறு என்றுசொல்லிவிடுத் துத் தான் வைகுண்டமெய்தினான். அவன் கட்டளையிட்டவாறே தாருகன் சென்று வாசுதேவன் முதலினோரிடம் கூற அவர்கள் கேட்டுப் பெருங்கவலையடைந்து அழுதரற்றித் துவரைவிட்டுச் சென்றதும் துவாரகையிற் கடல் பரவியது.

போர்புரிந்திறந்த எதுகுல மன்னவர் பாரிமார்களெல்லவரும் தீவீழ்ந்து தத்த நாயகர்களுட னெரிந்தார்கள். அனந்தனும்பதவி யடைந்த அலாயுதனை அகத்திடையிருத்தி ரேவதி முதலாந்தேவி யர் எரியிடை வீழ்ந்து கதிபெற்றார்கள். உருக்குமிணி முதலிய பதினாறாயிரத் தொருநூற்றெட்டு மடந்தையரும் மாதவனை மனத் திடை நினைத்து தீவீழ்ந்து ஓர் வடிவங்கொண்டு வைகுண்டத் தெய்தி மாலுரத்தின் மன்னினர். உக்கிரசேனன் அரியடி நினை ந்து யோகத்திலிருந்துயிர் துறந்தவனடியடைந்தான். அவ்வுக் கிரசேனன் மனைவியரும் கனலில் வீழ்ந்து சுரருலகத்தெய்தினர். சூரசேனன் சேயும் சுரர்முனியுரைத்ததியான யோகத்தால் தேவ கியுரோகணியெனும் தேவியருடன் யாக்கையை நிலத்திடை வீழ் த்து அரியடியடைந்தனன். நந்தனுமசோதையும் நாரணன் செய லெலாம் நினைத்து யோகிலிருந்து கழியப்பின் விசயன் அவரை யெரியிடையிட்டு இறந்தோர்க்கெல்லாம் திலநீரளித்தனன். பின் விசயன் பிப்பிலத்தடியெய்திக் கண்ணன் வீற்றிருந்திடுங்குறி கண்டு அளவிலாக்கவலையுடன் கண்ணீராருய்ப்பெருக ஆதியில் அரவக்கொ டியோன் வாயுசேயை வதைக்குமாறு மடுவில் நாட்டிய வசியின் மேல் கண்ணன் அளியுடன் அளிவடிவாயிருந்து ஆதரித்தது முத லியசெயல்களையுன்னி யுன்னியழுதரற்றினான். பின் துவாரகையிற் றங்கிய விருத்தநாரியராதியருடன் மதுரை புகச்செல்லுகையில் வேடர் சிலர்வந்து அந்நாரியர்களைப்பற்றிக்கொண்டு வரையிடத்துச் சென்றார்கள். அவர்களை யெய்யுமாறு காண்டீபத்தைவளைக்கும்வலி யுமற்றிடக்கண்டு விசயன்மெலிந்து மதுரையடைந்து அநிருத்தன் மகன் வச்சிரனுக்கு முடிசூட்டிக் கண்ணன் கழலிணைகளை கருத்துட் கொண்டனன் என்று இவற்றையெல்லாம் கூறிவந்த சுகமுனிவரை பரீக்ஷித்து ஐயுற்றுக்கேட்க, முனிவர் எல்லாவண்டங்களும் மாதவ

ன்வயிற்றிலிருக்கின்றன வென்பதை மார்க்கண்டன் மாதவன் வயிற்றுட்சென்று கண்டகதையாலும் மாதவனடியார்கள் செல்வராகவு மாதவனடியார்கள் வறியராகவு மிருத்தற்குக்காரணம் மாதவன் அற்பர்களுக்கருளாமை யென்பதைவிருகாசூரன் கதையாலும் மாதவன் சத்துவகுண மூர்த்தியென்பதை பிருகுமுனிவர் மும்மூர்த்தியிடமும் சென்று சத்துவகுண முடையாரைக் கண்டறிந்தவற்றாலும் வகுத்துரைத்தனர். பின் பரிட்சித்து மன்னன் மகிழ்ந்திருந்து அம்முனிவனடிபணிந்து அனுப்பிவிட்டு அவர் உபதேசித்தபடியேயிருந்து அரியடியடைந்தான். அதுகண்டு அவன்மகன் சனமேசயன் அழுதரற்றி அவன்தேகத்தை வேதவிதிப்படி யெரியிலிட ஈமத்திற்சேர்க்க தக்ஷகன் விரைவிலடைந்து அவன் மேனியை விழியினுலெரித்தான். பின் சனமேசயன் அவனுக்கு எள்ளு நீருதவினன். பின் செனமேசயன் சிங்காதனத்தேறி செங்கோல்செலுத்துங்காலையில் ஓர்நாள் ஓர்வேடன் அரசவையுட்புகுந்து அடிபணிந்து அனுமதி பெற்று வேந்தே நான் வேட்டையினிமித்தம் காட்டிற்சென்று பறவைகள்விழ்ந் தகப்படும்படி வலைகட்டிவிட்டு ஓர் ஆலமரத்தின் மீதேறியிருக்கையில் ஓர்வேதியன் அதனடியில் நிழலின்பொருட்டு வந்துநின்றனைத் தக்ஷகன் அந்தணவடிவங்கொண் டடைந்துஎங்கு செல்கின்றாய் வேதியவென்ன அவன் பரிட்சித்து மன்னவனைப் பாம்புகடிக்க அதுநீர்ப்பது கருதிச்செல்கின்றேனென்றுனுகை அவன்கேட்டு அந்தணனே தக்ஷகன் கடிக்கிற் றீர்க்கற்பாலையோ என ஆதிசேஷன் கடிப்பினும் தீர்ப்பேனெனலும் தக்ஷகன் வெகுண்டு தன்உண்மைவடிவம் எடுத்து இவ்வாலமரத்தைக் கடிக்கின்றனன் விஷத்தை யகற்றுதியென்று கடித்தவுடன் அம்மரமும் அதன்மீதிருந்த யானும் சாம்பராய்ப்போக அந்தணன் மந்திரித்து நீர்தெளித்தலும் அம்மரமும் பண்டுபோற்றுளிர்த்தது. நானும் உயிர்பெற்றேன். அதுகண்டு தக்ஷகன் அந்தணனைநோக்கி, ஓ, பிராமணுேத்தமா? உனை வேதனும் நிகர்க்கிலன் வீணுக என் முனிவன் சாபத்தையகற்றுதியென்று அருமணிகள் உதவ அந்தணன் அவற்றைப்பெற்றுத் தான்செல்வழிச்சென்றனன். பின் தக்ஷகன்வந்து நின்தந்தையைக் கடித்தானென்று காட்டிற்தான்கண்டது கூறக் கேட்டுச் சனமேசெயன் வெகுண்டு சர்ப்பயாக மியற்றக்கருதி முனிவர்களை வரித்து விதிவிழிப்படிய வியுதவிட நடுங்கி அரவினங்கள் யாகசாலையடைந்து குண்டத்திடை வீழ்ந்திறந்தன அட்டமாநாகங்களும் தம்மையும் ஆகுதிகடைந்து வெதுப்புதலும் லருந்தி அபயமிட்டு அமரர்கோன் ஆதனம் சுற்றிக்கிடப்ப முனிவர்களா

னஃதறிந்த மன்னன் இந்திரனோடு அரவினங்கள் ஈண்டுறுமாறியற்றுமினென்னலு மவர்கள் அவ்வாறியற்ற ஆகுதிகள்சென்று அமரர்கோனுதனம்பேர்த்து அவர்களுடன் அவனை யாகசாலையிடையிழுத்து வருங்காலையில் அத்திகன் சனமேசெயனிடம் வரங்கிடப்பஇசைந்து அராக்களுடன் அமரர்கோன் உய்யுமாறுவிடுத்து வேள்விமுடித்து சென்றனன். பின் ஓர்நாள் வேதவியாசர் சனமேசெயன் சபைக்குவர அவரடிபணிந் தாசனத்திலிருத்தி கண்ணன் பூபாரந்தீர்க்கப்பிறந்துளான் என்பது தெரிந்திருந்தும் குருகுலத்தவரமர்செய்யாவண்ணம் விலக்காத கொடும்வினை உனைச்சூழும்என்றுரைக்க முனிவர்பார்த்து வேந்தே விதிவலி எவர்க்கும்விலக்கரிது ஆயினமையின் உனக்குவருகிறதற் கிருக்கும் பிரமகத்தியை நீக்கிக்கொள் என்றுரைத்தகல அரசன் அஞ்சித் தன்னியற்கைவிடுத்து வேள்விசெய்திருந்தான். அக்காலை மந்திரஞ்செபித்துக்கொண்டிருந்த பிராமணர்களிலொருவன் கண்சிமிட்டிச் சோர்வதுகண்டு அவன்விழிப்படையுமாறு தருப்பையாற்றட்டுதலும் அது அவன்மார்பிலயிலாய்விழ அவன்மரித்தனன். துயினீங்குமாறு எறிந்திடுந்தருப்பை அயிலாயுருவமறையோ னிறந்ததுகண்டு விதிவலிகடத்தல் விரிசடைக்கடவுளுக்கு மியலாதென்பதறியாது முனிவர் பெருமானை இகழ்ந்தேனே என்று அவ்வினைக்குத் தீர்வுயாதென்று வருந்தினன். அக்காலையில் வியாசமுனிவரடைதலும் அவரடி பணிந்து மாதவஅன்று யான்கூறிய இகழ்மொழி பொறுத்து எனக்குற்றிருக்கும் பிரமகத்திக்கு தீர்வுரை என அது நின்குலத்தோர் சரிதையாகிய பாரதங்கேட்கிற் றீருமென மன்னன் அஃதுரையென முனிவர்பிரான் வைசம்பாயனரை நோக்கி நீ இவர்க்குப் பாரதசரித்திரம் பகர்தியென்று பழுவத்துற்றனன். பின் வைசம்பாயனர் ஆதிபருவமுதல் மகாவிந்த மிருதியாக பாரதசரித்திரம் கூறினார் பின்பது விரும்பிக்கேட்ட மன்னவன் பிரமகத்தி நீங்கப்பெற்றுப்பின் அம்முனிவனுல் பரம்பொருளின் தசாவதாரங்களைக் கூறக்கேட்டு மகிழ்ந்தினிதிருந்தான்.

மகாபாகவதச்சுருக்கம்

முற்றிற்று.

ஹரி:

விஷ்ணுமயம்.

ஸ்ரீமகா பாகவதம்.

இரண்டாம் புத்தகம்.

79-வது, உருக்குமணிதேவியார் திருக்கலியாணப்படலம்.

செருவடர்த்துயர்மீனறவிடையிறவே மணிகவர்ந்தளித்துமுன்சேர்ந்
தெண், ணரியநற்றவங்கண்டசுரனைவதைத்துப்பொறிவிந்தையிலக்கணை
சித்தாந், தெரிவைசாம்புவதிசத்தியவாமை பத்திரைகாளிந்திதேர்நாற்,
றரிவையர்பதினாறாயிரத்தவரோ டணைந்தமாலடியெமக்கரணே. 1

வேறு.

மலையினையேந்தியவாசுதேவனார்
சிலையுறுநுதலியைச்சேர்வதின்றென
வலையுறுகடலெனப்பேரியார்த்திட
நலனுறவெழுந்தனர்நகருளாரரோ. 2

கருமுகிலனையநற்கண்ணன்றோளினின்
மருவமர்குழலினாண்மாலைசூட்டிடுந்
திருமணமின்றெனத்தேவரார்த்தனர்
தருமலர்சொரிந்தனர்தரணியெங்குமே. 3

எதுகுலவிறைவனுக்கெழிலினாலுயர்
மதிமுகமடமயில்வதுவையாகவே
கதுமெனவலரிநீள்கங்குல்பாறநீ
ளுததியின்விளங்கினன்மறைகளோதவே. 4

அருக்கனார்குணதிசையிலகவாடக
முருக்கியதாமெனக்கிரணமோங்கவே
மருக்கமழ்குழலினாள்வதுவையின்றெனுந்
தருக்கினானெருக்கினார்தரணிமாந்தரே. 5

அறந்தருமுனிவர்களந்தணாளர்கள்
சிறந்தெழுமரசர்கடேர்கண்மாகரி
நிறைந்தெழுங்கடலெனநீளுமாநக
ருறைந்தனருலப்பிலருவகையோங்கவே. 6

மாரனேபோன்றொளிர்வடிவுமிக்குயர்
வீரமேபொலிந்துளார்விரியுநன்மணித்
தேரின்மேலெழுந்துளார்குமரர்சீறிய
சூரர்வாலெங்கிடநிறைந்துசூழ்ந்தனர். 7

கரியினில்வருபவர்காலவேல்கொடு
பரியினில்வருபவர்படைஞர்சூழ்ந்திட
வரியெனவிரதமேலமர்ந்துதோன்றுவார்
விரிகடலொலியெனமுழக்கம்விஞ்சவே. 8

குந்தியநடையினர்குடையினர்குண்டிகை
முந்தியகையர்முப்புரிநூலினர்
அந்தணர்பொதுளினர்ஆதனபீதமர்
செந்திருவுருடணங்காணுஞ்சிந்தையார். 9

மயிலெனவுழையெனவருமினுமெனக்
குயிலெனவிரணியக்கொம்புமாமென
வயில்விழிவயங்கிடவன்னம்போலவே
செயலுறுநடையினர்கூடஞ்சேர்ந்தனர். 10

காலணிஞெகிழிகள்புலம்பக்கைவளை
யோலமினிசையுறவொளிகொண்மாமணி
நீலமுந்தரளமுநிறைந்தகொங்கையார்
வேலெனும்விழியினார்வீதிதுன்னினார். 11

காரணியுற்றநற்கமுகுநாட்டினர்
தோரணநிறைத்தனர்கதலிசூழ்ந்திடத்
தேரணியுற்றிடத்திகழும்வீதிகள்
பூரணபொற்குடம்பொலியவைத்தனர். 12

வால்வளைதழங்கிடவயங்குமாளிகை
நீலமுந்தரளமுநிறைந்தஞெள்ளல்வாய்
நாலிருதிசையினுநகைகொணன்மணி
மாலைகணிறைந்தனபரிதிமானவே. 13

சாபமேபுருவமாய்த்தழைத்தவிந்திர
கோபமேயதரமாங்குமுதவாயினார்

தூபம்வான் முகிலொடுந்தொடர்ந்த தூயதாந்
தீபமாளிகைதொறுந்திகழவைத்தனர். 14

நீலவாரிதியெழுந்தவளகித்திலங்
கோலமாமணிகளுங்கோர்வையானநீண்
மாலையாயலைந்திடவயங்குமாவண
மேலெலாந்தமணியவிதானமோங்கிய. 15

அடிபடுபேரிகைமுரசமியாவையு
மிடிபடமுழங்கின திசைகளெங்களும்
வடிவுடைமலர்மகளுறையுமாநகர்
கொடிகுலட துதைந்தன குழாங்களாகியே. 16

மின்னியகுருமணிவிளங்குகோபுரம்
பொன்னுறுதரளவேதிகைபொருந்தியே
துன்னியதுவரையம்பதிதுலங்கிட
கின்னரரின்னிசைகிளர்ந்ததெங்குமே. 17

குங்குமங்கருப்புரங்குளிர்ந்தசந்தனம்
பங்கயவிதழ்ப்பனிநீர்பரந்திட
வெங்கணுநிறைந்தனரிடைகடள்ளுற
மங்குலைநிகர்த்தெழுமளகமங்கைமார். 18

பூணணிமுலையினுர்பொழிந்தவாசநீர்
சேணிறைமழையெனச்சென் றுதேவர்கள்
காணவாண்டெழுந்துளிகலைநனைக்கவே
நாணினருருப்பசியுடனேநங்கைமார். 19

கோபம்விஞ்சிடங்கர்மாமடியவேகொடும்
பாபமிலிபமுய்யப்பண்ணும்பங்கய
நாபியன்னளினநற்றிருவைநண்ணிடச்
சோபனமொழிந்தனர்வீதிதோறுமே. 20

களித்தனர்புரவலர்கனகமாரியா
யளித்தனர்வறியவராசராகவே
துளித்தெழுமழையெனத்தூயமாதரார்
தெளித்தனர்கமழ்பனிநீர்சிறக்கவே. 21

இந்திரைமுகுந்தனுக்கெய்துமாமணம்
வந்ததுவெனவுளமகிழுமாதரார்
நந்தணிமுன்கையார்நத்தினேர்பெற
சிந்தினர்தரளமுமணியுஞ்செம்பொனும். 22

ஆடினர்விசும்புறையரம்பைநாணவே
பாடினரமிர்தகும்பண்ணின்வீணையாழ்
சூடினர்நறுமலர்துலங்குபொற்கல
னாடிமெய்யணிந்தனர்நகரின்மங்கைமார். 23

மலையெறுமுலையணிமணிகள்மின்னநற்
கலையணிமருங்கினார்காருறுங்குழ
லலைவுறவெழிலுறுமன்னமாமென
நிலமிசைநடந்தனர்நெருங்கியெங்கணும். 24

கன்னலுங்கதலியுங்கமுகுங்காருற
மின்னியநவமணிவிளங்குகோபுரந்
துன்னியகொடிமிடைதுவரைமாபதி
பொன்னகரழகினும்பொலிந்துதோன்றிய. 25

புளகமெய்யுறமலர்பொருந்தும்வாசநீர்
மிளிருமொண்விழியினாடர்ந்துவீசவே
துளிகொளுமழையெனத்துலங்குமாபுரி
யளகையம்பதியினுமதிசயித்ததே. 26

சதமகனகரினுமளகைதன்னினும்
விதமுறுநவமணிவிளங்குமாநக
ருதியினுரகமேலொளிருமுத்தமன்
பதமெனவயங்கியபரவைசூழவே. 27

ஈசனன்றுலகெலாமிரந்தவெண்டலை
காசினிதனின்விழக்கருணைசெய்தருள்
கேசவனுறுநகர்கிளர்ந்தமண்டபம்
வாசவன்மகிழ்வொடுங்கொணர்ந்துவைத்தனன். 28

வித்துருமந்துலாமரகதம்மிளி
ருத்திரம்வயிரமொண்பலகைபோதிகை
நித்திலமருகுதாணீலமாமணிப்
பத்திசெய்தூணிறைபசும்பொன்மண்டபம். 29

அலையுலாமார்கலியமருமச்சுதற்
குலகெலாமகிழவாசவனுற்றீந்ததா
மிலகுமாமணியெலாமிரவியேலவே
பொலியுமாமண்டபம்புகலலாவதோ. 30

தெண்டிரையுததியிற்சிறந்தமாநக
ரண்டர்கடுதிசெயுமமலனச்சுதன்
முண்டகன்றனையருண்முதல்வன்மேவிடு
மண்டபம்வயங்கிடும்வாயின்முன்னரோ. 31

காசறுதமனியக்கால்கணாட்டியே
மாசறவயங்கியமணிக்குடங்கள்சே
ருசலினிலங்குசங்கிலியினோடொளி
வீசியமரகதப்பலகைமின்னவே. 32

துவரையம்பதிதனிற்சுரர்கணாயக
னவனியினிழிந்துவைத்தமர்ந்தமண்டப

நவமணியினங்கள்குழுசனண்ணிய
புவிமகளணிந்தபொற்கலனும்போன்றது. 33

இனையனபொலிதருமெழில்கொண்மண்டப
மினையவுமரியபொன்னூசலின்றன
வனையவுமறைந்தனந்திருவொடாழியான்
வனைதல்செய்வதுவையின்வண்மைகூறுவாம். 34

மலருறையயனுநாமகளும்வந்தன
ரிலகியபசுபதியுமையோடெய்தினு
னலனுறுபுலோமிசைவலாரிகண்ணின
ரலையுறுகடலெனவமரர்துன்னினர். 35

கின்னரர்கருடகாந்தருவர்தங்கிளை
துன்னினர்தும்புருமகிழ்ந்தருழ்ந்திட
மன்னினரியக்கர்கிம்புருடர்வான்மிசை
யுன்னுமுனடைந்தனருவகையோங்கவே. 36

உருப்பசியரம்பைமேனகையோடும்பர்கள்
விருப்புறுதிலோத்தமைவிண்ணின்மாதரார்
பொருப்பெனுமுலையர்பாசிழைபொருந்திடக்
கருப்புரமலர்மணங்கமழவந்தனர். 37

புலத்தியனகத்தியன்பொலன்கொணாரதன்
நலத்துறுவசிட்டனல்வியாசனன்றிசேர்
பலத்துறுமத்திரிபராசரன்சுக
னிலத்துறுதவரெலாநிறையத்தோன்றினர். 38

தருமனீள்கதையினன்றனஞ்செயனய
மருவியநகுலசாதேவன்மாதவத்
தருணிறைகுந்தியோடமர்ந்துதோன்றின
ரிருளகல்மணியுறுமிரதமீதரோ. 39

மத்திரன்றுரோபதமன்னன்மற்றுள
மித்திரரிரதமாகரிகண்மேலுறு
மத்திரமுதலியபடைஞரார்த்தெழச்
சித்திரமெழில்கொள்வண்டுவரைசேர்ந்தனர். 40

நந்தகோபன்றிகழசோதைநங்கைதன்
மைந்தனுங்கண்ணன்மாமலரின்மங்கையை
யந்தமாம்வதுவைசெய்யழகுகாணவே
முந்தினார்தமரொடுமுடுகுதேரின்மேல். 41

முல்லையினரும்பெனமுளைத்தபல்லின
ரெல்லையிலுவகையாரெங்கள்கண்ணனு
ரல்லியார்மலர்மினோடமருமாமண
மல்லல்கண்டிடவம்மினென்றுவந்தனர். 42

நறுநெய்பாறயிருடனையந்தவெண்ணெயோ
டுறிமிசையுண்டவனண்டருருளோர்
நிறையும்வாரிதியெனநெருங்கிவந்தன
ரிறைவனீள்துவரைமாபதியினெய்தவே. 43

வேறு.

கண்ணிநீள்கழிகொள்கரமிவறிவேயூதி
யெண்ணிலாதவாவுடனிளங்கன்றுகளெய்த
வெண்ணெய்வாரியேவிழுங்கியவீரனைக்காண
நண்ணினார்துவராபதியாகியநகரின். 44

வேயினின்னிசைவிரும்பியும்வித்துருமத்தின்
வாயினல்லமுதருந்தியுமார்புறவணைத்துத்
தூயகண்ணனைநினைந்துளமயலினாற்றுவக்குண்
டாயமங்கையரனைவருந்துவரையினடைந்தார். 45

அந்தணாளர்கண்முனிவர்களரசர்களாயர்
நந்துசேருமுன்கையொளிர்நாரியர்பலரும்
வந்துளார்தமக்கருக்கியமாதனம்வழங்கிச்
சிந்தையார்வமெய்திடவிளங்கினன்வசுதேவன். 46

மகிழ்வினாலுபசாரங்கள்பலவுரைவழங்கிப்
புகழினாலுயரரசர்மாதவருடன்பொருந்தித்
திகழும்யாதவர்க்கிறைவனுந்தேவகிதானு
மிகழ்விலாதவிந்திரைவயினெய்தினரியல்பால். 47

அன்னமென்னடையமிர்துகும்பவளவாயழகார்
மின்னெனுமிடைமிளிருமைவிழியினாள்விதர்ப்பன்
கன்னிதன்னைநன்மணம்புனைகோலமேகாண்பா
னுன்னுமுன்னம்வந்தரிவையர்திரள்களுமுவந்தார். 48

குங்குமங்கருப்பூரமுங்குளிர்பனிநீரும்
பொங்குகங்கையின்புனலொடுசந்தனம்பொருந்தச்
சங்குசெங்கையினேந்தினான்றன்னையேவிரும்பு
மங்கைபங்கயமடந்தைநீராடினள்மகிழ்ந்தே. 49

எடருமதுமலர்மிசையிருந்தமின்பனிநீ
ராடியேதகவாடகக்காழகமணிந்தாள்
சூடினாள்கடிமலர்குழறலங்கிடச்சுரும்பு
பாடியாடினஞிமிறுடன்பரிமளமுவந்தே. 50

தண்டைநூபுரம்பரியகந்தாமரைமலரின்
வண்டுகொனங்கள்பாடுமொறெனவிசைவழங்க
வண்டர்நாயகன்மனைவியாமமிர்துறுமணங்கின்
புண்டரிகமென்பதங்களினிலங்கினபொலிந்தே. 51

மின்னுநாணுறமெலிந்திடுமிடையினில்விளங்கும்
பொன்னிறலவிர்பரந்தபூந்துகிலணிபொருந்தத்
துன்னுமாமணியினங்கள்செங்கதிரெனத்துலங்க
மன்னுமாழையினழகுறுகாஞ்சியும்வயங்க. 52

விலையிலாதொளிர்வியாளமீன்மணிகளும்விளங்க
வலையுலாவியவாழியினமருகித்திலமுஞ்
சிலையுலாவியபுருவநற்கயல்விழித்திருவின்
முலையுலாவியேமுருகவிழ்மாலையோடிலங்க. 53

அளகமேகமேயெனவிருண்டழகுறுமணங்கு
துளபமாலையான்றேள்புணர்மகிழ்ச்சியினிலங்கும்
புளகமாகியவிருதனப்பயோதரம்பொருந்தக்
களபமோடுகுங்குமமிழைத்தணிந்தனர்களிப்பால். 54

வாரைவிஞ்சிமும்மதக்கரிமருப்பெனவளர்ந்து
நீரினார்கமலத்தினன்முகையெனநெருங்குஞ்
சீருலாவியமுலையணிதரளமுஞ்சிவந்த
பூரியோர்பெரியோர்தனைச்சேர்வுறும்பொலன்போல். 55

நீலமாமணியினங்களுந்தரளமுநிறைந்து
கோலமாகியபசும்பொனின்கலன்களுங்குழுமி
யேலுமாண்புறவிலங்கியபூகமுநாண
வேலையோவியகோடெனக்கந்தரம்விளங்க. 56

பணிபணுமகுடங்கொடுவளைந்தபண்பெனவே
மணிகண்மின்னியகங்கணமிருகையின்வயங்கப்
பிணையுநாணநீள்பெருந்தடவிலோசனிதோளி
னிணையிலாதபொற்றொடியும்வானிரவிபோலிலங்க. 57

கழைகொடோளினூசலாமிரண்டுகாதிணையில்
குழையினார்மணிக்குழுவொடுகென்னப்பூக்குலாவ
வழையின்றுதூராகம்மெனவயங்குசிந்தூர
மிழைகண்மின்னியவிளமுலையாணுதலிலக. 58

அண்டர்நாயகன்றிருவுருவணங்குளநிறைந்து
மிண்டியேசிரமிசையினீள்பொலிந்தெனவிசும்பிற்
கொண்டல்கானகநிறைந்தெனக்குழுமுமெலோதி
வண்டருமலர்ச்சிகழிகைமுடித்தனர்மடவார். 59

ஆயனாலிலையமர்ந்தவனச்சுதனனந்தன்
மாயன்மாதவன்வாமனன்வடிவினான்மிகவும்
நேயமாகியமடந்தைதன்னெற்றியினணிந்த
தூயநாமமூன்றும்பிறையாமெனத்துலங்க. 60

அயிலைவென்றிருகுழையினையடர்த்துநீண்டகன்று
கயல்விரும்புறமிளிர்ந்துசெவ்வரிகளுங்கலந்தே

மயர்வுறுங்களவின்றெனவெஞ்சகமொருவிச்
செயிறகன்றகண்ணிணையினிலஞ்சனந்திகழ. 61

மைப்புயற்சயல்விற்குமிழாம்பன்மாமதிபொன்
வெற்புநந்துமின்னரம்பைவேயிவையெலாங்கொண்டோர்
கற்பகக்கொம்புகதிர்மலரலர்ந்தெனக்கன்னி
நிற்குமற்புதங்கண்டநாரியர்கணெஞ்சுவந்தார். 62

அந்தமாகியமறையவராசிகள்கூறக்
கந்தம்வீசியகருப்புரத்திபமுங்காட்டி.
சிந்தையாரவேசோபனந்திகழ்வுறப்பாடி
வந்தமாதரார்மலர்மழைதூவினர்வணங்கி. 63

வேறு.

நித்திலப்பெணிறைமலர்க்காந்தளாங்
கைத்தலப்பெணருந்ததிக்கற்புப்பெண்
வித்தகப்பெண்விதர்ப்பனருட்பெண்ணல்
லுத்தமப்பெண்ணுருக்குமணிப்பெண்ணே. 64

மாதவப்பெண்மதிமுகப்பெண்மலர்
மீதிருற்றபெண்வித்துருமப்பெண்ணே
யேதமற்றபெண்ணித்திரையாகும்பெண்
ணோதிமப்பெண்ணுருக்குமணிப்பெண்ணே. 65

கன்னறெள்ளமுதாமொழிக்கன்னிகை
மின்னுமாபரணங்கள்விளங்கவே
பொன்னினூபுரம்பாதம்புலம்பிட
வன்னநாணவசைந்துநடந்தனள். 66

பாரிசாதநற்கொம்புபடிமிசை
சீரிதாநடைகற்குஞ்செய்கைபோ
லாரமாமணிநீலமலைந்திட
வாரிமீதெழுமாதடிபேர்த்தனள். 67

நீலமாமணியம்பொனிறைந்தெழுங்
கோலமானவிமானங்குறுகியே
சீலமானசெழுங்கொடித்தேன்மலர்
மேலின்மாதெனவீற்றிருந்தாளரோ. 68

கொடிநிறைந்துகுடைகண்மிடைந்தன
விடிமுழங்கியபோலெழுபேரியோ
டடிபடும்முரசான்றனமாதரார்
படிநிறைந்துபல்லாண்டிசைபாடினர். 69

கவரிவீசினராலவட்டங்கையாற்
றுவரின்வாயினர்பற்றினர்சூழவே

யவனிதானின்றயந்தனைரும்முனித்
தவரும்வீதிநெருங்கினர்தள்ளியே. 70

கோவினங்களுயர்குன்றமேந்தினா
னாவியன்னவள்வந்தனளம்பொனி
னோவியம்முயிர்பெற்றதொத்தேயொளிர்
தேவிவந்தனளென்றபொற்சின்னமே. 71

சங்கொலித்தனதாரைமுழங்கின
மங்கைநற்றிருவந்தனளாமெனப்
பங்கயத்திறைதேவர்சசிபதி
யெங்குமொய்த்தனரந்தரத்தெய்தியே. 72

இந்திராணியெழிலுறுநாமகள்
வந்துவானிறைமங்கையர்சம்மொடுங்
கந்தநாண்மலர்க்கன்னியைக்கண்டனர்
சிந்தையாரமகிழ்ந்திவைசெப்புவார். 73

மலரின்மேலுறைமாமயிலோவரை
யலைகொளாழியமுதத்தெழுமினோ
தலைகள்வீழத்தசக்கிரீவன்றனைச்
சிலையினாலழித்தான்றிருத்தேவியோ. 74

மன்னவன்விதர்ப்பன்மகளோமங்கு
லென்னமல்குமிருளளகப்பெனோ
கன்னியோகரும்போகமலாசனத்
தன்னமோவணங்கோவமுதோவென்றார். 75

பாழியந்தடந்தோள்கள்பரப்பியே
யாழியன்றுகடைந்தமுதாசனர்
பீழைதள்ளும்பரன்பெருந்தேவியே
வாழியென்றுமலர்மழைதூவினார். 76

மின்னுமாமணிதன்னும்விமானமேன்
மன்னர்மாதவர்மாதர்கள்சூழவே
யன்னமாமெனவஞ்சுகமாமெனப்
பொன்னினூசலினேறினள்பூந்திரு. 77

ஆரமாடவணிகலமாடப்பூந்
தாருமாடவிண்ணாளுஞ்சதமகப்
பேரினானும்பிதாமகனும்மிமை
யோருமாடப்பொன்னூசலினாடினாள். 78

காசினம்பிறழக்கலன்வில்லிட
வேசிலாரவடங்களுமெல்லிடத்
தூசுமின்னிடைதன்னிற்றுயல்வர
வூசலிந்திரையாடவுரைசெய்வார். 79

வேறு.

கைவளைகள்கலகலெனவாடிரூசல் காலிலணிசிலம்பார்ப்பவாடிரூசல், மொய்யளியையம்பாலினெழவாடிரூசல் மூவுலகினிகரின்மின்னேயாடிரூசல், மெய்யுரைசெய்நாவுடையீராடிரூசல் விதர்ப்பனருண்மெல்லியலீராடிரூசல், பையரவினடித்திடுவான்றேவியான பங்கயமேற்பசுங்கிளியேயாடிரூசல். 80

காதினணிகுழையசையவாடிரூசல்கருங்குழலிற்றாரசையவாடிரூசல், பாதமணிசிலம்பொலிப்பவாடிரூசல் பரியகங்கள்பணமிழற்றவாடிரூசல், மாதவஞ்செய்மிதிலைநகர்ச்சனகராசன் மனமகிழுமகளெனவேமண்ணின் மீதிற், சீதையெனவந்தமின்னேயாடிரூசல் தேமலரிற்றெள்ளமுதேயாடிரூசல். 81

வேலனையவிழியிணையீராடிரூசல் வீழியுறுகனிவாயீராடிரூசல், பாலின்மொழிநளினமின்னேயாடிரூசல் பரமபதத்தொளிர்திருவேயாடிரூசல், ஆலினிலைதனிலமருமாதியென்றே யறிந்துமனமுருகியுயரமலர்க்காங்கே, யோலையுடன்புரோகிதனைத்தூதாயேவு முருக்குமணியெனுந்திருவேயாடிரூசல். 82

மின்னுமணிதரளமெழினிலமெல்லாம் விளங்குகலனணிமுலையீராடிரூசல், முன்னவன்றனமரினுயிர்முடியாவண்ண முராரிதன்னல்விலக்கிடுவீராடிரூசல், அன்னமெனுநடையுடையீராடிரூசல் ஆனிரைகாத்தவன்றேவீயாடிரூசல், மன்னவரெண்விதர்ப்பனருந்தவத்தின் வந்தமலர்மகளாராடிரூசல்வாழியென்றே. 83

வேறு.

வாணியிந்திராணிவானவர்கண்மங்கைமார்
சேணுறுமரம்பைமேனகைதிலோத்தமை
பூணுறுமுலையினார்புகழ்ந்துபொன்னவிர்
நாண்மலர்பொழிந்தனர்களினமின்னின்மேல். 84

எல்லுறுகொடிகுடைசவரியேந்தியே
வல்லியர்மருங்குறமணிகண்மல்கிட
வில்லுறுமம்பொனினூசன்மேவியே
யல்லியங்கமலமின்னுடும்வேலையின். 85

மெய்த்தவப்புலத்தியன்வியாசனாலறி
யத்திரிப்பெயரினன்வசிட்டனாதியர்
கைத்தலக்கனியெனக்காட்டுநாவினர்
மொய்த்தனர்சுகனுநாரதனுமுந்தவே. 86

உண்மைசேருக்கிரசேனனுத்தவன்
வண்மைசேர்குருகுலமகீபர்மத்திரன்
திண்மைசேர்புயவசுதேவன்சேயுடன்
வெண்மைசேர்வலம்புரிவீரன்பாற்சென்றார். 87

வேலைபோலரசர்கள்பலர்மிடைந்தன
ராலினிளிலையின்மேலன் றுறங்கிய
மாலினுர்திருவுடன்மகிழுநன்மணக்
கோலமேகாண்குவார்குறுகினாரோ. 88

கங்கைகாவேரிநீள்யமுனைகண்டகி
துங்ககோதாவிரிவேணிதூயதாய்ப்
பொங்குநீரிமசலம்புதியதண்மலர்
தங்குவாசனைக்குங்குமங்கள்சாரவே. 89

மாதவர்மறையவர்மகிழ்விஞலறை
வேதமுமுழங்கிடப்பேரிவிஞ்சிய
வோதையெண்டிசையுறவுலகநுங்கிய
வாதியாம்பரமன்வஞ்சனமுமாடிஞன். 90

நீலமாகிரியிளவெயினிறைந்தென
மாலினுர்மருங்கெழிலழகுவாய்த்திட
வேலையார்தரளமுமிடைந்துசுற்றுறக்
கோலமாகியபொனின்கூறைசார்த்திஞர். 91

கிரியினையெடுத்துமாமழையைக்காத்தவெங்
கரியினன்மருப்பொடித்தருளுங்கண்ணனு
ரவினினடித்தகாலழகுமல்கவே
விரிகதிரொளிமணிஞெகிழிவிஞ்சின. 92

காரினைவளைத்தசெம்மலரின்காட்சிபோ
லாரியன்மருங்கொளிரம்பொற்கச்சிடை
மேருவைவலம்வருமேலவன்மனனச்
சீருறவயங்குடைவாளுஞ்சேர்த்தினர். 93

ததியுடனெய்கவர்சதுரவென்றயன்
றுதிசெயவயங்கியசோதியுந்திமேற்
கதிருறுமணிநிறைகனகமல்கிய
வுதரபந்தனங்கவினிலங்கியோங்கவே. 94

பவுத்தர்தம்பரனெனப்பணிந்தன்றீசனை
யவத்தனென்றிகழ்ந்திமெவணர்வாழ்வெலாந்
தவிர்த்திருளகற்றியசதுரன்மார்பினிற்
கவுத்துவந்தயங்கினகதிரின்காட்சிபோல். 95

தற்பரமானமும்மூர்த்திதானுள
வப்புறைமாதவனுகத்தாமெனச்
செப்பியவாரணப்பொருடெரிந்தன
முப்புரிநூலுயர்முராரிமார்புற. 96

கயிலையனிடர்களைந்தவன்றன்கந்தர
நயநவமணியின்வண்சரமார்ந்திடப்

புயலினையுடுவினம்வளைந்தபொற்பென
மயர்வறுதாளமாவடம்வயங்கிய. 97

மற்பொருதரவினினடித்தமாதவ
வெற்பினையெடுத்தோளிர்கரங்கள்மீதினிற்
சற்பநன்மணிகளுந்தயங்கவெய்தியே
சற்பகம்வளைந்தெனக்கடகமின்னவே. 98

நந்துறுகடலினைக்கடையநாட்டிய
மந்தரவரையைவாசுகிவளைந்தெனச்
சுந்தரமுறுமணிவலயந்தோன்றின
விந்திரைகொழுநனெண்புயமிலங்கவே. 99

வேலைவாயுறுகதிரிரண்டதாகுமின்
னீலமால்வரையினினிவந்தமாட்சிபோ
லாவிகீலிலையமரமலன்காதினிற்
கோலமாயலைந்தனகுண்டலங்களே. 100

டொருப்பினைக்கொடுபொழிபுயலைக்காத்துநீண்
மருப்பிறக்கரியினைவதைத்தமாதவன்
விருப்புறக்கவுத்துவம்விளங்குமார்பினிற்
கருப்புரக்கலவையுங்கமழச்சாத்தினார். 101

அல்லெனவளைந்துநீணிரையத்தாக்குமத்
தொல்வினையவியமாதவங்கள்சூழ்ந்திடு
நல்வினைநல்கிடுந்தவளநாமமும்
வில்லெனுநுதன்மிசைவிளங்கிக்காட்டவே. 102

விழுமியசருவரைக்குமேமீதினிற்
செழுமியகதிரவன்கிளர்ந்தமாட்சிபோற்
குழுமுசெங்கேழ்மணிகுலாவுமாழையின்
னெழிலுறுமகுடமுஞ்சிரமிலங்கவே. 103

மாவின்வாய்பிளந்துபுட்கிழித்துவண்மைசேர்
கோவிமார்துகிலெலாங்கொள்ளைகொண்டரு
டேவனார்முடிமிசைதிகழ்ந்துதேனமர்
காவிநந்தாமலர்கமழும்வாசிகை. 104

தேடுறுமலரயற்கரியசேவடி
நாடுறுமடியவர்க்கருணாரணன்
சூடுறுபொன்னிழைதலங்சின்றனன்
கோடிகந்தர்ப்பர்தம்வடிவுகொண்டென. 105

தேவகியுரோகணியசோதைசீரிய
காவியின்விழியினார்கமலக்கண்ணனை
யாவலின்மைந்தனென்றமையநோக்கியே
தீவம்வந்தெடுத்துமங்களங்கள்செப்பினார். 106

நிதகல்சுகமுனிசிறந்தநாரதன்
மாதவர்திரள்வசுதேவர்சூழ்ந்தன
ராதரவுடனிமையோர்களந்தரம்
போதுமிந்திரனயனுடனும்போற்றுவார். 107

ஆதிநற்பொருளதாயவனியண்டமாய்
மாதவர்க்கெளியனாயருள்செய்மாதவப்
பூதலத்தரசனீயாகிப்போந்தமை
யேதெனக்கருதவுமெளிதன்றெங்களால். 108

உலகினையுதவியுண்டுமிழ்ந்துகாத்தநீ
யலகையினுயிர்தெறுத்தாயர்தங்குலத்
திலகனென்றுரைசெயச்செகதலத்தினி
னிலகிமுன்னின்றனையென்றுமீறிலாய். 109

அருவமாயுருவுமாயனந்தன்மீதினிற்
றிருவொடும்பயோத்திசேர்ந்துவாழுநீ
தரணிமீதுருக்குமிணிதனைநன்மண
மருவவேமுயன்றிடுமாயமென்கொலோ. 110

நின்னுளெவ்வுலகமும்படைத்துநீயவை
தன்னுள்வந்திழிந்துவிற்றுங்கிப்பாரையாள்
மன்னவனென்றமைமயக்குமாய்கைக
ளுன்னவுமறிகிலேமுலப்பிலாதனீ. 111

அண்டமுங்கடந்துமேல்விரசையப்புறத்
தெண்டவருறைபதத்தெழில்கொண்மாமணி
மண்டபமிசையமர்நின்னைமண்மிசைக்
கண்டனம்வினைகளேயென்றுங்காண்கிலோம். 112

வேறு.

அராவணைதுறந்தேயரசிற்பிறந்தாயானைமுன்வருநாதா
மராமரமெய்தாய்மருதிறத்தவழ்ந்தாய்வானுறநிமிர்பாதா
விராவணகாலாவெருதிறவடத்தாயெனமுநீயானாய்
பராபரமானாய்பரிதியைமறைத்தாய்பாணிறவளைகொண்டாய். 113

வேறு.

வேரிமாமலரயன்முதலோரிவைவிளம்ப
வாரவாரஞ்செய்துந்துமிமுழக்கினாரமரர்
நாரதாதியர்கையெடுத்தாடினார்நலஞ்சேர்
பாரினான்மறையந்தணராரணம்பகர்ந்தார். 114

மின்னுசெங்கதிரவிரெனக்கருப்புரவிளக்கே
பொன்னினன்மணிக்கலத்திடையெடுத்திசைபொருந்த
வன்னமன்னவரனைவருஞ்சோபனமறைந்தார்
துன்னுநன்மலர்சிதறினர்தேவர்கள்சூழ்ந்தே. 115

சுனைகண்மாநிதிதுலங்கிடச்சென்னல்சூழ்விபுலை
நனிகவானிறைநற்றகிறுகுமிழாரங்
கனகமாமணிகன்னிகாதானமோர்கோடி
யனகநான்மறையந்தணர்க்கருளினனன்பால். 116

மண்டலாதிபர்துதித்திடவதுவைசெய்வித்த
வண்டர்கோன்மகிழ்வுறுஞ்சமாவர்த்தனமலிவா
லெண்டபோதனரந்தணர்யாவையுமுடித்தார்
புண்டரீகனுகண்டலன்புலவர்கள்புகழ. 117

பொன்னின்மாநகரொப்பனபுட்பகவிமான
மென்னவோங்கியவெழிலுறவிலகுமாமணிக
ளென்றுபேரொளிதருமிரதத்தினிற்றுலங்க
மின்றுநேமியன்மகிழ்வுடன்வீற்றிருந்தனனால். 118

வேறு.

சாத்தகிதாளவெண்கவிகைதாங்கநற்
பார்த்தனுநகுலனுங்கவரிபற்றவே
யேத்துசாதேவனுமிரதமூர்ந்திட
தீர்த்தன்வானவரெலாமார்ப்பச்சென்றனன். 119

பேரியங்கறைந்தனபிரளயத்தெழும்
வாரியினமலைபோன்முழங்கவாலுருச்
சீரியவலம்புரிமுழங்கத்தேவர்கள்
வேரிகொண்டருமலர்வீசியாடினர். 120

இடிபடுமுரசம்புவியிரட்டெழ
வடிபடுகொடிகைமுழவமான்றெழு
துடியொடுபடலிகைத்துழனிமல்கிடக்
கொடியொளிர்பிச்சமுங்குடையுந்துன்னின. 121

தாளமுங்கண்டையுந்தாரைசின்னமுங்
காளமும்பீலியுங்கலந்தவெங்கணும்
வாளொளிர்குந்தம்வேன்மழுக்கண்முட்கரங்
சோளரியெனவெழுங்குமரர்கொண்டனர். 122

வேழமாவிரதமேல்விளங்குவீரர்க
ளாழிபோனிறைந்தனரனீகமார்த்திட
யாழொடுகின்னரமிசைக்குமாதர்கள்
சூழவேதுலங்கினர்சுரர்களெங்கணும். 123

ஆர்த்தனரவனியரிமையவர்பொன்மலர்
தூர்த்தனரரம்பையர்துன்னியாடினா
ரேத்தினர்முனிவர்களியாதவக்குலத்
தீர்த்தனுமிரதமேற்சிறந்துதோன்றவே. 124

மாதவன் வந்தனன் மாயன் வந்தன
னியாதவன் வந்தன னிறைவன்வந்தனன்
போதயனுடனெழுபொழில்படைத்திடுஞ்
சிதரன் வந்தனனென் றசின்னமே. 125

வாரிமீதிலங்கியமாயன் வந்தனன்
சூரனுமுருக்குமனமர்தொலைந்துநீள்
பாரின்மேலோடிடப்பகழிதூவிய
சீரியோன் வந்தனனென் றசின்னமே. 126

யாதவன்வந்தனனெழில்கொளாய்ச்சியர்
கோதையர்விருப்புறுங்கொண்டல்வந்தனன்
மாதவன்வாமனன் வந்தனனென்ன
ஆதினசின்னமுமுலப்பிலாதன. 127

சின்னமுஞ்சங்கமுஞ்சிறந்தகாளமுந்
துன்னிடுமுழவமுந்துலங்குபேரியு
மின்னிசைகெழுமியயாழ்களெண்ணிலாக்
கின்னரரொலியொடுகிளர்ந்ததெங்குமே. 128

மாதவர்விசும்புறைமடந்தைமார்களும்
போதினிலுறைபவன்புரந்தராதிய
ராதரவுடன்மலர்சொரியவாரியன்
வீதியினிரதமேல்விளங்கத்தோன்றினன். 129

வேறு.

ஆயனுரணிமணித்தேரின்மேலழகுறத்
தூயமாவீதியிற்றோன்றவேதுடியெனத்
தேயுநூலிடைத்திருவனுரனநடைச்
சாயல்போல்வருமினூர்தரணிமேன்மிடையவே. 130

அயிலெனும்விழியினுரனமெனும்நடையினுர்
குயிலெனும்மொழியினுர்குங்குமக்கொங்கையார்
புயலெனுங்குழலினுர்தாளமேபுனைகுவார்
மயலுறுஞ்சிந்தையார்விரைவினில்வந்தனர். 131

குங்குமக்கலவைநற்கொங்கையிற்கெழுமவே
பங்கயத்தடியினிற்பரிபுரம்பரியகஞ்
செங்கையிற்கங்கணமிலகிடத்தெரிவைமார்
மங்குலைக்கடிகுழலலையவேவந்தனர். 132

அரவினிற்றுயில்பிரிந்தருளிவந்தச்சுதன்
விரிகடற்றுவரையின்வீதிமேவினனெனத்
தரணியிற்கலைவிழக்குழல்களுஞ்சரியவே
யரியெழக்கிளிகள்போலனைவருமணுகினர். 133

மானினம்வருவபோன்மயிலினந்திரிவபோற்
றேனினம்முரன்மலர்க்குழலினர்திருவனார்
மீனினம்வெருவுநல்விழியினர்தொருநிரைக்
கானினன்றலவியகண்ணனைக்கண்டனர். 134

ஆவெவார்வானமீதரிவைமார்காணவே
பாவெவார்சுரர்களுமுனிவரும்பரிவுறக்
கோடினொடாழிகைக்கொண்டமால்வடிவினால்
வாடினார்மாரவேளெய்யவேமடநலார். 135

தாளமாமணிகொடாவடமெலாந்தனமிசை
புரளமைக்குழன்மலர்பொலியவேயரிவைமார்
திரளுமோர்மயலெழக்கலைவிழச்சோர்குவா
ருருளுமாவிரதமீதலகுணேமியன்வர. 136

பூவினிற்றிருவெனப்பொலிவினார்வேனில்வே
ளேவவேவருகணைக்கிடையுமெம்முடலிடை
யாவிவிட்டகலுமுன்னணைகிலீரோவிருக்
தாவனத்தெய்திடுஞ்சதுரவென்றுரைசெய்வார். 137

தழலெழச்சிலைமதன்விடவெழுஞ்சரமதா
லழலுகிற்றிடுமெமையுறவணைத்தருளிநற்
குழலிசைப்பவளவாயமிர்தினைக்கொடுவிடத்
தழலுமிழ்ந்தெழுமராமிசைநடித்தருளுவாய். 138

வேறு.

மல்லர்மாளவமர்செய்தருண்மாயா
வொல்லைமேவியெமையுற்றணைத்தாளா
யல்லுநின்பகலுமன்மதனடர
வெல்லும்வாளியைவிலக்குவமென்றார். 139

ஓதிமாதர்களேக்கலையுற்றே
பேதையாகுமொருபெண்ணமிர்தன்னாள்
காதலுனதியாள்கடன்மாலோன்
போதவேபுயலிதாகுமென்றன்னி. 040

அமலன்கண்ணிணைகள்வாய்மலரங்கை
கமலமென்றுமுளத்திற்கருதிக்கண்
ணுமிழுநீத்திலமுஞ்சிந்திடவோடித்
தமரையிந்தமலர்தந்திடுமென்றார். 141

பேதையிந்தவுரைபேசிடமாயோன்
மாதவன்விபுலநாயகன்மற்றை
வீதிவந்திடலும்விண்ணவரார்ப்ப
மோதுதுந்துமிகண்முழங்கியதன்றே. 142

சதங்கைகொஞ்சியிடவேதண்டையார்ப்பப்
பதங்கொணூபுரமும்பண்கண்மிழற்ற
பெதும்பையாகுமொருபெண்ணமிர்தன்னாள்
விதங்கொடாடியகழங்குடன்மேவி. 143

சிதரன்வடிவின்செய்கையைக்கண்டே
மாதுகண்ணிமையாண்மயலருப்பம்
போதநாணொடுபுகல்கிலணின்றாள்
மாதவன்னகையோடேகினன்வீதி. 144

சுரும்புதுன்னியமலர்க்குழற்றுய்யா
ளரும்புநேருமுலையரமங்கையரன்னாள்
கரும்பினின்சுவையைக்கைப்பிக்குஞ்சொல்லாள்
விரும்புகந்துகமண்மோதிடும்வேலை. 145

மன்னன்மாதவனிவண்வந்தனனென்று
சின்னமூதியிடவேதிருவன்னா
ளுன்னுபோதின்முனருற்றனன்கண்டாள்
மின்னுநேமிதரிவீரனைக்கண்ணால். 146

கன்னல்வில்லிகணைகாய்ந்துடல்வேவ
மின்னும்வேள்குவளையுந்தரைவீழப்
பொன்னைமன்னுமலர்க்கொம்பதுபோல்வா
ளன்னமன்னவளுநொந்தறைகின்றாள். 147

நந்தகோபன்மகனாகியநல்லீ
ரிந்துசிந்துபகையாக்கினரெனை
வந்தமேமலியுமாயர்கண்மாதர்
வந்துளார்தமையுமார்பினணைத்தீர். 148

மங்கையங்கிவ்வுரைகூறிமயங்க
வெங்குமங்குலெனவேபல்லியங்கள்
பொங்கவெங்கரிகடேர்பரிசூழ
சங்கையங்கையிற்றரித்தவன்சென்றான். 149

கடந்தருங்களிகொளானையின்கோட்டை
யடர்ந்துவிம்முமுலையாளன்னநாண
நடந்தபஞ்சினடியாணறுங்கொம்பா
மடந்தையிந்துவினைநேர்வதனத்தாள். 150

நீலமாமணியொடாரநிறைந்து
கோலமாகிவளர்கொங்கையின்மின்னச்
சேலும்நாணும்விழியாடெளிதேனும்
பாலுமேலவிசைபாடிடும்வேலை. 151

சூழுமாமணிகடென்னிடுசின்ன
மூழியானிவண்வந்தனனெனவோத

யாழினோடுவருமேனகையென்ன
வாழிபோன்மயலெய்தவளைந்தாள். 152

கற்பகத்தின்வளர்கொம்பிம்பர்காணப்
பொற்பெழப்படியினோடுவபோல
வெற்பினைத்தகொங்கையாள்விமலன்ற
னற்புதத்தெழிலைக்கண்டறைகின்றாள். 153

கஞ்சன்மாளவமர்செய்தருள்கண்ணா
பஞ்சபாணமெய்பார்த்தனபாரா
யஞ்சலென்றிவணினாளுதியென்றே
துஞ்சினாளுமெனவேயுடல்சோர்ந்தாள். 154

அயலெழுந்தவணின்மாதுமயங்கச்
செயலெழுந்தபல்தாமரைசேரும்
புயலெழுந்தகவின்போலரிசென்றா
னயலெழுந்திடுமணிகணியார்ப்ப. 155

கரியின்கோட்டினைமுனிந்துகதித்த
வரையுநாணிடவிம்மிவளர்ந்து
தரளமாமணிகள்சேருதனத்தா
ளரிவைபாரிலுறுமென்னடையன்னம். 156

சிலைநுதற்கயல்கோல்வேல்விழிசெவ்வா
யிலவிதழ்ப்பவளநாணெழில்காட்ட
நலம்வரப்பெயரின்வீணைகொணங்கை
பலருநத்திடுபெண்ணிசைவேலை. 157

நாதனவ்வழியினண்ணினன்சின்ன
மூதமையலுறவேயெழுந்தோடி.
வீதிசென்றவணின்வெற்பெடுத்தான்றன்
பாதமீதுபணிந்தேயிவைசொல்வாள். 158

பக்கமேவிவருபாவையர்முன்னே
கொக்கின்வாசமலர்வாளிகொடெய்வா
னிக்குநாணிமிறவேயெனையாளீர்
குக்கிடாசுரனைக்கொன்றிடுகோவே. 159

வானினத்தின்வருமங்கையர்முன்னே
யானினைத்துவருகாரியமெய்தக்
கூனிமிர்க்கவருவானைக்கொண்டிரென்
மேனியுற்றுத்தழுவிக்கொளுவீரே. 160

என்றுரைத்தவளுமேமுறுபோழ்தின்
குன்றெடுத்தருள்செய்கோவலன்றானும்
வென்றியுற்றசின்னமெங்கணும்விஞ்ச
சென்றனன்விபுதர்தேன்மலர்சிந்த. 161

அரவநற்கடலினாரமுதன்னாள்
வரையெனத்திகழவேவளர்கொங்கைத்
தெரிவைமெய்த்தவர்கள்சிந்தைமயங்கி
யுருகிடப்பணிநல்லாளிசையோத. 162

மாயனுயனுயர்தேவகிமாதின்
சேயன்வந்தனனென்றேநியசின்ன
மாயசொல்லமிர்தமாயெழவன்ன
மேயெனுமுனரினெய்தினள்வீதி. 163

கோலமாமலரினான்மலிகொண்டல்
போலவேயுருவமும்பொலிவெய்து
நீலமேனியனைக்கண்டவணின்று
மாலெழுந்துமெய்மயங்கிமின்சொல்வாள். 164

அண்டர்மாதர்துகிலன்றவண்வாரிக்
கொண்டவாதியென்றுணர்ந்ததுகொல்லோ
வெண்டபோதனர்களேத்தரிநின்னைக்
கண்டபோதினென்கலையுமவிழ்ந்த. 165

துணையுநாணுமிலைச்சூழ்ந்துவில்வேளெய்
கணையுமேவுகனலாயெழுங்கண்டீ
ரிணையில்யாதவநீரெய்தியேயென்னை
யணையுமார்பினினென்றேயயர்ந்தாண்மின். 166

தெரிவைசோர்ந்திடநற்சீதரமூர்த்தி
கரியமாமுகிலினிற்கமலங்கள்
விரியவேகவின்விளங்கினபோலத்
தரணிமீதினினெய்தினன்றடந்தேரின். 167

வாரளைந்திடவயங்கியகொங்கைப்
பேரிளம்பெணுதலாற்பிறைபோல்வாள்
பாரளந்தருள்பரமன்றிருப்பேர்
சீரளைந்தசுதைதித்திக்குஞ்சொல்லாள். 168

கண்ணன்மாயனெழில்கருமுகிலென்றும்
வெண்ணெயுண்டருளும்வித்தகனென்று
மெண்ணியின்பமுறும்யாழ்பலகீதப்
பண்ணினல்லிசையேதான்பகர்வேலை. 169

மாதவன்பரமன்மாலரிமாயோன்
யாதவனெனவியம்பியசின்னங்
கோதைநெஞ்சுருகியேகொடிபோல்வாள்
வீதிவில்லிடவிரைவினிற்சென்றாள். 170

கண்டனள்வளைகொள்கார்முகிறன்னைக்
கெண்டைநாணும்விழியாள்கிளிபோல்வாள்

வண்டுதுன்னியமலர்க்குழன்மாது
கொண்டமையலினாலிவைகூறும். 171

கோடிமன்மதருருவினைக்கொண்டீர்
சூடுவீர்நறுந்துழாயினைப்பாம்பி
னாடுவீரணையீரிவணணியோ
டேடறாதசீர்மார்பினிலென்றாள். 172

மாரன்வாளியைவிலக்குவீர்வந்தென்
னாரமாமுலையின்மேலணைகில்லீர்
பாரினோர்களுமையேபழிதீர்க்குங்
குறாருமெனச்சொல்லுவதென்னே. 173

குண்டினபுரத்தின்கோதையைக்கண்டால்
கண்டுவீதிதனிலெங்களைக்காணு
மண்டர்நாதரிவரெண்ணிலராமா
முண்டகத்தைவிட்டுக்கொட்டியைமுட்டார். 174

ஆழியானிவனென்னெஞ்சினமர்ந்தா
னாழியானிவனைப்போகவுமொட்டேன்
தோழிமீர்கள்புலனைநெறிதுற்றே
யேழையேனுமணைப்பன்புயமென்றாள். 175

பேரிளம்பெண்ணுமின்னிவைபேசி
நாருளம்புளகமெய்நேர்ந்தவள்சோர்ந்தாள்
பாருளும்பர்திரள்பன்மலர்தூவத்
தேருளெம்பரமன்வீதியிற்சென்றான். 176

பேதைமாதர்முதற்பேரிளம்பெண்ணோர்
வீதிதோறுமனமிடைந்தனர்வேளுஞ்
சூதவாசமலர்வாளிதுரந்தான்
தீதிலாதவரிதேர்மிசைச்சென்றான். 177

வேறு.

அரம்பைமேனகையுருப்பசியரிவையர்பலரும்
நிரம்பினார்நிலமகளிரோடெங்கணுநிறைந்தே
விரும்பினாரரியுருவினாலயர்ந்தெங்கும்வீழச்
சுரும்புநாணுறவேனிலான்மலர்க்கணைசொரிந்தான். 178

உலகளந்தருள்பாதமுங்கண்களுமுரனா
ரலகையின்னுயிர்பாலினோடருந்தும்வாயழகு
மிலகுகைகளுங்கண்டவரியார்கொலோவுருகார்
திலகநன்னுதலரிவையர்மயல்செப்பவெளிதோ. 179

கமலமாகியவிழியிணைவாய்முகங்கரங்க
ளமலனார்திருவுருவினினொன்றொன்றேயமைய

விமைகிலார்கள்கண்ணுறுத்தினரேழையர்பலர்தஞ்
சமையமோவிடாதிருந்துறுதவர்களும்போல. 180

கலையினாற்றிகழ்கிதம்பமாந்தேரினைக்கடாவி
முலைகளாமதகரியினைமுடுகிநற்புருவச்
சிலையினால்விழிக்கணைதொடுத்தெய்தனர்சிறந்த
மலையையேந்தரிதன்னையேமாதரார்நெருங்கி. 181

சூடகங்களும்வளைகளுங்கடகமுந்துலங்கப்
பாடகங்களும்பரிபுரமொடுபதம்பற்ற
வாடகங்கொளுமணியணிமுலையினரடங்க
மாடகங்களினுய்த்திடுவான்றனைவளைத்தார். 182

மூடினாரரிமுராரியைமாதரார்முடுகி
யேடருமலர்வாளிகளெங்கணும்பொழிந்தே
நாடினானறும்போதுதான்சாண்கிலானகைத்துச்
சாடினன்மதன்சராசனத்தழைகளுஞ்சிதற. 183

வளைகள்சூடகம்வாலொளிராரமேவிடாநற்
றளைகொணீலமுந்தரைவிழத்தோகையர்மயலா
லளையும்வீதியினரக்கர்கோன்றலைபத்துமுன்னாட்
களையுமாதவன்றேர்மிசையேகினன்கடந்தே. 184

அந்தரத்தினிலெழுந்தனரமரர்கள்பலருங்
கந்தரத்தருமகிழ்வுறக்கடிமலர்பொழிந்தார்
சுந்தரத்திருநாரணன்றுலங்குதேர்தன்னின்
வந்தெதிர்த்தெழும்வீதிகளெங்கணும்வயங்க. 185

கோடிநீடியகொடிகுடைதொங்கலுங்குலவ
வேடருமலர்க்குழலளியின்னிசையெழுப்பப்
பாடும்யாழொலிபரந்திடப்பங்கயத்தமிர்த
மாடூசல்சேராவணமடைந்தனனழகன். 186

அண்டரும்விழைவுறுமணியினங்களுமசைந்தே
மண்டலங்கொளுங்கதிரவனவிரெனவயங்க
விண்டலங்களுமொளியுறவீசுமூசலின்மேற்
கண்டனன்கமலாசனத்தமிர்தினைக்கண்ணன். 187

கண்ணினாலுயர்மாதவன்கண்டனன்கமலப்
பெண்ணினுடனையுவகைநீள்கடலெனப்பெருக
விண்ணின்மீதுறும்பதத்தினைப்பிரிந்தவர்மீள
மண்ணின்மீதுதான்கூடிடினுரைக்குமாறுளதோ. 188

விதர்ப்பன்றிருமகடனைக்கண்டருள்விமல
னதிர்த்துழும்மதம்பொழிவுறுமருவிகண்ணிறையக்
கதித்தசெம்முகக்கோடுடைக்கரியின்முன்கயத்தி
லுதித்தவும்பன்முன்றோன்றினனுமெனத்துலங்கி. 189

அன்றருஞ்சாமூலமென்றழைத்திடக்காத்தே
கன்றிநின்றிகெஞ்சனாணையின்வருங்களிற்றைக்
கொன்றகையினான்கனகமால்வரையெனக்குறுகி
நின்றவேழமேலேறினனிலமகள்கொழுநன். 190

நீலமால்வரைநிறைகமலங்கள்கொண்டெழுந்த
கோலமாய்வடவரையின்மேற்றோன்றியகொள்கை
யேலவேபலவாபரணங்களுமிலங்க
மாலினான்மதகரியின்மேல்வயங்கினான்மாதோ. 191

சாமரைத்திரளருச்சுனன்குலன்சாத்தகியோர்
வீமன்பற்றியேவீசினர்மேருவினிலங்குஞ்
சோமருற்றெனத்தரளவெண்குடையதுதுலங்கக்
காமனைப்பயந்தானிருந்தான்கரியதன்மேல். 192

வெண்களிற்றினும்விளங்கியமதகரிமீதின்
பண்களிற்குழலூதுநற்பரமனுமிலங்கக்
கண்களிற்றவமுனிவருங்கண்டனர்களித்தார்
விண்களிற்றருமலரிமையோர்திரள்விடுத்தார். 193

தேர்நெருங்கினநெருங்கினமதகரித்திரளும்
பார்நெருங்கினபரிகளும்வீரர்கள்பலரும்
வார்நெருங்கியமுலையினர்நெருங்கினர்வானோ
ரூர்நெருங்கினருமைசசியுருப்பசியுடனே. 194

பேரியார்த்தனசங்கமுமார்த்தனபிறங்கும்
வாரியார்த்தெனவரசர்களார்த்தனர்வயங்குந்
தாரையார்த்தனசின்னமுமார்த்தனதண்ணுமையுங்
காரினார்ப்பெனவெங்கணுங்கம்பலைபரந்த. 195

மாவின்வாய்பிளந்தேயருண்மாதவன்வந்தான்
கோவிமார்துகில்கொள்ளைகொண்டருளுமால்வந்தான்
காவிசேர்விழியுருப்பிணியாகியகமலத்
தேவிநாயகன்வந்தனனென்றபொற்சின்னம். 196

சின்னமூதிடத்தேவர்கடுதித்திடச்சிறந்த
மின்னுமாமுகிலெனமதப்பூழ்க்கையினிலங்கும்
மன்னன்மாதவன்வரவெதிர்கண்டனள்வயங்கு
மன்னமாகியநடையுடையுருப்பிணியமிர்தம். 197

புண்டரீகங்கள்பூத்ததோர்புயலெனும்வடிவைக்
கண்டுநீள்விழிகளிப்புறக்கடலிடையமிர்த
முண்டதாமெனவுரோமமெய்புளகங்களூறவா
னண்டர்சூழ்ந்திடவூசலினாடினனங்கே. 198

மூவராகியேமுளைத்தெழுமுராரிமாலரிதன்
னாவியாகியவருந்ததிக்கற்புடையணங்கைக்

காவிசேர்விழிவயங்கியகமலநாயகியாந்
தேவியூசலினூடவேகண்டனன்சிறந்தே. 199

சிந்தூரத்தினற்கொம்பொசித்தருளியேதிகழுஞ்
சுந்தரத்திருநாரணன்றோட்டியாற்கரியை
யுந்திமெய்த்திருவாடியவூசல்கண்டுவகை
முந்தமைக்கிரியேலவேவந்துமுன்னின்றான். 200

குஞ்சரம்வெரினமுகுறக்கொடிகுடைநிறைய
வஞ்சனந்திகழ்கிரியெனவச்சுதனாகப்
பஞ்சின்மெல்லடியுருப்பிணிபரமர்திண்டோளின்
விஞ்சுசெண்பகவலங்கலைச்சூட்டினள்விரைந்தே. 201

காசுலாவியநகிலினாள்விதர்ப்பர்கோன்கன்னி
யாசிலங்கதமணியொளிரங்கதப்புயத்திற்
பூசல்கேசரம்பொருந்தியவலங்கலைச்சூட்ட
வாசுதேவனாமுகுந்தனுந்திருவுளமகிழ்ந்தான். 202

பூவினுங்கடலமுதினும்வயங்குபொற்கொடிதன்
னாவியன்னவளையுறுமெய்யிடையணங்காந்
தேவிதன்றிருச்சீர்தருதோளிணைசிறப்பக்
காவிநன்மலரலங்கலைச்சூட்டினன்கண்ணன். 203

மாயவன்றுவராபதிவயங்கியமாறன்
னாயகன்றிருக்கரங்களாற்சூட்டுநற்றெரியல்
வேயிருந்தடந்தோளினும்மார்பினும்வயங்கத்
தூயசெந்திருமகிழ்ந்தனடுனியெலாமகல. 204

வேழமூலமென்றழைத்திடவிரைவினின்வந்தோன்
வேழமன்னவர்மார்பிறவீட்டினோன்புழை
வேழமூதினோன்விதர்ப்பராசன்றிருமகடன்
வேழமாருந்தோள்விரும்பியேமேவினனூசல். 205

சிலையினான்மழையகன்றிடத்தடுத்தருடேவு
மலைகொளாழியினமிர்திடையெழுந்தருளணங்கு
விலையிலாமணியொளிகொள்பொன்னூசலின்மேவி
யிலகவேதருமலர்மழையிமையவர்பொழிந்தார். 206

பஞ்சின்மெல்லடிப்பரிபுரமிலங்குபைந்தொடியுங்
குஞ்சரத்தினுக்குயர்பதமளித்தகோவலனு
மஞ்சனந்திகழ்கொழுந்தைவிச்துருமக்கொம்படைந்து
விஞ்சுநல்லெழில்போலவேயூசன்மேவினரால். 207

வண்டுமெல்கியமலர்க்குழன்மவுலியோடொளிரக்
குண்டலந்திருக்காதமர்தோடுடன்குலவத்
தண்டைநூபுரஞ்சதங்கைவீரக்கழற்றரித்தே
புண்டரீகமேயனையநற்பதங்களும்பொலிய. 208

சதங்கைகொஞ்சிடத்தமனியத்தண்டைகளொளிரப்
பதம்பொருந்தியபரிபுரம்பண்ணிசைபரப்ப
மதங்கொள்கீதச்சிலோதியர்கீதங்கள்வழங்க
விதங்கொளும்மணிபூசன்மேல்விளங்கினதிருவே. 209

மார்பினுண்மலர்த்தாமமுமாடவேவளைசே
ராரமாமணியாடநற்றூசுமங்காட
வாரியேரமிர்தணங்கொடமரகதவடிவோன்
சீருலாவுபொன்னூசலினுடினன்சிறந்தே. 210

துண்டவெண்பிறைச்சடையனும்வலாரியுந்துலங்கும்
விண்டலந்தனில்விரிஞ்சனுமகிழவூசலின்மேல்
முண்டகந்திகழ்திருவுடன்முராரியுமாடக்
கண்டமங்கையரனைவருங்களிப்புடன்சொல்வார். 211

வேறு.

நீலமணியொடுமொரவின்மணியுமாட
நித்திலத்தாமமுமாடநிறைந்தபூவின்
மாலைகளுமசைந்தாடவண்டுமாட
மருங்கெழின்மேகலையாடக்குழையுமாட
வேல்களெனும்விழிகுழலோடாடக்காதின்
விளங்குதிருக்குண்டலமுந்தோடுமாட
வாலினமர்பழம்பொருளேயாடிரூசல்
யழகுசெறியுருக்குமிணியாடிரூசல். 212

திசைதோறுமுறங்கரிகோடிறவேவானோர்
திரளோடச்சமகனுமோடவேதோ
டசையாதபிங்கலன்மாவருணனோட
வந்தகனும்விரைந்தோடவானூர்வெற்பும்
விசையானகரமதனுலெடுத்தவீரன்
விறலழியவுடலுருளச்சரங்கள்விட்ட
வசுதேவன்றிருக்குமராடிரூசல்
வாசமுறும்வனசமினேயாடிரூசல். 213

ஈவதுநன்றலவெனவங்குசனனெய்தி
இயம்பியமொழியதனையிகழ்ந்துநின்று
மாவலியன்றுவந்தருண்மூவடியின்வானோர்
மகிழ்ந்தெழவேயுயர்ந்தெழுந்தமலர்ப்பாதத்தின்
பூவினயன்விளக்கியநீர்கங்கைநீராய்ப்
பொலிவுறநீள்பூதலமுமனந்தபாதத்
தேவகிதன்றிருக்குமராடிரூசல்
செங்கமலந்திகழ்திருவேயாடிரூசல். 214

அந்தமுறுங்கனகன் முன்னராதிமூர்த்தி
அமர்ந்துலகமனைத்துமுளனரியென்றோது
மைந்தனெனுமறிஞன் மொழியிகழ்ந்துதூணின்
வன்கைகொடேயறைந்தளனேவென்னும்வாய்மை
பிந்தமுந்திமுடங்குளேயாயவன் றன்மார்பைப்
பிளந்தளைந்துகுடரணியும்பெருமானுகும்
நந்தன்மகிழ்நற்குமராராடிரூசல்
நளினமலர்நாயகியேயாடிரூசல். 215

விசாலமுறுதரணிதனைவெண்கோடேற்றி
விளங்கிவருசூகரமாய்விறலின்மிக்க
பிசாசனெனுந்தனயன் மடிந்துவீழப்
பெரும்பரவைத்துகின் மகளும்பரிவாலேத்த
நிசாசரர்வேரறுத்தருளுமுகுந்தாமாயா
நெடியவப்பேராயிரமாய்நிறைந்துதோன்றி
யசோதைமகனெனவருவீராடிரூசல்
அருந்ததிக்குக்கற்பளிப்பீராடிரூசல். 216

கருமுகிலின்வடிவுடையீராடிரூசல்
கமலமலர்க்கன்னிகையேயாடிரூசல்
அரவினடித்தருள்கழலீராடிரூசல்
அமிர்தினெழுமனநடையீராடிரூசல்
பரவையினிற்றுயில்கொளுவீராடிரூசல்
பரமபதத்தொளிருமினேயாடிரூசல்
ஒருமுதலாயுலகுடையீராடிரூசல்
உருக்குமிணிநாயகியேயாடிரூசல். 217

ஆனிரைமேய்த்துவந்தருள்வீராடிரூசல்
அணிகலனுக்கழகளிப்பீராடிரூசல்
தேனுகனைமுனிந்தருள்வீராடிரூசல்
செழுங்கமலநாயகியேயாடிரூசல்
கூனிதனைத்தழுவிடுவீராடிரூசல்
குண்டினமாநகர்க்கொடியீராடிரூசல்
மீனுருவாய்விளங்கிடுவீராடிரூசல்
விதர்ப்பனருண்மெல்லியலேயாடிரூசல். 218

சந்தனங்குங்குமம்பனிநீர்கமழவேதண்
டருமலரின்வெறிவீசச்சதங்கைகொஞ்ச
வந்தமுறுஞ்சிலம்பரற்றத்தண்டையார்ப்ப
வணிவீரக்கழலினவிருக்கன்மான
நந்துறுவெண்டரளமொடுமணிகண்மின்ன
நலமுறவேகத்தூரிநாமந்தோன்ற
விந்திரைமெய்புளகமுறவாடிரூசல்
யாதவர்தங்குலக்கொழுந்தேயாடிரென்றார். 219

வேறு.

பூமழைசிந்தினர்பொன்னுலகுள்ளோர்
நாமகடன்னொடுநாரியரெல்லாம்
பூமகளாகியபொற்கொடியோடே
வாமனவாழுதிவாழுதியென்றார். 220

கீதமிசைத்தனர்கின்னரர்மின்னார்
வேதமிசைத்தனர்வேள்விவிளைப்போர்
போதினலத்துயர்பொற்கொடியாளோ
டாதியுமுற்றொருளிருசலினாட. 221

அண்டர்கள்பாடவரம்பையராட
வெண்டவர்தாமுமிசைத்தனராசி
முண்டகமாதுடன்மூவுலகும்வா
யுண்டவனம்பொனினூசலினாட. 222

காருதிமின்னிடையாள்கமலத்தேன்
வாரிதிவைகியமாதவனோடுஞ்
சீருதியூசல்சிறந்தினிதாட
நாரதன்வீணைகொடாடினனன்பால். 223

ஒப்பிலவீரர்கடாமுமுயர்ந்தே
மெய்ப்பொலிவார்வனமாலைவயங்க
முப்புரிநூலணிமார்பினர்முக்கோல்
கைப்புகவாடினர்சிந்தைகளித்தே. 224

வடிவுடைமாதவன்மாமலர்வைகுந்
துடியிடையாளொடுதோன்றுவகண்டே
குடையொடுதெண்டுகைகொண்டவர்குந்து
நடையவராடினர்வேதநவின்றே. 225

சந்தனமோடுறுதண்பனிநீருஞ்
சிந்தியமாதர்களாடினர்சேர
விந்திரைமாதவன்றன்னுடனெய்தி
யந்தமோடூசலமர்ந்தினிதாட. 226

ஆரணமீதினமர்ந்துறையையன்
வாரணிமாமுலையாளொடுமன்னித்
தாரணிமீதுறவேதவரெல்லாம்
பூரணமாய்மறையாசிபுகன்றார். 227

மாசகல்குண்டினமாபுரமாது
மேசகலுந்துவரைக்கிறையும்மோ
ரூசலிலங்கிடவும்பர்கள்பொற்பூ
வீசிமகிழ்ந்துதுதித்திடும்வேலை. 228

கைத்தலவாமலகக்கனிபோலத்
தத்துவமேயுணர்ந்தவர்மாலாம்
வித்தகமாமணமண்டபமீதி
னித்திருவோடினிதெய்துகவென்றார். 229

மாதவர்சொல்லின்மகிழ்ந்தருண்மாயோன்
போதினுயர்ந்தருள்பொற்கொடிதன்னோ
டேதமிலம்பொனிலங்குவிமான
மீதினுயர்ந்தனன்விண்ணவராட. 230

தித்தியென்றொத்தியதாளமுடன்சேர்
மத்தளிசச்சரிபேரிமலாரி
வித்தகமிக்குயர்சங்குகள்வேலை
யொத்தவிரட்டல்களெண்டிசையுற்ற. 231

மாதவன்வந்தனன்வாமனன்வந்தனன்
யாதவன்வந்தனனிந்திரையென்னுங்
கோதையொடேதிகழ்கோமகன்வந்தான்
சீதரன்வந்தனனென்றனசின்னம். 232

சின்னமுழங்கிடவேதிரள்தேவர்
பொன்னவிர்நன்மலர்வீசிடவேபோய்
மின்னியநன்மணிமண்டபமீதி
னன்னமோடெய்தினனாழியமர்ந்தான். 233

சோதியுருந்தரளங்கலெங்க
வேதமிலொண்மணியம்பொனிழைத்தே
மீதுயர்நல்வயிரங்கள்விளங்கு
மாதனமெய்தினனன்னமோடையன். 234

வித்துருமங்களுமேவியகாம
ரொத்ததெனத்திகழ்நீலமொடோங்கி
மொய்த்துறுநன்மணிபோலமுகுந்தன்
சித்தசனைத்தருதிருவோடிருந்தான். 235

வேதமுஞானமுமிளிருவபோல
வேதமில்பூமகளோடுவிளங்கி
மாதவனாதனம்வைகிடவானோ
ராதரவோடுமடைந்தனரெங்கும். 236

கயிலையனுமையொளிர்கலைமகள்கமல
னயில்விழியினள்சசியமரர்மன்னடைய
மயில்குயிலினமெனவருமெழின்மடவா
ரியல்புறவரசர்களிருநிலமடைய. 237

தூபநிறைத்தனர்தூய்நறுநெய்யின்
தீபநிறைத்தனர்சிந்தைமகிழ்ந்தே

சோபனமெங்குமுரைத்தனர்தோலார்
சாபமெனும்புருவத்தினர்தாமே. 238

கருப்புரதீபமெடுத்தொளிர்கானம்
நிரப்பினர்மாமணிநீலமிலங்கும்
பருப்பதமானபயோதரமின்னா
ருருப்பசிபோன்மணமண்டபமுற்றே. 239

சிந்தையின்மாநெறிசேர்வசுதேவன்
குந்தியுரோகணிதேவகிகோதில்
நந்தனசோதையலாயுதனன்பால்
வந்தனர்மாமணமண்டபமீதின். 240

உக்கிரசேனனுதிட்டிரனீதி
மிக்குயர்வீமனொடேவிசயன்றான்
புக்கிடமத்திரைபுத்திரரெய்தச்
சக்கரர்பின்வருசாத்தகிவந்தான். 241

அசட்டுறுமைம்புலன்வென்றருளில்லாக்
கசட்டுறுமுக்குணமுங்கடிவோரின்
விசிட்டன்வியாசனுடன்சுகன்மேவ
வசிட்டனும்யாழ்முனிதன்னொடும்வந்தான். 242

சித்திரகானுமுருக்குமிணித்தேன்
றத்தையன்னாளுயர்தேவகிதந்த
வித்தகனோடொருநன்மணமேவ
வுத்தமமாமறையோர்களுமுற்றார். 243

சித்திரைமாதமொண்மான்றலைசேர்நா
ளுத்தமமாகியவேறுதயத்தின்
மெய்த்திருமாலுடனன்மணமேவ
நெய்த்தருள்வேள்விநிறைத்தருள்கற்கன். 244

கோலமணிக்தொளிர்கும்பம்விளங்கி
மேலுயர்த்தயம்விண்டலம்விஞ்ச
சாலவளர்ந்ததருப்பைசிறப்ப
நாலுதிசைக்கண்விரித்தனனன்பால். 245

மூப்பரெனப்பலவாயர்கண்மொய்ப்ப
வாப்பலமேய்த்தருளச்சுதனுக்குங்
கோப்புயருங்கமலக்குயிலுக்குங்
காப்புமணிந்தனர்கைத்தலமீதே. 246

நீலநன்மாமணியம்பொனிறைந்த
பாலிகைமீதுயர்வித்தொடுபோலின்
றூவினர்தாம்விடநண்ணிடைகொண்டே
சேலெனுநீள்விழிமாதர்தெளித்தார். 247

சாகரமுற்றரவிற்றுயில்சார்வோன்
கோகனகத்திருமின்னொடுகூட
வோலகமிகுத்தொளிர்சற்கனுவந்தே
யாகுதிமங்கலமங்கியினுய்த்தான். 248

சங்கமோடேயுறுதாரையினோசை
யெங்கணுமல்கிடயாதவர்கோமான்
பங்கயமேலப்பாவைகழுத்தின்
மங்கலநாணைமகிழ்ந்துதரித்தான். 249

கங்கைதரித்தருள்கண்ணுதலாவோன்
செங்கையின்மீதுயர்மண்டைசிதைத்தோன்
றிங்கண்முகத்திருவின்னொடுசேர்ந்தே
மங்கலவங்கிமுன்னோக்கிமகிழ்ந்தான். 250

மைமுகிலொத்துமதத்தெதிர்வந்த
கைமலையைக்கடிவாணிருகைதன்
செம்மலரொத்தொளிர்சேவடிபற்ற
வம்மிமிதித்தனளம்புயமாதே. 251

மற்பொருதோளுடைமாதுலனை
வற்பனையேமுனியாயர்கள்கோமான்
பொற்பெழவில்விடுபூந்திருவோடே
நெற்பொரியோமம்விறைத்துமகிழ்ந்தான். 252

நலனுறுமரகதமலையினைநத்துங்
குலனுறுநற்பவளக்கொடிபோலக்
கலனுறுதிருவரிகைவிரல்பற்ற
வலனுறவந்தனர்மங்கலவங்கி. 253

மற்றுநெய்யாகுதியாவும்வழங்கி
விற்றிறல்மாதுவரைப்பதிவீரன்
நற்றிருவோடுவெயங்கிடநண்பாற்
சொற்றனராசிகடேய்மறையோரே. 254

முழங்கினசங்கொலிவேதமுழங்க
முழங்கினபேரிமுன்னீரொலிமான
முழங்கினவந்தரதுந்துமிமுந்தி
முழங்கினமாதர்மொழிந்தபல்லாண்டே. 255

நீறணிகடவுளர்நிறைகமலத்தே
வீறினதவமுனிசபதிவிண்ணோ
ரூறினருவகையரும்பரின்வாச
நாறியதருமலர்சிந்தினர்கண்பால். 256

கயிலையினுறைபவள்கலைமகள்சசியா
மயிலொடுமுருவசியிமையவர்மடவார்

குயிலெனுமொழியினர்கூறினர்பல்லாண்
டியல்புறவரிதிருமணமுடனிலக. 257

சங்கமொலித்தனதாரைகள்சின்ன
மெங்குமொலித்தனபேரியிரட்டல்
பொங்கினகுரைகடலோடுபொருந்த
வெங்கயமொத்தொளிர்வீரர்களார்த்தார். 258

விண்ணவரார்த்தனர்மெய்நெறியார்த்த
மண்ணவரார்த்தனர்மாமறையோரும்
புண்ணியரார்த்தனர்போர்மகளாகும்
பெண்ணினளார்த்தனள்பேரறமார்த்த. 259

தாளமெறிந்தனசாகரமேகத்
திரள்கள்பொழிந்தனசெம்பொனின்மாரி
யுருளவுதைந்துரலோடுதவழ்ந்தே
யருளரிமாமலரன்னமொடெய்த. 260

நாரதன்சுகனுன்மறைசெய்தோன்
வாரிதிபருகினர்பிருகுவசிட்டன்
பாருதிதிருவொடுபரமன்வணங்கச்
சிருதிமறைமொழிசெப்பினர்மகிழ்வால். 261

அன்னமெனுந்திருவோடரிதானு
மன்னவனல்வசுதேவன்மலர்த்தாள்
சொன்னமலர்த்தரைதூவிவணங்கத்
தன்னிருகைகொடுதழுவினன்மகனே. 262

சக்கரமோடுயர்சங்கமுமேந்தி
நக்கர்கரப்பலிவீழ்த்திடுநல்லோ
னிக்கிரதச்சொலினுளொடிறைஞ்ச
வுக்கிரசேனனுரைத்தனனுசி. 263

இந்திரைசுந்தரியேழுலகீன்ற
சுந்தமலர்க்கமலாசனியோடு
மைந்தனெனுந்திருமாலும்வணங்க
நந்தனணைத்தனன்மகனென்றே. 264

கலாரமணிந்தருளிக்கமலத்தே
யுலாவியமாமயிலோடுழையெய்த
விலானும்வணங்கிடவேமகிழ்வெய்தி
யலாயுதமுன்னவனுகமணைத்தான். 165

கோவியர்கூறைகொள்கோவலனுந்தன்
றேவிதன்னொடெதிர்சென்றுவணங்க
வாவலின்மார்பினணைத்தனளன்பாற்
றேவகியாகியவன்னைசிறந்தே. 266

கராவைமுனிந்துகரிக்கருள்செய்தே
யராவணைவைகியவச்சுதர்தாமுஞ்
சரோருகமின்னொடுதாளினிறைஞ்ச
வுரோகிணிமார்பினணைத்தனளுற்றே. 267

முராரியுமுண்டகமின்னுடனேதா
னிரேவதிதாளினிறைஞ்சிடவின்புற்
றராவணையார்க்குயராசிபகர்ந்து
குராவருகுழல்பிறழ்கொம்பையணைத்தாள். 268

விசாலமுடைக்கமலத்தெழுமின்னு
நிசாசரர்மாளவெய்நேமியர்தாமு
மசோதைதன்னடியினிறைஞ்சவணைத்தாள்
பிசாசுயிருண்டருளும்பெரியோனை. 269

நந்தர்குலத்துள்வளர்ந்தருணல்லோ
னிந்திரைதன்னொடுமெய்திவணங்கச்
சிந்தைமகிழ்ந்துதிருக்கைகளாரக்
குந்தியணைத்தனளாசிகள்கூறி. 270

மருவமர்குழலிதன்மணமதுமேவி
யருகுறுமரிதனையன்புடனாரத்
தருமனணைக்கவிறைஞ்சினர்தாளிற்
பெருநலனெய்தியபின்னவர்தாமே. 271

அந்தணராசிபகர்ந்திடவாயர்
வந்தனர்மாதர்களோமெகிழ்ந்தே
இந்திரைதன்னுடனேமணமெய்தும்
சுந்தரனைத்தொழுதேதுதிசெய்தார். 272

அனமெனமலர்மிசையமர்பவளரியா
மனனொடுதிகழ்வுறுமணமதுமகிழ்வோ
ரினமலியரசர்கள்பெரிதினிதுறவே
தினமெனவருபகல்செலவுறுநாளின். 273

திருந்தவளர்த்தனன்சேடமனேமங்
கருங்கடனேர்விழியார்கலைகொண்டே
குருந்துறுவோன்கமலத்துயர்கொம்போ
டருந்துதிகண்மெகிழ்ந்தனனன்பால். 274

மற்றுநெய்யாகுதியால்வருசெய்கை
முற்றமுடித்தருள்கர்க்கனைமுந்தி
விற்றெழின்மாதவன்மெல்லியறன்னோ
டெற்றுவணங்கவுரைத்தனனாசி. 275

ஆடினனாரதனந்தணர்நூலே
பாடினர்வானுறைவோர்கள்பரிந்தே

யேடவிழ்மாமலரெண்டிசைதோறு
மூடினர்துந்துமிபேரிமுழங்க. 276

வெண்ணெயுண்வித்தகனீதிருமேவி
மண்மகள்பாரமகற்றுதிவாழ்கென
வெண்ணியன்னவிபுதர்க்கிறைமாலாம்
புண்ணியனைத்துதிசெய்தனர்போனார். 277

நிகரிலையெனவுயர்சசியொளிர்நிலவை
யிகழ்நகையொளிர்திருமருமகளெனவு
முகமொருகணமெனவுரகணைதுயில்வோன்
மகனெனமகிழ்வுறுமனன்வசுதேவன். 278

அண்டர்கடுதிசெயவேயொளிரப்பொற்
குண்டிகைதண்டமர்குடையொடுகோதி
லெண்டவர்மகிழ்வுறவுதவினனியல்பான்
மண்டலமெனவருபேர்வசுதேவன். 279

நிறைகலனணிதுகில்செநெல்விளைவயலான்
கறவைகள்கரிபரிகனகமோடெவையும்
பொறையுடனறநெறியறிபவர்புகலு
மறையினரினிதுறவருளினன்மகிழ்வால். 280

கரிபரிரதமொடுகவிகைகள்சிவிகை
விரிகதிரொளிநவமணிகலன்விதமு
மரசர்கள்மகிழ்வுறவருளினனறிவாம்
வரிசையினுயர்பவனெதுகுலமகிபன். 281

தருமனொடெழிலுறுசமிரணன்மகனு
மருளொளிவிசையனுமிருவருமகிழ
வுருளெழிலிரதமொடுயர்கரிபரியு
மருளினனிருளகல்கலனொடுமெறிவான். 282

வேறு.

கந்தரத்தொளிர்கலங்களுங்கதிர்மணிக்குழுவுஞ்
சந்திரற்கொளியுதவுறுந்தரளமாமணியு
நந்தகோபனும்விருப்புறவளித்தனனலத்தாற்
சிந்தையேமகிழ்ந்தருளியதேவகிகணவன். 283

மற்றுமாயர்கடனக்குமம்மடந்தைமார்திரட்குஞ்
சுற்றுநற்றுகில்சுடர்மணிக்கலங்களுந்துலங்க
நற்றினார்களுக்கன்னதேயளித்தனனலத்தாற்
கொற்றவன்வசுதேவனுமருணிறைகுணத்தோன். 284

தாளமாமணிக்கலன்களுந்துகில்களுந்தவத்தோர்
திரள்கடேவியர்தமக்குமெய்வசிட்டதேவியர்க்கு

மரசர்மாதர்களனைவர்க்குமசோதைக்குமளித்தாள்
குரவைகோர்த்தருள்புனிதனைப்பெற்றநற்கொடியே. 285

இறைதவிர்ந்திடவேழிரண்டாண்டுபோரெனவார்
பறையறைந்தனனவமணித்திரளொளிர்பசும்பொன்
னறைதிறந்திரவலர்களுக்களித்தனனறிவே
நிறையுமுக்கிரசேனனுந்தரணியாணிருபன். 286

அவனிமீதரிதிருவோடுமணம்புணர்ந்தருளுந்
தவமுமெய்தினமெனத்தரளத்தொடுமணிபொன்
னுவரிசூழகிலத்துளவிரவலர்க்குதவுந்
துவரைமாபதியோர்களிப்பினைச்சொலவரிதே. 287

பங்கயத்தமரனமொடுபரம்பொருளவனி
தங்கியுத்தமன்மணம்புணர்ந்துயர்ந்தெழுஞ்சதுரா
லெங்குமுற்றவேழுலகவருவகையுமெய்தத்
தங்கள்சேய்க்குறுநன்னலமாமெனத்தழைத்தார். 288

இன்னதோர்நலனுலகமோரேழினுமெய்தத்
துன்னுநற்கமலத்தினிற்றோன்றியேதுலங்கும்
பொன்னினாளொடும்புணரியினமர்ந்தருள்புனிதன்
மன்னனல்வசுதேவனற்குமரனுண்மகிழ்ந்தே. 289

பொன்னினன்கலத்தறுசுவையமிர்தமும்பொருந்து
மன்னமன்னமோடருந்தியேயமரர்கள்பெருமான்
றன்னுநன்மணங்கமழ்பனிநீரினாற்றுலங்கு
மின்னெனும்மருங்குடைத்திருவொடுகரம்விளக்கி. 290

குங்குமம்பனிநீரினாற்கருப்புரங்குழைத்தே
தங்குநண்மணச்சந்தனமணிந்துதண்மலரும்
பங்கயத்தவள்கருங்குழற்சூட்டினன்பரம
னெங்கணாயகனயனொடெவ்வுலகுமீன்றோன். 291

ஆயுநன்பொனின்மஞ்சத்தின்மரகதம்வயிரந்
தூயநன்மணிவயங்கிடத்தீவிகைதுலங்க
வாயுநன்மலர்க்கருப்புரவெறிகமழ்ந்தழகார்
பாயலெய்தினன்கமலநற்றிருவொடும்பரமன். 292

உருக்குமற்கிளையாளுலகளந்தவனுடனே
செருக்குநன்னலன்காண்குவானிருளறச்சிறந்தே
யருக்கனற்குணக்கடலிடைவயங்கிடவறையு
மிருக்கொடருக்கியமளித்தனனியாதவர்பெருமான். 293

துன்னுமாமணித்திரள்களுந்தரளமுந்துலங்கும்
பொன்னினாதனத்தலையுறும்பாற்கடல்பொருந்தும்
பன்னகாதிபவணையின்மேற்றிகழ்ந்தபோற்பரமன்
மின்னனாளொடுவீற்றிருந்தனன்றிசைவிளங்க. 294

நீலமாகிரிபவளநற்கொடியொடுநிறைந்த
கோலமாமெனக்கமலமாமகளுடன்கூடி
யாலின்மேலமர்ந்துலகெலாநுகருமச்சுதனார்
சீலமாமணியாதனந்திகழ்வுறவிருந்தார். 295

விடவராமணித்திரள்களும்வயிரமும்விளங்கி
யடையமேதகத்தமனியத்தமர்ந்தொளிரழகே
தொடரவெண்டரளத்திரளொளிகளுந்துலங்குங்
குடைபொதிந்தவெண்மதிகலைகூடியதொப்ப. 296

சோமனைச்சடைசுமந்தவன் றுயரதுவகற்றித்
தாமரைக்குளிற்றிருவொடுமுரகமேற்சார்ந்து
காமரைத்தருமுகுந்தன்மேற்கயல்விழிமடவார்
சாமரைத்திரள்பரப்பினர்நிலவொளிதரவே. 297

சூலம்விட்டெதிரிராவணன்சிரங்களைத்துணித்தே
யோலமிட்டநற்கரியினுக்குதவுவோனுவப்பக்
காலன்விட்டவேலெனும்விலோசனமினார்களித்தே
யாலவட்டங்கள்கரம்பிடித்தசைத்தனரறிவால். 298

கோபருக்கெளிதானவனுமையொருகூறன்
சாபமிற்றுகமுறித்தவன்றிருவொடுந்தழைப்பத்
தீபநற்கதிரொளியெனவெடுத்தசேல்விழியார்
சோபனத்துரையமிர்தினற்சுவையெனச்சுரப்ப. 299

முழவுதண்ணுமைசச்சரிதாளங்கண்முழங்க
விழைகொள்கொங்கையினிலங்கிடவிளநகைவயங்கக்
குழையசைந்திடச்சிலம்புகள்புலம்பிடக்குதிகொ
ளுழையினோக்கியருருப்பசியொதுங்கவேநடிப்ப. 300

வில்லுநேர்புருவத்தினைநெரிக்கிலார்விஞ்சு
மெல்லுலாவியதுகிரைநேரிலவிதழ்துடியார்
வெல்லும்வேல்விழியிமைக்கிலார்கந்தரம்விம்மார்
வல்லிநேரிடைமாதரார்மகரயாழ்பகர. 301

கோசிகத்தவன்வசிட்டனாரதன்குறுமுனியோ
டாசகல்பதினெண்புராணங்களுமறைய
மாசகல்குணமறையவராசிகள்வழங்கு
மோசைதிக்குறவுக்கிரசேனனுமுவப்ப. 302

ஆழிமேலரவிற்றிருவுடன் றுயிலமலன்
வேழமுன்வரும்வித்தகன்விதர்ப்பர்கோனருளு
மேழையாமலர்க்கமலமாதவளுடனென் றம்
வாழிவாழியென் றுரைமறைமங்கலமலிய. 303

சமனிலாதவிற்புருவமுந்தாமரைக்கண்ணு
மமலனார்திருமுகமும்புன்முறுவலினழகு

மிமைசெயாமலர்க்கண்களாலெழிலுறநோக்குங்
கமலநாயகிரோமமெய்பொடித்துளங்களிப்ப. 304

வேயிருந்தடந்தோள்களும்விளங்குபூணகிலுந்
தூயசுந்தரவதனமுந்துலங்குவாணகையும்
பாயுநல்லுழைவிழிகளும்வயங்குபங்கயத்தின்
சேயமங்கையைநோக்கிமாதிருவுளமகிழ. 305

சீரினேர்கமலாசனனிமையவர்சேணி
ஞருமாமழைபொழிந்தெனவலர்மழைசொரிய
வாரிசூழ்துவராபதிக்கிறைவன்மாமுகுந்தன்
வேரிமாமலர்ப்பாவையோடினிதுவீற்றிருந்தான். 306

காசுலாமுலையுருக்குமிணிச்செழுங்கனியை
வாசுதேவனுர்மணம்புணர்ந்தருளுமாக்கதையை
யாசையாலுயர்ந்தறைபவர்கேட்பவருளே
வீசுஞானமோடுயர்வர்பேரின்பவெள்ளத்தே. 307

உருக்குமணி தேவியார் திருக்கலியாணப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் — 305.

80-வது சாம்புவதி தேவியார் திருக்கலியாணப் படலம்.

சுத்தனுகியபிரசேனனைவதைத்தமடங்
  கலைத்தொலைத்தசாம்புவனை
யொத்தியேமற்போர்பொருதுவென்றிழை
  மெய்யொளிகொள்சாம்புவதிதன்னுடனே
யத்திருவெமையணுகிநல்லவிர்சால்
  சமந்தகமணியினையன்பாற்
சத்திராசித்துக்களித்தவன்மகளை
  மணஞ்செய்ததலைவனைத்துதிப்பாம். 1

வேறு.

வீரியவிதர்ப்பன்பெற்றமெல்லியறனைத்தேரேற்றிச்
சூரனையெதிர்ந்தவந்தவுருக்குமன்றுலையமோதி
யாரியனமரின்வென்றேயமரர்வான்மலர்கடுவே
வாரிசூடுவரையெய்திமணம்புணர்ந்திருந்தநாளின். 2

குந்திதன்மைந்தரோடுங்குருடன்மாபதியையெய்தத்
தந்திமாவுடன்றேர்வந்தகிருபர்தம்பதியிற்சார
நந்தனுமசோதைதானுநலனுறும்பாடிசேர
விந்திரையுடனுமாயனிலங்கியேயிருக்கும்வேலை. 3

தண்கடிமலர்க்காவெய்திச்சத்திராசித்துமன்னன்
பண்புடையலரியோனைப்பற்றியேதவஞ்செய்காலை
விண்கவினுறவேதோன்றும்வெய்யவனருளானோக்கி
யெண்கலமாழையீனுஞ்சமந்தகமணியையீந்தான். 4

நிதறத்தவந்தான்செய்யச்சமந்தகமணியையன்பாற்
சோதிசெய்தபனளியத்துலங்கிடவுரசிற்பூண்டே
யேதமிறுவரைதன்னிற்சத்திராசித்தாண்டெய்த
வாதவனிலத்தின்வந்தானென்றரிக்கறைந்தார்மாதோ. 5

அக்கணஞ்சத்திராசித்தரியின்பாலெய்தலோடுஞ்
சக்கரக்கையனிந்தச்சமந்தகமணியைத்தக்கோ
யுக்கிரசேனற்கீயென்றுரைத்திடமறுத்துவேந்தன்
புக்கனன்றமர்களோடும்பொன்னவிர்கோயிறன்னில். 9

மானவன்சிறிதுநாட்டான்கழித்தபின்வையமீதிற்
கானிடைமிருகவேட்டைகாண்குவான்களிப்புக்கொண்டே
சேனைகள்சூழப்பேரிமுழங்கிடச்சின்னமார்ப்ப
ஆனுகர்கிராதரெல்லாமுற்றிடவேகுங்காலை. 7

தவந்தினகரன்பாற்செய்தசத்திராசித்துமன்ன
னுவந்துநற்பிரசேனப்பேரனுசனையுற்றுநோக்கி
சிவந்தொளிர்மணியையீந்துநீயெழிற்பரியினேறித்
திவந்தனின்மிருகவேட்டைசேறியேமீடியென்றான். 8

அன்னவனுரைத்தலோடுமென்பினாற்பிரசேனன்றான்
மன்னவன்வசுதேவன்றன்மைந்தனைவணங்கித்தூய
மின்னியவயிற்கையோங்கவிரைவினிற்பரியினேறித்
துன்னியவதிரிபாண்டிதுலங்கியகானிற்சென்றான். 9

அரிநெடுந்தேரின்மீதினமர்ந்துறநோக்கலோடு
மிரலைகள்சசங்கள்கட்கமிபநிரையெல்லாம்பற்றி
யுரனுறமயிடமெண்கோடுழுவைபஞ்சானனங்க
டரைமிசைமடியமோதித்தானைகள்பரவுங்காலை. 10

அயமிசையேறியாண்மெடார்ந்திடும்பிரசேனன்றான்
பயமிலாதெதிருங்கேழல்கரியரிபரந்தவெல்லாங்
கயிறுறமயிலினாலேகண்டதுண்டங்களாக்கி
யுயர்குழைச்சாலமோங்கும்பழுவத்தினுற்றகாலை. 11

முழையினுளெழுந்துவந்தமுடங்குழைசீறிக்கண்க
ளழலுறவிழித்துநோக்கியயத்துடனரசன்றன்னைப்
பழுவமீதுடல்போய்வீழப்பாய்ந்தவனுரத்தின்மீதி
னெழிலுறமணியைக்கவ்வியிருநிலத்தேகிற்றம்மா. 12

விண்கதிரவனைப்பற்றிப்பாறும்வெள்ளரவுபோலக்
கண்கனலுறத்தான்மின்னுஞ்சமந்தகம்வாயாற்கவ்வி

மண்குழையுறவேயோமெடங்கலைவதைத்துத்தூய
வெண்கிறுக்கிறைவனந்தமணியைக்கொண்டேகினனல். 13

வனங்களிற்பரவும்வேடர்வலைகளைவிளம்பியெங்கும்
புனங்களிற்றிரியுங்கோலப்புண்டரீகங்கணவ்வி
யினங்களைத்தடுக்கவேலாலெறிந்தெய்தும்பொதுவர்மாதர்
தனங்களைவிரும்புமாயனுவந்திடத்தந்தார்வீரர். 14

குடதிசைக்கடலின்வெய்யோன்குளித்தலுமாயரில்லிற்
கடமுறுவெண்ணெய்நெய்பாற்களவுசெய்தருந்துங்கண்ணன்
மிடலுடைவீரரோடுமிருகங்கடன்னைவீழ்த்துத்
துடிகைகாகளங்களார்ப்பத்துவரையினடைந்தான்மாதோ. 15

அனைவருமெய்தவேந்தன்னனுசனைக்காணானாகித்
துனியுறுமனத்தனனசத்திராசித்துச்சோர்ந்தே
தனமுமிழ்சமந்தகத்தைச்சக்கரன்கேட்டபோதின்
வினையினேன்கொடாதேயெம்பிமாண்டனன்விதியாலென்றான்.

இளைஞரோடழுதுசோர்ந்தேகேசியைவதைத்தோனாலே
யிளைஞன்விண்சேர்ந்தானென்றுசத்திராசித்தங்கேங்க
வளவில்வெந்துயரமெய்தியரிவையரறைந்ததெல்லாங்
களைகணாயுலகங்காக்குங்கரியவன்கேட்டான்மன்னோ. 17

தினகரனுதயமாகத்தேவகிகுமரனான
வனகனக்குரூரனோடுமாதவனருளாலீந்த
கனகமீன்மணியைப்பெற்றகாவலனிளைஞரோடுஞ்
சினமுறுமடங்கலெண்குசேர்ந்தமாவனத்திற்சேர்ந்தான். 18

பரிகுரச்சுவட்டின்பின்னேபார்மிசைக்கடிதினேகித்
தரையினினயத்தினோடுமெடிந்தவன்றன்னைச்செற்ற
வரிசெலுமடியைநோக்கியவனியின்விரைவினெய்திக்
கிரியருகாகமாண்டுகிடந்தகேசரியைக்கண்டான். 19

மீளியைக்கொன்றுவீழ்த்துவிரைவினினேகுமெண்கின்
றுளினிற்குறியைநோக்கிச்சார்ந்திடப்பிலத்தினுள்ளே
கோளரிதன்னைச்செற்றகொடியவல்லூகநாடி
வேளினைத்தருவோனெய்தும்வேந்தரைநிறுத்திப்போனான். 20

வரையினிற்பிலத்தினுள்ளின்மாயவன்விரைவினெய்த
வரிமலர்ச்சோலையின்கண்ணம்பொனினாசன்மீதே
தெரிவையர்சூழவாடெண்களித்தமின்சிறந்தமார்பி
னிரவியினவிர்போற்றோன்றுமெழிலுறுமணியைக்கண்டான். 21

கண்டனன்மணியைமாயன்கவருமுன்சாம்பனெய்தி
யெண்டிசைநடுங்கவார்த்தேயென்முனரெதிருமாற்ற
லுண்டுகொன்மடியாதிங்ஙனோடுதிமணிதாவென்ன
வண்டமுண்டருளுமாயோனைகையுடனெதிர்த்தானன்றே. 22

வேறு.

முட்டினர்கையைமுறுக்கிநிலத்தே
கிட்டினர்நெஞ்சழலக்கிரிபோல
வொட்டினர்வாயைமடித்துறமெய்யைக்
கட்டினர்குத்தினர்கண்கனல்பொங்க. 23

உரத்தினடித்தனரோங்கியெழுந்தே
கரத்தொகையுறவேகனல்சிந்தச்
சிரித்தனர்வெம்புகைதீயுறவெண்கின்
விருத்தனுநேரிலாமாலும்வெகுண்டே. 24

அதிர்த்தனர்சாரிகைமாறியடர்ந்தே
குதித்தனர்வெம்புகைகொண்டெழுகண்ணர்
மிதித்தனர்மாமரம்வேர்பறியத்தா
னெதிர்த்தனராவிருபத்தினொடெண்ணாள். 25

எண்கினின்வேந்தனெதிர்த்திங்ஙனமோதிக்
கண்கலனுற்றிடவேயொருகாலால்
மண்கொளுமாயன்வன்கைமுறுக்கிப்
புண்கொளவன்சிரமீதுபுடைத்தான். 26

நறுந்துளவன்கையினோடுபுடைப்ப
மறிந்தனனெண்கினின்மன்னவன்மண்மே
லிறந்திலன்மீளவெழுந்தவன்மாலென்
றறிந்திருகைதொழுதாடியுரைப்பான். 27

வேறு.

மழைமுகில்வண்ணவுன்னைமாலெனவறியாதிங்ங
னிழிகுலத்தாயவெண்காயுழலுவேனெதிர்ந்துசெய்த
பிழைபொறுத்தருடிநாயேன்பெருந்தவஞ்செய்தேனாதி
முழையினுள்ளிருந்தேன்முன்னர்முதல்வனீதோன்றினாயால். 28

விலங்கலால்வேலைகட்டிவிறலுடையிராமனாகி
யிலங்கையினிருதர்கோனைவதைத்துப்பின்னயோத்தியெய்தி
நலங்கிளர்சோதிதன்னினேகுநீநாயினேனைக்
கலங்கலையுன்முனெய்திக்கதியினையருள்வனென்றாய். 29

ஆதலினடியேனுக்குன்பதத்தினையருள்வாயென்று
பூதலத்திறைஞ்சிப்போற்றிப்பொன்மனைபுகுந்துதானே
மாதவமதனாற்பெற்றமங்கைசாம்புவதிதன்னோ
டேதமின்மணியுங்கோடியென்றெண்கின்வேந்தனீந்தான். 30

கடலினைக்கலக்கிமுன்னாட்டிருவுடன்கவுத்துவத்தை
மிடலுடன்பற்றிக்கொண்டான்மீளவுமெண்கின்வேந்த
னுடலினைக்கலக்கித்தூயசமந்தகமணிதன்னோடு
மடமகடனையுங்கூடவாங்கியேமகிழ்ந்தான்மாதோ. 31

ஆம்பல்வாய்த்தசனமாரமளகமேகந்தோடுய்ய
காம்புகண்ணிலங்குநல்வேல்காதுநாளிகங்கைகாந்தள்
கூம்பியகுமிழெண்மூக்குக்கொடியிடையிவைசேர்கொம்பாஞ்
சாம்புவன்மகளைக்கண்டமாலுமாலானான்றானே. 32
சாம்புவன்றன்னைநீதான்பரகெதிசார்தியென்றே
பாம்பின்மேனடித்தகோமான்பகர்ந்தவன்பயந்தகொம்போ
டேம்பலொடெய்தும்வேலையிரும்பிலவாயினின்றோ
ராம்பரிசுணரார்கண்ணன்மீள்கிலனந்தோவென்றார். 33
என்றிடருழன்றுமாயோன்மீள்குவதில்லையென்றே
நின்றிலரொருவிஞர்போய்நெடுங்கடற்றுவரையெய்தி
மன்றலர்துளவினனீள்வரையினுட்பிலத்தினேகி
யின்றளவுந்தான்மீளானினிவரத்தில்லையென்றார். 34
மாயவன்வாரானென்றுவந்தவரியம்பலோடுந்
தாயருந்தந்தைதானுந்தாலகேதனனுமிக்க
நேயமாம்விதர்ப்பன்பெற்றநேரிழையாளும்வீழ்ந்தே
மாய்வம்யாமென்னும்வேலைமாதவன்வந்தான்மன்னோ. 35
எழிலுறுமணியையெண்கின்வேந்தன்றானீந்ததெல்லா
மழுதழுதிரங்குகின்றசத்திராசித்துக்கன்பாற்
குழகனுண்டுரைத்துக்கையின்சமந்தகங்கொடுத்தபின்ன
ருழைநிகர்விழியினுளோடொண்மனைபுகுந்தானன்றே. 36
தந்தையைத்தாயர்தம்மைவணங்கினன்சக்கரத்தோன்
சிந்தையிற்றுயரமாறித்திருமகிழ்ந்தடியின்வீழ்ந்தா
ளிந்துநேர்வதனத்தெண்கின்பாவைசென்றிறைஞ்சலோடுஞ்
சந்திரவண்ணனன்னைதேவகிதழுவினால். 37
பல்லியமுழங்கத்தேவர்பன்மலர்தூவியேத்த
மெல்லியர்பல்லாண்டோதவிளங்குதீபங்கள்சூழ
நல்லியற்கர்க்கனெய்தநவையறுசாம்பனல்கு
வல்லியோடொருபீடத்தின்வயங்கினன்மாயன்மாதோ. 38
ஓமநான்மறையையோதியொளிருமந்தணர்கள்செய்ய
வாமனன்சாம்பனல்குமங்கைதன்கந்தரத்தின்
காமர்மங்கலநாண்சாத்திக்கனல்வலமாகவந்து
மாமலர்க்குழலியம்மிமிதித்திடவடமீன்கண்டார். 39
இருக்கறைந்திலங்குகின்றகர்க்கனையிறைஞ்சியேகித்
தருக்குறுமெண்கின்வேந்தன்றனையைசாம்புவதிமின்னு
ளுருக்குமற்கிளையாடாளின்வணங்கியேயுவகையோங்கத்
திருக்கறவெழில்கொள்வாசுதேவனோடிருந்தாளன்றே. 40

சாம்புவதி தேவியார் திருக்கலியாணப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 345.

---

81 - வது, சத்தியவாமை தேவியார் திருக்கலியாணப்படலம்.

ஆதியாயகண்டமுற்றுமயின்றிடந்துமிழ்ந்தானந்தச்
சோதியாய்ச்சுருதியாலுஞ்சாங்கியந்தனிலுந்தோன்றா
நாதனாய்நளினமாதினாயகனாகிமெய்யாய்
நீதியாய்நெறியாய்நின்றவிமலனைவாழ்த்துநெஞ்சே. 1

ஏடுடைமலர்மிஞானவிந்திரைசாம்பனல்கும்
பீடுடையரிவைகுழப்பெருநலமுற்றவென்றிக்
கோடுடைக்கடமானினுங்கொடியிடையிரதமேவ
வாடுறுவலங்கன்மார்பன்வலனுறவிருந்தநாளில். 2

மறுவிலாவெம்பிதன்னைமடங்கறான்வதைத்தாண்டேகக்
குறைவிலாமுராரிசெற்றுச்சமந்தகங்கொண்டானென்றே
யறிவிலாதுரைத்தேனென்றாசத்திராசித்துமன்ன
னிறைவனாமாயன்றன்பாலெய்தியீதியம்புவானால். 3

சித்தசன்றந்தையானசீதரன்றன்னைநோக்கி
சுத்தநற்றவத்தனாயசத்திராசித்துச்சொல்வான்
வித்தகயான்றான்பெற்றமெல்லியல்விந்தைபோல்வாள்
சத்தியவாமைதன்னைத்தருகுவனுனக்கென்றானால். 4

அந்தநல்வசனங்கேட்டேயச்சுதன்விருப்பமெய்தச்
சிந்தையின்மகிழ்வினோடுந்தேவகிகணவனென்றன்
மைந்தனாமாயனுக்குன்மகளெழில்வடிவுமிக்க
சுந்தரிதன்னையீதனன்றெனச்சொல்லினானால். 5

மன்னவன்வசுதேவன்றானுரைத்தலுமகிழ்ந்துவேந்தன்
நன்மணஞ்செய்யநாணீர்நவிலுமென்றுரைத்தலோடும்
மன்னமென்னடையினாள்கையச்சுதன்பற்றிவாழ
வின்னலின்முகூர்த்தமின்றென்றந்தணரியம்பினரால். 6

வேதியர்கூறக்கேட்டுச்சத்திராசித்துவேந்த
னாதநல்லுவரிதன்னிலமுதமுண்டாரையொத்துத்
நீதகல்கோயில்புக்கான்சிறந்திடும்பூகங்கன்னல்
வீதிகணிறையவெங்கும்விளங்கிடநிறைத்தார்மாதோ. 7

மகரதோரணங்களோடும்வயங்குகம்பலம்வானோங்க
நிகரில்பொற்குடங்களெங்குநிறையச்செந்தீபந்துன்னச்
சிகரநன்மணியெல்வீசச்சிறந்தலர்மாலைநாலப்
புகரிபயிவுளிபொற்றேர்பொலிந்தனவீதியெல்லாம். 8

நித்திலநகையள்பச்சைநிறத்தினள்நீண்டகண்ணி [ள்
தத்தைபோன்மொழியாள்காந்தட்டக்கையாள்வெய்கொடோளா

சித்திரம்பழித்தமெய்யள்சிலையெனும்நுதலாள்சீராஞ்
சத்தியவாமைவண்மைச்சத்திராசித்தன்பாவை. 9

இன்னலனெய்தவோங்குமிமையவர்பதியினெய்து
மின்னிடைமடவார்நாணவிளங்கியவமிர்தம்போல்வா
டன்னிகரிலாதவேற்கட்சத்தியவாமையென்னுங்
கன்னியைவனைதல்செய்வான்கவினுறுமடவார்சூழ்ந்தார். 10

எண்ணரும்விண்ணின்மீதினெழுந்திடுங்கதிரினூர
பொன்மலர்வாசம்வீசுங்கருப்புரமாரமுத்தந்
தண்பனிநீரின்வண்மைச்சத்தியவாமையோங்கும்
மண்மகளாயமங்கைமஞ்சனமாடினாளால். 11

இரணியம்வயக்குநீவித்துகிலுடனிலங்கத்தாளிற்
பரிபுரம்பாதசாலம்பரியகம்வயங்கமாழை
விரசியகலாபம்வஞ்சிநுசுப்பிடைவிளங்கச்சாம
வருணமாரளகந்தன்னின்மருமலர்சூட்டினாரால். 12

சிந்துரத்திலதந்திட்டிச்சிவந்தநன்மணிகளான்ற
சுந்தரத்தோடுங்கொப்புந்துலங்கியகாதிற்றோன்ற
கந்தரத்திலங்குகின்றகலன்கணற்கவினைக்காட்ட
நந்தொளிர்வயிரமின்னுங்கடையநற்கரத்தினிட்டார். 13

நளினமென்முகைபோற்செப்புநாணவேயரும்புங்கொங்கை
வளமுறுந்தரளநீலமணிகொடாவடங்களோங்க
மிளிரும்வேனயனந்தன்னிலஞ்சனம்விளங்கிக்காட்டத்
தளிரடிமடந்தைநின்றாடாமரையாளும்நாண 14

பொற்புறவயங்குகின்றபூங்கொம்புபொலிவபோல
விற்புருவத்தினங்கைவிளங்கியசெயலைக்கண்டே
கற்புடைமடந்தைமார்கள்கருப்புரதீபங்காட்டிச்
சொற்பகர்கிளியினாண்முன்சோபனம்பாடினாரால். 15

பொன்னவிர்கால்களோங்கப்புதுமணியினங்கடுன்ன
மின்னுபொற்குடங்களெங்கும்விளங்கியவூசன்மீதிற்
சின்னநன்மலர்கள்பூத்துத்திகடருங்கொம்பாமென்ன
வன்னமுநாணவெய்தியமர்ந்தனளவனிமின்னே. 16

வாசநாண்மலர்களெங்கும்வானவர்பொழிந்துவாழ்த்த
வீசுசாமரைகண்மல்கவிளங்குதுந்துமிகளார்ப்பக்
காசினியோர்களேத்தக்காலினில்ஞெகிழிபம்ப
வூசலினாடினாண்மின்னெண்மணிவடங்களாட. 17

இன்னலனெய்துமங்கையினியபொன்னூசலாடத்
துன்னியகரிதேர்வீரர்துரகமண்ணிறைந்துசூழப்
பொன்னவிர்கவிகையோங்கப்புகரிபவெரினின்மீது
மின்னியமுகிலேயேலவிளங்கியவிமலன்வந்தான். 18

துடிகைமாமுரசந்தக்கைதுந்துமிகறங்கவேகற்
கொடிகுடைசவரிமல்கக்கொம்புகாகளங்களார்ப்ப
வடவரையுச்சிமீதின்வயங்கியமேகம்போற்றன்
னிடர்களைவான்றனெய்தமகிழ்ந்தனளெழில்கொண்மங்கை. 19
மும்மதவிபத்தின்மீதின்முன்னின்றமுராரிதோளிற்
செம்மைசேர்வனசமாலைசிறந்திடவெறிந்தாளன்னங்
கைம்மலைதன்னைக்காத்தோன்கழுத்துயர்கழுநீர்த்தொங்கல்
விம்மியமுலையினுடன்விளங்குசுந்தரத்திற்சேர்த்தான். 20
அன்னலங்கண்டவானோரரம்பையர்முதலோராடப்
பொன்னவிருசன்மீதிற்புயலெனவெய்தியேதான்
மின்னிடையணங்கினோடும்விளங்கிடவாடச்சூழு
மன்னவர்மடந்தைமார்கண்மகிழ்வுடனோக்கினாரால். 21
பரிவுடனுண்டுகொன்றுபதத்தளர்ந்திடந்துகாட்டி
யிருகரமதனாலேந்தியிலங்கியதொடையின்வைத்தும்
புருடவுத்தமன்மாறீரானாகியேபுவிமான்மீண்டும்
மரசரிலடைந்தாளோடூசன்மீதாடினானால். 22
அன்னவளோடுமாயனந்தணராசிகூறத்
துன்னுதூணயுதஞ்சூழ்ந்துதுலங்குமாமண்டபத்தின்
மின்னுமொண்மணியினங்கள்விளங்குமாதனத்தின்மீதே
பொன்னெடுங்கவரிவீசப்புயலெனவிருந்தான்மாதோ. 23
சுத்தனுங்கர்க்கனோமந்தொடங்கியாகுதிதான்செய்யச்
சத்தியவாமையென்னுந்தத்தைதன்கந்தரத்தின்
சித்தசன்றன்னைத்தந்தோன்சிறந்தமங்கலநாண்சாத்த
வுத்தமிபாதத்தம்மிமிதித்தனளுவகையோங்க. 24
மாயவனவனியாயசத்தியவாமையோடுந்
தேயுவைவலமாய்வந்துசிறந்தருந்ததியைநோக்கித்
தூயமாமறையோராசிசொல்லிடவிமையோர்வாழ்த்தத்
தாயரையிறைஞ்சித்தந்தைதாளினின்வணங்கினானால். 25
மாமியர்தாளின்வீழ்ந்துசத்தியவாமைவண்மைக்
காமனைத்தருவாடாளினிறைஞ்சியேகருணைமல்கும்
சோமனைநிகர்க்கும்வண்ணன்றேவியைவணங்கித்தூய
பூமனைத்தந்தானோடும்பொற்புறவிருந்தாண்மாதோ. 26
அருணன்றன்னனுசனூர்தியாகவேயருளுமாயோ
னிரணியகலத்தினன்னமருந்தினனின்பமெய்தி
வருணமாமணிப்பொற்கட்டிலெய்திமன்மதனுநாணத்
தரணிமின்னுடனல்லின்பத்தணைந்தினிதிருந்தானன்றே. 27

சத்தியவாமை தேவியார் திருக்கலியாணப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - 373.

82 - வது, சத்தனுவாவதைப்படலம்.

நவையகல்சிந்தையோடுநற்கனியெல்லாம்வைத்துச்
சுவையுறநுகர்தியென்னத்தொழுதின்பமெய்திநின்ற
சவரிக்கன்றுயர்வீடீந்ததசரதராமன்றாளிற்
பவமொடுபிறப்பிறப்பும்பற்றறப்பணிவோம்யாமே. 1

அறனுறுமக்குரூரனலாயுதனுத்தவன்றா
னெறிவசுதேவன்றன்னோடளப்பிலாநிருபர்சூழ
மறுவிலாமணிப்பொற்றூண்கள்வயங்கியமண்டபத்திற்
கறையடிதன்னைக்காத்தோன்கவினுறவிருக்குங்காலை. 2

படவரவுயர்த்தோன்றாதைபணியினால்வந்ததூதர்
கடமுறுகரியைச்செற்றகண்ணனையிறைஞ்சியேத்திக்
கொடிநிறைவாரணாசிதனிலைவர்குந்தியோடும்
படரனலுறவரக்குமனைதனில்வீந்தாரென்றார். 3

இறந்தனர்குந்தியோடுமைவர்களென்றலோடும்
மறைந்தவருய்ந்துபோனாரென்பதுமாயவன்றா
னறிந்திருந்தறியான்போலவருள்செறிதாதைதன்னை
யுறுந்துயரதனால்வாடியுற்றணைத்தழுதானம்மா. 4

மைத்துனமார்களன்னைதன்னொடுமடிந்தாரென்றே
வித்தகனிரங்கியேங்கிவிடவரவுயர்த்தவேந்தன்
சித்தமார்துயரைநீக்கிச்சிந்தைநோய்தீர்வனென்னா
வத்தினாபுரத்திற்றேர்மேலச்சுதன்சென்றான்மன்னோ. 5

அரியிரதத்தின்மீதினத்தினாபுரத்திற்செல்ல
வுரகமீதுயர்த்தகோமானுற்றவரெதிரேசென்று
பருவரலெய்துவான்போற்பரமனைத்தழுவலோடு
மிருவருஞ்சிந்தையுள்ளின்களிப்புறவிரங்கினாரால். 6

கருமுகில்வண்ணன்மாயன்கட்செவியுயர்த்தகோவை
யருவினையாவராலுமகற்றொணாததனாலையா
வெரியினிற்குந்தியோடுமிறந்தனரென்றிங்கெய்துந்
தெருமரலொழிதியென்றேசெப்பியாண்டிருந்தான்மன்னோ. 7

வீடுமன்விதுரன்கன்னன்விமலன்றாளிறைஞ்சிநிற்பச்
சேடுடைத்துரோணன்சேயோடெய்தியேயாசிசெப்பக்
கோடுகையேந்தினானைக்கண்ணிலான்குறுகித்தீயின்
வீடினர்புதல்வரென்றவிம்மியேயழுதான்மாதோ. 8

துணியுறவோரையெல்லாஞ்சுந்தரனோக்கியேதான்
வினைவலிதன்னினாலேயெரியினில்வீடினார்க்கீண்
டனைவருமிரங்கியென்னபயனினியவர்களெல்லா
மினிமையாங்கதியையெய்தவெள்ளுநீரிறையுமென்றான். 9

அலாயுதன்பின்னோன்சொல்லவரவுயர்த்தோன்றன்பின்னோ
ரெலாரும்வந்திரங்கியேதானெரியினிலிறந்தோர்க்கெல்லாந்
திலோதகமளித்துப்பிண்டந்திரட்டியேகளித்தாண்டிட்ட
புலாலர்தஞ்செயலைநோக்கிப்புயல்வண்ணனிருக்கும்வேலை. 10

பாந்தண்மீதுயர்த்தோன்வைகும்பதிதனிற்பரமன்றேர்மேற்
சார்ந்திடவக்குரூரன்சத்தனுவாவைநோக்கி
வேந்தநீகேட்டிநேரிற்சத்திராசித்துவிந்தை
காந்தனுக்களித்தானன்றேதான்பெற்றகன்னிதன்னை. 11

கிருதவன்மாவுநீயுமிருக்கக்கேசியைத்தான்செற்ற
வரிதனக்கரிவைதன்னையளித்தவனாவிசோரப்
பரிதனோடிறந்தானோடுங்கூட்டியொண்மணியைப்பற்றித்
தருதியேனன்றென்றோதச்சத்தனுவாவுஞ்சொல்வான். 12

உன்னையுமென்னைத்தானுமுயர்குலக்கிருதவன்மாத்
தன்னையுமிகழ்ந்துவெண்ணெய்திநுகர்ந்தவனுக்காங்கே
மின்னினையளித்தானாவிவின்னுறவதைத்துப்போக்கி
நன்மணிகவர்ந்துமீள்வனென்றிடநலனீதென்றான். 13

நிசிதனிற்கன்னமிட்டேநிலவரையதனுளெய்திச்
சசிநிகர்படிகமாடந்தனிற்றுயில்கின்றான்றன்னைச்
சுசியுறுங்கண்ணன்வாளாற்றுணித்துநன்மணியைவாங்கி
வசையுறமனையின்வந்தான்சத்தனுவாவாமன்னன். 14

தந்தைதான்மடிந்ததன்மைசத்தியவாமைகேட்டு
வந்துமண்ணிடையின்வீழ்ந்துவயிற்றிடையெற்றியந்தோ
யெந்தைநீயிறந்தாயிங்ஙனென்செய்கேனென்றுநைந்து
சிந்தையிற்கலங்கிப்பின்னர்ச்சினமுறச்செப்பலுற்றாள். 15

எந்தையையவதைத்தானாவியென்னுயிர்க்கொழுநனாலே
யந்தகபுரத்தினேற்றியரும்பகைமுடிப்பனென்னச்
சுந்தரியம்பிவாளாற்றுணிபடுந்தாதைதன்னைச்
சிந்தையினிடருற்றேதான்றிலதயிலத்திலிட்டாள். 16

மரகதநிறத்துமங்கைவாயுவின்முந்தியேகுங்
குரகதமிசையினேறிக்கொடியவார்வீக்கிநெஞ்சி
னெரிகதமுறவேகங்குலேகுமுனிமைப்பினெய்தப்
பொருகதைகரத்திலேந்தியத்திமாநகரிற்புக்காள். 17

அத்தினபுரத்திற்சென்றேயரிதிருவடியிற்றாழ்ந்து
சத்தியவாமைதந்தையிறந்தமைசாற்றலோடும்
வித்தகன்றேவிதன்னைத்தழுவியேவிம்மிக்கண்ணீ
ருத்தரீகந்தான்றாங்காதோடவேயிரங்கினானால். 18

இரங்கியவிறைவன்றேவிதன்னுடனிமைப்பின்முன்னே
துரங்கமீதிருவருந்தானேறிவான்சுரர்கள்போற்றக்

கருங்கடலகழியாகக்கவினுறுதுவரையெய்திக்
குரங்கலோசனிதன்றாதைகோயிலினடந்தானம்மா. 19

சக்கரந்தரித்தானெய்தச்சத்தனுவாமாயன்றா
னுக்கிரமாகிவந்தான்செய்யுமாறுரைத்தியென்ன
வக்குரூரன்றான்கேட்டேயரியுடன்பகைத்தாரெல்லா
மூக்கினரல்லசலியாவருய்ந்தனரென்றுசொல்வான். 20

சத்தியவாமைதந்தைதனைவதையென்றார்சொன்னார்
சித்தசன்றன்னைத்தந்தான்செருத்திறமறிந்திலாயோ
குத்திரமாகிக்கங்குறன்னிடைக்கொன்றைநீதா
னித்தலத்திருந்துசாகாதேகுதிவிரைவினென்றான். 21

கூறியவக்குரூரன்கரத்தினிற்கோடியென்று
வீறியசமந்தகத்தைக்கொடுத்தவன்விரைவிற்செல்லும்
மாறிலாவிவுளிமீதின்வடதிசைநோக்கியேதா
னூறுகாவதங்கழிந்துநொடியினிற்சென்றானன்றே. 22

வேறு.

தூயசத்திராசித்துவைவாளினாற்றுணித்துத்
தீயனாகியசத்தனுவாசென்றதன்மை
மாயவனறிந்தலாயுதமன்னவனுடனே
பாயுமாவிரதத்தின்மேற்பார்மிசைச்சென்றான். 23

வாயுவின்விசைபின்னுறமணிநெடுந்தேர்மே
லேயெனுமுணர்நூறுகாவதநெறியேகித்
தீயவன்றனையடர்தலுமிதிலையிற்சிறந்த
தாயகாவினிற்சத்தனுவாவயம்வீழ்ந்த. 24

சோலைதன்னிடைத்தூயதாந்துரகம்வீழ்ந்திடலுங்
காலிற்காலெனச்சத்தனுவாக்கழிந்திடவே
சீலமாயவன்றேரினுமிழிந்துதானோடி
கோலநேமியாற்கொடியவன்சிரத்தினைக்கொய்தான். 25

தரையின்வீழ்ந்திடுஞ்சத்தனுவாவினைமாயன்
றெரியநோக்கிநற்சமந்தகமணியினைக்காணான்
விரைவின்மீண்டுதன்முன்னவனுடனிவைவிளம்ப
வரவுருத்தவிர்வோன்சொல்லையையமாயனறைவான். 26

இரவிசத்திராசித்துவுக்கீந்தநன்மணிக்கிங்
குரியனீயலாலெனக்கதனாற்பயனுண்டோ
கரவலன்கையினிற்காண்கிலமணியெனிலென்ன
விரைவினினன்னகர்க்கேகெனமிதிலையிற்போனான். 27

முன்னவனிவைவிளம்பலுமுராரிவெண்ணகைசெய்
தின்னலின்மணிகண்டபினென்மொழிமெய்யென்

றன்னிமன்னவவொண்ணகரடைதியென்றுரைத்துக்
கன்னலொன்றினிற்கடிபொழிற்றுவரையினடைந்தான். 28

காவினல்வதைசெய்தவனுயிர்களைந்ததனை
யுரைசெய்தேபினர்ச்சத்திரசித்துவையுயரு
மெரியிற்சேர்த்தியேயிருபுனற்கிரியையுஞ்செய்வித்
தரிதன்றேவிதன்னருந்துயரகற்றியங்கமர்ந்தான். 29

வாசிமீதிற்போய்மாண்டவன்றுவரையிலீந்த
தேசிசெண்கலத்தனமுமிழ்மணியினோடேகிக்
காசியின்னிடைக்காந்தினிசுதனினிதிருந்து
மாசில்வேள்விகள்செய்துமாதானமுமீந்தான். 30

ஆயவாறெலாஞ்செய்தவக்குரூரனையறிந்தே
மாயன்றன்வெருவாதிவண்வருதியென்றுரைத்து
நேயமாகியநிருபரைவிடுத்தலுநெறிசேர்
தூயகாந்தினிசுதன்றுவராபதியடைந்தான். 31

ஆழியானடிக்கமலத்தினிறைஞ்சியக்குரூர
னேழையேன்பிழைபொறுத்தியாற்றபனனன்றீந்த
மாழையின்மணியிதுவெனமன்னர்முன்கொடுப்ப
வேழம்வீழ்த்தவன்மீளவுமவன்கையிற்கொடுத்தான். 32

மதிலையநேர்வணன்மாயனையொருவியேயேகி
மிதுலையின்வெகுலாசுவமன்னன்வேதியரோ
டெதிர்கொண்டர்க்கியமளித்திடவின்னமிர்தருந்திப்
புதியநன்மலர்குஞ்சியிற்புனைந்தினிதிருந்தான். 33

வேறு.

வீரியவலாயுதன்றன்பெற்றிடவிளங்குமின்னாள்
பாரின்மேற்சிறந்தபானுமதியினைப்பரிவினாலே
வாரிபோலொலிப்பப்பேரிமறையவரோமஞ்செய்ய
நேரிலாவியாழமோங்குநிருபனுக்களித்தானம்மா. 34

வேறு.

ஆயகாலையினக்குரூரன்மணிகொண்டே
தூயகாசியினிருந்துபின்றுவரையினெய்தி
மாயவன்றனைவணங்கியவாறெலாமறிந்து
நேயமாயெய்துமந்தணர்நிகழ்த்தினரன்றே. 35

இந்தநல்லுரைகேட்டலுமிந்துவண்ணன்று
ணந்துகையுறுநாரணனுரைபழுதென்றே
சிந்தையினினைந்தேனந்தோவென்றுரைசெய்து
வந்துநற்றுவராபதியடைந்தனன்மாதோ. 36

சீலமாகியவலாயுதன்றிருவடிதன்னின்
மாவிறைஞ்சிடத்தழுவியேமகிழ்ந்தினிதிருப்பக்

கோலநன்மணிகாந்திளிசுதனெய்திக்கொடுப்பத்
தாலகேதனன்சத்தியவாமைக்குக்கொடுத்தான். 37

வினையெலாமறவேதியராசிகள்விளம்பத்
தினகரன்றனக்கன்பனுஞ்சத்திராசித்தின்
றனையளாகியசத்தியவாமைதன்மனத்திற்
றுனியகன்றிடச்சுந்தரனிருந்தனன்மன்னோ. 38

சத்தனுவா வதைப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - 411.

---

83 - வது, காளிந்தி தேவியார் திருக்கலியாணப் படலம்.

வேளுந்துதிசெய்யவிசையனோடுகோனேகி
நாளுந்திரைக்கடலினண்ணுதவன்பயந்த
காளிந்திநற்றவங்கண்டேமணந்தகண்ணன்மலர்த்
தாளுந்துநும்வினைகள்சாற்றுமவன்பெயரே. 1

வித்துருமமொத்தவிதர்ப்பனுவந்தருண்மின்
சத்தியவாமைநலசாம்புவதிதற்சூழ
நித்திலம்பொன்னீலநிறைந்தமணிமண்டபத்தி
னத்தினொளிர்செங்கையரிவீற்றிருந்தநாட்டனிலே. 2

வேறு.

அரவுயர்வஞ்சன்செய்தவரக்குமாளிகையினிட்ட
வெரியிடையுய்ந்துவேந்தர்குந்தியோடெய்தியேதான்
வரைதனிற்றுயிலவந்தவிடும்பனைவதைத்துவீமன்
சரியிலாக்கமலவல்லிதனையணைந்திருந்தநாளின். 3

அன்னவள்வயிற்றிற்றோன்றுங்கடோற்கசனுடனேயந்த
மின்னவணிருக்கவைந்துவீரர்களன்னையோடு
மின்னலின்மறையோர்வாழுமேகசக்கரத்தினெய்தி
வன்னிபோற்கனன்றுவந்தபகனைவாள்வீமன்கொன்றான். 4

மறையவரிடரைநீக்கிவல்லையினேகிச்செல்லு
நெறிநிசிநிறையவாற்றினீர்விளையாட்டினின்ப
முறுமுயரங்கிராமேல்விசையனோர்கொள்ளிவிட்டே
யெறிதலுந்தோற்றவன்றாளிறைஞ்சிடவவனையோவி. 5

பரிகரியிரதமிக்கதுரோபதன்பதியையெய்தி
யரசர்கள்வளைக்கமாட்டாதவனியிற்கிடந்தவில்லை
விரைவினினாணையேற்றிமீனெய்தவிசயன்மார்பி
னரியுறுமலங்கறன்னைத்துரோபதையணிந்தபின்னர். 6

வரிசிலைவளைக்கமாட்டாமன்னவர்திரண்டுதேர்மேற்
பொருதவர்வென்னிட்டோடப்புகையுறுவாளியெய்து
தருமனோடைவரெய்தித்தையலைவதுவைசெய்தே
யிரதமீதேறிப்பாண்டுமுன்னவன்பாலினேக. 7

அந்தனாமரசன்பின்னோனருளியவைவர்கட்கு
மிந்திரப்பிரத்தமீயவிரதமீதேறிப்பாரி
னந்தமாநகரினெய்தியடைந்திடுமியல்புக்கெல்லா
மிந்திரைகொழுநன்றன்பாற்றருமன்றாதேவினானால். 8

வந்திடுந்தூதரெய்திமாதவனடியிற்றாழ்ந்து
குந்திதன்சுதர்கள்செய்கைகூறிடக்கேட்டுமாயோன்
சிந்தையின்மகிழ்ந்துதந்தைக்கிளையனாஞ்சினிதான்பெற்ற
மைந்தன்சாத்தகிதன்னோடுமணிநெடுந்தேரிற்போனான். 9

இந்திரப்பிரத்தத்தேகியைவர்களெதிர்வந்தெய்த
வந்தமாலறன்சேய்தன்னைவீமனையிறைஞ்சியாங்கே
யிந்திரன்றனயன்றன்னைத்தழுவிமத்திரைதானீன்ற
மைந்தர்களடியின்வீழக்குந்தியைவணங்கினானால். 10

மாயனைப்பாஞ்சாலன்றன்மகளெய்திவணங்கநோக்கி
நேயமோடாசிகூறிப்பின்னர்மஞ்சனநீராடித்
தூயவின்னமுதருந்திப்பாண்டுவின்சுதர்களோடும்
வீயுறுமலங்கல்சூடிவித்தகனிருந்தான்மாதோ. 11

இந்தரப்பிரத்தந்தன்னிலீரிரண்டாயதிங்கள்
சிந்தையின்மகிழ்ந்துமாயோன்சிறந்தினிதிருந்தபின்ன
ரிந்திரன்சிறுவனோடுமெழில்வனத்திடையினெய்தி
மந்திபாயுய்யானத்தின்வனப்புறவிருந்தவேலை. 12

பாவகன்மறையோனாகிப்பசிமிகவுடையேனென்னத்
தேவர்கோன்சிறுவனேதாற்றீருமுன்பசிதானென்னக்
காவினிலுயர்ந்தகாண்டாவனந்தனைக்காட்டியேதான்
றாவிதுண்பேனானென்றுதழலுருவாகினின்றான். 13

தனஞ்செயனதனைக்கேட்டுத்தனஞ்செயன்றன்னைநோக்கி
யனஞ்செறிந்துயர்ந்தகாண்டாவனந்தனையளித்தேனென்ன
மனஞ்செறிமகிழ்வினோடும்வனந்தனையனலோனுண்ணக்
கனஞ்செறிவானமெல்லாங்கரும்புகையாயிற்றன்றே. 14

ஆயிரங்கண்ணானோக்கியனைவரும்பொன்றலூழித்
தீயிதோவெழுந்ததென்றுசெப்பிடத்தேவதூதர்
தூயகாண்டவனத்தைச்சுட்டிடுமெனலீதென்ன
மீயுயர்கரியினேறிவெகுண்டனன்விபுதர்கோமான். 15

அழலினைக்கெடுகியேசூழ்ந்தவிமின்களென்றுகூற
வெழிலிகளெழுந்துதூண்போற்றாரையாய்ப்பொழியக்கண்டு

குழலினையூதுவோன்றன்மைத்தனன்குனிவிலாலே
மழைதடுத்தனலைக்காத்தான்வாளியாற்கூடமாக்கி. 16

அன்னதுகண்டேதேவராயிரங்கண்ணனோடுந்
துன்னினர்திசைகளெங்குஞ்சுடுகணைபொழிந்தங்கார்த்தார்
மன்னவன்விசயன்றிவலாரிதன்னுடனேவானோர்
வென்னிடவிசிகமாரிவில்லினாற்பொழிந்தான்மன்னோ. 17

நயனமாயிரத்தோன்றானுநாகர்கள்முடுகிப்பெய்யும்
புயலொடுமிரிந்துபாறப்பொங்குதீயடர்பூங்காவி
லயனெழிற்பிதாவையுன்னுமவர்வினைக்ககப்படார்போன்
மயனொடுமுனிவரெல்லாம்வருந்திடாதுய்ந்துபோனார். 18

தூயகாண்டாவனத்தைமுதலறச்சுட்டுத்தோன்றுந்
தேயுவாள்விசயனுக்குச்சிறந்திடுநற்காண்டீபம்
பாயுமாவிரதந்தன்னோடரிக்கொடிபரிவாலீந்து
மாயனைமலர்சொடேத்திமலரடிவணங்கிப்போனான். 19

சந்திரனனுகுங்காண்டாவனந்தனைத்தழலுக்கீந்து
சுந்தரவிசயனோடுந்துலங்கியவிரதமீதி
லிந்திரப்பிரத்தத்தெய்தியிருந்திடவெரியினாலே
வெந்திடாதுய்ந்தபோனமயனவண்விரைவிற்சென்றான். 20

நீரெனப்படிகந்தோன்றப்பளிங்கெனநீருந்தோன்றச்
சீருறவயங்கியோங்குமண்டபமிரண்டுசெய்து
பாருறமைவர்நோக்கிப்பரிந்திடமயனுந்தச்ச
னாரியன்றளின்வீழ்ந்தேயமரர்தம்முலகம்புக்கான். 21

மயன்விடைகொண்டுபோனபின்னர்மால்விசயனோடு
மயமுறுதேரினேறியனிகமாவெள்ளஞ்சூழப்
புயலடர்கிரிசாலங்குரவகம்பொருந்தவோங்குங்
கயமுறுகானின்வேட்டைவிரும்பியேகடிதிற்சென்றார். 22

வேறு.

கொம்புகுறித்தனர்பகழியெடுத்தனர்குனிவில்லார்
பம்பையடித்தனர்கடிதினினுற்றனர்படிமீதின்
கம்புமுழக்கினர்கணைகள்விடுத்தனர்கதமல்கு
மும்பலுகைத்தனர்வயினர்வளைத்தனருரவோரே. 23

கரிநிறைபற்றினர்முயல்களடித்தனர்கடிதோடி
வரையினினுற்றனர்பகழிவிடுத்தனர்வளைவில்லோ
ரெரிசினமுற்றிமெரியையவதைத்தனரிடியஞ்சு
முரையினர்சுற்றினர்முடுவேலைவிட்டனருயர்வேடர். 24

ஊக்கமிகுத்தவர்கணைகள்விடுத்தனருயரோங்க
லாக்கையர்கர்சையின்மீதுடைவாளினரமாஞ்சார்

நோக்கழலுற்றவரிடிகளுமஞ்சிடநொடிவாயர்
சிக்கைவிளைத்தனர்வலைகள்வளைத்தனர்சினம்விஞ்ச. 25

கறடிபிடித்தனர்மயிடமடித்தனர்கணையேவி
நெறிகளடைத்தனர்ஞமலியைவிட்டனர்நெறியாக
வுறுகதமுற்றிடுமுழுவைகள்செற்றனருருமேபோற்
பறைகளடித்தனர்துடிகைகள்கொட்டினர்படிமீதே. 26

கலைகளடித்தனர்கசமுயிர்செற்றனர்கடிதோடி
வலைகள்வளைத்தனருழைகள்வதைத்தனர்மயிடத்தின்
றலைகளறுத்தனர்கரியைவதைத்தனர்தரைமீதிற்
புலிகளடர்த்திடவதனையெதிர்த்தனர்பொரும்வேடர். 27

மாவினிலுற்றவர்வாளையெடுத்தனர்வயவீர
ராவியமிற்றிடவேகதைவிட்டனரழல்வாளி
தூவியடர்த்தனரிருளிவதைத்தனர்சுடர்வேலா
லாவிசெகுத்தனரோவியகாயத்தினையம்மா. 28

கட்கமெடுத்துயர்கடகம்வதைத்தனர்கடிதேகி
யுட்கதமுற்றிடுமிபநிரையட்டனருடைவாளான்
முட்கொடிதாயடர்கானின்முடங்குழையுயிர்செற்றார்
புட்கொடிவீரன்விரும்பிடவேபொருமரிகொன்றார். 29

பாத்தன்விலால்வெயபகழிவிடுத்தேயரிகொன்றான்
சாத்தகிசார்த்தூலங்கரிகிரிவெந்தழல்வாளி
கோத்துயிர்செற்றான்கொம்புகுறித்துச்சினவேட
ரார்த்துழையாளியாவிதமெல்லாம்வதைசெய்தார். 30

கந்தமெடுத்துக்கந்தனின்வைத்தேகழைமேவும்
பந்தரினின்றுபந்தமுயர்த்துப்பல்லியச்
சிந்தவிசிந்தக்குழிசியினச்சாரஞ்சேர்த்தே
நந்தர்தனந்தன்றன்முனருய்த்தார்நல்வேடர். 31

சித்தசனத்தன்மைத்துனனேடுயர்தேரேறி
யத்திரம்விட்டெரெண்குகரித்திரளருணங்கள்
சித்திரகாயமரித்திரளும்வதைசெய்தேவா
னத்தொடுகெயலுறும்யமுனையினண்ணினன்வெயில்விஞ்ச. 32

வேறு.

வெயிலவன்வெம்மையாலேமெலிவுற்றுவிரைவினெய்தி
யயமுடன்கரிகண்மன்னரனிகமெல்லாஞ்சூழ்ந்து
கயலொடுவாளைதாவக்கமலங்களலர்ந்துதோன்றும்
பயமுறுயமுனைதன்னிற்படிகநீராடினாரால். 33

சிதரனதிநீராடிச்சிறந்திடுயானத்தெய்தி
யேதமில்விசயனுங்கேயமுனையிற்படிந்துமுழ்கித்

தாதவிழ்மலர்ப்பூங்காவிற்றவமுறுவேடந்தாங்கு
மாதினைக்கண்டுமீண்டுமாயன்பாலெய்திச்சொல்வான். 34

இந்திரைதானோவன் றியிரதியோவரம்பைதானோ
சுந்தரியொருத்திதூயயோகத்திற்றலங்கின்றாள்
தந்தியைக்காத்தவீராதசாருகத்தேசமன்னு
வந்துநீகாண்டியென்னமாதவன்மகிழ்ந்துசென்றான். 35

முளரியின்முளையின்முத்தினவிரெனமூரலெய்த
முளரியின்முளைபோலாரமுலையுறநவையில்சித்த
முளரியின்வைத்துட்டன்னினிறுத்திமுள்கூர்பாயு
முளரியின்யோகஞ்செய்யுமுயற்சியைமுராரிகண்டான். 36

வாளுந்துநயனத்தாள்வான்மதியுந்துவதனத்தாள்சீர்
நீளுந்தண்மலரினேதிநித்திலம்பழித்தபல்லாள்
வேளுந்துதவவேடத்தாள்விந்தைநாண்வடிவுமிக்காள்
காளிந்திதன்னைக்கண்டான்காளிந்திநதியிற்கண்ணன். 37

நீதிலாமாதைநோக்கிச்செய்கின் றவரியயோக
மேதினைநத்திச்செய்வாயாருடதனயளென்ன
யாதவன்மகளாவேனீகணவனுயணுகச்செய்யு
மாதவமுற்றவந்தாயென் றடிவணங்கினளால். 38

பாதமேற்பணியுமாதைப்பரிவினாற்கரத்தைப்பற்றி
மாதவன்றேரினேற்றிவானவர்மலர்கடுவேத்
நீதிலாவிசயன்வண்மைச்சாத்தகிசேனைசூழ
வேதியர்கிறையுமிந்திரப்பிரத்தத்தின்மேவினரால். 39

இந்திரப்பிரத்தந்தன்னிலெய்தியேயரிவையோடுங்
குந்தியைவணங்கிவீதிக்கொடிவிதானங்களோங்கக்
கந்தநன்மாலைகும்பங்கன்னலொண்கமுகுதோன்றத்
துந்துமிமுரசஞ்சங்கந்துடிகைகள்பலமுழங்க. 40

நித்திலம்வயிரநீலமரகதநிறைந்ததூண்கள்
பத்திசெய்மண்டபத்தின்பைம்பொனாதனத்தின்மீதின்
சித்தசனிரதிநாணச்சிறந்தகாளிந்திதன்னோ
டத்தியைக்காத்தவீரனழகுறவிருந்தானன்றே. 41

ஆரணமறையோர்சூழவருந்தவக்கர்க்கனெய்திப்
பூரணாகுதிசெய்தென் றின்புதல்விகந்தரத்திற்சீராய்
வாரணங்காத்தோன்கையான்மங்கலநாணைச்சேர்த்தச்
சீரணங்கெழிலாலம்மிமிதித்துத்தீவலம்வந்தாளால். 42

கருந்தடங்கண்ணியானகாளிந்தியுடனுமாய
னருந்ததிவானினோக்கியறுசுவையடிசிலின்பம்
பொருந்திடவமுதுசெய்துபூந்தொடைபுனைந்துபொன்னாந்
திருந்தியகட்டின்மீதிற்சிறந்தின்பத்தமர்ந்தானன்றே. 43

தினகரன்புதல்வியோடுஞ்சில்லியந்தேரிலேறி
யனகன்பாண்டவர்கடன்னைநிறுவியேயனிகஞ்சூழக்
கனககோபுரங்கள்சூழுங்கடிபொழிற்றுவரைதன்னிற்
சினிகவின்புதல்வனைசாத்தகியுடனுஞ்சென்றான். 44

அன்னையர்தமையிறைஞ்சியலாயுதனடியிற்றாழ்ந்து
மன்னவன்வசுதேவன்றன்மலரடிவணங்கியோங்கும்
பொன்னின்மண்டபத்திற்சேக்கைபொருந்திடவிதர்ப்பன்பெற்ற
அன்னம்வந்தச்சுதன்றன்னடிதொழுதருகிருந்தாள். 45

சத்தியவாமையென்றுதந்தசாம்புவதியின்பி
னுத்தமனடியிற்றாழ்ந்தேயுண்மகிழ்ந்திடக்காளிந்தி
தத்தைதேவகிதன்றாளினிறைஞ்சிநற்றவமிக்கான
சித்தசனன்னைபாதம்வணங்கினள்சிறக்கமாதோ. 46

தூயதேவியர்கள்சூழத்துலங்குமாமண்டபத்தின்
வீயுறுகுழலினார்கள்வீணையாழிசைக்கவேலை
காயுமான்விழியினார்மெய்கலனுறநடிக்கக்கண்டு
மாயவனிருந்தான்றூயமாமறையோர்கள்வாழ்த்த. 47

காளிந்திதேவியார் திருக்கலியாணப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 458.

84 - வது, மித்திரவிந்தை தேவியார் திருக்கலியாணப் படலம்.

உத்தமவந்திமாராசனென்னகர்
மொய்த்தெதிரரசர்வென்னிடமுடுக்கியே
மித்திரவிந்தையாந்திருவைவேட்டரு
ணத்தொளிர்செங்கைநாரணனையேத்துவாம். 1

சாமரைபுரளகற்றருமமோங்கிட
மாமணிக்கலன்கண்மார்பினில்வயங்கவே
காமனையளிப்பவளுடன்களிப்புறப்
பூமனையளித்தவன்பொருந்துநாட்டினில். 2

வேறு.

தவந்தனைப்பகழியாக்கித்தருமமாந்தனுவைக்கோட்டிப்
பவந்தனைத்துணித்துவீழ்த்திப்பாரினிற்செங்கோலோச்சி
யுவந்திமெறையோர்போற்றவொருதனிக்குடைக்கீழ்வைகு
மவந்திமாராசன்பெற்றவரிவைவானரம்பைபோல்வாள். 3

சூரசேனன்றன்பெற்றதுயயராசாதிதேவி
சீருறவசுதேவன்றன்சகோதரிசிறப்பான்மிக்க

வீரர்கண்மதிப்பப்பாராள்விறல்வந்திராசர்க்கன்பாம்
பாரிகற்புடையாள்பெற்றபைந்தொடிபவளம்போல்வாள். 4

அத்திரம்போன்றகண்ணாளரவிந்தவதனத்தாளொண்
முத்தெனுநகையாள்கோங்கின்முகையெனுமுலையாள்வண்மை
நத்தெனுங்கிரீவத்தாளோதிமமெனுநடையளாய
மித்திரவிந்தைமேகக்குழலண்மெல்லிடையாங்கொம்பு. 5

அன்னவளெழிலைநோக்கிவந்திமாராசனென்று
மன்னவன்மகளுக்காங்கேவதுவைசெய்பருவம்வாய்த்தென்
றுன்னியிச்சுயம்வரத்திற்கெய்துவீரொல்லையென்றே
யின்னிலத்தரசர்க்கெல்லாந்தூதரையேவினால். 6

தூதுவர்விரைவினெய்திச்சொல்லலுநிருபரெல்லா
மாதரவுடனேதேரினனீகமுஞ்சூழவேகிப்
போதகமிரதம்பாய்மாப்படைவரவையமீதின்
மாதவனவந்திமன்னன்வளநகர்க்கெய்தினரால். 7

நீலமொண்வயிரம்பச்சைநித்திலம்பவளம்பைம்பொன்
கோலநன்மணிகளெல்லாங்குழுமியமண்டபத்தின்
மாலைகண்மாழையாடைவயங்கியவிதானமான்று
மேலவனவிரேபோன்றுவிளங்கியதீபஞ்சூழ. 8

துன்னியமணித்தூணெல்லாந்துலங்கியமண்டபத்தின்
மன்னவரளப்பிலாதோர்மயங்கியேநிற்கும்வேலை
மின்னிடைக்கலாபந்தோன்றமித்திரவிந்தைமேவு
மன்னமுநாணக்கையினலங்கலோடெய்தினளால். 9

செல்லுயர்பிறைவில்வாளிசெங்கிடைவள்ளையாரம்
வில்லுவங்குமிழ்வேய்கோடுவிளங்கியகலசங்காந்தள்
வல்லிநற்கதலிநள்ளிவாலொளித்தராசுநேரி
லல்லியங்கமலமான்றவாடகக்கொம்புபோல்வாள். 10

இத்தகையெழிலான்மிக்கயாழினைப்பழிக்குஞ்சொல்லாள்
மித்திரவிந்தைதன்னைநோக்கும்வேல்வேந்தரெல்லாம்
சித்திரம்போலநிற்கச்சிறந்தமின்னலங்கறன்னைக்
கைத்தலந்தன்னில்வாங்கிக்கண்ணன்றன்மார்பிலிட்டாள். 11

தெரியலைமங்கைவாங்கிச்சீதரனுரத்திற்போட
வரசர்களெல்லாநெஞ்சமழறழற்கண்ணராகிக்
கரிபரியிரதவீரர்கணக்கிறந்தவர்களெல்லா
மரியினைவளைத்ததோலினிறையெனவார்த்தாரன்றே. 12

நிருபர்கள்வளைக்கமாயோனெடுஞ்சிலைவளைத்துவாளி
கருமுகில்பொழிந்தாற்போலச்சொரிதலுங்கரிமாவீரர்
தரணியின்மடிந்துவீழத்தசையுறுகுருதிவெள்ளம்
பெருகிடக்கவந்தமாடப்பேய்களுங்களித்தமாதோ. 13

நீறணிகடவுள்கண்ணினெருப்பினாற்புரங்கள்வெந்த
வாறெனவனீகமெல்லாமவனியின்மடிந்துவீழ
நாறுபூங்குழலினாண்மேனனிமயலெழுந்தவேந்தர்
பாரினராசைதோறும்பரிபவந்தொடரவம்மா. 14

பீதிகொண்டரசரெல்லாம்பிறகிடமாயோன்றேர்மேல்
வீதியினெய்தமாதர்விழைவுறக்கண்ணானோக்கி
மாதவன்வடிவினாலேயிமைக்கிலார்மயங்கிநிற்ப
ஏதமிலவந்திமன்னனெதிர்கொளக்கோயில்போந்தான். 15

நவமணியினங்கள்சூழநன்பொனாலிழைத்திலங்கு
முவமையிறாண்களெல்லாமுறவுயர்மண்டபத்தின்
றவர்களெண்சீலமிக்கமித்திரவிந்தைதானுந்
துவரையின்வீரன்றானுந்துலங்கவாதனத்தினுற்றார். 16

நெய்யினாகுதிகள்கர்க்கனிறைத்திடநெடியமாயன்
மெய்யொளிர்பவளம்போன்றமித்திரவிந்தையென்னுந்
தையல்கந்தரத்தின்செங்கைதன்னின்மங்கலநாண்சாத்தி
கையினாற்பொரியும்வீசக்களித்தம்மிமிதித்தாண்மங்கை. 17

வானுயர்வடமீனோக்கிமாயவன்றேவிதன்னோ
டானெய்பாலன்னமாழைக்கலத்தினினமுதுசெய்தே
தேனுறுமலங்கல்சூடிச்சிறந்திடக்கலவைபூசி
மீனுறுங்கொடியோனாணவிழுமியவின்பந்துய்த்தான். 18

நிவந்ததோலயுதமம்பொன்னிறையுமாதேரிரட்டி
சிவந்தவாய்மடவார்நானூறிவுளியோர்கோடிசேரா
மவந்திராசன்றானீயவச்சுதன்றேவிதன்னோ
டுவந்திரதத்தினேறித்துவரையினுற்றான்மாதோ. 19

மின்னிடைப்பவளக்கொம்பாமித்திரவிந்தைதன்னோ
டன்னையர்தாளிற்றாழ்ந்தேயருள்செறிவசுதேவன்றன்
பொன்னடியிறைஞ்சுமாயோன்பொலன்கழற்பணிந்துநின்றாள்
தன்னிகரிலாதசிலவிதர்ப்பர்கோன்றந்தமங்கை. 20

சேடுறுநளினமங்கைசிமந்தகமின்காளிந்தி
யாடகக்கொம்பாஞ்சாம்புவதியன்பாரவந்திராச
னீடியதவத்திற்பெற்றநேரிழையிவர்களின்பங்
கூடவேவசுதேவன்றன்குமரன்வீற்றிருந்தான்மாதோ. 21

மித்திரவிந்தை தேவியார் திருக்கலியாணப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 479.

85 - வது, நாக்கினசித்து தேவியார் திருக்கலியாணப் படலம்.

மாமகமெல்லா நூறிமறைத்தவர்வருந்தத்துய்ய
நாமகள்கொழுநனான நாவிருநயனனாய
பூமகன்மெலியவேதம்பறித்தகல்புணரிபுக்க
சோமுகன்றன்னைச்சேலாய்த்துணித்தவன்புகழைச்சொல்வாம். 1
அவியினால்வேள்விசெய்யுமருந்தவர்மகிழநீளும்
புவியினிற்செங்கோலோச்சிப்புரந்தரன்போலவாண்டு
குவிமுலையார்பல்லாண்டுகூறிடமதிலையநேராங்
கவிகையின்னிழலின்வாழ்வோன்கவுசலராசராசன். 2
அளிமிகவவனியாளுமரசர்கோன்பயந்தபாவை
தளவுறுநகையாளாரத்தனத்தனள்பவளவாயாள்
கிளியெனுமொழியாள்சாபநுதலினாள்கெண்டையொண்கண்
ணளினமின்னெழிலையொப்பாணாக்கினசித்தாமாது. 3
ஆயவளெழிலைநோக்கியரசர்கோனன்புமிக்க
தூயமந்திரிகடன்னோடியம்புவான்றூவியன்னஞ்
சாயவேநடக்கும்வல்லிதாமரைதுறந்ததைய
லாயவென்மகளுக்கொத்தமகுணனாரறைமினென்றான். 4
வேந்தர்கோன்மொழியைக்கேட்டுவேதநூற்பொருள்களெல்லா
மாய்ந்திடுமைச்சர்நோக்கியையவுன்மகளுக்கொத்த
காந்தனைக்காண்கிலோமக்கதமுறுவிடைகளேழுஞ்
சாய்ந்திடப்பொருதுவெல்வான்றையறன்கொழுநனென்றார். 5
உரைசெயக்கேட்டவேந்தனுயர்விடையேழும்வென்ற
வரசனுக்கீவன்யான்றானளித்திடுமின்னையென்றே
முரசறையென்றலோடும்வள்ளுவர்முந்தியெய்தி
தரணியாணிருபர்வாழுநகர்தொறுஞ்சாற்றினாரால். 6
முரசறைந்திடலுமின்மேலாசைகண்முந்தவெய்து
மரசர்களிரதமேறியடற்கரியநீகஞ்சூழக்
கரைசெயற்கரியவன்பிற்கடிதினிற்சென்றுபாரின்
வரிசையார்கவுசலன்றன்மாநகரடைந்தார்மன்னோ. 7
ஆயவையெல்லாங்கேட்டவச்சுதன்றேரினேறி
நேயமாம்விசயனோடுநெடுங்கரியிரதம்வீரர்
பாயுமாவனிகமெல்லாம்பரந்திடவிரைவினெய்தித்
தீமையில்கவுசலன்றன்னகர்தனிற்சேர்ந்தாரன்றே. 8
முரணுறுமரசர்மன்னன்முன்றிலிற்பரவலோடும்
வருணமார்கலன்கள்மெய்யின்வயங்கவானரம்பைநாண

விரணியக்கொம்புபோலவிளங்கிமீமாடமீதின்
றரணியாள்கவுசலன்றன்றனையடானெய்தினின்றாள். 9

அரிவையர்குழாங்கள்சூழவாலவட்டங்கடோன்றத்
தெரிவையர்கவரிவீசத்திருவெனநின்றாடன்னை
விரைவினினரசர்நோக்கிவிழியிமைக்கிலர்கள்பாரின்
வரையுமோவியம்போனின்றார்மயல்பெரிதாகுமன்றே. 10

குளநிறைகொட்டியாம்பன்மலரினைக்குறுகிநோக்கா
தளியலரரவிந்தத்தினமூர்ந்திடவிவர்ந்தபோன்று
நளினமின்னனையநங்கைநோக்கினைசித்துநாட்டம்
வளனுறுவாசுதேவன்வதனத்தின்மடுத்தமாதோ. 11

கண்டனனகையுமெய்தக்களித்திடுமெனத்தளாகி
யண்டர்கடுதிக்குமையனடர்விடையேழுஞ்செற்றே
முண்டகமுகையினேராமுலையின்மீதணையாணுகில்
விண்டலமதிலென்றாவியுறுமெனவெதும்பிச்சோர்ந்தாள். 12

மயலுறுமாதின்மீதுவாசநீர்நிரையவிட்டே
யயில்விலோசனியாரேற்றியரிவிடையேழுஞ்செற்றன்
னியல்புறுகொங்கைமீதினணைகுவனென்றலோடுங்
கயனிகர்கண்ணிதேறிக்கண்ணனைநோக்கிநின்றாள். 13

ஆயதோர்காலைதன்னினரசனேழ்விடையைவிட்டான்
றீயெழவிழித்துச்செல்லுமவரையேசினந்துநோக்கி
யேயெனுமுன்னமெய்தியிடியெனவதிர்த்துக்கோட்டாற்
பாயவேவெருவிமன்னர்பார்மிசைப்பாறினாரால். 14

கடுவிடமெனவேயெய்திக்காவலரோடப்பாய்ந்த
விடையினமெழுந்தன்மேல்வெற்பெனவருதலோடு
நெடியவனுருவேழாகிநின்றொருகணத்தின்முன்னர்
கொடியவேழேற்றின்வாலைப்பற்றியேசுழற்றிக்கொன்றான். 15

ஏழுருவாகிநின்றவிடையினையெதிர்ந்துசெற்ற
பாழியம்புயத்தோளுக்குத்தேவியர்பலரென்றாலுந்
தோழிமீர்கவுசலன்றன்றனியறப்பெற்றுவந்த
வேழைதோளொருவனென்றுமிவனெனவறைந்தார்மாதோ. 16

அந்தரத்தமரர்போற்றியாடகமலர்கவே
நந்துதுந்துமிகளார்ப்பநான்மறையோர்கள்வாழ்த்தச்
சுந்தரவிமானமீதிற்றுலங்கிடவானிற்றோன்று
மிந்துநேர்வதனிகையாலலங்கலையெய்தாளம்மா. 17

அரியுறுமலங்கறன்னையரிவைசேரிதன்மார்பிற்
சரியுறுகரத்தால்வாங்கியெறிந்திடுஞ்சதுரைநோக்கி
வரிநெடுங்கண்ணார்சிந்தைமகிழ்ந்தனர்மாயோன்றானுந்
திருவுளமகிழ்ந்துநின்றான்றேவர்துந்துமிகளார்ப்ப. 18

அறனுறுங்கவுசலக்கோனன்பெனுங்கடலினாழ்ந்து
மறையவர்சூழவேயிமாயனைத்தழீஇக்கொண்டேகிக்
குறைவிலாமரகதத்தூண்கோலமார்மண்டபத்தி
னெறியுறுமுனிவர்சூழநேமியோனுடனுஞ்சென்றான். 19

ஆரமாமணியொண்ணீலமணியுறுமாலையெண்ணில்
வேரிமாமலர்கொள்மாலைவிளங்கிடச்சூழநாற்றி
நேரிலாவரிகளேந்துமாதனமீதினீளும்
வாரிமேலிலங்குவானுமங்கையுமிருந்தார்மன்னோ. 20

பங்கயன்போன்றகர்க்கன்பரிவினுருதிகள்செய்யக்
கங்கையேதிகழ்பாதத்தன்கவுசலராசன்பெற்ற
மங்கைதன்கந்தரத்தின்மங்கலநாணேச்சாத்தி
யங்கியைவலமாய்வந்தான்றாள்பிடித்தம்மிவைத்தான். 21

அரிவைதன்னுடனேமாயனருந்ததிகண்டபின்னர்
நிரைமணியரிவாணத்தினிறையுமோதனம்பாற்றேக்கித்
தெரிமலர்சூடிநானங்கமழ்ந்திடச்செம்பொற்சேக்கை
யிருவருமெய்தியின்பக்கடலிடையிருந்தாரன்றே. 22

ஆனிரையயுதமின்னேரிடையினாராயிரம்பேர்
மானவகோடிவீரர்மற்றதிண்கரிமடங்கோ
டீனமிலிரதமெண்ணூறாயிரமீந்தானென்று
றூனுறவேல்கொள்கையான்கவுசலனுவந்துமன்னோ. 23

ஊக்கமார்கவுசலக்கோனீந்திடவுவந்துமாயோ
னாக்கினசித்தினோடுநலனுறுமிரதமேறிக்
கோக்குலவீரர்சூழவருங்குந்திசுதனோடன்பு
நீக்கமினெஞ்சனாகிநெறியிடையேகுமெல்லை. 24

விடைகளின்வெருவியோமென்னர்கள்மீண்டேயன்ன
நடையினண்மீதினாசைநண்ணிட்டுநெறியிலாதார்
கொடியுறுமிரதங்கைமாக்குரகதம்வீரர்சூழக்
கடகளிறட்டான்றன்னைவளைந்துவெங்கணைபெய்தார்த்தார். 25

அன்னதுகண்டுபார்த்தனழகியகாண்டீபத்தைத்
தன்னெழிற்கரத்தின்வாங்கிவளைத்துயர்சாயகங்க
ளொன்னியகரிதேர்வீரர்துரகதமடியமாரி
மின்னியேபொழிந்தாற்போலச்சொரிந்தனன்விண்டிக்கெல்லாம்.

தேரறக்கொடியுமற்றசிரமறமுடியுமற்ற
மார்பறத்தாளுமற்றவளையறமுழக்கமற்ற
வேரறக்கலன்களற்றகுரமறவிவுளியற்ற
வாரறப்பேரியற்றமதமறவுற்றனமம்மா. 27

எழுந்தனதலைகள்வானினிடைவிடாதாக்கைமண்மேல்
விழுந்தனவரைகள்போலவிஞ்சியகுருதிவெள்ளத்

தழுந்தியவிரதமெல்லாமயங்கரியுடல்களற்றே
கழுந்தகளொருவைபோன் றக்கவந்தங்கண்டிக்கும்வானின். 28

இந்திரன்சிறுவன்வாளிதொடுக்கவொன்றேவப்பத்தா
வந்தரமிசையினூருவவர்கண்மேலனந்தமாகித்
தந்தியையறுத்துமாவினுடல்களைத்தரித்துவீரர்
கந்தரந்துணித்துப்பாருட்செல்லுங்கட்செவியையேல. 29

விசையனெய்விசிகந்தன்னுல்வீந்தவெம்பரிகடோலின்
றசையுறுகுருதியாருய்த்தரணியினேடநீளும்
வசையுறமன்னரெல்லாமணிநெடுந்தேரைவிட்டுத்
திசைதொறும்புறிஞர்கடேவர்கடுதிப்பமன்னே. 30

வரிசிலைவிசயன்வாங்கிவாளிகள்பொழியமன்னர்
வெருவியாண்டோடநோக்கிவிமலன்புன்முறுவல்செய்தே
தருமலர்பொழியவானேர்சங்குபேரிகைகளார்ப்ப
விரைவினிற்றுவரையின்கண்மின்னுடனேகினுனல். 31

சூரசேனன்சேய்தாளிற்றுயநாக்கினசித்தோடு
மாரியன்வணங்கித்தாயரடியிணையிறைஞ்சலோடு
மாரனையருளுமாதுமங்கையருடன்ருள்வீழ
வேருறவவர்களோடுமின்பமோடிருந்தானன்றே. 32

நாக்கினசித்து தேவியார் திருக்கலியாணப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - 511.

86-வது, பத்திரை தேவியார் திருக்கலியாணப் படலம்.

மத்திரவரசர்கோன்பயந்தமாதவப்
பத்திரையுள்குமுன்பசும்பொற்றேரின்மேற்
சித்தசன்சமிக்கமுன்றோன் றிச்சார்ந்தருள்
வித்தகனெனநினைவினைகள்பாறவே. 1

வேறு.

சுத்தமாமறைகள்சாங்கியத்தின்றெல்பொருள்
கைத்தலக்கனியெனக்காணுங்காட்சியா
னத்துறுவயல்செறிநாட்டையாள்கின்ற
மத்திரன்குலத்திலுட்சுரதகீர்த்திமன். 2

அன்னவன்பயந்தனன்னமென்னடை
மின்னிடைகழைகடோளயில்விலோசனங்
கன்னறேன்மொழிகவின்பூகங்கந்தர
மென்னவேயிலங்கியவெழில்கொள்பத்திரை. 3

ஓதவேழிசையெலாங்கிளத்துமஞ்சுகர்
நீதிலாவுயர்புராணங்கள்சேரவே
யோதியங்குயர்ந்தசிற்பொருளையுன்னியே
மாதவனுதியென்றுணருமாமயில். 4

தூயமாமதுரையிற்றோன்றிக்கங்குலி
ஞயர்நாயகன்மனையணுகியெய்தியே
பேயொடுசகடமாசுகம்பெகங்கன்று
நீயவேவதைத்தமால்செயலையுன்னுவாள். 5

தனுவினைமுரித்ததுங்கரியைச்சாய்த்ததுஞ்
சினமலிமல்லரைத்தரையிற்றேய்த்ததும்
வினையுறுகஞ்சனைவென்றவீரமு
மினியநல்வீணையினிசையப்பாடுவாள். 6

செருவினைவென்றுருப்பிணியைச்சேர்ந்தது
மிரவிநேர்மணியொடுமெண்கனிந்திடு
மரிவையோடமர்ந்ததுமலரிக்கன்பனு
நிருபர்கோனளித்தநேரிழையையுற்றதும். 7

என்றருள்காளிந்தியற்றுமாதவ
நன்றெனமொழிந்தவணகிலைச்சேர்ந்தது
மன்றமர்செய்துவென்றவந்திமன்றரு
மன்றலர்குழலிதோளணைந்தவண்மையும். 8

விலங்கல்போலெதிர்ந்துமேலடர்ந்தவேற்றினங்
கலங்கவால்பிடித்திழுத்தறைந்தகாலையி
னலங்கலந்தோளின்மீதெறிந்தவாயிழை
யிலங்கவேயணைத்ததுமெண்ணிச்சோர்குவாள். 9

முடிமுகில்பிறைநுதன்முளரிசெங்கண்க
ளடியிடைதோள்கரமதரமார்புய
வடிவெலாங்கவினுறவரைந்துமாட்சியாம்
படமுறநோக்கியேபகருவாளரோ. 10

கருமுகிலனையநின்னுருவங்கண்டியா
னுருகிமெயலறவுற்றணைத்தெனை
மருவவிவ்வோவியவடிவமாகவே
யரியெனையணைத்தியென்றயருமெல்லையின். 11

கோடுயராழிகைதிகழக்கொண்டல்போ
லாடகவாடையுமணிந்துபங்கயக்
காடெனக்கண்கள்வாயுந்திகால்கர
மோடுறத்தோன்றினன்முராரிமாதுமுன். 12

கண்டனளிருகணீர்கலுழவாரமு
துண்டவளெனவுடற்றடிப்பவேயுவங்

தண்டமுண்டருளியவையன்றாளினில்
முண்டகவதனமின்பணிந்துமுன்னின்றான். 13

நயனநீருறமயிர்பொடிப்பநாரமுற்
றியல்புறவிறைஞ்சியாண்டெழுந்தமங்கைதன்
மயலறவரிதிருமார்பினாற்றணைத்
தயமுறுதேரின்மீதமர்ந்துதோன்றினான். 14

பத்திரைதன்னுடன்பயோததிக்குளி
னித்திரைதுறந்தமானெறியினேகியே
சுத்தநன்மலர்மழைசுரர்கடூவநீ
ளத்திருந்துவரையினணுகினரோ. 15

முத்தினமரகதம்வயிரமொப்பமா
வித்துருமங்களால்விளங்குதூணணி
வைத்துயர்விதானமீவயங்கவேதிகழ்
சித்திரநிறைந்தமண்டபத்திற்சேருற. 16

தாமமோடாடியதரளமாலையின்
காமரோங்கிடநிறைகமலம்பூத்தபோல்
வாமமேகலையர்வண்டீபமேந்திட
வேமமார்மடங்கல்களிலக்குபீடமேல். 17

யாதவன்பத்திரையுடனிலங்கிட
மாதவக்கர்க்கன்வந்தெய்திமாமறை
யோதிநெய்யனல்விளைத்தோமஞ்செய்யநற்
கோதையர்மகிழ்ந்துபல்லாண்டுகூறினர். 18

பாவையர்மகிழ்ந்திடப்பணிலமூதவே
மாவின்வாய்பிளந்துபுட்கிழித்தமாதவச்
சேவகன்மங்கலநாணைச்செங்கையாற்
காவிசேர்நயனிகந்தரத்தணிந்தனன். 19

பாவகன்றனைவலம்வந்துபாரினின்
மேவியவம்மிமின்மிதித்துவிண்மிசை
தாவியவருந்ததிநோக்கத்தண்மலர்
தூவினரமரர்துந்துமிமுழங்கவே. 20

சிந்தையின்மகிழ்ந்தரிதேவிதன்னுடன்
தந்தையைவணங்கிநற்றாயர்தாடொழு
திந்துவின்வண்ணனையிறைஞ்சினன்றன்முன்
வந்தடிபணிந்தனள்விதர்ப்பன்மாமகள். 21

சித்தசன்றனைத்தருதேவிபாதத்தின்
பத்திரைவணங்கியபின்னர்ப்பாற்கட
லத்தனோடோதனமருந்திச்சேக்கையுண்
மெத்தையினெய்தியேவிளங்கினளரோ. 22

நானமொண்ணிமசலகல்லகுங்கும
மேனியிற்கமழவெழில்ரதிவெள்கிடத்
தேனெடுபோல்சொரிந்தென்னச்சிதரன்
மானகுகயனிதன்ஞெமெகிழ்ந்தனன். 23

குண்டினபுரத்துறுகோதைதன்னுட
ஞெண்டொடியார்மிகவுவந்துசூழ்ந்திடக்
கொண்டன்மின்குழாமொடுகூடச்சேர்ந்தபோன்
மண்டபத்திருந்தனன்மாயன்ருனரோ. 24

பத்திரையார் திருக்கலியாணப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 535.

---

87 - வது, இலக்கணை தேவியார் திருக்கலியாணப் படலம்.

ஞாலமெண்பத்திரனகரமெய்தியே
வேலொளிர்விசயனெய்விசிகந்தப்பிய
சேலறவெய்திலக்கணையைச்சேர்தருண்
மாலடிதொழுதிரும்பிறவிமாயவே. 1

வேறு.

சிருறுநெறிநால்வேதந்திங்கண்மும்மாரியெல்லாம்
பாரினினிறையவாழும்பத்திராசன்மைந்தன்
பேரியல்புடையவீரனுகியபிரகசேன
னேருறப்பயந்தநங்கையிலக்கணையென்பாண்மன்னே. 2

கழையிணைநிகராந்தோளாள்காந்தளைநிகராங்கையா
ளுழைநிகர்விழியாடுவியோதிமநடையினுள்சி
ரிழைநிகரிடையாள்செம்மையிலவைநேரதரத்தாள்வான்
மழைமுகினிகராமோதிவளைவினேர்புருவமங்கை. 3

பங்கயமுகையைப்போன்றபயோதரிபாரின்மேவுங்
கங்கையின்சுழியையமானக்கவின்கொளுமுந்தியாள்பொற்
சங்கமாம்பூகநாணத்தரளமார்கந்தரத்தாள்
மங்கையர்திலகந்தாவிளக்கெனவயங்குமாது. 4

இயல்புறுபுராணமாறுசாத்திரமிவைகளெல்லாங்
குயின்மொழியணங்குணடாளேநிமைக்கொண்டல்வண்ணன்
கயலுறுகடலையோவிக்காசினியெய்திவெண்ணெ
யயிலுவோன்செயலையுன்னிமயலெழவணையிற்சோர்ந்தாள். 5

அலக்கணுற்றயர்ந்துபஞ்சவணையின்மீதயர்ந்துவீழ்ந்த
விலக்கணைதன்னைமாதரிருகையாலெடுத்தணைத்துக்

கலக்கமுற்றிமசலத்தைவிடவிழித்தெழுந்தாள்கன்னி
துலக்குநல்லோவியந்தானுயிர்பெற்றதூய்மைபோல. 6

அரியுறமிழுதுபோன்மெய்யுருகிடவனங்கன்சாபத்
தரியுறநாணைவாங்கிவிடுத்தவாசுகங்களுள்ள
மரியவேநொந்துமாலாமளக்கரினமுந்தித்தூய
வரிசெயறன்னையுள்கியிலக்கணையலைறகின்றாளால். 7

நீநிலாச்சுகந்தங்கொண்டுசெறிந்திடுங்கூனிதன்னை
யேதமிலரம்பைநாணுமியல்புடையுருவமாக்கி
மாதவப்பத்திரைத்தேன்வரையுமோவியற்றிற்றேன்றுஞ்
சீதரவடியேன்றன்னைச்சேர்ந்திடர்நீர்த்தியென்றாள். 8

நந்தொளிர்திகிரிசார்ங்கநலந்திகழ்கதைவாளோங்க
வுந்திசால்கைகண்செவ்வாயொளிர்நளினங்கள்பூத்த
கந்தரம்போன்றுநோக்குமிடந்தொறுங்காணநின்றே
யிந்திரசாலஞ்செய்தானிவனெனவியம்பிச்சோர்ந்தாள். 9

பத்திரராசன்பெற்றபனிமொழிசோரக்கண்டே
கைத்தலநெரித்துமாதர்கண்கணீர்கலுழவந்து
சுத்தவொண்பனிநீர்மெய்யிற்சொரிந்தெடுத்தணைக்கத்தேற
முத்தமிதன்னைநோக்கித்துணைவியருரைக்கலுற்றார். 10

கருங்கல்லையரிவையாக்கிக்கடிபொழிலிலங்கைக்கெய்தக்
குரங்கலையுவரிகட்டநிருதனைமுன்னாட்கொன்றான்
வருங்கலைநிறைந்தவிந்துவதனத்தாய்வாடியுள்ள
மிரங்கலையென்றுகூறத்தேறிமின்னிருக்குங்காலை. 11

மனுவெனச்செங்கோலோச்சிவாழ்கின்றபத்திரக்கோன்
றனியுறுதவத்திற்பெற்றவிலக்கணைதன்னைத்தூய
தனுவளைத்திலங்குகின்றசலசரமெய்தார்க்கீவ
னெனமுரசறைமினென்றானிகரிலாமன்னன்மாதோ. 12

அரசனீதறையக்கேட்டவள்ளுவரவனியெங்கு
முரசறைந்துரைத்தலோடுமுடியொளிர்வேந்தரெல்லாம்
புரைசெயார்கரிதேர்வீரர்புடைவரவிக்களெல்லாம்
பிரசமேநாடிச்செல்லும்பெற்றிபோனகரிசேர்ந்தார். 13

பத்திரவரசர்கோமான்பயந்திடவிலங்குகின்ற
வித்துருமத்தின்கொம்புபோன்றமின்னிடையினுடன்
கைத்தலம்பற்றிவேட்கக்கருதியேயிரதமீதி
னுத்தவனுடனுமாயோனுவந்துமாநகரிசேர்ந்தான். 14

நவமணித்தூண்கள்சேரநலனுறுமண்டபத்தி
னவனியினரசரெல்லாமாடையாபரணந்தோன்றக்
கவிகைகள்மதிபோலெங்குங்கவினுறவிருப்பவேதான்
புவியையீரடியாற்கொண்டோன்புகுந்துவீற்றிருந்தான்மன்னே. 15

துன்னியநவமணித்தூண்இலங்கியமண்டபத்திற்
பொன்னெடுவரையைப்போன்றவில்லினைப்புவியின்வைத்து
மின்மணித்தாழிதன்னுட்டோன்றுமமீனைச்சுட்டி
நன்னிலவரசர்க்காங்கேபத்திரனவிலனுற்றான். 16

இருநிலத்துயர்ந்தவில்லையெடுத்தெழினாணையேற்றி
யொருகணைதொடுத்துநீருளுலாவியகயலையெய்தா
னருவினையொருவியான்றானளித்திடுமெழகான்மிக்க
தெரிவைதன்மகுணனென்றுசெப்பினான்பிரகரசேனன். 17

அன்னதோர்காலைதன்னினடையினாலன்னநாணக்
கன்னல்கோங்கரும்புபூகங்கந்தரம்வள்ளைகாந்தள்
மின்னயிலாரமாம்பல்குமிழ்பிறைவில்லிதெல்லாந்
துன்னுமாடகக்கொம்பேபோலங்கவைதோன்றவந்தாள். 18

மொழியினாற்குயில்கணாணமுகத்தினாலிந்துநாண
விழியினாலுழைகணாணவிடையினான்மின்னுநாணக்
குழையினால்வள்ளைநாணக்கொங்கையாற்குரும்பைநாண
வழகினாலரம்பைநாணவரசர்கண்மயங்கவந்தாள். 19

பரிபுரமரற்றப்பாதசாலமும்வயங்கிக்காட்டத்
தெரிமணிக்கலாபமின்னச்சிறந்தபொற்கலிங்கந்தோன்ற
விருகரவளையிலங்கவெழின்முலையாரமாடச்
சுரிகுழலணியுமாடத்தோடுகொதாடவந்தாள். 20

அரிமலரலங்கல்கையினழகுறவெய்தித்தோன்றுந்
தெரிவையைநோக்கிமன்னர்சித்திரம்போலநின்றார்
கருமுகில்வண்ணமாலைக்கண்டிலக்கணையாங்கோதை
இருகணோடாவிசிந்தையவன்வயினெய்தநின்றாள். 21

மாரன்விற்காற்றாராகிமகதர்கோன்றந்தமைந்தன்
வீரரெண்விசயனங்கன்சேதிபன்முதலாம்வீரர்
பாரின்வில்லெடுத்துநாரியேற்றியேபகழிதன்னால்
நாரமுண்மயிலையெய்துபழுதுறநாணமுற்றார். 22

வீரியர்கையில்வாளிபழுதுறவெள்கிநிற்ப
ஆரியன்சிலைநாணேற்றியாசுகந்தொடுத்துத்தாழி
நீரினுணோக்கிவாளியெய்திடநெடுமீனற்றுப்
பாரினில்வீழத்தேவர்பன்மலர்தூவியார்த்தார். 23

சங்குமாபணவம்பேரிசச்சரிதழங்கப்பாரி
னெங்குநான்மறையோரேத்தவிலங்குமாதவன்றன்றோளிற்
பங்கயத்திருநேரானவிலக்கணைபரிவினாலே
வங்கையினலங்கறன்னையணிந்தனளமரர்வாழ்த்த. 24

சேலறவெய்துநின்றதிருமகள்கணவனான
மாலுடன்மறையோர்சூழப்பத்திரமன்னன்மாசி

ளிலமாம்வயிரம்பச்சைமரகதகித்திலஞ்சிர்
கோலமாமணியார்தூண்கள்கொண்டமண்டபத்திற்புக்கான். 25

சாதிபுண்டரிகம்வெட்சிதளவுகல்லாரம்வல்ல
சோதிசெய்மாலைநாலநவமணிக்கோவைதோன்றக்
கோதயர்நிபமேந்திக்குலவுமண்டபத்தின்மீதின்
வேதியர்முனிவர்வேந்தரிவையர்மிடைந்தார்மாதோ. 26

அலரியின்சுடரைக்காட்டுமெவிர்மணியாதனத்தி
னிலகியநீலந்தன்னொடெழின்மணியமைந்ததென்ன
வுலகயின்மாயவன்றானிலக்கணையுடனீள்பாரி
னலனுறவீற்றிருந்தானாகர்கடுதிப்பமன்னோ. 27

கரதலாமலகம்போலவேதநூல்காட்டுஞ்சொல்லின்
சரதநான்மறையோர்சூழத்தவமுயர்கர்க்கனெய்திச்
சுருதியான்மொழிந்ததுய்யகும்பமுந்தலங்கவைத்தே
அரிதிருக்கையின்மங்கைகரத்தினிலணிந்தான்காப்பு. 28

மந்திரநவின்றுநெய்யினாகுதிவழங்கவன்பின்
குந்திதன்முன்னோன்மைந்தன்மங்கலநாண்கைக்கொண்டே
யிந்துநேர்வதனியானவிலக்கணையென்னுமாதின்
கந்தரந்திகழச்சாத்தக்கம்பினங்கரங்கிற்றம்மா. 29

வன்னியைவலம்வந்தெய்திமாதம்மிமிதித்தலோடும்
தன்னிகரிலாதமாயோன்றேவியுந்தானுமாக
மின்னியவடமீன்றன்னைவியந்துறநோக்கிநிற்பத்
துன்னுநான்மறையோராசிசொல்லியேதுதித்தாரம்மா. 30

அம்பொனின்கலத்தினெய்பாலன்னமோடருந்தியேதா
னும்பலின்கோட்டின்சேக்கையுற்றரிதிருவுமெய்த
வம்பவிழ்மாலைசூடிமணங்கமழ்கலவைகோட்டி
யிம்பரிற்சுரதநூலின்பமுற்றிருந்தானன்றே. 31

வேறு.

கரியினிற்றொகையெழுபதினாயிரங்கலினப்
பரிகண்மற்றதின்சதமடங்கவற்றினிற்பாதி
யிரதம்வாளயில்வீரர்களேழிருகோடி
யரிவைமார்களோராயிரம்பத்திரனளித்தான். 32

பத்திரனிவையளித்தலும்பரமனுமுவந்தே
சித்திரமுயிர்பெற்றதொத்தனையதேன்மொழியோ
டுத்தவனுடன்றாருகன்கொணர்ந்ததேருற்றா
மைத்துனனெனும்விசயனுடனேகினன்மகிழ்ந்தே. 33

ருகரங்கரிசூழ்ந்திடும்பழுவத்தைக்கடந்து
கோரஞ்செறிதிரையின்மேற்றிமிங்கலம்பாயுஞ்

சாகரமகழாகியதுவரையிற்சார்ந்தான்
சேகரம்மிசைக்கிரீடமாமணிதிகழ்ந்திடவே. 34

மாயன்றேவியோடெய்திநற்றந்தையைவணங்கி
தாயர்தங்களையிறைஞ்சிமுன்னோனடிதாழ
நேயநீடியவுருப்பிணிநெடியவன்றாளிற்
றூயதண்மலர்தூவியேபணிந்தனலெங்க. 35

மாதவன்றனைத்தொழுதெழுமுருப்பிணிமங்கை
பாதமீதின்னிலக்கணைபரிவுடன்பணிய
வாதரத்துடனணைத்துளமகிழ்ந்தனள்விதர்ப்பன்
கோதையாகியகுண்டினபுரதெழிற்கொம்பு. 36

சித்தசன்றனைத்தருமவள்சிறந்தசாம்புவதி
சத்திராசித்தன்றனையள்காளிந்தியாந்தையல்
மத்திரன்கொடிநாக்கினசித்துமாவிந்தை
பத்திரன்மகள்சூழ்ந்திடப்பரமன்வீற்றிருந்தான். 37

இலக்கணை தேவியார் திருக்கலியாணப் படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் – 572.

88 - வது, நரகாசுரன் வதைப் படலம்.

எரிமலைவாரிமாருதங்காணுயுதமயமெழுவகைமதிலு
முரனொடுநெடியநரகனைவதைத்தேயவன்சுதன்முடிபெறவருளி
யரசர்தஞ்சிறைவிட்டவர்கடாம்பயந்தவமிர்தகீதத்தியாழறிந்த
தெரிவையர்பதினாறாயிரம்பேரைமணஞ்செய்ததேவனைத்துதிப்பாம். 1

முரனுடனீரேழுலகுளோரஞ்சமூடிகியெண்டிசைகளைவென்ற
விரணியநயனன்றனைவதைத்துயர்ந்தவெண்கணான்வலாரியோடேத்தத்
தரணியையெயிற்றாலிடந்தருள்வராகமூர்த்திதன்வேர்வினிற்சனித்த
வருணயமில்லாநரகனெண்பிராக்குச்சோதிடபுரத்திடையமர்ந்தான். 2

நீலமொண்டரளமணிமரகதங்கணிறைந்திமொடகோபுரங்கண்
மேலவன்பதத்தினுயர்ந்திடவயங்கும்வீதிகோபுரத்தினின்விளங்கக்
காலயந்தேயுக்கான்வரைநாரங்கணையுடனெழுவகையெயிலுங்
கோலமுற்றிடவேவளைந்திடக்கரிமாவீரர்தேர்குரகதநிறைய. 3

வரனுறுமுரன்றன்னமைச்சனாய்வயங்கமற்றவன்சுதரெழுவோர்கள்
கரிபரியிரதந்துவாதசக்குரோணிசேனைக்குங்காவலராக
வருணனோடியமன்குபேரனைவென்றுமறமுறுநரகன்வானவர்கோன்
வெருவவெண்கவிகைமணிவரையதிதிகுண்டலம்விரைவினிற்பறித்தான்

அரசர்கள்பதினாறாயிரத்தவரையருஞ்சிறையிருத்தியேயவர்தா
மிருநிலம்வயங்கப்பயந்தகன்னியர்களெண்ணிரண்டாயிரத்தவரைச்

சுரருலகியங்குமரம்பையர்முதலோர்தும்புருநாரதர்நாணச்
சரியிலாக்கீதம்பயிற்றுவித்தனனாற்சதமகன்கவிகையைப்பறித்தான். 5

அடுஞ்சினநரகாசுரனிடுஞ்சிறையினழுந்தியவரசர்களொருங்கங்
கொடுங்கியேயுலர்ந்தேயுழல்பவரெம்மைச்சிறைவிடுத்துதவுதியென்னக்
கடஞ்செறிகரியைக்காத்தருளரிபாற்கடுகியேதூதரையேவத்
தடஞ்செறிதுவரையடைந்தரிமுனரினிருபர்சொற்சாற்றினரன்றே. 6

மன்னவர்விடுத்ததூதுவருரையைவாசுதேவப்பிரான்கேட்டே
இன்னல்செய்நரகாசுரன்றனைவதைக்கவெண்ணிவானிமையவர்போற்றப்
பன்னகப்பகைஞன்றோண்மிசையதனிற்பண்மொழிச்சத்தியபாமை
தன்னுடன்விரைவிற்சென்றனன்கவிகைதயங்கிடச்சாமரைபுரள. 7

துலங்கியபிராக்குச்சோதிடபுரத்தைச்சூழ்ந்திடும்புரிசைமாவரையை
யிலங்கியகவுமோதகக்கதையதனாலிமைப்பொழுதினிற்றுகளாக்கிச்
சலங்சனலயங்காலெயில்களைத்திகிரிதன்னினாலறுத்துயர்வாளால் [ன்
விலங்கல்சால்பழுவமழித்தொருகணையால்விசிகமாமதிலினைச்சிதைத்தா

எழிலிமீதுயர்ந்தவெழுவகைமதிலுமிமைப்பின்முன்னழிந்துயரண்டங்
கிழிபடுகாலமடர்ந்ததென்றிமையோரயிர்த்திடக்கிரிகளுமசைய
விழிதழலுறவேபுவியினைத்தாங்குஞ்சேடனுமிடியெனவெருவக் [மான்.
குழலிசைவாயாற்பாஞ்சசன்னியங்கைக்கொண்டவன்முழக்கினன்கோ

வேறு.

அரிகலுழனின்மிசயனநடையாளொடுமணுகியவ்வெயிலேழு
மொருநொடியிடுமுனமழிவுசெய்துயர்வளையூதியவொலிகேளா
விருநிலனயசிறைநதியினுண்மாமுரனிறுதியினுறுமேற்றி
னரனெனவைமுகமிலகவயங்கியவயில்கொடெதிர்ந்தனனால். 10

அவனியதிர்ந்திடவமரர்களஞ்சிடவார்த்தெதிர்சூலத்தா
லுவணன்மெய்குருதிகளொழுகிடவான்மிசையுரனொடுருத்தலுமே
சிவனிடர்களையரியிருகணைகொடுவெருதினகரனவிரேபோற்
பவமுறுமுரனிருகையினமரயிறுகள்படவுடற்றினன்மாதோ. 11

அயிறுகடாமுரனடுசினமொடுவிடுமளவியகதைதானு
மியல்புடையரிகவுமோதகமோதிடவெணில்பலகூறுகக்
கயிலையினரனுதல்விழியுறுகனல்விளைகதமொடுதேரேறிப் [ன்.
புயல்பொழிமழையெனவரிவிலொடுயர்கணைபுனிதன்மெய்யினிலெய்தா

வேறு.

முரன்விடுத்தகணையிறுதிக்காலமழையேயவெங்கணுமுடுக்கியே
திரிபுரத்தினையெரித்ததேவனும்வெருக்கொளத்திசைகண்மூடவான்
சுரர்திகைத்தலறியோடவாரியனல்சூழும்வெம்மையதுகண்டுயர்
வரைகவித்துவருடந்தடுத்தவிறைவரிவில்வாளிகொடுமொற்றினான். 13

நீசனானமுரன்முனிந்துதாசனனெடும்படைக்கலம்விடுத்திட
வாசைவாரியுயரண்டமுற்றுமழல்விஞ்சிலேகர்திரளஞ்சியே

நாசமாமுலகமென்றுநைந்துமெய்நடுங்கவேவருதல்கண்டெழில்
வாசுதேவன்வரிவில்லினாலிரவிவாளிவிட்டவையறுத்தனன். 14

நகாயுதம்மெனமுனிந்துவாளவுணனஞ்சுவிஞ்சவுமிழ்சஞ்சுகி
மகாயுதந்தனைவிடுக்கவானவர்களஞ்சவந்தடரவுணனுங்
ககாயுதந்தனையுலோகபாரணனிமைப்பின்முன்கடவவிசையிற்பஞ்
சகாயுதாசனனையொத்தறைந்திடவெரிந்தமாசுடிகையரவமே. 15

கறைமிடற்றரன்வெருக்கொளக்கடியகார்முகம்வளையவேமுரன்
மறலிதன்படைவிடுப்பமாதவர்களிரியவெண்டிசையின்வைகிடுங்
கறையடிக்குலநடுங்கவேவருதல்கண்டுமாயன்விபுதர்க்கெலா
மிறைவன்வெங்கணைகடாவியேயவையறுத்தனன்முனிவர்வாழ்த்தவே.

வேறு.

வானேறெனவெதிர்த்தேமுரன்வரிவிற்கொடுகொன்றைப்
பூனாறியகடையோன்படைகடவப்புகையெரியாய்
மீனாறியகடல்வற்றிடவரவாவினம்விளங்கக்
கானாறிடைத்திரிவோனரன்கணையாலவைகளைந்தான். 17

முரன்விட்டிடுபடைமுற்றவுமுறியச்சினமுதிரா
வரிவிற்கடிதிரண்டாம்பிறைமானக்கையின்வளையா
வரிசத்தியவாமைக்கொடியருணர்க்கிளையவனி
டரணிக்கணிற்றெரியாவகைசரமாரிகள்பொழிந்தான். 18

வேறு.

கடியவன்விடுசரமழையுறவுயரகணைசிலைகொடுவிட்டே
மிடலொடுபெரிதியைநிகரெனவொளிவிடுதிகிரியைவிடலோடு
முடியொளிரைந்துகம்மறமுரன்மடிதலுமுனிவர்கடுதிசெய்தே
நடமிடவமரர்கள்கடிமலருதவினரவனியினலனெய்த. 19

முரனருள்புதல்வர்விபாவசுவசுசிரவணன்முகினிறமாய
வருணனுடன்போதாமிரனந்தரீக்கன்னறநெறியில்லா
வெரிகணன்பவனச்சுவன்முதலாகியவெழுவர்களுயர்சேனைக்
குரியவனாகியபிடனோடனிகமுற்க்கணைபெய்தார்த்தார். 20

துந்துமிமுரசமுழங்கினசங்குகறங்கினதுவசங்க
ளந்தரமுறவிரதங்களடைந்தனவயநிரைபடிமிடையத்
தந்திகள்கடலெனநிறையவல்வீரர்கள்சாயகம்விட்டெதிரே
வந்துயர்வேலையில்வாண்மழுக்குந்தமெறிந்துவளைத்தனரால். 21

கரிபரியிரதமொடனிகம்வளைந்தெழுகடலெனவடர்தலுமே
யரிகணைபெய்திடவிபவணியற்றனவயநிரையற்றனவா
லூரனுடைவயவர்மடிந்தனர்செம்புனலோடியவாறெனநீ
டரையினினலகைகள்சுற்றநடித்தனதாவுகவந்தமரோ. 22

கொடிகுடையற்றனசவரிகளற்றனகுரகதமற்றனவாற்
கடகரியற்றனவரிசிலையற்றனகரமுரமற்றிடவே

வடவரையிற்றெனவவுணர்படிக்கணின்மடியவுடற்குருதி
கடலிடையுற்றனவலகைநடித்தனகழுதுகள்சுற்றிடவே. 23

மறலியெனக்கரிபரியிரதத்திடைமலையவுணத்திரளோர்
பறைகளடித்திடவிடுபகழித்திரள்படியினிடைத்துகளாய்
நிறையமுடித்தலையுருளவிபத்திரனெடியகரத்துடனே
மறியவடிக்கணைதிசைதொறும்விட்டனன்மலர்மகளுக்கினியான். 24

இவுளிகளற்றிடவலவனுமற்றனனிரதமுமிற்றிடவே
துவசமுமற்றனவரிசிலையிற்றனதொடுகணையிற்றிடவே
யவுணர்களிற்றனர்மதகரியற்றனவலகைநடித்திடநீ
ளுவரியிலுற்றனநிறைகுருதிப்புனலுலகயில்வோன்கணையால். 25

வீடியவிபநிரையிவுளிகளெண்ணிலவிடமெனவடரவுணர்
நீடியவரையெனவுடல்விழவெயிறுகள்பிறையெனநிலனுறவே
கேடகமறவிருகரமறமுடிமணிகிளரொளிவானமெலா
மூடிடவோடினகுருதிகண்மாயவன்முடுகியநீள்கணையால். 26

மலர்மகளுயகன்வரிசிலையால்விடுவாளிமிடைந்திடலுங்
கலனொடுமொர்பிருகரமலரதோடலைகால்கடுணிந்திடவே
மலையெனவீழ்மதவிபநிரையிவுளிகண்மாளமலைந்திடுவோ
ருலவையறைந்திடவுவரிகிழிந்தெனவோடினர்வாடியரோ. 27

அரிசிலைகொடுவிடுகணையினிலவுணர்களமரின்மடிந்திடலும்
வெருவியுடைந்திடுமெசுரரையஞ்சன்மினென்றுவிளம்பியுயர்
முரனருள்சிறுவன்விபாவசுவெஞ்சினமுடுகிடவையமிசைச்
சுரர்பயமெய்திடவேநெடுவாளிசொரிந்தனன்வில்லினரோ. 28

ஈரமிலாமுரன்மகன்விடுகணையறயாதவர்தம்பெருமான்
கோரநெடுஞ்சரமெய்தழல்வாளிகுறித்தவன்மேல்விடலும்
வாரிகலங்கிடமதிகனலுற்றிடவடவையுமஞ்சிடமா
வீரவிபாவசுசென்னியறுத்தனன்விபுதர்நடித்திடவே. 29

அசுரர்நடுங்கிடவிபாவசுமாண்டமைகண்டழல்வெஞ்சினனாய்
வசுநிகரற்றதோர்தேர்மிசையேவடவெற்பெனவந்திறுதிச்
சுசியெனவாசுகமாரிசொரிந்துயர்சுரர்கணடுங்கிடவே
சசிதரனஞ்சவருச்சுனமாகியசங்கமுழக்கினனால். 30

திசைதிசைநிறையமுரன்சுதனேவுசிலீமுகமாரியெலாம்
நிசிகனலொளியனலுறுசெயலாமெனநேமிதரித்தபிரான்
விசிகம்விடுத்தவைநூறியிராக்கதர்வெம்படையுந்தியுயர்
வசுசிரம்வானுறவேதுணிசெய்தனன்வானவரேத்திடவே. 31

அரவெனமுனிவசுசிரநெடுவானுறவசுரர்களோடிடலுஞ்
சிரவணனஞ்சன்மினென்றுயர்தேர்மிசைநின்றொளிர்சிலைவளையா
மருவமர்துளவனும்வசுதையுமுவணனுமறைவுறவிமையவர்க
டருவமர்நகரிறையுடன்வெருவப்பலசாயகமெய்தனனால். 32

முரனருண்மைந்தன்விடுங்கணையெண்டிசைமூடலுமாயன்விலாற்
சரமழைபெய்தவைமாற்றிமுரண்டருசமனுயர்படைவிடவே
யிரவியுமஞ்சிடவுததிகலங்கிடவெங்கணும்வெங்கனலாய்ச்
சிரவணன்வன்றலையைத்தரையிட்டனன்றேவர்களார்த்திடவே. 33

முரனுறுசிரவணன்மடியமுனிந்துமுடங்குளைபோலவெதிர்ந்
தருணனுரத்தொடுதேர்மிசையெய்தியடற்சிலைநாணெறியாக்
கருணைமலிந்திடுகண்ணனைநீயிவைகாக்குதியோவெனவே
வருணனெடும்படைவிட்டனன்வானவர்மறுகியுளைந்தனரால். 34

கருணையிலாமுரனருள்சுதனேவியகடலரசன்கணையை
முரனுறுசித்திரபானுவின்வெம்படைவிட்டவைமாற்றிமுகில்
வருணவியாதவன்வாசவன்வெம்படைவரிசிலையால்விடலு
மருணனெடுந்தலையைத்துணிசெய்தனவமரர்களார்த்திடவே. 35

வேறு.

தீதாய்வருமருணன்சிரமறவெஞ்சினமுறவே
போதாமிரன்கடுங்கூற்றெனப்புகையச்சிலையுறுநாண்
காதோடுறக்கணைகாசினியிடரக்கதமிகுத்த
பூதாரவுருக்கொண்டவன்மேலேபொழிந்தார்த்தான். 36

சூதாயெதிர்முரனார்சுதன்றூவுங்கணையறவே
காதார்விழித்திருநாயகன்கணைமாரிகள்சொரிந்து
வேதாதியர்வியந்தேயிடவிடையோன்படைவிடவப்
போதாமிரன்சிறமற்றனபுத்தேளிர்களார்ப்ப. 37

வேறு.

வந்தெதிர்ந்தபோதாமிரன்மாளவே
யந்தரீக்கனம்பொன்சில்லித்தேர்மிசை
முந்திவெஞ்சினமூளவழற்கணை
சிந்தினனிமையோர்கடிகைக்கவே. 38

வந்தெய்துமனல்வாளியைமாற்றிநற்
சுந்தரனொருதோமரமுந்தவே
யந்தரீக்கன்சிரகரமற்றிடச்
சிந்தினர்மலர்தேவர்களாடியே. 39

வேறு.

அவனிக்கணின்மடிந்தேயந்தரீக்கன்விழவறனில்
பவனச்சியமுரகாசுரன்பயந்தேவளர்குமர
னவனச்சுவன்முனிந்தேசிலைநாண்காதுறவாங்கத்
தவரச்சமுற்றிடமாயவன்றன்மேற்சரஞ்சொரிந்தான். 40

விவுதர்க்கியமனையொத்தவன்விடுவாளிகளெல்லாந்
தவனச்சுடரொளிபோல்விடுசரத்தாற்பொடிபடுத்தி

யிவனச்சிடவருமச்சுதனிசிகப்படைவிடுப்பப்
பவனச்சுவன்சிரமற்றனபனகாதிபர்துதிப்ப. 41

மூடுங்கனல்போலேமுனிமுரன்சேயெழுவரையுங்
கோடொன்றியகரவச்சுதன்கோலால்வதைசெயலும்
பீடன்கடுஞ்சினத்தோடியர்பிறைபோற்சிலைவளையா
நீடுங்கணைபொழிந்தார்த்தனனிறையப்பொழிமழைபோல். 42

சேடன்னெனமுனிவெய்தியசேனைபதிவிடவே
மூடுங்கணைதுகளாயிடமுகுந்தன்சரம்பொழிந்தே
நீடும்விலிலங்காரகநிறைமாப்படைவிடுப்பப்
பீடன்சிரமறவோடினர்பிறைவாளெயிற்றவுணர். 43

முராகாசுரனருண்மைந்தர்கள்பீடன்முதலாகத்
தரைமீதுறமடிந்தாரெனக்கேட்டேசழற்கண்ணன்
கரிகோடுறுதேர்தன்னொடுகெலினப்பரிசூழ
நரகாசுரனெதிர்ந்தானுலகேழெண்டிசைநடுங்க. 44

இறுகாலையினரணமெனநரகாசுரனெதிர்ப்பப்
பறைபேரிகும்பிகைசச்சரிபணிலங்கண்முழங்கத்
திறல்வீரர்கண்மதமாநிறைவளையச்சிலைவளையா
நிறைவாளிகள்பொழிந்தார்த்தனனெடியோன்றனைமறைத்தே. 45

மழுநேமிகன்னகம்வேலயில்வளர்குந்தமுசுண்டி
யெழுமாகதையவையெண்ணிலவெறிந்தும்வரிசிலையா
லழலாசுகஞ்சொரிந்தேகரியயந்தேர்நிரையனிகங்
குழலூதியவிறையோன்றனைவளைந்தார்த்தனர்கொடியோர். 46

வேறு.

வரையையொப்பவர்பிறையெயிற்றினர்வடவையுற்றெனவிருகணூர்
புருவநெற்றியினுறவிழிப்பவர்புகையுயிர்ப்பவரறனிலா
ருருமுமுட்கிடவெடிபடச்சொலுமுரையர்கட்செவியுமிழவே
வருவிடத்தினைநிகர்சினத்தினர்மறவருற்றனரிரதமேல். 47

படிபிளப்புறவடிபெயர்த்திடுபவர்களொப்பறுசிலையினைப்
பிடிகரத்தினர்பிறையெயிற்றனர்பிறிதியற்றுயர்முடியினு
ரிடிவெடித்திடவுறநகைப்பவரெழிலியைப்பிழியிருகையார்
கடமதித்திடுகரியினூர்றவர்கவசமுற்றொளிர்வயவரே. 48

அடியினிற்பெருவரைபொடிப்படவிடரியத்தியினயமறக்
கடிதிறைப்பவரொருகரத்துயர்ககனமுற்றிடநிமிர்மெய்யார்
வடவையிற்றிடவிடுமுயிர்ப்பினர்மறமிகுத்தவருரகன்வாய்
விடமெனக்கதமுறுமனத்தினர்விரைவினுற்றனர்பரியின்மேல். 49

திசையினுற்றவர்வெருவவிற்கொடுசிலிமுகப்பெருமழைபெய்தே
சசியினற்பதியிமையவத்திரடவர்கண்முற்றவுமிரியவே

யசுரர்கைத்தலவளைமுழக்கினரழலுதிர்த்திடுநயனமா
கசரதக்குழுகுரகதத்தினமுறவளைத்தனர்கதமொடே. 50

வேறு.

மகராலயமெனவேவருமதமாவணிவளையச்
செகமாதரியுரகாரிமெய்தெரியாவகைசிலையா
லுகமாமழையெனவாசைகடோறுமாசுகமுறவே
யிகன்மாவுறுமிரதாதிபரசுரேசர்களெதிர்ந்தார். 51

அயில்வேலெழுமழுவாள்கதையடர்நேமிகளெறியப்
புயல்போலெழுசரமாரிகள்புவியாசைகணிறைத்தே
மயில்வாகனனயிராவதவிறைவானவர்வெருவ
வெயிலோனவிர்மறையும்படியசுரேசர்கண்மிடைந்தார். 52

கல்லோலநிறைந்தேவருகடலாமெனவசுர
ரெல்லோர்களும்பல்லாயுதமெறிந்தெய்துவந்தடர்ப்பச்
செல்லாமெனத்திகழ்மேனியன்றிசைவானமுமறைய
வில்லாவிறுதியிற்பெய்மழைபோல்வாளிகள்விடுத்தான். 53

வேறு.

கரியமேகம்விழுதன்மைபோலவடர்கரிகளெங்கணுமடிந்துமா
வரைகள்வீழ்வதெனவேயுருண்டவுயர்வானிலங்கிடுவிமானநீ
டரையினிற்றதெனவிற்றதேர்நிறைசலங்கொளாற்றினைநிகர்த்தலை
பரவுசெங்குருதியோடவாடியகவந்தநீளலகைபாடவே. 54

நாரியற்றதனுவற்றவங்குலிகளற்றவற்றவகமிற்றபோ
தேரினுற்றவசுரேசர்மெய்சிமயமற்றதொத்தவர்கள்சென்னிகள்
பாரினற்றவிடதாமெனுஞ்சுரநிலத்தினற்றுவிழவேபல
வாரியுற்றதெனவெங்குமேமலிகணீர்பரந்தவரிவாளியால். 55

கவரியற்றகொடியற்றவெண்கவிகையற்றகூதனுயர்கந்தர
மிவுளியற்றுருளையற்றவற்றவிருதங்களாழியறவெதிரிலா
மவுலியற்றவடனுகமொத்தசுரர்மண்ணில்வீழவுதிரப்புன
லுவரியுற்றனவுலோகநாதன்விடுகணைகளெண்டிசையுமுறவரோ. 56

கோடிமாகரியிமைப்பின்முன்னமிருகோடுகையுடல்குறைந்திட
நீடுநாகநிலன்வீழ்வதொத்துவருநிகரிலாவவுணர்முடிகள்வான்
மூடியெண்டிசையுறச்செறிந்தபிணமுகிலின்மீதடரவயிரிய
ராடல்போலெழுகவந்தமெங்கணுநடித்தமால்பகழியறையவே. 57

சுடிகைநீடரவின்மேனடித்தவிறைதூவுமாசுகமடர்க்கவோர்
கடிகைநேருமுனெணக்குரோணிபடையவியவேயசுரர்கணமெலா
முடிகள்வான்மிடையவுடல்கள்பார்நிறையமுடுகுசெங்குருதியோடநல்
வடகம்வீசிமலர்தூவியாடினர்கள்வானுளோர்தவர்மகிழ்ந்தரோ. 58

வேறு.

குரமற்றிருதொடையற்றிடக்குதிரைத்திரளுருண்ட
கரமற்றுயர்தாளற்றிடவேவீழ்ந்தனகரிகள்
சிரமற்றிடவயவீரர்கண்மடிந்தார்கொடித்தேரின்
னிரையற்றிடவிழிந்தோடினரசுராதிபர்கிலத்தே. 59

இடைந்தோடலுநரகாசுரன்மொழியாலிபவீரர்
சுடுந்தீயினைநிகராகியகணைமாரிகள்சொரிந்தங்
கடர்ந்தேயிடப்பனகாசனன்சிறகாலடித்தமிர்தக்
கடந்தானெடுத்துயர்கைக்கொடுவதைத்தான்கதமூள. 60

நஞ்சானனாலானனனாகர்க்கிறைதுதிப்பப்
பஞ்சானனஞ்சும்படிபணிலங்கண்முழக்கி
யஞ்சாதடரவுணர்த்திரளயமாகரிதேர்கள்
பஞ்சாமெனப்பறக்கச்சிறகடித்தான்ககபதியே. 61

கூர்வாணிகருகிராற்கரிபரிதேரிவைகோர்த்துப்
பார்வான்கிரிதிசையெங்கனுமடித்தான்பலகரத்தா
னேரார்தமைமூக்காலுடற்றோளானெருப்புமிழ்ந்தே
யாராவிருசிறகேவிரித்தடித்தேவதைத்தனனால். 62

அதிர்த்தேயடல்கலுழன்கையினவுணத்திரண்மாளக்
கொதித்தேவருநரகாசுரன்கொடுவாளிகள்பொழிந்தாண்
டதிர்த்தார்த்தெறிசுடர்வேற்ககபதியாக்கையினுறலும்
பதைத்தானதுகண்டாரியன்பகழித்திரள்பொழிந்தான். 63

திருநாயகன்சிலையால்விடச்செறியாசுகமழையை
நரகாசுரனொருவாளியினறுத்தேசுரர்நடுங்க
வரிமேனியிலிரத்தப்புனலாறாய்ங்லனோட
விருநாலுதிக்குறவாளிகள்விடுத்தார்த்தனனிடிபோல். 64

கருமாமுகிற்றிகழ்துப்பெனக்கமலன்றனையளித்தோன்
திருமேனியிற்குலிசப்புனலவிழவெண்ணகைதெரிய
நரகாசுரன்கொடிதேரினைநாலம்பினிற்சிதைத்தே
யொருவாளியினவனீள்சிலையறுத்தானுலகளந்தான். 65

வரிவில்லொடுமணித்தேரறமறவன்மிகமுனியா
விரைவின்னுயிரதத்திடைமேவித்தனுவளையாப்
பரவைக்குளினெழுமாவிடமெனவும்பலபகழி
சொரியக்கருடன்றோள்சிவப்புறவேதுளைத்தனவால். 66

நரகாசுரனிவனொப்பிலனாராயணனிவனென்
றரன்வாசவன்கமலாசனனறியாவகைதெரியா
தரைவாரிகடிசைவானகந்தெரியாவகைசரங்கள்
சொரியாவுயர்வளையூதினர்சுரர்மாதவர்துலங்க. 67

இருவோர்களுஞ்சொரியாசுகமெரியாயுகத்திசைகட்
குரியோர்மிகநடுங்கக்கடமுறுமெண்கரியிரியச்
சுரர்மாதவர்வெருவக்கடல்சுவறப்படிசுமக்கு
மரவாகநொந்தழன்மண்டிடவயனோடரன்றிகைத்தார். 68

விடமாமெனமுனிந்தேயடர்நரகாசுரன்விடுப்பப்
படிவானமெண்டிசைபோர்த்திடும்பகழித்திரளறவே
நெடியோன்கணைவிடுத்தேயருண்மறைதேவர்கடுதிப்பச்
சுடர்வாளிகளவன்றேரொடுந்தோன்றுவகைசொரிந்தான். 69

வேறு.

ஆரியனெய்திடும்வாளிகடன்னையோரம்பாலே
வீரியனாநரகாசுரன்வீழ்த்துயர்விற்கொண்டே
மாரிவளைத்துபொழிந்ததுபோனெடுவானெங்கும்
பாருமறைந்திடவேபகழித்திரள்பெய்தார்த்தான். 70

வெம்பியடர்ந்திடுநரகன்விடுத்திடும்விசிகம்வா
னம்பிறையிற்றிகழ்வாலொளிர்மின்னெனவரிநெற்றி
செம்புனலுற்றிடகிற்றலுமாலொருசெயலற்றே
வும்பர்நடுங்கிடவுவணனுளைந்திடவயர்வுற்றான். 71

சித்தசனைத்தருமாயனயர்ந்திடுசெயல்கண்டே
சத்தியவாமைமுனிந்துயர்சாரங்கம்வளைத்தேதா
னித்திலமாலையசைந்திடவேர்வுமெய்நிறையக்கூ
ரத்திரமாரியடர்ந்துசொரிந்தனளமுதொப்பாள். 72

காலணிநூபுரமோலமிடக்கரவளையார்ப்ப
மாலைகருங்குழன்மீதினசைந்திடவடிகாதின்
கோலநிறைந்திடுதோடுமலைந்திடவிற்கொண்டே
நீலநன்மேனிவயங்கிடவாளிநிறைத்தாளால். 73

தன்னெழிலொப்புருவம்மெனவேதனுவளைசெய்தாண்
மின்னிடையானனமின்பரிவேடவொண்மதியேயக்
கன்னன்மொழிக்குயிறன்விழிபோலொளிர்கணைமாரி
யுன்னுமுனெண்டிசையுவரிமறைந்திடவெய்தாளால். 74

சத்தியவாமையெனுங்கொடியெய்திடுசரமெல்லாஞ்
சித்திரபானுவெனத்திசையுற்றிடவசுரேச
னத்திமடிந்திடவிரதமரிந்திடவயம்வீழக்
கைத்தலமுரமிருகாலறவீழ்ந்தனர்ப்படிமீதின். 75

வேறு.

சங்கம்முரசந்துந்துமிதழங்கச்சின்னமுழங்க
வெங்குமணித்தேர்மாநிறைபமெண்ணிலவளையச்
சிங்கம்மெனவெதிர்த்தாசுகஞ்சிதறும்மசுரேச
ரங்கஞ்சிரமறவெங்கணைசொரிந்தாளரிமனையாள். 76

மகரந்தமிணங்குங்குழன்மான்வாளிகள்பொழிய
நிகரந்தகனென முந்தியநெறிநீத்தவருடலாஞ்
சிகரந்தரைதனில்வீழ்ந்திடச்சிரம்வானுறவேயைம்
முகரந்தணனிறும்பூதெய்தமுனிவோர்திரணடித்தார். 77

அடியற்றனர்தொடையற்றன ரரையற்றனருதரக்
குடரற்றன ருரமற்றனர்குவவுப்புயமறவே
முடியற்றன ரவுணத்திரண்முரன்காலனுண்மனையா
மடியைப்பழியிடைமேகலைதுலங்கக்கணைபொழிய. 78

காலிற்சிலம்பிலங்கக்கரவளையின்னிசைகறங்கக்
கோலச்சுடர்மணித்தோடுகெளசையக்குனிவில்லால்
ஞாலத்தறைமழைபோற்கணைசொரியப்பரிநால்வாய்த்
தோலுற்றவர்கரமார்பிருதோளற்றிடமடிந்தார். 79

ஏறேழடர்த்தவன்றேவியெய்கணையெங்கணுநிறைய
நூறாயிரங்கரிமாவினர்நொடிப்போதினின்மடிந்தே
யாறாயெழுங்குருதிப்புனலலைக்கணமுழுகப்
பாறாடிடக்கவந்தம்பலபடிமீதினினடித்த. 80

இருவிற்கணையிரண்டோடெழிலிலகத்திகழ்மதியைச்
சரியொத்திவெதனக்கொடிசரந்தூவிடவயவ
ரெரியுற்றிசெருகாமெனவிறவாசுகநிறைய
விரைவிற்கடல்கிழிந்தாலெனவெருண்டோடினரசுரர். 81

அரிமாமனையாளெய்திமெழல்வாளிகளறையக்
கரிமாவிறவெதிர்வீரர்கள்கணக்கில்லவர்மடியச்
சுரர்மாமலர்பொழிந்தேடமிடுவோர்துதிசெயவே
நரகாசுரனொருமாதிவள்சமர்நன்றெனநவின்றான். 82

வடவாவனலெனவேமுனிந்துயர்தேர்மிசைவருமக்
கொடியோன்மிசையிறுகாலையிற்கொண்மூப்பொழிந்தாப்போ
னெடியோனுயிரனையாள்சிலைவளைத்தேநிறைபகழி
விடமாமெனச்சொரிந்தாளுயர்விண்ணோர்வியப்புறவே. 83

வேறு.

விரைகுழன்மாதெய்தவெண்டிசைபோர்த்திடும்விசிகத்தை
நரகன்முனிந்தொருகணையினறுத்திடநகைசெய்தே
தரளமலைந்திடவேதழல்வெம்படைதனைவிட்டாள்
வருணசரங்கொடுமாற்றினன்வாளவுணன்மாதோ. 84

வாயுநெடும்படைவாளவுணன்விடவடிவேற்கட்
டேவளப்படைகொண்டுதுணித்திடவதுகண்டே
டீயவனிந்திரன்வாளிவிடுத்திடவேசீரா
மாயன்மனைக்கொடிமாற்றினள்வாசவனம்பாலே. 85

அந்தகன்வாளியையசுரன்விடுத்திடவதுகண்டே
யிந்துமுகத்தவளப்படைகொண்டவையிறவெய்தாள்
சிந்தையழன்றரகன்படைதீயவன்விடலோடும்
பைந்தொடிககபதிபடைகொடறுத்தனள்படிமீதின். 86

பற்றலனாமசுரன்கமலன்படைவிடவேபார்
முற்றவுமெரியுறமுடுகியசெயலவைகண்டேமின்
சிற்றிடைமேகலைதிகழ்கொடிதிசைமுகனம்பாலே
நற்றவர்மகிழவிலக்கினணாகர்கடுதிசெய்ய. 87

சீறியவசுரனரன்படைவிடவதுசெகமெல்லாம்
நீறுசெய்யிறுதியினெரியெனவருதலுநிகரில்லா
வீறுடைநாயகிவிடையினிலுறுபவர்படைகொண்டே
நூறினளமரர்கண்மறையொடுதுதியினைநுவலத்தான். 88

வீரியனாநரகாசுரன்மால்படைவிடவேவா
னீரெரிகானிலன்வெருவிடவருதலுநிகரில்லா
வேருறுமிடையினளரிபடைகொண்டிவையிறவெய்யச்
சீருறுமமரர்கண்மலர்மழைசிதறினர்புகழ்செய்தே. 89

கடவுளர்படையறநரகன்விழித்துணைகனறூவ
விடமெனவடுகணைபுவிதிசைமறைதரவிடலோடுந்
துடியிடையாளவையறவெய்துபகழிகள்பலதூவக்
கொடியவன்வரிசிலையாவமொடற்றனகொடிவீழ. 90

வேறு.

வரிசிலையற்றிடவேநரகாசுரன்வாண்மழுகுந்தமயி
லிரவியினவிருறுவெயிலெழுமாகதையிவைகளெடுத்தெறிய
முருகவிழ்குழலினளவைகளறுத்தெதிர்மூரணுறுகணைகள்விட
விரதமுமற்றனவிவுளிகள்பட்டனவலவனுமிற்றனனால். 91

வாளொடுசீறியெதிர்ந்துமுன்வருநரகாசுரன்மார்பினிடைத்
தோளிருகைநுதலுதரமருக்குயர்துடைகள்குறங்கினுறத்
தாளிணைமுற்றவுமுற்றிடவேயெதிர்சத்தியவாமையினா
னீளியபகழிநிறைத்தனண்மற்றவனிலனியர்ந்தனனால். 92

நரகனயர்ந்திடவாளிவிடுத்திடுநாயகிதன்விறலைச்
சுரர்கடுதித்தனர்மலர்கள்பொழிந்தனர்துந்துமிநந்துசின
மிரைகடலொத்துமுழங்கினமாதவரிந்திரனெண்கணனோ
டரனிவராசிபகர்ந்தனரப்பொழுதமலன்விழித்தனனால். 93

வேறு.

வீரமால்விழித்துப்பார்த்தான்விறலுடைப்பவுமவெய்யோன்
பாரிடையயர்ந்துவீழப்பசுங்கொம்புமலர்கள்பூத்த
சீருறச்சார்ங்கங்கொண்டுபொருதுதன்றேவிதன்னை
மார்பிற்சேருறவேபுல்லிமகிழ்ந்தனன்வானோர்போற்ற. 94

தழுவியகொழுநன்றாயதாளினிறைஞ்சிநின்ற
யுழைவிழியணங்கினோடுமுவணன்மீதுயர்ந்தமாயோ
னெழிலினைநோக்கிப்பூவின்மாரிபெய்திமையோரார்த்தார்
தெழிகுரனரகன்றேறிவேறொருதேரிற்சென்றான். 95

வேறொருசிலையும்வாங்கிப்புட்டிலும்புறத்துவீக்கிச்
சீறியபவுமன்கோடிவாளியாற்றிசையைப்போர்ப்ப
நாறுபூந்துழாயோன்கண்டுநகைசெய்தப்பகழியெல்லாம்
நூறினன்சார்ங்கம்வாங்கிநாறுசாயகத்தின்மாதோ. 96

வெஞ்சினப்பவுமன்பின்னும்விசிகமாமழைபெய்தார்ப்ப
வஞ்சனவண்ணத்தையன்விடுத்திடுமொழிவானின்
விஞ்சியவிரவிதானுமின்மினியாகச்சென்றே
வஞ்சகன்சிரத்தைத்தள்ளிமீண்டதுவானோர்வாழ்த்த. 97

அந்தரத்தமரர்பாரினம்பொன்மாமலர்கவித்
துந்துமிபணவந்தக்கைதுடிகைகண்முழங்கவார்த்தா
ரிந்திரன்கமலனேற்றினிறையவன்முனிவர்வாழ்த்தச்
சுந்தரியுடனுமாயோனுவணன்மேற்றுலங்கினின்றான். 98

அன்னதோர்காலைதன்னினவனிமாதென்னுமன்ன
மின்னிடவதிதிகாதிற்குண்டலம்விபுதர்க்கெல்லா
மன்னன்வெண்கவிகையோங்கமணிவரையேந்திமாயோன்
பொன்னடிவணங்கிநின்றாணரகன்றன்புதல்வரோடும். 99

தரணிமின்னிருகைகூப்பிச்சாற்றுவாள்பூவைப்பூவின்
வருணமுற்றிலங்குமாயன்மாய்கைக்குமாயஞ்செய்தே
முரணுறுமசுரர்தங்கள்குலத்தைவேரறுத்துமூவாக்
கருணையங்கடலாய்த்தேவர்க்கருள்செயுங்கமலக்கண்ணா. 100

கோலமாயெயிற்றினென்னையேந்துநாட்கொடியவேர்வின்
சீலமில்குணத்தனாகிச்செனித்திடுநரகன்றன்னை
யாலின்மேலமர்வாய்செற்றாயவன்றருபுதல்வன்றன்னிற்
பாலனீங்கிவனைக்காத்தியென்றடிபணிந்தாண்மன்னோ. 101

கடலுடையாடையானகாசினிமாதுகூறப்
படியினையளந்தோனன்பானரகன்றான்பயந்தசேய்க்கு
முடியினைக்கவித்துவானின்முண்டகன்போற்றப்பாராங்
கொடியினைப்போதியென்றுகூறிடப்பணிந்துபோனாள். 102

இருநிலமடந்தைசிந்தையுவந்துதானேகலோடு
நரகனாற்சிறையின்வீழ்ந்தநவையிலாவரசரெய்தி
யரியினைவணங்கிச்சூழவவர்கடாம்பயந்தமாத
ரிரவிகாணரவிந்தம்போன்முகமலர்ந்திறைஞ்சினாரால். 103

காசிபன்மனைவிகாதிற்கனகக்குண்டலங்கடயே
வாசவன்கவிகையோங்குமணிவரையொருங்குகொண்டே

காசினியரசர்பெற்றகன்னியர்மகிழ்ந்துசூழ
ஈசனெண்கலுழன்மீதிற்றேவியோடேகினனால். 104

உவணன்மீதிலங்குமையனும்பர்மாமலர்கடுவேத்
துவரையினெய்தித்தாதையடியினின்வணங்கித்தூய
தவமிகுமன்னைபாதம்பணிந்தசக்கரத்தானருளி
னவையகல்விதர்ப்பன்பெற்றநங்கைவந்திறைஞ்சினளால். 105

பணவமர்பேரிபம்பைசச்சரிபணிலமார்ப்ப
விணையிலாக்கமுகுகன்னல்கதலிகளிலங்கும்வீதி
மணமலிமாலைநாலவயங்குதீபங்கடுன்னக்
கணிகர்விழியினர்கள்சோபனங்கழறினரால். 106

நண்ணிமாமறையோரோமநடத்தநன்மண்டபங்க
ளெண்ணிரண்டாயிரத்தினேகமாமுகுர்த்தந்தன்னிற்
பண்ணியாழ்பயிற்றுமாதர்பதினறுயிரவர்தம்மைக்
கண்ணனேரொருவர்க்கோரோர்காந்தனாய்க்கலந்துவேட்டான். 107

பின்னருசிலனுள்வேந்தர்பெற்றிடவயங்கிநின்ற
மின்னிடைக்கலாபமின்னும்வேற்கணார்நூறுபேரை
மன்னவன்வசுதேவன்றன்மைந்தன்மாமுகுர்த்தந்தன்னிற்
றுன்னியமறையோரோமந்தொடங்கிடவேட்டான்மன்னே. 108

சித்தசனன்னையெண்கின்பாவைநாக்கினசித்தாமின்
சத்தியவாமைவிந்தையிலக்கணைதவக்காளிந்தி
மத்திரன்மகளெண்ணீராயிரத்தொருநூறுமாத
ரத்தனையோருஞ்சூழவவனியினிருந்தானம்மா. 109

நப்பினைகமலைநீலையிராதைபாளிகைநன்னீதி
தப்பில்சந்தரிகைமந்தாரகையிந்துவல்விதத்தை
யொப்பிலாயிரவொண்மாதர்கூனிமிர்ந்துருவம்பெற்று
ளப்பினினுறைவான்றன்னேடமர்ந்தினிதிருந்தார்மன்னே. 110

நரகாசுரன்வதைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 679.

---

89 - வது, பாரிசாதப்படலம்.

சீலமிநரகன்றிறவினுற்கவர்ந்ததேவர்கோன்கவிகையுமதிதி
கோலநன்மணியார்குண்டலந்தனையுங்கொடுத்தமராபதிமேவிச்
சாலநொந்தமரர்மோகிப்பப்பணிலமூதிவான்றருவினைக்கொணர்ந்தே
வேலினைநயனச்சத்தியவாமைக்களித்தருள்விமலனைத்தொழுவாம். 1

கந்தநன்மாலைநிறைந்திடத்தென்றலுலாவிடக்கனகமண்டபத்தி
ளிந்துவின்கிரணம்வயங்குசாளரத்தின்றயங்கிடத்தீபங்களிலங்கச்

சுந்தரமிசையிற்கலனுறக்கவின்கொளஞ்சனக்கருமுகிலேலச்
சுந்தரன்கவரியசையவாதனத்தின் றலங்கியேயிருந்திடும்வேலை. 2

சிந்துரம்வளிகம்வயங்கிடக்கரத்திற்றொடிகெழ்ந்திடவிழைகள்
கந்தரநிறையக்கங்கணமொளிரக்கவினுறக்கரவளையிலக
மந்தரநிகராந்தனமிசைத்தரளவடமலைந்திடமணிச்சிலம்பு
சுந்தரவடியிற்சிலம்பிடவிதர்ப்பன்மகளெய்திமலரடிதொழுதாள். 3

வந்தடிதொழுதவிதர்ப்பன்மாமகடன்மகுணன்மெய்யழகினைநோக்கிச்
சிந்தையின்மகிழ்வாற்சிலதிகைக்கவரிவாங்கிநற்சிலம்படியிலகக்
கந்தமாமலர்களளகமீதொளிரக்கனகவொண்கைவளையரற்ற
நந்துமிழ்தரளவடநகிலசையநகையுறவீசியேநின்றாள். 4

கவரிகைக்கொண்டுவீசியவிதர்ப்பன்றருதிருக்கவினெலாநோக்கி
யவனியுண்டுமிழ்ந்தவரிநகையுடனே யணங்கினைப்பார்த்திவையறைவான்
புவியினிலரசர்திலகனாயுயர்ந்தபொறையுடைவிதர்ப்பன்றன்புதல்வி
நவையறவுலகர்நகைசெயவெனைநீநத்தியதென்கொலென் றுரைப்பான்.

எதுகுலத்துதித்த விழிவினான்மகுடஞ் சூட்டியாளரசெனக்கில்லை,
யதுவலாலாயர் பதியினின்வளர்ந்தே னனைவெண்ணெய் களவினிலருந்
திச், சதுர்மறைநெறியைத் தப்பியேவிடனாய்ச் சராசந்தன்றனக்கிடைந்
தோடி, மதுரையையிழந்து மகோததியிடையின் மறைந்தனன்வடிவொ
ன் றுமில்லேன். 6

ஈதெலாமுணர்ந்துன்முன்னவனெனக்கேயுன்னையீகிலனென் றுசபத
மோதியேதமகோடன்சுதன்றனக்குக்கொடுப்பனென் றுரைத்திடநீயோ
வேதியன்றனைத்தூதெனமுனர்விடுத்தும்விரகமுற்றெந்தனையணைந்தா
யேதமில்புராணம்பெரிதுணர்ந்தாலும்பெண்மதியிழுக்கெனவுரைப்பார்.

நாரதனுன்னைமயக்கிடுமுறையானலனிலாவென்னைநீநத்தி
வாரிதியறியார்நதியினைக்கண்டுமெருண்டவாபோலெனையணைந்தா
யாரிதுநன்றென்றறைபவரென்னையறிபவர்யாவருமில்லைச்
சீரிதென்றிகழாச்சின்மதிதன்னாலென் றுபின்சீதரனுரைப்பான். 8

மாலைசேர்குழாயுந்தன்மேன்மாலாய்வடிவுடைச்சேதிபனிருப்பச்
சாலுவன்மகதன்றந்தவக்கிரனொண்டராதலவரசர்களிருப்பச்
சீலமிலெனைநீயணைந்திழிகுலத்தேன்செயலிலாவடிவினைக்கண்ட
வாலிலைவயிற்றாயுனதெழிற்கொத்தவரசரையடைகுதியென்றான். 9

இனையனமொழியக்கேட்டிருசெவியிற்காய்ந்திசெலாகையேறியபோற்
றனியுறக்கண்ணீர்தனமிசைப்புரண்டுதுகினனைந்தவனியிற்பாற
மனமிகநொந்துவனசமாமலராண்மயங்கியேயயர்ந்திடுவேளை
யனகனுமிவ்வாறயர்ந்தமின்றன்னையக்கையாலெடுத்துரத்தணைத்தான்.

நாறுபூங்குழலாடனையெடுத்தணைத்துநற்பனிநீரினைவிடுப்ப
வீறுடைவிதர்ப்பன்றிருமகடேறிவிழித்திடவரிசொல்வானுந்தன்

சீறியவதனக்கவினையான்காணுமாசையாற்சிரிலாவசனங்
கூறினனதற்குக்கதங்கொளேலுனக்குஙிகரிலெங்கோதையரிலையால். 11

எனுமொழிபகர்ந்தேயிருகையாற்றழுவியென்னுயிர்த்துணைவிநீயுன்னைக்
கனவிலுமொருவேனென்றரிகூறக்கமலமின்கைதொழுதுரைப்பா
ளனகனின்றிருத்தாளன்றிவேறறியாவேழையேனுவியைநுகருந் [வாள்.
துனியினையுரைத்தாயென்றுமாவிதர்ப்பன்றருதிருப்பின்னருஞ்சொல்

உருவிலனென்ருய்வானநீயானவாய்மையாலுண்மையேயுயர்ந்த
வருமறைநெறியைத்தப்பினேனென்ரு யறையும்வேதத்தினுக்கெட்டாப்
பரமனீயென்றுபங்கயன்முதலோர்பகர்தலாலஃதுமெய்யான
தரணியிற்ருழ்ந்தகுலனென்ருய்நீயவ்வனந்தனுந்தன்மையாற்றிடவே. 13

என்னையாரறிவரென்றனையெண்கண்ணிறையவர்முதலினேர்செய்கை
தன்னைநீயறிவையுன்செயலவர்களறிகிலரென்றுதாம்வேதஞ் [பயந்த
சொன்னவாய்மையினலஃதுமெய்யென்றேதொழுதிடும்விதர்ப்பர்கோன்
மின்னினைத்தன்மார்பழுந்துறத்தழுவிவிமலனின்பத்துடனிருந்தான்.

அரிதிருவுடனேமகிழ்ந்தினிதிருக்குமெல்லையினந்தரமிசையி
னிரவிவந்துதயமாகவேயிறைவனெழுந்திமசலத்தினீராடி
யருமறையுதகத்தருக்கியமளித்தேயரவிந்தப்பாவையுந்தானுந்
தெரிவையர்கவரியசைப்பவாதனத்திற்றிகழ்வுறவிருந்திடும்வேலை. 15

வேறு.

அருமறைவடிவுகொண்டடைந்ததென்னவே
சுரார்முனிவீணைகைதுலங்கவெய்திநற்
றிருவுடன்மாயவனிருந்தசெய்கைகண்
டொருகியவன்பினேடாசியோதினன். 16

மாதவர்துதிக்கநாரதன்வந்தெய்தலுஞ்
சீதரன்றிருவுடன்வணங்கிச்சீர்மையா
லாதனமருக்கியமளிக்கவன்பின
லேதமிலாதநற்றவனிருந்தனன். 17

வாரிருவெரையின்மாயன்கைமிசை
பாரிசாதத்தவிர்மலரைப்பண்பினுற்
சீரியனுரதன்கொடுக்கச்சீதர
னேருறும்விதர்ப்பர்கோன்மகளுக்கீந்தனன். 18

திருமருமலரினைவணங்கிச்சிந்தையின்
வருமகிழ்வுடன்முகமலர்ந்துவண்மைசே
ரிருளளகந்தனினிலங்கச்சூட்டியத்
தெரிவையைநோக்கிமாமுனிவன்செப்புவான். 19

சுரார்திரள்விரும்புமித்தூயநன்மலர்
தெரிவைநின்குழலினிற்சேரமாதவம்

புரியுமீதுண்மையாலமிர்திற்போந்தரு
ளரிவையேயுனக்கிவையரியவோவென்றான். 20

சுத்தநாரதமுனிதுலங்குமிந்திரை
சித்தமின்புறவிவைசெப்பிச்சீதர
வித்தகனருளினால்விடைகொண்டேகியே
சத்தியவாமைதன்கோயிற்சார்ந்தனன். 21

ஆதனத்திருந்தமாமுனிவனாசிக
ளோதிடச்சத்தியவாமையுண்மகிழ்ந்
தேதமற்றறனுறவென்முனெய்தினை
போதனெண்டவனெனப்புகலுவாளரோ. 22

என்னிவணெய்தியகருமம்யாவையு
நன்முனிவாமொழியென்னநாரத
னன்னமென்னடைமொழியமிர்தம்வேய்கொடோண்
மின்னிடையணங்கினுக்கிவைவிளம்பினான். 23

அனகன்றன்றேவியாரைவர்தன்னினு
முனையலால்வேறொருத்தியையுமுன்னலே
னெனுமொழிதவிர்ந்துருக்குமணிக்கின்பமாய்
மனமுயிரவள்வசத்துறமகிழ்ந்தனன். 24

காந்தமுமூசியுங்கலந்ததென்னவே
சாந்தணியவளருந்தனங்களோவலான்
வேந்தரெண்பாரிசாதத்தின்மென்மல
ரீந்துருப்பிணிதன்னோடின்புற்றானென்றான். 25

என்றிவையுரைத்துமாமுனிவனேகலுங்
கன்றியசிந்தையாள்கணவன்றன்செயல்
நன்றெனநகைத்தனளயனநீர்தனக்
குன்றினிற்குதிகொளக்கொதித்துச்சீறினாள். 26

எல்கிளர்தருமணிமுதலியாவையும்
நல்கியவுவரியைநிகர்த்துநாயகி
யொல்கியேதன்னகிலொளிருமாரங்கள்
பல்கலன்மேகலைபறித்துவீசினாள். 27

அலர்மலருதிர்ந்திடவலரிவெம்மையாற்
புலர்தருகொம்பெனப்பொருமிக்கண்ணினீர்
நிலனுறவணையின்மேற்சோர்ந்துநெஞ்சினிற்
சலமுறவவனிமின்றளருமெல்லையின். 28

தருமலர்திருவினுக்களித்துச்சக்கரக்
கரனிரதத்தின்மேலேறிக்காவலர்
பரிகரிபுடைவரப்பணிலஞ்சின்னமா
முரசுதுந்துமியெலாமுழங்கவெய்தினான். 29

நித்திலமலைந்திடநீலமேகம்போற்
சித்திரமண்டபம்வயங்கச்சேக்கையின்
சத்தியவாமைமின் றளர்ந்ததன் மையை
வித்தகன்கண்டணைமிசையின்மேவினான். 30

ஓவியஞ்சுவைகெடுத் துயர்ந்தவுத்தமத்
தேவியையிருகையாற்றழுவச்சீறியே
காவியங்கண்கனல்கதுவநோக்கிநற்
றூவியோதிமநடைப்பாவைசொல்லுவாள். 31

பொய்யினைமெய்யெனப்புகன் றுமண்டர்க
டையலார்தனங்களைத்தழுவுஞ்சக்கரக்
கையவுன்மாயமாங்கலவிநச்சிலே
னெய்கவர்சோரனீநீங்குவாயென்றாள். 32

வேறு.

ஆனனங்கடுத்துச்செவ்வாய்துடித்திடவலகம்பஞ்சப்
பானலைப்பழித்தகண்கள்சிவப்புறப்பரமன் றன்னைத்
தானெள்கலுறவேயோதிச்சத்தியவாமையென்னுந்
தேன்மொழிபோதியென்னச்சீதரனகைத்துச்சொல்வான். 33

நாரதமுனிவனெய்திநவின் றிடுங்கலகச்சொல்லா
னேரிழைமுனியேல்வானேருலகினிலங்கிிற்கும்
பாரிசாதத்தையுந்தன் முன் றினிற்பதிப்பேனென்ன
வாரியனுரைத்துமார்பினணைத்தனன்றேவிதன்னை. 34

சுரிகுழன்மிசையிற்றெருங்கல்சூட்டியேதிலகந்தீட்டி
வரிநெடுங்கண்ணினீலவஞ்சனம்வரைந்துகாதின்
பருமணித்தோடுசேர்த்திப்பயோதரத்தாரம்பூட்டி
யரிவுறுஞெகிழிதாளினணிந்தனனுயர்கோமான். 35

இரவியோன்குடபாலேகவிந்துவானிலங்கித்தோன்ற
வரியுயிர்த்தேவிதன்னோடாரமுதருந்தியன்பாற்
பருமணிக்கட்டிலேறிப்பரிமளக்கலவைபூசித்
தருமலர்சூட்டியின்பந்தழைத்திடவமர்ந்தான்மாதோ. 36

அலரியோன்குணபாற்றோன் றவரியெழிற்றேவிதன்னோ
டிலகுமஞ்சனநீராடியிரணியவாடைசாத்திப்
பலகலனணிந்துமெய்யிற்பணிலமீனாரம்பூண்டு
நலனுறுமறையோராசிநவின் றிடவயங்கின்றான். 37

ஆயதோர்காலைதன்னினஞ்சிறைப்புள்ளின்வேந்தன்
மீயுயர்மகுடந்தோன் றவியாழமேனிறையப்பூண்டு
மாயிருளாலமெல்லாஞ்சிறகினான் மறைத்தேமாயன்
றூயநற்கமலத்தாளிற்பணிந்துகைதொழுதுநின்றான். 38

ககபதிதன்பொற்றோளிற்கருணையங்கடலாமாயோன்
செகபதிவிந்தையானதேவியுந்தானுமேற
நகபதிகுலையநாகமெலிந்திடநாகர்போற்ற
மகபதியுலகிற்சென்றான்மறைகளாற்கீதம்பாட. 39

கனகநற்கவிகையோங்கக்கவரிகண்மடவார்வீசத்
தினகரனவிரேபோன்றசெழுமணிக்கலன்கண்மின்ன
வினையகலுவணப்புள்ளாம்வீரியன்றோளின்மீதி
னனகன்மாதேவிதன்னோடமரர்தம்முலகம்புக்கான். 40

மாயவன்றேவிதன்னோவெணன்மேல்வருதல்கண்ட
வாயிரநயனப்பாகசாதனனணியினோடு
மீயுயர்கவிகையோங்கவிளங்கயிராவதத்தின்
றூயபொற்கிரீடமின்னச்சுரரெலாஞ்சூழவந்தான். 41

வேறு.

கின்னரர்தூயகிம்புருடர்சித்தர்க
ளின்னலில்வித்தியாதராரியக்கர்க
ளென்னியகருடகாந்தருவர்தும்புரு
மன்னியநாரதர்மகிழ்வினெய்தினர். 42

இரவியர்துவாதசர்வசுக்களெண்மர்வல்
லுராறுருபதினொருவிடையினுற்றவர்
மருதர்கள்சாரணர்வருணன்வண்மைசே
ரரனெழிற்சகாவுடனன்பினெய்தினர். 43

இத்தனைதிரள்களோடெய்தியிந்திரன்
சித்தசன்றனைத்தருஞ்சீதரன்றனைப்
பத்திசெய்தடியிணைபணிந்துபோற்றியே
வித்தகமாலுடன்வீதிமேவினான். 44

வீதியினரம்பைமேனகைவிளங்கிய
மாதுருப்பசிதிலோத்தமைமின்மாதர்கள்
சீதரன்மேனியைக்கண்டெசிந்தையி
னாதரவின்மயற்கடலுளாழ்ந்தனர். 45

கலையுடன்மேகலைகழலக்கைவளை
தலமிசைவதிந்துறத்தாளமாமணி
முலைமிசைதழலெழமுராரியாசையா
லுலையினின்மெழுகெனவுருகிநின்றனர். 46

வேறு.

சுத்தநான்மறையுச்சியிற்றுலங்கியசோதி
நித்தனாரணனின்மலன்மாதவனெடுமா
லத்திருவொராபதியச்சுதனெழிலுக்
கொத்தநாயகிசத்தியவாமையென்றுரைத்தார். 47

இன்னவாறெலாமியம்பியவரிவையரொருங்கு
மன்னுமாலினான்மாலின்மேல்வைத்தகண்வாங்கா
துன்னுமோவியம்போலநின்றார்சுரர்துதிப்பப்
பன்னகாசனன்மேன்மினோடெய்தினன்பரமன். 48

ஒய்விலாதுமாமுரசுதுந்துமியெலாமொலிப்பத்
தூயதும்புருநாரதர்சுருதிகள்பாட
வேய்கொடோளிகள்கருப்புரவிளக்கங்கையேந்த
மாயன்வாசவன்கோயிலினெய்தினன்மகிழ்ந்தே. 49

உததியிற்றுயிலுத்தமனென்றுணரேன்பெண்
மதிதனிற்சுதனெனநினைந்தேனினிமாயாப்
பதிதனைத்தருவாயென்றுபகர்வனென்றுள்கு
பதிதிபங்கயவடிமிசைபணிந்தனனமலன். 50

மாயன்வந்தடிபணிதலுமாயையின்மறந்து
நேயம்விஞ்சியவதிதிதன்சுதனெனநினைந்தே
யாயர்தம்பெருமான்றனையன்பினாற்றழுவித்
தூயசத்தியவாமைமின்றொழுதிடவைத்தாள். 51

கடியனாநரகாசுரன்கவர்ந்தகுண்டலமுங்
குடையுமாவணிச்சயிலமுங்கொடுத்திடமாய
னடியினிற்பணிந்தாயிரவிலோசனன்போற்ற
நெடியமாதவனிருந்தனனிறைதவர்சூழ. 52

அன்னமென்னடைச்சத்தியவாமையயன்பால்
மின்னிடைச்சசியெதிர்ந்துறத்தழுவியேவிளங்கும்
பொன்னினன்மணிப்பொற்புடையாதனத்திருப்ப
மன்னிவெண்கவரித்திரள்மாதர்வீசினரால். 53

கீதவீணைகள்கிளிமொழிமடந்தையரிசைப்ப
மாதரார்கள்பல்லாண்டுரைவழங்கவிந்திராணி
சூதின்மேல்விருப்புற்றனளாகியேதுலங்கும்
பூதநாயகன்றேவிதன்னோடிவைபுகல்வாள். 54

சூதுநாமிருவோர்களும்பொருவம்யான்றோற்கி
லேதமில்லவண்பாரிசாதகமலரீவ
னீதுநிச்சயமென்னவேசத்தியவாமை
யாதவனருண்மணிபணையம்மெனவறைந்தாள். 55

இருவருமணிப்பலகையின்கயிற்றினையெறிந்தே
வருணமுற்றிடுஞ்சாரிகைபற்றித்தன்மதியின்
விரகினாடியிந்திராணிமின்றோற்றிடவென்றாள்
சரியிலாதவொண்சத்திராசித்துவின்றனையள். 56

வாரிசூடுவராபதிமன்னவன்மனையா
ளேருலாவியவிந்திரன்றேவியைவெல்லச்

சீருலாவியநிலமிசைத்தேன்மொழியார்கள்
பாரிசாதமாமலரினைப்பறித்திடச்சென்றார். 57

அரியுறுங்குழலரிவையரடைந்திடுமெல்லை
தருவினுண்மலர்காத்திடுமடந்தையர்சலத்தா
லிருகண்ணுலழலுறவிருநிலத்தினிற்பிறந்த
தெரிவைமீர்கடிதேகுமினென்றுசெப்பினரால். 58

சுரர்தந்நாயகன்றேவிதன்குழலினிற்சூடுந்
தருவினுண்மலர்சத்திராசித்துமன்றந்த
தெரிவைநத்திடின்வாய்க்குமோசீரின்மானிடவ
ரரிவைமீர்கடிதேகுமென்றடர்த்திடமீண்டார். 59

மீண்டமாதர்கள்விபுதமங்கையர்சொலைவிளம்ப
மூண்டவெஞ்சினமுடுகியேசத்தியவாமை
யீண்டுநீவிரென்கொழுநனைக்கொணர்திரென்றியம்பப்
பூண்டவன்பினோடரிவையர்விரைவினிற்போனார். 60

தாவியன்றுலகளந்தவன்றனினிற்பணிந்துன்
றேவியுன்றனைவருகெனச்செப்பினளென்றே
காவிநேர்விழிக்காரிழையார்கள்கட்டுரைப்பத்
தேவர்மன்னனையொருவியேமனைவிபாற்சென்றான். 61

வந்தமாயனைச்சத்தியவாமைதான்வணங்கி
யிந்திராணிசூதாடியேதோற்கவென்மடவார்
கந்தநாண்மலர்பறிக்குமுன்காவன்மங்கையர்க
ணிந்தைகூறியவாறெலாநிகழ்த்தினண்முனிந்தே. 62

பாரிசீறியேபகர்ந்திடப்பாரிசாதத்தை
வேரொடுங்கொணர்ந்துவணன்மேல்வைத்துயர்விமல
ஞாமார்புறவரிவையர்கவரிகள்வீசத்
தார்கொடேவியோடேகினன்றனிக்குடையிலங்க. 63

வயினதேயன்மேற்பாரிசாதத்தினைவைத்துப்
புயலின்மேனியன்பெயர்ந்திடக்கண்டபுத்தேளி
ரயில்கள்வேன்மழுவங்குசமெறிந்தடர்ந்தார்த்தே
யெயிலெரித்தவன்வெருவிடவெங்கணும்வளைந்தார். 64

வேறு.

வாசவன்வெள்ளயிராவதமேறிவளைந்திடவானவர்க
ளாசுகமாரிபொழிந்தயில்வாள்கதையங்குசம்விட்டெறிய
மாசகலுந்தருவைக்கொடியாதவபோகலையென்றுவசை
பேசியடர்த்தனர்கும்பிகைசங்குயர்பேரிமுழங்கிடவே. 65

விடையரியக்கர்கள்சாரணர்சித்தர்கள்விபுதர்மருத்துவர்கள்
கொடியுறுதேரினர்புகரிபமீதினர்குரகதமேல்வருவோர்

வடிவுடைவாளினர்வரிசிலையால்விடுபகழிகள்வாரியுறுங்
கடிவிடமாமெனமூடிகிறைந்தனர்ககனமுமாசையெலாம். 66

கடமுறுவெங்கரியிறையுடனமரர்கள்கணைகள்பொழிந்திடமால்
படியுயிர்மால்வரைதிகழவயங்கியபணிலமுழக்கிடவே
கடலரவந்திசையுறுகரியஞ்சினகமலனடுங்கினன்வான்
வெடிபடுகாலமிதாமெனவிபுதர்கள்வெருவிவிழுந்தனரால். 67

மகபதியுடனிமையோர்கள்கலங்கிமயங்கிவிழுந்திடவே
ககபதிமீதுதருக்கொடுதுவரையினிற்கடிதெய்தியிட
நகபதிநல்கியநாரிதன்ஞயகனிடர்களைநாரணனைச்
செகபதியாகியுயர்ந்திடுமுக்கிரசேனனணைத்தனனால். 68

மாயவனெய்தியேதந்தையையன்பின்வணங்கியெழுந்துமகிழ்
தாயர்கள்பாதமிறைஞ்சிமுன்னோனடிதாழ்ந்துதன்ஞயகியா
மாயிழைசத்தியவாமையிஞண்மனைமுன்றிலினழகுறவே
மீயுயர்தருவினைவைத்தவளோடும்விளங்கியிருந்தனனால். 69

பாரிசாதப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 748.

---

90 - வது, சுபத்திரையார் திருக்கலியாணப் படலம்.

சூலியையருச்சித்தெட்டுத்திசையினுந்தாவித்தூய
வேலையைக்கடைந்துவாலிற்றெசமுகன்றன்னைவீக்கி
யாலம்போலடர்ந்துதாக்குந்துந்துமியர்வியுண்ட
வாலியைவதைத்தமாயோன்மலரடிமனத்துள்வைப்பாம். 1

சீலமார்வசுதேவன்பொற்புடையரோகணிசேயான
தாலகேதனன்கார்வண்ணன்சபையகத்திருக்கத்தந்தை
பாலினேர்மொழியாளானசுபத்திரைப்பாவைக்கொத்த
கோலமார்மகுணனுரென்றுரைத்திடவிராமன்கூறும். 2

துடியிடையரம்பைநாணுஞ்சுபத்திரையானமாதைப்
படவரவுயர்த்தகோவுக்கீவமென்றுரைப்பப்பாம்பி
னடமிடும்பரமனீதேநலனெனக்கோயில்புக்கி
வடிவுடைவிதர்ப்பனல்குமங்கையோடிருக்குநாளின். 3

சந்திரன்போலக்கொற்றத்தனிக்குடைவயங்கத்தர்ம
னிந்திரப்பிரத்தந்தன்னிலிருந்தரசாளுநாளி
னந்தணர்பசுவைவேடர்கவர்ந்திடவமரர்கோமான்
மைந்தன்வெஞ்சினத்தினேடுமெறனருள்மகன்பாற்சென்றான். 4

அருமறையோர்களாவையெயினர்கள்கவர்ந்தாரென்றே
யுரைசெயவிசயன்சென்றோராசனமிசையினுங்கார்

தருமனேடிலங்குகின் றதுரோபதிதன்னைக்கண்டு
பெருகியாதிகளாடவிடைபெற் றப்பெயர்ந்தானன்றே. 5

சரயுகாளிந்திமந்தாகினிசரசுவதிகோதா
விரியுயர்வேணிபம்பைவிளங்குகாவேரியெல்லாஞ்
சுரர்கடங்கோமான்மைந்தனுடியேநாயசேது
வருவினைதீர்க்கும்வாரியயத்தினிற்படிந்தான்மாதோ. 6

உரகலோகத்தினெய்தியுலூகியைவேட்டுத்தூய
பரிகரியிரதஞ்சூழ்ந்தபாண்டியராசன்பாவை
விரைகமழ்குழலினுள்சித்திராங்கனையென் னுமின்னை
வரிகழல்விசயனன்பான்மதுரையின்வதுவைசெய்தான். 7

தூயதென்மதுரையோவித்துவரையினேகத்தேவர்
நாயகன்மைந்தன்முக்கோல்கொண்டுநான்மறையோனுகிச்
சாய்விலாதுயர்ந்தநாமம்பன்னிரண்டொளிரச்சாத்தி
யாயிரநாமமோதுமறிஞர்போலாயினுனல். 8

சங்குசக்கரந்தோண்மீதிற்பொறியுறநாமஞ்சாத்திச்
செங்கையின்வயங்குமுக்கோற்றிருத்துழாய்மணிவடஞ்சேர்
பங்கயமணிகொண்மாலைபவுத்திரமாலையெல்லா
மங்கமீதிலகக்காவியாடையுந்திகழவந்தான். 9

சீலமாரெதிகளுதன்சேர்தலுமகிழ்ந்துசிந்தை
தாலகேதனனுஞ்சங்குசக்கரந்தரித்தகோவுங்
காவினிலிறைஞ்சித்தூயவருக்கியக்கடன்கள்செய்து
கோலமாராதனத்தினிருத்தியேகூறலுற்றூர். 10

சிதரன்வடிவம்போலச்சிறந்தபாகவதவுன் றன்
பாதமார்தூளியாலேபவுத்திரராஞேம்யாமென்
ரோதியுன்பதியேதென் றங்குரைத்திடவுருவமாறு
மாதவனவருக்காசிமொழிந்திவைபகர்வான்மாதோ. 11

எதிகளுக்கச்சுதன் றன் னிருப்பிடம்பதியாம்யாம்வா
னதியினீராடிச்சேதுபொருனையிற்படிந்துகன்கோ
மதியினீராடிவந்தேமென் றலுமதியார்வண்ணன்
சதுமறைமுனிவன் றன்னைநோக்கியேசாற்றலுற்றுன். 12

இன்னலின்முனியாஞ்செய்ததவத்தினுலெய்தினுய்நீ
யன்னமென்னடையாளெங்கைசுபத்திரையமிர்தமன்ன
கன்னிநன்மனையினெய்திக்கடத்தினிற்சுயம்பாகஞ்செய்
யன்னநீயருந்தியென்னவறைந்தனனலாயுதத்தோன். 13

அறைந்திடுமிராமநம்பிக்காசிகண்மொழிந்துவேத
நிறைந்தநாமுனிவனுயநிருபன்பொற்கலன்களெல்லாஞ்
செறிந்தகந்தரத்தளாயசுபத்திரைசெம்பொற்கோயி
லுறைந்தோராசனத்தின்மீதினுவந்தவனிருக்கும்வேலை. 14

கந்தரம்பிறைவில்வாளிகவினுறுமெட்பூவள்ளை
யிந்துவின்வட்டமாம்பலிலங்குநித்திலத்தின்பத்தி
நந்துவேய்காந்தளோங்குநளினவொண்முகைமின்னேந்தி
வந்தபொற்கொம்புபோலச்சுபத்திரைவணங்கினாள். 15

வணங்கியேயெழுந்துநின்றமாயவன்றங்கையென்னு
மணங்கினைக்கண்டகண்கள்சிமிட்டிலானனங்கன்வில்லான்
மணங்கமழ்விசிகமெய்யவருவதுபோவதாகிப்
பிணங்கியவாவியோடுமோசிகள்பேசினானால். 16

எதியெனவிருந்தான்றன்னையிருகணாலமையநோக்கி
மதியெனும்வதனமங்கைமாதவநீதான்வைகும்
பதியெதிவ்வூரின்வந்தகருமநீபகர்தியென்றே
சுதையெனமொழிதலோடும்விபுதர்கோன்சுதனுஞ்சொல்வான். 17

இந்திரப்பிரத்தமென்னூர்யானந்தப்பதியையோவி
யந்தரநதியினாடியழகியகுமரிகன்னி
சிந்தையின்மகிழ்வினோடும்படிந்திந்தத்திருநகர்க்கே
வந்தனன்றீர்த்தமாடும்பலனிவண்வாய்க்கவென்றான். 18

நெறியுறப்பகர்ந்தான்றன்னைநோக்கிநேரிடையணங்கு
கறைமிடற்றரனால்வெந்தகாமனல்லுருவம்பெற்று
மறையவனாயினானேமறைந்திவண்வந்தான்செய்கை
யறிவனென்றுளத்தினுள்ளியன்பினான்மொழியலுற்றாள். 19

இந்திரப்பிரத்தந்தன்னிலிருந்தநீயாகிற்பாண்டு
மைந்தரிற்றருமன்வீமன்மாவலோன்சகாதேவன்றான்
குந்திதன்னுடனெல்லோருங்குறைவிலாதிருந்ததன்மை
கந்தநன்மலரோனொக்குமுனிவகட்டுரைத்தியென்றாள். 20

நந்தணிகரத்தின்மங்கைநவின்றிடவிசயன்பாற்
குந்திதன்புதல்வர்நால்வர்தங்களைக்குறித்துக்கேட்டா
யிந்திரன்சிறுவன்றன்னையியம்பிடாதிருந்ததன்மை
சுந்தரிமொழிதியென்னச்சுபத்திரைபகரலுற்றாள். 21

தரையினினதியிற்கங்கைதாரகைதன்னிற்பண்டி
விரைமலரதனிற்சாதிவிழுமியதானாற்போல
வரசரிலருச்சுனன்றானற்புதமாதலாலவ்
வொருவனைத்தனித்துக்கேட்கவுன்னினேனென்றுசொன்னாள். 22

மாதிவைமொழிதலோடுமெகிழ்வுடன்வலாரிமைந்த
னீதிசேர்விசயனந்தப்பதியினைநீங்கியேகி
மாதவனாகிமந்தாகினிமுதனவதீர்த்தங்க
ளேதரவாடித்தூயசேதுவிற்படிந்தபின்னர். 23

மின்னிடையுலூகியென்னும்வியாழராசன்றான்பெற்ற
கன்னியைவதுவைசெய்துகடிபொழின்மதுரைதன்னிற்

றென்னவன்குமரியென்றுஞ்சித்திராங்கனையாமாதை
மன்னவன்வேட்டபின்னர்வந்துமுன்னிருந்தானென்றான். 24

என்றவனுறைப்பக்கேட்டேயிருகையிற்சிலையினாரி
யொன்றியசமும்பினாலுமுருவத்தினதிகத்தாலும்
வென்றிகொள்விசயனாமென்றுன்னியேவிரகத்தோடு
மன்றலர்குழலியெய்துநாணத்தான்மறைந்துநின்றாள். 25

ஆயதோர்காலைதன்னிலயமுறும்பிரபாசப்போர்த்
தூயமாநதியின்மேகஞ்சொரிதலும்புதுநீராட
மாயவனலாயுதக்கோன்றந்தைதாயினர்கண்மன்னர்
நேயமோடெய்தியாற்றின்கூலத்துணிறைந்துசேர்ந்தார். 26

நதியிடைமன்னரேகநாயிறுமறைதலோடு
மதியுயர்வானினெய்சமகபதியருளுமைந்தன்
சதுமறைமுனிவனாகிச்சார்ந்திடவசுதேவன்றன்
புதல்விகண்டுலப்பிலாதகாமத்தீப்பொறுக்கிலாதாள். 27

கையினில்வளைகள்சோரக்கலிங்கம்பார்மிசையின்வீழ
மெய்யெலாம்பசலையாகவிரைகமழலங்கறியத்
துய்யரித்திலத்தின்மாலைகருகிடத்துவளுமங்கை
யுய்வகையிலள்போலொன்றுமுணர்விலளாகிச்சோர்ந்தாள். 28

பஞ்சணைமிசையிற்சோர்ந்தபாவையைக்கண்டமாத
ரஞ்சினரெடுத்துக்கையாலணைத்திமசலத்தையப்ப
வஞ்சிநுண்ணிடையாடேறிமன்மதபாணமேன்மேல்
விஞ்சிடமதியாற்கொங்கைவெதும்பிடவிளம்பலுற்றாள். 29

நிசியுறுசசிகொள்வெண்மைநெருப்பினையிறைப்பவாவி
பசையறவுலப்பிலாதபருவரலெய்துமென்மேற்
சுசியுறுகணைகண்மாரன்சொரிந்தனனந்தோதுய்ய
விசயனின்றணைத்திடானேல்வீடுவனென்னும்வேலை. 30

மன்னரெண்வலாரிபெற்றபற்குனன்வசுதேவன்றன்
கன்னிதன்னெழிலைநோக்கிக்காமவேள்சரந்தன்னாக்கை
துன்னவெண்மதித்தீயெங்குஞ்சொரிந்திடவயரும்வேலை
மின்னுசக்கரத்தானெய்திவிசயனைத்தழுவிக்கொண்டான். 31

நள்ளிருளதனிலெய்துநாரணன்விசயன்றன்னைத்
தெள்ளியமறையையோதித்திருந்துபாகவதர்போலக்
கள்ளனீயெய்தினாலுங்கவினுறுகன்னிதன்னை
வெள்ளைநீர்வண்ணனீயானென்றுரைவிளம்பிநக்கான். 32

மைத்துனன்றன்னைநோக்கிநகைத்திந்தவசனங்கூறி
வித்தகனெங்கைதன்னைத்தருவனென்றுரைக்கும்வேலை
சித்தர்கந்தருவர்தேவர்திலோத்தமைமுதலோர்சூழச்
சுத்தவெண்கரியின்மீதிற்றோன்றினனமரர்கோமான். 33

தவர்களெல்லோருஞ்சூழத்தவுமியமுனிவனெய்த
நவமணித்தூண்கடென்னுமண்டபநாப்பண்மீதே
கவரிகடிசழத்திபசிரைகள்காரிகையரேந்த
வுவமையின்விசயன்சிங்காதநத்தின்மீதொளிரும்வேலை. 34

ஏடவிழலங்கலைம்பாலிலங்கிடத்திலகமின்னத்
தோடிருகுழைகளாடத்துலங்கியகொங்கைமீதி
னாடகக்கலன்கடோன்றவம்பொன்மேகலைவயங்கப்
பாடகஞ்சதங்கைதண்டைபரிபுரமார்க்கவந்தாள். 35

கங்கணமிலங்கநொய்யமருங்கினிற்கலிங்கஞ்சூழச்
செங்கையின்வளைகண்மின்னச்செழுமலர்க்கொம்புபோல
மங்கையர்திலதமான சுபத்திரைவடிவமிக்க
பங்கயமடந்தைநாணப்பார்த்தனோடிருந்தாண்மாதோ. 36

இந்திரன்முனிவர்சித்தரியக்கர்சாரணர்கடேவர்
சுந்தரமிகுத்தவானினரம்பையர்முதலோர்சூழ
நந்துதுந்துமிகளார்ப்பத்தவுமியனலங்கொளோம
மந்தணர்சூழச்செய்தேயாசிகள்வழங்கினரால். 37

சங்குதுந்துமிகளார்ப்பத்தனஞ்செயன்றனக்கன்பாலே
யெங்கையையளித்தேனென்றேயாதவனுதகஞ்செய்யச்
செங்கையாலேற்றுப்பார்த்தன்சிறந்தமங்கலநாண்கையான்
மங்கைதன்சிரதரத்திற்சேர்த்தனன்வானோர்வாழ்த்த 38

அருமறையவர்கணெய்யினாகுதிநிறைத்ததீயை
வரிகழல்விசயன்றேவிதன்னொடும்வலமாய்வந்து
பொரியிறைத்திருபாதத்தைப்புரந்தரன்புதல்வன்பற்றத்
தெரிவையர்திலகமம்மிமிதித்தனடேவரேத்த. 39

அருந்ததிதன்னைத்தேவிதன்னொடுமமையநோக்கிக்
கருந்தடங்கண்ணியோடுங்கண்ணனைவணங்கிப்பின்னர்
புரந்தரன்றனையிறைஞ்சமற்றவன்புகழ்ந்துவாழ்த்திப்
பெருந்தவரோமொலால்விடைபெற்றுப்பெயர்ந்தான்மாதோ. 40

மைத்துனன்றனக்குந்தங்கைதனக்குமாமணிகள்வாரி
நித்திலக்கலன்களீந்துநீயெழிற்றேவியோடுஞ்
சித்திரவிரதமேறிவிந்திரப்பிரத்தஞ்செல்கென்
றுத்தமனருளிப்போனானுயர்நதிக்கரையினம்மா. 41

மாயவன்போனபின்னர்விசயன்மாதேவியோடுந்
தூயபொற்கலத்தினன்னமருந்திநற்சுகந்தங்கோட்டிப்
பாயலிலெய்திப்பஞ்சபாணமெய்மதனன்வெள்கிச்
சாயவேசுரதநூதலின்றவறிலாப்போகஞ்செய்தான். 42

இருவருமொருவர்போலவிணைமுலையிறுகப்புல்லிப்
பரிபுரமரற்றக்கையின்பணிலங்களொலிப்பத்தாரி

னரியினமுாலப்போர்கந்தணிந்தபினன்பினேடும்
விரிமணித்தேரின்மின்னேடேகினன்விசயன்மன்னே. 43

அலரியோன்குணபாலெய்துமுன்னரினயம்பூண்டேரின்
வலவனும்மங்கையூரமகபதியருளுமைந்தன்
கலனெலாமிலங்கப்பாரினேகிடக்கண்டவீரர்
பலர்விலாற்பகழியெய்துபணிலங்கண்முழக்கியார்த்தார். 44

வேறு.

சங்குவினேரிரதந்தனிலேயுயர்கடல்வண்ணன்
றங்கைதனைத்திருடிக்கொடுதரைமிசைச்செல்கள்வா
வெங்கடவேகுதியென்றயில்வேல்களெறிந்தார்த்தே
மங்குல்கள்போலெழுமாகரிதேர்கள்பதாதிவளைத்தனரால். 45

பேரியறைந்தனர்பணிலமுழக்கினர்பிறைவாளி
நேருறவெய்தனர்நிலமிசைநிருபர்கள்கதம்விஞ்ச
நாரியர்திலகமின்விடுமிரதஞ்செலுநெறிநண்ண
வீரியவிசயன்முனிந்துயர்பகழிகள்விட்டானுல். 46

தோலினமற்றனவற்றனதுவசநெடுந்தேர்கள்
வாலிருதொடைகுரமற்றிடமாண்டனவயவாசி
காலரையுரமொடுகேவசமுமற்றனர்வயவீரர்
நாலிருதிசையினுமுற்றுநடித்தகவந்தங்கள். 47

ஆடினவலகைகடசையுறுகுருதிகளாறேபோ
லோடினவாடவர்வாசிகளும்பல்கணிறையெல்லாம்
வீடினமின்விடுதேரினில்விசயன்றன்விறலெல்லா
மோடியதூதரியம்பினர்பால்வணவிறையோடே. 48

மாதுறுதேரினின்விசயனடாத்திடும்வலியெல்லாந்
தூதருரைக்கவிராமன்முனிந்துதொடர்ந்தோட
யாதவன்முன்னவனைத்தொழுதிச்சமர்தவிர்கென்றே
யோதவலாயுதன்மீண்டனனெழுசினமொருவத்தான். 49

மாயவன்மொழியினலாயுதன்மீளமணித்தேரின்
சீயமெனப்பொருதரசர்கள்பாறிடவேசென்றே
யாயிழையாளுடனன்பொடுபெற்குனனெறியெய்தி
யேயெனுமுன்பலயோசனைசென்றனனெழிலோடே. 50

வேறு.

நந்தணிகரத்தாளாயசுபத்திரைநங்கையோடுஞ்
சிந்தையின்மகிழ்ந்துபார்த்தனிந்திரப்பிரத்தஞ்சென்றே
யந்தமாரறன்சேய்பாதத்திறைஞ்சியேயன்னையான
குந்தியைவணங்கிவீமன்குரைகழற்சென்னிவைத்தான். 51

மாயவன்றங்கையானசுபத்திரைமகிழ்வினேடுந்
தாயநற்குந்திதாளிற்பணிந்தெழிறுலங்குகின்ற

வாயிழையவர்களெண்ணுந்துரோபதையடியின்வீழ
வேயெனுந்தோளிதங்கைமெய்யினைத்தழுவிக்கொண்டாள். 52
முரசுயர்வேந்தன்செங்கோன் முறைமையினடத்திப்பாரி
னரசெய்திமகிழப்பார்த்தனச்சுதன்றங்கையோடும்
விரைகமழலங்கல்சூடிமெய்யினிற்கலவைபூசி
யிரவுநன்பகலுநீங்காதின்பமோடிருந்தானிப்பால். 53

சுபத்திரையார் திருக்கலியாணப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 801.

91 - வது, வசுதேவர் வேள்விப் படலம்.

பவந்தனூற்றிரண்டமெய்யன்பாருறுசெந்துவெல்லா
நிவந்திடுங்கையால்வாங்கியகட்டினைநிறையத்தூர்க்குங்
கவந்தனைக்கரத்தின்வாளாற்றரித்தகாகுத்தன்பாத
முவந்தியாந்தொழுவந்தொண்டருறுவினையொருவிவாழ. 1
எங்கையைக்களவிற்கொண்டேகினன்விசயனென்று
வெங்கனல்பொழியுங்கண்ணனலாயுதன்வெகுண்டுசெல்ல
வங்கவன்முனிவைமாயனகற்றியந்நதியையோவி
வங்கமாருவரிசூழும்பதியின்வந்திருந்தநாளின். 2
சூரியன்கிரணந்தோன்றத்துவரையையொருவிமாய
னேருறுதந்தைதாயருருப்பிணிமுதலோரெல்லாம்
பாரினினிலங்குகின்றசமந்தபஞ்சகநீராடத்
தேரின்முன்னவன்றனோடும்பல்லியங்கறங்கச்சென்றான். 3
பரசுராமன்கையேந்துங்கணிச்சியாற்படியையாளு
மரசர்களெழுமூன்றாயதலைமுறையடங்கநூறித்
திரையுறுகுமரிசேர்ந்தசமந்தபஞ்சகத்திற்சென்றே
யரியுடன்மகிழ்ந்தெல்லோருந்தடாகநீராடினாரால். 4
தலவுபவாசம்பண்ணித்தானங்கள்பலவுஞ்செய்து
நலனுறவனைவரோடுநாரணனிருக்கும்வேலை
நிலனுறுநிருப்ரோடுஞ்சமந்தபஞ்சகநீராடக்
கலனுரமிலங்கச்சென்றான்கட்செவியுயர்த்தகோமான். 5
அரவுயர்வேந்தன்றன்னையரியுறத்தழுவியன்போ
டிருநிலத்திருக்கமந்தாகினிசுதன்விதுரனெய்திப்
பரிவுடன்வணங்கத்தூயதுரோணனும்பகர்ந்தானாசி
கிருபர்களெல்லாமெய்தித்தொழுதனர்நேமியோனை. 6
இந்திரப்பிரத்தந்தன்னினிலங்கியதருமன்வீமன்
சுந்தரவிசயன்றூயமத்திரைசுதர்களோடு

குந்தியாண்டெய்தக்கண்டமாயவன் பணிந்துகோதி
லந்தமாறன் சேய்தன்னையன்பிறேடிறைஞ்சினுல். 7

வாயுவின் மகனையன் பின்வணங்கிவில்விசயன் றன்னை
நேயமோடிரத்தினாத்தழுவியேசின் றமாலைத்
தூயமாநகுலன்பின்னேனுடனடிதொழுதலோடு
மாயவனவரையன் பினணைத்துளமகிழ்ந்தான்மன்னே. 8

மன்னவன்பாஞ்சாலன் றன்மகடுரோபதையாமங்கை
பன்னகமடந்தை தூயசுபத்திரைபாரிற்றுய்ய
தென்னவன்வரத்தாற்பெற்றசித்திராங்கனைதன்னேடு
மின்னுநேமியன் றன்பாதத்திறைஞ்சினர்மகிழ்வுவிஞ்ச. 9

நந்தனேடசோதைநங்கைநலனுறுமாதரோடும்
வந்திடக்கண்டமாயன் றந்தையைவணங்கித்தூய
சிந்தையளாயவன்னைசேவடியிறைஞ்சலோடு
மைந்தனைத்தழுவியன்பின்மடிமிசைவைத்துக்கொண்டாள். 10

பரிவினேடுச்சிமோந்தவசோதையைத்தழுவிப்பாம்பின்
சிரமிசைநடித்தவையன் மகிழ்ந்திடச்சீர்கொளாய
ரரிவையர்குழாங்களெய்தியரியினையிறைஞ்சிநின்றே
யெரியுறுதுப்பாமென்னவுருகியேயின்பமுற்றார். 11

சிந்தையின்மகிழ்வினேடுதிறல்வசுதேவன்றன்னைக்
குந்திவந்திறைஞ்சியுன்றன்மருகர்கள்குறைவுதீர
வந்திலயென்றுகண்ணீர்நிலனுறவருந்துவாளைச்
சுந்தரவரிதன்றாதையணைத்திவைசொல்லலுற்றான். 12

கஞ்சன்வெஞ்சினத்தினெம்மைக்கடுஞ்சிறையிருததியென்றன்
மஞ்சனைவதைக்கவெண்ணிலசுரரைவிடுத்துவஞ்சம்
விஞ்சியகயவன்செய்தவினையினுல்வந்திலேனீ
பஞ்சவருடனென்றாற்பருவரலுற்றாயென்றான். 13

தேவகிகுந்திதன்னையன்பொடுதழுவச்சீரா
மாவடுவகிரின்கண்ணியுருப்பிணிமுதலாமாத
ராவலினைவரன்னையடிமிசைவணங்கவாசி
நாவினினவின்றுபின்னர்நலனுறவணைத்துக்கொண்டாள். 14

குந்தியையலத்தோனன்னைதழுவித்தேவகிக்கொம்போடுஞ்
சிந்தையின்மகிழ்வோடெய்துமசோதையையணைக்கச்சீரா
மிந்துநேர்வதனத்தன்னவுருப்பிணிமுதலெல்லோரும்
நந்தனன்மனையாடாளினலனுறவிறைஞ்சினரால். 15

விரைசெறிகுழற்பாஞ்சாலிமீன்விலோதனன்றன்பாவை
யுரகமன்பயந்தவுாகிசுபத்திரையுடனெல்லோரு
மரசரெண்விதர்ப்பன்பாவைமுதலரிவையரையெல்லாம்
பரிவுடன்றழுவிமாலினன்னையைப்பணிந்தாரன்றே. 16

தூயபாஞ்சாலன்பெற்றதுரோபதையன்பினாலே
வேயுறுதோளியானவிதர்ப்பன்மாமகளைநோக்கி
மாயவன்றனக்குநீயிர்வதுவையாயினவாறெல்லாம்
நேயமோடுரைத்தீரென்னவுருப்பிணிநிகழ்த்தலுற்றாள். 17

மாதவன்றனக்குயானோர்தூதனைவிடுப்பவந்தச்
சீதரனெனைத்தேரேற்றிச்செறுநரையமரின்வென்றே
யோதமாருவரிசூழ்ந்ததுவரையினெய்தியூங்கார்
வேதியர்வளர்க்குமோமம்விளங்கிடமணந்தானென்றாள். 18

பரியொடுபிரசேனன்றான்மடிந்திடப்பாய்ந்துசெற்ற
சரியிலாமடங்கறன்னைவதைத்தவென்றந்தைதன்னோ
டிருபதோடெட்டுநாட்போர்செய்யரிக்கென்னோடென்றீப்
பருமணிதனையுமீந்தானென்றனளெண்கின்பாவை. 19

அனுசனைச்செற்றசீயந்தன்னையாண்டடர்ந்துசெற்ற
சினமலியெண்கைவென்றுசமந்தகமணியையீய
மனமகிழெந்தையென்னைமாயனுக்கீந்தானென்று
தனமிருகலசம்போன்றசத்தியவாமைசொன்னாள். 20

ஆதவன்பயந்தநங்கையாயினேன்மாலைநத்தித்
தீதகலமுனையாற்றிற்சிறந்திடுங்கூலந்தன்னின்
மாதவம்புரிவேன்றன்னைநோக்கியேமகிழ்வினாற்சேரி
யாதவன்மணந்தானென்றுகாளிந்தியியம்பினாளால். 21

இலங்கியவவந்திமன்னன்புதல்வியானவையுளெய்தி
யலங்கலையரிதன்றோளினிடவெதிரரசரெல்லாங்
கலங்கியேயோடக்கண்டுமாலெனைக்கலந்தானென்று
துலங்கியகலன்கள்பூணுமித்திரவிந்தைசொன்னாள். 22

நிகரில்செங்கோலையோச்சுங்கவுசலநிருபன்பெற்ற
மகளியானரசரோடுமெலைந்தவேழ்விடைகடன்னைச்
செகதலமிசையிற்செற்றுமாலெனைச்சேர்ந்தானென்று
நகிலெழிலிளநீர்போன்றநாக்கினசித்துச்சொன்னாள். 23

மாவணியிரதஞ்சூழ்ந்தமத்திரன்மகளியான்மாயன்
மூவுலகளந்தகீர்த்திமொழிந்தவன்படிவமுற்று
மாவலின்வரைந்துபார்க்குமோவியமதனுட்டோன்றி
மேவிமான்மணந்தானென்றேபத்திரைவிளம்பினாளால். 24

கோலமார்பத்திரன்றானல்கிடுங்கோதையென்னை
சேலறவெய்தானுக்கேயீவனென்றெந்தைசெப்ப
வேலொளிர்விசயனெய்யத்தப்பியகயலைவீழ்த்து
மாலெனைமணந்தானென்றேயிலக்கணையுரைத்தாண்மன்னோ. 25

வரிசிலைநரகன்றன்னைவதைத்தவன்சிறையில்வைத்த
வரசர்களிடரைநீக்கியவர்கடாம்பயந்தகோதி

தெரிவையரியாங்களெண்ணீராயிரம்பெயரைச்சிரா
யொருமுகூர்த்தத்தின்மாயோனுற்றவண்மணந்தானென்றார். 26

சயிலக்குன்றேந்திமாரிதடுத்தவனெழிலினாலே
மயலுறுவோமைப்பெற்றமன்னர்கடிவரையெய்தி
யியல்புடனியாங்களீரைம்பதின்மரையீந்தாரென்றே
யயில்விழியணங்கினார்களன்பினோடறைந்தாரன்றே. 27

எண்ணிரண்டாயிரத்துநூற்றெட்டாமெதிரின்மாதர்
கண்ணனைவிரும்பித்தாங்கள்கலந்தனகழறலோடும்
புண்ணியம்புரிந்தமங்கைதுரோபதையுலூகிபொற்பார்
மண்ணினையாளுந்தென்னன்மகளிவர்மகிழ்ந்தாரன்றே. 28

மாதவமுலப்பிலசெய்துமண்மிசைப்பிறந்துநீயிர்
சீதரன்மார்பிற்சேர்ந்துதிருவினுமதிகமானீ
ரேதுமக்கரியதென்றேயிறைஞ்சினளவர்தோள்சேர்
கோதைகோதிலாதஞானம்படர்ந்திடக்கொழுகொம்பானாள். 29

வணங்குபாஞ்சாலிதன்னைவண்மைசேர்விதர்ப்பன்பெற்ற
வணங்கிருகையினாத்தழுவியாதனத்தினுய்த்து
மணங்கமழ்குழலினார்கண்மருங்குறக்கவரிவீசக்
குணங்களிற்குறைவிலாதகொம்பினிதிருந்தாளன்றே. 30

வேறு.

புலத்தியனகத்தியன்புலகன்மார்க்கண்ட
னலத்துறுமியாக்கியவற்கனாரதன்
சலத்தினைவென்றவங்கிராதவத்தினிற்
பெலத்தொளிர்பிருகுமாமுனிபிரகற்பதி. 31

வாமதேவனுயர்வசிட்டமாமுனி
நாமமறைமணத்திடுவியாசனற்றவன்
பூமியிற்பராசரனோடுபோதவே
காமனைப்பயந்தருள்கண்ணனகண்டனன். 32

கண்டெழுந்துலப்பிலாக்களிப்பினெய்தியே
யெண்டவரடிமிசையிறைஞ்சியீனமில்
புண்டரீகனைநிகர்முனிவர்போந்ததென்
பண்டைநல்வினையெனப்பகர்ந்துமாயவன். 33

அருந்தவர்க்கருக்கியமளிக்கவனபுளம்
பொருந்திடவாசிகள்புகன்றெல்லோர்களு
மிருந்திடநீரிவணெய்தயான்செய்த
பெருந்தவப்பயனெனமாயன்பேசுவான். 34

படிமிசையெய்துமுன்பதுமம்போன்றொளி
ரடிகளிற்பணிந்துயானளப்பிலாதவெங்

கொடுவினையொருவினனென்றுகூறிடு
நெடியவன்றனக்கவர்நிகழ்த்துவாரரோ. 35

மேனிமிர்ந்தளந்தவுன்றாளின்மேவிய
வானதியெங்கண்மாபாவமாற்றுமா
லானிரைமேய்த்திடுமமலவெம்மைநீ
மானிடர்போலவேதுதிக்குமாயமென். 36

மழைமுகில்வண்ணநீமயக்குமாயையா
லிழையுறுமணியெனத்திரியுமெங்கடன்
கழலினிற்பணிந்தெமைத்துதிக்குங்கள்வநீ
மொழிமறைக்ககப்படாமுதல்வனென்றனர். 37

இவைமொழிந்தமலனல்விடைபெற்றேகிடுந்
தவர்களைப்பணிந்தரிதந்தைகூறுவான்
பவமறுத்தியானுயர்பதத்தினெய்தவே
நவையறுமுனிவர்நீர்நவிலுமென்றனன். 38

சூரசேனன்சுதன்சொல்லக்கேட்டரு
ளாரதன்முனிவரைநோக்கியேநகைத்
தேருறுமாலைத்தன்மகனென்றெண்ணியே
சீருறுமனனிவைசெப்பினனரோ. 39

மாறிலாப்பகீரதிமருங்கின்வைகினன்
வேறொருகூவலைவிரும்பிச்சென்றிடு
மாறுமொத்தெழிலியான்மறையுமென்றவிர்
வீறுகாண்கிலாதுபோல்விளம்பினனென்றான். 40

சுரர்முனிமொழியிணைக்கேட்டுத்தூய்மைசேர்
விரைபுரைகமலனைப்பொருவுமெய்த்தவ
ரரியினைப்பயந்திடுமரசன்றன்னுடன்
பரிவுடனிவ்வுரைபகர்கின்றாரரோ. 41

தரணியின்வேள்விசெய்துயர்ந்ததானங்கள்
பரிவுடன்பண்ணவேபவமிலாதுறு
மிரணியந்தேடுவர்சுதர்களெய்தவே
யரிவையைவேட்பர்களறிஞராயினோர். 42

வேறு.

இருநிலமிசைச்செய்கடன்மூன்றதினியற்சுருதிநூலின்வழியே
பிரமசரியஞ்செய்துமுனிக்கடனகற்றுவர்கள்பெற்றசுதரா
லுரியபிதுருவின்கடனொழித்துயரும்வேள்விசெய்துதேவர்கடனைப்
பெரியவர்கழித்திடுவரென்றுவசுதேவனொடுபேசிமொழிவார். 43

தரணிமிசையிவ்வகையின்மூன்றுகடனீக்கினர்கள்சார்வர்கெதியி
னிருகடனொழித்தனையினிச்செய்கடன்வேள்விமனவென்றுமுனிவோ

ருரைசெயமகிழ்ந்தடிபணிந்தரசன் மாமகடத்தவுள்கியே
யரியதவர்தங்களைவரித்தெழில்கொள்சாலையையடைந்தனரோ. 44

மெய்யினின்வெண்ணெய்பூசியெழில்வெள்ளிகிகர்புள்ளினுழைமேவினிய
கையினிருகொம்புறவிரித்துயருமாக்கைமறைத்துமதமா [மால்
வுய்யமவின்கண்வருவோனனைமுதற்பதினெண்மாதருறவே
நெய்யினிறையாகுதிமறைப்படியின்வேள்வியினிறைத்தனரோ. 45

ஓகையுடனுகுதிகள்செய்தொளிகொடேவதைகளுண்மகிழவிர்ப்
பாகமதுநல்கியுயர்தெக்கணைகளன்பினொடுபெண்ணியரசன்
மாகனகதானநனிசெய்யமலர்வானவர்மகிழ்ந்துபொழியக்
காகளமொடேவனைகள்பேரிபடகம்பணைகறங்கியவரோ. 46

வேறு.

நவமணிக்கவிகைநற்கவரியோங்கவே
துவரிதழ்வாயினர்பலருஞ்சூழவே
யுவமையில்தேவகியுடனுண்மன்னவ
னவபிரதங்குடைந்தாடினனரோ. 47

விருத்திராசுரன்றனைவீட்டியிந்திர
னருத்தியால்வேள்விசெய்யழகுபோலவே
வருத்தினர்முனிவர்கடுதிப்பமாமகங்
கருத்தினன்மகிழ்வொடுஞ்செய்தகாவலன். 48

கிருபர்கடனக்குநேரிலாதநற்கலன்
கரிபரியிரதமுங்களிப்பினலளித்
தரசனுண்மகிழ்ந்திடவரிமுனேனுட
னிருநிலத்திறைஞ்சிடவெடுத்துப்புல்லினன். 49

தனயரையன்பினற்றழுவித்தேவகி
மனமகிழ்ந்திடவசுதேவன்மைந்தரோ
டினிதுடனிருக்கவேயெழில்கொண்மாயனை
முனிவர்களாசிகண்மொழிந்துபோயினர். 50

அரவுயர்த்தோனுமெனுசர்போயினர்
முரசுயர்த்தோனெழிலிளைஞர்மூரித்தேர்த்
திரளொடுங்குந்திபாஞ்சாலிதென்னன்மா
னுரகமின்சுபத்திரையுடனும்போயினர். 51

நந்தனுமசோதையுநந்துகையுறு
மைந்தனையொருவலாமனத்தராகியே
நொந்தமுதணைத்தவர்தம்மைநோக்கின்
றிந்திரைநாயகனிரங்கிக்கூறுவான். 52

அன்னையாமசோதையைநோக்கியன்பின
யுன்னையானொருவலேனென்றுரைத்துமால்

பின்னருந்திங்கண்மூன்றிருக்கப்பேருண்
மன்னவேயவர்களுமகிழ்ச்சியெய்தினர். 53

கோவியர்மனமகிழ்ந்திருக்கக்கோவல
ஞேவியவடிவினையுற்றுநோக்கியே
யாவலினெருவிலாரன்புகூர்ந்திடத்
தேவனண்டவரொடுஞ்சிறந்தோன்றினன். 54

காவலரெண்வசுதேவன்கற்புடைத்
தேவகிமகிழ்ந்திடமணிகள்சேர்கல
னவலினசோதைக்குமாயர்கோனுக்குங்
கோவியர்தமக்குமேகொடுத்தனரோ. 55

பாவமிலசோதையும்பழிப்பினந்தனு
மோவியவடிவினையணைத்துள்வாடியே
யாவியிலுடலெனவகலனைந்தெழுங்
கோவியரிருகரங்கூப்பிப்போயினர். 56

மாயன்முன்னேனெழிற்றந்தைவண்மைசேர்
தாயர்களுருப்பிணிமுதலொண்டையலார்
நேயமோடிரதமேனெறியிற்சேரவே
தூயநற்றுவரையிற்றுலங்கவெய்தின. 57

நிருபனுந்தவன்வசுதேவனீதிசே
ருரனுறுமுக்கிரசேனனுற்றிட
வரனுறுமுனிவர்கண்மருங்குசூழ்ந்திட
வரிசபாமண்டபத்தமரும்வேலையின். 58

சுரர்முனியாழொடுதுலங்கவெய்தியே
யரியினையற்புதவதிகளியெனத்
திருமகள்கணவன்றெக்கணையினேடியான்
பெரியவனுமெனப்பேசினனரோ. 59

முனிவனற்புதமெனமுராரியாமெனு
மினியசொற்கேட்டமாதவரிதேதென
கினைகினுமுணர்கிலாநேமியாயெமக்
கினையசொற்பொருளினையியம்புவாயென்றூர். 60

மாதவருரைத்திடநகைத்துமாயவ
னேதமின்ஞாதவியம்புநீயெனப்
போதனைத்தருமிறைபுகலக்கேட்டெழு
மாதரத்துடன்முனியறைகுவானரோ. 61

ஆசினற்கங்கையினயத்துட்டோய்ந்துயா
ஞேசனைநீளத்தினூருமாமைகண்
டேசிலாச்சிவனுட்பெரியைநீயென்றே
பேசிடவுரைத்ததுப்பிறங்குகச்சபம். 62

என்னிலுமதிகமாஞ்சிவனெண்ணில
மன்னுமந்தாகினிபெரியதென்னவா
னன்னதிதனைநீபெரியளென்றுநான்
சொன்னதுகேட்டவள்சொல்லலுற்றனள். 63

நீர்நிறைநதியெலாநிறையத்தாங்கிய
வாரிதிபெரியதென்றோதவாரியை
நாரமாரதிகநீயென்னநானலேன்
பார்பெரிதென்றுபௌவம்பகர்ந்தது. 64

இருநிலமதனைநீபெரியையென்றலுந்
தரைமினாய்த்தோன்றியாண்டென்னைத்தாங்கிடும்
வரைகளோரெட்டுமேயதிகமென்னமா
கிரிகளுமுருவமாய்க்கிளர்ந்துசொல்லுமால். 65

உலகெலாமுயிர்களோடுதவுந்தூயமா
மலருளோன்பெரியனென்றுரைப்பமர்றியா
னலமெலாமுற்றநான்முகனைநண்ணியே
சலமிலாய்பெரியைநீயென்றுசாற்றினேன். 66

நறைமலர்நாயகன்கேட்டுநானலேன்
மறைகடான்பெரியவென்றுரைப்பமாசிலா
நெறியுறுவேதமேயதிகநீயென
வறையவப்புருடன்யானலவென்றேசொல்வான். 67

நாகமாமுனிவர்கடுதிப்பநன்மைசேர்
யாகமேபெரியதென்றோதயானெயி
னாகுதிநிறைமகம்பெரியதாமென
வோகையார்வேள்வியோருருவமாய்ச்சொலும். 68

யான்பெரியேனலேனெனக்குநாயகன்'
வான்புவியளந்தவன்பெரியனென்னமா
லாம்பரமேட்டிநீயதிகமாமென
நான்பகர்ந்தேனெனநவிலுநாரதன். 69

அற்புதநீயுயரதிகனென்றுயான்
சொற்பகர்ந்திடவரிதூயதக்கனை
நற்பலவேள்வியினதிகனானெனச்
சற்பமேனடித்தவன்சாற்றினானென்றான். 70

இவையெலாமுரைத்தியாழ்முனிவனேகலுந்
தவர்களுன்மறையவர்தரணியாண்மனர்
துவரையினிலங்குசுந்தரனைப்போற்றியே
நவையறுமுதலிவனெனநவின்றனர். 71

நிலஞ்செறிமுனிவர்வேதியர்க்குநேரிலா
நலஞ்செறியரிவிடையருளிநன்மணிக்

கலன்செறிமார்பினன்வளைகதங்கிட
பொலன்செறியுருப்பிணிகோயில்புக்கனன். 72

சுரர்முனியிவையெலாமுரைப்பச்சோதியாம்
பரமனிப்பாரினிற்பாரநீக்கவே
யிருகுலத்திற்சுதனுயினனென
வரிசையார்மனன்வசுதேவனெண்ணியே. 73

தேவகியுடன்வசுதேவன்சென்றெளி
ரோவியவடிவின்மாலுறையுங்கோயிலின்
மேவிடமாயவன்விதர்ப்பன்பெற்றருள்
பாவையோடிவரிருபதத்திறைஞ்சினன். 74

இறைஞ்சியமுராரியையெடுத்துத்தானணைத்
தறஞ்செறியும்வசுதேவனன்புள
நிறைந்திடநோக்கியேநீயென்மைந்தனென்
றுறைந்தனைபாரினிலுலகுணேமியாய். 75

மதுரையிற்பிறந்தநாண்மகுடநாற்கர
மெதிரில்பீதாம்பரமிலங்குமாழிவான்
மதிநிகர்வலம்புரிவயங்கத்தோன்றிய
சதுரவென்றவத்தினுற்றனயனுயினுய். 76

நீயெழிலவனியின்சுமடுநீக்கவென்
சேயெனவென்வயிற்செனித்தசெய்கைநின்
ருயுடன்விளம்புமுன்றனையநீசெயு
மாயையின்மறந்தனைமகனென்றெண்ணினேன். 77

பூதலந்தனிலைந்துபுலன்களாலெய்தும்
வேதனைக்ககப்படாதருளிமெய்மைசே
ராதியுன்பதமெமக்களித்தியென்றுமுன்
ஞேதியதந்தையோடுரைக்கலுற்றனன். 78

தூயநான்மறைசெறிசொல்லினுயென்றன்
ருயுடன்பின்னரென்பதத்திற்சாரென்றே
மாயவன்மாயையான்மறைப்பமன்னன்றன்
சேயெனவணைத்திடவன்னைசெப்புவாள். 79

ஏயெனுமுனமகோததியினெய்தியே
தூயசாந்தீபினிசுதனைத்தந்தநீ
தீயவன்வதைத்தவென்சேயர்தங்களை
மாயவகொணர்தியென்றுரைவழங்கினுள். 80

அன்னைதன்சேயினராறுபேரையு
மென்னிடர்கெடக்கொணர்வாயென்றேதிடப்
பன்னகப்பகைஞன்மேற்பரமன்மேவியே
பின்னவில்சுதலலோகத்தினெய்தினன். 81

சுதலலோகத்தினிற்றுலங்குமாவலி
முதலையான்மெலிகயமூலமென்னவின்
னாதலிமார்பிலகவேநொடிப்பினெய்திய
மிதுலைமான்பதிவரவியந்துநோக்கினான். 82

கோடொளிராழிகைக்கொண்டமாயவ
வீடினவினையெனவிளம்பிக்கைதொழு
தாடினனிறைஞ்சினனன்பினாரணம்
பாடினனிருகணீர்பரந்தங்கோடவே. 83

நீதியாலருக்கியமளித்துநேமியோன்
பாதநீர்சிரத்தின்மேற்றெளித்துப்பாம்பின்மே
லோதமாருவரியினுறையுமுத்தம
வாதிநீயெய்தவாழ்ந்தனனென்றாடினான். 84

கடங்கொண்மாகரியினைக்காத்துமூவுல
கடங்கவீரடியினாலளந்தவாதியை
மடங்கலாதனத்தின்மீதிருத்திமாவலி
திடங்கொண்ஞானத்தொடுஞ்செப்புவானரோ. 85

ஆவலினைம்புலன்வழியினாழ்ந்திடும்
பாவமுற்றிடமனைவாழ்க்கைப்பாழதாங்
கூவலினழுந்தியகொடியனேனையுன்
சேவடிமிசையினிற்சேர்த்தியென்றனன். 86

என்றிவைமொழிந்தடியிறைஞ்சிமாவலி
யன்றுலகளந்தருளமலவென்பதிக்
கொன்றியகருமநீயுரைத்தியென்றலு
மன்றலர்துளவணிமாயன்கூறுவான். 87

மாதவமரீசிதன்மனைவயிற்றினி
னேதமில்சுதரறுவோர்களெய்தியே
போதினில்வருமிறைபுகன்றசாபத்தாற்
றீதுறுமிரணியன்சிறுவராயினார். 88

அவுணராய்ப்பிறந்திமெறுவர்பாரினிற்
பவமிலாத்தேவகிபயந்தபோதினி
னவையுறுகஞ்சனான்மடிந்துநண்ணினா
ரிவர்களென்றறிபினரியம்புவானரோ. 89

பூவினிலயன்மொழிசாபம்போகவே
தேவகிதன்முனிற்சுட்டிச்சீரிலாப்
பாவமின்மரீசிதன்பாலிற்சேர்ப்பனென்
றாவினைமேய்த்தருளமலன்கூறினான். 90

கோவலனிவையெலாங்கூறக்கேட்டிடு
மாவலியடிபணிந்தேத்தமாதவ

ஞவலின்வருமறவோரொடெய்தியே
தேவகிதன்முனிற்சுட்டிச்செப்புவான். 91

கஞ்சனுன்மடிந்தவரிவர்கள்காணென
நெஞ்சினுர்தனியறிவிறைந்தவன்பினென்
மஞ்சராமிவரெனமகிழ்ந்துதேவகி
யெஞ்சிலாவிருதனப்பாலையீந்தனள். 92

சிந்தையின்மகிழ்ந்துதேவகியினீந்திடுஞ்
சுந்தரமுலையினிற்சுரந்தபாலினை
மைந்தர்களருந்திமாசாபமோவிய்ய
யிந்திரைகணவன்றனடியிறைஞ்சினுர். 93

மாயனைவணங்கியேமகிழ்வுவிஞ்சிய
தாயெனுந்தேவகிதாளின்வீழ்ந்தவ
ரேயெனுமுனர்விமானத்தினெய்தியே
தூயநன்மரீசியைத்தொழுதுசேர்ந்தனர். 94

நந்துறுகரத்தினனகிலினூறுபாற்
சிந்தையின்மகிழ்வொடுமெருந்தித்தேவரா
யந்தரவிமானமேலடையவீதென்றன்
மைந்தனற்செயலெனமகிழ்ந்துகூறுவாள். 95

ஆதிநீவிமலனீயமலனீயுயர்
சோதிநீபரமனீசுருதிநாதனீ
போதநீயெனக்கெழிற்புதல்வனுகிய
யாதவவுன்பதமளித்தியென்றனள். 96

அன்னையிவ்வாறறிந்தறையவச்சுதன்
பின்னரென்பதந்தனைப்பெறுதியென்றவன்
மன்னியமாயையான்மறைப்பமைந்தனென்
றன்னியேமாயனையணைத்துவந்தனள். 97

வசுதேவர் வேள்விப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 898.

---

92 - வது, கண்டாகருணன் மோட்சப் படலம்.

அந்தணனிவன்மாமகங்கள்செய்துயர்ந்தவறிஞன்றன்புதுப்பிணயாக்கை
தந்தனனமுதுசெய்தருளெனக்குந்தம்பிக்கும்வீடுதாவென்று
வந்துநின்றுடித்துதிசெயுங்கண்டாகருணனேடிளவலுமகிழச்
சிந்தையினுவந்துதன்பதமளித்ததிருவினுயகனடிதொழுவாம். 1

நவமணியினங்கள்வயங்குதாணணிகணலனுறுமண்டபமிசையின்
கவினுறுமவரியஞ்சிந்திடக்காயாமலரெனக்கருமுகிலெனவே

யுவமையில்படிவமொளிரவீற்றிருந்தவொருதனிமுதல்வனையுற்றுத்
துவரிதழ்வாயாளுருப்பிணிமுதலாந்தேவியர்தொழுதிவையுரைப்பார். 2

றுனியறவிருளையொருவுமென்றினைப்போற்சுருதிநூனெறியினையெய்து
தனயரையெமக்கின்றருளுதியென்னநகைத்துயர்சக்கரந்தரித்தோ [ன்
னனமெனுநடையீரருந்தவம்புரிந்தேயரனிடைவரத்தினைப்பெற்று
மனமகிழ்ந்திடுநற்புதல்வரைத்தருவனென்றுமண்டபமிசைவந்தான். 3

தாலகேதனமன்சினியருள்புதல்வன்சாத்தகிசாரணன்சடனற்
சிலமார்குணத்தனிவர்களைநோக்கித்திறலுடைநேமியனுரைப்பான்
காலனேயனையபவுண்டரீகன்றனடர்ந்திடாவகையிவண்காமி
ஞலமேறுகருமரனிடைவரங்கள்பெற்றியான்மீள்வனென்றறைந்தான். 4

திருமகள்கொழுநன் மொழிந்திடக்கேட்ட சினியருள்சாத்தகிதிறல்
சே, ரராலுடனிமையோர் மகபதிமுடுகி யடுசினத்துடனமர் பொரினும்,
வரிசிலைவலத்தாற் றடைசெய்நீண்டெதிரு மொன்னலர்தங்களை வதை
ப்பன், கருமுகில்வடிவாய் போதியென் றுரைப்ப மகிழ்ந்தரிகருடன்மேற்
சென்றான். 5

மாயவன்கலுழன்மிசையினிற்சென் றுவதரிகாச்சிரமத்தினுறவே
தூயநன்முனிவரனைவருமாசிசொல்லவாண்டவர்களைத்தொழுது
மீயுயரலரிகுடகடலிடையின்மறைந்திடவிழுமியயமுனை
யாயமாநதிமந்தாகினியுடனேயமர்ந்திடுங்கூலத்தினடைந்தான். 6

தூயநாதனைத்தன்னெஞ்சினினினைத்துத்துலங்கியயோகத்தினுயர்ந்த
மாயவனதியின்கோட்டுவாலுகத்தின்வயங்கிடவிருந்திடும்போழ்தி
னேயமோடரனைநினைந்துபல்லாண்டுநெடுந்தவம்புரிந்திடும்பூதன் [ம்
சியமானுழுவையடர்ந்திடும்வனத்திற்சேர்ந்தவண்வருஞ்செயன்மொழிவா

அரிதிருப்பெயரைக்கேட்கலாகாதென்றறைந்திடுகண்டைசேர்செவியன்
பரிவுடனரனைநினைந்துபல்லாண்டுபெழுவத்தினருந்தவஞ்செய்ய
வெருதினினிலங்குமிறையவனங்கெய் விருகையாற்றொழுதவனெனக்கு
பரமநீயழியாப்பதத்தினையருளென் றுரைத்திடவுமாபதிபகர்வான். 8

இருநிலமமரர்பதிதனபதிதன்னகரிவையேதுவேண்டிடினுந்
தருகுவனெனலுமிசைகிலானலரிவெயிலினுற்றபித்தவன்றனக்குப்
பருகுநீர்கொடாதிங்கெண்ணெயையளித்தாற்பயனிலைபரமநீயெனக்கே
யருளழிவிலாதகதியினையெனவேயரியருளுவனெனவகன்றான். 9

அரியுயர்கதியை யளிப்பனென் றுயர்ந்த வரனிவைமொழிந்திடக்கே
ட்டே, விருசெவியதனி னிலங்குகண்டைகளை யிமைப்பின்முன்னிருகை
யால்வாங்கித், தரையினிலெறிந்து சகாயனுய்வயங்குந் தனபதிக்கிவை
யெலாஞ்சாற்றப், பரிவுடனவனு முராரியேயழியாப் பதந்தருவானென
ப்பகர்ந்தான். 10

தூயவெட்டெழுத்துந்துவாதசாக்கரமுஞ்செவியிடைச்சொல்லியேதுலங்
மாயவன்றுவராபதியின்மன்னவனுய்வயங்கியவாறெலாமறைய [கு

வாயவைகேட்டுமகிழ்ந்திடுங்கண்டாகருணன்மால்பெயரெலாமறைந்து
பேயினஞ்சூழப்பெருவரைபோலப்பிறங்கியபழுவத்திற்சேர்ந்தான் 11

வேறு.

பேயினர்சுற்றினர்பறைகளடித்தனர்பிரியாத
நாய்கள்குலைத்திடவெங்கணுமோடினர்நலனில்லா
மீயுயர்வானம்வெடிப்புறவார்த்தனர்விறலோடுஞ்
சீயமொடேகரியுழுவைவதைத்தனர்சினம்விஞ்ச. 12

தீபமிரைத்தனர்நரரைவதைத்தனர்செயிர்விஞ்சுங்
கோபமனத்தினர்வளைகள்முழக்கினர்கொடிதாய
பாவமிகுத்தவர்மயிடம்வதைத்தனர்படிமீதிற்
சாபம்வளைத்தனர்கிருடிமடித்தனர்தழலம்பால். 13

கருவரைபோலநடந்திடுகண்டாகருணன்றா
னிருநிலமிசையினிலங்கியவேள்விசெய்தியல்பாரு
மருமறையோனைவதைத்தொருகுலத்தவனுக்கை
யுருவவெடுத்தனனலகைகள்சுற்றிடவிடமொப்பான். 14

மரைகரியரியையிழுத்தலகைக்குலம்வரவாயாற்
பருகினனிருகையினுதிரநிறைத்துயர்படிமீதி
னெரிநயனத்தொடுகுடறசைதின்றெயிறிலகச்சீ
ரரிகரிபரமமுராரியெனுஞ்சொலறைந்தானால். 15

ஆனைவதைத்தொருகொம்புகைபற்றினனரைமீதி
னூனிறையுங்குடர்சுற்றினனீரல்களுண்வாயன்
கானிடையுற்றொளிர்கன்றுகண்மேய்த்துயர்துவரைக்கே
மானிடனாகியவாமனனேநமவென்பானால். 16

கொலைபலசெய்தவனேமிகுபாவியெனக்கூறும்
நலனுறுமறையெனவோதுவர்நான்வதைசெய்வேனா
னிலமிசையிவ்வினைநீக்குதிநேமியவென்றேமான்
றலைநரர்குடறசைதின்றுதருக்கிடந்தானால். 17

மாதவனேநமவென்றுயராவைவதைத்தேநற்
சீதரனேநமவென்றரியின்பிசிதந்தின்றே
யாதியசஞ்சலவற்புதவச்சுதவெனவோதிச்
சோதிவயங்கியதூய்நதியின்னிடைசூழ்ந்தானால். 18

சுற்றியநாய்களையோட்டுமினென்றுரைசொல்லாமுன்
நற்றியமாலைநினைந்துநதிக்கரையிடமெய்தி
பற்றியமாகரிகோடுகள்பலசவமெல்லாமுக்
குற்றமிலந்தணனற்பிணமோடுயர்குவைசெய்தான். 19

அறையின்விசித்திடுகுடர்நிலன்வைத்தனனன்போடே
விரைவினினீருமிராற்றுனிசெய்குசையின்மீதிற்

றரையினிருந்தரிதாளைநினைந்துயர்முகில்வண்ண
பரமவிராமமுராரிபராபரநமவென்றான். 20

இலகியதீவிகையெண்ணெயினெண்டிசைதொறுமேற்றி
யலகைகளேந்திடவேயரிதன்னையரிச்சித்து
நிலமிசையிற்குவைசெய்தசவங்களினெடிதாய
பலகரிம்பிடமுடங்குழையெண்குபடைத்தானால். 21

தூயவெழுத்திருநாலுதுவாதசமிவைநெஞ்சி
னேயமொடேயிருகைசிரம்வைத்துநினைந்தேதா
னாயமுராரியசஞ்சலவற்புதவுயர்சோதி
மாயவநாரணவென்றுசெபித்துமகிழ்ந்தானால். 22

வேறு.

உம்பரின்குடாரினையோகவட்டையா
யம்பரந்திகழ்கின்றவரையின்வீக்கியே
வம்பவிழ்துளவணிமார்பின்மாயனை
நம்பித்தன்னயனநீருகச்செபித்தனன். 23

அருவினையகன்மணிக்கருணனன்புட
னிருநயனத்தினைமுகிழ்த்தியேயிறைக்
குரியவெட்டெழுத்தினையுள்கத்தோன்றினான்
பிரமனையுந்தியிற்பெற்றவெம்பிரான். 24

தண்டெயர்சார்ங்கம்வாள்சங்குசக்கரங்
கொண்டொளிர்முராரிகோலந்தனெஞ்சினுட்
கண்டுகண்விழித்தலுங்காண்கிலாமையா
லெண்டிசைமுற்றவுமெழுந்துநோக்கினான். 25

நவமணியணிமெயினலங்கொண்டோங்கிட
வுவமையினதிக்கரைமிசையினுற்றமா
துவரையின்மன்னனைக்கண்டுதூயனா
மவனிவனாமெனவாடிப்பாடினான். 26

இருகணீரிருநிலநிறையவெய்தியே
யரிதிருவடியிணைவணங்கியார்வமோ
டுருகிவெஞ்சூலத்தாலுருவக்குத்திய
சரியிலாமறையவன்றன்னைமுன்வைத்தான். 27

தவர்களெண்மறையவன்றானஞ்செய்துநல்
லவியுறுமகங்கள்செய்தறிஞனாகிய
விவனலப்பிணந்தனையமுதுசெய்கென
வுவமையின்மாதவனுற்றுநோக்கினான். 28

கொலைபலசெய்திடுங்கொடியனாகிலும்
பொலனுறுமென்பெயர்புகன்றசெம்மையா

னலரிகாணிமமெனவினையகன் றிவ
ணலனுறுமெனவரிநவிலலுற்றனன். 29

உனக்கியான் றரும்வரானுரைத்தியென் றலு
மெனக்கழியாப்பதமீகுவாயென
மனக்கவெினையகல்பவனுரைக்கமால்
முனிக்கணம்வியந்திடமொழிகுவானரோ. 30

கந்நாண்மலருளோன்காணுணப்பதி
தந்தனனெனக்கண்டாகருணன்சாற்றுவா
னிந்திரைகொழுநவப்பதியையென் பினேன்
றெந்தகன் றனக்கருளென் றுசெப்பினான். 31

என்றவனுரைத்திடவிறைவன்கூறுவா
னுன்றனையேலவேயும்பியென் றன்மே
லொன் றியவன்பனேவுரைத்தியென் றலும்
புன்றொழிலொருவினேன்புகல்வதாயினன். 32

தெந்தகனுகியவெம்பிசிரிலாப்
புந்தியினுன்றன்மேலன்பிலன்பொருந்
தந்தியைவதைத்தருடலைவயென் றலு
நந்தகோபன்சுதனவில்வதாயினன். 33

என்னலனறிகிவானெனின் முன்னேனெனு
முன்னுடனன்பனேவுரைத்தியென்னவே
பன்னகப்பாயலாய்பரிவிலானென்மேற்
பின்னவனெனக்கண்டாகருணன்பேசினன். 34

என்னையுமுன்னையுமெள்கும்பின்னவ
னின்னலில்கதியுறவெக்குணத்தினன்
மன்னுவிப்பேனெனமாயன்கூறலுந்
துன்னியதுனிதுணித்தவன்சொல்லுவானரோ. 35

அனுசன்மேலன்பினனழியாயென
மனமகிழ்தெழின்மலிமாலென்பத்தர்க
ளினிமையாயருள்வைத்தாலியாவராயினுந்
துனியகன் றுயர்குவரென் றுசொல்லுவான். 36

நீயுமுன்னனுசனுங்கிரிலாதொளி
ராயிரங்கண்ணினனகரினன்புடன்
போயமிர்தருந்தியப்போகந்துய்த்தபின்
தூயவென்பதியெய்தித்துலங்குவீரென்றான். 37

சுந்தரன்மொழிந்திடத்தொழுதகையனை
யிந்திரவிமானத்தினேற்றித்தம்பியோ
டந்தரதுந்துமிமுழங்கவாய்மலர்
சிந்திடத்தேவர்தம்முலகுசேர்த்தனர். 38

கடகரிகாத்தமால்கருணன்றன்னுரு
விடர்கெடத்தேவர்தம்முருவமெய்தியே
யுடலொடுந்தேவர்தம்முலகமுற்றிட
வடதிசைக்கணுழன்மேன்மாயனேகினன். 39

கண்டாகருணன் மோட்சப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 937.

93 - வது, கயிலாசயாத்திரைப் படலம்.

பூதலந்தனிற்பிறந்தைம்புலன்கள்செய்
வேதனையுவரியின்விழுந்தெழுந்திரா
தேதமாமனிதர்களிடரொரீஇயுய
மாதவனடியினைத்தொழுவம்வம்மினோ. 1

உயர்விசும்பமரர்களுவந்துபோற்றவே
யியல்புறுகிரிகோடிருகையேந்திவான்
புயல்வணன்ககபதிபுயத்தின்மீதெய்திக்
கயிலையினருகிலங்கோடைகண்டனன். 2

எனமான்வல்லியமெண்குகேசரி
யானையீதிவையெலாம்வயிரமற்றறுங்
கானநூறோசனைநீளமாங்கவின்
மானசவோடைமாவனசமான்றது. 3

விரைபுரையலர்மலர்விண்ணினோங்கவே
கரையினிற்கவின்கொள்காவினங்கள்சூழ்ந்தது
பிரமனோர்சிரசினைக்கிள்ளிப்பிஞ்ஞகன்
சுரர்தொழுதிருந்திடத்துனிகளற்றது. 4

இமவரைமன்னருந்தவத்திற்பெற்றிடு
முமையெனுமணங்கினையுருத்திரப்பிரா
னமரர்கடுதித்திடவதுவைசெய்தவன்
சமனின்மாமுனிவரோடிலங்கச்சான்றது. 5

மாடுறவேத்திரம்வளர்ந்தமாண்பின
னீடியதவஞ்செய்துநிகரினக்கனை
நாடியக்கிருடிகள்கயிலைநண்ணிய
வோடையினுவணன்மேன்மாயனுற்றனன். 6

மரவுரியுடுத்தவன்சடைகள்கட்டியே
யரனெழின்மந்திரமமைந்தநெஞ்சினோ
டிரவுநன்பகலுமாண்டிடைவிடாமலே
ரணியையிடந்தவன்றவஞ்செய்தானரோ. 7

ஓமவிந்தனக்தின முவணனீங்கிட
மாமலர்பறித்துவண்டிகிரிகல்கிடக்
காமரொண்குசப்புலுங்கட்கமீயவான்
பூமியெண்டிசையெலாங்காத்தபொற்சங்கு. 8

திலாக்கதைபரிசாரகஞ்செயத்
தாதலூழியத்தினைச்சார்ங்கம்பண்ணவே
ஸ்ரீதரன் றுவாதசவருடஞ்செல்லவே
மாதவஞ்செய்தனன்மண்ணின்மீதரோ. 9

மாயவனருந்தவஞ்செய்யவானவர்
நாயகனளகைமனமனம்நாதனோ
டேயெனுமுன்னமாண்டமாரெய்தவே
தூயமாமுனிவர்கள்பலருந்துன்னினார். 10

நேயமோடருந்தவஞ்செய்துநீடிய
தூயமாயோகிகடனக்குந்தோன்றலா
மாயனீதவஞ்செயுமாயமேதென
நோயகன்முனிவர்கணுவலும்வேலையின். 11

வேறு.

வானதிபிறைவெண்கூவிளைகடுக்கைகரந்தையோடெருக்கலர்மத்தம்
பூனிறைசடைகளசைந்திடநுதலினழல்விழிபொருந்திடப்பஞ்ச
வானனந்திகழவுழைமழுக்கபாலமழல்கரத்துறமலையரையன்
மானிடத்திலகக்கொடிகுடைவயங்கவரனுயர்விடையின்மேல்வந்தான்.

உரககங்கணங்கையிலிலங்கிடச்சூலமொளிவிடவுமாபதிவிடைமேற்
சரியிலாப்பவளக்கிரியெனவரவேசங்கொடுதமருகமுழங்க
மரவுரியுடுத்தசதமுகன்குண்டோதரன்றிரிவாகுமாவனுவோ
டரிமுகன்பஞ்சவாகுவெண்ணீற்றையணிந்தவரன்புடனடைந்தார். 13

தீர்க்கரோமனனுன்னதங்கிசன்சிதானனன்சதக்கிரீவன்சினமிகுத்த
தீர்க்கலோசனன்குமித்துவன்விருபாக்கன்றிறன்மலிவாகுகன்சிறந்த
தீர்க்கவாகுக்கடுவெத்திரன்பாவவத்திரன்றூலநாவலன்சீர்
தீர்க்கமாஞ்சிகையோன்சித்திரகாயவத்திரனிவர்களுஞ்சென்றார். 14

கதமிகுகண்டாகருணரோடெண்ணில்கணங்கணக்கினத்தினராகி
முதுகினிற்சவத்தைச்சுமந்துசெங்குருதிபருகிவெம்மூளைகணுகர்ந்து
புதியதாம்பிணத்தையயிலினாற்குத்தியெடுத்துநற்பொறிநலிநயனர்
மதிவளர்சடையோனிருமருங்கடர்ந்துவானவர்வெருவுறவந்தார். 15

குடர்மலிமாலைகபாலமார்மாலையசைந்திடவயிரவர்கொடிதா
மிடியெனவதிர்த்துத்தமரகமுழக்கியிருமருங்கினுமிடைந்தெய்தக்
கொடிகுடைகவரிவயங்கிடவிபுதர்குழாந்துதிசெய்திடத்தவள
விடையினிலங்கியுமாபதிவரலும்வியந்தரிதொழுதிவைதுதிப்பான்.

வரையினைத்தனுவாய்வளைத்தருண்முதல்வாநமவுனைமதிக்கிலாவசுரர்
திரிபுரமெரித்தசிவநமவிந்துதிகழ்கின்றவேணியாய்நமவே
கரியுரிதனைப்போர்த்தருளுவாய்நமவேகறைமிடற்றிறைவனேநமவே
யரகராநமவேபசுபதிநமவேயந்தகாந்தகநமவென்றான். 17

ஏதான்பரிவோடிவ்வகைதுதிப்பச்சிறந்திடுமிந்துசேகரன்றான்
பூதலமிசையிற்சருகுகால்புனலைப்புசித்தயக்கழலிடைப்பொருந்தி
மாதவமுயல்வோர்க்ககப்படாதுயர்ந்தமாயநீதவஞ்செய்மாயையினை
யோதுதியெனவேமகிழ்வுடன்மொழிந்த வுமாபதிபின்னருமுரைப்பான்.

தரையினினரசர்குலத்துதித்தவன்போற்றனயர்கள்பெறத்தவஞ்செய்
பிரமனுன்மதலையவனுலகடங்கப்பெற்றிடும்பிதாமகனன்றோ [தாய்
திருமகள்கணவவுணரொணாமாயஞ்செய்குவைநீயெனச்சிரித்தே
யானுளமகிழவிருகணாணுக்கியரியுடனிம்மொழியறைவான். 19

நேயமோடியோகமுலப்பிலாவருடநிறையயாணிற்கும்வேலையிலே
ஆயிரநயனனமரர்கண்மொழியாலடர்ந்தெனைச்சேருமன்மதனைத்
தீயுறுவிழியான்முனிந்தயானெரிப்பத்தேவர்கள்வேண்டிடவன்றே [ன்.
தூயவவுனக்குச்சுதனெனநிலத்திற் றோன்றுவன்வேளெனச்சொன்னே

முன்னம்யானறைந்தமொழியினையறியாதவர்கள்போலருந்தவமுயன்றாய்
பொன்னெடுவரையோடளப்பிலாவுலகமுதரத்திலடக்கியபுனிதா
வுன்னைநீகரந்துமனிதர்போற்சுதரையுவந்துநீபெறத்தவஞ்செய்தா
யின்னல்களொருவவுயர்பதங்கண்டாகருணனுக்கீந்தனையென்றான். 21

ஆழிசென்னெறியைத்தரவருகெனமாவருந்தவம்புரிகுவார்போன்றங்
கேழுநாட்டருப்பைமிசையமர்ந்தயமனெய்திலானெனமுனிந்தெழுந்து
சூழும்வாரிதிநீர்சுவறிடக்கணைகள்சொரிந்தவன்வெருவியுன்பதத்தில் [ன்
வீழவேவரம்வேண்டுவதுபோலெனையும்விரும்பினையெனநகைத்துரைப்பா

செயலுறப்படைக்கத்திசைமுகனாகிச்சிறந்திடவளிக்கநீயாகி
யியல்புறத்துடைக்கயானுமாய்த்தோன்றியெம்மையுநின்னிடைக்கரந்து
கயவர்கட்கியாங்களளித்திடும்வரத்தாலவரெம்மைக்கடிந்திடும்போதத்
துயரறவவரைவதைத்தவர்தமக்குன் றுலங்கியகதியினையருள்வாய். 23

சென்னியோகதிநற்குஞ்சிசேமூதந்தினகரனிந்துகண்ணெண்டிக்
கின்னலில்செவிவிண்ணாபியோண்சிந்துவயிறுநற்சகனமுரோமங் [ங்
தன்னுபாதவங்கணயனமுமிழ்த்தலிராப்பகல்விழித்தலாய்த்தோன்று
தன்னைநேர்பிறிதிலிறைவநீதவஞ்செய்மயக்கினைச்சாற்றுதியென்றான்.

உன்னிடத்தயனேடெனையுதவுகையாலோதுவர்கேசவனெனவே
துன்னியவினைகளறுத்தரிக்கையினாலரியெனத்துலங்கினையயத்துண்
மன்னியசெயலின்பொருளினாராயணனெனவயங்கினையுயிர்க
டன்னினியுறையுந்தன்மையால்வாசுதேவனும்பெயரினைத்தரித்தாய். 25

மறைகளுண்ணாவின் மலிந்திடுஞ்செயலால்வண்மைசேர்கோவிந்தனானாய்
நிறையுமெஞ்ஞானேந்திரியங்கடனக்குநீயிறையாகியபொருளா
லறைகுவரிருடிகேசவனென்றன்னையளப்பின்மூவுலகுறவளர்ந்த
திறலினாற்றிருவிக்கிரமனென்றுனையேசெப்புவர்சிறந்திடுமுனிவர். 26

ஏசில்சூக்குமனியாதலினுன்னையியம்புவர்வாமனனென்றே
யாசினுளமிழ்த்தியடருமைம்புலன்கடன்னைநீயகற்றிடுஞ்செயலால்
மாசிலாமதுசூதனனெனவுரைப்பரெவர்க்குநீயுயர்ந்ததன்மையினா
லீசனென்றுனைத்தானறைகுவர்மறையோடிலங்கியவுபநிடமுணர்ந்தோர்

சகலமந்திரத்தினதிகமாயிலங்குபிரணவநீசதுர்மறைக்கு
ணிகரில்சந்தசுக்குள்வயங்கியகாயத்திரியுநீநிறைந்தவக்கரத்து
ளகரநீயுயர்ந்தவுருத்திரர்தமக்குளரனெனுமியானுநீயார்க்கும்
பகவனிதிசைக்குளமர்ந்திடும்வசுக்களெண்மரிற்பாவகனீயே. 28

பாதவந்தன்னுட்பிப்பிலநீயேபன்னகந்தன்னில்வாசுகிநீ
யேதமின்முனிவர்தன்னினாரதனீயெண்டிசைப்பாலரினளகை
நாதனீயயத்துள்வருணநீநதியுட்கங்கைநீநலனுறுவரையின்
மீதுறுகனகவிலங்கனீயொளியுள்விசும்புறுகதிரவனீயே. 29

தசனலப்பிரமர்தமக்குளின்வயங்குந்திசைமுகனீவிபுதர்க்குள்
வசையிலாப்புகழ்சேர்வலாரிநீமருந்துளமிர்தநீகுளிர்ப்பினுண்மதிநீ
யசுரர்கடனக்குட்பிரகலாதனுநீயதிகதேவதைகளின்மிகுத்த
சுசியுநீயுயர்ந்தபதியினின்வயங்குஞ்சோதிநீயாதியுநீயே. 30

அண்டமெண்ணனந்த கோடியுன்னகட்டிற் றோன்றியேமீளவுமட
க்கு, மூண்டகமடந்தை கொழுநனேயென்று மொழிந்தரன்முனிவரை
நோக்கி, யெண்டவரறிமி னிவனலாவிறைவே றில்லையீதுண்மையா மிவ
ன்றான், மண்டனிற்பிறந்து மயக்குமாயையினின் மருண்டிடாதுய்மினெ
ன்றுரைத்தான். 31

கறைமிடற்றரன்றான்மொழிந்திடக்கேட்டுக்களித்திடுமெருந்தவரெல்லா
மறையையுமயக்கிக்கரந்துறைகின்றமலர்மகணாயகன்றன்னை
யிறைவனென்றியாங்களறிந்துயும்வண்ணமிதவுபதேசநீசெய்தாய் [ன்.
பிறையணிசடிலவெனத்தொழுதிடவேபிஞ்ஞகன்முராரியைத்துதிப்பா

கேசவநமவேநாரணநமவேகிளரொளிமாதவநமவே
மாசறுசுடர்க்கோவிந்தனேநமவேவண்மைசேர்விண்டுவேநமவே
வேசறவுயர்ந்தவெழிலுறுமதுசூதனநமவிடரினையகற்றுந்
தேசுறுதிருவிக்கிரமனேநமவேசிறந்திடும்வாமனநமவே. 33

சீதரநமவேசிறந்திடுமிருடிகேசனுந்தேவனேநமவே
யேதமில்பதுமநாபனேநமவேயெழில்கொடாமோதரநமவே
போதனைப்படைத்தபுனிதனேநமவேபொலன்கொள்பீதாம்பரநமவே
யாதியாம்பரமநமவெனத்துதித்தேயரனுயர்கயிலையையடைந்தான். 34

அரனிவைதுதித்துக்கயிலையையடையவலாரியோடருந்தவரெல்லாம்
பரிவுடன்முராரிதனைத்தொழுதேத்திப்பன்மலர்பொழிந்தவரேக
வரிமகிழ்வுடனுங்கலுழன்மீதேறியாழியோனைடம்படையேந்தி
மருமலர்மலியும்வதரிகாச்சிரமத்தெய்தினன்முனிவர்கண்மகிழ. 35

வதரிகாச்சிரமத்தொருதினமிருந்துமற்றைநாண்மலர்மகள்கொழுந
னெழிரின்மாமுனிவர்குழாங்களையிருத்தியிலங்கியககபதிபுயமேற்
புதுமலரமரர்பொழியவந்தரத்திற்றுந்துமிமுழங்கிடப்புலனு
ருததிருமுகமாரொளிகொளுந்துவராபதியினினடைந்தனனுவந்தே. 36

மாயவன்றுவரையடைந்தெழிற்றந்தைதமலரடிவணங்கிமுன்னோனைத்
தாயரைப்பணிந்துமகிழ்ந்திடவுயர்ந்தசாத்தகிமகிழ்ந்துதாளிறைஞ்சத்
தீயுறுமெழுகுநிகரெனவுருகுந்தேவியருருப்பிணிமுதலாந்
தூயமங்கையர்களிருகணீர்நிலத்திற்றுளிகொளவடிமிசைதொழுதார். 37

தவாவலிமலியுங்கலுழன்மீதுயர்ந்தசங்குசக்கரந்தரித்தவனைத்
துவாதசவருடம்பிரிந்தடர்விரகத்துனிக்கடலழுந்துதேவியர்க
ளவாவெலாந்தணியவரிபதினாறாயிரத்துநூற்றெட்டுருவாகித்
திவாவுடனிரவுமொருவிலனாகிச்சிறந்தினிதிருந்தனன்மாதோ. 38

கயிலாசயாத்திரைப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் — 975.

94 - வது, பவுண்டரன் வதைப் படலம்.

கறைமிடற்றரனைநாடொறுங்கமலமாயிரங்கைகொடுபூசியாக்
குறைபடத்தனதுவிழியிரண்டுபெறியாவருச்சனைதொடக்கவே
யிறைவன்முந்திவரநாரணன்வடிவுபெற்றுநற்றுவரையெய்தியே
பறைபறைந்திடுபவுண்டரன்றனுடறுணிசெய்மாலினடிபணிமினோ. 1

தூயபுண்டரிகநாடன்வானினமர்சுரர்களும்வெருவுதிறலினான்
பாயுமும்பல்பதினாயிரத்துறுவலத்தினாலுறுபவுண்டரன்
னேயம்விஞ்சியமனத்தினோடுபசுபதியைநித்தலுநினைந்துதா
னாயிரங்கமலமலர்பறித்தவனருச்சியாமகிழுநாட்டனின். 2

ஒருதினந்தனிலிரண்டுவாசமலர்குறையவேயுயர்பவுண்டரன்
பரிவுடன்றனிருவிழிபறித்துமகபூசைபண்ணவரனெய்தியாண்
டிருநிலத்தின்மிசைநீபகர்ந்தவரமீவனென்றுரையியம்பிட
வரியுருத்தருதியென்றுகூறியிமென்பனுக்கிவையறைந்தனன். 3

கோலமாயன்வடிவங்கொடென்னபயனென்றுகூறுமுமைகொழுநனைச்
சீலமில்லவனிறைஞ்சியவ்வுருவமீதியென்றுதுதிசெய்திட
நீலகண்டனுநகைத்துமால்வடிவுபெறுதியென்றுரைநிகழ்த்தியே
சூலமங்கையினிலங்கவெண்கயிலையெய்தினான்சுரர்கள்சூழவே. 4

நீலகண்டன்வரமீயமால்வடிவுபெற்றுநீதியில்பவுண்டரன்
கோலமுற்றிடுசெவுத்துவங்கனகவாடைகுற்றமில்கிரீடமின்
னாலுசெங்கரமிலங்கவாழிவளைநாந்தகங்கதைவினண்ணிடச்
சீலமுற்றகலுழன்றன்மீதினெழிறிகழவேதிரியுநாட்டனின். 5

முரசுபேரிகைமுழங்கவேதியர்களாசியெங்கணுமொழிந்திடப்
பிரசமென்மொழிமடந்தைமார்கவரிவீசவேபெருமையுற்றிடு
மரசர்சூழவரியாதனத்தினிடையரியினாடைதிகழரியெனும்
வரிசையோடுயர்பவுண்டரன்னினிதிருக்கயாழ்முனியும்வந்தனன். 6

வந்தயாழ்முனிவனாசிகூறியிடமாயவன்வடிவுபெற்றவன்
சிந்தையின்மகிழ்வினோடுமாதவவிருத்தியென்றுரைகள்செப்பிவா
னந்தரந்திசைகளெங்கணுந்திரியுமறிஞநீபகர்தியென்னையே
நந்துசெந்திகிரிதிகழுமாலெனவுரைப்பரோவெனநவின்றனன். 7

மாயன்யானெனவுரைப்பரெண்டிசையினோடுமெண்ணினாறுமவரெலா
மாயனானவிழிகுலனுமாயனெனவவனிமீதுதிரிகின்றன
னேயெனுமுனர்வலாரிவாழ்நகரினெண்கணனுலகினெய்தியே
நீயுமென்னையுயர்வாசுதேவனெனவோதுவாயெனவிகழ்த்தினான். 8

அறிவிலாமன்மொழியும்பவுண்டரனைநோக்கியாழ்முனிவனறைகுவான்
குறைவிலாதவனைமின்னுமின்மினிநிகர்க்கில்விந்தைமகிழ்கொழுநனா
மிறைவனுக்குநிகராவைநீயெனவியம்பிடத்தழல்கொணயனனாய்
நெறியறுத்துமறன்மலியவேயமருநீசனங்கிவைநிகழ்த்துவான். 9

பாபமின்முனிவனாயினும்பரிபவங்கள்செய்துனையடர்ப்பன்யான்
சாபநீயிடுவையென்றுவிட்டனனெழுந்துபோதியெனலுந்தவன்
கோபம்விஞ்சியபவுண்டரன்றனருகோவியேகுறைவின்ஞானமெய்த்
தீபமாதவர்களுறையுமாதுவரைவீரனோடிவைகள்செப்பினான். 10

மாதவனொருவுமுன்னர்நீதிவழுவும்புறத்துறுபவுண்டரன்
றூதுவன்றனையழைத்துயாதவன்முனெய்தியேயிவைகள்சொல்லுவாய்
பீதவம்பரமோடாழிவாள்கதைவில்வளையுயர்ந்தபெயர்விட்டுநம்
பாதமீதுசரணாயடைந்துய்தியென்றுநீபகர்தியென்றனன். 11

என்றுகூறியபவுண்டரனடியிறைஞ்சியெய்தியிடுதூதுவன்
மன்றல்சோலைமலிதுவரைமாநகரின்மண்டபத்தின்மிசையெய்தியே
கொன்றைசூடியருள்பெற்றுயர்ந்தவரியானகோவின்மொழியெல்லவுங்
கன்றினால்விளவெறிந்தநீதொழுதகேளெனக்கழறுவானரோ. 12

வேறு.

கோடுவிடுவில்லைவிடுவாளைவிடுகோதில்
நீடுகதைதன்னைவிடுநேமிவிடுபொன்னி
னாடைவிடுபேரைவிடுநீசரணடைந்தே
யீடுறுபவுண்டரனையேதொழுதியென்றான். 13

ஈதெலவுநீவிடுவிடாயெனிலமர்க்கே
போதுதியெனக்கரம்புடைத்தரசர்நக்கார்
யாதவனைத்திவையெலாம்விடுவனேகித்
தூதுவபவுண்டரன்வரும்படிசொலென்றான். 14

கோலமுறுமாயனிவைகூறவருதூதன்
காலெனவிமைப்பின்முனரிற்கடிதினேகிச்
சீலமில்பவுண்டரன்முனெய்தியிவைசெப்ப
வாலமெனவேகமிகவேயவனுரைப்பான். 15

ஆயரில்வளர்ந்தறிவிலாதுதிரிவானைச்
சாயகம்விடுத்தமரின்வென்றுவருதற்கே
தூயகரிதேர்நிரைகடுன்றுபடைவீரர்
பாயிவுளியோடெழுமினென்றுரைபகர்ந்தான். 16

அன்னவன்மொழிந்திடவறைந்தமுரசங்க
டுன்றுவக்குரோணிபனிரண்டுபுடைசூழ
நன்னிலநடுங்கிடநடந்தகரிவெள்ள
மின்னுமுகில்போலயுதகோடிகண்மிடைந்தே. 17

காசிமனொடேகலவியன்கடிதுசெல்ல
வீசனருளாலரியுருக்கொளறிவில்லா
நீசன்வளைவாள்கதைவில்நேமியுடனேந்தி
யாசுறவருங்கருடன்மீதினினமர்ந்தான். 18

வாசவனொடேமுனிவர்வானவர்நடுங்க
வாசையுடன்வானிலமதிர்ந்திடவெழுந்து
வீசுதிரைமோதியிடுவேலையகழாக
மாசறவிளங்குதுவராபதியின்வந்தான். 19

நீதியில்பவுண்டரனொடேநெறிகளில்லா
தேசமலியுங்கலவியன்னெதிரிலாத
நீதினுறுகாசிபதிசெல்லவதுகண்டே
மாதவனெழுந்திரதமீதவர்முன்வந்தான். 20

அடற்கதைவில்வாள்பணிலமாழிகையினேந்திச்
சுடற்கனகவாடையொடுதூயகலுழன்மேற்
படைக்கண்வினைபோலுறுபவுண்டரனிலத்தி
னடிக்குமவர்போலவரவேயரிநகைத்தான். 21

வேறு.

மைக்கணமிக்குச்சுற்றுமிடிக்கப்படர்வான்மின்
னிக்கவிரொக்கப்புக்கெனவும்பற்றிரள்சேர
வக்கிரமத்தோடச்சுதனைக்கண்டழல்கண்ணு
ரிக்கணமெற்றெற்றுதிரென்றேயெதிருற்றார். 22

இருள்வரைமருவுமருவியெனத்தான்மதமெய்தத்
தரையடிபுதையத்தாலநிகர்க்கைக்கதைபற்றித்
திரைதருகடல்போலும்பல்கள்பம்பத்திசைதோறும்
விரைபுரைதுளவத்தரியவளைத்தார்விதியஞ்ச. 23

அழலுறுநயனத்தானைமுனிந்துதன்மெய்யி
னிழலினைமோதிநீண்டகாத்தாலுயர்வானின்
மழைமுகினீரைவவ்வியுரிஞ்சியரிசேனைக்
குழுமுழுகிடவேவீசியஞாலங்குலைவெய்த. 24

உவருறுகடல்போலும்பல்கள்பம்பியுயர்கையாற்
கவருடைநெடிதாமானிறமோதிக்காலாலே
குவடுகெடுகெளாயெழவிடறித்தன்னிருகொம்பிற்
சுவடுறநிலனிற்குத்தியவதுநீர்த்துறையாக. 25

வேலினர்கோலினர்வில்லினர்குந்தமிளிர்கையார்
காலனுமஞ்சக்கனலுறுகண்ணர்கடிதாய
தோலினவெரின்மேற்சூரரசோதைக்கினிதாய
பாலனையுற்றுச்சுற்றினர்பகழிமழைபெய்தே. 26

காலையடர்க்குங்காலொரிமைப்பிற்கனமீதின்
றூலமகற்றித்தாவிடுமிவுளித்திரள்வீரர்
நீலமுகில்போனின்றருணெடுமொல்முனரெய்தி
வேலயில்குந்தம்வீசினர்விண்ணோர்மிகநோவ. 27

கரிவெரினுறுவோரிரதமீதுறுவோர்கடிதாய
பரிவெரினமர்வோர்படியொடுககனமறைவெய்தச்
சொரிசரமழைபோற்சூழவலாரிசுரரோடுந்
தெருமரலெய்தவார்த்துவளைத்தார்திருமாலை 28

பேரிகைதிமிலைசச்சரிபடகம்பிரிதில்லாத்
தாரைகள்முரசந்தக்கையிடக்கைவளைபம்மை
வாருறுதுடிகைகரடிகையிவையினொலிவானோ
ரூருறவயவர்வளைத்தனருலகுண்டுமிழ்வானை. 29

அதிரதரெண்ணிலர்மாரதர்சூழவலையாரு
முததிகள்போலவும்பல்கள்பம்பவுயர்சேணி
னதிர்தருமிடிபோற்கம்பினமார்ப்பவுறிதாவிப்
ததியளைநெய்பானுகரரிமுனரிற்சமர்செய்தார். 30

அத்திதரித்தோனருளினிலரிபோற்றிரிமன்ன
னத்திகளேகமாகுவகாலத்தொலியேபோ
லத்திகளெல்லாம்பம்பிடவாணன்புயமட்ட
வத்திகிரிக்கோன்முன்னர்நடந்தானறிவில்லான். 31

வேறு.

அரனருளமால்வடிவுபெற்றவறிவில்லான்
கரிபிரதமாவினர்களோடுகெடிதெய்தத்

திருவின்மருணன்முறுவல்செய்துசிலைகோலி
வருடமெனவெங்கணும்வடிக்கணைசொரிந்தான். 32

கரமறுவகோடிறுவகாலறுவநேரில்
சிரமறுவவாலறுவசெல்லெனவெழுந்து
புரள்வனகரித்திரடன்வென்னிலுறுவோர்கள்
வரையெனவிழுந்தருள்வர்மால்விசெரத்தால். 33

தேருருளறுவலவன்சிரமறுத்துக்
காருலவுநற்கொடிகளைந்துகளைகண்ணும்
வீரர்சிலையோடுகைவிழத்தலைதடிந்தே
யாரியன்விடும்பகழியண்டமுகடுற்ற. 34

திருமருணன்விற்கொடுசிலீமுகம்விடுப்பக்
கரிவெரினிலுற்றவர்கள்கால்கைகடுணிந்து
குருதியுகவும்பன்மிசைமற்றவர்குரம்பை
வரைமரநெறிந்ததெனமன்னியதுமன்றோ. 35

வெரினின்வருவீரரைமுராரிசரம்வீழ்ப்ப
வரைநிகரெனத்திரியுமும்பன்முனர்மற்றோர்
கரிபடகிலத்தின்விழுகாளையைமுனிந்தே
சிரமெய்தெரியாதவகைதேய்த்தனபதத்தால். 36

பரனெய்கணையாற்பரியின்மீதினுறுவீர
ரிருகரனொடேபரவீழவிணையில்லா
வரியைவினையாதவர்களம்புலமெனத்தம்
முறைவழிசிலாதிவுளியோடவுளையுற்றார். 37

தேரின்வருவீரருயர்சீதரனெய்யம்பால்
நாரியறவேகொடையினன்கறிவிலாத
பூரியர்படைத்தபொருள்போலவெரினுவத்
தாருமொளிராசுகம்விடுக்கிலதலைத்தார். 38

சிலையொடுகரங்களறவேகொடிகொடேரான்
மலையெனவிழுந்துருளவாசிகரியெல்லாந்
தலையறுவசெங்குருதிதாரணியினோடு
மலைகையுயிர்செற்றவருளாளன்விடும்பால். 39

நாணியறவில்லறநலங்கொளிரதத்தி
னாணியறமாவலவனற்றுவிழவொன்னார்
துணியறவீரர்கடுணிந்தனர்கண்மாயோன்
பாணமழையெண்டிசைபரந்தவனல்பொங்க. 40

சேடனணையாகவமர்தேவனெய்சரத்தால்
வீடினர்களானைபரியோடுவயவீர
ரோடினசெழுங்குருதிகூளிகளுவப்ப
வாடினகவந்தமெணிலாதனவடர்ந்தே. 41

வேறு.

அந்தகன் வெருவவேயயின் மழுத்தோமரமசொங்க
ளுந்தியேதந்தியெண்ணில்பரித்திரளின்மேலுருளுதேர்மேற்
சிந்துவின்ஞெலிகெடத்திசைசெவிடுற்றிருகங்கண்
மந்தரவரையெனக்குலையுறச்சுடுசொமால்விடுத்தான். 42

கஞ்சனைக்காய்ந்தருள்கண்ணனூர்கார்முகத்தேவுமம்பாற்
குஞ்சரங்கோடகங்கொடிகடேர்கோடியோர்கிமிடமுன்னம்
பஞ்செரியுறவிறுந்தன்மைபோற்படிமிசைத்துகளதாக
வெஞ்சினக்கயவர்கம்விண்மிசைத்தாவினவெளியிலாமே. 43

தேரறக்கொடியறச்சிலையறப்பாகர்வெஞ்சிரமுமறறே
காருறக்கரியறக்காலறக்கம்மறக்கவசமற்றே
வீரர்தம்முரமறநித்திலத்தாவடஞ்சிதறிவிண்மேற்
றூரகையவிர்தனக்கொப்பலாதென்பபோற்றுவுமன்றே. 44

நெடியவன்கணையினாற்கரிபரித்தேரறநிலையில்வீரர்
முடியறக்காதறக்குண்டலமெண்ணிலமுடுகிவிண்மேற்
கடிதினிற்சென்றுகீழ்வீழ்வனகவினுறும்பதமழிந்தே
யுடுவினமெரியுற்த்தரையின்வீழ்செய்கையையொத்ததம்மா. 45

அடல்செய்வோராக்கைமண்வீழவேஙாவுமார்கலியினெய்த
வடவையினிருகணுமுற்றிடஙாசிவாயுவினின்மேவக்
கடிதினிற்செவிகளைக்ககனமீதிடுதெலாற்கண்ணன்வாளி
யடைவினிற்பிதருமெதத்தநூற்கிரியைசெய்ததம்மா. 46

பகமோவீரனற்றசைநுகர்ந்துதிரநீர்பருகியெண்ணி
லிகலனுங்கூளியுஞ்ஞாளியுங்கங்கமுமெருவைதானு
மிகவுறும்பசிகெடும்படியெதிர்சேனையைவீட்டிமாயோன்
சிகியுறுஞ்செஞ்சரஞ்சென்றதாற்பரவுபகாரரொத்தே. 47

வேறு.

அத்தியின்வாழ்வோ
னத்திரமேவ
வத்திகளெல்லா
மத்திகளாய. 57

கோலவரிக்கோன்
கோலினமேவத்
தோலினமெல்லாந்
தோலினமாய. 58

அரிவிடுவாளி
யரியினுமுடுகக்
கரியினமெல்லாங்
கரியினமாய. 59

பத்திரைகேள்வன்
பத்திரமேவ
வத்திரிமேவு
மத்திரமாய. 60

கரிதனைவென்ருேன்
கரதலவம்பா
விரதமுமுளிப்பூ
விரதமேயாய. 61

சிந்துமகட்கோன்
சிந்துசரத்தால்
வெந்திறல்வீரர்
வெந்திறலானார். 62

வேறு.

அத்தியேயத்தியாகவயமாவயமாவாகச்
சத்திசத்தியாகத்தலைவர்நொந்தலைவராக
வித்தகவிரதம்மாவம்வித்தகவிரதமாக
வத்திரர்க்கனுகாவையனத்திரம்பரந்ததம்மா. 63

சக்கரத்தண்ணலேவுஞ்சாயகந்துணிக்கவாங்கே
கொக்கினம்படியின்வீழக்குஞ்சரங்குக்குண்மேவ
மிக்கிடும்பரவைமென்மேல்விரிசிறைவயிற்றினெற்றிப்
புக்கழுந்தினவல்லாக்கைப்புரைவரும்புனலின்மூழ்கி. 64

கதமுறுகதமாவையங்கணக்கிலாவயவரெல்லாம்
விதமுறுவிசிகந்தன்னுலிமைப்பின்முன்விபுலையின்கண்
சுதைசுரற்களித்தகோமான்றுலங்கியநாமமேத்தா
திதராதேவதையைச்சார்வார்தவமெனவிற்றதன்றே. 65

வேறு.

மாயவன்வலத்தின்வடிவாளிமழைதூவப்
பாயிவுளிதேர்மிகுபருப்பதகிகர்த்த
தூயகரிவீரர்கணிந்துகிலன்வீழ
காயலகைசூழ்ந்திடநடித்தனகவந்தம். 66

அம்பரமனம்புமழைதூவிடவடர்ந்த
வும்பறரையின்னயுதகோடிகளுருண்ட
வெம்புபரிவீரரிரதத்தொடும்விழுந்தார்
செம்புனல்களோடியதுதேவர்கடுதித்தார். 67

அரிசிலையினுல்விமெழற்கணையினுலே
கரியிரதம்வீரர்பரிமாளவதுகண்டே
யெரிநயனனுகியபவுண்டரனெதிர்ந்தே
வரவவனைநோக்கியுயர்மாயவனுரைப்பான். 68

நீயெனைவிடச்சொனநெடும்படைகடன்னிற்
றீயவவுன்மேல்விடுவெனத்திகிரிதன்னை
மீயுயர்விசும்பிலுயிரேகுமுன்விலக்கென்
றாயனகைசெய்துசுடராழியினைவிட்டான். 69

மாயன்விடுமொழிகதிராஞ்சிடவடர்ந்தே
தூய்மையில்பவுண்டரன்முடித்தலைதுணித்து
மீயுயர்விசும்பினுறைவோர்மலர்விடுப்ப
வாயனுயர்செங்கையினமர்ந்துளதவ்வாழி. 70

வேறு.

சினமுறுபவுண்டரன்றானிறந்திடத்திகிரிசங்கு
குனிவில்வாள்கதைபொன்னுடைகோலமாங்கலுழன்றூய
தனிமணியிவைகளெல்லாஞ்சடக்கெனமறைந்துபோய
கனவினிற்கண்டவெல்லாங்கண்விழித்திடக்காணுபோல். 71

திறன்மிகுபவுண்டரன்றன்றிகிரியான்மடியச்சீற்ற
முறவிரதத்தின்மீதினுற்றுயர்காசிராசன்
கறைமிடற்றரனையேலக்கதமுறத்திசைகளெல்லா
மறையவேவாளிதூவிவலம்புரிமுழக்கியார்த்தான். 72

தரணியெண்டிசைகளெங்குமறைத்தசாயகங்கடன்னை
யரியொருகணையினாலேயறுத்தழல்வாளிவிட்டுக்
கரிபரிவீரர்மாளவதைத்துயர்காசிராசன்
சிரமறுத்தெழில்கொள்காசித்தெருவிடையிட்டான்மன்னோ. 73

பவுண்டரனுடனுங்காசிப்பதியிறைமடியக்கண்டு
சிவந்தெரிநயனனானகலவியன்றேரினெய்தித்
தவந்தனிலுயர்ந்தோரஞ்சத்தாலகேதனன்றன்மீதி
னிவந்திடுசிலையால்வாளிநிறைந்திடத்தூவியார்த்தான். 74

நிலனுயர்வானமெல்லாநிறைந்திடும்வாளிதன்னை
யலமொளிர்கையினாற்சுற்றியகற்றியேயிராமநம்பி
சலமுறவெதிருகின்றகலவியன்றடந்தேர்தன்னை
வலவனோடிவுளிமாளவடித்தனன்வானோரேத்த. 75

அலத்தினாலிரதமாவோடழியவேகலவியன்றா
னிலத்திடைக்குதித்துமேருகிரெனக்கதைகைக்கொண்டு
சலத்தொடுமெதிர்ப்பத்தாலகேதனன்கலப்பையாலே
வலத்துடனடித்தலோடுமுறிந்ததுவயிரத்தண்டு. 76

கதையிருகூறாய்வீழக்கலங்குமேகலவியன்றா
னெதிருறவஞ்சியோடியேழுயோசனையினீள
முததியினழுவந்தன்னுண்மூழ்கியாண்டொளித்துப்போனான்
மதியொளிவண்ணநம்பிமாயவன்றன்னைச்சேர்ந்தான். 77

வாசவன்வெருவவெய்தும்பவுண்டரான்வலியான்மிக்க
காசிமன்னுடனேமாளக்கண்டமாதவர்களெல்லா
மாசிகண்மொழியவானோராவலங்கொட்டியார்ப்பக்
கேசவன்றுவரையெய்தியிருந்தனன்கிளையோர்வாழ்த்த. 78

பவுண்டரான்வதைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 1053.

---

95 - வது, சுதக்கணன் வதைப் படலம்.

தேசில்காசிபதிசிறுவனுமியசுதக்கணன்றவசுசெய்திட
வீசன்மற்றவனுரைத்தசொற்படியினியவெய்தியகிருத்தியுங்
காசிமாநகரொடெரியநேமியடர்கவின்கொளாவிரலுகிர்தெறித்
தேசிறேவியுடனினியகுதுபொருமியாதவன்றனையிறைஞ்சுவாம். 1

காசிதன்னினெழில்வீதியிற்கடியகாசிமன்றலையுருண்டிட
வாசினுள்ளமிழ்சுதக்கணன்கடிதுநோக்கியேயழுதகண்ணினன்
வாசுதேவனிவைசெய்தனனெனமனத்தினினிமறகினைத்துய
ரீசனைத்தொழுதுகனல்வளர்த்திடவிருந்தருந்தவமியற்றினன். 2

வருத்தமோடுயர்சுதக்கணன்கனல்வளர்த்துமாதவமியற்றிய, வருத்
திகண்டரன்முனெய்தியான்றருவதேதுநீயறைதியென்றலும், பெருத்த
வெந்தையைவதைத்தனன் னவிர்கொள்பின்னைநாயகனை வெல்லவோர்,
கிருத்தியைத்தருதியென்னநஞ்சுதிகழ்கிரிவனிம்மொழிகிளத்துவான். 3

அழலினுகுதிபெய்தாபிசாரமிறையச்செய்தாலதனுளனலுறும்
விதியளாமொருகிருத்தியெய்துவளெனுவரன்கயிலைமேவினன் [ன்
கழைகொடோளியுமைபாகன்வாய்மொழியினெஞ்சின்வஞ்சமுறுகாவல
றழலினுவினெய்சொரிந்துகங்கையுறுசடையன்மந்திரநவின்றனன். 4

வேறு.

அரனுரைக்கவேவளர்த்தவாவிசாரவனலுளே
யெரிமிகுத்தகண்கள்வச்சிரத்தெயிற்றுமுச்சிரக்
கரமொராறினயின்முசுண்டிகட்கம்வாள்வில்கதையுற
விரைவினிற்கிருத்தியெய்திவிபுதரஞ்சகின்றனள். 5

அழலுவெய்தியமர்கிருத்திதன்னைநோக்கியரசர்கோன்
குழல்கொடுதவோனையின்றுகொன்றுமீடியென்னவே
சுழலழற்கண்பிறையெயிற்றள்சூலமேந்துகையினள்
தழலுயிர்ப்புகையணிதெரணியஞ்சவேகினள். 6

திக்கசங்கள்வெருவநீடுதிசைகளெங்குமெரியவே
யுக்கிரத்துரப்பியேழுகிகாலவிறுதியி

ணக்கனுற்றவடிவுபோலநாகரஞ்சவிடியெனக்
கொக்கரித்தடர்ந்துவந்துகோலகாலமாக்கினாள். 7

பன்னிரண்டுயோசனைப்பரப்புநீளமாகியே
யுன்றுமுன்னம்வானொடாசையெரியவோதையுவரியின்
வன்னியென்னமுடிகிமாயன்வைகிவாழுநகருளோ
ரின்னலெய்திவெருவும்வண்ணமேகினாள்கிருத்தியே. 8

தவர்களெண்ணில்விபுதரோடுசெதமகனடுங்கவே
யவனியின்கண்வடவைபோலமுடுகிவாரியலைகள்சூழ்
துவரைதன்னினடர்கிருத்திசூலமேந்திவருதலும்
பவமிலாதவரசர்சேனைபாறினார்களலறியே. 9

இறுதிகாலமுறவெதிர்ந்தவீசனெற்றிவிழியழ
லறுதியாகவந்ததையகோவெனாவரற்றியே
நறுநெய்யுண்டநாதகாவெனாநவின்றுநகருளோர்
முறையிடாநடுங்கிமாயன்முன்னரோடினாரரோ. 10

வேறு.

வித்துருமத்தூணெண்ணில்விளங்குமாமண்டபத்தின்
சத்தியவாமையென்னுந்தத்தைநேர்மொழியாளோடு
நித்தமங்காடுகின்றநேமியானடிவணங்கிக்
கைத்தலங்குலைத்துநெஞ்சாகுலம்வரக்கழறலுற்றார். 11

வாரியைப்பருகியோங்கும்வடவையோகடுவோவன்றி
நீரணிவேணியான்றன்னெற்றியின்விழியிற்றீயோ
பாரொடுந்திசையைச்சுட்டுப்பரந்தகல்விசும்பைமுட்டி
யேருறுந்துவரைதன்னினெய்தினவிறைவவென்றார். 12

எரியுறவளர்ந்தெண்டிக்கைச்சுட்டதென்றிரைத்துவந்தோ
ருரைசெயக்கேட்டமாயோனுமாபதிவரத்தாற்காசி
யரசர்கோன்விடவேவந்தகிருத்தியென்றறிந்துதன்கை
விரலுகிர்தெறித்துச்சூதுவிரும்பியங்காடினானால். 13

தாதுராகஞ்சேர்கூந்தற்சத்தியவாமையோடு
சீதரன்சூதங்காடிவிரலுகிர்தெறிக்கக்கோடி
யாதவரொளிபோற்றோன்றியாழியெண்டிசையுமண்ணு
மீதலத்துயர்ந்தவானும்விளங்கிடவெழுந்ததன்றே. 14

அரிவிரலுகிரைத்தானேதெறித்திடவாழியாகி
யெரியுறவடர்ந்துவந்தகிருத்தியையெரித்துக்காசி
யரசனைவதைத்தவ்வூரையழலினுக்கிரையதாக்கிச்
சுரர்துதிசெய்யமீண்டுசோதியையடைந்ததன்றே. 15

சுதக்கணன் வதைப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் – 1068.

96 - வது, துவிந்தன் வதைப்படலம்.

அந்தரத்துயர்ந்தவென்றின்சுதனடிபணிந்துவாழ்த்த
விந்திரனுலகைத்தாண்டியிலங்குநேர்சாலமெய்தே
துந்துமிதனைத்தாளால்வானுந்தியோராதிநாமஞ்
சிந்தையின்மகிழ்ந்துகூறுஞ்சீரியோரடியிற்சேர்வாம். 1

சுந்தரஞ்செறிந்ததூண்கடிலங்குமாமண்டபத்தி
னந்தணர்குழாங்கள்சூழவிருக்குமச்சுதனைநோக்கி
யிந்துநேர்வண்ணனன்பாலசோதையோடிலங்குகின்ற
நந்தனைக்கண்டுமீள்வனென்றுரைநவின்றுபோனான். 2

தூயமாமணித்தேர்மீதிற்றுலங்கியவிராமநம்பி
யாயர்தம்பதியினெய்தியசோதையைவணங்கியண்டர்
நாயகனாகியோங்குநந்தனைப்பணிதலோடு
நேயமோடணைத்துக்கண்ணீர்சிலனுறவிளம்புகின்றார். 3

இந்திரைகொழுநனின்பத்துடனிருந்தனனோவெம்மைத்
தந்தைதாயெனவேயெண்ணிநினைப்பனோசாற்றுகென்று
நந்தனோடசோதைகண்ணீர்சிலனுறநவிலலோடுஞ்
சுந்தரவிராமநம்பிபரிவுடன்சொல்லலுற்றான். 4

மாயவனாகிவந்தபவுண்டரன்றனைவதைத்துத்
தீயவெங்காசிமன்னைத்துணித்தவன்சேயைச்செற்று
நோயெனமுடுகிவந்தகிருத்தியைநொறுக்கிக்கண்ண
னாயுமாமறையோர்சூழத்துவரையினமர்ந்தானென்றான். 5

அன்னையாம்நின்னைத்தந்தையாகியநந்தன்றன்னைத்
துன்னியவன்பினித்தம்நினைந்தும்மைத்தொழுதிவ்வூரின்
மன்னுவன்சிறிதுநாளின்மாயனீர்வருந்தலென்றே
யின்னவிவிராமநம்பியியம்பிடத்தேறினாரால். 6

தாலகேதனனையன்பாற்றழுவிப்பொற்கலத்திற்றூய
பாலனவருக்கமெல்லாம்பரிவுடனளித்துப்பின்னர்
மாலையோடாரமெல்லாமகிழ்வுடன்கொடுத்துநித்தஞ்
சீலமார்குணத்தசோதைசிறந்தினிதிருக்குநாளின். 7

வசந்தகாலந்தானெய்தவனப்புடையிராமநம்பி
யொசிந்தநுண்ணிடையராயவாய்ச்சியரோடுமுற்றே
யசைந்திடுதென்றல்வீசவலர்மலர்ப்பொழிலைநண்ணி
யிசைந்திடுமதுபகீதத்தியாழிசையிசைத்தார்மாதோ. 8

மதுரயாழிசைத்தமாதர்வாருணமதுவந்தெய்தச்
சுவைதிகரமிர்தமின்னார்தன்னினுந்துலங்கிச்சூழ்ந்து
ஈதுமெனக்காத்தின்றுய்யகனகவள்ளத்தினேற்றே
யதிவிதக்களிப்பாண்டெய்தவனைவருமருந்தினாரால். 9

கடத்தினின்மதுவையுண்டோர்காரிகையரிவையோவி
யுடற்றடிப்புறவவ்வேரியுரோமத்தினெறியிற்பொங்கிப்
பொடித்ததென்றிணைமென்கொங்கைபுனைவடமாரங்கையி
னொடிப்பினினமைத்துத்தோழிநகருதிநறவையென்றாள். 10

நறவினல்விரதமோராநாரணன்வெண்ணெயுண்டு
கறைநடுவதனிற்கட்டுண்டனன்கடுவிடத்தைநுங்கிப்
பிறையணிசடையன்பித்தனாயினன்பிரிதில்வேரி
யுறுசுவையறிவாரென்போலிலையென்றங்கொருத்தியுண்டாள். 11

நலனுறுமதுவையுண்டோர்களிக்குமானைக்கவிந்து
நிலவொளிபரக்கக்கைப்பொன்வள்ளத்தைநேரநோக்கிப்
பலனுறுமதுவைத்தோழிபருகுதியெனலும்பாங்கி
யிலவிதழதரம்வைத்தாண்டிலாதுநாணுற்றாளன்றே. 12

மதுநுகர்வள்ளத்திற்றண்வார்குழன்மீதினூடு
மதுகரவருவைநோக்கியொருத்திமாயவன்வானோர்க்கு
மதுகரத்தேந்தியீந்தவண்மையைப்போலநீரிம்
மதுவினையயிலாதியான்றான்பருகிடவழங்குமென்றாள். 13

வேறு.

பீதகவள்ளத்தினொருத்திபேரின்பம்
போதவேமதுவுண்பாள்பூமரத்தின்வீ
ழேதமினறவுகண்டெம்மைப்போற்களுண்
மாதவம்பாதவம்வதிந்ததில்லென்றாள். 14

இவ்வழியனைவருங்களிப்பங்செய்தவே
செவ்விதழாயவாய்வெளுப்பத்தீதிலா
நவ்வியைப்பழித்திடுநயநச்செம்மையை
வவ்வவள்ளங்கொடுமதுவுண்டாரரோ. 15

வேறு.

வாருணமதுவந்தெய்தமகிழ்ந்தெழின்மயில்கள்போலு
நாரியருடனுமன்பாற்பருகினன்மலர்கள்சூடி
யாரமெய்க்கணிந்துநானங்கமழ்ந்திடயமுனையாற்றி
னீரினைவருதியென்றேயலாயுதனிகழ்த்தினனால். 16

நலத்துடனிராமநம்பிநவின்றிடயமுனையாறு
நிலத்திடையெய்தாதாகநெஞ்சுறுமுனிவினோடு
மலத்தினாலிழுத்தலோடுமெடியினில்வந்துவீழ்ந்தாள்
சலத்தொடுநதியிற்றூயகாளிந்திதவளமாகி. 17

ஆயிரநீலமுன்னரளித்துயர்யமுனையாருந்
தூயவள்பயத்தினோடுந்துலங்கிடவிராமநம்பி
நேயமோடிலகுவாசநிறைமலர்பறித்துவீசி
வேய்கொடோளியர்களோடும்விரும்பிநீராடினனால். 18

அயவிளையாட்டுமுற்றியஞ்சனவாடைசுற்றிக்
கயல்விழிமடவாரோடுங்கலனெலாமணிந்துகொண்டே
யியல்புடையிரேவதத்தினெய்தியாழிசைகள்பாடி
மயிலூறுகானந்தன்னின்வனப்புடனிருக்கும்வேலை. 19

அரிகளினதிகனானமயிந்தனுக்கனுசனாகி
நரகனோடளப்பிலாதநட்புடைத்துவிந்தனுயர்
புரிகளையழலாற்சுட்டுப்பொதுவரைக்காத்தாற்பற்றி
வரையுருபிலனுள்ளிட்டுமறம்பலசெய்தான்மன்னோ. 20

நியுதயானையின்வலத்துத்துவிந்தன்வானீண்டமெய்யன்
கயிலையைநிகர்த்ததாலகேதனன்களிப்பினோடு
மயினிகரணங்கினாரோடிரேவதைவரையிற்சார்ந்தே
வியல்புறவிருக்குங்காவினிமைப்பின்முன்னெய்தினானால். 21

மாதவர்மகிழத்தாலகேதனன்மதுரமிக்க
கீதயாழிசைக்கும்வேலைகிட்டித்தன்றசனங்காட்டிப்
பாதவமீதினெய்திப்பாசடைபறித்துவீசி
மோதினன்கோடுவாங்குமுனிந்துயர்துவிந்தனம்மா. 22

மலையெனவுயர்ந்துதோன்றும்வானரமரத்தினேறி
யிலையொடுசாகைவாங்கியெறிந்திடமாதரெல்லாங்
குலைகுலைந்தவனியோடக்குபிதனாமிராமநம்பி
யலமெடுத்தவன்றன்மீதினெறிந்தனனமரர்வாழ்த்த. 23

அடுசினந்திறுகவீரனெறிந்திடுமெலாயுதத்தைக்
கடுமையிற்றப்பிச்சேர்ந்துமதுவுறுங்கலசமெல்லாம்
பொடிபடவுடைத்துத்தூயபொன்னவிர்தூசைப்பீற
மிடலுடையிராமநம்பிமேல்விழுந்தடித்தானம்மா. 24

சிரமிசையடித்துமார்பிற்புடைத்திடுந்தீயோன்றன்னை
முரணுறுமிராமநம்பிமுசலங்கொண்டடித்தலோடும்
வரைவிழுவதுபோல்வாயிற்குருதிநீர்மண்ணினோடத்
தரைமிசைமயங்கிப்பின்னர்த்தெளிந்தனன்மயிந்தன்றம்பி. 25

தேறியதுவிந்தனெஞ்சிற்சினத்தொருசாலம்வாங்கி
யேறுறுமரனுமஞ்சவெறிதலுமிராமநம்பி
நூறுகூறாகத்தண்டானொறுக்கியம்மரத்தைவீழ்க்க
மாறிலோர்பிறங்கலேந்தியெறிந்தனன்மயிந்தன்பின்னோன். 26

வடவரைபொருவவெய்தமலையினையலத்தினாலே
படியிடைத்துகளாய்வீழப்பால்வண்ணனடித்தலோடுங்
கடுமையினெண்ணிலோங்கல்கவடுடைமரங்களெல்லா
மிடலுடைத்துவிந்தன்விட்டேயார்த்தனன்விண்ணோரஞ்ச. 27

இடிகளும்வெருவவார்த்தேயெண்ணில்பாதவங்களோங்கல்
கடியவன்விசையின்மென்மேலெறிந்திடக்கண்டுகோல

வடிவுடையிராமநம்பிவருவரைமரங்களெல்லாம்
பொடிபடவலத்தாளூறப்பூமழைபொழிந்தார்விண்ணோர். 28

விட்டிமெரங்களெண்ணில்விலங்கல்கள்பொடியதாக
மட்டவிழலங்கல்சூமெதிவண்ணனலத்தான்மோதக்
கிட்டியதுவிந்தனார்த்துக்கிரியிடையிடிவீழ்ந்தென்னச்
சிட்டரெண்ணிராமநம்பிசிரமிசைப்புடைத்தான்மன்னோ. 29

சிரமிசைப்புடைத்தலோடெஞ்சீறியேயிராமநம்பி
யரிகுலவீரன்மார்பினசனிவீழ்ந்தென்னவாங்கே
யொருகரமுறுக்கிக்குத்தவுதிரம்வாயொழுகியோட
வரையுருளுவபோற்பாரின்மடிந்தனன்றுவிந்தன்மாதோ. 30

தீயனாந்துவிந்தன்மாளச்சிறந்திடெஞ்சுரர்களெல்லாந்
தூயமாமலர்கடூவித்துதித்தனரிராமன்றன்னை
நேயமோடாயர்மாதர்நிறைந்திருமருங்குஞ்சூழ
மாயவன்முன்னோனெய்தியசோதையைவணங்கினானால். 31

தாயெனுமசோதைதன்னைப்பணிந்தசக்கரத்தோன்முன்னோ
னாயரிற்பெரியோன்றன்னையடிதொழுதெழுதலோடுந்
தீயனாந்துவிந்தன்றன்னைச்செற்றவன்றன்னைநந்தன்
றாயமாதேவியோடுமணைத்தருள்சுரந்தானன்றே. 32

விலங்கலாமவன்வான்றோயவிலங்கலின்முழையுட்போடக்
கலங்கியவாயர்தம்மைவிடுத்துயர்கண்ணன்முன்னோ
னலங்கிளரசோதைநங்கைநந்தனோடிரங்கிநிற்பப்
பொலஞ்செறியிரதமீதிற்றுவரையிற்புகுந்தான்மன்னோ. 33

அன்னையைவணங்கித்தூயவருள்செறிவசுதேவன்றன்
பொன்னடிபணிந்துநின்றபொற்புறுமலத்தோன்றன்னைப்
பின்னவனிறைஞ்சமார்பிற்றழுவிப்பேரின்பமெய்து
மன்னவர்குழாங்கள்சூழமகிழ்ந்தினிதிருந்தான்மாதோ. 34

துவிந்தன் வதைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - 1102.

---

97 - வது, மதனன் ஜனனப்படலம்.

சோமனைச்சடையிற்றாங்குமரன்படெந்துன்பநீக்கிப்
பூமனைத்தந்தீரேழுபொழில்களும்படைத்துக்கஞ்ச
மாமனைவதைத்துப்பின்னர்மாதவர்குழாங்கள்போற்றக்
காமனையளிக்குமாயோன்கழலிணைகருதுவோம்யாம். 1

ஆழிசங்கிலங்கும்பாசமங்குசமளிநாணாகும்
வேழ்வில்வெறிகள்வீசும்விசிகம்வேயமர்ந்தவெண்ணை

மாழையின்கடையந்தோன்றமதனகோபாலனாகி
யாழினைப்பழிக்குமின்சொல்லுருப்பிணிக்கின்பமீந்தான். 2

கத்தூரித்திலதநெற்றிகவினுறக்கழுத்தின்மார்பின்
முத்தாரமிலங்கநேரில்கவுத்துவமுகிலின்மின்போல்
வித்தாரத்திலதநாமந்தெரிவுறவரம்பைவாம
மொத்தாருவயங்குமாதாமுருப்பிணிக்கின்பமீந்தான். 3

தாடொருநாளினத்தேவிதன்னுடன்றேனும்பாலுங்
கூடியதொப்பச்சிந்தைகுளிர்ந்திடப்பாயலெய்தி
நீடியவின்பமெய்திநேமியோன்மகிழுநாளின்
பீடுடைமதனனெய்துமியல்பினைப்பேசலுற்றாம். 4

நக்கன்மாதவர்கட்கெல்லாம்நாயகனானசோதி
திக்கெலாம்விளங்கவைகித்தினம்பரிசாரகஞ்செய்
திக்குநேர்மொழியளாயவுமையுவந்திறைஞ்சியேத்தத்
தெக்கணாமூர்த்தியாகிச்சிறந்துயோகஞ்செய்நாளின். 5

தீயவெஞ்சூரன்றன்னைச்செயித்திடச்சிவன்றான்செய்யுந்
தூயமாயோகமாறிச்சுதன்றனையளிக்கும்வண்ண
மாயிரநயனன்றன்னோடமரர்கண்மதனைநோக்கி
நீயரன்றவத்தைமாற்றியெம்மிடர்நீக்கென்றாரால். 6

சுரரிவைமொழியமாரன்றூயகன்னலின்வில்லேந்தி
யரியுறுநாணதாகவைமலர்வாளிபூட்டி
விரைவினிலரன்மேலெய்யவெகுண்டவனுதலின்கண்ணை
யெரியுறவிழிக்கக்காமனெரிந்தனனிமைப்பின்முன்னம். 7

அரனுதல்விழியினாலேயழகியமதனீராக
இரதிதன்வயிற்றினெற்றியிருகணீர்நகிலின்வீழப்
பருவரற்பரவைதன்னுட்பதைக்கின்றாடன்னைநோக்கிச்
சுரரெழில்வலாரியோடுந்துலங்கியவரன்பாற்சென்றார். 8

அரனெழிற்பாதந்தன்னிலிறைஞ்சிவான்வலாரியண்ட
ருரைசெய்வாருமைதன்கேள்வவுன்னுதல்விழியிற்றோன்று
மெரியினினிறந்தான்றேவியிரதியங்கெய்துகின்ற
பருவரலொழித்தியென்னப்பகர்ந்தடிபணிந்தார்மன்னோ. 9

சுரரொடுவலாரியெய்தித்துதிசெய்தமொழியைக்கேட்ட
வரனருள்புரிந்தெல்லோர்க்குமனங்கனாய்த்திரிந்துமாற
னிரதிதன்விழிக்குத்தூயவுருவனாயியங்குவானென்
றுரைசெயமதனன்றேவியுவகையோடிறைஞ்சலுற்றாள். 10

என்னிருவிழிக்குத்தூயவுருவனாய்வசந்தனென்னை
முன்னுவதெப்போதென்னமண்மிசைப்பாரநீக்க
நன்னிலமதனிற்றோன்றுநாரணன்சுதனாய்ப்பாரி
லுன்னுடனணைவனென்றேயுமைகணவன்பின்சொல்வான். 11

தரணியிற்பாரநீக்கித்தன்னுடைச்சோதிதன்னி
லரியுவந்தெய்தும்போழ்தினனவர்க்குமனங்கனுதி
யுருவுடைக்கொழுநனுகவுன்னுடன்சேர்வனென்றே
யெருதினிலுறுவோன்கூறவிரதிதானேகினுளால். 12

அன்றிரதிக்குத்தூயவரன்வரமளிக்கமாரன்
வென்றிகொள்விதர்ப்பன்பெற்றமெல்லியல்வயிற்றிற்ரேன்றக்
குன்றெடுத்தருளுமாயன்றேவியைக்குறித்துநோக்கி
மன்றலர்குழலினுடேவகிமனமகிழ்ந்தான்மாதோ. 13

கருப்பமோராறுதிங்கணிறைந்திடக்கவின்கொணங்கை
யுருப்பிணியுடன்மாலோராதனத்திருந்துவகையெய்தத்
தருப்பையைவிரித்துக்கர்க்கன்றழலினுகுதிசெய்தோமம்
விருப்பமுற்றுயர்வேதத்தின்விதிவழிநிறைத்தான்மன்னே. 14

மறையவர்தமக்குப்பூமிதானமாதானஞ்செய்து
நறுநெய்பால்பருகுமாயனலனுறத்தசமாந்திங்க
ணிறையவேவிதர்ப்பன்பெற்றநிகரிலாவனசமங்கை
மறுவிலாமதனன்றன்னைப்பயந்தனள்வானேர்வாழ்த்த. 15

அறந்தவழுதமாயோன்றனக்கழகானமைந்தன்
பிறந்தனனென்றுமாதர்பேசிடவுவகைநெஞ்சிற்
செறிந்திடவிரைநீராடித்திமிலைசின்னங்கள்பேரி
யறைந்திடக்கோயில்புக்கானந்தணர்குழாங்கள்சூழ. 16

நந்தொடுதிகிரியேந்துநாரணன்கோயின்மேவி
மைந்தனையெடுத்துத்தூயமதிமுகநோக்கலோடுஞ்
சிந்தையின்மகிழ்ந்துகர்க்கன்சாதகவோமஞ்செய்ய
வந்தணர்குழாங்களாசியறைந்தனர்பேரியார்ப்ப. 17

வேறு.

தேவகிரோகணிசிறந்தரேவதி
பாவையர்பலருடன்பரிந்துநோக்கியே
யோவியஞ்சுவைகெடுமுருவினுன்றனை
ஆவலினணைத்திவன்மதனனுமென்ருன். 18

தாலகேதனன்வசுதேவன்சாத்தகி
சீலமாருக்கிரசேனன்றேவகன்
கோலமார்மாயவன்குமரனுகிய
பாலனைநோக்கியாசிகள்பகர்ந்தனர். 19

தரளமாமணிகள்சாமீகரத்துட
னிரவலர்மிடிகெடவீந்துமாதவன்
சரியிலாதுயர்ந்தகோகோடிதானங்க
ளருமறையறிபவர்க்கருளினனரோ. 20

வீழியின் கனியென விளங்கும்வாயின
டாழ்விலாவுருப்பிணிதனயன் றன்னுட
னேழ்தின மகிழ்வுடனிருக்குமவ்வுழி
யூழ்வினைச்செயலினையுரைக்கின்றேனரோ. 21

மதனன் ஜனனப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - 1123.

---

98 - வது, சம்பரன் வதைப் படலம்.

வச்சிரப்படையனோடண்டர்வாழ்த்திட
நச்சுறுமரவின்மேனடித்துவேதத்தி
னுச்சியினசைவிலாதொருவனாகிய
வச்சுதன்பெயரினையறைந்துய்வாமரோ. 1

நம்பர்தந்நுதலுறுநயனத்தீயினு
லம்பரத்தெரிந்துபின்னனங்கனானவன்
வெம்பகையாயசம்பரன்வெகுண்டெழூஉ
திம்பரினிரதியைப்பற்றியேகினான். 2

நீரணிசடையினனெற்றிக்கண்ணினன்
மாரவேளெரிந்திடமயங்குஞ்சிந்தையாள்
பாரினிற்சம்பரன்பற்றியேகவே
யாருயிர்விடுவனென்றயரும்வேலையின். 3

இந்துவின்சடையனலெரிந்தமன்மதன்
சுந்தரவரிசுதனாகித்தோன்றியே
வந்துநின்னிடர்கெடமணப்பனுமென
வந்தரத்துயர்ந்தவசரீரிசாற்றின. 4

துனியறவுயர்ந்தவசரீரிசொல்லவே
வினையுறுசம்பரன்மேவும்போதெலாந்
தனையவன்கரந்துதன்மாயைதன்னினு
லினியதோரரிவையைப்படைத்தங்கேகுவாள். 5

ஆசுறுசம்பரனணுகும்போதெலா
மாசின்மாயாவதியானமங்கையைத்
தேசுறவேவியாண்டிரதிசேருற
வேசறுமருந்ததியென்னவைகினாள். 6

பவமறுநாரதன்பழிப்பின்மன்மத
னவனியிற்சனித்தமையறையச்சம்பரன்
றவரையினெய்திமால்சுதனைப்பற்றியே
யுவரியினெறிந்துதன்னூரிற்சென்றனன். 7

கடியுடைக்கமலமின் கண்களிக்கத்தன்
மடிமிசைக்கிடத்தலுநகைத்தமைந்தனைக்
கடுமையிற்சம்பரன் கைக்கொண்டேகவே
யிடருறவிருநிலத்திரங்கிச்சோர்ந்தனள். 8

தினமோரேழ்மகிழ்வுடன் சிறந்திருந்திடும்
வனிதைதன் மடிமிசைமகனைக்காண்கிலா
ணினைவழிந்தலறியேநிலத்திற்சோர்ந்திட
வனைவருமெய்தியாண்டாற்றினாரோ. 9

மாமியாந்தேவகிமலர்க்கணீருகப்
பூமிசைவனிதையையெடுத்துப்புல்லியே
காமனைநிகர்த்தவென் கண்ணன்பாலகன்
போம்வகையேதெனப்புலம்பினாளரோ. 10

சேயினையிழந்தவளிரங்குஞ்செய்கையை
மாயவனறிந்துயர்மனையினெய்திநற்
றாயுடன்றந்தையுந்தழுவச்சக்கர
னேய்விலாதிருகணீருகவாற்றினான். 11

மதுமலருறையுமின்னெழுந்துமாயவன்
பதமிசைவிழுதலுமணைத்துப்பார்மிசை
விதியினைவெலற்கரிதென்றுவிம்மியே
சுதையைநேர்மொழியினாட்கினையசொல்லுவான். 12

மாயமாய்ச்சம்பரன்வஞ்சஞ்செய்ததுந்
தூயநற்சுதனினிவருகுஞ்சூட்சியு
மாயவையெல்லவுமறியக்கூறினான்
சேயினையிழந்தவடேறும்வண்ணமே. 13

எதுகுலத்தரசர்களிடரின்வீழ்ந்திடப்
பதகனுஞ்சம்பரன்மதனைப்பற்றியே
யுததியினெறிந்திடவொளிகொள்வேளினைக்
கதுமெனவிழுங்கியமகரங்கண்டரோ. 14

பரதர்கள்பரவையிற்பரந்துமீன்கொலக்
கருதியேவலைகளைக்கடிதுவீசிட
விரதிதன்கொழுநனைவிழுங்கியேகிய
விருதுறுமகரமீன்பிடித்துமீண்டனர். 15

சகரநீர்கிழியவேதாவியோடிய
மகரமீன்றனைக்கொடுதிமிலர்வண்மைசேர்
சிகரமாடங்கள்சூழ்நகரிசென்றுதா
னிகரில்சம்பரன்றனக்கீந்துநின்றனர். 16

கடியவச்சம்பரன் கண்ணினோக்கியே
நெடியவிம்மீனினைச்சமையுநீரென

மடையர்கண்மகரமீன்வயிற்றைப்பீறநற்
சுடரொளிமதலைதான்றோன்றக்கண்டனர். 17

தூயமீன்வயிற்றினிற்றோன்றுமைந்தனை
நேயவாலுவர்கடாம்வாங்கிநீதியில்
நீயசம்பரன்முனர்க்காட்டத்தேவியா
மாயமாயாவதிமகிழவீந்தனர். 18

ஆயதோர்காலையினாலுகோரதன்
றூயமாவிரதிமுன்சொல்லுவானரன்
காயவேயெரிந்திடுங்காமன்மண்மிசை
மாயனாந்துவரைமன்மைந்தனாயினான். 19

சிருறுமுருப்பிணியின்றசேயினைப்
பூரியசம்பரனெடுத்துப்போந்துயர்
வாரியினெறிந்திடமகரநுங்குமிவ்
வீரியன்வேளெனவிளம்பினானரோ. 20

நீயவன்றன்னையேவளர்த்துநேரிலா
மாயையாயிரங்களும்வருவித்திரெட்டுத்
தூயநல்வருடங்களொருவவுன்றனி
மாயவிவ்வசந்தனுக்குரையிவ்வாறெலாம். 21

சோடசவருடங்களொருவித்தூய்மதன்
சேடனும்வெருவுறத்திரியுஞ்சம்பர
னோடமர்பொருதவனுடறணிப்பனாற்
பீடுடையிரதியேயென்றுபேசினான். 22

ஈதெலாமொழிந்தவண்முனிவனேகலுந்
நீதெலாமகற்றியவிரதிசிந்தையின்
காதலாற்கணவனையணைத்துத்தன்கர
மீதினில்வளர்த்தனண்மகிழ்வுவிஞ்சவே. 23

வேறு.

இருந்துபின்றவழ்ந்துமெல்லநடந்தைந்துபருவமெய்தி
யருந்தவர்மகிழவேதமறைந்துயர்சாத்திரங்க
டிருந்திடப்பயின்றேயோங்குஞ்சிலையினூல்விதங்கள்கற்றே
யருந்ததியனையதேவிவளர்க்கவேளழகனானான். 24

காயுமாகரிநடத்திக்கதையினூல்கற்றுப்பாரிற்
பாயுமாவிரதமூர்ந்துபதினாறுவருடஞ்செல்லத்
தூய்மையாங்கொழுநன்றன்னைநோக்கியேதுயரமோவி
மாயையாயிரமுமோதுவித்தனளிரதிமாதோ. 25

கன்னல்வில்லேந்துகாமன்கவினுறுமிரதிதன்னை
யன்னையென்றினிதுநோக்கவவளெழிற்காந்தனென்று

தன்னிருவிழியாற்காதறழைத்திடநோக்கலோடு
மென்னிவையென்னவுன்னிமதனனுண்டியம்பலுற்றான். 26

அன்னைநீயன்றோவென்னையளப்பருமாசைதுன்ன
வுன்னிருவிழியாற்காதலுற்றிடநோக்குகின்றா
யென்னிலையுரைத்தியென்னவெஃழின்மதனியம்பலோடு
மின்னிடையிரதிகாந்தன்றனக்கிவைவிளம்பலுற்றாள். 27

நீயென்றன்மகுணனாயவேனிலாய்நெற்றிக்கண்ணான்
காயவேயெரிந்துமீளக்கவினுறுதுவரைமன்னா
மாயன்றன்சுதனாய்வந்தனின்னைவாரியினுள்ளிட்டான்
றீயவுன்பகைஞனானசம்பரன்சேர்ந்துமன்னோ. 28

வாரியுண்மகரநின்னைவிழுங்கிடவலைஞரெய்தி
நீரினுண்மீனைத்தாங்கள்பற்றியேநெறியின்மீண்டு
சீரில்சம்பரன்றன்முன்னர்காட்டக்கூவியர்கள்சேர்ந்து
பாரினிற்பிளக்கநீயாங்குழவியைப்பரிவிற்கண்டார். 29

மடையர்கணின்னையுன்றன்புரவலன்முன்னர்வைப்பக்
கடியவனுடனேகூடிக்கலந்தனுபவந்தான்செய்ய
வடிவுடைமங்கைமாயாவதிதனைப்படைத்தேனந்தக்
கொடியிடைமடவாள்கையிற்கொடுத்தனனின்னையென்றாள். 30

இவையெலாமென்றூனெய்திநாரதனியம்பினனென்
றுவமையிலிரதிகூறத்தேவியையணைத்தொண்டேரி
னவையறுகுணத்துநாரியிவுளியைநடத்தியேகப்
பவமுறுசம்பரன்றான்பயமுறவார்த்தானன்றே. 31

மாரவேளிரதியோடுமெணிநெடுமிரதமேறி
வீரமார்தனுவினாணையெறிந்தண்டம்வெடிப்பவார்ப்பச்
சூரராமசுரரோடுந்துன்மதிச்சம்பரன்றன்
றேரின்மீதேறிமூரிச்சிலையெடுத்தெதிர்ந்தானன்றே. 32

சம்பரனெதிர்த்தலோடுந்தழங்கியசங்குபேரி
தும்பிகளெண்ணிலாததுரகமோடெரும்வீரர்
வெம்பியேவளைந்துசூழவீரவேள்விசிகமாரி
யம்பரந்திசைபாரெங்குமிறைத்தவனார்த்தானம்மா. 33

கரியொருகரமுமற்றுக்கால்களுமறவேவீழ்ந்த
பரியிருகுரமுமற்றுப்பருப்பதம்போன்றுசாய்ந்த
வரிசிலைதுணியவீரர்முடித்தலையுருளமாண்டார்
குருதிபேராறுயோடக்கொடிகுடைமிதந்தமாதோ. 34

வசந்தனேவையமாகவயங்கிவெசந்தன்வாளி
கசந்தனைத்துணிக்கச்சந்தங்காண்கிலாதேபல்கூறா
யசந்தசைக்குவைபோல்வீழவசைந்தநின்சுவலோர்வீழ்ந்தார்
புசந்தலையுரங்கைகாலேபுசம்படப்புரண்டுபோனார். 35

பிடைவசந்தன்வில்லாற்பிறைமுகவாளிபெய்யக்
கோடைக்கசங்களெண்ணில்குரகதநிறைகண்மாள
வாடினகவந்தக்கோடியளக்கரிற்குருதிபாய
வீடினரசுரரெல்லாம்வெகுண்டுசம்பரன்றான்வந்தான். 36
சம்பரன்றனுவைவாங்கிச்சாயகமாரிபெய்தே
யும்பர்கணடுங்கவானமறைத்தருத்தார்த்தலோடும்
வம்பவிழ்மாலைமார்பன்மதனழல்வாளியாலே
யிம்பரினறுத்துவீழ்த்தானெதிருமாசுகங்கடன்னை. 37
எரியுறுநயனனாயசம்பரனெதிரிலாத
வரவுறுபடையைவிட்டானமரர்களஞ்சியோட
விரதிதன்கொழுநன்வெய்யவிராக்கதர்படையைவாங்கிச்
சுரர்துதிசெய்யவெய்யத்துணிந்தமாசுணங்களெல்லாம். 38
கடியசம்பரன்றானெஞ்சிற்கனன்றுகாந்தர்ப்பவாளி
படியெலாநடுங்கவிட்டான்பார்த்துயர்மதனராசன்
கொடியவெங்கூளிவாளிகுனிவிலாற்றொடுத்துவிட்டு
நொடியின்முன்னறுத்தலோடுநுவன்றனராசிவிண்ணோர். 39
றீயசம்பரன்றானெஞ்சிற்சினமுறச்சிலையினாலே
யாயிரவிதங்களானமாயவாசுகங்கள்விட்டான்
மாயவன்மதலைபத்துநூறதாமாயவாளி
யேயெனுமுன்னமெய்தேயறுத்தனனிமையோரேத்த. 40
கதமுறுசம்பரன்றான்கதையெடுத்தெறியவானின்
பறியினர்நடுங்கவெய்தக்கண்டரிபயந்தமைந்த
னுததியைக்கடைந்தமத்தையொத்ததோர்தண்டாலும்பர்
துதிசெயப்படியின்மீதிற்றுகளுறவடித்துவீழ்த்தான். 41
இரதிமாவிரதமூரவெங்கணுந்தானுமாரன்
சரதவாசுகங்கடன்னாற்சம்பரன்மேனியெல்லாங்
குருதியாறாகவோடக்கொடிசிலைதுணித்துத்தேரின்
பரிதரணியின்கண்மாளப்பகழிகள்விடுத்தானன்றே. 42
ஞலியெண்ணசுரன்றேர்மாத்துவசம்வில்லழியப்பொங்கி
ஞாலமுற்றொருவேல்கொண்டுநமனஞ்சவெதிர்த்தலோடும்
மாலிரும்புதல்வன்வெய்யவாளினைச்சுழற்றிவிட்டுச்
சீலமில்சம்பரன்றன்சிரத்தினைத்துணித்தானம்மா. 43
சம்பரன்மடிந்துவீழச்சதுர்மறைமுனிவரோடு
மம்பரத்தும்பரெய்தியாவலங்கொட்டியார்த்து
வம்பவிழ்மலர்கவேமகிழ்ந்தனர்மதனராச
னிம்பரினிரதமீதினிரதிகோடிலங்கினானால். 44

சம்பரன் வதைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 1167.

19 - வது, அநிருத்தப் படலம்.

கிரியையெடுத்துக் கிரியைத்தரித்துக் கிரியையூதிவெஞ்சினத்த, புகரிபமடர்த்துப் புள்ளின்வாய்கிழித்துப் புனிதமாதுலன்றனை வதைத்துப், பகிரதிமுடித்த வேணியங்கடவுள் பலிதவிர்த்துலகெலாம் வளர்க்கு, முகினிறக்கரிய வச்சுதானந்த முகுந்தமா தவனடிபணிவாம். 1

வேறு.

உவரியேயகழதாகவுயர்ந்தகோபுரங்கள்சூழ்ந்த
துவரையினிலங்குகின்றதூயபொற்கோயிலின்கண்
ணவமணித்தூண்கண்மேவநலங்கொண்மாமண்டபத்திற்
றவமுறுவிதர்ப்பராசன்றந்தமின்னிருந்தாளன்றே. 2

எண்ணிரண்டாயிரத்தோடீரைம்பத்தேழுமாதர்
நண்ணியெம்மருங்குஞ்சூழநற்பொனாசனத்தின்மீதின்
பெண்ணினுக்கரசியாகிப்பிறங்குசாமரைகள்வீச
விண்ணவர்மலர்கடூவவீற்றிருந்தருளும்வேலை. 3

பரிதடந்தேர்கள்சூழப்பவமுறுசம்பரன்றான்
பொருதடற்படியின்வீழ்ந்துபொன்றவெஞ்சமரின்வென்று
சுருதியையறையும்வானோர்துதிசெயவானமீதி
விரதமீதிரதிதன்னோடெய்தினானெழில்கொள்காமன். 4

வருகின்றமதனைநோக்கிமாதவனெய்தினானென்
றிருகயனயநமாதரெழுந்திருந்தொதுங்கிநிற்பத்
திருமகளிவனாரென்றுசிந்தையினினைந்துநைந்து
முருகவிழ்கமலமங்கைமுலையிற்பால்சோரச்சொல்வாள். 5

வாடியதிருத்தான்பெற்றமகனையானிழந்தநாட்கள்
சோடசவருடமாயச்சுதனுய்ந்துவளர்ந்ததாகி
லாடவர்திலகனாகிவருமிவனழகையொக்கு
மேடவிழலங்கல்சூடியெய்துவானியாரோவென்றாள். 6

என்றவளுரைக்கும்வேலையெழில்கொடேவகிதன்னோடெங்
குன்றெடுத்தருளுமாயோன்குறுகியேநோக்குங்காலை
நன்றிகொண்மறையையோதுநாரதனெய்தினான
மொன்றியவிதர்ப்பனல்குமுருப்பிணிக்குரைப்பதானான். 7

நீயன்றீன்றுதவுமைந்தன்மதனிவன்றன்னைநீளு
மாயஞ்செய்சம்பரன்றான்வாரியினெறிதலோடுந்
தூயதாமகரமீனிச்சுதன்றன்னைவிழுங்கித்துள்ளிப்
பாயுமாதரங்கமோங்கும்பரவையுட்டிரியுநாளின். 8

வலைஞரம்மகரந்தன்னைப்பற்றிச்சம்பரன்முன்வைக்கக்
கொலைசெய்சூகாரர்கள்வாங்கிக்கோதின்மீனகட்டைப்பீற

நலனுறுங்குமரன்றன்னைக்கண்டவர்மகிழ்ந்துநல்கிப்
புலையனாமசுரன்முன்னர்ப்பொலனுறச்சுட்டினாரால். 9

அரனுதல்விழியிற்றீயினெரிந்திடுமனங்கனில்லா
ளிரதியைப்பற்றிநீசச்சம்பரனேகவந்தத்
தெரிவைதன்மாயந்தன்னாலவனுக்கோர்தேவியாக
மருவமர்குழலிமாயாவதியினைப்படைத்தாண்மாதோ. 10

தூயமாவிரதிமாயைதன்னினாற்றுலங்குகின்ற
வேயுறுதோளிமாயாவதிகரத்தன்புமிக்க
நீயவன்கொடுக்கலோடுஞ்சிறந்திடுமதனைத்தேவி
மாயிருநிலத்தினேயமலிந்திடவளர்த்தாளன்றே. 11

தூயவிண்வடமீன்போன்றசுந்தரவிரதிவேளுக்
காயிரமாயமெல்லாமருளவேயீரெட்டாண்டு
போயபின்னுற்றதெல்லாம்புகன்றிடமதனன்பொங்கித்
தீயசம்பரன்றனைச்செற்றுத்துவரையிற்சேர்ந்தானென்றான். 12

முனிவனீதுரைக்குமுன்னர்முண்டகமடந்தைதாளின்
வினையகன்மதனனெய்தியிறைஞ்சிடவிதர்ப்பன்பாவை
தனயனையணைத்துமோந்துதன்முலைப்பாலையீய
வனையிருநகிலிற்றூயவமுதைவேளருந்தினானல். 13

தாயிருநகிலிற்பாலையருந்தியேதந்தையான
மாயவன்றிருப்பாதத்தின்வணங்கியமதனைநோக்கி
நேயமோரெத்திற்புல்லிநேமியோன்மகிழ்தலோடுந்
தூயதேவகிதன்றாளிற்பணிந்தனன்றுலங்கும்வில்வேள். 14

அன்னையரளப்பிலோரைவணங்கியேயலாயுதத்து
மன்னனையவன்றாய்தன்னைமற்றவன்றாதைதன்னைத்
துன்னியவன்பினாலேயிறைஞ்சினன்றூயதாய
கன்னல்வில்லாகப்பூவின்கணையினைத்தொடுக்குங்காமன். 15

சுரிகுழலிரதியாயதூயவளோங்குகின்ற
வரிகவினுறும்பாதத்தினிறைஞ்சியைங்கணைகொண்டெய்யு
மொருமகன்றன்னைப்பெற்றவுருப்பிணிதாளின்வீழ
மருகியையிருகையாரவணைத்துளமகிழ்ந்தாண்மன்னோ. 16

நவையறுகுணத்தனாயநான்மறைக்கர்க்கனெய்தி
யவனியன்றிடந்ததூயோனருடிருமகனுக்கன்பா
லுவமையிலோமம்பண்ணியுயர்தவருவப்பநாமஞ்
சவளமோடுயர்ந்தமுந்நூற்றரித்துபநயனஞ்செய்தான். 17

அரிதிருமகன்றன்றேவியுடன்றவிசெய்தவாங்கே
சரதமாமறையோரோமத்தழலினாகுதிகள்செய்ய
விரதிகந்தரத்திற்காமனிலங்குமங்கலநாண்சாத்திக்
கரதலவிரலைப்பற்றிக்கனல்வலம்வந்தானன்றே. 18

தூயவளிரதியம்மிமிதித்திடச்சுரர்கள்போற்ற
மாயவன்மதலைநாரிதன்னுடன்வடமீனேக்கித்
தாயினைவணங்கித்தந்தையடியினிற்றாழ்ந்துமாரன்
றீயவையகலத்தேவியுடன்சிறந்திருந்தானன்றே. 19

வேறு.

சீருறுமதனன்சுதக்கணன்சுசாருதிறன்மிகுபத்திரசாரு
சாருகந்திரன்சாருகதன்விசாருசாருயர்சாருகேதனன்றா
னேருறுசாருகுத்தனேடிவர்கள்பதின்மரையீன்றனளெழில்சேர்
பாருறும்விதர்ப்பன்றவத்தினுற்பயந்தபங்கயத்திருவுருப்பிணியே. 20

பானுவன்சுபானுபானுவான்சரதபானுசீர்ச்சந்திரபானு
தேனுறுமலங்கலணிபிரபானுசிறந்தசீபானுநற்பாரி
லூனமில்பிரகற்பானுசற்குணத்தாலுயரரிபானுசொற்கீர்த்தி
யீனமில்பிரதிபானுவோடிவரையீன்றனள்சத்தியவாமை. 21

துலங்கியசாம்பன்சுமித்திரன்வசுமான்றூயவன்புரிகிரசிரத்துப் [து
பொலன்கொளுஞ்சதசித்திரவணன்விசையன்பொறையுடைச்சித்திரகே
சலங்களைந்துயர்ந்தசகனிவாசகனேடீரைந்துதனயரையீன்றா
ளிலங்கியவடமீனனையகற்புடையாளெழிலுறவயங்குசாம்புவதி. 22

வேறு.

மாகவானிகராம்பானுசந்திரன்வயங்குகுந்தி
யாகவச்சிரத்திராகுசங்கனச்சுவசேனன்றான்
வேகவான்விருடநாமன்விளங்கியவாமன்றன்னே
டோகையார்கவுசலன்றானுதவுநாக்கினசித்தீன்றாள். 23

வீரியன்சுரதன்றீரன்விருடனேகலன்சுவாகு
பூரணன்மாதன்சாந்திபொறையுறுபத்திரன்றான்
சூரரெண்கவியன்சோமனிகரரியிவர்கடம்மைப்
பாரினிற்றவஞ்செய்தோங்குங்காளிந்திபயந்தாளன்றே. 24

வேறு.

தீரரெண்ணியபிரகோடன்காத்திரவான்சிங்கனூர்த்துவன்கன்மாசத்தி
மாரனைநிகர்க்கும்பலன்சகனேசன்வயங்கியபராசிதனசமன்
சீருறத்துலங்கும்பிரபலனுடனேசிறந்திபெதின்மரையீன்றாள்
பாரினினிலங்குமத்திரராசன்பயந்திடும்பத்திரைத்திருவே. 25

விருகுயர்பவனன்விவேதனன்வன்னிவிழுமியகிருத்திரனன்னி
னருள்செறியுதகன்மகாத்துமாகுதியாயறிவினுலுயர்ந்தமனனுத
னுருவுடையிவர்கள்பதின்மரையீன்றாளுலகெலாமொருதனிக்கோலாற்
றிரமுறவரசாளவந்திமன்பயந்ததிருநிகர்மித்திரவிந்தை. 26

துலங்குசங்கிராமன்சுபத்திரன்சூரப்பிரகரன்றூயவாமாயு
வலங்கொளுங்கீர்த்திமான்செயன்பிரகசேனன்பத்திராச்சுவன்வண்மை

இலங்குசத்தியகனெழில்கொடாமிரபத்திரனிவரீரைந்துபெயரை
யலங்கல்சேரளகவிலக்கணைபயந்தாளருணெறியறமெலாந்தழைப்ப. 27

பாரினிலரசர்தவத்தினாற்பயந்தபங்கயத்திருவெனத்திகழ்வா
ரீரெண்ணாயிரத்தோர்நூற்றுவரொத்திக்கீரைந்துசுதரெனவீன்றார்
வாருறுமுலைநப்பின்னைதன்னுடனேவயங்கியவாயர்தம்மடவார்
தாரணிமகிழப்பயந்தனரெண்ணிறனையரையறனெலாந்தழைப்ப. 28

அரசர்கள்பயந்தமங்கையர்பதினாறாயிரத்தொருசதத்தெண்மர்
விரைசெயுங்குழலாச்சியருடனிவரோரொருவர்பூமெல்லியல்சிவண
வரிசையாலோரோர்பெண்மகப்பெற்றமகிழவேதேவகிமைந்தன்
கரைசெயற்கரியகளிப்புடனிருந்தான்ககனமார்புலவர்கடுதிப்ப. 29

கூனிமிர்ந்தெழிலார்வடிவினிலுயர்ந்தகோதையாள்பயந்திடுங்குமர
னானமிலுருவமுறுசுபலோபனாகியவுத்தவனுயர்ந்தே
யீனமில்புராணஞ்சுரர்முனியியம்பவறிந்திருவினைகளையகற்றி
வானவர்மகிழவரிதிருப்பெயரைமறப்பிலாமனத்துடனிருந்தான். 30

நன்பொனார்மதிலினிஞ்சிசூழ்வரைநாயகன்கோயிலினுயர்ந்த
வொன்பதினாறாயிரத்தினுப்பரிகையொளிகொளவுவமையின்மணிக
ளன்பதாயிரத்தோடிந்திரநீலமயுதமாடத்திழைத்திலங்கத்
தன்பெருந்தேவியுருப்பிணிமுதலாந்தையலாருடனினிதிருந்தான். 31

தேவியர்பதினாறாயிரத்தொருநூற்றெண்மர்க்குந்தனித்தனிசிறப்ப
வோவியவுருவைப்பழித்தசேடியராயிரத்தினருழியஞ்செய்யக்
காவினுங்கமலவாவியினிடத்துங்கனகமண்டபத்தினுங்களித்தே
யாவியுமுடலுமெனுமரிவையர்கட்களப்பிலாக்களிப்பளித்தமர்ந்தான். 32

மாயவன்பதினாறாயிரத்தொருநூற்றெண்மராமனைவியருடனு
நேயமோடிருக்குமெழிலினையறியநிகரினாரதமுனிநினைந்து
தூயயாழ்கரத்தினேந்திநற்குடைகுண்டிகைகையிற்றுலங்கவேதோன்றி
யாயுநான்மறையோரமர்ந்திடுந்துவராபதியினையடைந்தனனன்பால். 33

வேடனையருளாற்பயந்திடுநளினமின்னுடன்விரும்பியநிர்த்த
மாடியுமகிழ்ந்தேயிருந்துழிநிகரிலருள்செறிநாரதனணுக
வீடியவினையென்றுவந்தெதிர்கொண்டுவிழுமியமுனிவனையிறைஞ்சி
யாடகமணியாதனத்திடையிருத்தியருக்கியமளியுடனளித்தான். 34

நீதகன்முனிவன்பாதநீர்கரத்திற்சிரத்தின்மேற்றெளித்தொளிதிகழ
மாதவன்மனைவியுடனவணிருந்துமாசுறுமனையின்வாழ்க்கையினி
னாதரவுறத்தீவினைபலசெய்வேன்சனனத்தையகற்றுதியென்றே
யோதலுமுனிவனகைத்துயராசியுரைத்துளமகிழ்ந்துபோயினனால். 35

சத்தியவாமைமனையினினிலங்குமக்கினிகோத்திரந்தயங்கச்
சித்தசன்றன்னையுதவியமுகுந்தன்சிறப்பொடுவளர்த்திடுமெல்லை
சுத்தரென்முனிவன்வருதலுமிறைஞ்சித்தூயவாய்மைகள்பலபேசி
நத்தொடேந்திகிரிசெறியரிக்காசிபகர்ந்துநாரதமுனிநடந்தான். 36

சாம்புவன்மகளில்லவளுடனிலங்குந்தாளவொண்டவிசிடையிருந்து
பாப்பினினடித்தபரனெழிற்றிசம்பகர்ந்திடக்கேட்டருள்வேலை
யேம்பலுற்றடைந்தமுனிவனையிறைஞ்சியிப்பிறப்பறுத்துயானுய்ய
வாம்பரிசுரைத்தியெனத்தவனகைத்தேயாசிகளறைந்துபோயினனால்.

தினகரன்மகளோடிலங்குமாமனையிற்சிறுவர்கள்சன்மகாளுறவே
யனகன்மாமறையோர்க்குயர்ந்தமாதானமளப்பிலாதருள்கின்றவேலை
துனிகடிந்துயர்ந்தசுரர்முனிவாலுமிறைஞ்சியென்சுதர்களிக்கிரக
வினைகடிந்துயநீயருள்கெனநகைத்துவிழுமியநாரதன்போனன். 38

மித்திரவிந்தைமனையினிலிருந்துவிளங்குமாயவனவள்பயந்த
புத்திருடனுமினியசீராட்டிப்பொருந்தியேமகிழ்ந்திடும்வேலை
சுத்தமாதவத்தோன்வருதலுமெழுந்துதொழுதுநீயெய்தவென்மரபோ
ரொத்தவஞ்செய்தாரெனநகைத்தாசியியம்பியாண்டெழின்முனிபோனன்

நாக்கினசித்தின்மனைதனிலவளோடிருந்துயர்நவ்வியைப்பழித்த
னோக்கியர்கவரியசைத்திடச்சுதர்க்குநூலினைவருவிக்குமெல்லை
வாக்கினிலரியைநவின்முனிவாலுமிறைஞ்சிநீவருகயானென்ன
பாக்கியஞ்செய்தேனெனநகைத்தாசிபகர்ந்துநாரதமுனிபோனன். 40

பத்திரையுடனோாதனத்திருந்துபரமன்றன்சுதர்களைவில்வா
ளத்திரத்தொழிலைப்பயிற்றிடும்வேலையருந்தவனாரதனெய்தப்
புத்திருடனுமுவந்துவந்திறைஞ்சிப்புகிதவென்புண்ணியமன்றோ
யித்தலத்திவணினெய்தியதெனவே நகைத்தெழின்முனிவனேகினனால்.

மருவமர்குழலியிலக்கணைமனையின்மற்றவளுடனினிதிருந்தே
யரியுயர்புராணமினிதுடன்கேட்குமளவினாரதமுனியடைய
விரைவினினெழுந்துவணங்கியைம்புலனுன் மெலிந்திடாவகையருளென
மிருவினையகற்றுமுனிநகைத்தாசியியம்பியேகினன்மகிழ்வுடனே. [லு

சுரர்முனியிறையோர்மனைதனினிலங்குந்தூயநீராடக்கண்டேகி
யரியொருமனையிற்சுதர்களுக்கழகாஞ்சவுளஞ்செய்யன்பினைக்கண்டான்
கரிபரிநடத்திமனைவியோடெழில்சேர்காவினிற்களித்திடக்கண்டான்
பெரியவருடனேயிருந்தொருமனையிற்பேசியேயின்புறக்கண்டான். 43

கந்தனன்மலரிற்கடவுளொண்முனிவன்கடல்வண்ணவரியொருமனையி
னந்தணர்க்குவந்தோதனமிடக்கண்டானதன்பினர்முகுந்தனோரகத்திற்
சந்திசெய்கிரமச்சதிரினைக்கண்டான்சங்குசக்கிரத்தனோரில்விற் [டான்.
சிந்தையிற்செபஞ்செய் திருந்திடக்கண்டே செபமுடித்தெதிர்வரக் கண்

மருளொழிமுனிவன்மற்றுமோரகத்தின்மாயவன்றேவிதன்னுடனு
மிருநிலத்திலம்பாடறவிருந்தநஞ்சிறுவரீடேறிவாழ்ந்திடவோ [ன்
தரணியிற்றனமார்ச்சிப்பமென்றுரைத்துத்தனயரைத்தழுவிடக்கண்டா
கரியினைவதைத்தோன்வேறொருமனையிற்கஃடியில்கவினையுங்கண்டான்

அருந்தவமுனிவன்முராரியோரகத்தினலாயுதமன்னவனுடனே
யிருந்தொருகருமமளாவிடக்கண்டான்யாதவன்வேறொருமனையிற்

திருந்தியகதைவாள்கேடகச்சிரமஞ்செய்திடக்கண்டொருமனையிற்
கருந்தடங்கண்வேசையருடன்விநோதங்கழறியமுராரியைக்கண்டான்.

இயல்புடைமுனிவன்வேறொருமனையினியாதவர்கிளையெலாஞ்சூழ
வுயர்தவருவப்பமுராரிதன்சுதர்க்கேயுபநயனஞ்செயக்கண்டான்
புயல்வணமெனவேபோருருமுகுந்தன்புதியதோரகந்தனின்மேவிக் [ன்.
குயின்மொழியனையாளுடனிருந்தகன்றகூவறேண்டிடுங்கவின்கண்டா

நேரிலாமுனிவன்வேறொருமனையினேமியோன்றேவிதன்னுடனே
யேருறவிருந்துவயிரியர்நடிப்பவிருகணுநோக்கிடக்கண்டான்
வாருறுமுலையார்மகிழவாமனன்றன்மனைவிதன்னுடன்களிப்பெய்திச்
சீருறவேறோரகந்தனில்வயங்குஞ்சலக்கிரீடையுஞ்செயக்கண்டான். 48

நீடியதவன்மால்வேறொருமனையினிகரிறேருர்ந்திடக்கண்டா
னுடவர்திலகவரியொருமனையிலாருயிர்த்தேவிதன்னுடனே
யூடலுமவளுக்கினியதாழ்ச்சியினையுரைத்துமெய்தழுவிடக்கண்டா
னேடவிழலங்கன்மனைவியோடிறையோரில்லினினணிந்திடக்கண்டான்.

அண்டரொண்முனியோர் மனையினின்முராரியாருயிர்த்தேவியோடிருந்
தண்டலெந்திலத்தின்றைலநெய்கோதிசருக்கரைமாடநன்மூற்க [து
மெண்டவர்வியக்கவவைமுதலாகவாண்டினுக்கிட்டிடக்கண்டான்
மண்டனில்வேறோர்மனையிற்பூமரங்கள்வைத்திடுமாயனைக்கண்டான். 50

நீதகன்முனியேரகந்தனிற்சிறந்தசீதரன்றேவிதன்னுடனே [ன்
கோதில்கோதானஞ் செய்திடக்கண்டான் குறைவிலாவரியொருமனையி
வாதுசெய்தடைந்தோருரையதுகேட்டுவழக்கினையறுத்திடக்கண்டான்
மாதவன்மிருகயாத்திரைசெய்தோர்மனையினிலெய்திடக்கண்டான். 51

மாதவன்பதினாறாயிரத்தொருநூற்றெட்டுமாமனைதனின்வயங்கித்
தீதிலாமடவாருடனிருந்தனேகஞ்செயலினைக்காட்டநாரதனும்
வேதியனிரவிவிழுவதன்முன்னம்விரைவினினோக்கினேனடியே
னுதவினெனைநீமயக்குமாயைகளினகப்படாதறிந்தனனென்றான். 52

நீயயன்முதலோலெலெகலாநின்னுண்ணிருமித்திவ்வவனியிற்றோன்றி
மாயையின்மயக்குஞ்செயலினையடியேனறிந்தனன்மாதவவென்றே
தூயனுமுனிவன்றுதித்திடமகிழ்ந்துசுருதிநாயகனருள்சுரப்ப
நேயம்விஞ்சிடமாலடியினைவணங்கிநெறியுறுநாரதன்போனான். 53

நாரதன்மகிழ்ந்துதுதிசெய்துநாகருலகினிலெய்தநாரணன்றன்
மாரதரனையசிறுவர்களுடனேமகிழ்ச்சியோடமர்ந்திநாளின்
வாரிதிபுடைசூவேரையினிலங்குமதனெழிலிரதியாமொப்பில்
பாரிதன்னுடனேகலவிசெய்தின்பப்பயிரினைவிளைத்தினிதிருந்தான். 54

வேறு.

எழில்கொண்மதன்றனக்கேயவனுயிராகியவிரதி
யழகின்மலியசிருத்தனையளித்தேயிடவன்பான்

மழையின்முகில்வணத்தானுஙெவிதர்ப்பன்றிருமகளா
முழையின்விழியாடன்சுதன்மகன்மேனிகண்டுவந்தாள். 55

மாரன்னதிகீராடியொண்மகன்வாண்முகநோக்கிப்
பாரின்மறையோரின்புறப்பலதானமுஞ்செய்தே
யேர்விஞ்சிடவுயிர்சாதகசவுளம்மிவைமுடித்தே
நாரம்முறுகடன்மீதமர்நாதன்னுடுமெகிழ்ந்தான். 56

கயமன்றழைத்திடவந்தருள்கரியோன்மகன்சுதனுக்
குயரும்முபநயனஞ்செய்துமறையோதினர்க்கெல்லா
மியல்பின்னுறுபலதானமுமளித்தேயெழின்மலிந்த
வயிலொண்விழிநயனத்திருவுடனேமகிழ்ந்தமர்ந்தான். 57

அநிருத்தப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 1224.

---

100 - வது, அங்கிசமன் டிபிகன் வதைப் படலம்.

கராவினைச்செற்றுக்கைமாக்களித்திடக்கதியையீந்து
மராமரமேழுமெய்துவாலியையவதைத்தபின்ன
ராவினினடித்துவெண்ணெக்காடியேகுரவைகோத்த
பராபரமானசோதிபாதமேபற்றுநெஞ்சே. 1

சாலுவதேசந்தன்னைத்தனிக்குடைநிழலினேம்பும்
வேலொளிர்கரத்தன்மிக்கவிறலுடைப்பிரமதத்த
னீலகண்டனைத்தானேக்கிநெடுந்தவஞ்செய்துபெற்ரு
னுலமேகிகரரானவங்கிசன்டிபிகன்றன்னை. 2

மித்திரசகனும்நாமவேதனேர்புரோகிதன்ரு
னத்தியிற்றுயில்வோன்றன்னைநோக்கியேயளவிலாண்டு
சுத்தநற்றவந்தான்செய்யத்தோன்றிமாலீயப்பெற்ற
புத்திரன்செனுர்த்தனன்ருன்புகழுடையொருவனுனன். 3

அங்கிநேரங்கிசன்பின்னேனுடன்தவஞ்செய்காலைத்
திங்கள்வேணியன்ருனெய்தித்திவ்வியாத்திரங்களீந்து
பிங்குரிடிகப்பேர்க்கும்போதரனெனும்பெயராதாய
பொங்குவெஞ்சினப்போர்செய்யும்பூதங்களிரண்டுமீந்தான். 4

உருத்திரன்வரந்தானீயவுருத்திராக்கம்வெண்ணீறு
திருத்தமாயணியுமெய்யார்செனுத்தனமறையோன்றன்னே
டருத்தியாய்மிருகவேட்டையங்கிசன்டிபிகனெய்திப்
பெருத்தவெங்கரிகளோடேயரிகளைப்பிடித்துமீண்டார். 5

மிருகவேட்டையினையாடிமீண்டவர்வெயிலால்வாடிப்
பொருமுனீரிலங்குகின்றபுட்காரசரசினெய்திப்

பரவுநீர்படிந்துதுய்யபருதிவானுச்சிக்கேக
விருகையாலொருகால்வேதத்தருக்கியமீந்தபின்னர். 6
சிருதுகாசிபன்ருன்சத்திரயாகஞ்செய்யு
மேரினைநோக்கியேகுமங்கிசன்டிபிகனென்போர்
பாரினெண்டுருவாசன்செய்தவத்தினைப்பார்த்துங்குக்
கோரவெஞ்சொல்லரானேரிவையிவைகூறலுற்ருர். 7
சிகையொடுமுந்நூலில்லாய்செய்தவமேதுபாரி
னிகழ்வலாற்கெதியீவராரியம்புநீகெடுவதன்றிச்
சகலலோகத்தின்வாழுந்தவரையுங்கெடுத்தாயென்று
புகறலும்புரோகிதன்சேய்பொறுக்கலாதுரைக்கலுற்ருன். 8
எதிகளையிகழுநீசர்குலங்களோடிறுவதொன்று
சதுமறையறையுமென்றுசாற்றுவார்சான்ருேரன்ருே
மதியுடைச்சொனர்த்தனன்ருறுரைத்திடமதியாராகி
விதிவெருவிடவேயந்தமுனிவனைவெகுண்டுவைதார். 9
வைதுநற்றுருவாசன்றன்மருங்குறுமுனிவர்தங்கள்
கையினிற்கமண்டலங்களுடைந்திடக்கன்மேன்மோதித்
துய்யகோவணங்களெல்லாந்துனியுறப்பறித்துப்பீறி
வெய்யவரிரதமீதின்மேவினர்நகரிதன்னின். 10
மறுவறுதுருவாசன்ருன்டிபிகனங்கிசன்றனக்குக்
கறைமிடற்றரன்ருனீந்தவரமெலாங்கருத்தினுள்கி
யுதியுறுகலசமெல்லாமுடைத்திழுதுண்டான்முன்ன
ரறைவனென்றெழுந்துபோனனருந்தவரெல்லாஞ்சூழ. 11
எதிகளையாயிரம்பேரிருமருங்கிடையினெய்தக்
கதுமெனநடந்துகாடுவரையெலாங்கழிந்தபின்ன
ருததிசூழகழதாகவோங்குமாதுவரையென்னும்
பதியினிலெய்தினுனற்பருவாற்றுருவாசன்ருன். 12
துன்னியமணிகள்கோடிதுலங்குமாமண்டபத்திற்
பொன்னவிர்பீடமீதிற்புயலெனவிளங்குமாயோன்
மன்னவர்மறையோர்சூழவிருத்தலும்வாயில்காப்போ
ரின்னலில்துருவாசன்ருனெய்தியதியம்பினுரால். 13
தீதகல்வாயில்காப்போருரைத்திடச்சீதரன்ருன்
மாதவர்திரளையெல்லாம்வரவிடுமீரென்ருேதப்
போதனெண்முனிவரெல்லாமிருமருங்குறவேபோந்த
வேதமில்துருவாசன்றன்னிணையடியிறைஞ்சினுனல். 14
வாசுதேவனருனெய்தியிறைஞ்சலுமறைகளாலே
யாசிகள்பகர்ந்ததூயவருந்தவர்தங்கட்கெல்லாம்
நேசமோடருக்கியங்களளித்தம்பொன்னிறையவிஞ்சு
மாசனமீதலோடுமெனவருமமர்ந்தாரன்றே. 15

ஏறிறவடர்த்தகோமானெழின் முனிதன்னைநோக்கி
மாறிலெண்டவர்களோடும்வந்திடும்செயலேதென்னச்
சீறியமனத்தன்வேர்வுசெறிந்திடுமெய்யன்றீயு
ளூறியநயனனுயமாதவனுரைக்கலுற்றான். 16

வேரறிந்தவற்குவேறொரிலையெனவெருட்டிக்காட்டும்
பேரெனவறியாதார்போற்பேசினுய்பரவையோவிப்
பாரினிற்பாரநீக்கப்பிறந்துபன்மாயஞ்செய்யு
மாரியவுந்தன்செய்கையறிவனுன்மயக்கவென்றான். 17

கொடுவினைகளைந்தமான் முன் முனியிவைகூறலோடும்
படமுடையரவின்மீதுநடித்தவனகைக்கப்பாரி
லுடைபடுகமண்டலத்திஞேடுகோவணங்களெல்லாம்
படியின்மேற்பரமன்முன்னர்வைத்தெலாம்பகர்ந்தாரன்றே. 18

அருமறையவரைநோக்கியங்கிசன்டிபிகன்றன்னை
யெரிமுகக்கணையிஞலேயிமைப்பின்முன்வதைத்தேயுங்கள்
பருவரலொழிப்பனென்ஞப்பரனிவைமொழியக்கேட்டாண்
டருவினைதுடைத்தோராசியியம்பியேயாடினூரால். 19

ஏருறுவெண்பட்டாடைகிழித்தகௌபீனமெல்லாஞ்
சீருறவளித்துச்செம்பொன்கமண்டலஞ்சிறப்பவீந்து
நீரிவணிருமினென்றுநிகழ்த்திநெய்பாலோடன்ன
மாரியனவரையெல்லாமருத்துவித்தமருநாளின். 20

அருமறையவரையெல்லாம்வைதவர்கௌபீனங்கள்
காமுறப்பறித்துப்பீறிக்கமண்டலங்கன்மேன்மோதி
விரைவினினகரினெய்திவிறலுடையங்கிசன்றான்
றெரிவுறமறையையோதுஞ்செனூர்த்தனனேடுஞ்சொல்வான். 21

மன்னவர்தம்முளெல்லாந்திரைகொண்டுவாராதாரைச்
சின்னபின்னங்களாகச்செருக்களத்தவியநூறி
யென்னுடைத்தந்தைதன்னையிராசசூயஞ்செய்விக்க
வுன்னினனென்றலோடுஞ்செனூர்த்தனனுரைக்கலுற்றான். 22

வீடுமன்விதுரன்கன்னன்விறலுடைச்சேதிராச
னேடவிழ்தொடைசேர்தந்தவக்கிரன்மகதனென்னூர்
வீடவேசமர்செய்வாசுதேவன்சாத்தகிபால்வண்ண
ஞேடைமாலியானையூருமுதிட்டிரன்றன்னேடைவர். 23

மத்திரன்சோழன்றென்னன்வலிமிகுகீசகன்றா
னித்தனைபேரும்வீரவதிரதக்குழாங்களாகி
யித்தலத்திருப்பநீதானிராசசூயத்தையெங்ஙன்
வித்தகவுன்றந்தைக்குச்செயுந்திறம்விளம்புகென்றான். 24

என்றவனுரைப்பக்கண்களெரியுறச்சீற்றமெய்திக்
கொன்றையையணியுமீசன்கொடுத்தவத்திரத்தொன்றுரை

வென்றனையளித்ததந்தைக்கிராசசூயத்தின்வேள்வி
குன்றுதலிலாமற்செய்வித்திடுவென்யானென்றுகூறும். 25

நீயிதற்கெதிர்மாற்றங்களிகழ்த்தினாயாகிலுந்தன்
வாயினைக்கிழிப்பனீபோய்வாசுதேவன்பாலெய்தி
மீயுயர்வரைகள்போலவிழுமியலவணங்கொண்டே
யேயெனுமுன்னம்வாவென்றியம்புகென்றேவினானால். 26

சீரிலான்மொழிந்தமாற்றஞ்செவிசுடுநாராசம்போ
னேரிலாமறையோனின்றுநடுங்கியேநெறியிலாதா
னாரியன்பகழியாலேயிறப்பனென்றகத்துட்கொண்டே
யேருறுசிவிகையின்மேலேகினான்மறையோர்சூழ. 27

துன்மதியவர்களோடுபேசுதலிருத்தலொட்ட
னன்மதியவர்கட்காகாநானந்தநவைகடீர
மன்மதன்றந்தையானவெந்தையின்வடிவுகாணப்
பொன்மதிற்றுவரைதன்னிற்போவதேபுந்தியென்றான். 28

நீயவன்விடுத்ததூதனென்றனையிகழ்ச்சிசெய்யான்
மாயவனுயிர்கடோறும்வைகியசெயலினாலே
தூயதன்னடியார்க்கென்றுமடியர்கடொண்டனென்றுஞ்
சீயமாயவுணன்றன்னைச்செற்றவன்காப்பானென்றான். 29

இவையெலாமறைந்துமாயோன்செயனினைந்திருகணீர்க
ளவனியினுகவேயன்பின்செனார்த்தனனளக்கர்சூழ்ந்த
துவரையினெய்திவீதிதுலங்குமண்டபங்களோங்கு
மூவமையில்சிகரநோக்கியுவந்தரிகோயில்புக்கான். 30

வித்துருமங்கணீலம்விழுமியமணிகளெல்லாம்
பத்திசெய்தூண்களெங்கும்பரந்தமண்டபத்தின்மீதிற்
றத்தைபோன்மொழியார்வீசுஞ்சாமரைதயங்கவாங்கா
ருத்தவனுடனேமன்னருறைந்திடவிருந்தான்மாயன். 31

தூயனார்துருவாசன்னோடருந்தவர்தொலைவிலாதோர்
நேயமோடெய்தியெங்குநிறைந்தருகிருக்கும்வேலை
வாயிலோரங்கிசன்றன்மறையவன்வந்தானென்ன
வேயுமாகரியைக்காத்தானழைத்தியென்றுரைத்தான்மன்னோ. 32

தந்தியைக்களைந்தவேந்தன்சாற்றலும்வாயிலாள
ரந்தணவருதியென்றேயுரைத்திடவவனாண்டெய்திச்
சுந்தரவடிவினானையிருகணானோக்கத்தூய
சிந்துவினமிர்தையுண்டோன்செயலெனக்களித்தானன்றே. 33

என்புடனுருகியாசியியம்பியேயெதிர்வந்துற்ற
வன்பனையிருத்தியென்னவச்சுதனறையவாங்கே
யன்பகன்மறையோன்றானுமிருந்தபின்மாயனோக்கி
வென்புகுந்ததுநீயிங்கினியம்புகென்றிசைத்தானன்றே. 34

மூரனுட றுணித்தகோமான்மொழிந்திடமறையோன்சொல்வான்
றரணியின்விஞ்சுகின் றசாலுவதேயமாள்வோன்
பிரமதத்தன் றன்சேயர்பிஞ்ஞகன்வரங்களீய
வரிகளும்வெருவும்வெய்யவங்கிசனவன்பின்னோனும். 35

வெந்திறலதனான்மிக்கவிராசசூயத்தின்வேள்வி
தந்தையைச்செய்விப்பாராய்ச்சதுமுகன் றன்னைத்தூய
வுந்தியிற்படைத்தசோதியுப்புயர்வரைபோலுன்னைத்
தந்துமுன்வைத்தியென்றேசாற்றிடச்சொன்னாரென்றான். 36

வெங்கணங்கிசன்றான்மிக்கவிராசசூயத்தின்வேள்வி
சங்கரன்வரத்தினாலேதந்தையைச்செய்விப்பானாய்ச்
சிங்கவிலரியையுப்புத்திரையிட்ச்சொல்கைநன்றென்
றங்கையோடங்கைதாக்கியரசர்கணைகைத்தாரன்றே. 37

யாதவனகைவந்தெய்தவிராசசூயத்தின்வேள்வி
தாதையைச்செய்விப்பானாய்த்தருக்குமங்கிசமன் றன்னை
போதனேர்முனிவர்வைகும்புட்கரசரசினாளைக்
காதுதற்கெய்துவாயென்றெய்தியேகழறுகென்றான். 38

தூயசாத்தகியைநோக்கித்துலங்கியமறையோன் றன்னோ
டேயெனுமுன்னமெய்தியியல்பிலங்கிசமன் றன்னைத்
தீயவாசெருக்களத்திற்செருச்செய்யவருதியென்றே
மீயுயர்துவசத்தேரின்மீள்குதிகடிதினென்றான். 39

மாதவன்மொழியக்கேட்டுச்சாத்தகிவையமீதின்
வேதியன் றன்னோடெய்திவிழுப்பமிலங்கிசன்முன்
போதலுமுனிந்துநோக்கிப்பொதுவர்தங்குலத்தனாய
யாதவனெங்கேயீந்தலவணமெங்கேசொல்லென்றான். 40

திறையிடுலவணத்தோடுந்தேவகிசுதன்வாராமன்
மறையவமீடியோவென் றுரைத்துவாய்மடித்தேயென்றன்
விறலெலாமறிந்தென்முன்னர்மேவியவிவனார்வல்லை
யறைதியென் றுரைத்தலோடுமெச்சுதனனுசன்சொல்வான். 41

அப்பினிலமருமையனனுசன்யானங்கிசாகே
ளுப்பினைவிருப்புற்றாயேலுயரருந்தவத்தோர்வேதஞ்
செப்பியேவேள்விசெய்யும்புட்கரசரசிற்சேர்ந்து
நப்பினைகேள்வன் றன்னான்மடிதியென் றுரைத்துநக்கான். 42

மாதவனனுசன்கூறவடவைபோல்விழித்துநோக்கித்
தீதுறுமனத்தனுன்னைவதைப்பனீசெப்பவந்த
தாதனாயுய்ந்தாயானே தூயபுட்கரத்தினெய்தி
யாதவர்குலத்தையெல்லாமிமைப்பின்முன்கொல்வேனென்றான்.

தீயவனுரைப்பக்கேட்டுச்சினியருள்செம்மனோக்கி
நீயுமுன்கிளைஞரோடுநெடியமால்வாளியாலே

மாயவேபுட்கரத்தின்வருதியென்றுரைத்துமீண்டு
தூயவச்சுதன்றன்முன்னரிவையெலாஞ்சொன்னானன்றே. 44

நீதுறுமங்கிசன்றான்செப்பியவுரையைக்கேட்டு
மாதவத்துருவாசன்றன்வதனத்தைநோக்கிமாயன்
வேதனையுமைச்செய்தோனைவீட்டுவன்புட்கரத்தின்
போதுமினென்றலோடுமகிழ்ந்தவர்போயினாரால். 45

முனிவர்கள்போயபின்னர்முராரிதன்முன்னோன்றந்தை
சினிசுதன்கிருதவன்மாசிருறக்குவசன்சாங்கன்
றாணியகனிகடன்கஞ்சன்றாதையாந்தூயமன்ன
னணிசமும்புடைசூழ்ந்தேகப்புட்கரத்தடைந்தாரன்றே. 46

துந்துமிமுரசஞ்சங்கந்தூயகாகளஞ்சின்னங்கள்
சிந்துவின்னரவம்போலத்திசைதொறுமிரட்டல்செய்ய
வந்தரத்தமரராடியாடகமலர்கடுவ
விந்திரைகொழுநனெய்திப்புட்கரத்திருந்தவேலை. 47

அடல்பொரவருதியென்றேசாத்தகியறைந்துபோகக்
கொடியனங்கிசமனெஞ்சிற்கோபவெங்கொழுந்தீமூள
விடையனுமவன்றனோடுமியாதவர்குலத்தையெல்லாங்
கடிதினிற்கோறல்செய்யக்கடும்படையெழுகவென்றான். 48

நீயவனுரைக்கப்பேரிமுரசொலிதிசைகள்சேரப்
பாயயமூன்றுகோடிபருப்பதநிகராய்த்தோன்றக்
காயுமேழயுதமானகரிபத்தக்குரோணிகாலாள்
மீயுயர்கனகத்தேர்நூறாயிரமிடைந்தமாதோ. 49

விசக்கிராசுரனுந்தூயவிடும்பராக்கதனும்வெய்ய
நிசிக்குளிற்சரிப்போரெண்ணினிருதர்தானவர்கள்சூழத்
திசைக்கணினுறவோரோடுந்தேவர்களிரியவாசைக்
கசக்குலம்போலவீரர்கலித்திடவெழுந்தாரன்றே. 50

ஏறுறுமிறைவனீயவங்கிசன்களிக்கவெய்து
மாறில்பிங்கிருடிகும்போதரணிவர்வரையாமெய்யி
னீறணிந்துருத்திராக்கமணியினைநிறையப்பூண்டு
சீறியமனத்தராகிச்சிலைகரத்துறவேவந்தார். 51

முரசொலிகரங்கப்பேரிமுழங்கிடவிரதமீதி
னரசர்கள்குழாங்கள்சூழவங்கிசனனுசனோடுந்
திரைசெறியளக்கர்போலத்திரண்டெழுசேனையார்ப்ப
வரிசைசேர்மகுடமின்னவானவர்வெருவவந்தான். 52

கட்கம்வேன்முசுண்டிபாசங்கப்பணமுசலமீட்டி
முட்கணைபலவுமேந்திமுடங்குளைபோலத்தேவ
ருட்குலைவெய்தவீரருவரிபோல்வாய்விட்டார்ப்பப்
புட்கரசரசின்வந்தானங்கிசன்பொறையிலாதான். 53

மாதவர்வெருவத்திக்குமறைந்திடச்சேனையார்ப்ப
வாதவன்றோற்றம்போலவங்கிசனெய்தலோடு
மியாதவர்சேனைவெள்ளமெதிர்ந்திரதங்கள்பாய்மாப்
போதகமிடையக்கண்கள்பொறியுகத்தாக்கினாரால். 54

பரியினமயங்களோடுபாய்ந்திடப்பருப்பதம்போற்
கரியினமிபங்களோடுகொதினகனகத்தேர்மே
லரியினம்போலவீரரடர்ந்துவெஞ்சிலைகள்கோலிப்
பரவைவான்றிசைகளெல்லாமறைந்திடப்பகழியெய்தார். 55

வேலினாற்றோலின்கைகால்விழுந்திடத்துளைசெய்தார்ப்பக்
காலனேர்பரியையெல்லாங்கதையினால்வதைப்பர்வில்லின்
கோலினாலிரதமோடுகொடிவிழவலவன்மாள
வாலமாவிடமேபோலவடருவரரசரம்மா. 56

வரிசிலைவளையவாங்கிவான்றிசைமறையவாளி
சொரியவேயிரதங்கைமாத்துரகம்வீழ்ந்துதிரவெள்ளந்
திரையுறுநதிபோலோடச்சிரமுரந்தோள்கள்கால்க
ளரைதுணிந்தரசர்வீழவாடினகவந்தமம்மா. 57

போதகநிரைகள்பாய்மாப்புவியிடைமடியத்தண்டான்
மோதியேயிரதவீரர்முடித்தலைபுரளத்திங்கட்
பாதிபோலொளிருந்துய்யபகழிகடுவியார்த்தே
யாதவர்முனிந்துதாக்கவிரிந்தவங்கிசமன்சேனை. 58

அங்கிநேரங்கிசேனையாசைதோறிரியக்கண்டு
வெங்கணன்கடுவையொப்பான்விசக்கிராசுரனும்வீரன்
சங்கரன்றோற்றம்போலச்சாதுரங்கமுமுன்சூழ
மங்குல்கள்பொழிவபோலவாளிகடுவியார்த்தான். 59

விசக்கிராசுரன்கைவில்லால்விசிகமாமழைபெய்தார்ப்பக்
கசக்குலமிவுளிவீரர்கணக்கிலாவரசர்மாளத்
தசைக்குவைமலைபோலோங்கத்தாவியேயலகைமூளை
பொசித்திடக்கவந்தமாடக்குருதிநீர்புரண்டபார்மேல். 60

தீயவன்முனிவினோடுஞ்சிலையினால்விடுத்தவாளி
பாயவெங்கரிமாமாளநிருபர்கள்படியினோடே
மாயவன்றனுவைநாரிதன்னினால்வளையவாங்கி
யேயெனுமுன்னர்வாளியெண்டிசைமறையவெய்தான். 61

மால்விடுவிசிகந்தன்னால்வாளெயிற்றசுரரெல்லாங்
காலுரங்கரந்தோள்சென்னிகடிதடந்துணிந்துசாயத்
தோலினம்வரைபோல்வீழத்துரகந்தாடொடையுமற்று
ஞாலமேற்புரளவெண்ணில்கவந்தங்கணடித்தவன்றே. 62

மானவனிமைப்பின்முன்னம்வரிசிலைவளையவாங்கித்
தானவர்குலங்கண்மாளச்சரம்பலதூவக்கண்டே

யினமின்மணித்தேர்மீதினிலங்கியவிசக்கிரன்ற
னையன்றரித்தானஞ்சவழற்கணைதூவியார்த்தான். 63

மறனுறுமசுரனெய்தவடிக்கணைமாரிதன்னை
யிறையவன்விசிகத்தாலேயறுத்தெழுபத்துமூன்று
பிறையெனவயங்கும்வாளிபெய்திடவவுணன்மார்பி
னுறவிழிகுருதிபாரினோடினதிபோலெங்கும். 64

உரமிசையுதிரவெள்ளமோடலும்விசக்கிரன்ற
னெரியுகுநயனனாகியிந்திரன்படையைவாங்கி
யரிதிருமார்பினாழவழுத்தலுமருணநீத்தம்
பெருகலுமவுணர்கோமான்பிஞ்ஞகனஞ்சவார்த்தான். 65

நிலனுறவுரத்தின்வீழுங்குருதிநீர்நிறையமாயோன்
சிலையினைக்குனியவாங்கிச்சிலீமுகம்விடுத்துவெய்யோன்
வலவனோடிரதம்பாய்மாமடியவிற்றுண்டமாக்கி
யுலகொடெண்டிசையுமஞ்சவூதினானுயர்வெண்சங்கம். 66

வரிநெடுஞ்சிலையுமற்றுவலவனோடிரதம்வீழத்
தரையினினிழிந்துவெய்யோன்றமனியப்பொருப்பைநேராங்
கிரியெரிந்தார்த்தலோடுங்கேசவனதனைப்பற்றி
யுரமிசையெரிதலோடும்விசக்கிரனுதிரங்கான்றான். 67

காலனைநிகர்க்கும்வெய்யவிசக்கிரனுதிரங்கான்று
ஞாலமேலயர்ந்துவீழ்ந்தாண்டெழுந்துவானடுங்கவங்கோர்
சாலம்வேருடனேவாங்கித்தடக்கையாற்சுழற்றிவிட்டான்
மாலெழுகணையால்நூறுதுணிபடவறுத்தான்மன்னோ. 68

காயும்வெங்கனல்போனெஞ்சங்கதமுறக்கதைகொண்டார்த்து
மாயவன்மீதினோடிவிசக்கிரன்வருதலோடுந்
தூயவன்வரிவிற்கோலியழற்படைதொடுத்துவிட்டான்
றீயவன்சிரத்தைத்தள்ளிச்சென்றதுதேவரார்ப்ப. 69

அந்தகன்முதலோரஞ்சவடர்ந்திடுவிசக்கிரன்ற
னிந்திரைகொழுநனம்பாலிறந்திடவிமையோரெல்லாந்
துந்துமிமுழங்கப்பொற்பூச்சொரிந்தனர்சுரர்கள்கோனுங்
கந்தமார்கமலன்றானுங்களிப்புடன்றுதித்தாரன்றே. 70

வேறு.

காலனைநிகர்த்திடுவிசக்கிரன்மடிந்தசெயல்கண்டுகனலா
வாலமெனவேடிபகன்முந்தியிரதத்தின்மிசையாடகவரை
போலவரிவெஞ்சிலைவளைத்துநெடுவாளிகள்பொழிந்துவரவே
மாலனுசனானவுயர்சாத்தகிதடுத்தனன்வடிக்கணைகளால். 71

மாயனனுசன்கணைவழங்குதலுமேடிபகமன்வரிவிலா
லேயெனுமுனைக்கணையாயிரம்விடுத்திடவெழிற்சினியருள்

சேயன்மெய்யழுந்துறவலர்ந்தொருகிஞ்சுகமலர்ச்செயல்பெறக்
காயநிறைசெங்குருதியோடியதுகாசினியின்மீதருவிபோல். 72

வெஞ்சினமிகுத்தடிபிகன்விடுவடிக்கணைகள்மெய்யினுறவே
கஞ்சனைவதைத்தமனனுக்கிளையகாவலன்மனங்கதமுற
விஞ்செழிலிபெய்வதெனவேவிசிகமெண்ணிலவிடுத்தெதிரெயும்
வஞ்சகநெடுஞ்சிலையறுத்துலகமஞ்சவளையூதினனரோ. 73

மற்றுமொருவெஞ்சிலைவளைத்தடிபிகன்கணைவழங்குதலுமே
வெற்றியுயருஞ்சினிசுதன்முனிவினோடுவிசிகங்களவன்வில்
லிற்றிடவிடுத்திடவிமைப்பின்முனர்வெய்யவனெடுத்தொருகையாற்
பற்றியெய்தனுக்களறுநூறுமுறியப்பகழியேவினனரோ. 74

மூற்குணமலிந்திடுமுராரியனுசன்முனிவினோடடிபிகன்
விற்களறுநூறுதுணிசெய்தவிறல்கண்டுவிபுதத்திரடுதிச்
சொற்கள்கொடுபூமழைசொரிந்தனர்களங்கிசமனுக்கிளையனும்
பிற்குணனிலத்தினுயர்வாள்கொடுபிறங்கலெனவந்தனனரோ. 75

வீறிவருகாலெனவடர்ந்துவருவெய்யவனெடுத்தசுடர்வா
ளாறுதுணியாய்விழநொடிக்குவமுன்வாளிகள்விடுத்தரிபினோ
னாறுகுருதிப்புனல்விழக்கணையுரத்திடையழுத்தட்டிபிகன்
யாறுவதுகண்டுசுரர்பன்மலர்கவினர்கள்பார்நிறையவே. 76

அங்கிநிகரங்கிசன்பினோனுடைதனோக்கியவரக்கர்பெருமான்
வெங்கனல்பிறங்குநயனன்விறலிடும்பனிருதக்குழுவுடன்
சங்கினொடுதுந்துமிமுழங்கவுயர்தேரின்மிசைசாரும்வரைபோன்
மங்குலிடியஞ்சவகல்வாயொலியுறக்கடிதுவந்தனனரோ. 77

வேறு.

விக்கிரமத்தின்மிக்கவிடும்பன்வரலோடு
முக்கிரசேனனுடன்வசுதேவனுயர்தேரிற்
புக்கெதிர்வந்தேபொருதடர்நிருதத்திரண்மாளத்
திக்கயமஞ்சச்சிலையொலியுறவெங்கணைபெய்தார். 78

விருத்தரின்முந்துமுக்கிரசேனன்மிகுஞானந்
திருத்தமுறுந்தேவகிகணவன்றன்சமர்செய்யு
மருத்தியுறப்பேராகுளிநிறையவழல்வாளி
பெருத்தவிபத்தோடிவுளிகண்மடியப்பெய்தார்த்தார். 79

நீடியசிலையாலிருவரும்வாளிநிலன்வான
மூடியமுகில்போற்பெய்திடமூளுஞ்சினநாகங்
கோடகம்வீரர்கோடியின்மேலுமடியக்கண்
டோடினர்நிருதருவகைகொளரசர்திரளாட. 80

நிருதர்கள்பாறக்கண்டவிடும்பனிலமீதின்
வருதனிமேருபொருவநடந்தேவலன்விஞ்சப்

பொருதிறலரசர்புகரிபமினமாவிரதங்க
டரைதனின்மடியக்கைகொடறைந்தான்றழன்மண்ட. 81

கரியையெடுத்தேபரியைவதைத்தான்கனகத்தே
ரிருநிலமிசையிற்சிதறவடித்தானிருகையா
னரர்களைவாரித்தின்றுசெருக்கிநதிபோலப்
பெருகியகுருதிபருகினனகலும்பிலவாயால். 82

இம்பரினிறையுமிவுளிகணரர்களிபமெல்லா
மும்பர்கள்வெருவத்தின்றுகுடித்தானுதிரங்க
ளம்பரமெனவேயடரரிகளைவாயிடுவீரக்
கும்பகனன்போலெய்துமிடும்பக்கொடியோனே. 83

மருவமர்தொடைகூடுக்கிரசேனன்வசுதேவ
னிருவர்கள்சிலையும்பற்றியிறுத்தேயென்வாயி
னரர்புகுவீரென்பசிகெடவென்றேநலனில்லா
னுரைசெயவரிகாணிபமெனவஞ்சியுலைவுற்றார். 84

சிலையிறலோடுந்தேரினிழிந்தேபெயர்வாரை
நலனிலிடும்பன்பற்றுவமுன்னாரணன்முன்னே
னிலகியகையாலிடியெனவவன்மார்புறவெற்ற
நிலமிசைவீழ்ந்தேநிருபர்களார்ப்பவயர்வுற்றான். 85

வாயுறுகுருதிமண்மிசைநிறையவயர்வுற்றே
யேயெனுமுன்னந்தேறியெதிர்ந்தோனிருகாலைத்
தூயவிராமன்பற்றியெறிந்தான்சுரர்போற்றத்
தீயவன்மாண்டான்காவதநெறிபோய்ச்சிதைவுற்றே. 86

அடும்பழவினையேயொத்துலகத்தையடர்கின்ற
விடும்பனிறந்தநற்செயல்கண்டேயிமையோர்கள்
கடம்பொழியயிராவதவிறையுடனுங்கனகப்பூ
விடம்பொழியரவினுருவொழியரசன்மேல்விட்டார். 87

வேறு.

வெங்கணனிடும்பன்றீயவிசக்கிரன்மடியக்கண்டு
சங்கரன்முனிவையொத்ததழற்பொறிநயனன்றேரி
னங்கிநேரங்கிசன்றானைகளிரதம்வீர
ரெங்கணுநிறையவந்தானிணையிலாவீரரார்ப்ப. 88

ஆலமாவிடமேபோலவங்கிசனடர்தல்கண்டு
தாலகேதனனும்வீரன்றமனியவிரதத்தேறிக்
கோலமார்சிலையின்வாளிகொண்டல்போற்பொழியத்தேர்க
டோல்கண்மாமடியவீரர்துணிந்தனர்குருதியோட. 89

தன்னுடையனிகமாண்டுதரைபடவெருவினோர்கள்
வென்னிடக்கண்டுபொங்கிவிடத்தைநேரங்கிசன்றா

னன்னமார்வண்ணன்மார்பினழுந்துறநூறுவாளி
வன்னிபோன்மடுப்பவெய்யமதிதிறனுதிரங்கான்றான். 90

சக்கரந்தரித்ததாமோதரன்றாமேனோன்குருதிவாயாற்
கக்கினன்கனன்றுபொங்கிக்கடுஞ்சிலைகையின்வாங்கி
யுக்கிரமிகுத்தவேழாயிரங்கணையுலகமஞ்சக்
கொக்கரித்தெதிர்ந்தவெய்யகொடியவனாகத்தினெய்தான். 91

மதிவணன்சரங்கள்பாயமதியிலங்கிசமன்மார்பி
னுதிரநீர்பெருகலோடுமுளங்கனன்றழனேர்வாளி
கதுமெனவிடுத்திராமன்கடுஞ்சிலைதுணித்துத்திண்டேர்
சிதைவுறவலவன்மாளச்சிலீமுகம்விடுத்தங்கார்த்தான். 92

வலத்தினங்கிசன்றானேவும்வாளியால்வலவன்மாண்டு
நிலத்துறவிரதம்வீழநெடுஞ்சிலைதுணியக்கண்டே
சலத்தினினிராமநம்பிசளக்கன்றேர்முறிந்துசிந்த
வலத்தினினடித்தங்கார்த்தானசனியார்ப்பரவமொத்தே. 93

தேரிறவலவன்மாளச்சினத்துடனங்கிசன்றான்
பாரினிற்குதித்துநீண்டபருமணிக்கதையைப்பற்றி
வாரியினொலிபோல்வாய்விட்டடித்தலுமதியார்வண்ணன்
வீரியனலத்தினாலேவிலக்கினன்விண்ணோர்வாழ்த்த. 94

சாரிகைமாறியெக்குந்தமனியவரைகளேலப்
பாரினிற்றிரிந்துவிஞ்சும்பரவையினொலிபோலார்த்துப்
போரினெண்ணலத்தினோடுமணிக்கதைபுடைத்துத்தாக்கி
வீரியரமர்செய்வேலைவெய்யவன்கடலில்வீழ்ந்தான். 95

இரவிபோய்மறைதலோடுமிருவருமுலகமஞ்சப்
பொருசமரொழியத்தூயபுட்கரமிசையினெய்தி
யரிபெருஞ்சேனைசூழவமர்ந்தனனங்கிசன்றான்
சரியிலாத்தேர்மேற்கோவர்த்தனகிரிதன்னைச்சார்ந்தான். 96

குடதிசைமறைந்துவெய்யோன்குணதிசையுதயமாகக்
கடகளிறடர்த்தகோமான்கரிபரியிரதஞ்சூழ
வடகிரிபொருவுங்கோவர்த்தனவுயர்வரையைச்சார
வடர்மணித்தேரினேறியங்கிசனார்த்துவந்தான். 97

அங்கிரேசங்கிசன்றானார்த்துவந்தடர்தலோடுஞ்
சங்கரன்பணியினாலேசார்ந்தபிங்கிருடியோடு
வெங்கண்பொங்கனலங்காலவிறல்செய்கும்போதரன்றான்
மங்குல்கள்பொருவவார்த்துவங்கியங்கறங்கவந்தான். 98

வேறு.

கும்போதரப்பெயரோனுடன்கோடிசாயபிங்கிருடி
வம்பார்தொடையணியுந்திருமாயோன்படைவீரர்

கம்பாதமுரந்தோளரைகரம்வேறுறவழலா
ரம்பாற்றுணிசெய்தேகயமயமெண்ணிலவதைத்தார். 99

கதையாற்பலகனம்போலெழுங்கரிவீழ்ந்திடப்புடைத்தான்
ஒதையாற்கொடியுயர்தேரினமொடிந்தேயுருண்டிடவுங்
குதியாற்பரியினந்தோறசைகுழம்பாயிடமிதித்தே
மதியாற்பொலிசடையோன்விடவருபூதங்களார்த்த. 100

கரிதேர்படிமடியக்கடுவிடமாயெனவடரு
மிருபூதமும்வெருவக்கடிதிருகாலையும்பற்றி
யரிநூறுசுற்றுறக்கையினிற்சுழற்றாவரன்பதியாம்
வரைமேல்விழவெறிந்தார்த்தனன்வானோர்மலர்சொரிய. 101

புயலார்நிறைத்தரிவந்தெதிர்பூதங்களைக்கரத்தாற்
கயிலாயவெற்புறவீசிடக்கண்டான்கதமுறவே
யயமார்கயனொடுந்தேர்மிசையமரங்கிசன்சிலையாற்
கயமாவினமுயர்வீரர்கண்மடியக்கணைசொரிந்தான். 102

உயருக்கிரசேனன்சினிசுதனொண்வசுதேவ
னியல்புற்றிடுமலத்தோனுடனெதிர்த்தார்திரளெல்லா
மயமுற்றிலகுந்தேர்சிலையழியச்சமர்பயிலுஞ்
செயலற்றிரிந்தோடக்கணைதிசையெங்கணுநிறத்தான். 103

சியம்வரவிரிந்தோடியதிரட்போதகமெனவே
மாயன்றொருவனும்கின்றிடமதிநேர்வணன்முதலோ
ரேயென்றுமுன்னிடைந்தோடவிமையோர்களும்வெருவத்
தீயன்வலைமுழக்கிப்பெருஞ்சிலைநாணினையெறிந்தான். 104

அரிமுற்படவிபமாமெனவடரங்கிசனறைவா
னிருபர்க்கிறையானென்பதுமறிந்தேயிடையாநீ
வெருவித்திரையிடுமூப்பெனக்களித்தேயடிவீழாய்
சரிகிற்குதியென்றேகொடுந்தழல்வாளிகள்பொழிந்தான். 105

சினிதன்சுதன்றேரூர்ந்திடச்சிலைவான்பிறைகடுப்ப
வனகன்றொருநொடியின்முனரழலம்புகள்சொரிய
வினையொன்றியவிறலங்கிசன்விடையோனெனமுனியாக்
குனிவில்லினிற்சரமாரிகள்கோத்தேயவைகுறைத்தான். 106

அனலன்படைதொடுத்தச்சுதனார்த்தானதுகண்டே
புனலின்படைதொடுத்தேயவைதடுத்தான்பொறையிலமன்
கனமொத்தமெய்யினனாசுகன்படைவிட்டிடக்கனலாஞ்
சினமெத்தியமனனிந்திரன்கணைகொண்டவைசிதைத்தான். 107

ஈசன்படைதொடுத்தானிறையதுகண்டெரிநயன
னீசனரன்படைகொண்டவையறுத்தார்த்தலுநெடியோன்
வாசஞ்செறிமலரோன்படைவிடுத்தார்த்திடவானோர்
கூசும்படியயன்வெம்படைகோத்தங்கிசன்குறைத்தான். 108

அரிதன்படைதனைவாங்கலுமயனார்திசையனைத்து
மெரியுற்றிடுஞ்செயல்கண்டிராதத்தங்கிசனிழியா
வெருவிப்பெருகுங்காளியமடுவின்னிடைவியலார்
வரையொத்துறக்குதித்தான்புவிபரிமாசுணமஞ்ச. 109

வேறு

அரிபடைவாங்கலுநடுங்கியங்கிசன்
வெருவியேயமுனையின்வீழவேநகைத்
தொருநொடியிடுமுனமுகைந்துமற்றவன்
சிரமிசைப்பாய்ந்தனன்சீதரப்பிரான். 110

காளியன்மடுவிற்குப்புற்றுக்காலினான்
மீளியைநிகர்த்திடும்வீரவங்கிசன்
மாளவேசிரம்விழவுழக்கிமாயவன்
கேளிர்கள்களித்திடக்கிளர்ந்துதோன்றினான். 111

நதியினிலங்கிசன்மடியநாரம்விட்
டுதயமாகிரிதனினுச்சிநீடிய
கதிரவனெனமணிமகுடங்காணவே
எதுகுலமன்னவனிரதமேறினான். 112

நீரினுளங்கிசன்மடியநேமியோன்
றேரின்மேற்சிறந்திடத்தேவர்துந்துமி
வாரிபோன்முழங்கமாமலர்கடூவினார்
பாரின்மேலருந்தவர்பாடியாடவே. 113

வெங்கணனாகியடிபிகவீரியன்
சங்கிடக்கையினைச்சார்ந்தென்முன்னவ
னெங்குளான்விரைவினினியம்புவாயென
மங்குல்போலொளிருமெய்மாயன்கூறுவான். 114

தமயனைத்தேடியடிபிகசார்ந்துநீ
யமுனையைக்கேளெனவிமலன்கூறலும்
நமனைநேரங்கிசன்றன்னைநாடியே
கமையிலான்காளியமடுவின்மூழ்கினான். 115

கோடடர்யமுனையிற்குதித்துத்தம்முனைத்
தேடிநீரழுவத்துட்டிரிந்துங்காண்கிலான்
வீடினனாமெனமேவிக்கூலமே
லாடகன்காலன்முன்னமுதாற்றினான். 116

ஆவலின்வெண்ணெயுண்டடிபட்டேயுழல்
கோவலவென்முனோன்றன்னைக்கொன்றிடும்
பாவிநீயென்றுநாப்பற்றிவாங்கித்தன்
னாவிவானுறப்பறித்தாற்றிமாண்டனன். 117

அங்கிரோரங்கிசனனுசன்மாண்டுற
மங்கிடாவருந்தவர்மகிழ்ச்சியெய்தினர்
சங்குதுந்துமியொடுமுழங்கச்சக்கர
னெங்குமன்னவர்தொழவிருந்தவெல்லையின். 118

நறுந்துழாயணியரிநதியினண்ணிய
தறிந்துயர்நந்தனுமசோதைநங்கையு
நிறைந்தெழுகளிப்பொடுநேயவாயருஞ்
சிறந்திடுமரிவையர்குழச்சேர்ந்தனர். 119

சிந்தையிற்களிப்புறத்திருவிநாயகன்
றந்தைதாயடியினின்முடியைத்தாழ்த்தலு
மைந்தனைமகிழ்வுறத்தழுவிவானிறை
இந்திரனோர்சிந்துவின்மகிழ்ச்சியெய்தினர். 120

செய்யுமுதுடன்றதிநிறைந்தவோதனந்
துய்யபாலனமலிருபமாதியாய்
வையமேமுண்டுமாராவயிற்றினு
மையனையருத்தவித்தனன்சோதையே. 121

கடிமலர்த்தொடையலையணிந்துகங்கைசே
ராடியன்மெய்யழகுறக்கலைபயப்பியே
யுடலெலாம்புளகமுற்றுச்சிமோந்துதன்
மடிமிசையிருத்தித்தான்மகிழ்ச்சியெய்தினன். 122

முன்னுறுதவத்தினன்முடிவிலாததோர்
நன்னலனெய்தியநந்தகோபனை
இன்னிலத்தவரிமையோர்களேத்தவா
மூன்னையைநோக்கிமாலருளுவானரோ. 123

தூயநன்கன்றுகடுள்ளுமோவவை
மேயவேபசும்புலுந்தளிர்க்குமோவிளங்
காயுடன்களங்கனிநிறைந்தகானெலாம்
பாயுமான்கலைபுடனெறித்துபார்க்குமோ. 124

மறுவிலாக்கறந்திடமலியும்பாற்றதி
நறுநெய்யோடிழுதுகணலங்கொளாய்ச்சிய
ருறியெலாமடுக்கியகலசத்துள்ளவை
சிறியவர்மித்தலுந்திருடித்தின்பரோ. 125

ஆவினங்கன்றுயான்மேய்த்தகோலடர்
காவினிலூதும்வேய்கடையுமத்தினந்
தாவினங்கேகயத்தோகையின்பினல்
கோவணியணியெலாமுளதுகொல்லென்றான். 126

இந்திரைகேள்வனீதியம்பலோடுமே
தந்தையுந்தாயுமத்தனயனைத்தழீஇச்

சுந்தரவறைந்தவையாவுஞ்சோர்வில
வெந்தைநீயெய்திலாயெனவிரங்கினர். 127

நின்னையெம்பாடியினித்தங்காண்கிலா
வின்னலேபொறுக்கிலாமெனவிரங்கிய
வன்னையோடத்தனையன்பினற்றழீஇப்
பின்னைதன்னுயகன்பேசுவானரோ. 128

அருந்தவர்தங்களினநிகமாகவே
திருந்தியசெயலினைச்சிர்லைதசெய்தநீர்
பெருந்தவர்பெறுப்பதம்பெற்றுவாழ்விரால்
வருந்தனீரென்றரிமகிழ்ந்துகூறினன். 129

பொலனுறுகலன்களும்பொன்னினுடையு
நலனுறத்தந்தைதாய்க்களித்துநாரணன்
சிலநுதலாய்ச்சியர்கிரட்குமாயர்க்கும்
விலையில்பூடணமெலாம்விளங்கவீந்தனன். 130

நந்தனையசோதையைவணங்கிநாரண
னிந்துநோனனமிலங்குமாய்ச்சியர்
சிந்தைதன்பின்செலத்தேரினேறியே
துந்துமிமுழங்கிடத்துவரைசேர்ந்தனன். 131

அவசமார்துவரையிற்சேர்ந்துதூயதா
நவமணிக்கோயிலைநண்ணிநாரணன்
றவமுறுதேவகிதாளில்வீழ்தலு
முவமையில்குமரனையுச்சிமோந்தனள். 132

மாவடுவகிர்நிகர்மைக்கணுண்மரைப்
பூவினைத்துறந்துயர்விதர்ப்பன்பொன்மனை
மேவியமெல்லியலுடனும்விஞ்சிய
தேவியரனைவரும்வணங்கச்சேர்ந்தனர். 133

காயும்வெங்கரியினைவதைத்தகாவலன்
றூயராங்குமார்கள்சுதருங்கூடமு
வாயிரகோடியெண்ணுயிரத்தெண்ணூ
ற்றேய்விலாவீரர்சூழ்ந்துறவிளங்கினன். 134

அங்கிசமன் டிபிகன் வதைப் படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - 1358.

101 - வது, நிருகராஜன் மோட்சப் படலம்.

பாதவண்டுளியிற்பவங்களோவிநற்
கோதமன்மனைவிமுன்னுருக்கொண்டேகவே
நீதல்சனகர்கோன்பயந்தசீதையா
மாதினைமணந்தமாதவனைவாழ்த்துவாம். 1

நந்தொடுதிகிரியையேந்துநாரணன்
மைந்தர்கடமக்கெலாம்வதுவைசெய்துயர்
சுந்தரஞ்செறிபுதல்வியரைத்தோமிலா
வந்தமாராசர்க்கீந்தமருநாட்டனில். 2

பானுநற்சாம்பன்விற்காமன்பத்தி
னீனமில்சாருசங்கிராமனோடிவர்
கானகந்தனின்விரைந்தேகிக்கட்கமோ
டேனமானெண்ணிலைபிடித்தின்புற்றனர். 3

ஆவிதநகாயுதமடர்ந்துபற்றியே
னாவியன்னங்குயிற்றுலங்கத்தோன்றிய
காவினிலெய்திநீர்காண்கிலாதபாண்
கூவலின்வரைநிகர்கோம்பிகண்டனர். 4

தாணியிற்றாழ்ந்திடுஞ்சலமில்கூவலின்
வரைநிகர்கோம்பியைக்கண்டமைந்தர்கள்
விரைவினிற்கயிற்றிடைவீக்கிவாங்கவே
யொருசிறிதசைவிலாதிருந்ததோதியே. 5

கிரியெனக்கூவலுட்கிடந்தவோதியின்
பெருமையையேகிநற்புதல்வர்பேசிட
வரியிரதத்தின்மேலரசர்சூழ்ந்திட
விரைவினிலெய்தியேவியந்துநோக்கினான். 6

அரிபுவியின்னிடத்தாழ்ந்தகூவலின்
வரையெனக்கிடந்திடுமோந்திவாலினை
யொருகையிற்பற்றலுமுருவமிக்கதோர்
புருடனாய்விமானமேற்பொலிந்துதோன்றினான். 7

துலங்கியகிரீடமுஞ்சிரத்திற்றோன்றநற்
கலன்களும்வயங்கிடக்கனககுண்டல
மிலங்கியேயசைந்திருகாதினேருற
வலங்கலுமார்பிடையலையத்தோன்றினான். 8

வரைநிகர்கோம்பியாமுருவைமாற்றிநற்
புருடனைவிமானமேற்பொலிந்ததன்மையை
யுரையெனவருள்செயுமுலகுணேமியா
னிருகழற்பணிந்தவனியம்புவானரோ. 9

இரவிதன்குலமனுப்பயந்தவிக்குவா
வருளியநிருகன்யானயோத்தியென்னுமா
புரியினினறநெறிபொருந்தப்பாரெலாந்
திருவுறவுயர்ந்தசெங்கோல்செலுத்தினேன். 10

பரவையின்மணலினைப்பாந்தமீனினைத்
திரையினுளெறிந்தசீகரத்தையெண்ணினு
மருமறையோர்க்கலங்காரத்தோடியா
னிருநிலத்தளித்தகோதானமெண்ணொணா. 11

மாமறையறைந்திடுமறையவர்க்கெலாம்
பூமிதானங்களெண்புகரிபங்கவின்
மாமணிதிரவியம்வயங்குகன்னிய
ரேமமோடெண்ணிலாதவைகளீந்தனன். 12

தீதகன்றிடமகாதானஞ்செய்தயா
னேதமேவிருக்கினையியம்புவோனுக்கே
கோதிலர்துயர்ந்தகோதானமீசனும்
வேதியன்பசுவுடன்மனையின்மேவினன். 13

சரியிலாமறையவனகத்திற்சார்ந்தகோ
விரவினிற்பாறியென்னிரையின்மேவவே
யரிவினையேனுணராதவாவினை
யொருதினத்தொருமறைபவனுக்கீந்தனன். 14

ஏசிலக்கோவைமுன்னீயப்பெற்றிடுந்
தேசுறுமறைபவனெங்குந்தேடியே
யாசுறப்பின்னர்யானளிக்கவாங்கிய
மாசறுமறைபவன்மனையிற்கண்டனன். 15

சுருதியையறைபவன்கண்டித்தாயகோ
நிருகனெற்கீந்தனனென்னநீதியா
ரரசனின்றெனக்கிவாவளித்தனனென
விருவரும்விரோதமாயென்முன்னெய்தினர். 16

இருவருநிகழ்ந்தமையியம்பவாயிர
நிரையிதற்கீகுவனென்னநேரிலா
ரருமறையவரிசையாதவாவினைச்
சரியிலோர்மறையவன்றனக்கன்றீந்தனன். 17

சரியிலாக்கோவினைத்தானமீந்திட
விருவருஞ்சின்முறலென்னைநோக்கியே
யரசநீதாணியினூழ்ந்தகூவலின்
கிரியைநேரோதியாய்க்கிடத்தியென்றனர். 18

இருமறையவர்களன்றியம்புசாபத்தாற்
பருவரையெனப்பயமிலாதகூவலி

னொருகொடியிடுமுனமோதியாகியே
மருளாறுவினையினால்வந்துவீழ்ந்தனன். 19
தீவினையேனையுன்காத்திற்றீண்டியே
நாவினின்மறையவர்நவின்றசாபமாம்
பாவமாமிருவினைப்பற்றறத்துயர்
தேவனுக்கிணையெனத்திருவினாயகா. 20
மைபுறுகருங்கலாய்க்கிடந்தவாணுதற்
றையறன்பவமெலாந்தாளினீக்கினாய்
கையினின்றென்வினைக்கடலைப்போக்கினாய்
தூய்யவாவென்றடிதொழுதுசொல்லுவான். 21
துன்பகன்றுயர்பெருஞ்சோதியெய்தயா
னுன்பெயரோதியன்னடிமறக்கிலா
வன்பெனக்ககல்கிலாதருடியாலென்றன்
புன்பிறப்பகற்றியபுனிதவென்றனன். 22
கிருகனிவ்வுரையெலாநிகழ்த்திநேமியோ
னிருசரணங்களினிறைஞ்சிக்கண்ணினீர்
தரையினினிறைத்திடத்தலைழத்தவன்பினாற்
சுரர்துதிசெய்திடச்சுவர்க்கத்தெய்தினான். 23
இவையெலாமியம்பிவானிருகனெய்தலுந்
துவரையினிலங்கியசுருதிநாயக
னவனியிற்கிளைஞாமாசர்கேட்கவே
யுவமையில்புதல்வர்கட்குரைக்கலுற்றனன். 24
திருவுறவுலப்பிலாவேள்விசெய்துயர்
பரிவினாலளப்பின்மாதானம்பண்ணினோ
னிருவருக்குமொருபசுவையீந்திடு
மருவினைதொடாதேவேயோதியாகினான். 25
ஆதலினளக்கரினரவமன்றுமிழ்
தீதுறுவிடமருந்திடினுந்தீர்க்கலாம்
வேதியர்சோகங்களியார்க்குமீட்கரி
தேதமாந்தீவினையெய்துமென்றனன். 26
மறையவர்க்கீந்திடும்புவியையவல்வினோ
னறுபதினாயிரமாண்டமேத்திய
கிருமியாயுழலுவனென்றுகீழ்மையி
லறிஞர்கள்சொலுமொழியுண்மையாமென்றான். 27
என்னுரைதனைமறையியம்புசொல்லென
வுன்னிசல்வேதியருடைமைகொள்கலி
ரன்னவருயாரியயனையானனன்
றன்னிலுமதிகரென்றுணர்ந்துதாழுமின். 28

அந்தணர்பெரியவாறிமினென்றுயர்
மைந்தருக்கிம்மொழியியம்பிமாதவன்
சிந்துவினலைசெறி துவரைசேர்ந்தவ
ணிந்திரைதன்னுடனிருந்தனவரோ. 29

எண்ணிரண்டாயிரச்சதத்தெண்மாதரார்
மண்ணிடைமகிழ்தருண்மைந்தர்வாணரு
கண்ணியரெண்ணிலார்தம்மைவேட்கக்கார்
வண்ணனுட்களிப்பொடுமகிழ்ந்துமேயினன். 30

நிருகராசன் மோட்சப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - 1388.

102 - வது, உருக்குமி திருக்கலியாணப் படலம்.

பெருநாட்டவஞ்செயவெய்தியபிறைவேணியனருளும்
வரசோதனையறியக்கரமான்சென்னியில்வைப்பான்
றரைமீதுயருலகெங்கணும்விரைந்தோடியசழக்கன்
விருகாசுரன்மடியும்வகைசெயுமால்புகழ்விரிப்பாம். 1

திருவாகியவருக்கும்மணித்தேனின்புறத்திறல்சா
லரிதானருண்மதனார்சுதனனிருத்தமன்றனக்குச்
சரியாகியமடவாடனைத்தாணிக்கணிநாடிப்
பரிவானெறியறியுத்தவனுடனிம்மொழிபகர்வான். 2

நீயின்றுருக்குமனார்சுதனருணேரிழையாளைத்
தூயன்னுயரனிருத்தமன்றனக்குத்தரச்சொல்லென்
றோயும்பொதுவோருய்த்திடவனலுண்டவனோத
வேயென்னுமுனுயருத்தவனிரதம்மிசைபோனன். 3

பொன்னார்மதில்சூழ்போசகடம்மாநகர்புகுந்தே
தன்னேரிலுத்தவன்வீடுமகன்சேயிடைசார்ந்தே
யுன்மாமகன்றருமங்கையையுலகேழையுமளந்தோன்
றன்மாமகனருளுஞ்சுதன்றனக்கீகுதியென்றான். 4

உயருங்குணமலியுத்தவனுரைகேட்டுருக்குமன்று
னயிலொன்றியகரத்தென்மகனருண்மங்கையையன்பாற்
கயமெண்ணியவிழிநங்கைதன்சுதனுகியகாமன்
னியல்பின்றருமனுருத்தமன்றனங்கீகுவனென்றான். 5

விறல்சேருருக்குமனன்புடன்விளம்பும்முரைகேளா
நெறிமேவியவெழிலுத்தவனெடுந்தேர்மிசையெய்தி
மறையோருறு த்வாரபதிமன்னோடிவையறையப்
பிறைபோனுதற்கமலாசனியுடனேபெரிதுவந்தான். 6

மாயோன்றனைத்தருதேவகிவசுதேவன்மன்மதனுஞ்
சேயோருடனனிருத்தமன்றேர்மீதினின்வரவே
தூயானுயர்மலர்நாயகியுடன்றேவியர்சூழக்
காயாமலர்வடிவாகியகருணைக்கடல்சென்றான். 7

சினிபுத்திரனெமியுத்தவன்றிறல்சாலலமுடையோன்
கனமுற்றிடுமெழிலுக்கிரசேனனுடன்களித்தே
முனையுற்றெதிரடல்வீரர்கண்முகிலொத்தெழுகரிசே
ரணிகத்துடனுயர்தேரினுமயமீனினுஞ்சென்றார். 8

வேறு

காகளங்கொம்புதாரைகம்புதுந்துமிகளெங்கு
மோகரித்தெழுந்தமேகத்திடியெனமுழக்கம்விஞ்ச
நாகந்தாரிவுளிபொற்றேர்நலனுறுதுவசமோங்க
வேகவானெயில்சூழ்போசகடநகர்க்கெழில்சூழ்மாயன். 9

நந்தருசெங்கைமாயனவினமின்னுடனேதேரின்
வந்தனனென்றுதூதர்கூறிடவிதர்ப்பன்மைந்தன்
சிந்தையின்மகிழ்ந்துபோசகடநகர்தன்னைச்சிரா
விந்திரனகரிபோலவலங்கரித்தெதிர்சென்றானால். 10

உருக்குமன்வரதன்சிராமுருக்குமவரதப்பேரோ
னுருக்குமமாலிவீரவுருக்குமசேனன்விஞ்சு
முருக்குமமன்னன்போலொத்தவிளைஞர்களுவந்துசூழ
வுருக்குமன்மாயன்றன்னையுரமுறத்தழீஇக்கொண்டானால். 11

முன்னவன்றன்னையன்பான்முனரிமின்னிறைஞ்சலோடு
மன்னரெண்விதர்ப்பன்மைந்தன்மனமகிழ்ந்தெதிர்கொண்மாயன்
றன்னெடும்விரைவினெய்தித்தாளகோபுரங்களோங்கப்
பொன்னவிர்மதில்சூழ்போசகடநகர்புகுந்தானன்றே. 12

எருறுகிரீடமோங்கவெழில்கொள்குண்டலமிலங்கத்
தாருறுமுரத்தின்மீதிற்றாளமாவடங்களாட
நேரிலாத்தவளப்பட்டுமருங்கினினிறைந்துசூழ
மாரவேள்வெள்கவந்தான்மற்றவன்சுதன்றேர்மீதின். 13

தூயதாம்வீதிதோறுந்துலங்கியகலன்வில்வீச
வேயுறுதோளின்மாதர்விரைகுழலலையவெய்தி
மாயனைநோக்கிவேளின்வடிவினைநோக்கிமாரன்
சேயினைநோக்கிப்பாரின்சித்திரம்போலநின்றார். 14

துந்துமியிடக்கைதக்கைதுடிகைமாபேரியார்ப்ப
வந்தரமாதரெல்லாமாடகமலர்கடுவ
விந்திரைமருகியானவிரதிதன்சிறுவன்றேர்மேல்
வந்திகர்திரண்டுவாழ்த்தமறுகிடைச்செல்லும்வேலை. 15

புயல்பிறைவில்லுவாளிபொற்குமிழாம்பல்வள்ளை
சயிலம்வேய்நாகந்தட்டயங்குமின்கதலிநள்ளி
யியல்புறநளினமேந்துமிரணியக்கொம்புபோல
வுயர்மணிக்கும்பவூசலுருக்குமியாடினாளால். 16

கவரிகடிசழக்காதிற்கவின்கொடோடாடமெய்யி
னவமணிக்கலன்கணமின்னநாமநன்னுதலிற்றேன்றத்
தவளவெண்ணகைவில்வீசத்தாளினூபுரங்களார்ப்ப
வுவமையினம்பொனூசலுருக்குமியாடினாளால். 17

ஊசலினிலங்கவாடுமுருக்குமியெழிலைநோக்கித்
தேசுறுமிரதிபெற்றசிறுவனேரிபத்தின்மீதின்
வீசுவெண்கவரியோங்கவெய்தலும்விரைகொண்மாலை
காசணிநகிலிசிந்தைகளித்தவன்புயத்திலிட்டாள். 18

சிறுமலங்கறன்னைத்தேவிதன்புயத்திற்சூட்ட
மாரவேள்சிறுவன்சிந்தைமகிழ்ந்துயர்மணங்கொண்மாலை
நாரிதன்கந்தரத்தினலனுறவணிந்தாசன்மே
லேருறமனைவிதன்னொடெய்தியேயாடினானால். 19

இரணியவூசன்மீதுமனைவியோடிரதிமைந்தன்
றரணியன்றிடந்தகோவுந்தனயருமகிழவாடி
முரணுறுமரசர்வாழ்த்தமுரசுதுந்துமிகளார்ப்ப
வருணவண்டுண்கள்சேருமண்டபமிசையின்வந்தார். 20

நித்திலவிதானமோங்கநிறைவிளக்கினங்கள்சூழச்
சுத்தநன்மணிகளம்பொன்றுலங்குமாதனத்தின்மீதின்
சித்தசனருளுமைந்தன்றேவியோடிருக்கும்வேலை
கைத்தலக்கனிபோனூலின்பயனுணர்கர்க்கன்வந்தான். 21

சரதவேதியர்கள்சூழத்தவமுறகர்க்கனெய்திச்
சுருதிநூல்வழியிலோமந்தொடங்கமங்கலநாண்கையா
விரதிதன்சிறுவன்றேவிகந்தரத்திலங்கச்சாத்திக்
கரதலம்பற்றித்தீயைக்கவினுறவலம்வந்தானால். 22

ஆலிலைவயிற்றுளாயவுருக்குமியம்மிமீதிற்
காலினின்மிதிக்கத்தேவியுடனருந்ததியைக்கண்டு
மாலினையிறைஞ்சிமாரனடியினில்வணங்கித்தூய
சீலமார்வாரிமின்னைப்பணிந்தனனிரதிசெம்மல். 23

அறனுறமக்குரூரனுக்கிரசேனனன்ற
நெறியுறவசுதேவன்சீர்நிறைந்தசாத்தகிபோர்தன்னிற்
றிறலுடையலாயுதத்தோன்றேவகியுடனுள்ளோரை
மறுவிலாமனைவியோமெதன்மகன்வணங்கினானால். 24

மருதிறவுதைத்தோன்மைந்தன்மகனுருக்குமிதன்னோடு
மிரதியைவணங்கித்தூயவின்னமுதருந்திமேற்கிற்

பரிதிபோய்மறையத்தேவியுடன்பரியங்கமீதிற்
சுரதநூல்வழியின்போகந்துய்த்தினிதிருந்தானன்றே. 25

ஏதமின்மதனன்மைந்தனெழிலுருக்குமன்சேய்நல்கு
மாதுடனின்பமெய்திமகிழ்ந்தினிதிருக்கும்வேலை
யாதவன்கிரணமோங்கியளக்கரினெய்தத்தூய
வேதியரிருகையாரவருக்கியம்விடுத்தாரன்றே. 26

ஆதவனுதயமாகவரசர்கள்குழாங்களோடு
மாதவன்முன்னோன்பொன்னின்மண்டபத்திருக்கும்வேலை
நீதியில்கலிங்கன்றன்னோடுருக்குமனெறியிலாத
சூதினிலிராமன்றோற்கவெல்வமியாமென்றுசொன்னான். 27

நீதியிலுருக்குமன்றானிகழ்த்திடக்கலிங்கராசன்
சீதரன்முன்னோனென்றுஞ்செருக்களந்தன்னிற்றோலான்
பூதலத்தரசர்முன்னுட்புந்திப்புள்ளுவத்தினாலே
சூதினைப்பொருதிராமன்றோற்றிடவெல்லென்றானால். 28

விரைவினிற்கலிங்கனிவ்வாறுரைத்திடவிதர்ப்பன்மைந்த
னருவினைதொடரவெய்தியலாயுதன்றன்னைநோக்கித்
தரணியிலரசர்முன்னர்ச்சதிருறநத்தம்பூட்டி
யிருவரும்பொருவோமென்னவிசைந்தனனிராமநம்பி. 29

இரணியப்பலகைதன்னிலெழிலுறுசாரிபூட்டி
யரசர்கள்குழாங்கள்சூழவிருவருமாடலோடு
முருமெனவதிர்க்குஞ்சொல்லானுருக்குமன்றோற்கவேதான்
விரைவினிற்பொருதுவென்றான்விறலுடையலாயுதத்தான். 30

பின்னருஞ்சாரிபூட்டிப்பெருஞ்சினவுருக்குமன்றா
னின்னலிலலத்தோன்றன்னோடிருங்கவறெறிந்தேயாடித்
துன்னியவரசர்முன்னேதோற்றவனிராமன்றன்னை
யென்னுடன்பொருதுதோற்றாயிரண்டுபோதென்றுநக்கான். 31

நீயவன்மொழியக்கேட்டுச்சிறந்திடுந்தவளவண்ண
னீயெனக்கிருகாற்றோற்றுநிகழ்த்துவதிதுவேதென்ன
மாயும்வெங்காலமெய்திமதியிலாவுருக்குமன்றான்
றாயவன்றன்னைநீயேதோற்றனையென்றுசொல்வான். 32

அரசரெல்லீருங்கேண்மினலாயுதன்சூதென்றோடும்
பொருதிருதரந்தான்றோற்றுப்பொய்யிவன்மொழிந்தானென்றே
யுரைசெயக்கலிங்கராசனுண்மையீதென்றுகூறி
யிருவருங்கரங்கடாக்கியிடியெனநகைத்துச்சொல்வார். 33

அரசன்முன்சூதிங்காடியலாயுதன்றோற்றானென்று
முரசறைகென்றலோடுமுனிந்தரிமுன்னோன்சீறி
யொருகையாற்கபோலந்தன்னிற்புடைத்திடவுருக்குமன்றான்
வரையெனவுருண்டுமாண்டான்மன்னவர்வெருவியோட. 34

சீலமில்கலிங்கன்றன்னைச்சினத்தலாயுதத்தோன்கையாற்
காலினைப்பற்றிச்சுற்றியெறிதலுங்கலங்கிவீழ்ந்து
ஞாலமன்னவர்களெல்லாநகைத்திடப்பாறலோடு
மாலுடனுற்றவெல்லாமுரைத்தனன்மதியின்வண்ணன். 35

இன்னல்செய்யுருக்குமன்றானிறந்தமையிராமன்கூற
மன்னரெண்வசுதேவன்சேய்மவுனனாயிருக்கும்வேலை
முன்னவனிறந்தமாற்றங்கேட்டயர்முளரியன்னந்
தன்னிருவிழிநீர்சோரச்சக்கரன்றாளின்வீழ்ந்தாள். 36

வந்தடிவீழ்ந்துகண்ணீர்மலியவேயரற்றுகின்ற
விந்திரைதன்னைநோக்கியிருகையாற்றழுவிவாடி
முந்துதம்வினையின்செய்கைமூவருங்கடக்கலாற்றார்
சுந்தரியிரங்கேலென்னாத்தேற்றினன்சுருதிநாதன். 37

துடியிடையாளைத்தேற்றிச்சுந்தரன்முன்னோன்கையி
லடியினின்மடிந்தான்றன்னையழலுறவிடுதலோடும்
படியினிலிறந்தான்மைந்தன்பயத்தொடுதிலத்தாற்செய்யுங்
கடனெலாமறையோர்நூலைக்காட்டவேமுடித்தானன்றே. 38

படியினின்மடிந்துவீழ்ந்தவுருக்குமன்பயந்தசேய்க்கு
முடியினையிலங்கச்சூட்டிமுராரிதன்றேவியோடுங்
கடிமலர்க்குழலியானவுருக்குமிகாமன்பெற்ற
வடிவுடையவனோடெய்தமணிநெடுந்தேரிற்சென்றான். 39

தவமுறுந்தந்தைதாயர்தேவியர்தனயர்முன்னோ
னரசர்கணிறைந்துசூழவயமுறுமிரதமீதிற்
கவரிகளசையப்பேரிகாகளஞ்சின்னமார்ப்பத்
துவரையின்விரைவினெய்திச்சுந்தரனிருந்தான்மாதோ. 40

உருக்குமி திருக்கலியாணப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 1428.

---

103 - வது, அத்தினாபுரத்தைப் பேர்த்த படலம்.

கும்பன்மாநிகும்பன்வெய்யமகோதரன்கும்பகன்ன
னும்பர்கோன்பகைஞன்றன்னோடுற்றிடுநிருதர்மாள
வம்பினாலிலங்கைவேந்தனாருயிர்கொன்றான்பாத
நம்பியாந்தொழுவந்தொண்டர்நவையுறுபிறவிநீங்க. 1

வித்துருமத்தின்பொன்னின்வயிரத்தின்வெள்ளிதன்னி
னித்திலந்தன்னிலோங்குநிகரில்கோபுரங்கள்சூழ
நத்துயர்முரசம்பேரிகறங்கிடநவையிலாத
வத்திவெம்பரிதேர்மல்கவத்தினபுரியையாள்வோன். 2

கண்ணிலாகிருபன்பெற்றசுதனெழிற்காமன்போல்வா
னண்ணலார்மடியமோதிநாலிருதிசையும்வென்று
மண்ணெலாமொருகோலோச்சிமதிநிகர்கவிகையோங்க
வெண்ணிலாவரசர்போற்றவிலங்கியவிராசராசன். 3

சந்திரவண்ணனான தாலகேதனன்றான்பெற்ற
சுந்தரியானபானுமதியுடன்சுயோதனன்று
ளிந்திரன்சசிதன்னோடிலங்கியதென்னமுத்தின்
பந்தரின்சுரததூலின்படிநலக்கலவிசெய்தான். 4

நிலக்குறும்பறுத்துச்செங்கோனிறுத்தியசுயோதனற்கே
யலக்கரவரசன்பெற்றவணங்கரம்பையரின்விஞ்சுந்
தலக்கமுற்றுயர்ந்தபானுமதிவயிற்றோன்றினார்க
ளிலக்கணகுமரன்றன்னோடிலக்கணையென்னுமாது. 5

பானலேவள்ளையாம்பல்பகழிவிற்குமிழீதெல்லாம்
வானிறைமதியின்மீதின்வயங்கியமாட்சிபோல
வானனமிலங்குகின்றவணங்குயாரம்பைநாணுந்
தேனுறுமொழிகொள்கஞ்சத்திருமகளெழிலையொப்பாள். 6

காந்தளைநிகர்த்தகையாள்கழையெனவயங்குதோளாள்
பாந்தளினல்குலாள்செம்பவளம்போலிலங்குவாயாள்
மாந்தளிர்மேனியாள்சீர்வடவிலைவயிற்றாளுங்கார்
நாந்தகநயகியாடன்னடையினாலனத்தைவெல்வாள். 7

இந்துவின்வதனத்தாண்மாநதியினீர்ச்சுழியீதென்னு
முந்தியாள்கதலிநாணுமூருவினுருவமிக்கா
ணந்தெனுங்கழுத்தாள்கோங்கின்முகைநிகர்நகிலாணீலக்
கந்தரமனையவைம்பாற்கொடியிடைகமலத்தாளால். 8

இந்திரையெழிலுக்கொத்தவிலக்கணையென்னுமாந்தைச்
சுந்தரஞ்செறிந்தோனெய்திவதுவைசெய்சுயம்வரத்துக்
கிந்தமாநிலத்திலுள்ளவரசர்கள்வருவீரென்றே
யந்தமன்புதல்வனுபவரசன்றூதுவரைவிட்டான். 9

தூதுவர்திசைகடோறுமெய்தியேசொல்லலோடும்
பூதலத்தரசரெல்லாம்புகரிபந்தேர்மாச்சூழ
மாதர்தந்திலகமாயவிலக்கணைவடிவைநோக்கு
மாதரம்பெருகவத்திநகரியையடைந்தாரன்றே. 10

சாம்புவன்புதல்விமைந்தன்சாம்பன்பொற்றடந்தேர்மீதிற்
காம்பினைப்பழித்ததோளாள்கமலத்தைப்பழித்ததாளா
ளாம்பலைப்பழித்தவாயாளிலக்கணையழகுநோக்கப்
பாம்புறுதுவசன்வைகும்பதியினைச்சேர்ந்தானன்றே. 11

வித்திலம்வயிரம்பச்சைநீலநற்பதுமராகம்
வித்துருமங்களெல்லாம்விளங்கியதூணோர்கோடி

வைத்தமண்டபத்திலங்குமடங்கலாசனத்தின்மீதி
னத்தினபுரியையாளுமரசர்கோனிருந்தானம்மா. 12

சவரிகளசையத்தாரக்கவினுறுங்கவிகையோங்க
நவமணிக்கிரீடமின்னநானமெய்கமழப்பாரி
னுவமையில்கலன்வில்வீசவுரகமீதுயர்த்தகோமான்
றவமுறுவிபுதர்கோமான்சரியெனவிருந்தான்மாதோ. 13

வீமன்விதுரன்கன்னன்வேதியன்சிறுவன்சிந்து
நாடுறுமன்காந்தாரன்பகதத்தனவையின்மாலை
சூடியபூரிபூரிச்சிராவெழிற்சோமதத்த
னாடரவுயர்த்தகோமானருகினிலிருந்தாரன்றே. 14

வினைமலிந்துயர்ந்ததுச்சாதனனெனும்வீரன்றன்னோ
டனுசரெண்மருங்குஞ்சூழவரசர்கண்மகிழ்ந்துநிற்ப
வனிதையர்குழாங்கள்பல்லாண்டிசைத்திடமறையோரெல்லா
மினியதாமாசிகூறவிருந்தனனிராசராசன். 15

போரிடையதிசரானபுரவலர்பரிவாற்பெற்ற
வேருறுகுமரரெல்லாமிருமருங்கிலங்கிநிற்ப
வாரமார்கலன்கண்மின்னவாடகவாடைதோன்ற
மாரனும்வெள்கநின்றான்மாயவனருளுஞ்சாம்பன். 16

இலங்கிடுகுமரரெய்தியெழிலுறநிற்குமெல்லைக்
கலன்கண்மெய்யிலங்கமாழைக்கலிங்கமென்மருங்கிற்றோன்ற
வலங்கலைக்கரத்தினேந்தியிலக்கணையவையினுள்ளே
துலங்குமிந்திரைபோலெய்திச்சுயோதனனருகினின்றாள். 17

மாவடுவகிர்நாண்கண்ணிவடிவினைநோக்கியுற்றே
கோவிளங்குமரரெல்லாங்குறித்திருகண்ணுநோக்கி
யாவியுஞ்சிந்தைதானுமவள்வயினெய்தவேதா
மோவியம்போலநாட்டமிமைக்கிலாதுருகிநின்றார். 18

ஆடரவுயர்த்தகோமானன்பிற்றன்மகளைநோக்கி
யேடவிழலங்கனின்றன்னெழினிகர்மகுணன்றோளிற்
சூடுதியென்னலோடுந்தோடுகோதாடத்தூய
வாடகவாடைதோன்றவனமெனவவையின்வந்தாள். 19

அரசர்தம்மவையுளெய்தியரவிந்தமடந்தைபோலச்
சரிகரத்திலங்கத்தாளிற்சதங்கைநூபுரங்கள்கொஞ்ச
விரைவினிலெய்திச்சாம்பன்றோண்மிசைவிரைகொண்மாலை
பரிவுடனணிந்துநின்றாள்பாவையர்திலகமன்னாள். 20

வேறு.

நாம்புறுமதியினலங்கிளர்நுதலுநாந்தகநயனமுங்கூம்பா
வாம்பலுள்ளாரமலர்பரந்தெனவேயதரமுமூரலும்வயக்கச்

காம்புயர்தோளின்றொடிகையுந்தயங்கக்காந்தளேய்கரத்தினினலங்கல்
சாம்பன்வல்லுரத்தினணிந்துளமகிழ்ந்தாள்சர்ப்பகேதனன்றருதனயள்.

வேறு.

தெரிவைசாம்பன்றன்றோளிற்றெரியலையணியக்கண்டே
யரவுயராசனெஞ்சமழன்றெண்ணினரிவைமைந்தன்
புரவலரவையுளச்சமொருவியேபோந்தான்றன்னை
விரைவினிற்பற்றுமென்னவெகுண்டனர்வீரரெல்லாம். 22

வேறு.

முரசுதுந்துமிகள்வளைமுழங்கியிடமுரணுறுங்கரியினிரைகொடே
யரசரெண்ணிலர்களடுசினங்களுடனுலகாலமெனவடரவே
புரிசைவிஞ்சியுறுதுவரைமாயனருள்புதல்வனுமிவருசாம்பனும்
வரிசைமன்னுமணியிரதமேறிவளையூதிவாளிகள்பொழிந்தனன். 23

வாள்வைவேலுடனுலக்கைதோமரமுசுண்டிமாவலயம்வீசியே
மீளியாமெனவெகுண்டுமென்னவர்கள்விசிகமாமழைகள்பொழியவான்
காளமாமுகினிகர்த்தமாயனருள்குமரன்வெங்கணைகடாவலு
நீளுமாகரிகளிவுளிவீரரொடுநிருபரெங்கணுமடிந்தனர். 24

கரங்களற்றுயர்விலற்றுமார்பினுறுகவசமற்றிரதமற்றுமாச்
சிரங்களற்றுநிலமேன்மடிந்தனர்களரசர்சீறுகரியினமெலா
மரங்களற்றவரைபோலவெங்கணுமுருண்டசெங்குருதியோடியே
தரங்கமுற்றகடலுற்றவெண்ணிலகவந்தமாடியனதாவியே. 25

கோடுடைக்கரியைவென்றமாயனருள்குமரன்வெங்கணைகடாவவே
யாடல்வெங்கரிகளுருளமாவயவர்மடிதல்கண்டரசரோடலும்
வீடுமன்விதுரன்வேதியன்சிறுவன்வெய்யவனருளுமைந்தன்வான்
மூடவெங்கணைபொழிந்தெதிர்த்தனர்கண்முரசுதுந்துமிமுழங்கவே. 26

வந்தெதிர்ந்துகணைசொரியும்வில்விதுரன்வீடுமன்மறையவன்சுத
னந்தகன்னெனவடர்ந்துசீறிவருமங்கராசனிவரைவர்தே
ருந்துவெம்பரிகளோடுபாகனிறவுலகுணேமிதனயன்கணை
சிந்திமற்றவர்கள்சிலையறுத்திடலுமோடினர்கடிசைதோறுமே. 27

வேதியன்சிறுவன்வீடுமன்விதுரன்வெய்யவன்குமரனிவர்கடாம்
பீதிகொண்டிரிதல்கண்டுகண்கனல்பிறந்திடுஞ்சகுனிபூரியோ
டேதமற்றபகதத்தனோடரவுயர்த்தகோவினிளையோனரு
ணீதியற்றறனில்சிந்துநாடனொடுநிருபரெண்ணிலர்நெருக்கினர். 28

சிலைவளைத்தரசரிறுதியிற்பெயுஞ்செல்லெனக்கணைகள்சிதறவே
யலைவளைத்திமளக்கரிற்றுயிலுறந்தவச்சுதனருட்சுதன்
கொலைவளைத்தகரிகோடிவீடவுயராசைதோறுமிகுகொற்றவர்
தலைவளைத்திடமுனிந்துசாயகம்விடுத்தனன்றனுவளைத்தரோ. 29

கஞ்சமாமலைவனைத்தமாயனருள்குமரன்வெங்கணைகடாவவே
விஞ்சுமாகரியுலப்பிலாவிவுளிவீரரெங்கணுமடிந்திட

விஞ்சிசூழ்நகரவீதிதோறுநிறைகுருதிவாரியெனவேகலு
மஞ்சியோடினர்கள்சிலையறச்சகுனிசிந்துநாடன்முதலனைவரும். 30

திரிபுரத்தையெரிசெய்தநின்றசிவனொத்தமாயனருடிருமக
னரவுயர்த்தவன்விடுக்கவந்தடரனீகமெல்லவும்வதைத்திட
வெரிசினத்தின்வருமங்கர்பூபதியெழிற்றுரோணனுயர்வீடுமென்
வரிசிலைக்கையின்வளைத்துவாளிமழைதூவியேவளைகளுதினார். 31

மாதவன்னருள்குமாரன்வெஞ்சிலைவளைத்துவாளிகள்விடுத்துயர்
வேதியன்கைவிலறுத்துவீடுமென்விளங்குதேரினையழித்துவா
னாதவன்னருளுமங்கராசன்மெய்யழுந்தவாசுகசிறத்தவே
பூதலத்துறமிரதமீதினின்மயங்கினானிரவிபுதல்வனே. 32

ஊறுசெங்குருதிவரையின்மீதிழியுமருவியென்னநிலனோடவே
தேறினானிரவிசிறுவன்மாயனருடிருமகன்றனொடுசீறியே
நூறுமாயிரமுமெய்துவாளிகளொடிப்பினெண்டிசைமறைத்திட
மாறில்சாம்பவதிமைந்தன்வெம்பகழியெய்தறுத்துவளையூதினான். 33

பரிதிமைந்தன்விடுபகழியெல்லவுமறுத்துநின்றபரமன்சுதன்
பொருதவீரமதுகண்டுகெண்களனல்பொங்கவேயரவுயர்த்தகோக்
கிருபன்வேதியனல்வீடுமென்சகுனிகிரியையொத்தபகதத்தன்மா
கிருபரெண்ணிலர்களுடனுமெய்தியுயர்வாளிவிட்டெதிர்நெருக்கினான். 34

உரகமுற்றதுவசத்தன்வந்தடரவுலகுணேமியனருள்சுத
னெரிகனற்கணைவிடுத்துமாகரியோடெண்ணில்வீரரைவதைத்துமா
குருகுலத்தரசன்வரிவிலோடுகொடிகுடையறுத்திடலும்வெருவியே
யரிமுனேகடுகியோடுமும்பலெனவோடினானரசரஞ்சவே. 35

பங்கமெய்திடவிராசராசனுயர்படியின்மீதுகடிதோடலு
மங்கராசனொடுவீடுமென்சகுனியந்தணனரசரனைவருஞ்
செங்கண்மால்சிறுவன்மேனியிற்குருதிவீழவெங்கணைகள்சிதறிவெண்
சங்கமூதினர்வளைத்தடர்த்தனர்கடானையெங்கணுநிறைந்திட. 36

வாசவன்விபுதர்முனிவரஞ்சியிடமன்னர்வெஞ்சிலைவளைத்துமா
வாசுகங்கள்விடவச்சுதன்சுதனழன்றுவானமொடுதிசையெலா
மோசையுற்றிடவின்னாணெறிந்துபலபகழிதூவிவளையூதினா
னாசமுற்றனர்கள்வீரரெங்கணுநடித்தவெண்ணிலகவந்தமே. 37

சேரன்றனயன்வென்றுநின்றதிறல்கண்டுசீறியமனத்தினோன்
வேதியன்முடுகிவில்லறுத்திடலும்வீடுமென்கொடியறுத்தன
னாதவன்சிறுவனுரகவெங்கணைகொடச்சுதன்னுதவுகுமரனைப்
பூதலத்திடைபிணித்தனனுவகைபொங்கிமன்னவர்களார்ப்பவே. 38

வேறு.

மந்தரநிகரெண்டோளின்மறுப்பினையிறுத்தோன்மைந்த
னிந்திரன்றன்னைமுன்னாளிருந்தலையிட்டபோன்றே

யந்தகனைனயகன்னனரவினற்பிணித்துக்கட்டச்
சுந்தரச்சாம்பன்றன்னைச்சுயோதனனேமஞ்செய்தான். 39

இவையெலாமுணர்ந்தநாயயாழ்முனிதுவரைக்கேகி
யுவமையிலரிதன்றோடேயுணர்த்துவானுன்றன்சேயாங்
கவினுறுஞ்சாம்பன்றன்னைக்கணவனுய்க்கருத்தினுன்னி
யவையினிலலங்கறன்னையிலக்கணையவன்றேளிட்டாள். 40

தொடையினைவிரைவிற்சாம்பன்றேண்மிசையரிவைசூட்டப்
படவரவுயர்த்தகோமான்பணியெனமுனிந்துநோக்கி
வடிவுடையவன்முனெய்தினின்றமாயவன்சேய்தன்னைக்
கடிதினினரசர்பற்றிக்கடுஞ்சிறையிடுமினென்றான். 41

அரசர்தேர்கரிமாச்சூழவலைகடலஞ்சவார்த்துப்
பொருதவரனிகமெல்லாம்பொடிபடநொறுக்கிச்சாம்பன்
விரைவினிற்பரிதிமைந்தன்வீடுமன்முதலாம்வீரர்
தரையினின்வென்னிடோடத்தழலுறுவாளியெய்தான். 42

ஆம்பரிசுணராநாகத்துவசத்தோனடர்ந்துசீறத்
தாம்புறுதடாகஞ்சூழ்நாட்டங்கர்கோன்சுடிகையோங்கும்
பாம்பினிற்சாம்பன்றன்னைப்பற்றியேசிறையில்வைத்தான்
கோம்பியாநிருகன்சாபநீக்கியகோவேயென்றான். 43

சுரர்முனிசாம்பன்றன்னைச்சுயோதனன்சிறைவைத்தானென்
றுரைசெயக்கேட்டமாயனூழித்தீயெனவேசீறி
விரைவினிற்றேரினேறிச்சேறலும்விலக்கிமுன்றே
னரவுயர்துவசன்பேரிற்சினமின்றுமகற்றுயென்றான். 44

பொருகரிபரிசூழத்திப்புரியிடையானேயெய்திக்
குருகுலமகிபன்பெற்றகுமரியையெண்கின்பாவை
திருமகன்றனக்கேகோலவதுவைசெய்வித்துமீள்வ
னிருகன்வெஞ்சாபநீக்குநேமியாயென்றுபோனன். 45

உத்தவனுடனேவானிறுடுசிறைமதியின்வண்ணன்
சித்திரமணித்தேர்மீதிற்றெரிவையர்கவரிவீசச்
சுத்தவொண்கலன்கண்மின்னத்துந்துமிமுழங்கவேகி
யத்தினபுரியின்வேறேரரிமலர்ச்சோலைபுக்கான். 46

நத்துறுவண்ணன்யானீண்டிறுத்தமைநவினீயென்ன
வுத்தவன்விரைவினெய்தியுரககேதனனுக்கோத
யத்தினபுரியையாள்வோனங்கர்கோன்சகுனிபின்றேர்
மைத்துனன்மறையோன்வானநதிமகன்சூழவந்தான். 47

சேலமில்சுயோதனன்றான்சிறந்திமேரசரோடுஞ்
சோலையின்விரைவினெய்திச்சுடர்முடிமகுடமின்ன
மாலின்முன்றேனையன்பாற்றழுவிமன்னவர்கள்சூழக்
கோலமுற்றிருந்தவெல்லையலாயுதக்கோமான்கூறும். 48

வடிவினையுடையபானுமதியருண்மைந்தனோடும்
படியினிற்செங்கோலோச்சிப்படவரவுயர்த்தகோவே
யிடரறச்சுகத்தினெய்தியிருந்தனைகொல்லோவென்றே
யிடனுடையலாயுதத்தோன்பின்னரும்விளம்பலுற்றான். 49

அரசர்தம்மவையினுள்ளேயிலக்கணையன்பினோடுந்
தெரியலைச்சாம்பன்றாளினணிந்திடச்சீறியேநீ
கரிபரியிரதஞ்சூழக்கடுஞ்சமர்செய்தேயெண்கு
தருமினுடனயன்றனைத்தளையினிலிறுத்தினாயாம். 50

சுரர்முனிதுவரைக்கெய்தியிவையெலாஞ்சொல்லலோடு
முரனுடன்செங்கோலோச்சுமுக்கிரசேனமன்னன்
விரைவினின்மணித்தேரேறிவெருண்டவன்வருதலோடுந்
திருமகள்கொழுநன்றன்னோடியானவன்சினத்தைத்தீர்த்தேன். 51

விரைவினின்யானேசென்றுவிடவரவுயர்த்தோன்பெற்ற
வரிவையையெண்கின்பாவையருள்சுதன்றனக்குவேட்டு
வருவனென்றுன்பால்வந்தேனென்னக்காந்தாரிமைந்த
னிரவிதன்சிறுவன்றன்னோடிருகரம்புடைத்துநக்கான். 52

சகுனிதுச்சாதனன்சீர்சற்றுமில்சிந்துநாடன்
மிகநகைத்துரைக்கலுற்றார்விளங்குசிங்காதனத்தி
னிகரிலாக்கிரீடந்தாங்கிநிருபனாயிருக்கைகேளோ
மிகழ்வுறவிருத்தனாய்வாழுக்கிரசேனனென்றார். 53

வரிசிலைபிடிக்கும்வண்மைவல்லனோகேளீரென்பார்
கரிபரியிரதமூருங்கல்வியுமுளனோவென்பார்
திரைசெறிகடலூரோவியுக்கிரசேனன்சீறி
விரைவினினகரத்தெய்தினென்செய்வோம்விளம்புமென்பார்.

நரிவரிலரியினங்கள்வெருவுமோநன்றிதென்பார்
கரியினங்கரத்தைக்காணிற்கலங்குமீதுண்மையென்பார்
வரிசிலைமறையோன்கங்கைமகனிவர்தடுக்கநில்லா
தொருவரையொருவர்நோக்கியுருமெனநகைத்தாரன்றே. 55

அரவமர்துவசன்றுச்சாதனனங்கர்தேயமாள்வோன்
வரைநிகர்சிந்துநாடன்மறனுறுசகுனிமற்றும்
புரவலராயினார்கள்போசனையிகழ்ந்துகூறி
விரைவினிலெய்தித்தம்மனைதனிலெய்தினாரால். 56

நிந்தைகள்பலவுங்கூறிச்சுயோதனனிருபரோடு
நந்தல்வந்துறவேசோலைகடந்துபோய்நகரினெய்தச்
சிந்தையிற்கனன்றிவ்வூரைச்சிந்துவினிடுவேனென்று
யிந்துவின்வண்ணநம்பியலாயுதமெடுத்தானன்றே. 57

உத்தரதிக்குத்தாழ்வொருகோடியிடுவமுன்னங்
கைத்தலத்தலாயுதத்தாற்கடுஞ்சினத்துடன்பால்வண்ண

னத்தினபுரியைப்பேர்க்குமளவினிலளப்பிலாத
சித்திரச்சிகரமெல்லாமிடிந்தனவீதிதோறும். 58

கொடியுறுமாடநீடுகோபுரங்கூவந்தோறும்
பொடிபடவிடிந்துவீழ்ந்தபுகரிபம்வெருவியோடப்
படிமிசையரசரெல்லாம்பருவரலுடனேபாறத்
துடியிடைமடந்தைமார்கடுனியொடுங்கலங்கிவீழ்ந்தார். 59

ஆடரவுயர்த்தகோவோடரசர்கள்வெருவிப்பாரைச்
சேடனின்றலக்கின்றானேவென்றவர்திகைக்கும்வேலை
வீடுமெனிராமனிந்தப்பதியினைக்கடலின்வீழ்ப்பான்
பீடுடையலத்தைக்கொண்டுபோக்கின்றானென்றுசொல்வான். 60

உக்கிரசேனன்றன்னைநீயெள்கியுரைக்கையாலே
சக்கரன்முன்னோனிந்தப்பதியைச்சாகரத்தின்வீழ்ப்பான்
விக்கிரமத்தினேடும்வெகுண்டலாயுதத்தாற்பேர்த்தா
னிக்கணத்தெறிதன்முன்னமவன்சரணடைவாயென்றான். 61

பகிரதிமைந்தன்கூறப்படவரவுயர்த்தவேந்தன்
மிகமெலிந்தெழிலார்பானுமதியுடன்விரைவினெய்திப்
புகழுடையிராமநம்பியடிமிசைப்பணிந்துபோற்ற
நகையுடனலாயுதத்தோனவனொடுநவில்வதானுன். 62

மதியுறுவதனத்தாளுன்மகளிலக்கணையாமாதைத்
ததிகளவாடுமாயன்றனயனுக்கின்றென்முன்னர்க்
கதுமெனவதுவைசெய்தியலாதெனிற்கலப்பையாலே
யுததியினின்னூர்தன்னையிடுவெனென்றுரைத்தானன்றே. 63

மதிவணன்மொழியக்கேட்மோசுணமுயர்த்தவேந்தன்
சுதைதருமொழியளாயவிலக்கணைதன்னைத்தூய
விதியினைப்பயந்தான்பெற்றவீரியன்றனக்கீந்தேனென்
றுதகஞ்செய்திருவர்தம்மையொருதவிசிடையின்வைத்தான். 64

அருமறையவர்களெல்லாமாகுதிசெய்யச்சாம்பன்
றெரிவைதன்கந்தரத்திற்சிறந்தமங்கலநாண்சாத்தி
யரிவைதன்னுடனேதீயைவலம்வரவம்மிமீதின்
மருவமர்குழலிகாலான்மிதிக்கவான்வடமீன்கண்டார். 65

மதிமுகம்வயங்குகின்றவிலக்கணையென்னுமாதைச்
சதுமுகன்றந்தைதந்தசாம்பனுக்கீதலோடுங்
கதமொழிந்தவனிதன்னைப்பேர்த்திடுங்கலப்பைவாங்கி
யதிரதர்குழாங்கள்போற்றவரிமுனோனுவந்துநின்றான். 66

வேறு.

பரியினஞ்சதவாயிரம்பருப்பதநிகராங்
கரிகளும்பன்னீராயிரங்கனகமாமணிசே

ரிரதமோருபத்தாயிரமீரைந்துநூரு
மரிவைமாருடனீந்தனனரவுயர்துவசன். 67

குருகுலத்திறையளித்திடுக்குரகதங்கரிதே
ரிருமருங்கினுநெருங்கிடவிலக்கணையுடனே
யரியருள்சுதன்வயங்கிடவரசர்கள்போற்றச்
சுரர்துதித்திடவலாயுதன் றுவரையிற்புக்கான். 68

மாயனெய்தியேமுன்னவனடிமிசைவணங்கத்
தூயசாம்பனந்தகன்மகனருள்சுதையுடனு
நேயம்விஞ்சிடங்கரிலாமுராரியையிறைஞ்சித்
தாயரைப்பணிந்தெழுந்துவேடாளினிற்பணிந்தான். 69

சுந்தரஞ்செறிசுயோதனன்மகளுடன் சாம்பன்
சிந்தையின்மகிழ்ந்தோதனமருந்தியேசிறந்த
சந்தணிந்தின்பமாகியசாகரந்தழைப்ப
விந்திரன்சசியொடுமிலங்கியதெனவிருந்தான். 70

அத்தினபுரத்தைப் பேர்த்த படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 1498.

---

104 - வது, வாணாசுரப் படலம்.

வீணைசேர்கரத்தாள்கனவினிற்கண்டவேளருள்குமரனைத்தோழி
சேணினோர்நொடியிற்கொணர்ந்திடவசுரன்றிருமகள்கொங்கையிற்சேர்ந்
பேணலார்மடியச்சமர்பொருதரவிற்பிணிப்புண்டபேரனுக்காக [தே
வாணனுயிரந்தோளெணித்தருடிருமாலடியிணைவணங்குவாமன்னே. 1

தன்னுடைப்பெயரெவ்வுலகெலாமுரைப்பச்சங்கரன்முராரிபேர்த
விர்த்தே, யன்னவென்னுறுவோனமரர்கோன்முதலோரஞ்சிடவரியிலே
யென்றே, மின்னியமணித்தூண்மிசையறைந்ததனில்வயங்கியமீளியான்
மாண்ட, பொன்னவன்சுதனும் பரமபாகவதன் புத்திரன்விரோசனுமவு
ணன். 2

அவுணனும்விரோசனருளுமாவலிமாலிரந்திடமூன்றடியளித்த
தவனுவந்தளித்ததனயர்நூற்றுவர்க்குந்தலைவனுய்ச்சனித்திடும்வாண
னவமணிக்கடகமிலங்கியகரமோராயிரம்வயங்கநற்கயிலைச்
சிவனடிநினைந்தேயிலிங்கமைந்நூறுதினந்தொறுமருச்சனைசெய்வான். 3

அஞ்செழுத்தைத்தன்னெஞ்சினிலழுத்தியளப்பறுமருந்தவம்புரிந்தே
விஞ்சியவாணசுரன்களிப்பெய்தவிழுமியநீறுமெய்க்கணிந்து
பஞ்சின்மெல்லடியாளுமையிடப்பாகம்வயங்கிடப்பரவையினெழுந்த
நஞ்சினைநுகர்ந்துதிரிபுரமெரியநகைசெய்கங்காதரன்வந்தான். 4

தேவர்கடொழவேவிடையினின்வயங்குசிவனுயர்வாணனை நோக்கி
யீவனுன்மன துக்கிச்சையாம்வரத்தையியம்பெனவென் னுடன்சினத்துப்
பூவினிலயனைப்படைத்தவன்பொரினுநீயுந்தன்புதல்வரோடெய்திக்
காவெனையெனவேமொழிந்திடவதற்கங்கிசைந்தரன் கயிலையிற்போனான்

இந்திரன கரியெனவிலங்கியசோணிதபுரத்திருந்துகும்பாண்ட
மந்திரியுடனுமகிழ்ந்துலகாண்டுவயங்கியவாணன்வானவர்கள்
சிந்தையிற்கலங்கியிரிந்திடப்பொருதுதிசைதொறும்புவியினைச்சுமக்குந்
தந்திகள்வெருவியுடைந்திடத்துரந்துதாரமார்கயிலையிலடைந்தான். 6

உமையிடைப்பாக னடிமிசைவணங்கி யுரைசெய்வான் வாணனென் னுடனே, சமர்பொருதிறலோ ரிலாமையாலென்கை தினவுறத்தரிக்கி லேனதனு, லிமையவர்வெருவக் கவந்தநின் ருட வெங்கணுங்குருதிநீர்பெ ருக, வமர்பொருமவரை யருளெனநகைத்தே யந்தகாந்தகனிவை யறைவான். 7

கடகரியிவுளி கனகமாரிரதங் காதியேகவந்தநின்ருட, மிடலுடை வயவர் மிடைந்துவெம்போர்க ளுன்னுடன்விளைத்திடுங்காலந், துடிகை சங்கிடக்கை துந்துமிமுழங்கு சோணிதபுரத்தினிற்சிகரக், கொடிதுணிந் தவனி மிசைவிழுந்திடுநாட் குறுகுமென் றரன்மொழிந்தனனால். 8

அரனிவைமொழியமகிழ்ந்திடுவாணனசுரர்கள்குழாம்புடைசூழ
விரைவினிரதமிசையினினெய்திவிளங்கியசோணிதபுரத்திற்
கிரியிவர்சிகரங்கிளர்ந்தமண்டபத்திற்கிரீடசேகரம்வயங்கிடநற்
றெரிவையர்கவரியசைத்திடமணியாற்சிறந்தசிங்காதனத்திருந்தான். 9

வரைநிகரெனவேவயங்குகும்பாண்டமந்திரியுடன்மகிழ்வாணன்
கரமொராயிரமுமிலங்கிடக்கலங்கள்கவினுறவிருந்துழிக்கவினார்
சுரருலகளவாய்த்துலங்கியதுவசந்துணிந்துதன்முன் விழக்கண்டு [ன்.
செருவருதினந்தான்சேர்ந்தனவென்றே சிந்தையின்மகிழ்ந்துரைசெய்வா

சிவனடியிறைஞ்சியென் னுடைப்புயத்திற்றினவறச்செருச்செயவொன்று
ரவனியினெதிர்வாருளனவுரைப்பவதற்கரன்சோணிதபுரத்திற்
றுவசமற்றுன்முன்விழுந்திடிற்சமரந்தொடரவேவருமெனவுரைத்தான்
குவடெனநிகர்த்தோளுடையகும்பாண்டவுணர்திநீயென் றுகூறுவனால்.

விடையுடைவிமலனருண்மொழிவழியின்விண்டலமிசையினினுயர்ந்த
கொடிதுணிந்தவனின்விழுந்ததுசமரங்குறுகியதறிதிகும்பாண்ட
கடகரிபரிதேர்கதமுறுமசுரரணிவகுப்பாயெனக்கழறிக்
குடையொளிதிகழத்துந்துமிமுழங்கவாணன்றன்கோயிலிற்புக்கான். 12

வேறு.

உரனுறுவாணனல்குமுடாங்கனையென் னுமங்கை
விரைபுரைபுயல்வேல்வள்ளைவிற்குமிழாம்பனந்து
கரியிருகோடுகொம்புகாந்தண்மின்கதலிநள்ளி
மரைமலரிவையைத்தாங்குமாழையின்கொம்புபோல்வாள். 13

உருவினிலெவருமொவ்வாவுடாங்கனையுவப்பினாலே
யரனுறுகயிலையெய்தியம்பிகைதனையிறைஞ்சிச்
சரியிலேழிசைகொள்வீணைதரளவெண்ணகையாளோதித்
தெரிவையர்திலகமென்னத்தினந்தொறுமகிழுநாளின். 14

செம்பொனின்மணிகளான்றுசிறந்தமாமண்டபத்தின்
வம்பவிழலங்கனுலமாழைசால்விதானமோங்க
வம்பிகையுடனேநம்பனமர்ந்திடவாணனல்குங்
கம்பெனுங்கிரிவத்தாள்வெண்கவரிகையசைத்துநின்றாள். 15

வித்துருமத்தினோடும்விளங்குமாமரகதம்போற்
சித்தசன்றன்னைக்காய்ந்தோன்சிறந்திடவிமவான்பெற்ற
வுத்தமியுடனுந்தோன்றவுடாங்கனைவிரகமுற்றே
யெத்தினத்தெனக்கோர்கொண்கன்வருவனென்றெண்ணினாளால்.

மனமுறவருந்திவாணன்மங்கைதான்விரகமுற்ற
நினைவினையறிந்துநம்பன்றேவிசொணிகழ்த்துவாணின்
கனவினேர்குமரன்றன்னைக்காண்குவையவனேயெய்தி
யினிமைசேர்கொழுநனாகியணைகுவனுன்னையென்றாள். 17

கடகரியுரியைப்போர்த்தோன்காதலியிச்சொற்கூறி
விடைகொடுத்தருளலோடுமுடாங்கனைவிரைவிற்சென்று
துடிகைகாகளங்கள்சின்னமுழங்குசோணிதபுரத்திற்
கொடிககனத்திலோங்குந்தமனியக்கோயிற்புக்காள். 18

வித்துருமங்கணீலமரகதம்விளங்குதூண்கள்
பத்திசெய்திலங்குகின்றபசும்பொனின்மண்டபத்தி
னித்திலவிதானமோங்கநிகரிலாச்சேக்கைமீதி
னுத்தமவடிவின்மிக்கவுடாங்கனைதுயிலுங்காலை. 16

ஓவியப்பாவைபோலவுடாங்கனைதுயிலும்போதிற்
காவினேர்குமரனெய்திக்கருங்குழன்மிசையிற்காவிற்
பூவினைச்சூட்டக்கண்டுபொருக்கெனவிருகையார
வாவலிற்கொங்கைமீதிலணைத்தவள்விழித்துப்பார்த்தாள். 20

தன்னெழில்வடிவுக்கொத்தகாந்தனைத்தன்கையாரக்
கன்னறேன்மொழியாளன்பாற்றழுவிக்கண்விழிக்கக்காணா
தின்னலிலழுங்கித்தூயவிருவிழியருவிசோர
வன்னமென்னடையாளாகமனலுறவறைகின்றாளால். 21

துய்யமன்மதன்றான்றந்ததோன்றலைக்கனவிலேயென்
கையினிலிறுகப்புல்லுங்காலையில்விழித்தேயெந்தன்
மெய்யினைக்கரைத்தேகண்ணேவிளங்கநின்னிடத்திற்றீட்டு
மையினைக்கரைத்துநீயீண்டமுகின்றவாறெனென்றாள். 22

சுழித்திடுங்கங்கைவேணிச்சோதிதன்குமரன்றன்னைப்
பழித்திடுமுருவினானைப்பரிந்துநானனைக்குமுன்னர்

விழித்தகண்ணிரங்குகின்றாய்விழுமியோர்தமக்குத்தீமை
யிழைத்தவரிடருறாமலிருப்பரோவென்றுசோர்ந்தாள். 23

விரைகமழுமளிமிதின்வயங்குமின்னிடையாடன்னை
யரிவையரணைத்துமெய்யினிமசலமடர்ந்துவீசச்
சுரிகுழன்மடவாடேற்றதுய்யகும்பாண்டன்பாவை
தெரிவையர்திலகமன்னசித்திரலேகைசேர்ந்தாள். 24

சித்திரலேகையெய்திச்சிறந்திடும்வாணனல்குந்
தத்தையின்மொழியினாளைத்தழுவிநீதளருந்தன்மை
யெத்துயரதனால்வந்ததியம்பெனவிசைத்தலோடு
நித்திலநகையளாயவுடாங்கனைநிகழ்த்தலுற்றாள். 25

என்னுயிர்த்துணைவிகேளாயான்றுயில்கொள்கனவிற்
கன்னலஞ்சிலையினானேகயிலையோன்குமரன்றானோ
பன்னகப்பாயலானேபகரொணாக்கவின்கொண்மெய்யன்
றுன்னியவெழிற்பூங்காவிற்றோன்றியேயென்முனின்றான். 26

கருமுகிலனையமெய்யன்கமலம்போலிலங்குகண்ணான்
வரையினைநிகர்த்ததோளான்மதியைநேர்வதனச்செல்வன்
றரளவெண்ணகையன்முந்நூற்றரித்திடுமுரத்தன்வானி
னிரவிநேர்கலன்கள்பூண்பான்யாவனோவறியேன்றோழி. 27

வந்துமுன்னின்றுகாவின்மலரிணைக்குழலிற்சூட்டிச்
சுந்தரஞ்செறிந்தமெய்யாற்றுலங்கியநகையாலெந்தன்
சிந்தையுமுயிருங்கொண்டசெல்வனையணைத்துத்தூய
விந்திரகோபமன்னவிலவிதழமிர்தின்றுண்டேன். 28

துய்யசுந்தரனையென்றன்றுணைநகிற்றடத்திற்சேர்த்திக்
கையினினிறுகப்புல்லிக்கலவியைவிளைக்குங்காலை
மெய்யெனக்கருதியேதான்விழித்திடவவனைக்காணே
னுய்யுமாறறியேன்மாதேயென்றபின்னுரைக்கலுற்றாள். 29

துயிலினையகற்றியின்பக்கலவியைத்துரத்தித்தூய
புயலெனுமுருவினானைப்பிரித்தெந்தனுயிர்போம்வண்ண
மயலினைநிறைத்துச்சிந்தைவருந்திடவிழித்துப்பார்த்த
நயனநமுள்வினையதானான்செய்வதிங்கேதென்றாள். 30

துயிலினிற்கொழுநன்றன்னைக்காண்பனோவென்றுதுய்ய
நயனநான்முகிழ்த்தினாலுங்காண்கிலேனாரமோவுங்
கயலெனப்படைத்தென்னுள்ளங்கலங்கிமெய்கனலதானே
னுயிரினியுடலிற்றங்காகாண்டியென்றுரைத்துச்சோர்ந்தாள். 31

உயிரிலையென்னச்சோர்ந்தவுடாங்கனைதன்னையன்னச்
செயலுறுநடையளாயசித்திரலேகைநங்கை
கயிலெடுத்தணைத்துவாசவிமசலங்கலவைகோட்டி
யுயர்வினையொழித்துத்தேற்றிப்பின்னிவையறையலுற்றாள். 32

வனசமன்னுலகெண்டிக்குளுறைகுவோர்மண்ணினுள்ளோ
ரனைவரினெழில்சேர்ந்தாரையானறியாததில்லைக்
கனவிலுன்முன்னரெய்திக்கலவிசெய்தகன்றான்றன்னை
வனிதைநீகாண்டியென்னவரைந்தனள்படத்தின்மீதே. 33

சித்தசனியக்கர்சித்தர்வித்தியாதரர்கடேவர்
நத்துறுகரத்தன்வானோர்நாயகனுமையாளீன்ற
வித்தகன்முதலினோரைவிளங்கிடப்படத்தினோக்கி
யித்தனைபேரில்யான்காண்குரிசிலைக்காணேனென்றாள். 34

வேறு.

இன்னலிலாதுயர்சித்திரலேகை
நன்னிலமெய்நெறிநண்ணிடவாழு
மன்னவர்தம்மைவரைந்திடலோடு
மன்னவரன்றெனநோக்கினளன்னம். 35

துவரையின்மதனருள்சுதனெழில்பார்த்தே
குவிமுலைமீதினணைந்துயிர்கொண்டா
னிவனிவனிவனிவனிவனென்றே
யுவமையின்மாதுவருந்தியுரைப்பாள். 36

கனவினிலென்னையணைத்திகெள்வன்
வனிதையென்முன்னின்வரைந்தபடத்தி
னனைவரினும்முயராடவன்வாயா
வினியசொல்கூறிலனென்றயர்வுற்றாள். 37

மலரணைமீதுமயங்கியமாதை
யிலவிதழ்வாயொளிர்சித்திரலேகை
கலவையோடேபனிநீர்கவின்மெய்யி
னலனுறவீசலுநாரிதெளிந்தாள். 38

தேறியுடாங்கனைசித்திரலேகாய்
மாறில்வரைப்புயனாரிவன்மதனோ
நீறணிவோன்மகனோநெடுமாலோ
கூறெனவேருறுகொடியிவைசொல்வாள். 39

தேவகிதந்தருள்சீதரன்மைந்தன்
பூவுறுவாளியினோனருள்புதல்வ
னோவியநாணுமுருத்திகழ்வோனுன்
னாவியனானனிருத்தமனாமால். 40

வித்துருமத்தினைவென்றிடுவாயாய்
நித்திலவாணசையாய்நிகரில்லாச்
சித்தசன்மைந்தனுரத்திடைச்சேர
வெத்தனைமாதவமெய்தினையென்றாள். 41

அஞ்சலவாணன்ருள்புதல்வீநா
னிஞ்சிகள்சூழ்துவராபதியெய்திக்
கஞ்சமலர்க்கொடிபெற்றருள்காமன்
மஞ்சனுடன்வருவேனென்றுரைத்தாள். 42

நீயயராதிருநிகரின்மடந்தாய்
மாயையின்மாயன்மகன்சுதனைக்கொண்
டேயெனுமுனமிவணெய்துவனென்று
மீயுயர்வானின்விரைந்துபெயர்ந்தாள். 43

திகழ்கலனதிலொளிர்சித்திரலேகை
ககபதிவிசையினுமுடுகினள்கடல்சூழ்
சிகரமொடெயில்கள்சிறந்திடுதுவரை
நகரெழிலுேக்கினளிருநயநத்தால். 44

கடலகழாகியகவினுறுமெயில்கள்
வடவரைநிகரெனவானுறநிறையுங்
கொடியினினிரவுறவேகுருமணியின்
சுடரொளியாற்பகலாகியதுவரை. 45

புயலினையளவியபொழில்பொலிவுறவே
யயமிபமிரதமொடனிகமுமலிய
வெயிலவனெளிதருகலனதின்மிடையக்
கயனிகர்விழியினர்கவினிறைநகரம். 46

காசணிநகிலியர்கயல்விழியிலக
வூசலினெழிலுறவாடினரொருபால்
வாசமென்மலர்மலியிமசலமடவார்
வீசினராடவர்மேலுறவொருபால். 47

சுகனெனமறையறையறுதொழிலவர்கள்
மகமுடிவனசெய்துமகிழுவரொருபால்
நகில்கலனணிபவர்நாயகர்விரகச்
சிகியுறுமவரொடுசேறுவரொருபால். 48

இந்துவின்வதனியரிழைகண்மெயிலகக்
கந்துகநிலனறையுங்கவினொருபாற்
றந்திகளிவுளிகடமனியவிரத
முந்திடுகுமரர்கண்மோகமதொருபால். 49

மாதவர்விரகமுறத்தணிமடவார்
கீதநல்வோசைகினத்துவரொருபால்
காதலினுலுயர்கணவனிடைக்கே
தூதினையேவிடுதோகையரொருபால். 50

கோடுகெடாரைகள்கொம்புகள்வாரான்
மூடியபேரிமுழங்குவவொருபா

னூடியமாதர்கள்விரகமுளூறவே
கூடுவோராற்பிரிகொண்கலரையொருபால். 51

இவ்வெழிலுறுதுவராபதியிலகச்
செவ்விதழ்வாயினன்சித்திரலேகை
நவ்வியொண்விழியினினோக்கியிந்நகர்போ
லவ்வியமகல்புரியிலையெனவறைவாள். 52

ஏசறுதுவரையினெழிலினைநோக்கி
வாசவனகரள்காபுரிமலரோ
னாசகல்பதிமுதலாநகரெல்லா
மாசுறுமெனுமுரைகூறிமகிழ்ந்தாள். 53

இனையனகூறியசித்திரலேகை
வினையறுதுவரையினெய்திடும்வேலை
தினகரனவிர்குடதிசையினின்மறைய
நனியிருள்பரவினநாலிருதிசையும். 54

வேறு.

பகலவன்குடதிசைப்பரவைமூழ்கவே
யுகவிறுதியினடருமையினாயகன்
புகரிபவுரிபுரிமூடப்போர்த்தபோற்
ககனமெண்டிசையெலாம்பாய்ந்தகங்குலே. 55

சித்திரலேகையின்குழலின்சேலினை
வைத்தனவயங்குகண்மையுமற்றவள்
குத்திரமனத்தினின்கொள்கையேலவே
யெத்திசைதொறும்பரந்தெழுந்தகங்குலே. 56

அங்கண்மாவவனியிற்றிமிரமான்மற
வெங்கணுந்தாரகையாரம்பூண்டெழுங்
கங்குலினுரத்தின்வெண்கலவைசேர்த்தபோல்
பொங்கிளந்திங்கள்கங்குலிற்பொலிந்ததே. 57

அவனியெண்டிசையெலாம்பிறைநிலாவுற
வுவமையின்மதன்சுதனுறையுங்கோயிலிற்
குவிமுலைச்சித்திரலேகையாங்கொடி
துவசமெய்மறைத்திடத்தோற்றமாற்றினான். 58

மறைந்தவளிருத்தலுமன்மதன்சுத
னறந்தவறுதவச்சுதன்றன்பேரவை
யுறைந்தரியேவிடவொளிருந்தேர்மிசை
நிறைந்திடுங்கரிபரிநெருக்கவெய்தினான். 59

பல்லியங்கறங்கிடப்படைஞர்சூழ்ந்திட
வல்லிறமணிவிளக்கங்கையேந்தியே

மெல்லியர்குழாமுயற்கவரிவீசிட
வொல்லையினடைந்தனனுயரும்வேள்சுதன். 60

அரசர்தங்குமரர்களளப்பிலாருறச்
சரியிலாக்கொடிகள்சாமரைகளோங்கவே
தெரிவையர்யாவருஞ்செந்தீபமேந்திடப்
புரவலர்துதித்திடக்கோயில்புக்கனன். 61

ஓவியந்தனைப்பழித்தொளிருருக்குமிப்
பாவைசென்றெதிர்ந்தடிபணியவேள்சுதன்
றேவிதன்னுடன்மணிசிறந்தமண்டப
மேவியங்கிருந்தனன்கவரிவீசவே. 62

மையமர்நயனியாமனைவிதன்னுடன்
றுய்யபொற்கலத்தினிற்றுலங்குமோதன
நெய்யுறுமறுசுவையருந்திநேரிலாக்
கையிமசலத்தினிற்கழுவினாரரோ. 63

கலன்கண்மெய்வயங்கிடக்கலவைபூசியே
யலங்கலங்கிருவருஞ்சூடியானனந்
துலங்கவெள்ளடையினையருந்தித்தூயபொன்
னிலங்கியமலரணையெய்தினாரரோ. 64

உருக்குமியுளத்தினையுருக்கிக்காமநூற்
பெருக்கநற்கலவைகள்பிறழுங்கொங்கையை
நெருக்கியேயுரத்திடையணைத்துநேரிலா
முருக்கிதழதரநீர்முழுதுமுண்டனன். 65

பரிபுரமரற்றிடப்பசும்பொனார்வளை
கரமிசையொலித்திடக்கலன்கண்மின்னவே
யரியுறுமலங்கல்சேரளகபாரமுஞ்
சரியநற்கொழுநனைத்தழுவினாளரோ. 66

அயில்விழியிலங்கிடவானனங்களின்
வெயர்வுறச்சுரதநூல்விளைத்துத்தீர்ந்தபின்
குயின்மொழியுருக்குமியுடனுங்கொற்றவ
னியல்புறத்துயின்றெழிலிலங்குமெல்லையின். 87

காவிசேர்விழியுருக்குமியைக்காமன்சே
யாதவினணைக்கவேளமரொழிந்துவெண்
பூவலரிருமுகப்புங்கவந்தனை
யாவருண்மறைத்தபோலகன்றவம்பிறை. 68

திணிநிசியுறவிளந்திங்களேகமெல்
லணைமிசையணங்கினையணைத்துக்கண்டுயி
லிணையிலாக்குமரன்றன்னெழிலையெய்தியே
துணைவிழிச்சித்திரலேகைகண்டனள். 69

வேழமாக்கயத்தினுளழைக்கமேவிய
வாழியான்மகன்சுதனழகைநோக்கியென்
றோழிதானிவன்புயந்தோய்கிலாதுயிர்
வாழ்கிலாளென்றுதன்மனத்தினெண்ணினாள். 70

மருளுறுமந்திரமாயைதன்னினா
லுருவுடையுருக்குமிதன்னையோர்கணத்
திருகையினெடுத்திருநிலத்தினிட்டனள்
சுரிகுழலுடாங்கனைதுயரைநீக்குவாள். 71

மாயையால்வந்தபேயுயிரைமாய்த்தவன்
சேயருள்புதல்வனைச்சிறந்தமாமணித்
தூயபொற்கட்டிலோடெடுத்துத்தோள்சுமந்
தேயெனுமுன்னர்வான்மிசையினேகினாள். 72

மாரவேள்சுதன்றனைமாழைக்கட்டிலின்
காருறுககனமீக்கரத்தினேந்தியே
சீருறுசோணிதபுரத்திற்சேர்ந்திட
வேருறுபயோதரியெய்தும்வேலையின். 73

சித்திரலேகையாள்சிறந்தவேளருள்
புத்திரன்றனைக்கொடுவருவன்போயெனா
வத்திருவெரையினணுகிமீள்வமுன்
னித்திலநகையுடைநிகழ்த்துவாளரோ. 74

துயிலிடையெய்தியென்றுணைமென்கொங்கையின்
புயலெனவணைந்தியான்விழிக்கப்போயவன்
மயலினையளித்தெனைவருத்தஞ்செய்தனன்
கயலுறுதுவசவேள்கணைகள்பெய்யவே. 75

சிந்தையிற்களிப்புறக்கனவிற்சேர்ந்தவேண்
மைந்தன்யான்விழித்திடமறைந்துதன்னெழிற்
றந்தையெய்மலர்க்கணைதைத்தபுண்வழி
யிந்துவுஞ்சுடும்படியியற்றினானென்றாள். 76

வேறு.

கனவினென்னைமயக்குகள்வனையின்றுகிட்டிசையுறுகடற்
றினகரன்வருமுன்னமேகொடுவருவனென்றுரைசெப்பிய
வனிதைபோயினம்வந்திலாளெனமதிமயங்குமடாங்கனை
நினைவழிந்தெழுவிரகவேதனைநிறையவேயயர்வேலையின். 77

வனசமன்படைமேகநாதன்விடுப்பமாதசரதன்மக
னனுசனோடனைவோருமாருதிதந்தமால்வரையவுடதந்
தனையளாவியவாசமேவரவுய்ந்தபோலனிருத்தனா
ஞனகன்மேனியின்வாசம்வீசவயர்ந்தவாயிழைதேறினாள். 78

வாசுதேவனருட்சுதன்மகன்மெய்யின்வாசம்வந்தமேல்
வீசவேயுடையென்னுமங்கைதெளிந்துவிண்ணிடைநோக்குமுன்
னேசிலாவனிருத்தமன்றனையணையின்மீதுறவேந்தியே
மாசிலாதமடந்தைசித்திரலேகையன்புடன்வந்தனள். 79

வந்துமாமணிமண்டபத்தினின்மாழைவிஞ்சியமஞ்சமீ
விந்தைமாமகனருள்குமாரனைவைத்தசித்திரலேகைமின்
னிந்துநேர்வதனத்துடாங்கனைதன்னையின்பமுறத்தழீஇச்
சிந்தைவெந்துயர்தீரவேயணைதீதில்கொண்கனையென்றனள். 80

துணைவிகூறமகிழ்ந்துடாங்கனைதூயகட்டிலின்மலருறு
மணைமீதனிருத்தமன்றுயிலழகைநோக்கியளப்பிலாப்
பிணியைநீக்குமருந்துபெற்றவர்போலவன்புபெருத்திட
வினையிலாக்கமலங்களனைவிலங்குதாளினிறைஞ்சினாள். 81

களிகொள்சிந்தையுடாங்கனைத்திருக்கணவன்மெல்லடியிணையினை
வளிகொடன்கவினுறுகவான்மிசைவைத்துவந்துசிறந்திடுந்
தளைகொணித்திலவடமசைந்துதுலங்குகொங்கையிலிலங்கவே
வளைகறங்கிடவிருகரங்கொடுவருடியேமகிழ்வேலையின். 82

தூயமாதிருவடிபிடித்திடுமெல்லையிற்றுயினீங்கியே
பாயன்மீதினுணர்ந்துவானனிருத்தமன்பரவைக்குளின்
மாயனென்னவெழுந்தபோதினின்வாணனல்குமின்னேகவே
நேயமோடுமுன்னின்றசித்திரலேகையோடுநிகழ்த்துவான். 83

இந்தமாபுரிதுவரைமாநகரன்றெல்லீர்களுமெமரலீர்
கந்தமார்குழலாளுருக்குமிதனையொழிதொளிர்கட்டின்மேற்
சிந்துசூழ்நகரொழியவேயிருள்செறியமல்கியகங்குலிற்
றந்தவாறிதுவென்கொலென்றுதடக்கைதாக்கிநகைத்தனன். 84

அங்கைதாக்கிநகைத்தவீரியனடியின்மீதினிறைஞ்சியே
சிங்கவில்லெழிலுடையசித்திரலேகைநின்றிவைசெப்புவா
ளெங்களூரிதுசோணிதாபுரமிறைவன்வாணனவன்பெறு
நங்கைபேருடையென்பண்மற்றவடுணைவிநானெனநவிலுவாள். 85

குனிவிலாமெனுநுதலியானவுடாங்கனைக்கொடிதுயிலுறக்
கனவினிற்கடிகாவினுன்னெழில்கண்டணைத்துவிழிககீ
துனியிவட்குறவேயகன்றனைதூசுசோரமெலிந்துமெய்
யினலுறக்கனலுருகவாடினளென்றுபின்னருமறைகுவாள். 86

வேறு.

உன்மயலுறவேயோதனநுகராளோதிலள்கிளியோடு
மன்மதனடலால்வாடினளாடாள்வாவியினுறுநாரம்
நன்மலர்சூடாளூசலினாடாளனமுமணியாண்மெய்
பொன்மயமானாளிவள்படுதனியைப்புகலவுமரிதையா. 87

சந்திணையணியிற்செந்தழலென்பாடமனியவளைசோர
விந்துவையுயருமென்றெனமெலிவாளெரியுறமெழுகானா
ளந்தகனுருவாமிவையெனநைவாளநதியையுறநோக்கிச்
சிந்துவினொலியாற்சிந்தையினயர்வாடனியுரைசெயலாமோ. 88

அன்றிலினிசையாலயருவடியிலாளருவிசோணையநத்தா
டென்றன்மெய்யுறவேசிறுவணளிணத்திருவழகொழிவானா
மொன்றியமணிநாவோசையின்மெலிவாளுயரரிபெயர்கொண்டான்
கொன்றையையணிவான்பெயருறக்குழையுங்கொடியிடைதுயரீதால். 89

உடலிடையுயிர்தானிலையெனவயருமுடையினண்முனர்யானோர்
படமிசையெழில்சேர்பவர்களைவரையப்பார்த்தவளுனைநோக்கிக்
கடிகமழ்பொழிலிற்கனவிடையணையுங்காவலனிவனென்றே
துடியிடைமடவாள்படுதனியொருவத்துவரையின்யான்வந்தேன். 90

துனியறுதுவரைப்பதியினிலெய்திச்சோதிசெய்யெழிலாளுன்
மனையவடனைமண்மிசையினின்வைத்தேமலரணைதனையேந்தி
யுனையுயர்வானிற்கொடுகடிதிவணுற்றனனுடைகாணுங்
கனவினிலிவளைமயல்செயுமுதல்வாவென்றனள்கவின்மிக்காள். 91

இனியவிவ்வுரையைச்சித்திரலேகைகூறுமுன்னெழின்மிக்க
வனிதையர்திலகமாயவள்வாணன்மகண்மலர்மகள்பாலத்
தினகரனவிர்சேர்மணியுறுகலன்மெய்திகழ்வுறமுனரெய்தி
யனமெனுநடையாளுவகையினனிருத்தனையடிதொழுதாளால். 92

வந்தடிதொழுதேகின்றிடுவாணன்மகளெழிலினைநோக்கி
யிந்திரைபுதல்வனருளியவனிருத்தமன்மயலெழலோடுஞ்
சந்திரவதனச்சித்திரலேகைதமருடன்மறைபோதிற்
சுந்தரியுடனேமலரணைமிசையிற்றூயவன்மகிழ்வுற்றான். 93

கலவைகளுதிரக்கரவளைசையிற்சலகலகலவென்றே
யொலியுறநன்னூபுரமிருதாளினோலமிடக்கோல
மலருறுமளசங்கணமெனவலையமதிமுகம்வெயர்வாகக்
கலனுறநகிறன்பதியுமுறவேகலவைசெய்தனளன்றே. 94

அயில்விழியிலகச்சுவைதருமமிர்தத்தனமிருவருமுண்டே
குயின்மொழிபதறக்கொடியிடைதுவளக்கொங்கைகள்புளகிப்பக்
கையினகமுடலிற்கவினுறவெழுதிக்கலவிசெய்மதனூலி
னியல்புறவனிருத்தமனுடையுடனேயெழிலுறமகிழ்வுற்றான். 95

இலகியவிருவோருடலொருமெய்போலிறுகிடவனுராகச்
சலதியின்மூழ்கிசகலவிகடணியத்தாமெழிலுறவேநற்
கலவைகள்கமழக்கவினுறுமணைமேற்கண்டுயிலுறுவோரை
நலனுறமனையிற்சோதனையிடுநன்னரியர்பலர்கண்டார். 96

வடிவுடையவனோடுடைவிழிதயிலக்கண்டிடுமடநல்லார்
கடிதினில்வாணாசுரனிடையெய்திக்கவினுறமனிதன்றான்

மிடறுடையிறைவாரியருண்மகளாமெல்லியலுடன்மேவிக்
கடிகமழ்மலரிலணைமிசைதுயிலக்கண்டனம்யாமென்றார். 97

பிறையெனுநுதலாரிவையினைமொழியப்பிஞ்ஞகன்முனிவோடு
மிறுதியின்வருவபோலெழும்வாணனசுரர்கடனையேவி
மறுவிலென்மகடன்மனைதனின்மேவுமனிதனைநீர்பற்றிச்
சிறையினிலிடுமினென்றுரைசெய்தான்றேவர்கடிரளஞ்ச. 98

வெம்பியவாணனிவ்வுரைகூறவிடமெனவடர்வீரர்
தும்பிகளிவுளிதேர்கிரைதுன்னத்துந்துமியுயர்பாண்டில்
கும்பிகைதிமிலைகம்புலிதுடிகைகாகளமொடுகோடு
பம்பைகளுருமிமுரசிவைவிம்மச்சென்றனர்படிமீதின். 99

விறலுடையசுரரெரியுறுநயனர்விடையவன்முனிவொப்பார்
பிறையெயிறிலகப்பலபடைகொண்டேபெருவரையினமேபோற்
கறையடியடரத்தேர்மிசையுயருங்கதலிகைநிறைவாகத்
திறலுடையனிருத்தமனுறைமனையிற்சென்றனர்பெரிதார்த்தே. 109

குயின்மொழியினளாமுடையிருகொங்கைக்கோடுரமிசைபூணத்
துயிலுறுமனிருத்தமனசுரேசரார்த்திடுதொனிகேளாக்
கயனிகர்விழியாளுடனுணர்வுற்றுக்கவினுறுபொற்கச்சை
யியல்புறவரையினணிந்தெழுசீயமெனவவனெழுபோதின். 101

வரையினைநிகராமசுரர்கள்செயலிங்கடுவெனவரநோக்கிப்
பருவரலுடனேயிருநயனங்கள்பயமுறவழுவாளைத்
தெருமரலொழிநீயிவர்செருவென்றுசேருவனெனவோதி
யரிவையையிருகையுறமெயணைத்தானச்சுதன்மகன்மைந்தன். 102

உடையெனுமினைநீதெருமரலொழுதியென்றினிதுரைசெய்து
மிடலுடையனிருத்தமனுயர்முழையைவிட்டெதிரரியொத்தே
கடிதினின்மனைவாயிலினிடையெய்தியவனொருகதைகொண்டே
வடவரைநிகராமசுரர்கள்வெருவவந்தெதிரார்த்தானால். 103

வந்தெதிரார்த்தேநின்றருடிருமான்மகன்மகன்றிறநோக்கித்
தந்திகளிவுளிதமனியவிரதந்தாரணிநிறைவாகச்
சிந்தினர்கணைவேல்வாண்மழுவுடன்வெந்தீயுறுமயில்விட்டே
முந்தினரசுரர்துந்துமிமுரசமுழங்கிடவளையூதி. 104

வேறு.

அரிமைந்தனருள்சுதன்மேலசுர
ரிரையுங்கடல்போலவெதிர்ந்திடவே
சுரரிந்திரனெண்கணன்றாயதவர்
செருவின்றிறல்சேர்ந்துறநோக்கினரால். 105

சினருத்திரர்வந்ததிரட்சியென
வனிருத்தனன்மேலடரும்மசுர

ரினரத்திரமெய்திடவெய்தினவா
கனவத்திமனோடுகலங்கினரால். 106

எதிர்வந்ததயித்தியரெய்திடமா
பதிமைந்தனருட்டனயன்பரியக்
கதைகொண்டுகணத்தினினப்படையை
வதைசெய்தனன்மாகரிவீழ்ந்திடவே. 107

கரிபட்டனவீரர்கள்கால்களொடிந்
தரையற்றுவிழுந்தனரஞ்சலிலாப்
பரிபட்டனதேருருபாகர்கடஞ்
சிரமற்றனமூளைகள்சிந்திடவே. 108

ஏறேறிறையஞ்சவெதிர்த்தவர்கை
வேறாயுடல்விண்டுவிழுந்திடவே
பாறுடகிலம்பரவுங்குருதி
யாறுமெனவோடவடித்தனனால். 109

கொடியற்றுவிழுந்தனகோடகமு
மடியற்றுவிழுந்திடவேயசுரர்
முடியற்றுமடிந்தனமூளைநிணங்
குடர்பற்றியருந்தினகூகையினம். 110

உடலற்றனவும்பல்களோடிரதம்
பொடிபட்டனவீரர்புரண்டிடவே
குடரற்றுமடிந்ததுமாகுருதி
கடலுற்றதுகூளிகளித்திடவே. 111

வேறு.

வேலாளர்வாளினர்கள்வில்லினர்கள்பாய்மா
தோலாழிசூழிரதமோடுதுகளாகக்
காலாளதாகியுயருங்கதையினாலே
வாலாலமென்னமதன்மாமகனறைந்தான். 112

பீடுடையதேர்சிறைபிளந்துநிலன்வீழக்
கோடகமொடேகரிகுலைந்துமடிவெய்த
வீடினர்கள்வாளவுணர்வீரியகவந்த
மாடியதுசெங்குருதியாறெனமடுப்ப. 113

மாதவனருள்சுதன்மகன்கதையினாலே
மோதுதலும்வீரர்கண்முடித்தலைசிதைந்தே
பூதலமிசைக்கரிகள்பொன்றவசுரேசர்
வீதிதொறுமோடினர்கள்விண்ணவர்களாட. 114

வேளருள்சுதன்கதைகோடேவிரைவின்மோத
மூளுமதமீளிமுகெப்படியினெய்த

ஞாளியினமோடிமெய்நடுங்குவதுபோல
வாளவுணர்பாறினர்கள்வானவர்நகைப்ப. 115

யாதவனருள்சுதன்மகன்கதைகொடெற்ற
வீதிதொறும்வேலையெனவெங்குருதிவெள்ளம்
போதவசுரேசர்திரள்பொன்றுசெயல்கண்டே
நீதமுயல்வாணனுயர்தேர்மிசையுறுத்தான். 116

கலன்கணிறைமெய்க்கவினுறச்சவிகையோங்க
வலங்கொள்கரமாயிரம்வயங்கிடவாண
னிலங்குமகுடங்கிரியினென்றெழுவதொத்தே
துலங்கவசுரேசர்திரளென்னவெதிர்வந்தான். 117

காளமுழங்கவுயர்பேரிகள்கறங்க
நாகமெணிலாதவடநாகமெனமேவ
மாகமுறவேகதலிகைத்திரள்வயங்க
வேகமொடுசென்றனன்விண்ணோர்கண்மிகவஞ்ச. 118

தாவுபரிதேர்நிரைகள்சாரவெதிரில்லா
மாவலவனூருமிரதத்தினுயர்வாணன்
கோவியர்களுசன்மகனல்கியகுமாரன்
மேவியொளிர்வீதியின்மிடைந்துறவளைந்தான். 119

கடியவசுரேசர்திரளைக்கதைகொடெற்றி
நொடியின்முன்வதைத்தவனிருத்தமனைநோக்கி
வடிவுடையுடாங்கனைமகிழ்ச்சியுறுபோதின்
மிடலுடையவாணன்வரவேயுளமெலிந்தார். 120

மிடலுடையவாணன்வரவேளருள்குமாரன்
வடமிசையினூலுவிழுதின்குழுவைமானுந்
தடவரையினூலுமுயர்சர்ப்பவினமோவெங்
கடியவசுரன்பணைசெய்கைகளெனநக்கான். 121

நகைத்தெதிர்நடந்தவனிருத்தமனைநண்ணிப்
பகைத்திருமருங்கசுரர்பல்கணைகள்விட்டே
மகத்துரகமோடிபம்வளைக்கவுயர்வானோர்
திகைத்திடவழற்கணைகள்சிந்தினர்களெங்கும். 122

விக்கிரமவல்லசுரர்வாளிகள்விடுத்தே
திக்கினைமறைப்பவுயர்காமனருள்செம்மல்
பொக்கமுறவெய்துழுவைபோலவுயர்தண்டா
லிக்கிறமிதிக்குமிபமென்னவதைசெய்தான். 123

தேரறவடித்திவுளிகண்சிதறமோதிக்
கார்நிறவடற்கரிகள்காலுகளொடிந்தே
பாரின்வரைபோலுடல்பதைத்துவிழவேபோர்
முரன்மகன்வன்கதையினேற்றினன்வலத்தான். 124

சிரமுடையவேகடிதின்மாள்வர்சிலர்காலோ
டுரமொடியவேவரைகள்போலவுருள்வார்வண்
கரமொடியவேசிலர்கள்வீழ்ந்தனர்கலங்கிக்
குரமொடியவேகுரகதங்கள்குலைவுற்ற. 125

அடர்ந்துகதைசுற்றியனிருத்தமனடிப்ப
மிடைந்தகரிதேர்பரிகள்வீழவசுரேசர்
கடைந்தகடன்மீனெனநடுங்கினர்கலங்கி
யுடைந்திடவெகுண்டெயரும்வாணனெதிருற்றான். 126

வாணனெதிருற்றுவரிவெஞ்சிலைவளைத்துப்
பாணமழைதூவியிடவேயுயர்பதத்தாற்
சேணுறவளர்ந்ததிருமால்சுதனருள்சேய்
தூணிணைநிகர்த்தகதைசுற்றவவையற்ற. 127

மாலின்மகன்மைந்தனுயர்வன்கதைசுழற்றி
யாலமெனுமாசுகமனைத்தையுமுறிக்கக்
காலனெனவாணனழல்வெங்கணைகடாவி
வேலயின்முசுண்டிமழுவீசினனனந்தம். 128

நூறுதசமானகரவாணனொடியின்முற்
சீறிவிடுவேலயில்சிலீமுகமனைத்து
மாறிலரிசேய்புதல்வன்மாற்றியொருதண்டா
னூறியசுரேசரைநொறுக்கினனுருக்கி. 129

எய்தகணைமாரிகளெறிந்தபடையெல்லா
நொய்தினனிருத்தமனொறுக்கியதுகண்டே
கைதவமுறுங்கொடியகாலனிகர்வாண
னெய்யழலினுற்றனனெருப்பெழவிழித்தான். 130

அட்டதிசைமுற்றவுமடர்த்ததிறல்வாணன்
சிட்டர்துதிசெய்யரிகுமாரனருள்சேய்மேன்
மட்டவிழும்வேணியனளித்தவடிவேலை
விட்டனனயன்றனொடுவிண்ணவர்களஞ்ச. 131

கண்டையொடுதண்டைகள்கறங்கவனல்சிந்த
வண்டரயனிந்திரனருந்தவர்களஞ்ச
வெண்டிசையினுற்றகரியும்வெருவவென்றின்
மண்டலநடுங்கவடிவேலெதிரின்வந்த. 132

சுற்றுமனல்விஞ்சவருதூயவடிவேலைப்
பற்றியனிருத்தமனெறிந்தபதகன்மே
லுற்றவர்துதித்திடவிடுத்திடலுநண்ணி
யுற்றவுயர்வாணனுரமீதினுரகம்போல். 133

வரையின்மிசைவீழருவிபோலவுயர்வாண
னுரமிசையின்வீழ்குருதியோடவுலாவுற்றே

யரிதிகழவோடிரதமீதிடையயர்ந்தான்
சுரரிரதிமைந்தன்மிசைதூவினர்கள்பொற்பூ. 134

வேறு.

ஊறுசெம்புனலொழுகிடவயர்ந்திடுவாணன்
றேறியேயனிருத்தமன்றனைக்கண்டுசீறி
மாறில்வையமேல்விடுத்தலும்வல்லையிற்றடுத்துக்
கூறினானுயர்மந்திரியாயகும்பாண்டன். 135

சினமிலன்விழிசிவக்கிலன்சீருறும்வீழிக்
கனிநிகர்த்தவாய்மடித்திலன்வெயர்வுமெய்காணா
னனிகமெல்லவும்வதைத்தனையருப்பமாய்ப்பொருவான்
மனிதனென்றுநீமணங்கொளேல்வாணவென்றுரைப்பான். 136

கையின்வில்லிலனீயெயுங்காளமாமுகில்போ
லெய்யும்வாளிகளனைத்தையுமெழுவினான்மாற்றி
யையநீயெறிவேலையுன்னாகத்தினமுத்தித்
துய்யவெண்ணிலாவெனநகைதுலங்கிடநின்றான். 137

ஆதலாலிவனேர்பொரவமைதியேலிவனிற்
சாதறிண்ணம்நீமறைதியாலென்றுரைசாற்றப்
பீதிகொண்டுயர்வாணன்வானகத்தினிற்பெயர்ந்தான்
சீதரன்மகன்சேயினைப்புகழ்ந்தனர்தேவர். 138

உதிரமார்பினும்வாயினுமொழுகிடவாண
னெதிர்நிலாதுபோயொளித்தலும்யாதவகுமாரன்
கதிர்மணிக்கலன்கவினுறக்கைகொட்டிநகைத்தான்
முதிரும்ஞானமாமுனிவர்களாசிகண்மொழிந்தார். 139

மேகமீதின்மறைந்திடுவிடநிகராசுர
னாகபாசத்தைவிடுத்தலுநற்றவர்நடுங்கச்
சாகரந்தனைக்கடைந்தமால்சுதனருடனய
னாகந்தோளிரண்டழுந்துறச்சுற்றியதரவம். 140

அரவினானலனிருத்தமன்பிணிப்புணக்கலங்கி
யிருகண்மீதினிற்புடைத்துடாங்கனைமிகவிரங்கச்
சுரர்நடுங்கியேதுயரமுற்றிடவுயர்வாணன்
றரையினெய்தினான்றனவர்பெரிதுவந்தார்ப்ப. 141

கறைமிடற்றினன்வரத்தினாற்களித்திடுவாணன்
பிறையெயிற்றழலுமிழராப்படையினிற்பிணித்தே
மறுவிலாவனிருத்தமன்றனைச்சிறைவைத்தான்
றிறன்மிகுத்திடுமெசுரர்கள்சேனையோடார்ப்ப. 142

அரவின்வேள்சுதன்பிணிப்புணக்கண்டிவையறைவான்
சுரரெண்ணாரதன்றுவரையிற்சென்றிடும்வேலை

யிரவிற்கொண்கனைக்காண்கிலாதெழுந்துநொந்திரங்கி
யுருகுநேரிடையுருக்குமிசெயலினையுரைப்பாம். 143

வேறு.

சித்திரலேகையென்பாள்சித்தசனருளுமைந்த
னித்திரையுறவேயெய்திரிசியினிற்சேக்கையோடுங்
கைத்தலமிசையினேந்திக்ககனமீதேகப்பின்ன
ருத்தமவடிவின்மிக்கவுருக்குமிவிழித்துப்பார்த்தாள். 144

கணவனையணையினோடுங்காண்கிலாண்மருண்டுநோக்கிப்
பிணைவிழிநிறையத்தோயம்பெருகிடவிதலையெய்தி
யுணர்விலையென்னச்சோர்ந்தேயுறுதுனியுளத்தைத்தீய்க்க
மணமலிகுழலிபின்னும்வாய்திறந்தாற்றலுற்றாள். 145

கருங்கடன்முகில்போன்மேனிகவினுறுங்கணவன்றன்னைப்
பிரிந்துமென்னுயிர்போகாதேபேதையேனன்புளார்போ
லரந்தையுற்றிரங்குகின்றேனழகிதென்கற்பென்றுள்ளம்
வருந்தியேயரற்றலோடுமடந்தையர்பலருங்கேட்டார். 146

உருக்குமியரற்றுமோசைகேட்டவொண்டொடியாரெல்லாம்
பொருக்கெனவெய்திவேடன்புதல்வனைக்காணாராகி
யரக்கனலுற்றதென்னவாகுலமுற்றெல்லோரு
மிரக்கமுற்றழுதவோசையாவருங்கேட்டாரன்றே. 147

அரிதனயன்றன்மைந்தன்கோயிலினரற்றல்கேட்டே
யிரதிவந்தெய்திச்சேயைக்காண்கிலாதிரங்கிக்கண்ணிற்
கரதலமதனைவெற்றிக்கங்குலினழுதவோசை
புரிதனிலுறைவோர்கேட்டுப்பொருக்கெனவெழுந்தாரன்றே. 148

மாயவனுரத்திற்கொங்கையழுந்துறமலர்க்கையார
நேயமோடணைத்துத்தீபகிரையிருமருங்கிற்றோன்றத்
தூயபொன்னமளிமீதிற்றுயில்கொளுமலரின்றோகை
யாயிழைமார்களெல்லாமரற்றியவோசைகேட்டாள். 149

தன்னுடைக்குமரன்பெற்றதனயன்றன்கோயின்மேவி
யன்னமென்னடையினாளாண்டவன்றனைக்காண்கிலாளா
யின்னல்வந்தெய்தக்கண்ணீரிருநிலமிசையினோட
வன்னியின்மெழுகுபோலவுருகினள்வயிற்றினெற்றி. 150

உருக்குமிதன்னைக்கையாலணைத்துளம்வாடிநொந்து
மருக்குழன்மடவாயுந்தன்மகுணனெங்குற்றானென்ன
விரக்கமுற்றிடவேதூயவிரேவதியரிதன்மாதா
முருக்கிதழ்வாயினாரோடரற்றியேமொய்த்துநைந்தார். 151

குண்டினபுரிக்கோன்பெற்றகோதையென்மகன்றன்மைந்தா
புண்டரீகக்கண்செவ்வாய்பொலிவுறுவடிவாவுன்னைக்

கொண்டகன்றனர்கள்யாவர்கொடியவல்லசுரர்தாமோ
வண்டர்நாயகனுக்கிவ்வாறறைவனென்றேகும்வேலை. 152

கரன்மகன்கோயிறன்னிற்கங்குலினரற்றக்கேட்டு
விரைவினிலெழுந்துதூயவுருப்பிணிமேவவேசீ
ரரியனிருத்தமன்சோணிதபுரத்தமர்ந்ததெல்லாந்
திருவுளத்துணர்ந்துமொன்றுந்தெரிகிலான்போலநின்றான். 153

தீவிகைமாதரேந்தச்சீதரனிற்கும்வேலை
யோவியமுயிர்பெற்றென்னவுருப்பிணியொல்லையெய்தித்
தேவவுன்குமரன்சேயைக்காண்கிலேனென்றுசெப்பி
யாவியும்பதைப்பத்துய்யதாளின்வீழ்ந்தரற்றினாள். 154

இருகணீர்நிலத்தினோடவிறைஞ்சியதேவிதன்னை
யரியிருகையினாரவெடுத்தணைத்தன்னமேயுன்
றிருமகனருளுமைந்தனுருவினைநத்தித்தீதி
லரிவையரிடத்திற்கொண்டுபோயினாராகுமென்றான். 155

மண்ணின்மேலெட்டுத்திக்கின்வலியுடையசுரரூரில்
விண்ணின்மேற்கரந்துகொண்டுமேவினாரெனினும்யானே
நண்ணியுன்மகன்சேய்தன்னைக்கொணர்குவனென்றுநாரி
கண்ணினீர்துடைத்துத்தேனேகலங்கலையென்றுசொன்னான். 156

தேவிவெந்துயரமாற்றியிருத்திநீயென்றுசெப்பிக்
காவியங்கண்ணார்தீபநிரையினைக்கையினேந்தக்
கோவியர்துகிலைக்கொண்டான்கோபுரவாயிலெய்த
மாவணிகரிதேர்துன்னமன்னவர்மிடைந்தார்மாதோ. 157

சாத்தகிமதனன்சாம்பன்றாலகேதனமன்குந்தி
மூத்தவனவன்றன்மாமன்முதலினோர்முன்னாள்வேழங்
காத்தவனருகிற்சென்றுகதமுறமேனிவேர்ப்ப
நேத்திரஞ்சிவப்பச்சீறிநின்றிவைநிகழ்த்தினாரால். 158

மானவனருளுமைந்தன்மகன்றனைக்கொண்டுபோனார்
தானவரெனினும்வானோர்தலைவன்றானெனினுமுன்னா
ளானையினுரியைப்போர்த்தானெனினுமாண்டமரின்வென்றே
யீனமில்வேடன்சேயைக்கொணருவமேகியென்றார். 159

அரசர்களறைதலோடுமச்சுதனஃதேயென்ன
முரசுதுந்துமிகள்கோடுமுழங்கிடவனிகவீட்டங்
கரைசெயாவுததிபோலக்காசினியிடத்தின்வானின்
வரைசெறிபழுவமெண்டிக்கிவையெலாம்வளைந்துசூழ்ந்தார். 160

வேறு.

பொறியுகுவிழியினரொன்னார்புரமெரிசெயுமிறைநிகர்வார்
கறையடிபுரவிகள்விடுவோர்கதமுறமனதினரஞ்சா

ரிறுதியினழலெனவெழுவாரிடியெனவெதிர்தருகுரலார்
நெறிகளையடையுமினென்றூர்நிலமிசைநிருபர்கண்மிடைவார். 161

காகளமொடுவளைதுடிகைகரடிகைபடலிகைதிமிலை
சாகரவொலியெனவறையத்தரணிகடிசைதொறும்விரைவி
னேகினரிரதிதன்மகளையார்கொடுபோயினரெனவே
நாகணையரியொடுமரசர்நவிலுமுன்னாரதன்வந்தான். 162

சுரர்முனிவிரைவினினெய்திச்சுந்தரவரியொடுசொல்வா
னிரவிடையிரதிதன்மகளையெழிலுறுவோவியலேகை
விரைவினினொருநொடியிடுமுன் விண்மிசையேகொடுவிடவே
யரியுறுகுழலுடைமின்னாண்டுறவவனவளையணைத்தான். 163

உடையொடுமெதனனருட்சேயுறவவையறியுயர்வாணன்
கடலெனவனிகங்கள்விடவேகடுமையின்வதைசெயமுனிவாய்
விடமுமிழரவுறுபடையால்வேளருள்குமரனையொளிசெய்
கொடியவனிருகைபிணித்தானெனுமுரைகூறினன்முனிவன். 164

நாரதனிவ்வுரைநவிலநாரணனுயர்சசிநிறமன்
வாரிதியருண்மகண்மகன்வல்லூகமனருளியமின்சேய்
ரேதினுயர்சினிச்செம்மல்தேர்கரிகுரகதவனிக
மாரதர்திரளொடும்வாணன்வளநகரெயிலைவளைத்தார். 165

நந்தனொடேயுபநந்தன்சாரணன்முதலினர்நண்ணத்
துந்துமிகோடியர்துரகந்துடிகையொடெங்குமொலிப்ப
விந்திரைநாதன்வளைந்தானிவுளிகடேர்கிறையெண்ணி
றந்திமுனாலக்குரோணித்தானைகளும்புடைசூழ. 166

மாதவன்வந்தெயில்சூழவாணன்முனிந்துயர்தேரின்
போதகமாவணிவிரதம்பொருபடையசுரர்களெல்லா
மோதமெழுங்கடல்போலவுற்றிடவேயுயர்பேரி
நாதமலிந்திடவந்தானகர்நடுங்கவடர்ந்தே. 167

வரையெனவுயரியதோளார்வளர்பிறைபோலெயிறுடையா
ரெரியுறமுதிர்சினவிழியாரியமனும்வெருவுறமுனிவார்
பரவையினொலியெனவதிர்வார்படியலையும்படிவருவார்
கரிபரிதேர்மிசையுயர்வார்கடுவிடமனையவர்மறவோர். 168

விழியுமிழ்தழலினிலெழிலிவெந்திடவேயுயர்தேரி
னுழுவையினினமெனவதிர்வாருறமயில்விடுகரமுடையார்
பொழிமழையெனவிடுகணையார்புகரிபவெரின்மிசையெழுவார்
முழைவிடுமெரிவிழிகராய்முடுகினரவுணர்கள்வரைபோல். 169

ஆனகதுந்துமியருள்செயரசர்கள்பலருடன்வளைய
மானிடனிவனெனமதியார்வடவையினனலெனமுனிவார்
தானவர்சதவெளமுறவேதசசதமுறுகரமிலக
வானவர்வெருவுறவந்தான்மாவலியருளியவாணன். 170

வேறு.

கோபம்விஞ்சியசிந்தையர்கூற்றஞ்சும்
பாவமீருருவாய்ப்படிவந்தெனக்
கூவகன்னன் கும்பாண்டன் குனித்திடுஞ்
சாவங்கொண்டுயர்தேர்மிசைத்தாக்கினர். 171

சங்கமார்த்தனபேரிதழங்கின
சிங்கம்போன்றசுரேசர்திரண்டுபோ
ரெங்கும்வேல்கதைவாளெறிந்தார்த்தனர்
மங்குநாளெனவானவரஞ்சவே. 172

அவுணரெய்துமெறிந்தும்வந்தார்த்தலுந்
துவரையாதவவீரர்கடுன்னியே
கவனமாக்கரிதேர்கள்கடாவியொண்
டவளமரவளையூதினர்தாக்கியே. 173

கவளமாகரிதன்னுடன்காதின
விவுளியோடுபுரவியெதிர்ந்தன
துவசம்வையமுந்தேருந்துலங்கிட
வவுணர்தம்மோடரசர்கடாக்கினர். 174

தோளுந்தோளுந்தொடர்ந்தெதிர்தாக்கவே
சூலஞ்சூலமோடேயடரச்சுடர்
வேலும்வேலுமிடைந்திடவிற்செறி
கோலுங்கோலுமுமிழ்ந்தகொடுங்கனல். 175

திசைதொறுங்கணைமாரிகள்சிந்தியே
தசையுமென்புஞ்சிதைந்திடத்தோமரம்
விசையினெற்றிவிழிக்கனல்பொங்கிட
வசுரரெங்குமடர்ந்தெதிரார்த்தனர். 176

முரசுதுந்துமிசங்குமுழங்கிட
விரைசெய்மாகரிதேர்கணெருங்கிட
சிரசின்மீமகுடந்திகழ்ந்தேயிட
வரசராசுகமாரிபெய்தார்த்தனர். 177

கரங்களற்றனகால்கடுணிந்தன
சிரங்களற்றனதேர்சிலையற்றபின்
னுரங்களற்றுமடிந்தனவும்பல்கள்
குரங்களற்றுவிழுந்தனகோடகம். 178

சிலையிழந்தருடோரசச்சிறியே
நிலனிழிந்துநெடுங்கதைதன்னினொ
னலையெழுங்கடல்போலெதிர்ந்தார்த்துயர்
தலைபிளந்திடச்சாடிமடிந்தனர். 179

மேகமின்னெடும்வீழ்வனபோன் றகை
நாகமெங்குமடிந்தடர்வீரர்கள்
சேகரங்கணிந்திடச்செம்புனற்
சாகரங்களிற்சார்ந்தலைவீசின. 180

மீளிபோலவெகுண்டெழும்வீரர்கள்
வாளொண்வேல்கண்மழுக்கரத்தோச்சியே
தாளுந்தோளுந்தலையுந்துணிந்தனர்
கூளியாடினஞாளிகுரைக்கவே. 181

அரசருமசுரேசருமார்த்துயர்
வரிவில்வாளிகளெங்கும்வழங்கவே
பரிகள்பொன்றப்பருப்பதம்போன்றெழுங்
கரிகள்வீழக்கவந்தமுமாடின. 182

மழுமுசுண்டிவலயங்கள்கப்பண
மெழுமுரட்கதைவிட்டெறிந்தியாதவக்
குழுவுளோரசுரேசரைக்கொன்றன
ருழுவைமானினத்தைச்செற்றதொத்தரோ. 183

வேலும்வாளுமுலக்கையுமிக்கமுட்
கோலுமீட்டியுங்குந்தமும்விட்டெறிந்
தாலமென்னவழன்றவுணதிபர்
மாலின்சேனையைச்சூழ்ந்துவதைத்தனர். 184

படகம்பேரிபணிலமுழங்கவே
கொடியவல்லசுரேசர்கொதித்திடும்
வடவைபோலெழும்வாளிகடூவியே
யடரவோடினமாயனனிகமே. 185

வேறு.

எரிசினமுற்றசுரேசர்களெங்கணுமுனிவொடெதிர்ந்திடவே
புரவிகளெண்ணிலபுகரிபவீரர்கள்பொன்றிடமன்னரெலா
மிரிதலுமஞ்சன்மினென்றுயர்வேளுபநந்தனிராமவிறை
வரிசிலைகொண்டெழுசாத்தகிசாம்பமகீபனொடெய்தினரால். 186

பேரிகறங்கிடவேயுயர்தேவகிபெற்றிடுமைந்தன்முனோன்
றேரினிழிந்தலமேகொடுமோவணிசிந்துறவெங்கரிகள்
வீரர்கரங்களுரங்கள்சிரங்கள்முரிந்துவிழுந்திடவே
சாரிகையாகவடர்ந்தெதிர்மோதினன்வானவர்தான்மகிழ. 187

வரைகளெனக்கரிநிரைகண்மடிந்திடவாசிகளுசமுற
வுரமொடுதோள்கரமென்புமொடிந்தசுரேசருருண்டுதிர
மிருநிலமேனதியாயெழவெண்ணிலதேர்நிரையிற்றிடவே
விரைவினலாயுதமேகொடுமோதினன்விபுதர்களேதிசெய்யவே. 188

சில்லுளைமாவுறதேர்மிசையேதிகழ்சினியருள்சாத்தகிதன்
வில்லொலியேழுலகெய்திடவேபலவிசிகம்விடுத்திடலு
மெல்லையிலாவிவுளித்திரள்கரிநிரையிரதமொடசுரர்குழா
மொல்லையினிற்றனவுதிரமிகுத்தவணோடினநதியெனவே. 189

வாரிகலங்கிடமாரனெறிந்தவின்னொலிவானினுறப்
பாரினிடைப்பொழிமேகமெனப்பலபகழிசொரிந்திடவே
தேர்நிரைமீதசுராதிபரிவுளிகள்சிந்திடவெங்கரிக
ளோரிமையின்முன்மடிந்திடவாடினவலகையுலப்பிலவே. 190

அடிதொடையற்றனகுரகதமுற்றவுமமரர்துதித்திடவே
கடகரிநிரைகரமுரமறவரைகள்கடுப்பவிழுந்திடநீள்
கொடிகுடையிரதமறச்சினவசுரர்குலந்துமடிந்தனரால்
வடிவுடைமதனன்விடுத்திடுபல்லவமாரியெனச்சொரிய. 191

சாம்பனெடுங்கணைதூவிடவேயுயர்தானவர்வெண்கவிகைக்
காம்பறநீள்கொடியிரதமறச்சிலைகவசமுமற்றிடவே
சோம்பினர்பாறினர்மற்றவர்துஞ்சினர்தோல்பரிபொன்றினகண்
டேம்பலுறக்கடிமலர்கள்சொரிந்தனரிமையவரெங்கணுமே. 192

நந்தனொடேயுபநந்தன்விடுங்கணைநஞ்செனவேமுடுகத்
தந்திகள்பொன்றினசடனொடுசாரணனேவியசாயகமு
முந்தியறுத்திடவிவுளிகள்பட்டனமுக்கணனார்முனிவால்
வெந்தபுரத்தினர்போலமடிந்தனர்வெவ்வியதானவரே. 193

சடனொடுசாரணன்மதனுயர்சினியருடனயனலப்படையோன்
மிடறுடையெண்கருண்மகண்மகன்வீறுபநந்தனொடிவர்கள்விடு
மடுபகழித்திரளாலனிகத்தைவதைத்திடவசுரருளோர்
கடலிறுதியின்வருகாலினுடைந்தெனவோடினர்காசினிமேல். 194

ஆசுகன்மோதநிலாதுபரந்திடுபூளைநிகர்த்தசுரர்
வாசிகடோலணிதேருறும்வீரர்மடிந்திடவேகுருதி
காசினிமேனதிபோலுறவெண்ணில்கவந்தநடித்திடலு
மாசைகடோறுமிரிந்திடமாமலரமரர்பொழிந்தனரால். 195

வேறு.

பாறுசேனையையஞ்சலென்றேபகர்ந்
தேரின்மேவுமிறையெனவேமிகச்
சீறுகின்றகும்பாண்டனுஞ்சீயம்போல்
வீறுகூபகன்றன்னொடுமேவினர். 196

கொடிகொடேரிடைக்கோளரியேலவே
யிடிகளஞ்சிடவார்த்திருவோர்களும்
வடவைபோலெழும்வாளிகளெய்யவுங்
கடாவோடினமாயனனிகமே. 197

மீளிபோலக்கும்பாண்டன்வெகுண்டுயர்
வாளிதூவிவருதலும்பால்வணன்
மூளும்வெஞ்சினத்தோடுமுடுகிப்புத்
தேளிர்தேறிடச்சென்றெதிர்தாக்கினான். 198

அசுரன்விட்டவழற்கணையாவையும்
விசிகமொன்றின்விலக்கியலாயுதன்
சசியினிற்பிளவானசரங்கள்வான்
றிசையனைத்துமறைந்திடச்சிந்தினான். 199

தாலகேதனனெய்தசரங்களைச்
சீலமில்லவன்மாற்றிற்சிலீமுக
மாலின்முன்னவன்மார்பினழுத்தியே
யாலமென்னவடர்ந்துவந்தார்த்தனன். 200

உரமுறக்கணைதேக்கவுதிரநீர்
பெருகவேமுனிந்தேபிறைவாளியா
லரிமுனோனசுரன்சிலைதேர்கொடி
பரியெலாமறுத்தானவன்பாறினான். 201

பாபருமிகும்பாண்டன்பரிகடேர்,
சாபமுமற்றுப்பாறச்சழக்கனுங்
கூபகன்னன்கொதித்தெழக்கோதிலா
மாபதிச்சிறுவன்வந்துதாக்கினான். 202

மாரன்வந்துதடுத்தலுமாறிலாக்
கோரனாகியகூபகன்னன்றிறல்
வீரவெஞ்சிலையால்விடுத்தான்கணை
பாரினிற்பெய்பயோதரமானவே. 203

தீயனேவுஞ்சிலீமுகம்யாவையு
மாயன்மைந்தன்வடிக்கணையாலறுத்
தேயெனுமுன்னவனிரதங்கொடி
தூயவெஞ்சிலையோடுதுணித்தனன். 204

கொடிகடேர்சிலையற்றுக்கொடியவன்
கடிதின்வேல்கொடெறிந்திடக்காமவேள்
சுடர்கொள்வெங்கணையாற்றுணித்தெய்தவ
னுடலில்வாளியழுத்திடவோடினான். 205

தீயகூபகன்னன்சிலைதேரற
வேயெனுமுன்னிடைந்திடவாணனும்
வாயுவேகிகரும்பரிவையமேற்
சேயம்போலனிகத்துடன்சென்றனன். 206

வேறு.

பரிகரியிரதமோடளவிலபடைஞர்கள்படிமீதி
னிரைதரவுயர்கொடிககனமேர்டுறவரிசிரைதேரின்

வரையுறுகதிரெனவேமுடிசிரமிசைதிகழ்வாண
னெறியுறுவிழியினனிமையவர்வெருவுறவெதிர்வந்தான். 207

தெசசதமுறுகையினயிலெழுமழுவொடுதிகழ்வாகத்
திசைசெவிடுறவுயர்சிலையொலியெழவளையினையூதி
யசுரர்களிறையவனமரர்கள்வெருவுறவழல்வாளி
விசையுறுமெழிலிகள்பொழிவதுநிகரெனவிடுகின்றான். 208

துரகமெய்குரமிருதொடைசிரமிவையறுபடவேயெண்
கரிகரமுரம்வருபதமறவிழுவனகனமேபோல்
வரிசிலைகொடிகுடைதலையறவிழுவர்கண்மனர்பாரிற்
குருதிகள்பெருகிடவலகைகளணிவனகுடர்மாலை. 209

அரனருள்வாணுறுமவுணர்களதிபதியழல்வாளி
விரைவினினெழிலிகள்பொழிவதுநிகரெனவிடவேபூ
நிருபர்கணிலமிசைவெருவினர்நிலையிலையெனவோட
வெரிசினமுறவுயர்சினியருடனயனெதிர்ந்தானால். 210

இரிதருபுரவலர்வெருவன்மின்வெருவன்மினெனவோதி
வரிசிலைகொடுசினியருண்மகன்முனிவொடுவடிவாளி
சொரிதலுமசுரர்கடலைநிலன்விழவுயர்துரகங்கள்
சிரமிபநிரையுடலடியறவுருள்வனதிசையெங்கும். 211

அவுணர்கடலைகரமுரமரைதொடையடியறலோடு
மிவுளிகள்சிரமறவிபநிரைகரமறவுயர்தேர்க
ளவனியினிறவலவனுமறவடுகணைபலவிட்டா
னுவமையில்சினியருள்சுதனுகவிறுதியின்மழையொத்தே. 212

கடகரிபரிநிரைகதமுறுமசுரர்கள்படிமீதின்
மடிவுறவெழுகுருதிகணதியெனவரமகிழ்கூளி
குடர்தொடையணிவனநடமிடவசுரர்கள்குலைவுற்றே
யுடைதலும்விபுதர்கள்வெருவுறமுடுகினனுயர்வாணன். 213

எரிசினமுறவுயர்தசசதமுறுகையினிலகும்போர்
வரிசிலைபலகொடுமெழைபொழிவனவெனவடிவாளி
சொரிதலுமருள்செறிசினியருள்சுதனொருசுடர்வாளி
விரைவினில்விடவவையறுதலும்விபுதர்கடுதிசெய்தார். 214

வினையுறுமசுரர்களிறையனலுறுபடைவிடலோடுஞ்
சினியருள்சுதனழலுறுபடைசெலவிடவவையற்ற
துனியுறுபவன்மகபதிசரம்விடவவைதுணிசெய்தான்
றினகரனருளியபடைகொடுசீதரனனுசன்றான். 215

அந்தகன்வெருவுறவவுணர்களதிபதிசரமெங்குஞ்
சிந்திடவவையறவரியனுசன்சிலிமுகவாளி
யுந்திடவெதிர்பொருமாவலியருள்சுதனுறுதேர்மா
விந்துவையளவியகதலிகைபலசிலைநிலையற்ற. 216

உருளிரதம்பரிகொடிகுடைவில்லிவையறவூழி
யெரியெனமுனிவுறுமசுரர்களிறையொருதேரேறி
வரிசிலைபலகொடுசினியருள்சுதனுரமிசைவாளி
சொரிதலுமிமையவர்வெருவுறவுருவினதுளைசெய்தே. 217

உரமிசைகுருதிகள்பெருகிடமுனிவுறுமுரகன்போ
லெரியுறுவிழியினனுயர்சினியருள்சுதனிடியஞ்ச
வரிசிலையொலியுறவசுரர்களதிபதியகன்மார்பி
னுருவிடவிடுகணைகடவினனொருநொடியிடுமுன்னம். 218

நீயவனுரமிசைகுருதிகள்பெருகிடநனிசீறி
யாயிரமடுகணைகொடுசினியுருளரசன்றேர்மாத்
தூயவில்லுயர்குடைதுவசமுமறவெயநிலமீதின்
வாயுவின்விசைகெடவோடினன்மாதவனனுசன்றான். 219

பூதலமிசைசினியருளியபுதல்வனிடைந்தோடத்
நீதுறுமவுணர்களிறையவனார்த்துயர்சிலைகோலி
மாதிரம்வான்மண்மறைந்திடவாளிகள்விட்டேகோ
டுதிடயாதவவீரர்கள்வெருவியுடைந்தாரால். 220

யாதவவீரர்களெண்டிசைதோறுமிரிந்தோட
மீதுயர்தேர்மிசைநின்றுவிளங்கியமேகம்போன்
மாதவன்வெஞ்சிலைகோலியடர்த்திடுவாணன்மே
லாதவன்வெஞ்சுடர்போற்றிகழாசுகமெய்தார்த்தான். 221

மாயன்விடுங்கணைமாரியைவாளிதனான்வாண
னேயெனுமுன்னமறுத்தியமன்படையெய்தார்ப்பத்
தூயவனிந்திரன்வெம்படைகொண்டவைதுணிசெய்தே
மீயுயரண்டம்வெடித்திடவூதினன்வெண்சங்கம். 222

வாயுவின்வெம்படைவாணன்விடுத்திடநிரைமேய்க்கு
மாயனொடிப்பினினாசுகம்வாளியினவைமாற்றத்
தேயுவின்வெம்படைதீயன்விடுத்திடவருணக்கோன்
றூயவழற்படையாலவைமாற்றினன்சுடர்நேமி. 223

பிரமனடற்படைவிட்டனனவுணர்கள்பெருமானம்
பரமனயன்படைகொண்டவைமாய்த்திடும்படியெய்தான்
புரமெரிசெயநகைசெய்தருளும்புனிதன்னீயுஞ்
சரமசுரன்னுயர்தனுவைவளைத்துவிடுத்தானால். 224

தானவன்விட்டதழற்கணன்வெம்படைசகமோடும்
வானவரஞ்சிடவடவனலிதுவெனவரலோடு
பானுவின்மண்டலமீதுறையும்பரனுமைமாதின்
கோனுடைவெம்படையெய்துகுறைத்தனனுயர்வில்லால். 225

வெங்கயமன்றுவதைத்தருண்மாலொருவிசிகத்தாற்
[illegible]ன்வெம்படையைத்துணிசெய்திசெ[illegible]

சிங்கமெனச்சினமுறவுயர்வாளிகள்சிலைகோலி
மங்குல்பொழிந்தெனவெங்கும்விடுத்தனன்விறல்வாணன். 226

தீயவன்விட்டசிலீமுகமெங்கணுமுறவேசிர்
மாயவன்மேனியின்மங்குலின்மூழ்கியதுகிரேபோ
லேயெனுமுன்குருதிப்புனல்விஞ்சிடவிமையோரோ
ராயிரநயநனும்வெருவினரவுணத்திரளார்த்தார். 227

ஆடகன்மகன்மகனுதவியசேயருள்சுதனம்பு
மூடலுமானகைசெய்துயர்வாளிகள்விடமூட
னீடியகொடிசிலையறவலவன்சிரநிலன்வீழக்
கோடகமுருளநிறைந்ததுசெம்புனல்கொடியோன்மேல். 228

வேறு.

சிலையிழந்துயர்கொடியிழந்துருடேரிழந்தயமறமிகும்
வலவன்மங்கியிடமெய்துளைத்தடருமாலின்வாளியினில்வாணனூர்
நிலையழிந்திடுபொழுதின்மற்றவனன்னைகேட்டறநெறியிலாள்
கலையிலாதளகம்விரித்தெழுந்தொளிருகண்ணன்முனெய்தினள். 229

நக்கினத்தொடுகுழல்விரித்தவணண்ணவேமிகநகைசெயாச்
சக்கரத்தவனணியேபொருசமரபூமிகழிந்தபின்
னுக்கிரத்தெதிர்வாணன்மால்விடுபகழியான்மெய்யுளைந்தமை
யக்கணத்தினறிந்தனன்கயிலாபதிக்கதிபதிபரோ. 230

வாணனுக்குயர்வரமளித்தருளீசன்வாளிநிறைந்திடுந்
தூணிதன்வெரிந்வீக்கிநற்சிலைதூயகையினிலங்கிட
வேணியிற்சசிகங்கைமங்கைவிளங்கவேயுரகங்களாம்
பூணுரத்தின்வயங்கிடப்புலியதளினுடைபொருந்தவே. 231

விடமமைந்தகிரீபமீதுயர்வியாழபூடணமிலகவே
நடமிடும்பதமிசையின்வச்சிரநற்சிலம்புபுலம்பிட
வடிவுடைத்திருமேனியின்னிறைநீறுவெண்மைவிளங்கிட
விடபமேதிகழ்துவசம்வானடரிரதமீதினிலேறினான். 232

கொன்றைதும்பைகரந்தைமத்தையெருக்குநன்மலர்கூவிள
மொன்றுசெஞ்சடைதிகழவேநுதல்விழிவயங்கிடவொப்பின்மான்
கன்றுநன்மழுசூலமங்கிகரங்கண்மீதுதுலங்கிட
வென்றுவின்சுடர்மானுமாமணியிரதமீதினிலங்கினான். 233

ஆகுவாகனமீதினைங்கரனெய்தவேயழகானதேர்
கேகயத்தினின்மேவியாறுகிரீடமார்குமரன்வர
வேகமாகியகுகியர்டாகினிவிஞ்சுபூதபசாசுகள்
சாகரத்தொலியஞ்சவாய்விடுபிர்மராக்கதர்தாமெழ. 234

விடமதாகியதாதுதாரைகள்விகடமாகியபிரமர்தாம்
படியின்மீதுயர்கூச்சுமாண்டர்கள்பயமிலாதவேதாளர்க

ளிடிகளஞ்சமுழக்குபூதர்மதர்வுடன்னிவரெண்ணிலார்
கடுவைநுங்கியகாலகாலன்முன்னேபடர்ந்துகலந்தனர். 235

முடுவென்மீதிடைடமருகங்கண்முழக்கியேவருவயிரவர்
துடிகைசச்சரிபம்பைகும்பிகைதிமிலைதுந்துமிதூயகோ
டிடிகளஞ்சமுழக்கமோங்கியவிரணியச்சினமெங்கணும்
விடையன்வந்தனன்விமலன்வந்தனனென்றவோசைகள்விஞ்சவே. 136

திரிபுராந்தககாலகாலசிவாசிவாவிடபாரூ
வுரகபூடணசசிசடாதரவுழுவையின்னுரியாடையா
யரகராவிமவானளித்தருளரிவைநாயகவென்றுதா
மிருமருங்கினுமெண்ணில்பூதகணங்கண்மேவியியம்பவே. 237

இறுதியின்னுலகேழுகின்னுதல்விழியினங்கியினிறவுசெய்
கறைமிடற்றிறையெண்ணில்பூதகணங்களோடுயர்கரிமுக
னறுமுகத்தவன்வயிரவத்திரளடரவானவரஞ்சவே
பிறையெயிற்றசுரேசன்வாழ்பதியெய்தினன்பிறிதிணையிலான். 238

வேறு

மயிலினுயர்குமரன்வயிறுபெரியவனோ
டயில்கள்கரமிலகவடரும்வயிரவர்கள்
கயிலையிறையினொடுகெடுகிவ்ரவரச
ரயமொடிபமிரதமளவிலகடவினர்கள். 239

சூலம்வலயமழுத்தூயகதைசுரிகை
வேலின்குலிசமுறவீசியுகவெழிலி
போலவடுகணைகள்பூதகணமலகை
மேலின்விடுகிருபர்வீரர்வெகுடலுமே. 240

பூதகணமலகைகுகியர்பொறிகளுக
வேதமுறுநயனரிருகைகதைகள்கொடு
மோதவிபகிரைகண்மூளைசிதறவுயர்
பாதமுரமொடியவீழ்வர்படியின்மிசை. 241

சீயமெனும்வதனர்திகழுமழல்விழியர்
வாயினுறுபுகையர்வாளினுறுமெயிறர்
நோய்களெனநலிவர்நூறுசிரசினர்கள்
காயுமயில்கள்விடமாள்வகரியினினம். 242

நெடியகதைகள்கொடுகிருபர்தலைதுணிய
முடிகள்சிதறவிழிப்பிறியமுதுகொடிய
விடிகளெனவறைவரிபமொடயம்னிதர்
குடர்கடனையணிவர்கொடியகுகியர்களே. 243

ஆசைதொறும்வடவையாகவயிரவர்க
ளுசிதனிலுமிழநாகர்விரதம்

வாசியுடனெரியமாள்வர்சிருபர்திர
ளோசையுறுகுருதியோடநிலமிசைய. 244

வாவுபரியினர்கள்சேரவயிரவர்க
ளுவினவரெரியநாசிதனிலுமிழ
வீவர்சிவர்கரியைவீறுபிரமதர்க
ளாவலுடனுகர்வராடிநிலமிசையே. 245

விதியொடமரர்களும்வெருவவயிரவர்கள்
கதைகள்கொடுபெரிகள்கரிகள்படவறைவர்
நதிகணிகர்குருதிபரவநடமிடுவர்
குதிகொள்குயிரொடுகொடியவலகைகளே. 246

தேர்கடனையெறிவர்சீறுகரிகடனை
வாரியுறவறைவர்வாசியுடன்வயவர்
வீரர்தலைகிளுவர்மேவுபிரமதர்கள்
பாரினடமிடுவர்பாறுகளுமுறவே. 247

வாயுவெனவறைவர்வாரியெனவளைவர்
தீயதெனவடர்வர்சீறுவயிரவர்கள்
பாயுமிவுளிகரிவீரர்படியின்மிசை
சாய்வர்தழலடரவேகுசருகெனவே. 248

கழைகொள்வரைகணிகர்காலவயிரவர்கள்
விழியினுமிழழல்கள்வீறியடரவுய
ரெழிலிகருகிநிலன்விழுவவிமையவர்க
ளழியுமுலகமெனவெருவியலறினரே. 249

வேறு.

பூதமாதாவிழிப்பொறிகொள்வேதாளமோ
டேதமார்பிரமராக்கதரிடாகினியுளோர்
தீதுசேர்கூச்சுமாண்டகர்சினம்மலியவே
காதினாரசர்கள்கதையினுன்மடியவே. 250

பரிகளைத்துகளுறப்படிமிசைப்பிசைகுவார்
கரிகளைக்கோடுகைகாலும்வேறுகவே
தரைதனிற்றுகள்செய்வார்தமனியத்தேர்களை
வரையிடத்தறைகுவார்வயிரவத்திரள்களே. 251

சோடுடைக்கரிகளின்குருதியைப்பருகியே
யாடுநெற்பரிகளின்றசையருந்திவெதோர்
சாடிவெஞ்சூரர்கடலைகளைத்திருகுவார்
பாடியங்கோடியேபிரமராக்கதர்பலர். 252

பூதவேதாளமாவயிரவர்பொங்கியே
பாதலம்வேர்பறித்தேபலவரையினுல்

மோதிவெங்கதையினுன்முடுகியேசாடவே
யாதவப்படைஞர்கில்லாதிரிந்தோடினர். 253

தோவினற்றேலினைப்போர்த்தவன்படைஞர்சூழ்ந்
தாலகாலம்மெனவடரவேயரசர்கள்
ஞாலமீதோடலுங்கண்டழனயநனுய்த்
தாலகேதனனலங்கைகொடேதாக்கினுன். 254

கயிலையங்கிரியெனக்கைனலந்திகழவே
சயிலநேர்பூதவேதாளடாகினியர்தஞ்
செயலழிந்தோடவேசெகதலந்தொலையவே
முயலகன்முதுகினின்றூன்முனேமோதினுன். 255

சிகையெழுங்கண்ணன்வெஞ்சிகரமேபோலுவான்
புகையுயிர்த்தேயலத்தாற்புடைத்திடலுமே
குகியரும்பிரமராக்கதர்களுங்குருதிவா
யுகஙிலத்தோடினரும்பருங்காணவே. 256

வடவனற்பிறழுகண்மதிவணனுஞ்சிலா
விடிகளோங்கலின்விழுந்தென்னமோதிடலுமே
கொடியவெங்கூச்சுமாண்டகர்களுங்குலையவே
கலகியேயோடினர்குருதிவாய்காலவே. 257

அரவெனச்சீறியேயலமெடுத்தரிமுனேன்
பரவையைக்கடையுமத்தினைநிகர்பயிரவர்
சிரமிசைக்கடிதடித்திடலுமேதிசைதொறும்
வெருவியக்கணஙிலத்தோடினர்வெட்கியே. 258

புரமெரித்திடுமரன்படைஞராய்ப்பொருமவ
ருரமிசைக்கிரியின்வீழுருமெனச்சசிவணன்
கரமெடுத்தலமுறக்கடுகியேமோதலும்
பிரமதப்பெயரினேர்பீதியோடோடினர். 259

வேறு.

சினியருட்சுதன்முனிவொடுந்தியதேரின்மீதுயர்சிலையினு
வனலுகுத்திமொசுகங்களையாசைதோறுநிறைத்திட
மூனமிகுத்தடர்பிரமராக்கதர்மூளும்வெஞ்சினடாகினி
யினர்கலங்கிமெய்குருதிநீர்கிலனிழியவெங்கணுமோடினர். 260

மாரன்வெஞ்சிலைகோலிநாணெலிவாளெடண்டமலிந்திடக்
கோரவெங்கணைநூறுகோடிவிடுக்கவெங்குருதிப்புனல்
வீரம்விஞ்சியகுகியர்பூதபிசாசர்மெய்யினிலருவியாய்ப்
பாரினேடவுளைந்துநொந்தவர்பாறினர்திசைதோறுமே. 261

சாம்பனெண்டிசைதோறும்வில்லுறுசாயகங்கள்விடுத்திட
பூம்பணிந்தருளீசன்வெம்படையோர்கண்மேனிதனிற்படத்

றும்பினுள்வருநீர்கள்போலுதிரங்கள்வந்துசொரிந்திட
நாம்புகோமினியென்றுமிச்சமரென்றுபாறிநடுங்கினர். 262

தாலகேதனன்மதனன்விஞ்சியசாத்தகிப்பெயரோனுயர்
ஞாலமெண்ணியசாம்பனோடிவர்நால்வருமடர்ந்தேபொர
வாவமாவிடமூண்டவன்விடுபடைஞரஞ்சிநிலத்தினிற்
காலின்முந்தியகாலினோடினர்கயிலையங்கிரிமீதரோ. 263

வேறு.

கூடுபூதகணமடங்கவோடுவேலைகொடியளா
மோடிமீளிமீதினேறிமுனிவர்தேவரஞ்சிட
நீடுதோல்கள்குரகதங்கணிருபரெங்குமடியவே
சாடினுள்பல்லாயுதந்தடக்கைதோறுமிலகவே. 264

கொடிகடேர்கள்குரகதங்கள்குஞ்சரங்கடுகளுற
முடிகொள்வீரர்சிரமனந்தமுகில்கொள்வானநிறையவே
சுடர்கொளாயுதங்கரங்கடோறுவீசியடருமக்
கடியளாற்பரித்தவோசைககனமுற்றுமுற்றதே. 265

அனங்கன்வில்லறுத்தலாயுதன்வயமழித்துவெஞ்
சினங்கனன்றுவந்தசாம்பன்மார்பினிற்சிலீமுக
வினங்கடுன்னவெய்துமாலினனுசனுவம்வெரினிறக்
கனங்கொடாரைபோலவாளிவெங்கணுங்கடாவினுன். 266

சிங்கவாகனத்தியங்கடார்ந்துபோர்செய்துதிறலினு
லெங்கும்வீரரிடைதல்கண்டியாதவக்குலப்பிரான்
மங்குல்போலவட்டதிக்குமறையவாளிபொழியவே
வெங்கணீலிபாறினுண்மெய்க்குருதியாறுவீழவே. 267

வேறு.

சங்கரன்விடுநீலியஞ்சிமெய்தளரவோடியதன்மைகண்
டைங்கரன்கதமுறுமனத்தினனுகுமீதினினேறியே
வெங்கயம்பரிவீழவெங்கதைகொண்டுமோதினன்வீரர்கள்
சிங்கம்வந்திடவெருவுமாகரிபோலவோடினர்திக்கெலாம். 268

வாளிவிட்டெதிர்சாம்பனோடரன்மதலைபோர்செய்துகதையினுல்
மூளும்வெஞ்சினமோடவன்பரிதேருருண்டிடமோதினுன்
மீளிபோல்வருசாத்தகிப்பெயரோன்விடுத்திடுகணையெலாந்
தூளியாகவடித்தனன்முசலத்தினுலுமைசுதனரோ. 269

மீண்டுவாளிகள்விட்டசாத்தகிவிஞ்சுதேருறுமாவெலா
மாண்டுவீழவடித்தனன்கதைதன்னினுலரன்மதலையே
மூண்டவெஞ்சினமுறவடர்த்திடுமெதனன்வெங்கணைமுடுகலும்
பாண்டுறும்மொருகொம்பினுனயில்பற்றியேதுணிசெய்தனன். 270

மீளவுங்கணைமதனனெய்திடவேவெகுண்டவனிரதமா
மாளவெங்கதைகொண்டுமோதினன்வண்மைசேர்கரிவதனனுங்

காளமாமுகின்மானுமெய்யொளிர்கண்ணன்முன்னவனுமிறை
மூளும்வெஞ்சினமோடலாயுதமோதியேயெதிர்மூந்தினன். 271

வந்தெதிர்ந்திமொயன்முன்னவன்மீதின்வெஞ்சினம்வந்துறத்
தந்தியானனன்முந்தியேயொளிர்தண்டுகொண்டுறமோதலு
மிந்துவண்ணன்முனிந்தலத்தின்விலக்கியேயெதிரெற்றிட
வந்திவண்ணனருட்சுதன்கதைகொண்டடர்ந்துதடுத்தனன். 272

கரிமுகன்கதமுறமுரண்கதைகொண்டுவானவர்காணவே
யரிமுனோனுரமிசையறைந்திடவடுசினத்தொடுசிவண
னெரிவிழித்திடிவரையினுற்றெனவிரைகடற்றிரையென்னவு
மரவமுற்றிடவரனருட்சுதன்மீதடித்தனனழலுற. 273

ஆகுவின்னுடன்மீதடித்துயரைங்கரன்ஒருகொம்பினி
னாகமுற்றிடிவீழ்வபோற்றிருநாதன்முன்னவன்மோதிட
வாகவந்தனினிற்கலானுயரண்டர்நோக்கிடவக்கணம்
வேகமோடெழிந்துபோயினன்விறலடங்கிவிநாயகன். 274

வேறு.

பூதகணமோடுகெரியானனனுடைந்திடவெகுண்டுபுகழ்சே
ராதவனளக்கரினிலங்குகவின்விஞ்சியிடவாறுமுகவ
னேதமின்மயூரமிசையேறியொளிராறுமகுடம்மிலகவே
யூதினன்வயங்கியவலம்புரியையண்டர்திரளோடியிடவே. 275

தண்டைமணிநூபுரமலர்க்கழலின்விஞ்சுதபனன்சுடர்தர
முண்டகமலர்ந்ததெனவெண்ணகைபொருந்தியமுகங்களிலகக்
கொண்டலினுறும்மிரவிபோலமயின்மீதொளிகுலாவவுலகோ
டெண்டிசையுமஞ்சிடவெழிற்சிலையினாணினையெறிந்தனனரோ. 276

நாணினையெறிந்திறுதியிற்பெய்மழைபோலவளைநற்சிலைகொடே
பாணமுயர்வானுலகமெண்டிசைகளும்பரவவெய்திடலுமே
தூணிகர்தாளுடையதும்பியொடுவெம்பரிதுணிந்துமிருபர்
பாணியொடுகந்தரமிழந்தனர்கவந்தநடமிட்டபடிமேல். 277

கோடுடையவெங்கரிகள்கொடியவழல்வாளிகொடுகொய்துகொடிசே
ராடகம்வயங்குமுருடேரின்வயமாவலவனற்றுவிழவே,
நீடுசரமேவிருபத்திரள்கண்மாளவிசிகம்நிறையவே
மூடினன்முன்னுளினடர்சூரனைவதைத்தருளுமாறுமுகவன். 278

சாம்பன்வில்லறுத்தவிர்கொள்சாத்தகியுரத்தெரிதழற்கணைவிடப்
பாம்புருவொழிந்தவன்மெய்யெங்குமுதிரப்புனல்பரக்கமுதுகிற்
போம்படிசுடர்க்கணைவிடுத்துயர்புராரியருள்புத்திரனனி
யேம்பலுறவூதினன்வலம்புரியையெண்டிசையுமஞ்சியிடவே. 279

காவிலணிதண்டைகள்கவின்கவினெனக்கனமெனத்திகழ்மெயின்
பீலியுறுதோகைகவினுற்றிடவயங்குவெரினின்பிறையணிந்

தாலநுகர்வோன்மகனமர்ந்திடவிலங்கியமயூரமதமாத்
தோலிவுளிவீரர்கண்மடிந்திடவடித்ததிருதூயசிறகால். 280

வீரமயில்வாகனனெடுங்கணைசொரிந்தவிறல்கண்டுமுனியா
மாரனுயர்தேர்மிசையின்வெஞ்சிலைவளைத்தெழில்கொள்வாளிபொழியச்
சூரனைவதைத்தவிறைதூயவிசிகத்தவைதுணித்துநெடிய
வாரியொலியஞ்சியிடவூதினனிலங்கியவலம்புரியரோ. 281

ஆறுமுகன்வெய்யவனடற்படைதொடுத்திடலுமச்சுதன்மகன்
மாறியனல்வெம்படைதொடுத்தவையறுத்துவளையூதியிடவே
யேறுளவன்மைந்தனியமன்படைதொடுத்துவிடவிந்திரைசுதன்
கூறியவிந்திரன்விறற்படைதொடுத்தவைகுறைத்தனனரோ. 282

வேறு.

காலனுயிர்கொண்டவிறைநல்கியருள்கந்த
னூறுமுகனெம்படைதொடுத்துவிடநன்கா
ராலிலையின்மீதினமரச்சுதகுமாரன்
சீலமலரோன்படைதொடுத்தவைசிதைத்தான். 283

கோலமிகுவள்ளிபுணர்கொண்கன்முனிவுற்றே
வேலினையெடுத்தெறியவேலைதனில்விஞ்சு
மாலமெனவேயமரரஞ்சினரிரிந்தார்
ஞாலமிசையோர்வெருவுதன்னவிலலாமோ. 284

கண்டைகள்கலின்கலினெனக்கனல்கள்சிந்த
விண்டலநடுங்கவடவெற்புமசைவெய்த
வெண்டவர்களஞ்சியிடவேயலரியென்றின்
மண்டலமுமின்மினியையொப்பவெதிர்வந்த. 285

சந்தன்விடுவேல்ககனமஞ்சவரலோடு
மிந்திரைதன்மைந்தனரன்வெம்படையெடுத்தே
மந்திரநவின்றுவிடமாவடவைபோலச்
சிந்துதழலோடுமவன்வெம்படைசிதைந்த. 286

வேலறவரன்சுதன்வெகுண்டுவரிவந்த
வாலநிகர்வெங்கணையடர்ந்துவிடலோடு
மாலின்மகன்மார்புநுதல்வாகுகரமெல்லாம்
காலமுகில்பெய்வதெனவேகுருதிகான்ற. 287

தீயுமிழும்வாளிவிடவேள்சினமிகுத்தே
வாயுவினின்மும்மடிவிசைத்தறையும்வாளி
தூயவுளமயான்மதலைமெய்யிடைதுரப்ப
வேயெனுமுன்மாமயிலோடேகினனிடைந்தே. 288

வேறு.

போதகவதனன்பூதபசாசர்புகைவாயர்
தாதவிழ்தொடைசேர்சண்முகனிவர்வெஞ்சமர்செய்தே

பீதியொடோடக்கண்டன னுயர்பிஞ்ஞகநாதன்
சூதனைவிடுகீதூய்மைகொளிரதந்தனையென்றான். 289

ஆதவனவிர்போலிலகியவிரதந்தனையாசில்
சூதன்விடச்சாமரைகுடைதிகழத்துவசம்வான்
போதவடர்ந்திடுபூதகணங்கள்புடைசூழ
நாதனெதிர்ந்தானுன்முகன்வானோர்நனியஞ்ச. 290

திங்கள்கடுக்கைகூவிளைகொன்றைதிரைவீசுங்
கங்கைவயங்குஞ்செஞ்சடைமீதிற்கவின்மல்க
வங்கையின்மானுமங்கியுமழுவுமழகாகத்
தங்கிடவம்பொன்னூபுரமுந்தாடனின்மேவ. 291

கரியுரியுடலிற்போர்த்தருண்முதல்வாகடன்மீதின்
வரும்விடநுகர்வாய்மதிவளர்சடையாய்மழுவல்லாய்
திரிபுரதகனாதக்கனல்யாகஞ்சிதைவித்தா
யரகரசிவனேயென்றடர்பூதத்திரளாட. 292

துந்துமிதக்கைதுடிகையிடக்கையறைபம்பை
நந்துயர்முரசம்படலிகைநன்பொன்னூசின்னஞ்
சிந்தவினொலியுமஞ்சிடவெண்டிக்கினின்மேவுந்
தந்திகள்வெருவப்பேரொலியெங்குந்தரவந்தான். 293

பிறையெனவளைவுற்றிலகுபிணாகங்கரமேந்திக்
கறையுறுகிரிபங்கட்செவிதிகழுங்கலன்மல்க
விறுதியினீரேழுலகையழிக்குமிறைவன்வா
னுறைபவர்மறுகவூதினனெண்சங்கினையம்மா. 294

இண்டைகொள்சடையனிந்துவினெழிலார்வளையூத
வண்டர்களண்டம்விண்டதுகொல்லென்றடர்நஞ்சை
யுண்டவன்முனிவுற்றேயிவண்வந்தானுலகோடு
மெண்டிசையுள்ளோரியாவருமுய்யாரெனநொந்தார். 295

பூதகணத்தோடேயிரதத்திற்பொலிவெய்தி
மாதொருபாகன்வானவருஞ்சவரலோடு
மூதையினில்லாதோடியபூளைதனையொத்தே
யாதவவீரர்களெண்டிசைதோறுமிரிவுற்றார். 296

நீருறுசடையன்முனிவொடுவரவேநெடுவானிற்
பாரினிலமர்வோரிரிவனகண்டேபைம்பொற்றேர்
தாருகன்முகெத்தாமரைமலரார்புயருனே
யேருறவெதிருஞ்செயலுறவந்தானெழின்மாயன். 297

சகபதியுறுநற்சதலிகையுயரக்கனகத்தேர்
செகதலமதிரச்சிலைவளைசார்ங்கந்திகழ்கையா
னுகவிறுதியிலேவருமரனெதிரேயுற்றேமைக்
சகனமுமறையக்கணைகள்பொழிந்தான்கனமேபோல். 298

சக்கரனெய்திச்சார்ங்கம்வளைத்துக்கணை தூவ
நக்கன்முனிந்தேநற்சிலைகோலியழல்வாளி
யுக்கிரமுறவேயெய்துதடுத்தங்குறுமேக
மிக்கவனிக்கண்பெய்ததுபோல்வாளிகள்விட்டான். 299

ஆலநுகர்ந்தவனெய்திடும்வாளிகளடரச்சீர்
மாலழல்வெங்கணைகொண்டுசிதைத்துயர்வளைவில்லா
னாலிருதிக்குமறைந்திடவேயுகமழைநாண
நாலிடைமங்கையர்நோக்கநிகர்த்திடுகணையெய்தான். 300

அரிவிடுகணைகளறச்சிவன்வெங்கணையெய்தார்ப்ப
விரவினெடும்படையெய்தினனிந்திரைகொழுநன்றான்
கரியுரிசெயுமிறைகாலனெடும்படைகைக்கொண்டே
வரிசிலைவளையவிடுத்தவைமாற்றினன்வளையூதி. 301

கடுவிடநுகரிறைகனகமணித்தேர்வலம்வந்தா
விடம்வருமாயவனிரணியவிரதமிருவோரும்
விடுபடையதனால்விண்ணகமெல்லாம்புகையாகப்
படியினொடெண்டிக்குறவனலெங்கும்பரவிற்றால். 302

அரியிவனரனிவனென்றயன்மகபதியிமையோர்க
டெரிவகையறிகிலர்சிந்தைதியங்கினருயர்தேரி
னிருவரும்வலமிடமெண்ணிலசாரிகைவந்தேவிண்
சொரிமழைபோனெடுவொளிபொழிந்தனர்சுராஞ்ச. 303

குழலிசைவாயனுமுமையவள்கொழுநனுமெய்தார்ப்ப
வழலுறும்வாளிகளம்புவியாசைவிண்ணளவாக
வெழிலிகரிந்தனவுடுவுமுதிர்ந்தனவிமவானுஞ்
சுழலநெடுங்கிரியசையவறண்டதுசூழ்வாரி. 304

கங்கைகொள்வேணியனுங்கடல்வண்ணனுமெய்தார்ப்ப
வெங்குநிறைந்திடுவொளிகளெண்டிசைதமைமூட
வங்கியுமங்கினவாயுவுமற்றனவடர்சீதந்
திங்களிழந்தனவிரவிசுழன்றனதிசைமாறி. 305

மலிதவமுனிவர்கண்மகபதிவிபுதர்கண்மனநொந்தே
நிலையிலையுலகினியழியுமெனச்சொலிநினைவற்றங்
கலையுறுபரவையுளமிழ்வுறுவங்கமிதாமென்ன
மெலிவுறுமுடலினர்வேதனுடன்பகர்வுற்றாரால். 306

எழுலகுண்டவனிவனவ்வேழுலகத்தை
யூழியின்மாய்ப்பவனிருவருமொன்றாயுயர்வோர்கள்
பாழிகொள்புயமீதிடைவலிகாட்டிப்படைவிட்டா
லேழையரெங்ஙனமுய்குவமென்றாரிமையோர்கள். 307

இமையவர்முனிவர்களிவ்வுரைகூறிமெய்மெலிபோழ்தின்
சமனிலவரிவிடுசாயகமெங்கணுநிறையச்சீ

ருமையவண்மகுணன்விழிக்கனல்பொங்கவுறுத்தேதான்
விமனலன்மெய்மீதினின்வாயுவின்வெம்படைவிட்டார்த்தான். 308

வேறு.

ஈசனெய்யனிலன்படையேழ்கடலீறிலாவடமேருவசைந்திட
வாசையெங்குமமர்ந்தபிறங்கல்களான்றெழுந்தமரங்கள்பறிந்திட
வீசியெண்டிசையுந்துகண்மண்டிடமேகபந்தியலைந்துகலைந்திட
வாசவன்கமலன்றிகழண்டர்கண்மாபயங்கொளவந்ததுமுந்தியே. 309

மாறில்வெம்பவனன்படைவிஞ்சியவாரியின்னயமுங்கிழிவெய்திட
வீறிவந்திடுசெய்கையறிந்துயர்வேதனையனும்வெஞ்சிலையின்விடு
பாறுவின்படைகண்டனிலன்படைபாரின்விண்டுவிழுந்திடவைமுகன்
சீறியண்டர்நடுங்கிடவில்லடர்தேயுயின்படைசென்றிடவுந்தினன். 310

மங்கைபங்கன்விடுங்கனல்வெம்படைவங்கமுந்திபசிந்துவரண்டிட
வெங்குமங்குல்சள்வெந்துவிழுந்திடவென்றொருடிந்துநடுங்கிடவெண்டிசை
வெங்கயங்கண்மெலிந்துகுலைந்திடவிஞ்சுமண்டமும்விண்டிடவும்பர்க
ணுங்குமெவ்வுலகங்களையும்மெனநொந்தலைந்துறவன்றிடவந்ததே. 311

தேயுவெம்படையெவ்வுலகங்களுந்தேயமுந்தியசெய்கைதெரிந்தெழின்
மாயவன்வருணன்படையுந்திடமாரியென்னவளைந்தழலின்கணை
யோயவெங்குமடர்ந்துயரும்பரினோடிவந்தரிவென்றுறையுள்புக
வாயதன்மைகள்கண்டுமுனிந்தனனாறுசெஞ்சடைதங்கியவண்ணலே. 312

பாவகன்கணையும்மறலுமுமைபாகன்விஞ்சியசெஞ்சிலையின்செயு
மாவகம்முறவெஞ்சுரவெம்படையாசையெங்குநிறைந்திடவெய்தலும்
வாவுகங்கையுமிந்துவும்விஞ்சியவாரியும்மனன்மண்டவசுந்தரை
தூவுகந்தரமுஞ்சுடவந்தது தூயவம்புவியின்னுயிர் துஞ்சவே. 313

பூதலந்திகழும்முயரெண்வரைபோதவெங்கனன்மண்டிடவெண்கணின்
வேதியன்சசியின்பதிவிண்ணவர்மேவருந்தவருள்ளமெலிந்திட
மாதுபங்கன்விடுஞ்சுரமன்னுருவாகிவந்துவளைந்திடகந்துகொள்
சீதரன்னதுகண்டுலகுய்வகைசீதம்விஞ்சுசுரந்தனையுந்தினன். 314

தாழியின்னிறையுந்ததியுண்டருள்சாமளன்விடுதண்சுரம்விஞ்சிய
வாழியின்வடவெங்கனலுங்குளிர்வாகிநொந்துகுலைந்திடமுன்செயு
மூழியென்னவடர்ந்திடுவெஞ்சுரமோடவெங்கணுமெய்தியடர்ந்திட
வேழமன்றுரிசெய்தவன்வெம்படைமீளவந்தரிமுன்னிவைசொல்லிய.

நீயுடன்றெய்த தண்சுரம்வந்தெனை நீயிவண்கொண்ட வெம்மையை
யொருவென, வோயும்வண்மையை யுன்னியெவண்டிசை யோடினுங்கு
ளிருள்ளடர்கின்றது, போயுயுந்திற மில்லையுன்மெல்லடிப் போதுநம்பி
யடைந்தனனென்றலு, மாயன்வெண்முறு வல்செய்துதண்சுரம் வாவெ
னுமுனகன்றிடவுய்ந்ததே. 316

வேறு.

தான்விடுவெஞ்சுரமஞ்சியகன்றிடுதன்மைகள்கண்டுமையாள்
கோன்விடமென்னமுனிந்துநெடுஞ்சிலைகோலியெதிர்த்துயரும்
வான்மணநடுங்கிடவிஞ்சியபாசுபதாத்திரம்வாங்கியொளி
பூனணிசந்துநிறைத்தடர்மூச்செழுபுகையுறவிட்டனனால். 317

மூன்றுசிரங்கரமாறுகொடுங்கனன்முதிர்விழியொன்பதுடன்
ஞேன்றியகொம்படைபூதபசாசுகள்சுற்றியுறக்கடுவே
கான்றுகொழும்புகையோடனல்வீசியகாலுறவேயுலக
மீன்றவன்முன்னுலகெங்குநடுங்கவெழுந்ததுபாசுபதம். 318

அனிலநிறைந்தனவொருதிசைகன்மழையாயினவோர்திசையின்
கனல்களெழுந்தனவொருதிசைபூதகணங்களனந்தம்வகை
யினமொடடர்ந்தனவொருதிசையெங்கணுமிடிகளுமஞ்சிடவே
கனவொலிவிஞ்சவெழுந்ததுகண்டைகறங்கியபாசுபதம். 319

சாகரம்வெந்தழலாகிவறண்டனதாரணிதாங்கியிடும்
நாகநடுங்கியலைந்தனவெண்டிசைநாகமிரிந்திடவே
மேகமெரிந்துவிண்மீனுமுதிர்ந்தனமேருவசைந்தனவா
னேகிடுமென்றுமெமிந்துசுழன்றனவீசன்விடும்படையால். 320

ஆசைகளம்புவியம்பரமுற்றவுமாசுகமுங்கனலும்
வீசிடவெண்ணிலபூதகணங்கண்மிடைந்துமருங்குறவே
பாசுபதம்வரவொண்டவரண்டர்கள்பதியயனேமுலகும்
நாசமுறும்மினியென்றநவின்றநடுங்கியிரிந்தனரால். 321

வேலையின்வடவைகலங்கிடவேயுயர்வெற்புமலைந்திடவே
காலன்வெருண்டிடவேயழல்வீசியபாசுபதக்கணைதா
ஞலிருதிசையுநடுங்கிடவருதலுநாகணைமீதமரு
மாலொளிர்நயிருதவத்திரம்விட்டனன்வரிசிலைகோலியரோ. 322

பங்கயமாதுறுமார்பினனெய்திடுநயிருதவத்திரம்வா
னெங்குநிறைந்துயரென்றுளிமின்மினியென்னவிலங்கிவருஞ்
சங்கரன்விட்டிடுபாசுபதக்கணைதன்னையிமைப்பின்முன
நங்கியெழுந்தரிவெரினுறுமாவமுள்ளுற்றநொடிப்பினரோ. 323

பாசுபதக்கணைபழுதுறநீடியபரவையினஞ்சைநுக
ரீசன்முனிந்துபினுகம்வளைத்துசுமாமழையென்னவொளி
ராசுகமாசைகடோறுநிறைத்திடவச்சுதன்மெய்யுதிரங்
காசினியெங்குநிறைந்ததுமகபதிகமலனேடஞ்சவரோ. 324

ஆகநிறைந்துயர்குருதிகள்கண்டயரச்சுதனகையிலக
மோகநெடும்படைவரிசிலைநாணெலிசெவியுறமூடுகிடலு
நாகமுரித்தவனிணைவறநின்றனனற்பவளக்கிரிபோல்
வேகமிகுத்திடுபூதகணம்பலவெருவியிரிந்தனவால். 325

பாணியிலங்கிடவேமழுமானிவர்பாவகனுற்றிகிநீர்
வேணியனினைவறநின்றமைகண்டுவெகுண்டிரதத்திடையே
வாணனெடும்புயமாயிரமோடெதிர்வந்துவயச்சிலையி
னாணொலிதிசையுறவெய்தனன்வாளிகணாகர்நடுங்கிடவே. 326

ககனமொடெண்டிசைகவினுறுபறவைகள்காசினிமேருவெலா
முகவிறுதியின்மழையாமெனவாளிகளுறவிடுவாணன்மிசை
யிகல்புரிமாயவனிடர்கெடயெழிலுறுகரமிசையிலகியிடுந்
திகிரியையேவினன்றிசைமுகன்முனிவர்கடேவர்கண்மகிழ்வுறவே. 327

சூரியர்கோடியெழுந்திடுதன்மைதுலங்கிடவேயுயரு
மேருவைவலம்வருகதிரெனவாணன்விளங்குபுயங்களெலாம்
பாரிடைவிழவிழுகுருதிகளொலியுறுபரவையினெய்திடவே
யாரியனேவியதிகிரியறுத்தனவண்டர்களார்த்திடவே. 328

மாறிலையெனவருதிகிரியுயர்ந்திடுவாணனடுங்கிடவே
வீறியதோள்களையொருநொடியிடுமுனறுத்திடும்வேலையின்வா
யேறுறுமிறைதெளிவெய்தியிலங்கைமன்னிலகியதலைகளெலா
நூறியகணைவலமாதவன்முன்னரினின்றுநுவன்றிடுவான். 329

மாதவவற்புதவச்சுதவண்டமளந்தருள்வாமனனே
வேதியவித்தகநின்னிருதாளைவிடுத்தொருதேவதையை
யாதியெனத்தொழுமறிவிலரமிர்தினைவிட்டடராலநுகர்
பேதையரொத்திடுவாரெனவேயுயர்பிஞ்ஞகனுரைசெய்வான். 230

சீறியெழுந்தமர்செய்விறன்மாவலிசேய்தசநூறெனவே
வீறுகரங்களினாலுகைவிட்டருளென்றரன்வேண்டவுய
ரேறிறவேன்றருண்மாலசுரன்னிடவீரிருகையறமுன்
மாறிலையாகியதிகிரியைவாவெனவந்துகையுற்றனவால். 331

அவுணர்பிரான்கரநாலொழியப்புயமாயிரமற்றிடவே
யுவமையிலாதுயர்திகிரியைவிட்டருளும்புருடோத்தமன்மேற்
றவரயன்வானவர்சதமகன்வெறியுறுதண்மலர்மாமழைபோ
லவனியினன்பொடுதூவினரந்தரதுந்துமியார்த்திடவே, 332

மூலமெனுங்கரியுய்ந்திடவந்தருண்முண்டகமின்கணவா
மாலரிகேசவநாரணவச்சுதமாயவன்முன்னரின்வந்
தாலநுகர்ந்தவன்வேண்டவியந்திடுமொழியறுக்குகிலா
நாலுகையிற்றொழுதேவிறன்மாவலிமைந்தனவின்றிடுவான். 333

கிரியுருவாயொளிர்பொற்கணனுருடல்கிழியவதைத்தனையா
லரியுருவாயொளிராடகன்மார்புபிளந்தனையவனருள்செய்க்
குரியபெரும்பதமருளினையெந்தையையும்படிமூவடிநீ
தருகுதியென்றிருதாளினளந்தனைதாரணிவானமெலாம். 334

பிற்குணமென்னைமயக்கவுனைத்தொழுபெருமையையறிகிலனென்
றற்குணமின்றொழிவித்தனைநேமியசுருதியினெறியினுறு

முற்குணமாதவராமனமாயவமுராரிமுகுந்தவுயர்
சிற்குணநாரணவச்சுதவற்புதசிதரவென்றனனால். 335

மாயவநீயருளத்திகழ்மாரன்மகனனிருத்தமனுக்
கீய்குவனென்மகளாயவுடாங்கனையெனுமினையென்றலுமே
பேயுயிருண்டவனன்றெனவேயுயர்பிஞ்ஞகன்மகிழ்வுறநற்
சீயரிகர்த்திடுவேளருளுங்குணசீலனடைந்தனனால். 336

மாரனருட்சுதன்வந்தடிபணிதலுமகிழ்வொடுமற்றவனை
யாரியன்மார்பினணைத்திடவேளுடனைவழிமெய்தலுமே
வீரியனுமநிருத்தமனவரடிவீழ்தலும்வாசமலி
தாருறுமுரமிசைசிந்தையின்மகிழ்வொடுதழுவினர்புளகமுற. 337

எதுகுலம்வாழநிருத்தமனுக்குடையென்னுமிளங்கொடியை
யுதவுவனென்றுயர்வாணனுரைத்திடவுதிரபுரத்தினுளோர்
கதலிநிறைத்தனர்கழைகளுயர்த்தினர்கமுகுகணட்டனரான்
மதமுறுகரிகுடரலகைகடைசையொடுவாரியவீதியெலாம். 338

பூரணபொற்குடமழகுறவேயுயர்பொன்னின்விதானமுறத்
தோரணநட்டனர்தீவிகைவைத்தனர்தூபநிறைத்தனரால்
வாரணமுற்றவரிற்றிடவாடுகவந்தமொடேமணிசேர்
தேரணியிற்றிகழவுணர்சிதைந்துடல்சிதறியவீதியெலாம். 339

நாசமுறுங்கணவோரைநினைந்தழுநாரியர்வீதியெலாந்
தூசுதிகழ்ந்திடவெய்தியமங்கையர்சோபனமேநவிலக்
காசணிகொங்கையர்நூபுரம்லிஞ்சியகாலினர்கடகமின
வீசினரிமசலம்வீறியகுருதிகளோடியவீதியெலாம். 340

அண்டரியக்கர்கள்சாரணர்சித்தரரம்பையர்நின்றனரா
கண்டலனென்கணனன்கயிலைக்கிறைநடலரசன்றன்மகன்
முண்டகமின்கணவன்முதலரசர்கண்முனிவர்களணிநிறையு
மண்டபமேவியிருந்தனர்வாணன்மகிழ்ந்திடவேயமரர். 341

மின்னியநவமணிவிஞ்சியபீடமிசைக்கணின்வேள்சுதனை
மன்னனிருத்தனெடுங்குணவுடையெனுமாதுமகிழ்ந்திடவே
துன்னியதொடைகவினுறவளர்தீபிகைதூபநிறைத்திடவே
யன்னமென்னடையினர்சாமரையெங்குமசைத்தனரழகுறவே. 342

அந்தணர்முனிவர்களோமநிறைத்திடவேயனிருத்தமமன்
னிந்துவின்வதனம்வயங்கிடநயனமிலங்குமுடாங்கனைதன்
சந்தரமிசையெழின்மங்கலநாணிருகையினணிந்திடலுந்
துந்துமிநந்துமுழங்கிடவம்மிமிதித்தனடோகையரோ. 343

மாயனருட்சுதனுதவியமைந்தனெடேயுடையாகியமான்
றேயுவைவலமுறவந்துபினெற்பொரிசிதறிமகிழ்ந்துயர்வான்
றாயவருந்ததிநோக்கிடவமரர்துதித்தனர்சுருதியினா
லாய்பவராசிபகர்ந்தனரந்தரதுந்துமியார்த்தனவால். 344

மின்னிடையாயவுடாங்கனையோடனிருந்தமன் விழுமியமால்
பொன்னடிமீதுபணிந்துயரும்விடையேறியபுனிதனயன்
றுன்னியவமரர்கள்பதியிவர்தாளினிறைஞ்சியெழுந்துசுடர்
மன்னுதன்மண்ணினமுந்தவணங்கினன்மதனனொடனைவரையும். 345

நாரமமர்ந்திடுவேணியனுன்முகனுகர்கடம்பெருமா
ஞாரணமோதியமாதவரண்டர்களன்புடன்மாயவனைக்
கோரமுறுஞ்செயல்செய்திடுவோர்கள்குலங்களைந்தவனிப்
பாரமகற்றுதியென்றுயராசிபகர்ந்தவர்போயினரால். 346

மங்கையுடாங்கனையும்மநிருத்தனுமனமகிழத்திரைகொள்
கங்கையுறும்பதிவாணனையுன்பதிகாவெனவேகழறி
வெங்கயமாவணிவீரரலாயுதனொடுமிடைந்துவரச்
சங்கொடுபேரிதழங்கிடவேதுவராபதிசார்ந்தனரால். 347

உக்கிரசேனனொடேவசுதேவனுவந்தெதிர்வந்திடவே
சக்கரன்மற்றவர்தாளினிறைஞ்சியெழுந்துதவங்கடலின்
மிக்கிடுதேவகிதாடொழுதேதிருமேவியபொன்மனையிற்
புக்கினனார்கலன்மெய்யினிறைந்திடுபோதமர்மின்பணிய. 348

மாரனருட்சுதன்வாணனளித்திடுமெங்கைதன்னொடெய்தி
வேரியுறுங்கமலத்திருவின்னடிவீழவிதர்ப்பன்மக
ளார்வமோடாசிபகர்ந்துடைமின்னினையன்பினணைத்திடலு
மேருறுமிரதியையடிதொழுதேமனையேகினன்வேள்சுதனே. 349

இடாரறவேயெதிரெய்தியுருக்குமியெழிலுறுகணவனிணை
யடிமிசையன்பினிறைஞ்சிடநாயகிதன்னையணைத்தனனு
லுடையெதிர்வந்துயர்முன்னவடாளினிறைஞ்சியுவந்திடவே
துடியிடையாரிருதேவியரோடுதுலங்கினன்வேள்சுதனே. 350

வாணசுரப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 1848.

---

105 - வது, மகதராஜன் வதைப் படலம்.

உலகெலாம்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்
தலகையினுயிர்செகுத்தரவினுடியே
சிலகையினிறுத்திபஞ்செற்றுமல்லர்க
டலகளைந்திடுமையன்றுளையேத்துவாம். 1

மாறிலாவிதர்ப்பர்கோன்பயந்தமாதுட
னூறியகலவிசெய்தவகைவிஞ்சவே
யேறுறுமிறையவனிடரைத்தீர்த்திடு
நாறுபூந்துழாயன்வீற்றிருக்கும்நாட்டனில். 2

வாரியிற்கதிரவன்வந்துதோன்றவே
யாரியனிருக்கினிலருக்கியமளித்
தேருறுமறையவர்க்கியைந்ததானங்க
ணீரொடுமளித்தனனிருபர்போற்றவே. 3

கோபமிலந்தணராசிகூறவே
சோபனமரிவையர்சொல்லவெண்ணிலாத்
தீபமுமடந்தையரெடுப்பத்தேன்மலர்
நாபியனிலங்கினனாகரேத்தவே. 4

சீருறுநவமணிசிறந்ததேரின்மேற்
றாருகன்கோல்கொளச்சங்குதுந்துமி
வாரிபோன்முழங்கவந்தியர்களேத்தவே
வீரியனிகரின்மண்டபத்தின்மேவினான். 5

வாசவன்கொணர்சபாமண்டபத்தனி
லேசிலாநவமணியிலங்குமாசனந்
தேசுறச்சத்திரந்திகழச்சாமரை
வீசவீற்றிருந்தனன்விளங்குமாழியான். 6

உத்தவன்சாத்தகியுயரும்வேளவன்
புத்திரன்சாம்பனோடலப்பில்பொற்புடை
வித்தகக்குமரர்கள்விளங்கவெண்மைசேர்
நித்திலப்பந்தரினிறைந்துசூழவே. 7

மீனினஞ்சூழ்ந்தவெண்மதியமானவே
யீனமிலரசரெம்மருங்குமொய்த்திட
மானவனிலங்கவானரம்பைநாணநற்
பானகுமொழியர்கீதங்கள்பாடினார். 8

பணவமோடிலகியதாளம்பாரினி
லிணையிலாவுருமிசச்சரியிரட்டவே
மணமலிமலர்க்குழலசையமாறிலாக்
கணைநிகர்விழியினார்நிருத்தங்காட்டவே. 9

மாதவரரசரெம்மருங்குஞ்சூழ்ந்திட
யாதவனிவ்வுளியிருக்குமெல்லையின்
பூதலத்தரசர்கள்விடுப்பப்போந்ததோர்
தூதனற்புதனவண்வந்துதோன்றினான். 10

வாயிலோரற்புதமனிதன்வந்தமை
யேயெனுமுன்னர்வந்தியம்பமாதவன்
றூயவன்றனைக்கொணர்கென்றுசொல்லலும்
நேயமோடனுகினனிருபர்தூதுவன். 11

வந்துமுன்வணங்கியவவனைமாயவ
னெந்தமாபுரியுனக்கிவணொன்முன்னரின்

முந்தியகருமநீமொழிதியாலெனச்
சுந்தரகேளெனத்தொழுதுசொல்லுவான். 12

தரணியிற்கொடுவினைதழைப்பவாழ்கின்ற
நிருபனுமகதர்கோனெறியையோவியே
திருவிலிசிறையிடத்தியங்குமன்னவ
ரிருபதினாயிரரேவவெய்தினேன். 13

நரகனையமரினில்வதைத்துநன்றிசா
லரசர்கள்சோடசவாயிரத்தவர்
பருவரலொழித்திடும்பரமவீண்டிவர்
தெருமரலகற்றுதியென்றுசெப்பினான். 14

மாரதர்வாண்முகநோக்கிமாயவன்
பேரிதவசனமேபேசுந்தூதன்சொல்
வாரிதியமுதநேரென்றுமுன்னமா
நாரதனவ்வுழிநண்ணினானரோ. 15

சுரர்முனியடைந்திடத்தூயமாதவ
னரசரோடெழுந்தவனடிவணங்கலும்
பரிவுடனாசிகள்பகரமாழையால்
வரிசையாராதனம்வழங்கினானரோ. 16

ஆதனத்தருந்தவனிருக்கவச்சுதன்
மாதவவெவணிருந்திவணின்வந்தனை
யோதுதியென்றலுமுயர்ந்தவொண்முனி
சீதரன்வியப்புறச்செப்பலுற்றனன். 17

தீதிலாவிந்திரப்பிரத்தஞ்சேர்ந்தியான்
யாதவநாயகாவெய்தினேனென
மாதவன்மகிழ்ந்துயர்தருமன்வண்மையை
யோதுதிமுனியெனவுரைக்கலுற்றனன். 18

அனுசர்கள்சூழ்ந்திடவறஞ்செய்தன்மனோ
வனசமார்திருவவண்வைகமாமணிப்
புனைசபாமண்டபம்பொருந்திப்பாரினைக்
குனிசெயாதுயர்ந்தசெங்கோல்கொடாள்கின்றான். 19

மதியிவர்வெண்குடைவயங்கமன்னவர்
துதிசெயத்துவாதசவாயிரத்தர்மா
சதுமறையறிபவர்தழைப்பவாழ்கின்றா
னெதிரிலாத்தருமனென்றியம்புவானரோ. 20

நீண்டகன்றழகெலாநிறைந்தகண்ணினா
டேண்டியவிளக்கெனத்தூயமாதவம்
பூண்டகற்புடையபாஞ்சாலிபொற்பமர்
பாண்டவர்க்கைவரைப்பரிந்துபெற்றனள். 21

தீவினையொருவருச்சுனற்குத்தென்னவன்
பாவையும்பன்னகன்பயந்தவூகியுந்
தேவகியருளியசெல்வநங்கையு
மூவரும்பெற்றனர்சுதர்கண்மூவரை. 22

இன்னவின்மைந்தர்களெய்தவேமகிழ்ந்
தொன்னலர்வென்னிடவுயருமாநெறி
துன்னிடத்தருமன்வெண்குடைதுலங்குமா
மன்னவர்திலகனுய்வயங்குநாட்டனில். 23

மறலிதன்னவையினிற்பாண்டுமென்னவ
னுறைவழியானவனுற்றகாலேயிற்
றிறலுடைகிருபனென்சேய்க்கென்செய்கைதா
னறியநீவிளம்புகென்றறையலுற்றனன். 24

நன்னெறியோம்பியேநடத்திவாழ்கின்ற
தன்னேயும்பயந்தியான்சமனுலோகத்தில்
மன்னுவதேழுமைவலாரிவாழ்பதிக்
குன்னுமுனெய்தயானுபாயங்கூறுகேன். 25

இன்னல்கணியவேயிராசசூயமா
மன்னநல்வேள்வியையமைத்துளானெனின்
மன்னுவன்மகபதிநகரையென்றுமன்
சொன்னசொல்லுதிட்டிரனறியச்சொல்லினேன். 26

தந்தைசொற்கேட்டுயர்தருமனுெந்திடுஞ்
சிந்தையன்பிதாவுயர்கதியைச்சேர்ந்திட
வந்தணரிலங்கவேயிராசசூயமா
மந்திரவேள்வியைவளர்க்கவெண்ணியே. 27

மாதவனிவையெலாமாயவன்றனக்
கோதியேபருவரலொழியவொல்லையின்
யாதவன்றன்னுடமெய்துவாயென்று
ஞதவின்வந்தனனமலவென்றனன். 28

சுரர்முனியிவையெலாஞ்சொல்லத்தூயவன்
சருமன்மாவேள்வியைநடத்தச்சார்துமோ
வரசர்தஞ்சிறையினையகற்றச்சேர்துமோ
வுரையெனவுத்தவனுணர்ந்துகூறுவர்ன். 29

இந்திரப்பிரத்தமாநகரினெய்திநற்
குந்திதன்சுதரொடுங்கூடிப்பின்னரின்
மந்திரமுணர்ந்துமேல்வருவசெய்கெனப்
புந்தியின்மிகுத்தவுத்தவன்புகன்றனன். 30

உத்தவனுரைநலனென்றவுத்தமன்
மைத்துனன்வயங்கியாள்வண்மைசேர்பதி

யத்திமாவிரதமோடனிகமெல்லவு
மொத்துமுற்செல்கெனவுரைபகர்ந்தனன். 31

மாதவனிவ்வுரைவழங்கவள்ளுவர்
போதகமிரதமாவனிகம்போர்மனர்
தீதிலாத்தருமன்வாழ்பதியைச்சேர்மினென்
ரேதியேயறைமுரசுததியொத்ததால். 32

மூரசொலியெண்டிசையுறலுமூரிமா
விரதமோடிபநிரையெண்ணில்வீரர்கள்
கரைசெயற்கரியதோர்களிப்புமல்கவே
தரையினிற்றுகள்விணிற்றுவவேகினர். 33

சூலம்வாள்கப்பணமுசுண்டிதோமரங்
காலவேலெழுமழுக்கணையமீட்டிமுட்
கோலொளிர்வரிசிலைவயங்கக்கொற்றவர்
ஞாலமேற்பரிகரிநடக்கவேகினர். 34

கரியினங்கருங்கடல்கடுப்பவேகின
பரியினநதியெனப்பரந்தெங்கணுந்
தெரிமணிவயங்கியதேர்கண்மங்குலின்
சுரருறுவிமானமேயேலத்தோன்றிய. 35

கொடிகுடைகவரிகண்மிடையக்கோதிலாப்
படியெலாமிருண்டிடப்பைம்பொற்றேர்மனர்
சுடர்மணிக்கலன்களாற்றுலக்கிக்காட்டுவ
வடர்மருளறவருமரியையேலவே. 36

நாகமேலமர்ந்தெழினலங்கொண்மங்கையர்
மேகமேல்வயங்கியமின்னைமானவே
யேகினரிணைவிழியிலகக்கேகையத்
தோகைபோன்மலர்க்குழலழகுதன்னவே. 37

குங்குமங்கருப்புரங்குழைத்தசந்தனம்
நங்கையரிருதனத்தணிந்துநாண்மலர்
மங்குலைச்சுமந்துகீழ்வளைவயங்கிடும்
பங்கயமிலங்கநற்பரியினேகினர். 38

சாலணிஞெகிழிகண்மிழற்றக்கைவளை
யோலமிட்டிலகவேயுவமைகூறொணா
நூலிடைநடங்கியநோக்கினுடவர்
மாலெழமலர்க்குழலசையவந்தனர். 39

காசணியிருதனங்கதிப்பவாசமே
வீசியகுழற்பினல்வெரினில்வீழமை
மாசுணமேலுறுமதியம்போலவே
பேசிலாவாநமிலங்கவெய்தினர். 40

கனகமேகலையல்குற்றேர்கொடேகவின்
குனிசிலைப்புருவமுங்கோட்டிக்கட்கணை
யனநடையணங்கனார்விடுப்பவாடவர்
மனமெலிந்திபமிரதத்தின்வாடினார். 41

கதமுறநடந்திடுங்கரியினங்களின்
மதமுறுமருவிகண்மண்ணின்மல்கிய
நதியெனப்பெருகவேநங்கைமார்கடம்
பதிகரமிருகையாற்பற்றியேகினார். 42

பாடகமிலங்கவான்பருதிவெம்மையால்
வாடியேவருவனிதையர்க்குவீரர்கள்
சேடகநிழலுறக்கிட்டித்தாங்கித்தம்
மாடகத்தூசவரடியினாக்கினார். 43

தாரணியுறுங்குழல்சரியவாநந
வேர்வழித்துச்செலுமின்னனார்கள்கைக்
காரணிக்கலுழியிற்காந்தன்கையினுட்
பேரளியுடனளித்தவர்பின்சென்றனர். 44

அந்தணராசர்கட்காசிகூறியே
குந்தியநடையினர்குடைகைதாங்கிநீ
டந்திகளிவுளிதேர்தையலார்திரள்
வந்திடவிலங்கியவழிகொண்டாரரோ. 45

ஔவியமவித்துநான்மறையினார்பொருள்
வெளவியசிந்தைமாதவர்கள்சூழ்ந்திட
வெவ்விடப்பணிமணிமிளிருநித்திலங்
கௌவியசிவிகைமேற்கற்கனேகினான். 46

உருக்குமற்கிளையவுத்தமியொண்மாமணி
வருக்கமார்சிவிகைமேல்வயங்கவானுளோ
ரிருக்கறைந்தெழின்மலர்தூவியேத்தவே
முருக்கிதழ்வாயினார்மொய்ப்பவேகினாள். 47

சத்தியவாமைசாம்பவதிகாளிந்தி
பத்திரைநாக்கினசித்துப்பண்மொழி
மித்திரவிந்தைமெய்விளங்கிலக்கணை
நித்திலச்சிவிகைமேனெறியினேகினார். 48

எண்ணிரண்டாயிரத்தேற்றநூற்றுவர்
பெண்ணருங்கலமனார்பிறங்குமாமணி
வண்ணமார்சிவிகைமேல்வாமமல்கிட
விண்ணவர்மடநலார்வெள்கவேகினார். 49

குயிலெனமயிலெனக்கோதிலோதிமத்
தியல்பெனவெண்ணிலாவெழில்கொண்மாதரா

ரயில்விழியிலங்கிடவயஈமெங்கணும்
புயல்வணன்றேவியர்மருங்கிற்போயினர். 50

மதிவணன் சாத்தகிமாரன்மற்றவன்
சுதனெழிற்சாம்பனேடிவரைத் தூயமா
வெதிருமொன்னலரைவிண்ணேற்றிவாரிசூழ்
பதியினைக்காவுமென் றுரைபகர்ந்தனன். 51

சாரதிதாருகனுகச்சக்கர
ஞாதமுனியொடென்பொற்றேரின்மேற்
பேரிதவெள்வளையொலிபெருக்கவே
மாரதர்திசைதொழும்வணங்கவேகினன். 52

ககபதிக்கதலிகைக்ககனமோங்கவான்
மகபதிமுதலினோர்மலர்கவேவே
நகபதிமருகன்வில்முறித்தநாரணச்
செகபதியேகினன்றேரின்மீதரோ. 53

சாமரைபுரளநற்றாளவெண்குடை
சோமனைநிகர்த்தெழிறுலங்கநீலமார்
மாமலையுச்சியின்வயங்குசெங்கதி
ராமெனக்கிரீடமீதமரவேகினன். 54

மன்னவர்மருங்குறவாசிதேர்கரி
துன்னவேவீரர்கணிறைந்துசூழ்ந்திட
முன்னமீரேழுலகளந்தமூர்த்திபொன்
சின்னவோசைகடிசைசேரவேகினன். 55

துந்துமிபடலிகைதுடிகையம்புலி
நந்துகாகளஞ்சினநகிபிகம்பலே
முந்தியபணவமாமுரசுபம்பைகள்
சிந்துவினெலிகெடமுழங்கச்சென்றனன். 56

கறையடியிடர்கெடக்கராவையட்டகோன்
மறையவராசிகள்வழங்கவான்மிசை
நிறையுமாதவர்நெடுந்தேவர்தூவிய
நறுமலர்வெறிநெறிநாறவேகினன். 57

இவுளிகளிபநிரையெண்ணில்வீரர்கள்
நவமணிநிறைந்திடநலங்கொடேரினம்
மவனியினெழுதுகளடர்ந்துபொன்னகர்
புவியினைநிகர்த்திடப்போயினனரோ. 58

வேறு.

துவனியினிலங்குமத்ததேசத்தையடைந்தேயையன்
றவர்களெண்சவுவீரப்பேர்ப்புரியினைச்சார்ந்தங்கோவி

நவமணிநிறைந்தேயோங்குநலமருநாட்டிற்சேர்ந்து
பவமிலவனசநற்பேர்ப்பதியினையொருவிப்போனான். 59

வேறு.

முரசிரைந்தெழுந்துமிமுழங்கிடவெழுந்தே
யரசர்திரடேரிடையமர்ந்துவரவேகிப்
பிரசமுமிழுங்கிரியிறுறுபிரயாகைச்
சரசுபதியென்னுநதிசக்கரனிருந்தான். 60

கூலமிசைவாளைகயல்சேல்கள்குதிகொள்ள
வாலொளிர்கொளும்வளைவராலொடுமெதிர்ப்ப
வேலையொலியஞ்சவறையுந்திரைவிசைப்ப
ஞாலமிசையோடியதுநன்னதிபரந்தே. 61

பங்கயமலர்ந்ததுறைதோறுமளிபாட
மங்கையர்குறங்குநிகர்வண்கதலியெங்குந்
தங்கிநிறையக்கமுகுசந்தனமரங்க
ளெங்குமிருபக்கமுமிலங்கநதிபொங்க. 62

தூயநதியின்கரைதுலங்கியபொழிற்கே
மாயனுயர்தேவியர்வயங்கிடவமர்ந்தா
ராயுமறைவேதியருந்தவர்களெல்லா
மீயுயர்பிறங்கன்முழையெய்தினர்விரும்பி. 63

வாசிகரிதேர்நிரையினோடிலகமன்னர்
பாசிழைவயங்கவருபாவையர்களோடும்
வீசுதிரையின்கரைவிளங்குகடிகாவி
லோசையுறுவேலையவனுற்றெனவமர்ந்தார். 64

வேறு.

சுகமுறுஞ்சுகஞ்சூழ்ந்திடுஞ்சோலைவாய்
பகடுறும்பகடெங்கும்பரந்தன
சிகையுறுஞ்சிகியின்னினஞ்சேர்ந்தபோ
னகையுறுங்நகைநாரியர்துன்னினர். 65

பவர்பகட்டினம்பாதவம்பேர்த்தெழக்
குவிதனத்தியர்கொட்புற்றிரிந்தன
துவரிபோலறைதும்பினவோசையாற்
கவனவொண்கவிவாவினகாவெலாம். 66

வேறு.

பயம்பயம்பிரித்தபாற்றந்தபாற்புறுங்
கயங்கயங்குடைந்திடக்கானமாமென
வியமபயம்புயத்தோரீஇச்சூதமேகச்சந்
தியந்திடங்கெய்தவந்தணர்கள்செய்தனர். 67

சாடரம்பைக்கனிசாடரம்மல்கக்
கோடரமொருவிக்கோடரமருந்திய
பாடரங்கினினலப்பாடரிப்பிணை
யோடரவிந்தமோடரியுற்றேறுதின. 68

ஆசினியாசினியணவநீண்டடர்
காசினியுறமதுக்கான்றகாசினம்
வீசினகதிரவிர்வீசினப்பொடி
பூசினகேசரம்பூசல்செய்தரோ. 69

போதில்காம்போதியைப்புகலச்சீகர
மேதிமேதினிக்கயமேவமாங்கனி
கோதியேகோதிலாச்சுகங்கள்கொஞ்சவே
யோதியோதியர்களொண்வீணையோதினார். 70

வேடனையுதவியமின்னொடெண்மருஞ்
சோடசவாயிரத்தொகையொடேசதங்
கூடியவனிதையர்குழாமுஞ்சேரமா
லோமொநதியினீராடலுற்றனன். 71

பொருப்பெனவளர்முலைத்தடத்திற்பூசிய
கருப்புரக்கலவைகள்கரையநூலினு
மருப்பநுண்ணிடையரச்சுதன்றன்னோடுமே
விருப்பமுற்றயவிளையாட்டின்மேவினார். 72

புதிதலர்பங்கயம்போன்முகத்தியர்
நதியினிற்படிந்தெழநாரம்விஞ்சிய
வுததியிற்றிருப்பலவுருவமாகிய
விதமெனவெங்கணும்விளங்கினாரரோ. 73

அளிதொடர்ந்தாடவேயனகனீருற
நளினமென்முகத்தியர்நாரணன்றனை
வளைபவர்மரகதமலையைச்சுற்றிய
வொளிர்கொளுந்துகிற்கொடியொத்துத்தோன்றினார். 74

அரிவையர்நதியினுளாடப்பொங்கிய
திரையினுளமிழ்ந்தசெங்கமலத்தேன்மலர்
வரிநெடுங்கண்ணினார்வதனமாண்பினைச்
சரியொவோமென்றயந்தாழ்வபோன்றவே. 75

மின்னியமுகிலெனவிளங்குமாழியான்
றன்னுபங்கயமலர்பறித்துச்சோர்விலா
வன்னமென்னடையவர்க்களிப்பவோர்மினாண்
முன்னமீங்கிலையெனமொழிந்துசீறினாள். 76

அரிவையர்சுற்றவேயயத்துளாடிய
கருமுகிலெனவொளிர்கமலக்கண்ணினான்

சரியிலாக்கரிபிடியினத்தொடுஞ்சல
மருவியவியல்பெனவயங்கினானரோ. 77

சுதைதருமொழியுடைத்தூயவாணகை
மதிமுகமடந்தையர்மருங்குசூழ்ந்திட
நதியினுட்குடைந்துயர்கரையினண்ணியே
புதியபொன்னாடைமால்புனைந்துநின்றனன். 78

வசகல்கிரியிசையெழுந்தவென்றெனக்
கேசவன்சென்னியிற்கிரீடமோங்கவே
மாசகல்கலன்மெயில்வயங்கமாழைசேர்
தூசுநன்மருங்கினிற்றுலங்கநின்றனன். 79

உழையெனும்விழியர்பொற்றூசுடுத்துமை
யெழிலிசூழ்மதியெனமுகமிலங்கநற்
கழையினைவென்றதோள்வயங்கக்கையினாற்
குழலினிற்புனலறக்கோதிநின்றனர். 80

நீலமார்கவரிபோனிறைந்தவோதியின்
கோலமார்மலரினையணிந்துகோதிலா
வேலைநேர்விழியின்மைவிளங்கமெல்லிதட்
சாலினூபுரங்கதிரெரிப்பநின்றனர். 81

ஒவியநாணவேயுருக்கொண்டோங்கிய
தேவியர்கலன்மெயிற்றிகழச்சூழநற்
கோவியர்துகிலொடுங்குருந்தினேறினான்
காவினன்மலர்சொயக்கருதியேகினான். 82

ஆசகன்மெய்யினல்லாரம்வில்லிட
வேசகன்முலையினிற்கலாரமின்னவே
வாசமார்கலவைகளணிந்துமாழையின்
றூசுமீமேகலைதுலங்கத்துன்னினார். 83

நாகமாரம்வளைநாளிகேரம்நீள்
பூகமாம்பிரமலர்பொலியுஞ்சண்பக
மேகமார்மாதவிமிளிருய்யானத்தின்
றோகைமாருடனிறைதுலங்கினானரோ. 84

கோகிலங்கூவிடச்சுகங்கள்கொஞ்சிட
நாகமேலளியினாதம்விஞ்சிடக்
கேகயமாடவேகிளர்ந்தசோலையின்
பூகமாங்கனியுதிர்த்தோடனோக்கினார். 85

குழலினாற்கேகயமொதுங்கக்கோதிலா
மொழியினாற்கோகிலமுடுகிப்பாறவே
யெழில்கொண்மாநடையினோதிமங்களேகிட
வழகியவணங்கனார்மலர்கொய்தாரரோ. 86

தளவுமென்வலம்புரிசரியின்மௌவறண்
ணளியுறுகருமுகையான்றபட்டிகை
இளர்வளைபாடலம்வகுளம்கேகைய
வளனுறுசாயன்மங்கையர்கள்கொய்தனர். 87

ஜீதநற்கீதமேகிளர்த்தக்கேழிலாச்
சூதமேற்சம்பரன்சூதன்காகள
நாதமல்கிடச்சகநாதன்றேவியா
மாதர்மாதருமலர்மகிழ்ந்துகொய்தனர். 88

வேலிணைவிழியினார்மிடைந்துசுற்றவே
மாலவரொடுமலர்பறித்துவண்மைசேர்
சோலையினிருந்துநற்றொடையல்சூட்டிநற்
பாலனமருந்தினன்பாவைமாருடன். 89

வெள்ளடைக்காயமுதருந்திவித்தக
வள்ளறன்றிருவுளமகிழ்ந்ததேவியர்
தெள்ளியவிளரியாழ்செங்கைதாங்கியே
யொள்ளியவசுணமும்வியப்பவோதினார். 90

தெரிவையர்புருவநற்சிலைகுனிக்கிலார்
மருவமர்குழலியன்மயிலனார்பெருங்
கருமைசேர்நெடுங்கணார்கற்புற்பாதவ
முருகநல்வீணைகையுறவங்கோதினார் 91

தம்புருநாரதர்தியங்கச்சூர்நிகர்
வம்பவிழ்குழலியர்மதுரகீதயா
ழம்புதவமிர்தெனவறையக்கேட்டரு
ளெம்பரனாயயாதவனின்புற்றனன். 92

ஆதவன் குடகடலுறவருக்கியஞ்
சீதரனளித்துருக்குமணித்தேன்முதன்
மாதர்கட்கத்தனைவடிவமாகியே
போதமரமளியிற்புல்லினானரோ. 93

மங்கையர்கொங்கைமார்பழுந்தமாதவன்
செங்கையினணைத்துநற்கலவிசெய்யவே
கங்குன்மின்னானுறக்கழிந்தபோலவா
னெங்குமூடிருளறவிரவிதோன்றினான். 94

வாரியிற்கதிரவன்வந்துதோன்றலு
மாரியனருக்கியமளித்தம்பொன்னினார்
தேரின்மேல்வயங்கிநற்சேனையார்த்தெழப்
பேரிகாகளத்தொலிபெருக்கவேகினான். 95

வேறு.

தூயபாஞ்சாலதேயமொருவிநீர்த்துறையிற்சங்கு
மேயுமாவிராடனுமெகன்றுவெவ்வினைகளெல்லாஞ்
சாயவேதருமமோங்குஞ்சக்கரப்பிரத்தமோவி
மாயன்மாதருமனுட்டின்வண்மைகண்டுவந்தான்மாதோ. 96

கன்னலொண்கதலிபூகங்கவினுறுபழனமெல்லாஞ்
சென்னெலின்பெருக்கமெங்குஞ்சிறந்திடவரம்பின்மீதி
னன்னம்வந்திருப்பச்சங்கமடரநித்திலங்கள்பாரின்
மின்னவேமணங்கொள்பூங்காவிளங்கியபலவுங்கண்டான். 97

மாதராநநங்கன்போலவலர்ந்திடுவனசவோடை
மேதிவீழ்ந்துழக்கவாளைவெருவியேகரையிற்பாயச்
சூதமேற்குயில்கள்கூவச்சுகவினமிழற்றவண்டி
னூதமேழிசையுநல்கநதிபரந்தோடக்கண்டான். 98

ஆலவாய்ப்புகையுந்தூயவந்தணர்வேள்விமுற்றுஞ்
சாலவாய்ப்புகையுமாதர்தமனியமனைகடோறும்
பாலுடனடிசிற்பாகம்பரிந்தபுகையுமோங்கிக்
கோலமார்வானிற்கொண்மூக்குறகியேயடரக்கண்டான். 99

ஆவெலாமலியத்தூயவந்தணர்மறைகளோது
நாவினுமகளுமெய்யும்விரசநன்னெறிகண்மல்கத்
தேவராலயங்களெங்குஞ்சிறந்திடுதருமனாட்டை
மாவின்வாய்பிளந்தானோக்கிமகிழ்ந்துமாநெறிசெல்வேலை. 100

வேறு.

தூதுவரோடினர்மாதருமன்னிடைதுன்னிமகிழ்ச்சியொடே
யாதவன்வந்தனனாரணன்வந்தனனுன்னிடரைக்களையு
மாதவன்வந்தனன்மாயவன்வந்தனன்வாமனன்வந்தனனஞ்
சீதரன்வந்தனனென்றிருகைதொழுதாடினர்சீருறவே. 101

கேசவன்வந்தனனென்றமிர்தச்சொல்கிளத்தியதூதுவர்கட்
காசகலுங்கலனுடையளித்துயரார்வமுறுந்தருமன்
வாசவனூருடனேயளகாபுரிநாணவிம்மாநகரந்
தேசுறவெய்தியலங்கிரதஞ்செயுமென்றுரைசெய்தனனால். 102

மன்னனுரைத்திடவள்ளுவரெங்கணுமாமுரசெற்றிடவே
துன்னினர்மாநகர்வீதிநிறைந்துதுலங்கிடவாடவர்கள்
கன்னன்மணங்கமழ்பூகமொடேவளர்கதலிகள்கதலிகைகள்
பொன்னினன்மாலைவயங்கிடநீடொடைபொலியநிறைத்தனரால். 103

தேரணிவாரணமாவுயர்மன்னர்சிறந்திடுவீதியெலாந்
தோரணமல்கிவயங்கினநித்திலமாலைதுலங்கிடவே
பூரணபொற்குடமெங்குமிலங்கினபொன்னின்விதானமுற
வாரணிகொங்கைமடந்தையர்தீபநிறைத்துமகிழ்ந்தனரால். 104

வீடுமகன்மனளித்தருள்மெல்லியலோடொளிர்வெண்ணகையார்
கூடவியாதவன்வந்தனனென்றுரைகூறமகிழ்ச்சியொடும்
பாடினர்பண்ணுறவேபணிநீர்கள்பரந்திடவீசியெழுந்
தாடினரோடினராடவரோடளியாடளகத்தியரே. 105

கோபுரமண்டபம்வேதிகைதுன்னியகோயில்வயங்கிடவே
தீபநிறைந்தனதுவசமிலங்கினதேவர்களூரெனவாய்த்
தூபநறும்புகைவிஞ்சியவெறிகமழ்தொடையல்விளங்கியதாற்
பாபமறத்திருவைகிடவேயரசாடருமன்பதியே. 106

பொன்னகர்மாசுறவேயழகெய்தியபுதுமணியாரமெலாந்
துன்னிவயங்கியபதியெழினோக்கிமகிழ்ந்தருள்குந்திசுதன்
பின்னவர்சூழவெழுந்துயர்தேர்மிசைபேரிகறங்கிடமா
மன்னர்மருங்குறவேயுயர்மாயனையெதிர்கொளவந்தனனால். 107

வாசிகலித்திடமதகரிபிளிறநன்மணியிரதங்களுறு
மோசைமிகுத்திடமுரசநெடுங்கொடியும்பரினுற்றிடவே
யேசில்புகழ்த்தருமன்னிளையோரணிகங்களுடன்னிலக
யோசனையொன்றுகடந்தெதிர்கொண்டனனொப்பிலவுத்தமனை 108

அன்புமுன்னுற்றிடவருவினைபின்னிடவனிகமதின்னடுவே
யென்புருகப்புளகம்மெயின்மல்கிடவெதிர்வருதருமனையே
துன்பமகற்றியசோதியெதிர்ந்தவனடியிணைதொழுதிடலுந்
தன்பதமீதுவணங்கியவரியின்மெய்தழுவினன்வீமன்முனோன். 109

வீமன்முனெய்திவணங்கியமாயனைமெய்யிருகத்தழுவச்
சோமனைநிகரிடுமாநமகபதிசுதனெனவாழ்விசயன்
மாமுகில்கண்டமயூரமெனக்களியெய்திடவருமவனைத்
தாமமழுந்துறமார்பினணைத்தனனியாதவர்தம்பெருமான். 110

மத்திரன்மருகர்களிருவருமெய்திவணங்கியெழுந்தவரை
யத்தியினரவினமர்ந்தருளச்சுதனன்பினுடன்றழுவி
நத்தொடுபேரிகறங்கிடவீதியினன்மணியிரதமிசை
மைத்துனமாரொடுமெய்தினன்மண்மிசைவானவர்மலர்சொரிய. 111

வேறு.

குந்திதன்மைந்தர்சூழக்கொடிகுடைகவரியோங்கத்
தந்திகளிவுளியீட்டந்தமனியத்தேர்கள்சுற்றத்
துந்துமிபணவஞ்சின்னந்துடிகைமாமுரசமார்ப்ப
விந்திரப்பிரத்தம்புக்கானிணையிலியாதவர்கள்கோமான். 112

மானெனவனத்தின்கூட்டம்வருவனபோலமஞ்ஞை
தானெனச்சதங்கைகொஞ்சத்தமனியஞெகிழியார்ப்பத்
தேனினம்விரும்புமாலைசெறிகுழலசையமாதர்
நானமெய்கமழவந்தார்நாரணன்றன்னைக்காண. 113

காவியுங்காயாம்பூவுங்கருமுகினிறமுநாண
மாவுறுமணித்தேர்மீதுவருகின்றமாலைநோக்கி
யாவியுநையத்தூசுமாழியுமவனிவீழ
வோவியம்போலநின்றாரொப்பிலாவுருவமாதர். 114

மாளிகைவாயிறோறுமண்டபமிசைகடோறுஞ்
சாளரநெறிகடோறுந்தாமரைமலரின்றுய்ய
வாளிணைவயங்கிற்றென்னமதிமுகங்காணநோக்கிக்
காளமாமுகிலொப்பானைக்கண்டிவைகழறலுற்றார். 115

ஓதுதற்குவமையில்லாவுருவமேயொளிரநீலப்
பூதரமென்னவோங்கும்புயலெழிலுடையனானை
சீதரன்றனக்குத்தூயதேவியராகிவாழு
மாதரெத்தவஞ்செய்தாரென்றுரைத்துளம்வாடினாரால். 116

நாரணனழகைநோக்கியிமைக்கிலாநயனராகிப்
பாரினில்வளைசரியபசும்பொனின்கலைகள்வீழ
வேறுறுமணங்கனார்களெழுதுமோவியம்போனிற்பச்
சீருறுதருமன்கோயிற்சேர்ந்தனன்றிருவின்கேள்வன். 117

வாருறுமுலையினார்கண்மங்கலகீதம்பாடக்
காருறுகுழலினார்கள்கருப்புரத்தீபமேந்த
வேறுறுமறையோராசியியம்பிடத்தருமன்கோயி
லாரியனெய்திக்குந்தியடிமிசைவணங்கினானால். 118

மருகன்வந்தவகையோடும்வணங்கிடக்குந்திதேவி
யுருகியமனத்தண்மெய்யினணைத்தவனுச்சிமோந்து
பெருகியவன்பினாலேபீதகப்பீடமீதின்
முருகவிழ்தொடையான்வைகமுகமலர்ந்தாசிசொன்னாள். 119

தூயபாஞ்சாலன்பாவைசுபத்திரைதென்னன்பெற்ற
வேயுறுமிருதோணங்கைமின்னிடையுலூகியோடு
மாயவன்மலர்ப்பாதத்தின்மகிழ்வினால்வணங்கிநிற்ப
வாயிரநாமத்தையனாசிகள்பலவுஞ்சொன்னான். 120

ஒருகையிற்குன்றேந்தையனுயர்சுபத்திரையாநாமப்
பொருகயல்விழியாள்பெற்றபுதல்வனாமபிமன்றன்னை
மருகனென்றணைத்துமாழைவயிரநற்கடையந்துய்ய
விருகையிற்சேர்த்துமார்பினணிந்தனனிலங்குமாரம். 121

துன்னுபொற்கலன்கண்மல்குந்துரோபதைசுதரைவர்க்கும்
பன்னகவரசன்பாவைபயந்திடுகுமரனுக்குந்
தென்னவன்மகடன்சேய்க்குஞ்சிறந்தபூடணங்களெல்லாம்
பின்னைதன்மணாளனீந்துபெரிதுவந்திருந்தான்மன்னோ. 122

சுந்தரவிதர்ப்பன்பெற்றவுருக்குமற்கிளையதோகை
நந்தணிகாத்தராயநங்கையருடனுமெய்திச்

சிந்தையின்மகிழ்ந்தருந்திதேவியையிறைஞ்சலோடும்
முந்தியமகிழ்வினாலேமொழிந்தனளாசிமன்னோ. 123

உருச்சமனிலாதமெய்யளுருப்பிணிமுதலோர்பாதத்
தருச்சனைசெய்துதுய்யவருச்சுனன்றேவிமாருந்
திருச்சமனென்னதோன்றுஞ்சிறந்தபாஞ்சாலிதானும்
மருச்சுருளளகந்தாழவணங்கியேமகிழ்ந்தாரன்றே. 124

வந்தடியிறைஞ்சுந்தூயதுரோபதையபிமன்மாதாச்
சுந்தரவுலூகிதென்னன்றோகையரிவர்கடம்மை
முந்தியவுவகையோடுமுருப்பிணிமுதலாமாதர்
சந்தணிமுலையினாரமழுந்துறத்தழுவினாரால். 125

தவர்களினதிகனாயதவுமியமுனிவனெய்த
வுவமையின்மாயனெய்திவணங்கலுமுவந்தநெஞ்சன்
சிவனிடர்களைந்ததேவதேவனுக்காசிகூறி
நவமணியிலங்கும்பீடத்தமர்ந்தனனவையிலாதான். 126

கர்க்கவொண்டவனும்வீணைகரத்துநாமுனியுமெய்த
வர்க்கியமளித்துத்தன்மனுசரோடடியின்வீழ
வற்கலைமருங்குசுற்றுமாதவர்மறையின்விஞ்சுஞ்
சொற்களினாசிகூறிச்சுவணபீடத்தினுற்றார். 127

சரியிலாத்தவர்க்குவெவ்வேறிருப்பிடமளித்துத்தாழ்வி
லரியுளமகிழ்ந்துதுய்யவறுசுவையடிசிலன்னங்
குருகுலத்தைவரோடுங்கூடியாண்டமுதுசெய்தே
யிரவிமேற்கடலின்வீழயாவருந்துயின்றாரன்றே. 128

தினகரனுதயஞ்செய்யச்சிறந்திடுமுனிவர்சூழக்
சனகமார்மண்டபத்திற்கவரிகணிறைந்துவீச
வனகன்வீற்றிருப்பத்தன்மனுசர்களுடனுநீதி
புனைகவினரசர்சுற்றும்பொருந்திடவிருந்தவெல்லை. 129

சுந்தரன்வதனநோக்கித்தூயமாதருமனெந்தன்
றந்தையாம்பாண்டுவேந்தன்சமனுறையுலகமேவி
யிந்திரன்பதியினெய்தவிராசசூயத்தின்வேள்வி
முந்தியான்முடிக்கும்வண்ணமொழிகெனமுராரிசொல்வான். 130

செயலழித்தரசர்தம்மைச்சிறையிலிட்டவனியாளுஞ்
சயிலநேர்புயத்தனானசராசந்தன்றன்னைச்செற்றா
வியல்புடையிராசசூயவேள்வியையியற்றலாமென்
றுயராரிகூறக்குந்திகான்முளையுரைக்கலுற்றான். 131

அதிரதவரசர்தம்மைச்சிறையில்வைத்தவனியாள்வோன்
மதியமர்சடையோனாலும்வதைக்கொணாவலிமைமிக்கோ
னெதிரிலாமகதர்கோனையாவரேகொல்லவல்லா
ருததிசூழ்துவரையாளுமுத்தமவுரைத்தியென்றான். 132

தீமையில்செங்கோலோச்சித்திருவுறவுலகமாளுங்
கோமகன்மனத்திஞேர்ந்துகூறியவசனங்கேளா
வீமஞன்மகதன்வீயவகைசெய்வேன்வெருவலென்று
தாமரைமலர்மேன்மங்கைநாயகன்சாற்றிஞல். 133

அரியிவைகூறத்தன்மனறனிலாமகதர்கோனைத்
திருவுறைமார்பாநீயேசென்றிவன்றன்ஞற்செற்று
விரிவுளவிராசசூயவேள்வியைமுடிப்பாய்வீம
ஞரமுளவிசயஞேடன்னடைக்கலமென்றேயீந்தான். 134

தருமனீதுரைத்தியாமுன்சரணமேகெதியாய்வாழ்வோங்
திருவிஞயகனேகாத்தியென்றுசென்றடியின்வீழ
வரியிருகையிஞரவணைத்துளமார்பழுத்தி
நிருபவுன்னிடரையெல்லாம்நீக்குவனென்றுசொன்ஞன். 135

குறைவிலாத்தருமன்றன்னையிருத்திநீயென்றுகூறி
யிறையவன்வீமஞேடுமிந்திரன்சிறுவஞேடும்
மறையவர்வேடந்தாங்கிமகதனைவதைக்கவெண்ணி
நெறியுறுவரையுங்காஞநீங்கியேகடுகிச்சென்ருன். 136

வேறு.

திருவிசையத்தொடுதிகழுமார்பொளி
ரரிவிசையன்கவியனுசஞேடுமே
வருவிசைவாயுமும்மடங்குமானவே
கிரிவிரசன்னகர்கிட்டிஞரோ. 137

சரியிலாமண்டபந்தரளவேதிகை
பருமணிவயங்கியபசும்பொற்கோயில்கள்
கிரிநிகர்சிகரங்கள்கிளர்ந்துதோன்றிய
புரியினினன்மையைப்புகலலாவதோ. 138

முரசொலியுருமெனமுழங்கவெங்கஞ
மரசர்கடிறைகொணர்ந்தளிப்பவாஞயர்
புரிசையிஞஞ்சில்கள்பொலிந்துதோன்றிய
வரைசெறியிருபுயமகதன்வாழ்பதி. 139

காரினமெனக்கடகளிறுதுன்னநற்
பாரினிற்கோடகந்துதையப்பன்மணித்
தேரினம்வயங்கிடச்சிறந்தபல்லியம்
பேரொலியுலகெலாம்பெருத்ததாமரோ. 140

எண்டிசையினுஞ்சமரெதிர்ந்துவென்றுயர்
மண்டலத்தரசரைச்சிறையில்வைத்தெழிற்
குண்டலமறையவர்குழாங்கள்சூழ்ந்திடத்
திண்டிறன்மகதன்மாமகஞ்செய்கின்றனன். 141

தவத்தினர்மருங்குறத்தானமெண்ணில
புவித்தலமறையவர்க்களித்துப்பொன்னுறு
பவுத்திரமொளிவிரற்பரவவெண்குடை
கவித்திடுமகதர்கோன்மகஞ்செய்காலையின். 142

சரியிலாமறையவர்வேடந்தாங்கிய
வரியுடனருச்சுனன்வியப்பவாடக
வரையிவரெயிலினைமுறித்துமாருதி
புரியிடைநெறியிடப்போயினாரரோ. 143

வீதியிற்கவினெலாம்விளங்கநோக்கியே
மாதவர்மலியமாமகஞ்செய்காலையின்
வேதியரெனத்திகழ்வேடந்தாங்கினோர்
தீதுறுமகதன்முன்சென்றுநின்றனர். 144

வெற்பெனும்புயனிடிவெருவிவீழ்ந்திடச்
சொற்பகர்மகதர்கோன்றூயவேதிய
ரற்புதரிவரெனவறைந்துமற்றவர்
பொற்பதம்பணிந்தவண்போதுமென்றனன். 145

மாதவர்மறையவருறையுமண்டபத்
தாதனத்தமர்கிலாவந்தணாளரை
வேதியர்குழுவினின்மேவலீரிவ
ணேதுநுங்கருத்தெனவிறைவன்கூறுவான். 146

நீண்டகலவனியினிருபர்மண்மிசை
மாண்டிடப்பொருதுமாமகஞ்செய்தேயிவண்
வேண்டியவதனைவேதியர்க்குநல்குவா
யீண்டியாங்கேட்குவதீதியாலென்றான். 147

மறையவனிம்மொழிபகரமாகத
னறைகுதிர்வினவியதருள்வனென்றுநீ
ருறைதருகுண்டிகையுதகம்பண்ணவே
யிறைவன்முன்கரத்திடையேந்தினானரோ. 148

ஈகுவன்வேண்டுவதியம்புவாயென
வேகமுந்தியதிறல்வீமனெய்தியே
யாகவத்தானநீயருடியென்றலு
மாகதன்முகிணகைமலரக்கூறுவான். 149

வேதியர்க்கடாதவெஞ்சமரம்வேண்டினு
மீதலுக்கிசைவனேவென்னவீமனும்
பூதலத்தரசன்யான்பொருவனுன்னொடெங்
காதுதற்கேகெனக்கழறினானரோ. 150

ஏவலான்றமயனீதியம்பலோடுமே
சேவலானெனமனஞ்சீறிமாகதன்

மூவர்நீரரெனமொழிதிராகவ
மீவனானென்றலுமிறைவன்கூறுவான். 151

இவரெழிற்றருமனுக்கிளையகொற்றவர்
துவரையிற்றேவகிதோன்றல்யானென
வுவரியின்விடமெனக்கனன்றன்றூழியின்
சிவனெனமாகதன்சீறிக்கூறுவான். 152

நீயெனக்குடைந்துயர்நெடியமால்வரைத்
தீயிடையொருவியேதிரைகொள்வேலையிற்
போயுயிருய்ந்தனைபோருக்காளலை
வாயுவின்மதலைபோர்வல்லனோவென்றான். 153

மகதர்கோனிவ்வுரைவழங்கமாருதி
நகையுறப்பொருதுனைத்தெறுவனானென
மிகமுனிந்துயருமாவேள்விச்சாலைவிட்
டிகல்புரிநிலத்திடையேகினானரோ. 154

தும்பையின்மலர்மகுடத்திற்றோன்றநற்
செம்பொனார்கச்சினைமருங்கிற்சேர்த்தியே
யும்பரும்வெருவிடவுயருமாகத
னிம்பரின்மடங்கல்போலெதிர்ந்துநின்றனன். 155

மந்தரமெனவயங்கிரண்டுமொக்கதை
வெந்திறன்மகதனும்வீமனும்பொரத்
தந்திடவிருவருந்தடக்கைபற்றியே
சிந்தையிற்கதமுறச்சென்றுதாக்கினார். 156

தண்டுகைசுழற்றியெதிர்தாக்கினர்கண்மென்மே
லண்டர்கள்வெருக்கொளவடித்தனர்கள்கண்டு
மண்டிடவிழித்தனர்கள்வாயினொலிமண்விண்
ணெண்டிசையுமுற்றனவிடிந்தநிலமெங்கும். 157

அதிர்த்தனரடர்த்தனரடற்கதைகள்கொண்டே
குதித்தனர்கொதித்தனர்கள்கோளரிகள்போல
வெதிர்த்தனர்நகைத்தனரிடத்தினும்வலத்து
மிதித்தனர்கள்சாரிகைவிழிக்கனல்பிறங்க. 158

வீரமுறுமாமகதராசனிவன்விஞ்சு
மேருறவயங்கவெதிர்வீமனிவனென்றே
யாருமறியாவகையடற்கதைசுழற்றிச்
சாரிகைதிரிந்தனர்தடக்கிரிகண்மான. 159

சக்கரமெனச்சுழல்வர்சாரிகைகண்மாறி
யுக்கிரமுறக்கதைகொடோடுவரடித்தே
முக்கணனுமஞ்சிடவதிர்ப்பர்கண்முழக்குந்
திக்குறுமதக்கரிசெறுத்தெதிர்வதொத்தே. 160

மாமகதராசன்வயிரக்கதைசுழற்றி
வீமனுரமீதிடிவிழுந்ததெனமோதக்
காமன்மகன்முன்னவன்முனிந்துகதைகொண்டே
பூமியதிரப்பகைஞன்மார்பிடைபுடைத்தான். 161

கடந்தருமதக்கரியெனக்கதமனத்தின்
மிடைந்துவருமாகதனுவீமனுமெதிர்ந்தே
யடர்ந்தசனியஞ்சிடவடித்தெதிர்தடுப்ப
வொடிந்தவிருவோர்கரமுறுங்கதையிரண்டும். 162

முரணுறுமணிக்கதைமுறிந்துவிழலோடு
மிருவருமெதிர்ந்திருகரங்களைமுறுக்கி
வரையினிடிவீழ்வதெனமார்பினுமுகத்துங்
குருதிசொரியக்கடிதுகுத்தினர்களொத்தே. 163

விக்கிரமவாலியும்விளங்குகதிரோன்சேய்
சுக்கிரிபனும்பொருவதென்னவுயர்தோளா
ருக்கிரமுறக்கைகொடுரத்தின்மிசைகுத்திக்
கக்கினர்செழுங்குருதிகாதியகளத்தே. 164

மகதன்முனிவெய்தியுயர்வீமனைவலத்தா
லிகல்புரிநிலத்திடையெடுத்துவிண்ணெறிந்தான்
ககபதியெனக்கடிதினெய்தியொருகாலாற்
பகைஞனுரமீதுபவனன்சுதனுதைத்தான். 165

உதைத்தவனுரத்தின்மகதன்றுருமுபோலக்
கொதித்துரமுறுங்கைகொடுகுத்துதலும்வீம
னெதிர்த்தவன்விழும்படியுதைப்பவிமையோர்க
டுதித்துமலர்தூவினர்கள்சூரரிவரென்றே. 166

தெழித்துவருமாகதனைவீமனெரிசிந்த
விழித்தவனடித்துணைபிடித்தவனல்வீர
மழித்தொருகரங்கொடுசுழற்றிமிகவார்த்தே
கிழித்தனன்விண்ணோரரிகிரீடிமகிழ்வெய்த. 167

இருபிளவதாய்மகதனிம்பரின்விழுந்தே
யரஞெநெடித்தலைகைசுற்றியவணங்காஞ்
செரையுடல்பொருத்தசெயலாலுருவுகூடி
வரையினைநிகர்த்துவிறறுன்னவெதிர்வந்தான். 168

பிளந்தமெய்பொருந்தியுயிருற்றுயர்பிறங்கல்
வளர்ந்ததெனவெய்திவருமாகதனைவீமன்
கிளர்ந்துசினமோடவனையுற்றுடல்கிழிப்பத்
தளர்ந்திலனெழுந்துசராசந்தன்மிகவார்த்தான். 169

கண்ணினிமைகூடுவெமுனேயுடல்கலந்து
விண்ணவருமஞ்சமகதன்னெதிரவீம

னெண்ணிலதுமீளவுமெதிர்ந்துமெய்கிழித்தே
மண்ணிலிவன்மாள்கிலனெனுமனமுளைந்தான். 170

கூறுபடவேவடிவுகூடிவருவோனை
வேறுவகைசெய்வகையில்வீமன்முகநோக்கி
யீறிலிறைசாயையையெடுத்துகிரிலங்கக்
கீறியடியின்னுனிபிடந்திடவெறிந்தான். 171

சிறந்தவரிசெய்தவகைதிண்டிறல்கொள்வீம
னறிந்துமகதன்றலையின்மீதினடிசேர்த்தே
யிறந்திடவுரங்கொடுகிழித்தவனெறிந்தான்
மறந்தசவராடவிமையோர்மலர்கடுவ. 172

வேறு.

மூராணுறுமகதராசன்முடியின்மேலடிதான்வீழத்
தரணியின்மடிதலோடுந்தருமனுக்கிளயவேந்தன்
வருணைமூற்றிலங்குகின்றவாசவன்மைந்தனோடு
மரணைமக்குன்றாளென்றேயச்சுதனடியின்வீழ்ந்தான். 173

அடியினிலிறைஞ்சத்தன்மனனுசரையணைத்தன்பாரும்
வடிவுடைமாயன்றன்னைமகபதிசிறுவனோக்கி
மிடலுடைவீமன்கையாற்பிளப்புண்டமகதன்வீறி
யுடலுயிர்மாயாதொன்றியெதிர்ந்ததையுரைத்தியென்றான். 174

இந்திரன்சிறுவன்கூறவிந்திரைகொழுநன்சொல்வான்
மந்தரவரைபோன்மாண்டுகிடந்தவிம்மகதராசன்
றந்தையெண்டிசையுமாள்வோன்றனயரில்லாமையாலே
கந்தனூர்தந்தையெய்தக்கடத்திடைத்தவஞ்செய்தானல். 175

தனயரைவேண்டிவேந்தன்றவம்பலகாலஞ்செய்ய
வினியனுய்விடையிலேறுமிறையவனெய்தியானுன்
னினைவுறுவரந்தானீவனிகழ்த்துதியென்றலோடும்
வினையறநோற்றுநின்றவிறலுடைமன்னன்சொல்வான். 176

மாதுபங்காளவெற்கோர்மைந்தனையருடியென்னச்
சூதவென்கனியொன்றீந்துன்றுலங்கியதேவிதானே
யீதினையருந்தனேரிவிருபதாயிரத்திற்பாதி
போதகப்பலத்தையெய்தும்புதல்வனுண்டாகுமென்றான். 177

அரனிவைகூறியீந்தவாம்பிரக்கனியைவேந்த
னிருபிளவாக்கித்துயவிரண்டுதேவியர்க்குமீயத்
தெரிவையர்மகிழ்வினோடுமருந்திடச்சிறிதுநாளிற்
கருவயிற்றெளிர்தலோடுங்காவலன்களிப்புக்கொண்டான். 178

மாங்கனிப்பிளவைவாங்கியருந்தியமடநல்லார்க
ளேங்கிடவொருகண்கைகால்செவியுடனிதயம்பாதி

நீங்கியகுழவியாகியிருவரும்பெறவேந்தி
பாங்குறுமன்னனேக்கிப்பருவரலெய்திச்சொல்வான். 179

சிகியுறுகரத்தனீந்தசிறந்தமாங்கனியினுலே
மிருவலிமதலேதோன்றிவிளங்குமென்றருளப்பொய்த்தீண்
டிகழ்வுறப்பிறந்தபாதியுருபரையிரவினேகி
யகழிடையெறிமினென்றுசெவிலியர்க்கரசன்சொன்னுன். 180

அரசனீதுரைக்கப்பாதியுருபரையங்கையேந்தி
விரைசெறிகுழலினுர்கள்வீதியினிரவினேகிக்
கிரிசெறிந்தெனவேதன்னிக்கிளர்ந்தகோபுரங்களோங்கும்
புரிசையின்புறத்திஞழ்ந்தவகழிடைப்போட்டாரன்றே. 181

அகழினிலிடிபோற்பாதியுருவினரரற்றக்கேட்டு
நகரியைச்சூழ்காப்பாளாமரனுடனடித்தநங்கை
புகையுறவிழித்துத்தோன்றுமலகைகள்புடைசூழ்ந்தெய்த
விகழ்விலாச்சரையாநாமக்காளிவந்தெய்திஞளால். 182

ஒருகரங்கண்கால்பாதியுடலுறவிணையாய்த்தோன்றச்
சரையிரண்டொன்ருய்வண்ணந்தடக்கையாற்பொருத்தத்தாழ்வி
லுருவுடைக்குமரனுகியுருமெனவழுதவோசை
யிரவிடையிடிபோல்விஞ்சயாவருங்கேட்டாரன்றே. 183

இரவிதேர்குணபால்வேலேவலயத்தினெழுதலோடு
முருமெனவரற்றுகின்றமதலேவாயோசைகேட்டுப்
புரவலனகழியெய்திப்புத்திரன்றன்னேநோக்கிச்
சரியிலாவுருவனென்றுதடக்கையாற்றழுவிஞனல். 184

சரையுடல்பொருத்தலாலேசராசந்தனென்றுநாம
முருவுடைமதலேக்காமென்றுயர்ந்தசரீரியோத
வரசனுண்மகிழ்ந்துசேயையங்கையினேந்திச்சென்றே
திருவெனவயங்குகின்றதேவியர்கையினீந்தான். 185

அரன்வரமருளவெய்திவளர்ந்தருளரசன்மைந்தன்
சரையுடற்பொருத்தலாலேசராசந்தனென்னும்பேரோன்
கிரியிவருடலேவீமன்கிழிப்பவுநொடிப்பின்முன்ன
மிருபிளப்பொன்ருய்க்கூடியெழுந்தமர்செய்தானென்ருன். 186

ஆரியன்மொழியக்கேட்டவருச்சுனன்மகிழ்விஞேடெங்
கோரையையுகிராற்கிழியடிநுனிகூடும்வண்ணம்
பாரினிலெறிந்துகாட்டிப்பகைஞனவதைப்பித்தாயென்
றேருறவீமன்றன்னேடேத்தியாண்டிறைஞ்சிஞனல். 187

மறுவிலாவீமனேடுமெருச்சுனன்வணங்கக்கண்டே
யிறையவனிருவர்தம்மையணைத்தின்புற்றிருக்குமெல்லே
சிறையினிலிருந்தமன்னர்திரண்டுளமகிழ்ச்சியெய்தி
நிறையவேமலர்கடேவிநேமியைவணங்கிஞரால். 188

திறலுடைமகதன்வைத்தசிறையிடர்தீர்ந்துவந்த
நெறியுறுநிருபர்தம்மைநீவிர்நும்பதியினெய்தி
மறனிலாவறன்செய்வேள்விகாணியவம்மினென்றே
யிறையவனறையப்பாரினிறைஞ்சியாண்டேகினாரால். 189

வாயுவின்மதலைதன்னான்மடிந்திடமகதராசன்
சேயுயர்சாதேவன்றன்சிரத்திருகரத்தைக்கூப்பித்
தூயமாமதுரைதன்னிற்சோதிநீகாத்தியென்றே
யாயுமாமலர்கடேவியடியினினிறைஞ்சினானால். 190

இவுளிகடேர்களெண்ணிலிபநிரையெல்லாங்கொண்டு
நவமணிவயங்குசெம்பொன்னவையகல்கலன்களெல்லா
மவனியிற்பிறங்கல்போலக்குவைசெய்தைம்புலன்கள்செற்ற
தவர்களெண்முராரிபாதத்திறைஞ்சினன்சராசந்தன்சேய். 191

இருநிலத்திறைஞ்சிநின்றமகதன்சேய்க்கெழில்கொண்மாய
னரசனீயாகிவையமறத்துடன்காத்தியென்னா
முரசொலிகறங்கப்பொன்மாமுடிதனையிலங்கச்சூட்டித்
தருமன்மாவேள்விக்கிந்தத்திறையொடுஞ்சார்தியென்றான். 192

யாதவனருளலோடுமிறைஞ்சியேமகதன்மைந்தன்
சீதாதருமன்வேள்விகாணவித்திறையுங்கொண்டு
போதுவனென்றுகுந்திபுதல்வரைவணங்கிப்போனான்
மாதவன்மணித்தேர்மீதின்வயங்கியேநெறியிற்சென்றான். 193

மணிமுடியிலங்கவோங்குமைத்துனரிருவரோடு
மணிகலன்வயங்கமாவினணியுடனணிகவீட்டங்
கணகணவென்றோசையுறுமணிக்கரிகள்சூழப்
பணிபதிப்பணத்தின்மீதுநடித்திடும்பரமன்சென்றான். 194

துந்துபிமுழங்கத்தேவர்தூயமாமலர்கவேத்
தந்திகளிவுளியீட்டந்தமனியத்தேர்கள்சூழக்
குந்திதன்புதல்வராயவிருவருங்கூடவேதா
னிந்திரப்பிரத்தஞ்சேர்ந்தானிணையிலாவெழில்கொண்மாயன். 195

கரிதுரகந்தேர்சூழக்கதலிகைககனத்தோங்கத்
தருமன்வந்திடலுமன்புதழைத்திடவணங்கிமாயன்
றெரிவையர்குழாங்களெண்ணிறீவிகையெடுப்பச்சேர்ந்து
புரவலர்பணிந்துபோற்றப்பொன்னவிர்கோயிற்புக்கான். 196

திருமகள்கணவனெய்திச்செம்பொனாதனத்தினோங்கக்
கிரிவிரசத்தினெய்திக்கிளர்ந்திடுமகதனாய
மருவலன்மடியச்சாயைவகிர்ந்தமால்செய்கையெல்லாந்
தருமனுக்கன்பினாலேதருமன்சேய்சாற்றினானால். 197

பற்குனன்பகர்தலோம்பரிவுடன்பணிந்துதன்மன்
மூற்குணமுதல்வாவெங்களிடரறுத்தருளுமூர்த்தி
பொற்கணன்மடியக்கோலமாகியேபுவியைக்கீண்ட
சிற்குணவென்றுபோற்றத்திகழ்ந்தனன்றிருவின்கேள்வன். 198

மகதராஜன் வதைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 2046.

---

106 - வது, சிசுபாலன் வதைப் படலம்.

அத்தியையுரித்துப்போர்க்குமாதியால்விருகாசுர
னத்தமேல்வைக்கயாருமவியவேயருள்வரத்தாற்
பித்தனோடிடவேதோன்றிப்பேதுறவதைத்தமாயோன்
பத்தவற்சலன்மால்சோதிபரமன்றாள்பற்றுநெஞ்சே. 1

வேறு.

மகதராசனுயிர்வீமன்வௌவும்வகைசெய்துமன்னர்சிறைவிடுவியாத்
தகுதிநீதியுணர்தருமன்வேள்விதனிலக்கிரபூசைதனையேதகைந்
திகல்செய்சேதிபனுடற்றுணித்தவனுயிர்பெருஞ்சுடரெழுந்துதன்
னிகரிலாததிருவடியினெய்தியுறநின்றமால்வடிவைநினைமினோ. 2

மதியெனக்குடைவயங்கவாழ்தருமராசன்மாதவன்மூனெய்தியே
யெதிரிலாதநலராசசூயமெனும்வேள்விசெய்வகையியற்றென
வதிரதர்க்குளுயர்மகதராசனையடர்ந்துவீமன்வதைசெய்தன
னுதிருழலகிலொன்னலார்களினியில்லையென்றரியுணர்த்துவான். 3

ஆசையின்கணுறுமரசரைத்திறைகொடெய்தவேயனுசர்நால்வரை
வீசுதொல்புகழையுடையமன்னவவிடுத்தியென்றரிவிளம்பிட
வாசவன்மகன்வடக்குமாருதிகிழக்குமாவலவன்மேற்குற
வேசின்மத்திரைதன்னிளையமைந்தனுயர்தென்றிசைக்கணுறவேவினான்

தென்றிசைக்கணுறுநால்வருக்கிளையசிறுவன்மன்னவர்கடிரளெலாம்
வென்றுமற்றவர்கொடுத்தமாதிறையும்விறல்கொடென்னவனளித்திடு
மென்றுநாணிசுடர்மணியுநித்திலமொடெண்ணிலாதகலனிவையெலாங்
குன்றுபோலொளிரவெய்தியேதருமன்முன்னரிற்குவைகள்செய்தனன்.

வீரம்விஞ்சியுயர்நகுலனுங்குடதிசைக்கண்மேவிமனர்வெருவுறப்
பாரின்வெஞ்சமரின்வென்றுமற்றவரளித்தபன்மணிவருக்கமோ
டாரமம்பொன்வரைபோலவேகொடிகடேரின்மாநகரடைந்துதா
னேருறுந்தருமன்முன்னர்வைத்தடிவணங்கினனிணையிலாதவன். 6

உத்தரத்திசையினேகும்வாள்விசயனென்னலார்கடிரள்விறலெலா
மத்திரத்தினிலழித்துமற்றவரளித்தவம்பொன்மணியவிருது

நித்திலங்கள்கலனுயர்பிறங்கலைநிகர்த்திடப்பதியினேகியே
யுத்தமத்தருமன்முன்னரிற்குவைகள்செய்தனனுவகைவிஞ்சவே. 7

விறல்கொள்வீமனுயர்பூருவத்திசையினுற்றமன்னவர்கள்வெருவுறக்
கறைமிடற்றான்முனிந்தெழுந்ததெனவேவயங்குகதைபற்றிமா
மறலியஞ்சிடவடித்தழக்கியமர்வென்றுமற்றவரளித்திடுந்
திறைபிறங்கலெனவெய்தியேதருமன்முன்னரிற்குவைகள்செய்தனன் 8

பாழிமல்கியபுயத்தனுகியகடோற்கசன்பரவைதாண்டியே
யாழிசூழ்நகரின்வீடணன்முனரினூழியோன்றனருள்சுதன்
வேள்விசெய்யவெனையுன்முனுற்றிடவிடுத்தனன்னெனவளித்திடு
மேழுமாழையொளிர்கணவமங்கைகொடியாதவன்னடியிறைஞ்சினன். 9

வீடணன்வரவிடுத்தமாழையுறவிஞ்சுசாலமரநோக்கியே
கோடுகையினில்வயங்குமாயனொடுகுந்திமைந்தர்கண்மகிழ்ந்தன
ரோடையானையினமெண்ணிலாவிரதமுவரிபோலனிகநிரையொடு
மாடன்மாவினணிநிறையவெண்டிசையினரசர்வந்தடிபணிந்தனர். 10

வேறு.

வாயுமகனேகிவரைமீதினறைகூவி
நீயெனைவிரைந்திருகைபற்றெனநிகழ்த்த
வேயெனுமுன்னேமுசிவபூசையையியற்றித்
தூயபுருடாமிருகமெய்தியதொடர்ந்தே. 11

விரைவினுயர்வீமனகர்வாயினிடைமேவப்
புருடமிருகங்கடிதுபோந்தடிபிடிப்ப
விருவரும்விரோதமுடனேகியெழின்மன்னுந்
தருமன்முனரெய்தியதுசாற்றினர்கணின்றே. 12

நீதியுடன்வந்தமைநிகழ்த்துதலும்வீமன்
பாதியுடல்கொண்டுபெயர்கென்றுரைபகர்ந்த
மாதருமனைத்தழுவிவாயுமகனுக்கை
யேதமகலும்மிருகமீந்தனனனென்ற. 13

அந்தமுறும்வேள்விமுடியும்மளவுமன்புற்
றிந்தநகர்சுத்தமுறவேயமர்தியென்று
குந்தியருண்மைந்தன்மொழிகூறிடவிருந்த
புந்திமகிழ்வோடுபுருடாமிருகமுற்றே. 14

வேறு.

வீடுமன்விதுரன்கன்னன்வேதியனவன்றன்மைந்தன்
பீடுடைப்பூரிபூரிச்சிராவுடன்பிறங்குவேந்தர்
கோடகநிறைகள்கைம்மாக்கொடியுடைத்தேர்கள்சூழ
வாடரவுயர்த்தகோமானனுசரோடடைந்தானன்றே. 15

அத்தினபுரியையாளுமரசர்கோனெய்தலோடு
முத்தமத்தருமனெய்தியணைத்தின்பவசனமோதிச்

சுத்தனும்விதுரன்கங்கைசுதனுயர்துரோணனெய்தப்
பத்திசெய்தடியின்வீழ்ந்தான்பாண்டுவின்சுதரின்மூத்தோன். 16

அங்கர்கோசலவர்தென்னரவந்திகர்சோழர்கங்கர்
சிங்களர்குலிங்கர்போசர்கவுசிகர்சிந்துநாடர்
கொங்கர்காம்போசர்மச்சர்குச்சரர்கலிங்கர்சோனர்
வங்களர்துளுவர்சீனர்மத்திரர்மகதர்வந்தார். 17

கேரளர்சேதிநாடர்கவுடர்கேகயர்கள்வீர
வாரியரிகத்பாஞ்சாலரரசர்யாதவர்கள்வண்மை
நேரில்காந்தாரர்துய்யநெறியுறவிதர்ப்பராசர்
வாரிசூழுலகிலெண்ணுமாளுவர்பலரும்வந்தார். 18

காடவர்விறலின்மிக்ககன்னடர்குகுதரோடு
மாடவர்திலகரானவவனியினரசரெல்லாங்
கோடுடையிபங்கள்சூழக்குரகதவணிகள்விஞ்ச
நீடியகொடிகொடேரினிரையுறவடைந்தாரன்றே. 19

பொறையுறமறங்கள்வீயப்பொறிகலங்காமலோங்கு
நெறியுறநால்வேதங்கணிகரில்சாத்திரங்களோதி
விறையறிந்திலங்குகின்றமறையவரெண்ணிலாதோ
ரறிவுறுதருமன்முன்னராசிகள்பலவுஞ்சொன்னார். 20

வேறு.

தவுமியனுசுரிசவுனன்போதனேர்
கவுதமன்கண்ணுவன்கணுப்பராசர
னுவமையில்செயமுனிசுமதியொண்சுக
னவையகல்பார்க்கவராமநாரதன். 21

காசிபன்புலத்தியன்சுமந்துகர்க்கனற்
கோசிகன்காதுவன்வீதிகோத்திரன்
மாசகலகத்தியன்வைசம்பாயனன்
தேசுறுபிருகுடன்றிரிதமாமுனி. 22

மாதவவசிட்டனெண்வாமதேவனுல்
வேதமார்கிருதவவீரமாமுனி
யேதமிலசிதனேடுதர்வனீறிலாப்
போதனேர்வியாசனும்பொறைகொண்மாமுனி. 23

பவமறவிலங்கியபரத்துவாசனெண்
டவர்களெண்ணியமைத்திரேயன்றத்துவ
னுவமையிலாவுபகூதனேடெழிற்
புவனமீதருந்தவரடையப்போந்தனர். 24

மாதவரனைவரும்வரவுமேமகிழ்ந்
தேதமிற்றருமன்றன்னிளைஞரோடொண்

டாதரத்துடனடிவணங்கிமற்றவர்
பாதமீதருச்சனைபண்ணினரோ. 25

கார்ணெக்கரியின்பொற்கலப்பைவீக்கியே
யேருறுமணிநுகமிலங்கப்பூட்டிநற்
கூறியவச்சிரக்கொழுமுடேதிடச்
சீறியவேள்விசெய்நிலந்திருத்தினர். 26

சாலறவுழுதுபொற்றலங்கொள்சாலையின்
காலெயினவிர்மலர்கவின்கொண்டோங்கியே
மாலையினணிநவமணிகொடாவட
நாலவேதிறைத்தனர்கறுநெய்த்தீபமே. 27

மாளுழியினகம்பலவயங்கமாமணஞ்
சூழவேகரும்புகைத்தூபம்விஞ்சிட
வீழமார்நவமணியிலங்கச்செய்திடும்
வாழையும்பூகமும்வயங்குஞ்சாலையே. 28

மாலொடமரசர்கள்வயங்கிச்சூழ்ந்திடச்
சீலமாநுசர்கள்சிறந்துதோன்றிடக்
கோலநற்றுரோபதைக்கொம்பனுளொடுஞ்
சாலையிற்புக்கனன்றருமாசனே. 29

மண்டலத்தரசர்மாதவர்மலிந்திட
முண்டகத்திறையரன்முகிலினூர்தியோ
டெண்டிசைக்காவலரியக்கர்சாரணர்
விண்டலவிபுதர்தாந்தரதின்மேவினர். 30

கருடகாந்தருவர்கிம்புருடர்கின்னரர்
மருடருவிழிகொள்வானுறையுமங்கைமா
ரருடருந்தருமனன்பாரச்செய்திடும்
பொருடருவேள்விகண்டுவப்பப்போந்தனர். 31

சித்தர்வித்தியாதரர்சிறந்துதோன்றிய
வித்தகத்தும்புருவுடனுமேவினர்
நத்தொடுகோகளநலங்கொடுத்துமி
மத்தனமுடன்முழங்கியதுவாரிபோல். 32

மோடைத்தவநிறைமுனிவரெங்கணு
மாடுறவுதிட்டிரன்மகஞ்சடத்தவே
சோடசவிருத்துக்கள்வரித்துத்தூய்மையா
நீடியகனவினுருதிநிறைத்தனர். 33

சாத்திரவழிப்படித்தவறலின்றியே
சூத்திரவிதிப்படிச்தொடங்கிநாவிரு
நேத்திரன்றிசையினர்திருத்தமாடுகைப்
பாத்திரன்மகிழ்ந்திடப்பரிவிற்செய்தனர். 34

முன்னநாள்வருணமன்முடித்தவேள்விபோ
லின்னல்களொருவமாமறையியம்பியே
துன்னியமறையவர்தொடங்கிச்செய்திட
மன்னரென்றுதிட்டிரன்மகம்வளர்த்தினான். 35

திக்கினெண்பாலகர்திசைமுகத்தவ
னக்கனோடிமையவர்மகிழநான்மறை
மிக்கவர்வேள்வியைமுடித்தபின்னரி
னக்கிரபூசையார்க்களிப்பமென்றனர். 36

அக்கிரபூசையார்க்களிப்பமென்றுநான்
மிக்கவர்மகிழ்வுடன்விளம்பமத்திரை
மக்களிலிளையவன்வாசுதேவனே
தக்கவனாமெனச்சாற்றுவானரோ. 37

சாங்கியயோகதத்துவத்தினுச்சியை
நீங்கிலாவிறையவனீண்டபேரொளி
யோங்கியவொருமுதலிவனிதன்மையா
லீங்கிவனிருக்கவேறியார்கொலென்றனன். 38

குன்றினாற்பொழிமழைகாத்தகோவினுக்
கின்றியாமளியுடனீந்தயாவையு
மொன்றுதானநந்தமாயோங்குமெய்மையே
யென்றுமாநகுலனுக்கிளையவன்சொனான். 39

மாதவர்மகிழமத்திரைதன்புத்திர
னாதியைவணங்கியர்ச்சித்துமற்றவன்
பாதநீர்சென்னியிற்றெளித்துப்பன்மறை
யோதியேயீவதற்கொருப்பட்டானரோ. 40

தடித்துறச்சொரிமழைதாங்கக்குன்றையன்
றெடுத்தவர்க்கக்கிரபூசையீயுமுன்
மடித்திடுவாயினன்மறங்கொள்சேதிபன்
றடுத்தனன்மத்திரைதனயன்றன்னையே. 41

மாலினார்க்கக்கிரபூசைவாங்கியே
கோலமாயளித்திடுங்கொற்றவன்றனை
யாலமாவிடமெனவடர்ந்துசேதிபன்
சீலமேயிலாதவன்செப்புவானரோ. 42

காங்கையனிருக்கயானிருக்கக்கைதவ
நீங்கியமகத்துவானவரிருக்கநீ
பாங்கிலாவிடையன்றன்பாதநீர்சிரந்
தாங்கினாய்பாலனாந்தன்மையாலென்றான். 43

ஆதியாமன்னவன்சபிக்கவீனமாய்ப்
பூதலத்திழிகுலமானபுன்மையா

விதிசேர்வருணமாங்குலத்துதிற்கிலாக்
கோதுறுவானிறையாகுங்கொல்லென்றான். 44

மானமேயிலாதிவன்முன்னவன்மது
பானமேபண்ணினன்பதிதர்போலவே
யீனமாங்குலனிவனிடையர்மாதர்தோள்
கானிலேகலந்தவன்கடவுளீசனோ. 45

மகத்தினிலேபுரோடாசம்வாங்கியே
செகத்தினிற்காகத்துக்களிக்குஞ்செய்கைபோன்
மகத்துவானவர்களிண்டிருக்கமார்க்கமி
லிசழ்ச்சியானவனுக்கோவீகுவாயென்றான். 46

ஒங்கலொத்திருந்துடற்கனன்றுசேதிபன்
பாங்கிலவசனங்கள்பகர்தலோடுமே
காங்கயன்செவியினைக்கையினாலமைத்
தீங்கிறைவனையெங்கேலென்றுகூறுவான். 47

மாதவர்க்கசப்படாவனசப்பாதனைச்
சோதியையுயிர்தொறுந்துலங்குவான்றனை
யாதியையறிவிலாதெள்கலேயுகதன்
பேதைமையென்றிவைபேசுவானரோ. 48

வேறு.

இவனேயுலகேழையுமீன்றருள்வோ
னிவனேயயனைத்தருமீறில்பிரா
னிவனேயரன்வெவ்விடரைக்களைவோ
னிவனேயுயரும்பரமீபவனே. 49

திலகீரெரிசானெடுவானகமா
யலைவீசிமொழிகளாய்வரையாய்
மலர்மேலயனும்மழுவாளனுமா
யுலவாதுயர்சோதியுமாமிவனே. 50

பாயாவுழைசெற்றருள்பாணனிவன்
பாயாவுழையுற்றொளிர்பாதனிவன்
காயாமலர்மெய்க்கவினுமிவனே
காயாமலரைக்களைவோனிவனே. 51

உயிராயுயிர்தோறுறையும்பரனுய்க்
கயினுழிவயங்கியகார்முகில்போற்
றயில்வானரவின்மிசையென்றுசொலு
மயிராவிலைமீதமர்வோனிவனே. 52

மாமானைவதைத்திமொயனிவன்
மாமானையணைத்திமொர்பனிவன்

பாமான்பதிதங்தைபயோதரமோப்
பாமெய்யவனேபரமேட்டியரோ. 53

கூராழியொடைம்படைகொண்டுசையிற்
றீராவினைதீர்த்துயர்பத்தர்களுக்
காராவமுதாயளவந்தமிலாப்
பேராயிரமானபெம்மானிவனே. 54

மகன்வாய்மைபொய்மாதவனில்லையென
விகழ்வாலறையுந்தறியுள்ளினெழுந்
துகிராடகன்மார்பிடையுற்றவரும்
வகிர்வீரமடங்கலிம்மாதவனே. 55

மீனாமைவராகம்விளங்கரியாய்
வாளைரவளர்ந்தவன்மாமழுவோன்
றேனார்குழறன்னியசீதையுடன்
கானாரநடந்தருள்காரிவனே. 56

நறுமாமலர்நண்ணியநான்முகனோ
டிறையாமெனவெண்ணியதேவர்களு
மறைதானுமயங்கிடமாயைசெயும்
நெறியோனெளிதாய்வெளிநின்றவிவன். 57

தானேபதினாலுலகுந்தருவோன்
றானேயவைமீதுசனித்திடுவோன்
றானேகொடியோர்கடமைத்தடிவோன்
றானேயுயராழிதரித்திடுவோன். 58

என்றின்னவிர்மன்னிடவெவ்வொளியுங்
குன்றுஞ்செயல்போலொருகுழவியதா
யன்றிவ்வுலகுண்டவனன்றிமறை
யொன்றும்மிறைவேறிலையீதுணர்வாய். 59

அகழ்வேலையதாகுமரக்கன்முடி
திகழ்மாதசசென்னிதமைக்களைவோன்
புகழ்பாடிமகிழ்ந்திடுபெந்தியிலா
யிகழ்வாயினியெங்ஙனமுய்குதியோ. 60

அன்றிவ்வுலகுண்டருளாதிடைநீ
பொன்றும்படியேயிகழ்புன்மையினாய்
நன்றன்றிவைசேதிபர்நாயகனே
யென்றோண்ணதிமைந்தனியம்பினனால். 61

வேறு.

கங்கைதன்மைந்தனுயகாங்கயன்மொழியக்கேட்டே
நங்கையோடங்கைதாக்கியனலெழநகைத்துவெய்ய

சிங்கமேபோலவோங்குஞ்சேதிபனிறுதிக்கால
மங்கைபங்காளனொத்துவாய்மடித்திவைகள்சொல்வான். 62

மதியினையுடுக்களெல்லாம்பொருவிடின்மண்ணினோடு
நதியெலாந்துலங்குமந்தாகினிநலிகர்க்குமாகி
லெதுகுலத்திடையன்றானுமிறைவனுமென்றுநக்கு
முதுமதிக்கங்கைமைந்தாகேளெனமொழியலுற்றான். 63

உததிபோல்யமுனையாற்றினொலியுறுபாடிதன்னிற்
றதியிழுதுடனேயள்ளித்தடக்கையானுகரக்கண்டே
கதுமெனமாதர்மத்தாலடித்திடக்கலங்கிமண்மேன்
மதியிலாதோடுவானோமறைகடேடரியநாவோன். 64

நீருளேகுடையுமாதர்நிறைதுகில்வாரியேகிப்
பாரினோர்குருந்தினேறிப்பணியநக்கினத்தராகி
வாரும்நீர்தொழுமினென்றுமற்றவர்முலைமேற்றோய்ந்த
சோரனோவுலகமெல்லாம்படைத்திடுஞ்சோதியாவோன். 65

விஞ்சுமாமதுரைதன்னிற்பிறந்திடைப்பாடிமேவி
நஞ்சுபோன்மறைந்துதூயநந்தகோபன்றன்சேயாய்க்
கஞ்சமாதுலனைச்சற்றுங்கருணைவையாமற்கொன்ற
வஞ்சனோகஞ்சமேவுமங்கைதன்மணாளனாவோன். 66

மழுவொளிரரன்போற்காலையவன்வரமதுரைவிட்டே
யுழுவையைக்கண்டமான்போல்வெருவியாண்டோடியோடித்
தழைகொண்மால்வரையின்மன்னுமுசுகுந்தன்றுயிலுங்காவார்
முழையினுட்கரந்துய்வானோமூவராமூர்த்தியாவோன். 67

சரியிலாமகதர்கோமான்றொடர்ந்திடத்தளர்ச்சியெய்தி
வரையினிற்கரந்துபின்னர்மற்றவன்வைத்ததீயால்
வெருவியேவியாளங்கண்டகருப்பைபோற்பெயர்ந்துவிஞ்சும்
பரவையிற்கரந்துய்வானோநிகரிலாப்பரமனாவோன். 68

குலமிலன்மகுடமில்லன்குருவிலனுறவுமில்ல
னலனிலனறனுமில்லனாணுமிலன்றிண்டோளின்
வலியிலனருளுமில்லன்வரம்பிலன்றெய்வம்பேணும்
பலனிலனெறிகளில்லன்பண்பிலனிவனோநாதன். 69

சேதிபனிவைகளாமிவ்வெள்கலைச்செப்பக்கேளா
மாதவக்கங்கைமைந்தன்மனமெரிந்தவனித்தூள்க
வாதவன்சுடரையெய்திமறைப்பவவ்வவிர்போகாதா
லோதவமுரைக்குமன்னாவென்றனனுவமையில்லான். 70

தூயனுங்கங்கைமைந்தன்சொல்லியவுரையைக்கேளாத்
தீயவனிகழ்ச்சியாம்பல்வசனங்கள்செப்பலோடு
மாயவனகைப்பவீமன்வடவனலையநோக்கிக்
காயும்வெஞ்சினத்தினோடெங்கதைதலைக்கொண்டெழுந்தானன்றே.

வாயுவின்மதலைபொங்கியெழுதலும்வலாரிமைந்தன்
றாயகாண்டிபங்கையிற்றுலங்கிடவெழவேநோக்கி
மாயவனவர்கடம்மைமலர்க்கையாலமர்த்தலோடுந்
தீயவன்பின்னும்வெய்யகடுஞ்சொலேசெப்பினானால். 72

நாலுகைநுதலிற்றோன்றுநயனமொன்றுடனேநீண்ட
ஞாலமேற்சிசுபாலன்றான்சனிக்கநாரதன்வந்திந்தப்
பாலனைவதைக்கவெய்தும்பகைவன்வந்தடுக்கினெற்றி
மேலுறும்விழியுங்கைகளிரண்டும்போமெனவிளம்ப. 73

நிருபரெல்லாருமெய்தியடுத்திடநிகரிலாத
கரியினைவதைத்தோனெய்திநோக்கலுநுதலிற்கண்ணு
மிருகையுமொருவலோடுமிவன்றனையீன்றமாது
வெருவியேதுவரைவாழும்வீரனைவணங்கிச்சொல்வாள். 74

மாறில்சேதிபன்றன்மாதாமாதவனுடனேயென்சேய்
னூறுவெம்பிழைசெய்தாலுஞ்சமியெனநுவலக்கேட்டே
யீறிலொண்மாயோன்றீயனியம்புசொற்சதந்தானெண்ணிச்
சீறிவைசிசுபாலாநீசெருச்செயவருதியென்றான். 75

அரியிவையருளக்கேளாவனலுறச்சேதிராசன்
நரியெதிர்ந்திடவேசியநடுங்குமோவென்றுநக்காண்
டொருமெனவதிர்த்துத்தேரினுற்றமர்பொருதியென்னத்
திருமகள்கணவன்வையத்தமர்ந்தவண்சேர்ந்தானன்றே. 76

இருவருமிரதமேறியெதிர்ந்திடவிமையோர்கோமா
னரிவைபங்காளன்வானோரயனுமெனுகிநோக்கப்
புருவமுஞ்சிலையுங்கோட்டிப்புகையுயிர்த்தடருந்தீயோன்
றிருவமர்மார்பன்றன்மேற்சிலீமுகமழைபெய்தார்த்தான். 77

சேதிபன்சிலையாலெய்தசிலீமுகந்திசையைப்போர்ப்ப
மாதவன்வரிவில்வாங்கிவாளியாலறுத்துமாற்றி
யாதவன்படையைவிட்டாங்கார்த்திடமறங்கொடியோன்
மோதுவெந்தழலினம்புமுடுகியேதுணித்துவீழ்த்தான். 78

மாறிலாமாயன்வெய்யவாயுவின்படையைவிட்டான்
பாறுவின்படையைவிட்டேயறுத்தனன்பவங்கொணெஞ்ச
னீறிலச்சுதனுமையனிந்திரன்படையைவிட்டான்
சீறியசேதிராசன்மறலிதன்படையாற்றீர்த்தான். 79

வெஞ்சினம்பெருகவெய்யசேதிபன்வின்னாண்வாங்கி
நஞ்சுமிழ்ந்தடருகின்றநாகபாசத்தைவிட்டான்
கஞ்சனைக்கடிந்தவெங்கோன்கருடன்றன்படைகடாவப்
பஞ்செனப்பறந்துபோனபன்னகப்பகழியம்மா. 80

மலரயன்படையைவிட்டான்மாயவன்மறவன்கண்டு
சிலைவளைத்தெண்கணான்றன்படையினாலறுத்துத்திங்க

ளிலகுவேணியன்றானிந்தபடையினையெடுத்துவிட்டா
னுலகயிலையன்றானுமுமாபதியடையால்வீழ்த்தான். 81

விடமெனமுனிந்துவெய்யசேதிபன்வின்னாண்வாங்கிக்
கடிதினிற்கனமேபோலக்கடுங்கணைசொரிந்துமாயன்
கொடிகுடைகவரிவீழ்த்துக்குனிசிலையறுத்துத்தேரைப்
படிமிசைத்துகளதாக்கிப்பணிலம்வாய்முழக்கியார்த்தான். 82

மருடருமனத்தனானசேதிபன்வாளிதன்னா
லுருடருமணித்தேர்பாய்மாவுயர்சிலைதுவசம்வீழப்
புருடவுத்தமன்றன்மிக்கபொன்முடிதுலங்கதூய
கருடவாகனனாய்நின்றான்கலன்கள்மெய்கவின்கொண்டோங்க. 83

சங்குவாளாழிதண்சொர்ங்கமோடைந்துந்துய்ய
வங்கையினேந்தியம்பொன்னாடைதன்மருங்குசேர
மங்குலின்வனசமல்கிமலர்ந்தபோல்வயங்குவானைச்
சிங்கமேபோலநின்றசேதிபன்றெரியக்கண்டான். 84

இரவியினவிராற்பாறுமிருளெனச்சேதிராச
னருவினையொருவத்தூயவறிவுவந்தணுகப்பொற்றேர்
மருவுசாரதியைநோக்கிமாதவன்கலுழன்மீதிற்
கருமுகிலெனவேநின்றானவ்வண்ணங்காண்டியென்றான். 85

வேறு.

புவனமீரேழையுமுதரத்துட்பொதிந்
துவரிசூழண்டம்விண்ணெருகாரமேற்
கவினுறவடவிலைமிசையிற்காட்சியா
மவிருறவமர்ந்தவச்சுதனைக்காண்டியால். 86

அப்பமராரிதனக்கடியர்நான்முனி
செப்பியசாபத்திற்சென்மந்தீர்த்தெனை
முப்பிறப்பாக்கியமுராரிசெற்றெனக்
கொப்பிறன்சரணளிக்குவனென்றோதினான். 87

தரணியினிலக்குமிம்மாயன்சாற்றவே
யிரணியனாயுறைந்தெற்றுதூணிடை
முரனுறமுடங்குளையாகிவந்தியான்
மரணமுற்றிடவுயர்மார்பைப்போழ்ந்தனன். 88

பின்னரும்விச்சிரவாவின்பிள்ளையா
யின்னலில்சிரங்களீரைந்துகாலைந்து
துன்னியகரங்களாய்த்தோன்றமென்னையே
மன்னவனிராமனாய்வதைசெய்தானரோ. 89

இருபிறப்பொழியவேயிம்பரின்னுய
ரசரிற்சேதிபன்சிறுவனாகிவல்

ஒரணுறுந்தேரிடையுற்றவென்முன
ராரியுருவாகியேயரிக்கவெய்தினான். 90

ஆதலினரிதிருவாழிதன்னினாற்
பூதலத்தியான்மடிந்தாவிபோயுயர்
மாதவனடிமிசையடையும்வண்மையைச்
சூதநீகாண்டியென்றறியச்சொல்லினான். 91

சூதனோடிவைசிசுபாலன்சொல்லுமுன்
மாதவன்கலுழன்மேல்வயங்கித்தோன்றியே
சோதிசெய்திகிரிவான்றலங்கவேவிடச்
சேதிபன்சிரத்தினையறுத்துச்சென்றதால். 92

சீருறுதிகிரிசென்றறுப்பச்சேதிபன்
பாரினின்மடிந்திடப்பிரிந்தவாவிமின்
பேரொளிவானுறப்பிறங்கித்தோன்றியே
யாரியனடிமிசையடைந்ததாமரோ. 93

சேதிபன்மடிந்தவனாவிசென்றுயர்
சோதிசெய்பேரொளியாகித்தோன்றியே
மாதவனடிமிசையடையவானுளோர்
போதனோடொளிர்மலர்பொழிந்துவாழ்த்தினார். 94

கைதவமகற்றியேகருதொணாத்தவஞ்
செய்தவர்பெறாத்திருவடியைச்சேதிபன்
வைதிவணடைந்திடவழங்கினாயென்று
பொய்தவிர்முனிவர்கள்போற்றினாரரோ. 95

பகையிலனுறவிலன்பரமன்றானொரு
நிகரினான்மறைப்பொருணிகழ்த்துநீர்மையா
லிகழ்வுறுமிவன்றனக்கடியையீந்தனை
புகலருஞ்சோதிநீயென்றுபோற்றினார். 96

அகழ்ந்தவர்க்கவனிநல்லயமளிப்பபோ
லிகழ்ந்தவனாவியுன்னிணையிலாவடி
திகழ்ந்திடவளித்திடுந்தேவனீயுனைப்
புகழ்ந்தவர்க்களிப்பனபுகலலாவதோ. 97

என்றுநான்மறைப்பொருளியம்பியேறுறு
கொன்றைவார்சடையினன்கோதிலாவயன்
பொன்றலின்முனிவர்கள்புரந்தரனொடு
மன்றல்சேர்மலர்மழைபொழிந்துவாழ்த்தினார். 98

வீடுமன்வேதியன்விதுரன்மத்திர
னாடினார்தருமனோடனுசர்கூடவே
வீடினவினையெனவிமலன்மெல்லடி
சூடினர்சென்னியிற்றொழுதங்கேத்தியே. 99

சோதியென் றுணர்ந்திடேந்தூயமன்னனை
மாதவன் மாயையான்மயக்கமாறிலா
வாதியென் றறிகிலாரவனியெய்திய
வியாதவனெனவணைத்தின் புற்றாரரோ. 100

செருவிடைச்சேதிபன்மடியச்சீருறு
தருமனோடனுசர்கடமீஇக்கொண்டின்புற
முரசுடன்பேரிகைமுழங்கமாதவன்
றாணியின்வேள்விசெய்சாலையெய்தினன். 101

உக்கிரச்சேதிபன்மடியவோங்கிய
சக்கரம்விடுத்தருள்சார்ங்கபாணிக்கே
யக்கிரபூசையையளித்துமத்திரை
மக்களிலிளையவன்மகிழ்ந்துவாழ்த்தினன். 102

வேறு.

எதிரிலாவிராசசூயமென் னுமாவேள்விசெய்து
சதுமறையறைபவர்க்குத்தருமன்றெக்கனைகனல்கி
யெதியினமகிழ்ந்தருசூழவெண்ணின்மாதானமெல்லா
மதிதிகள்பெறவேயீந்தானம்பொன்மாமாரிதன்னை. 103

தனமெலாங்குலன்சேர்க்கத்தடக்கைபற்சுயோதனன்றான்
மனமெலிந்தியவின்சொன்மகபதிசிறுவனோத
வனகன்வேதியர்கள்பாதத்தயம்விடவளப்பிலாத
கனகமாதானமெல்லாங்கன்னனேசெய்தான்மன்றோ. 104

மத்திராக்கிளையமைந்தன்மகிழ்ந்தருச்சனைகள்செய்ய
வித்தகவிதுரன்பூரிவிசனனேவலர்களாகப்
பத்திசெய்தன்னவர்க்கம்பவனன்சேய்சமைப்பித்தியச்
சுத்தமாமறையோர்க்கெல்லாந்துரோபதன்சுதரேயிட்டார். 105

வேறு.

பூதலத்தருமறைபுகலுவோர்க்கெலாந்
நீதகல்த்தசதானஞ்செய்துயர்
மாதவர்மகிழமாதருமன்வையமே
லாதபத்திரனிழலமரவேகினன். 106

சங்குதுந்துமிபடலிகைதழங்கவே
வெங்கயமிரதமாமிலடையவேகிநற்
பங்கயமுகத்துரோபதைதன்னோடுமே
திங்களோர்குடையன்வானதியைச்சேர்ந்தனன். 107

நவையகறர்மன்பின்னவர்கனலவரோ
டுவமையிறுரோபதையுவப்பவேகியே
பவமகல்பகீரதியயத்தினிற்படிந்
தவபிரதங்குடைந்தாடினனரோ. 108

அவபிரதங்குடைந்தாடியாடக
வுவமையிலாடையொண்மருங்கிற்றோன்றவே
நவமணிக்கிரீடமுஞ்சிரத்தினண்ணிடத்
தவர்களாசிகள்சொலத்தருமனேகினான். 109

நவையகறம்பியர்நால்வரோடுமே
யுவமையில்கலன்கண்மெய்யோங்கவெய்தியே
துவரையின்விளங்கியதூயமாயனைத்
தவர்களெண்ணுதிட்டிரன்றழுவினானரோ. 110

மாயவன்றருமனைமகிழ்வுறத்தழீஇத்
தூயநல்வசனங்கள்சொல்லியின்புறப்
பாயயம்வயங்கியபசும்பொற்றேரின்மேல்
மீயுயரலரிபோல்விளங்கினானரோ. 111

தம்பியர்தமனியத்தேரிற்சார்ந்திடக்
கம்புதுந்துமிசினங்கறங்கவானுய
ரும்பர்கண்மலர்மழையுதவிவாழ்த்தவே
வம்பவிழ்தொடையுதிட்டிரன்வயங்கினான். 112

அடிமிசைநூபுரமுறப்பொன்னாடைசேர்
துடியிடைமருங்கின்மேகலைதுலங்கிடக்
கடயமென்கரமிசைகவின்கொண்டோங்கநல்
வடிவுடைத்துரோபதைவயங்கினாளரோ. 113

தவளவெண்ணகையுறத்தரளமாவடங்
குவிநகிலிணையினின்வயங்கக்கோதிலா
நவமணிக்கலன்கள்கந்தரத்தினண்ணவே
துவரிதழ்வாயினொடுலங்கினாளரோ. 114

புதிதலர்பங்கயப்போதைவென்றுயர்
மதியினிலிருகயல்வயங்குமாட்சிபோ
லெதிரிலாநம்விழியிலங்கமாதர்க
ளுதிசெயத்துரோபதைதுலங்கினாளரோ. 115

நனிமலர்க்குழலளிநண்ணியாடவே
யனநடையணங்களுளரம்பைநாணிட
வினமணித்தோடுகாதிலங்கத்தேரின்மேல்
வனிதையர்க்கரசிபோல்வயங்கினாளரோ. 116

துலங்குபொன்னிரதமேற்றுரோபதைத்திரு
விலங்கிடக்கவரிகளசையவெய்தவே
கலன்கள்மெய்யிலங்கிடக்கவிகையோங்கிட
வலங்கொளுந்தருமன்முன்வழிக்கொண்டானரோ. 117

அதிரதர்துவாதெசவாயிரத்தவ
ரெதிரிலாவிரதமேலிருகைகூப்பவே

மதியுறவளர்கொடிநிறையமாமுர
சுதரியினொலியுறவுவந்தங்கெய்தினான். 118

தவளவெண்ணகையினார்சாமரைத்திரள்
கவினுறவிருமருங்கசையக்காட்சியார்
துவசம்வானுற்றிடத்துரகந்தேர்பரி
யவனிமேனிறைந்திடவணிகமார்ப்பவே. 119

மங்குலைநிகர்த்தகொந்தளத்துமாதரா
ரெங்குநற்சுண்ணமண்ணிலங்கவீசிடக்
குங்குமமிமசலங்கொண்டுமைந்தர்க
ளங்கையினிறைத்துயர்வசந்தமாடவே. 120

துந்துமிவளைசினந்துடிகையார்த்திட
வந்தமன்சிறுவனெஞ்சழலுறுத்தவே
தந்திகள்புடைவரத்தருமன்வையமே
லிந்திரைகொழுநனோடேகினானரோ. 121

பொருப்பெனவளர்முலைபுயலொண்கூந்தலார்
கருப்புரதீவிகைகரத்தினேந்தவே
விருப்பமுற்றமரர்வான்மலர்கள்வீசிடத்
திருப்பொலியுதிட்டிரன்வீதிசென்றனன். 122

சின்னமூதொலிகளெண்டிசையுஞ்சேர்ந்திட
மன்னவர்குழுவெலாமகிழ்ந்துபோற்றவே
கன்னன்மென்மொழித்துரோபதையுடன்கவின்
பொன்னெடுங்கோயிலிற்றருமன்புக்கனன். 123

அயனகர்தன்னிலுமதிசயித்திடு
மயன்மகிழ்ந்துதவுமாமண்டபந்தனிற்
கயல்விழிமடநலார்கவரிவீசவே
யியல்புடன்றருமன்வீற்றிருந்திட்டானரோ. 124

ஆடகவாடைபொற்கலன்களாரநற்
கோடகமதமுறுங்குஞ்சரங்கடேர்
பீடுடைத்தருமன்பேருவகையெய்திட
வேடவிழ்தொடையுறுமரசர்க்கீந்தனன். 125

வேண்டியதனைவர்க்குமளித்துவிஞ்சிய
பாண்டுவின்மதலையாந்தருமன்பாரினை
நீண்டடர்வராகமாயிடந்தநீணெறி
பூண்டவனுடனிருந்தனன்பொற்பாரவே. 126

சாமரைதிகழுநற்றம்பிமாருறச்
சோமனானனத்துரோபதன்றரு
மாமலர்த்திருவனாள்வயங்கித்தோன்றவே
காமனேர்தருமன்வீற்றிருக்குங்காலையின். 127

தருமன்மாவேள்விசெய்தருக்குந்தம்பிமார்
பெருமையுந்துரோபதையழகும்பேர்க்கொணாத்
திருவுறுசெல்வமுங்கண்டுசீரிலா
வரவுயர்துவசனெஞ்சழல்வதாயினான். 128

நத்துறுசெங்கைநாரணன் றன்செய்கையா
லித்திருவிவர்களுக்கெய்திற்றாமெனாச்
சித்தநொந்திலங்கியசெல்வநோக்கிலா
னத்தினபுரிநகர்க்கடையவெண்ணியே. 129

உயர்ந்திடுதருமனுக்குணர்த்தியோவுவா
னயம்பளிங்கெனப்பளிங்கமருநீரென
வியைந்திடுமெண்டபமருங்கினின்சொலார்
நயந்திணையிலாதவனண்ணினானரோ. 130

கூரியவாளினைச்சுழற்றிக்கொற்றவ
னேருறுதுகிற்றொடைக்கேறவாங்கியே
நீரெனப்படிகத்துநடந்துநீரினைப்
பாரினிற்பளிங்கெனப்படிந்துநீந்தினான். 131

பயமெனப்பளிங்கெய்திப்பளிங்கிதாமென
வயமதிலமிழ்ந்திடுமவனைநோக்கியே
செயலுறுதுரோபதைதிருவைநேரனா
மெயினவிர்கலனுறமிகநகைத்தனள். 132

நிலவெனத்தளவலரிலங்குநீர்மைபோ
னலனுறத்துரோபதைநகைக்கநோக்கியே
வலனுறுமுதிட்டிரன்முனியவாரியி
னலையுறத்துயில்கொள்வோனறைகுவானரோ. 133

வீரியர்போலவாள்விதிர்த்துவந்தவ
னீரளற்றழுந்திநீந்திடுதல்கண்டவ
ரார்நகைசெயாதவரரசகேளென்றே
நாரணனிலங்கிடநகைசெய்தானரோ. 134

பவர்களானவரெலாம்படியின்மாண்டுய
ரவனியாள்சுமடகனகையிதாமென
விவுளியாய்ப்பின்வருமிறைவனெண்ணியே
வுவகைவிஞ்சிடக்கவினுறநகைத்தனன். 135

திருமகணாயகன்சிரித்தெல்வீர்களு
மொருமுகமாகவேநகைமினென்னவொண்
ணரிவையர்நகைசெயவனுசர்தம்முடன்
றருமனுநகைத்தனன்றவர்களோடுமே. 136

நீரினுளமிழ்ந்துபின்னீந்தியேறியே
வீரவெண்டுகில்களைந்திழமேமலி

நேரிலாக்காழசம்புனேந்துசின்றவன்
சிருறந்துரோபதைசிரிக்கநோக்கினன். 137

தருமனோடைவருநகைப்பச்சக்கர
னிருகாங்கொட்டியேசிரிப்பவினமூற்
றொருருவரைநோக்கிலானுளங்கனன்றற
விரைவினின்மண்டபவிலசயின்மேவினன். 138

அரவுயர்த்தவன்வரவன்பினேடுமோ
முரசுயர்த்தவனலமொழிகள்பேசியே
தெரிமணிக்கலனெலாஞ்சிறக்கவீதலும்
விரைவினிலெழுந்தவன்விடைகொண்டேகினன். 139

வேதியன்காங்கையன்விதுரன்கன்னனோ
டேதமிலனைவரும்விடைகொண்டேகவே
வாதவனெனத்திகழரவுயர்த்தகோன்
நீதகலத்தினபுரியிற்சென்றனன். 140

இருடருமனச்சுயோதனனுமேகவே
யருடருந்தவர்களாச்சிரமத்தெய்தினர்
கருடவாகனனுயர்கழல்பணிந்துயர்
புருடமாமிருகமும்போயிற்றுமரோ. 141

சேதிபன்சிரத்தினைத்துணித்துச்சிருறு
மாதவன்மருக்குறப்பாண்டுமைந்தர்கள்
வேதனையொருவவேவேள்விமுற்றுவித்
தாதியோனிருந்தனனமரரேத்தவே. 142

வையமாய்வானுமாய்மதியுடுக்கதிர்
வெய்யவெங்கனல்புனல்வாயுமேருவாய்ச்
செய்யதாமரையயன்சிவனுமாமறை
யையனேயச்சுதானந்தரூபனே. 143

சிசுபாலன் வதைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 2189.

---

107 - வது, சாலுவன் வதைப் படலம்.

உக்கியம்புயத்தினுலகெலாமுதவியொருமுதலாய்ப்பலவுருவாய்த்
தக்கிமுன்னின்றுகராவினைச்செற்றுச்சகமெலாந்தானளந்தருளி
யிந்திரையவனிக்கினியகொண்கனுமாயியாதவர்குலத்தினுற்பவித்துச்
சிந்தியாமறவோர்குலமறமுருக்கிச்சிறந்தசீதரனையேதுதிப்பாம். 1

வேறு.

சேலமன்னுமதனோடடர்ந்துபதினாலுமேழுமுறதினமெலா
மாலமென்னவுலகெங்குமஞ்சவடுகேனைசொரிந்துவிசைபோடிய

வேலியெங்குமுறசின்றசாலுவனோடமர்செய்வேலைமுறையிட்டபாஞ்
சாலியாடைதொலையாதுநல்கியவனுயிர்கொண்மாலினடிதாழ்மினோ. 2

கோலமாகியவிதர்ப்பனல்கியருள்கோதையோடிரதமேறியே
நீலமேனியனடர்ந்தபோரினெதிர்நிற்கலாதுகிலனோடிய
சாலுவன்னிருகைதன்னின்மண்கொடுதெழற்கணன்றனைநினைந்துயர்
ஞாலமீதினொருவருடநற்றவநிறைப்பவீசனவணண்ணினான். 3

தூயமாவிடபமீதினேறியருள்சோதியைத்தொழுதுசாலுவன்
மாயன்மாநகரழித்துமற்றவனைவெல்லவெண்டிசைகள்வானெலா
மேயெனுமுனரினெய்தவானுயரிருப்புவேலியொளிர்மாபுரம்
நீயெனக்கருள்செய்யென்னவேயரனினைக்குமுன்னுதவிநீங்கினான். 4

சிவனளித்திடுமிருப்புவேலியொளிதிகழ்புரத்தினிடையெய்திமா
துவரையிற்கணைசொரிந்துமாமழைகள்போலவெண்மணல்கடுவியே
பவனனுயனலைவீசிவானுயர்பருப்பதங்களையெறிந்துதா
னுவமையில்கனககோபுரங்கள்பொடியுறவழித்தனன்முனிந்தரோ. 5

எரிவளைந்திடவெரிந்தவாயுதிசையெங்கணுமனல்பரப்பிட
வரவினங்கள்விடம்வாயுமிழ்ந்துவளையப்பிறங்கன்மழையடரவே
உருமெனக்குரலினோசையுற்றிடவுயர்ந்துசாலுவன்முடுக்கலு
மரசரோடினர்களிறுதிக்காலவழிவாமெனாவமரர்வெருவவே. 6

சாலுவன்னயமிலங்குவேலியுறுபுரமொடுஞ்சமர்முடுக்கலு
மாலின்மைந்தனொடுசாம்பன்விந்தனுயர்சாரணன்சினிமனன்சுதன்
சீலம்விஞ்சுதிறலக்குரூரனொடுமரசர்தேர்கண்மிசையேறியே
காலமாரியெனவில்லினானெடியகடியவாளிகள்கடாவினார். 7

சாகரந்திகழூரின்மன்னர்கணைதூவிடக்கடியசாலுவ
னேகரூபவெகுரூபமாகியுயரெண்டிசைக்கணினுமுற்றெழிற்
சேகரம்புயமுரங்கரங்குருதிசொரியவாளிமழைசிதறலு
மோகரங்களுடனடரும்வீரர்திரள்முறியமாரனெதிர்முடுகினான். 8

மாரன்வெஞ்சிலைவளைத்துவாளிகள்வழங்கிடக்கடியசாலுவன்
கோரவெங்கணைகொடேயறுத்தரிகுமாரன்மார்பினுறுகுருதிகள்
பாரினோடவொளிராசுகங்கண்மெய்யழுத்தலோடுமெழுபருதிபோற்
றேரின்மீதிடைமயங்கினானளினமங்கைதன்னுடையசிறுவனே. 9

சீதரன்சுதன்மயங்கிவீழவுயர்தேர்கொடேவலவனேகலு
மேதமில்விரதிகொழுநனோர்கடிகையெய்தவேதெளிவுவந்திடப்
பீதிகொண்டுவெரினிட்டனன்பகைஞன்முன்னரென்றுசிலர்பேசிடச்
சூதநீயிரதமீளவிட்டனையெனாவறைந்துரைகள்சொல்லுவான். 10

எந்தைதன்னொடுமெலாயுதன்றனொடுமியானிடைந்துயிர்கொடும்முனின்
வந்தனன்னெனவுரைப்பனோவனுசர்தேவிமாரெனைமதிப்பரோ
முந்துமென்விறலையழிவுசெய்தனையெனமொழிந்துயருமாரவேள்
சிந்தைநொந்திடலுமிருகையிற்றொழுதுதாருகன்சிறுவனுரைசெய்வான்

சூதர்செய்தொழில்கள்செய்தனன்னதிலுன்வீரியத்திறமைசோருமோ
சிதரன்குமரவென்றுகைதொழுதசாருகன்சிறுவனைக்கடி.
தேதமற்றவிரதத்தைநீவிடுதியென்றுசாலுவன்முனெய்தியே
யாதவன்படையைவிட்டனன்மறவனழலின்வாளிகொடறுத்தனன். 12

மாயவன்குமரன்வாசவன்படையைவிட்டனன்வலியனாகிய
நீயவன்மறலிவெஞ்சரங்கொடுவிலக்கினன்றிருவருட்சுதன்
வாயுவின்படைவிடுக்கவேமறவன்மற்றதேகொடுதடுத்தனன்
தூயவன்முகில்கள்போலவெண்டிசையுமறையவெங்கணைசொரிந்தனன்.

சம்பரன்றனைவதைத்தவன்கணைசொரிந்திடக்கடியசாலுவன்
வெம்புநெஞ்சினன்வில்வளையவாளிகள்விடுத்தறுத்திடலும்வேனிலா
னம்பரத்தினொருதண்டுகொண்டறையவேயப்புரனொளித்தலு
மும்பர்மாமலர்சொரிந்துவந்தனர்களுவரிபோலரசரார்ப்பவே 14

அந்தரத்திடையொளித்தசாலுவனரைக்கணத்தினினயப்புரத்
திந்திராதிபர்நடுங்கவெய்திவளையூதவாளிமழைபொழியமா
விந்தைமைந்தன்முனிவெய்திவில்வளையவாசுகங்கொடுவிலக்கவே
யிந்தவண்ணமிருபத்தினோர்தினமெதிர்ந்துவெஞ்சமர்செய்காலையின். 15

வேறு.

வீரனாயெதிர்ந்துவந்தசாலுவன்விசிகத்தாலே
பாரினார்மன்னரஞ்சிப்பலதிசைதோறுமோட
மாரவேளெதிர்ந்துதாக்கும்வலனெலாமாலுக்கோதச்
சூரசேனன்சேயாண்டோர்தூதனைவிடுத்தானன்றே. 16

தூதுவன்விரைவினெய்தித்தூயமாதருமனாரு
மேதமினகரினெய்தியிறைவனைவணங்கிமாரன்
மீதலத்தயங்கொள்வேலிவிஞ்சுசாலுவன்றனோடே
பூதலத்தமரிற்றாக்கும்பொருளெலாமுரைசெய்தானால். 17

மாரவேளமரிற்றாக்கும்வகையெலாந்தூதன்கூற
வாருநேரிலாதமாயோனணிமணித்தேரினேறித்
தாருகன்விரைவிற்றூண்டச்சத்தியவாமையோடு
மேருவுதுவரைதன்னினிமைப்பின்முன்னெய்தினானால். 18

நீலமாமேகம்போலநேமியோனெய்தலோடு
மாலமாவிடமேபோலவயங்கொண்மாபுரத்தினூடே
காலனோடிமையோரஞ்சச்சாலுவன்கணைகள்பெய்து
கோலமார்வளையையூதிக்கோளரிபோலவார்த்தான். 19

சாலுவன்வரிவில்வாங்கிவிடுத்திடுஞ்சரங்களெல்லா
மாலொருகணையினாலேயறுத்திடமறவன்வெய்ய
நீலகண்டன்றானீந்தநிகரிலாவேலைவாங்கி
நாலிருதிசையுமஞ்சவெறிந்தனனமனேபோல்வான். 20

சாலுவனெறிந்தவேலெண்டிசைகளுந்தழல்கள்கால
வாலமாவிடமேபோலவமரர்களஞ்சமாயன்
மேலுறவருதலோடுவிமலன்வில்வளைத்தேயைந்து
கோலினானூறுகூறாய்க்குறைத்தனனிமையோரேத்த. 21

வேலொருநூறுகூறாய்விழுதலும்விடமேபோலச்
சாலுவன்முனிந்துவெய்யசரங்களான்மாயோன்கையிற்
கோலவில்லிறுத்துநீண்டகொடியினைத்துணித்துவீழ்த்துக்
காலன்மெய்நடுங்கவார்த்துக்கடியவன்கழறலுற்றான். 22

எனக்குயிர்த்துணைவனானவெதிரிலாச்சேதிராசன்
றனக்குநிச்சயித்தமாதுதன்னைநீபுணர்ந்ததன்றிக்
கனக்கிரியேலவிஞ்சுமவனையுங்கடிந்துசெற்ற
வுனைக்கொடுஞ்சரங்களாலேவதைப்பனென்றுறுத்துச்சொன்னான்

பூரியனினையவாய்மைபுகறலுமாயோனோக்கி
வீரியர்வில்லினல்லால்விளம்புவபுன்மையென்றே
யாரியன்கதையைவாங்கியறைந்திடப்புரத்தினோடு
நேர்கிலாதொளித்துப்போனானெறியில்சாலுவனான்மாதோ. 24

அயமொளிர்புரத்தினோடுமந்தரத்தொளித்துப்போன
கயவனோர்கடிகைமீதிற்கடலுறுவிடமேபோல
வியமனிந்திரன்வானோர்கணடுங்கிடவெதிர்வந்தார்த்துப்
புயல்வணன்மீதின்வானம்புகைந்திடச்சரங்கள்பெய்தான். 25

தீயவன்விடுத்தவாளியனைத்தையுஞ்சிலீமுகத்தான்
மாயவனறுத்தலோடுமுலப்பிலாமாயைவல்லோன்
றூயமாவசுதேவன்றன்றோளினைக்கயிற்றால்வீக்கி
யேயெனுமுன்னர்யாகப்பசுவெனவிசித்துவந்தான். 26

இந்திரைகொழுநன்றீயோனியற்றியமாயமெல்லா
முந்தியேயறிந்துங்கண்ணீர்முகில்விடுதாரைபோலச்
சிந்திடவெந்தாய்ந்தோசெறுநனுன்றோளைவீக்கித்
தந்தனனென்செய்கேனென்றரற்றினான்றடந்தேர்மீதின். 27

அரியிருகண்ணீர்சோரவரற்றலுஞ்சாலுவன்றா
னொருகையின்வாளைவாங்கியுயர்ந்திடும்வசுதேவன்றன்
சிரசினையறுத்துப்பாரினெறிந்திடத்தேரின்மீதின
வெருவியோர்கடிகைப்போதுவிமலன்மூர்ச்சித்தான்மன்னோ. 28

மாயையிற்றன்னைவீக்கித்துணித்துத்தன்மகன்றன்முன்னர்த்
தீயவனெறிந்தசெய்கைதெரிந்துயர்வசுதேவன்றான்
றூயபொன்னிரதமீதிற்றோன்றலும்விழித்துநோக்கி
யாயிரநாமத்தையன்றேவியோடறையலுற்றான். 29

சாலுவனெந்தைதன்னைத்துணித்துமுன்னெறிந்ததன்மை
வேலினைவிழியாய்மாயமென்பதுவிளங்கிற்றென்றே

மாலொளிர்முறுவல்செய்துவரிவிலைவளையவாங்கிக்
காலமாமாரிபோலக்கணைபொழிந்தார்த்தானன்றே. 30

ஆரியனெய்தவாளியனைத்தையுஞ்சாலுவன்றான்
கோரவெஞ்சரத்தான்மாற்றிக்கொடுங்கணைதூவியார்ப்ப
வீரியன்விசிகத்தாலேவிலக்கியேதிகைத்துவில்லைத்
தேரின்மேலூன்றிநிற்கத்தேவிபார்த்தறையலுற்றாள். 31

மருவலனெய்தவெய்யசரங்களைவாளியாலே
யொருநொடியிடுவமுன்னமறுத்துநீயுயர்ந்தவில்லைச்
செருவிடையிரதமீதிலூன்றியேதிகைத்துநின்ற
கருமமேதறைதியையாவெனவரிகழறலுற்றான். 32

பாவமில்பாஞ்சாலன்றான்பயந்திடுமமுதம்போல்வா
ளாவிநைந்துருகிவெய்யவரந்தையுற்றிருகைகூப்பிக்
காவெனைமாயாவென்றுகழறிடத்திகைத்தேனென்ன
மாவடுவகிரையொத்தவாட்கணாளியம்பலுற்றாள். 33

அருந்ததியனையகற்பார்துரோபதையரந்தையெய்தி
வருந்தியின்றன்னைக்காவென்றுரைத்திடுவசனமெல்லாங்
கருந்தடங்கண்ணினார்தங்கலையெலாம்விரைவின்வாரிக்
குருந்தின்மேலேறுமையாகூறுதிதெரியவென்றாள். 34

சத்தியவாமையிவ்வாறுரைக்குமுன்சாலுவன்றா
னத்திரநிறைப்பக்காத்தேயரியழல்வாளிதூவக்
குத்திரமனத்தோன்வானிற்கரந்திடக்குடக்கூத்தாடி
நித்திலநகையினாளேகேளெனநிகழ்த்தலுற்றான். 35

இந்திரப்பிரத்தத்தைவர்க்கெய்தியவிபவங்கண்டு
நொந்தவன்பளிங்கென்றாழ்ந்தவயந்தனின்விழவேநோக்கி
நந்தொளிர்கரத்தளாயதுரோபதைநகைத்தலோடும்
வெந்திடுசிந்தையோடுஞ்சுயோதனனகரின்மேவி. 36

நீதியில்சிந்துநாடனெறியிலாக்காந்தாரன்சே
யாதவன்சிறுவன்றீயனானதன்னனுசனோடுந்
தீதகருமனோடுஞ்செல்வமுஞ்சகுனியாடுஞ்
சூதினாற்கவர்வானாகிச்சுயோதனன்சிந்தைசெய்தே. 37

சந்திரனவிர்போற்றுய்யதரளமண்டபத்தின்வண்மைக்
குந்திதன்சுதர்கள்காணவருகெனக்கூறவேதான்
றந்தையால்விதுரன்றன்னையேவவேயவனுந்தாழ்வி
லிந்திரப்பிரத்தத்தெய்தித்தருமனோடிவைகள்சொன்னான். 38

எந்தைதான்பணித்தமாற்றந்தவிருதனன்றன்றென்றே
யிந்திரப்பிரத்தமோவியெழிலுறுமடந்தைதன்னோ
டந்தமாரறன்செய்பின்னோரனைவருங்கூடவேகி
விந்தைசேர்ந்தழகாரத்திப்பதியிடைமேவினாரால். 39

மன்னரெண்டருமன்மூத்ததாதையைவணங்கிப்பின்ன
ரன்னையையிறைஞ்சித்தூயதுரோபதனருளவந்த
மின்னையாண்டிருத்திப்பின்னோர்மேவிடவிளங்குமாரந்
துன்னுமண்டபத்தின்வந்துசுயோதனனருகிற்சார்ந்தான். 40

அந்தமாரறன்சேயெய்தவந்தமன்சிறுவனுங்கே
சிந்தைவெந்திருகையாரத்தழுவிச்சிங்காசனத்திற்
குந்திதன்மைந்தரோடெங்கூடியேயிருத்தலோடும்
வெந்திறற்சகுனிபாண்டுசுதனுடன்விளம்பலுற்றான். 41

நீதிசேர்தருமவீண்டோர்வினோதமாய்நிகரிலாத
சூதினைப்பொருதியென்னவுதிட்டிரன்சூதையாடி
லேதமார்நாசமெய்துமென்னலுமிச்சூதுக்கே
யாதவன்சிறுவனீதானஞ்சினைகொல்லோவென்றான். 42

இரவிதன்சிறுவன்சூதுக்கிடைந்தனைகொல்லோவென்னத்
தருமன்வெஞ்சினத்தினோடுந்தருதிசூதாடவென்ன
விரைவினிற்சகுனிநிர்த்தக்கயிறமின்சாரியெல்லா
மிருநிலமிசையின்வைப்பவிருவருமாடினாரால். 43

நிகரிலாவிவுளிகைம்மாநெடுமணித்தேர்கடோற்றுப்
பகரொணாவளங்கள்விஞ்சும்பதியொடுநாடுதோற்று
மிகவொளிர்கலன்களோடும்விழுமியநிதிகடோற்றுச்
சகுனியோடாடித்தன்மன்றம்பியர்தமையுந்தோற்றான். 44

தன்னையுந்தோற்றுத்தன்மன்றுரோபதன்றவத்தாற்பெற்ற
மின்னையுந்தோற்கலோடும்விடவரவுயர்த்தகோமான்
றன்னியமகிழ்வினோடுஞ்சூதினைத்தவிர்மினென்று
கன்னனோடிலங்கினான்வெண்கவரிகளசைந்துசூழ. 45

ஓவியமலியவம்பொன்னோங்கியகோவின்மேவி
யேவல்செய்தாதியாகியிருக்கப்பாஞ்சாலன்பெற்ற
பாவையைவிடுதியென்றேபகர்ந்தனனந்தன்சேயாங்
காவலன்றன்றேருரும்பிரதிகாமியன்றன்னோடே. 46

பிரதிகாமியன்றானேகித்துரோபதராசன்பெற்ற
விரதிநேரழகினுடன்கற்பினாலெய்தவஞ்சிச்
சுருதிநூல்வழியினாய்ந்தவழக்கவனெஞ்சிற்றோன்ற
நிருதர்போனெறியிலாதநிருபன்முனெய்திச்சொல்வான். 47

தன்னைமுன்றோற்றுச்சூதுசகுனியோடாடித்தன்மன்
பின்னரினென்னைத்தோற்கப்பெறாவழக்காகையாலே
வின்னிலமதனிலுங்கட்கியான்பணியில்லையென்று
சொன்னனள்பழிப்பிலாததுரோபதையென்றுசொன்னான். 48

சொன்னவன்றன்னைநோக்கிச்சுயோதனன்முனிவினோடு
மன்னவர்முன்னீசொல்லும்வழக்கினையுரைக்கவாவென்

றன்னமென்னடையினாளைத்தருதியென் றனுசன் றன்னை
யின்னல்கண்மலியுநெஞ்சனேவினானெவருமஞ்ச. 49

துன்மதியான துச்சுவாதனன் றூயவாணி
னன்மதிமுகத்தளாய துரோபதைதன்னைநண்ணி
யுன்மதிதன்னாற்சொல்லும்வழக்கினையுரைக்கவேதான்
மன்மதனனையவெங்கோன்முன்னரின்வருதியென்றான். 50

இன்னல்சொலரசன் கூறவென்னைப்பின்றோற்றதன்மன்
றன்னைமுன்றோற்கையாலேதாதிநானல்லவென்ன
வன்னையுந்தெக்கிலில்லான் றுரோபதையணங்கினாளை
மன்னவரவையின்முன்னேமயிர்பிடித்திழுத்துவந்தான். 51

கங்கைதன்மைந்தன்கண்சொவலனிளையோன்றன்னை
யங்கையினடிசதேயன்பால்விடுவித்தேயரற்றுகின்ற
மங்கையைத்தேற்றிநீசொல்வழக்கினையுரைத்தியென்ன
நங்கைமெய்நடுங்கிநாவினீரறநவிலலுற்றாள். 52

தருமனிச்சூதையாடித்தன்னைமுன்றோற்றுப்பின்னர்
திருபரேயென்னைத்தோற்சனீதியோவென் றுகூற
வரசர்வாய்திறப்பவஞ்சவாவுயர்த்தவன்றன்பின்னோன்
விரைசெறிமாலைமார்பன் விகர்னனங்கெழுந்துசொல்வான். 53

விரைவினிலெழுந்துதன்னைத்தோற்றபின்மெய்மைசேருந்
தருமனிங்கிவளைத்தோற்கத்தகாதிந்தநெறியைத்தப்பி
லருநரகடைவரென்றேயியம்பலுமவனைவைது
மருவமர்குழலினாளைவாங்குதிதுகிலையென்றான். 54

அரவுயர்த்தவன்சொல்லவறனிலாவனுசன்றானே
மருவமர்குழலினாடன் றுகிலினைப்பற்றிவாங்க
வரியின்வாயுற்றமான்போற்றுரோபதையாவியில்லா
ளிருகரஞ்சிரத்தின்வைத்தேயாதவாகாத்தியென்றாள். 55

சுற்றமும்விட்டாள்வெற்றிப்பதியரைவிட்டாயே
கற்றுணையென்றென்பேரைநவின்றிருதாளைநெஞ்சாற்
பற்றலுந்திகைத்துநின்றேன்பாவைதன்மருங்கின்மீதிற்
சுற்றியதுகிலோயாமல்வளர்ந்திடச்சொன்னேனென்றான். 56

அத்தியன்றோலமென்னவடைந்துகாத்தருள்வோன்கூறச்
சத்தியவாமைதூயகொழுநன்பொற்றாளிற்றாழ்ந்து
பத்திசெய்பாஞ்சாலன் றன்பாவைவெந்துயரந்தீர்த்த
சுத்தவீசுருதிக்கெட்டாச்சோதிநீயென் றுசொல்வாள். 57

சூதினிற்றருமன்றோற்பத்துரோபதைதூசைப்பற்றி
நீதியிலசன்வாங்கநீதுகினிறைத்ததெல்லா
மோதினாயுக்கைதன்னைச்சாலுவனுயிர்கொன்றானென்
றோதிநீயறியார்போலவாற்றியதென்கொலென்றாள். 58

இறையெனவுயர்வைமீளவிருநிலத்திழிந்தேயாய
ருறியினிலிழுதுநெய்பானுகருவையுவமையில்லாய்
மறைகளுக்ககப்படாமன்மயக்குமுன்மாயந்தன்னை
யறிபவராரோவென்றேயறைந்தடிதொழுதாளன்றே. 59

என்றவளுரைத்தலோடுமெதிர்கிலாதொளித்துப்போன
குன்றெனவுயர்ந்ததோளான்கொடியசாலுவன்றான்றோன்றி
வென்றிவில்வளையவாங்கிவிசிகமாமழைபெய்தார்ப்ப
மன்றலந்துளபத்தாரோன்வாளியாலறுத்துவீழ்த்தான். 60

ஏயெனுமுன்னர்வானினெண்ணிலாவுருவமாகி
வாயுவோடனலாய்வீசிமலைபலவெறிந்துதோன்றுந்
தீயவன்கவசம்வைய்யஞ்சிலைசிரோமணியையம்பால்
மாயவனறுத்துவீழ்த்துவரைதுகளாகவெய்தான். 61

சிலையொடுகவசமின்னுஞ்சிரோமணிவீழக்கண்டே
மலையொடுமெரமுமேந்திமறவன்றானெறியமாதர்
கலைபலவாருமையன்கதையினிலெற்றலோடு
மலையுறுகடலின்வீழ்ந்தானயப்புரந்துகளதாக. 62

உததியின்விழுந்துநீந்தியோங்கல்போற்சாலுவன்றான்
மதிதவழ்வேணியான்றன்வரத்தினாலீயப்பெற்ற
கதையினையிமையோரெல்லாங்கலங்கிடவெறிதலோடும்
விதியினையருளும்வீரன்விசிகத்தாலறுத்துவீழ்த்தான். 66

காலனைநிகர்த்துவெய்யகடியவன்கனன்றுநேரில்
சூலம்வெங்கரத்தாற்பற்றிச்சுழற்றியேவருதலோடு
நீலமாமேகமொப்போனேமியைவிடுத்தலோடுஞ்
சாலுவன்சிரத்தைத்தள்ளிச்சென்றதுதபனன்போல. 64

மந்தரவரைவீழ்ந்தென்னச்சாலுவன்மடிதலோடுந்
துந்துமிமுரசமார்ப்பத்தூயமாமலர்கடூவி
யந்தரத்தமரரெல்லாமாவலங்கொட்டியார்த்தா
ரிந்திரைகொழுநன்றேவிதன்னொடுமிலங்கினானால். 65

சாலுவன் வதைப் படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் — 2254.

108 - வது, தந்தவக்கிரன் வதைப் படலம்.

அலரியோன்றன்குலத்துதித்தவருளார்முனிபின்னடந்தரக்கி
பலருமரக்கருடன்வளையப்படுத்துமகங்காத்தப்பாற்போய்
மலரினுறைவாள்சீதையைவில்லிறுத்துமணந்துராவணன்பட்
டலரவாளிதொடுத்தருளுத்தமராகவனைநினைந்துய்வாம். 1

வேறு.

நகிலொளிர்துரோபதைநவின்றநாமத்தாற்
றகிலளவில்லதாய்க்கொடுத்ததூய்மையாற்
பகலிரவாக்கியபரமன்றன்புகழ்
புகலுவோரிமையவர்போற்றவாழ்வரே. 2

சாலுவன்மடிந்திடத்தந்தவக்கிரன்
வேலைபோற்கரிபரிவீரர்தோன்றவே
யாலமாவிடமெனவதிர்த்துவெங்கணை
மாலின்மேலெண்டிசைமறையத்தூவினான். 3

தந்தவக்கிரன்விடுசாயகங்களை
யிந்திரைகொழுநன்வில்லேந்திவெங்கணை
சிந்தியயறுத்தவன்சேனையீட்டத்தை
வெந்திறற்பகழியாலறுத்துவீழ்த்தனன். 4

வெங்கரிபரிதேர்வீரர்மாள்தலுஞ்
சங்கரனெனமுனிதந்தவக்கிரன்
மங்குல்போலெங்கணும்வாளிதூவவே
யங்கண்மால்பகழியாலறுத்துவீழ்த்தனன். 5

தீயவன்பின்னருஞ்சிலீமுகங்களை
மாயன்மேல்விடுத்தலுமாற்றிமாதவ
னேயெனுமுன்னவனேந்தும்வெஞ்சிலை
தூயமாகொடிகடேர்துணித்துவீழ்த்தனன். 6

கொடிகடேர்சிலையறக்கொதித்துவெய்யவ
னிடியெனவதிர்த்தொருகதையையேந்தியே
வடவரைநிகரெனவந்துமாயன்மேல்
மிடலுடைக்கரங்கொடுவீசியோச்சினான். 7

தண்டுகொண்டோச்சியதந்தவக்கிர
னண்டமுண்டவன்மிசையடர்ந்துதாக்கலு
முண்டகன்றனையருண்முராரியோர்கதை
கொண்டுறவதைத்தனன்குருதிகக்கவே. 8

உக்கிரக்கதையைமாலுரத்தினோச்சலுங்
கக்கினன்குருதிநீர்கடியவன்றுயிர்
மிக்கவெஞ்சுடரெனவிளங்கித்தோன்றியே
சக்கரவரியிருதாளிற்சேர்ந்தது. 9

உடலிடையுயிர்பெருஞ்சோதியோங்கியே
புடவியன்றளந்தவனடியிற்புக்கிடத்
தடவரைநிகரெனத்தந்தவக்கிரன்
படியின்மேற்குருதிநீர்பரவமாண்டனன். 10

இரணியக்கண்ணனுயிறந்திலங்கையாண்
மூராறுமிராவணற்கிளையமூர்க்கனுய்த்
தரணியின்மடிந்தவித்தந்தவக்கிரன்
வருணமாரரிபதமலரிற்சேர்ந்தனன். 11

தந்தவக்கிரன்மடிந்திடலுந்தாழ்விலா
விந்திரனேடிமையோர்கண்மாதவர்
துந்துமிமுழங்கிடமலர்கடுவினர்
நந்தொளிர்கரத்துநாரணனையேத்தியே. 12

தந்தவக்கிரனுயிர்த்தம்பியானவன்
மந்தரவரையெனவளர்ந்ததோளினன்
வெந்திறலானவிடூரதன்சினத்
தந்தகனேலவந்தடர்ந்துதாக்கினன். 13

வாளொடுகேடகஞ்சுழலமால்வரைக்
கோளரிபோலவேகொதித்துமேல்வர
நீளதன்னுயகனேமியாலவன்
றேளொடுதலையறத்துணித்துத்தள்ளினன். 14

விடமெனமேவுவிடூரதன்னுய
ருடலொடுதலையிலனுருளமாள்தலுங்
கடிமலரிமையவர்பொழியக்கார்வண
னிடமுடையிரதமேவிலங்கினனரோ. 15

மாரன்வந்தடிமிசைவணங்கமாதவன்
வீரவச்சுதன்றனைவிரும்பிநோக்கியே
யார்வமுற்றிருகணீரவன்றன்குஞ்சியிற்
சாரவேயிருகையாற்றழுவினனரோ. 16

மாதவரெண்வசுதேவனெய்தவே
சிதரனவனடியிறைஞ்சிச்சேர்தலும்
போதனைப்படைத்தருள்புண்ணியன்றனை
யாதரத்துடனணைத்தன்புற்றனரோ. 17

தாலகேதனன்வரச்சக்கரத்தவன்
ஞாலமேலவனடியிறைஞ்சநண்ணியே
நீலமால்வரையெனநிறைந்தமேனியார்
மாலின்மார்பழுந்துறமகிழ்ந்துபுல்லினன். 18

சினியருள்சுதனொடுசொம்பன்சீருறு
தனயர்களனைவருந்தாளிற்றூழ்தலு
மனமலிமகிழ்வொடுமொர்பிற்புல்லியே
கனமெனமாயவனின்றகாலையின். 19

ஓவியம்பழித்தமெய்யொளிருருப்பிணித்
தேவியோடனைவருஞ்சிவிகைமீதினின்

மாவினமிபமுறுமன்னர்காக்கவே
மேவினரிந்திரப்பிரத்தம்விட்டரோ. 20

மாதவன்றேவியரனைவரும்வரத்
தீதிலாத்துவரையிற்சேர்ந்துதேவகி
பாதமீதிறைஞ்சிடப்பரிவினாலெடுத்
தேதமில்குமரனையிருகப்புல்லினாள். 21

செறுநர்கள்செருக்களத்தவியத்தேவர்க
ணறுமலர்பொழியநால்வேதமோங்கவே
நெறியுறுந்தேவியர்நிறைந்துசூழ்ந்திட
விறையவன்றுவரையிலிலங்கினானரோ 22

தந்தவக்கிரன் வதைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 2276.

---

109 - வது, பாண்டவர் வனவாசப் படலம்.

சூதினால்வஞ்சஞ்செய்துசுயோதனனடரக்கானின்
மாதினாளுடனுமேகுமறனிலாப்பாண்டுமைந்தர்
வேதனைதவிர்த்துத்தூயமீள்கிலாக்கதியையீந்த
சீதரனானவெங்கோன்றிருவடிவணக்கஞ்செய்வாம். 1

மன்னரெண்டருமராசன்மறமிகுஞ்சகுனிதன்னோ
டின்னல்செய்சூதையாடியியல்புறுநாடுதோற்றுப்
பின்னவர்தன்னைத்தோற்றுப்பிறங்கியகலன்கடோற்றுத்
தன்னையுந்தோற்றுத்தேவிதன்னையுந்தோற்றான்மன்னோ. 2

நீதியிலரவுயர்த்தோனெறிகொள்பாஞ்சாலன்பெற்ற
மாதைமண்டபத்தினேற்றிவாங்குதிதுகிலையென்றே
யோதலும்வெகுண்டுதுச்சாதனன்சென்றேயுரிதலோடுஞ்
சீதராகாத்தியென்றேதுரோபதைதியானஞ்செய்தாள். 3

காலனைநிகர்த்ததுச்சாதனனிடைக்கலிங்கம்பற்றச்
சேலெனமிளிருங்கண்ணாள்சென்னிமேற்செங்கைகூப்பி
மூலமென்றோதுமானைமுன்னர்வந்துதவுஞ்செய்கை
யேலவேயென்னைக்காத்திபுயல்வணாவென்றசொன்னாள். 4

வேலொளிர்விழியாளங்ஙன்விளம்பிடக்கேட்டுவெய்ய
சாலுவனுடனேதாக்குஞ்சமரினைத்தவிர்ந்துநின்றே
யாலிலையகட்டாள்சுற்றுமாடைதான்வளர்கவென்று
சேலு[illegible]வாகியோங்குஞ்சீதரனறைந்தானன்றே. 5

கோடொளிர்கரியையட்டகொற்றவன்கூறுங்காலைச்
சூடகமிலங்குகின்றதுரோபதைதுகிலைப்பற்றி
மூடனுமரசன்மென்மேன்முடுகிடவுரியலோடு
நீடுபொன்னுடைநீங்காமருங்கினினிறைந்ததன்றே. 6

முறைமையின்மன்னன்மென்மேன்முடுகலுமிளையமூட
னிறைமலர்க்குழலினுடன்னெடுந்துகிலதனைப்பற்றி
யுறுவலிகரத்தாலொன்றைவாங்கவொன்றுளதேயாகி
மறுவிலாமறையோர்க்கீவான்றனமெனவளர்ந்ததன்றே. 7

நேரின்மின்னிடையினுடன்னெடுந்துகினிறையக்கண்டு
பூரியவரவுயர்த்தோன்பொறைகொண்மாமடநல்லாளை
யூருவினிருத்தியென்றேயுரைக்கவவ்விடத்தினூங்கார்
வீரியவீமன்றண்டால்வீகுதியென்றுண்மின்னே. 8

எருறுவீமனெய்தியிலங்குநூற்றுவரைச்செற்று
நேரிலாமடந்தைசுற்றுநெடுந்துகில்பற்றினோன்றன்
மார்புமுகுருதியள்ளியுண்பளவுந்தான்வாவி
நீர்கதைதன்னுன்மோதிநிறைபுனலுகர்வனென்றான். 9

பாரிலொண்பாஞ்சாலன்றன்பயந்திடுபாவையாகு
நேரிலாவணங்குசெவ்வாய்துடித்திடநிகழ்த்துவாளென்
வீரியவீமன்றண்டால்வீந்துவீழரவுயர்த்தோன்
மார்பிடையேறியல்லான்மயிர்முடியேனீண்டென்றாள். 10

சகுனியைச்சகாதேவன்றான்றெறுவனென்றுரைத்தான்றாழ்வில்
பகலவன்குமரன்றன்னைப்பற்குணன்வதைப்பனென்றான்
மிகமுனிந்திவர்களெல்லாம்விளம்பிடவெள்கல்கூறி
நிகரிலாவரவுயர்த்தோனிறைமணிக்கோயில்புக்கான். 11

கண்ணிலாவரசனெய்தித்துரோபதனருளுங்கற்புப்
பெண்ணினைச்சிறியோர்செய்தபிழையினைப்பொறுத்தியென்று
புண்ணியத்தருமன்சூதாற்றோற்றிடுபொருள்களோடு
மண்ணுறுவளநாடீந்துமன்னநீபோதியென்றான். 12

கரிபரியிரதம்வீரர்கணக்கிலார்மருங்குசேர
வரசர்கண்மிடையத்தன்மனனுசர்கள்சூழநொய்தி
னூரனுறுதேரினேறியுயர்ந்தபாஞ்சாலியோடு
மரவுவாய்விழுங்கிவிட்டவாதவன்போலச்சென்றான். 13

தருமனுங்கெய்தலோடுஞ்சகுனிதன்மருகனோடே
வரையின்கந்தரத்திற்றூங்குமடங்கலையெழுப்பிவீக்கிப்
பரிபவஞ்செய்துவிட்டபான்மைபோலிவரைவிட்டா
லரியுடனெழுந்தெல்லோருமவியவேபொருவரென்றான். 14

ஆதலிற்றருமன்றுய்யவனுசரோடேகுமுன்னூன்
றூதையாலழைத்துவெய்யதரணியினுறுங்கான்றன்னிற்

சூதவர்தோற்கவென் றுதுரத்துதல்கருமமென்றே
யோதிடத்தந்தைபாலினுரககேதனனுஞ்சென்றான். 15

தாதைநீயவர்தம்மைத்தனயரென்றேவினாயேன்
மாதவனோடெங்கூடிவளநகரெல்லாங்கொள்வா
ராதலினவரைமீளவழைத்துயர்சூதால்வென் று
நீதுறுபுரவந்தன்னிற்சேர்த்துதல்கருமமென்றான். 16

மைந்தனீதுரைத்தலோமெருநூறக்காணாவேந்த
னந்தமாறன்சேய்தன்னையனுசரோடழைத்தென்பாலிற்
றந்திடுமென்னத்தூதருரைத்திடத்தருமராச
னெந்தையேனழைத்தானென்றேயிளையவரோடுமீண்டான். 17

வந்தடிவணங்கினின்றமன்னியதருமன்றன்னை
யந்தமன்னெறியிலாதானாறிரண்டாண்டுகானின்
முந்தயேகரந்தோராண்டுமுடியுநாளதனிற்கண்டான்
மைந்தனேபதின்மூவாண்டுவனமுறச்சூதாடென்றான். 18

என்றவனுரைக்கவேதானிசைந்திடுதருமனோடுங்
கன்றியசகுனிசெய்திக்கடியசூதாடிவெல்ல
வொன்றியவினையினாலேயுதிட்டிரனனுசர்சூழ
மன்றல்சேர்குழலியோடும்வனத்திடையேகினானால். 19

குந்தியைக்காணாவேந்தன்கொடிநகரிருத்தியென்றே
யிந்திரப்பிரதத்திற்றம்வனிதையரெவருந்தந்
தந்தையர்பதியினெய்தச்சாற்றியேதூதர்தம்மை
யந்தணர்கட்பாலெய்தவறைமினென்றேவினானால். 20

இந்திரப்பிரத்தந்தன்னிற்றூதுவர்தம்மையேவிக்
குந்திதன்மைந்தர்தேவிதன்னொடுங்கொடியகானின்
முந்தவேபகாசூரன்றன்னிளையவன்முழங்கவார்த்து
வந்திடவவனைவீமன்வதைக்கமாதவர்பாற்சேர்ந்தார். 21

மாதவரிடத்திற்செல்லமகிழ்ந்தவராசிகூற
வாதவனைவர்முன்னரடைந்தொருபாண்டந்தன்னை
யோதனஞ்சுவைகளாறுந்தினந்தொறுமுதவவேதா
னீதலுங்குந்திமைந்தர்பணிந்திடவிரவிபோனான். 22

தூதுவர்விரைவினெய்திச்சொல்லலுங்குந்திதேவி
மாதுயருளந்தேயத்திவளநகர்தன்னைச்சேர்ந்தா
டிதிலாமடந்தைமார்தந்தந்தையர்பதியிற்சேர
வேதியர்பன்னிரண்டாயிரர்மன்பான்மேவினாரால். 23

உவமையிலபிமனோடுஞ்சுபத்திராதேவியோங்குந்
துவரையினெய்திமாயோனடிமிசைவணங்கச்சோதி
நவமணித்தேரினேறிநாகர்மாமலர்கவேப்
பவமிலாதைவர்வாழும்பழுவத்தினெய்தினானால். 24

மாயவனெய்தலோடும்வருடங்காணுலர்பைங்கூழ்போற்
றூயவரைவர்வாட்கட்டுரோபதையுடனுமெய்தி
யாயிரநாமத்தையனடிமிசையிறைஞ்சலோடு
நேயமோடிரங்கிக்கண்ணீர்நிலத்துறவணைத்தானன்றே. 25

சீதரனனைத்தைவோர்க்குஞ்சிந்தையிற்றுயரமாற்றி
மாதவப்பாஞ்சாலன்றன்மகளிருகண்ணீர்மாற்றிச்
சூதுசெய்சுயோதனன்றன்சுற்றமோடமரின்மாளக்
கோதைநின்குழலையானேமுடிப்பனென்றுரைத்தான்கோமான். 26

துடியிடைமடந்தையெய்துந்துனியறத்தேற்றியைவ
ரிடரினையகற்றிமாயோனெழிலுறுந்துவரைக்கேகக்
கொடியவெஞ்சுரத்தினைவரந்தணருடனேகூடிக்
கடுவினையொருவுந்தூயகாசிபனிருக்கைசேர்ந்தார். 27

பாண்டவர் வனவாசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 2303.

110-வது, குருகுல மரபுப் படலம்.

ஆதிமால்பரமன்மாயோனயன்றனக்கன்னமாகி
வேதநூலருளுந்தூயவிமலநாரணன்வைகுந்தச்
சோதியாடகத்தோன்றுய்யசுதன்முனிற்றுலங்கத்தூணின்
மோதவாண்டெழுந்துதோன்றுமுடங்குளைபடியிற்சேர்வாம். 1

காசிபன்றன்னையைவர்வணங்கலுங்கருணைதன்னோ
டாசிகள்பலவுமோதியருந்தவன்மகிழ்தலோடு
மேசகன்மறையோர்கூடவைவருமிருக்குநாளின்
மாசகல்பராசரன்றன்மகன்வரவணங்கினாரால். 2

தருமனோடைவரெய்திவணங்கலுந்தாழ்வொன்றில்லா
வருமறையதனுலாசியறைந்தமாமுனியைநோக்கித்
தரணியிற்காசிபன்றான்சந்திரகுலத்துவந்த
குருகுலமரபுசொல்லென்றுரைத்திடவியாசன்கூறும். 3

வேறு.

நாதனம்புருடோத்தமனுபியிற்சனித்த
வேதனெண்வரையெழுகடல்விண்ணவர்முனிவர்
பூதலத்துயர்சராசரம்படைத்தவன்பொறையார்
நீதிவிஞ்சியநகரில்லத்திரியையுமளித்தான். 4

வித்தகத்தரியருளியவேதியன்பயந்த
வத்திரித்தவனேத்திரத்தழகுறப்பிறந்தா

னுத்தரத்துயர்வரையினைவலம்வருமொளியோன்
சுத்தவுத்தமச்சுதையினையுதவிடுஞ்சோமன். 5

அந்தணன்றருமத்திரிறுதலினிற்றோன்று
யிந்துவிஞ்சியவிராசசூயத்தினையியற்றிச்
சிந்தையிற்களிப்பெய்திடச்செய்யுமாறறியா
னிந்திரன்குருமனைவியைப்பற்றியேகினனால். 6

வேறு.

ஈரேழுலகத்துள்ளவர்களெள்ளும்பழிவந்தெய்திடவே
சீரார்வலாரிபுரோகிதனுய்ச்சிறந்தகணவன்றனையொருவி
வாரார்முலைபொற்கலசமெனமருங்குகொடியாமெனவயங்கு
தாராதேவிசந்திரனைத்தழுவிக்கருப்பந்தரித்தனளால். 7

சுரர்தம்மிறைபீதகன்றேவிதன்னைச்சோமாவிடுதியென்றே
யிரையுங்கடல்போலிலேகருடனெழுந்தங்கடர்ந்துமுடுகுதலுஞ்
சரியிலுசனன்சசிக்காகச்சாற்றவசுரர்மிகவெகுண்டு
பரியுங்கரியுங்களத்தவியப்பணிலமுழக்கிப்பொருதனரால். 8

அண்டம்விண்டதாமெனவேயசுரரார்த்தங்கமருடன்
மண்டிச்சமர்செய்திடுங்காலைவனசத்திறைவந்தமர்விலக்கித்
தொண்டைக்கனிவாய்த்தாரைதனைச்சுரர்தங்குருவின்கைக்கொடுத்தே
யிண்டைச்சடையோனிகர்முனிவரிமையோரேத்தவேகினனால். 9

தவரெண்வலாரிபுரோகிதனுந்தாராதேவிமுகநோக்கி
யுவமையில்லாவென்சேயாங்கசனுன்வயிற்றிலுதித்தமையாற்
பவவார்கலியினிவிழுந்துபதைப்பச்சபியாதின்றொழிந்தே
னவமேமுயலும்மொதுமகட்குமிழிவாந்தொழிலாயெனவறைந்தான். 10

சதுர்வேதத்தையறிந்தகுருசாற்றத்தாரைவிதலையுற்றுப்
பதிபாதத்தினிறைஞ்சியெந்தன்பிழையைப்பொறுத்தியெனப்பகர்ந்து
விதிதானிழைத்தசெயற்படியேமெலியுமடவாளழகுமலி
புதனும்புதல்வன்றனைப்பயந்தாள்புவிவானமையாப்பழிபூண்டாள். 11

பிறந்தபுதனைப்பீதகன்றன்பிள்ளையென்றுமகிழ்நாளின்
செறிந்தவமுதகிரணனுந்தன்சேயாமென்றுசிலுகிடவே
யறிந்தபிரமனவணடைந்திம்மகவைப்பயந்ததார்க்கென்ன
நிறைந்தபழிபூணரிவைவிதுசுதனுமென்றுநிகழ்த்தினளால். 12

தாராதேவிசந்திரற்குப்பயந்தேனென்றதனயனைத்தா
னேரார்பிரமனிரவியுடனொருவாதமர்வாயென்றகலச்
சீரார்குணமிக்கெழுந்தபுதன்சிறந்தேவயங்குங்கோள்களுக்கு
நேராயுயர்ந்தவடவரையைநித்தம்வலமாய்வருநாளில். 13

வேறு.

உத்தமப்பிரசாபதிபயந்திடுங்காளை
யுத்தமத்திளனுருவிலிவெள்கிடுமுருவோன்

வித்தகக்குணன்விபுதர்கடுதித்திடும்விறலோ
னித்தலத்துயர்வாலிகதேசத்துக்கிறைவன். 14

இளமனன்கரியிவுளிதேர்வீரர்களொருங்கக்
கிளையடர்ந்திடுகேடத்தினிற்கிருடிசார்த்தூலம்
விளையும்வெஞ்சினமுடங்குளையெல்லவும்வீட்டி
யளகைமன்சகாவமர்ந்தகாந்தாரத்தையடைந்தான். 15

அரனிலங்கியவுமையுடனரிவையாய்த்தோன்றி
விரியுங்கானிடைமேவியசெயலினாலதனுட்
டிரியும்பல்லுயிரெவைகளுந்தெரிவையராகத்
தரையின்வைகியவிளமனன்றனையளாயினனால். 16

அரிவையாகியவிளமனனரன்றனைநோக்கிப்
புருடனாகவேதவஞ்செயப்புராரிவந்தெய்தித்
தெரிவையாமுருவொழிக்கிலமுனக்கென்றுசெப்பத்
தரையையாளுமன்றளர்தலுமுமையவள்சாற்றும். 17

கங்கைவேணியன்காதலியிளமனைநோக்கித்
துங்கமன்னவதோகையாயேகமாந்திங்கட்
டங்கியும்மொருமாதநற்புருடனாய்ச்சார்ந்து
சிங்கம்வைகுங்கானிவ்வுழிதிரிகுதியென்றாள். 18

அரிவணக்குயிலம்மொழியறைந்திடவரசன்
கரிவணக்குகாவலர்கள்காரிகையராய்ச்சூழ
வரியிணக்கியவாணகுவிலோசனியாகிச்
சரவணத்தினினிளையளாய்ச்சரித்திடுஞ்சாலை. 19

மதிபயந்திடவானுறுபதங்களையொருவாப்
புதனிறைந்திடுசரவணப்பொய்கையிற்போந்தே
விதமடந்தையரிருமருங்கினுமுறவிளங்குஞ்
சுதையெனும்மொழியிளையெனுந்தோகையைக்கண்டான். 20

கம்பெனுங்கிரீவக்குயிலழகினைக்காணா
வம்பரத்தினிற்சசிசுதனனங்கசாயகத்தால்
வெம்புநெஞ்சனிம்மின்னிடையெவளெனவுள்கி
நம்பனாலிறைநாரியாயினசெயலறிந்தான். 21

அறிந்தநற்புதனரிவையர்தங்களைநோக்கிச்
சிறந்தகிம்புருடர்களுடன்சேருமென்றவர்கள்
பிறிந்துபோம்வகையியற்றியேபிறங்கியகலன்க
ணிறைந்தமெய்யிளைதன்னுடன்கலவியைநிறைத்தான். 22

தேவர்மங்கையர்திலகமாய்ச்சிறந்திடுமிளையோ
டாவல்விஞ்சவேயமுதசம்பூதனன்குமரன்
பூவினுண்மதுப்புசித்திடும்பொறிவரியளிபோற்
காவிவாளியன்வெள்கிடக்கலவிசெய்தனனால். 23

இரவுநண்பகலுகமொருவாமலேயியம்புஞ்
சுரதநூல்வழிச்சோமன்றன்சுதன்புயந்தோய்ந்து
வருதினங்களாய்நிறையுமோர்மாதமுமொருவப்
புருடனுமிளன்புதன்றனைநோக்கியேபுகல்வான். 24
மிருகயாத்திரைவிரும்பியிவ்வனத்தின்மேவினனென்
பரிகரிக்குலம்படைஞரெங்குளரெனப்பகரச்
சொரிகலாய்க்கணஞ்சொரிந்திடவிறந்தனரென்றே
முருகவிழ்தொடைப்புயன்சசிசுதன்மொழிந்தனனால். 25
விரகினற்புதன்விளம்பிடமெலிந்திடுமரசன்
சொரிகலிற்றலைமடிந்தவென்படைஞரைத்தொடர
வெரிகனற்படிந்திறப்பனென்றெழச்சசிபுதல்வ
னுரைகளிற்பலமொழிந்திடரொழிந்திடவுரைப்பான். 26
இறந்தநின்படைவீரர்களெவருமோராண்டு
நிறைந்தபோதினிற்கரிபரிநெருங்கிடநின்றே
டுறைந்துவாழ்வரென்றுரைத்திடத்தேறிநால்வேத
நிறைந்தநற்புராணங்கள்கேட்டிருந்தனனிருபன். 27
நிருபனாகியோர்திங்களானதிற்பினர்நிகரி
லரிவையாகியேசசிசுதனுரத்தினையணைந்து
தரையினிற்பினும்புருடனாய்த்தையலாய்மாறி
வருதினங்கண்மூன்றுநற்புதனுடன்மகிழ்ந்தான். 28
அஞ்சுதிங்களாண்டரசனாயருள்செறிபுராணஞ்
செஞ்சொனற்பொருளுணர்ந்துநூற்றைம்பதுதினமும்
பஞ்சின்மெல்லடிப்பாவையாய்ப்பரிபுரத்தொலிகள்
விஞ்சிடப்புதன்மகிழ்ந்தனுராகத்தைவிளைத்தான். 29
அரிவையாகியசெயலெலாமாணதாய்மறந்து
நிருபனாகியசெயலெலாநிகரின்மின்னுருவாய்த்
தெரிகிலாதுநற்புதன்புயஞ்சேர்ந்துறுகருப்பம்
பருவமாகியேபுரூரவாவினைப்பயந்தனளால். 30
அரிவையாகிநன்மகவினைப்பயந்தபின்னறிவாம்
புருடனாகியவிளமனன்புன்மைதீர்ந்திடத்தான்
சரியிலாப்புதன்றவர்களைக்கூவியேபழிப்பி
லரன்மகிழ்ந்திடவேயயமேதத்தையமைத்தான். 31
குறைவின்மாதவர்கோடகமேதத்தைவிளைப்பக்
கறைமிடற்றரன்கண்முனிற்றோன்றியேகரிமா
நிறையவீரர்கடன்னுடனிருபனாய்நிலத்தி
னுறைகுவாயெனவிளன்றனக்குரைத்தரன்போனான். 32
அரன்வரங்கொடுத்தேகவேயரிவையருருவைத்
தரையினோவிநீளிபமயவீரர்கள்சாரப்

புருடனாகியவிளமனன்புதனடிவணங்கிப்
பரிகரித்திரள்பொதுளத்தன்பதியிடையடைந்தான். 33

அரசனாகியாண்டிளமனன்றன்னகரடையச்
சரியிலாப்புதன்புரூரவாத்தனைவளர்த்தெழில்சா
னிருபனுக்கியேமுடிகவித்துலகினீள்சிகர
மிரவிசேர்பிரதிட்டமாபுரியினையீந்தான். 34

புதனளித்திடுபுரூரவாபுரியினினெய்தி
மதியெனக்குடைவயங்கிடமதனனுநாண
விதிமதித்திடுவேதியராசிகள்விளம்பக்
கதமிலாதரசியற்றியேகளித்திடுங்காலை. 35

வேறு.

மித்திரவருணரென்போர்விசும்புறைவோர்கடம்மி
னுத்தமவடிவின்மிக்காருருப்பசியெழிலிற்காம
னத்திரமடரநொந்தேயவளைத்தாம்வரித்துக்காம
மொத்துவீரியமுன்வீழவொருகுடத்தமைத்தாரன்றே. 36

இருவர்வீரியத்தைநொய்தினிலங்குகும்பத்தினேற்பச்
சரியிலாங்மிசாபத்தாற்றவர்களெண்வசிட்டன்றானுங்
கரையிலாவுவரிதனைக்கரத்திடையமைத்தோன்றானு
மரியநான்மறைகளோங்கவவதரித்தார்களன்றே. 37

ஒருகுடத்திரண்டுபேருமுதயமாய்வயங்கியேகத்
தெரிவையர்திலகமாயவுருப்பசிநகிலிற்சேர்ந்து
சுரதநூற்படியிற்றோயாத்துன்பவீரியந்தான்வீழ
விரகவேதனையினாலேமித்திரவருணர்சொல்வார். 38

மீனகுவிழியாயெம்மைவிரும்பியுன்னகிலிற்சேர்த்தே
யீனமிலதராவூறலீந்திலையதனானீபோய்
மானிடன்றேவியாகிவாழ்குதியென்றுபோக
வூனமிலுருப்பசித்தேனும்பர்விட்டிம்பர்வந்தாள். 39

வேறு.

பரிபுரமரற்றச்சதங்கைமிளிற்றப்பாதசாலம்பதமிலங்கக்
கரவளையொலிப்பத்தொடிகையுந்தயங்கக்காஞ்சிநற்கலிங்கமேல்வயங்க
விருதனமசையக்கொடியிடைதுவளவிருகயல்விழிகுழையடர
வரிமலர்க்குழன்மையெழிலியைப்பழிப்பவவனியினுருப்பசியடைந்தாள்.

அருபியாமதனன்மனந்தமொறவருந்தவர்மயலெழுந்தலையப்
புரூரவாமுனர்வந்துருப்பசிநிற்பப்புதனருள்புதல்வன்பொற்பாருஞ் [தி
சுரூபியாமிவள்விண்டோகையர்துதிக்குஞ்சுதைமொழியெவளெனவுளத்
னிரூபியாதயர்ந்தேயனங்கசாயகமெய்நிறையநீயாரெனவுரைப்பாள். 41

மித்திரவருணரறைந்தசாபத்தான்மேதினியடைந்தனன்பழிப்பில்
சித்தசன்சமழ்க்குமுருவுடைமனநின்செயலெலாநாரதன்செப்ப

வித்தகரின்றேளனையவெய்தினன்யானுருப்பசியெனவிறலரச
னெத்தவமுறநீயிவணடைந்தனையென்றியம்பிடவிலங்கிழையறைவாள்.

நெய்யெனக்குணவாய்ப்பருகுவன்மிகுத்தநேயமாய்வளர்த்திடுமிரண்டு
மையிளப்பறழைக்காத்துநீயிருளின்மகிழ்வுடனணுகுவதன்றி
வெய்யவன்கனலியுடுபதியொளியால்விழுமியகலையினக்கினமாய்த்
துய்யவபுவியினிருவருங்காணிறொருவுவன்யானெனச்சொன்னாள். 43

ஒவியத்தெழிலைப்பழித்திடவிலக்குமுருப்பசிமொழிந்திடவதற்குக்
காவலனிசைந்துபரிதிபோய்மறையக்கங்குலிற்கவினுறுமணைமே
லாவியுமுடலும்வதிந்தசீரெனவேவறுபதினாயிரம்பருவம்
பாவையர்திலகிபயோதரவணைமேற்சுரதநூற்பரவையிற்படிந்தான். 44

தூயநற்புரூரவாபுயத்தழுந்தத்துணைநகிற்கிரியினைமடுத்தும்
வாயமிர்தளித்துநகக்குறிவகுத்துவன்பதாயுதங்குயின்மயிறே
ளீயனஞ்சகோரஞ்சரோருகங்குழும்பூமியம்பிடுங்குரன்மொழிந்தணைந்தே
யாயுமன்னவனோடுறவரைப்பயந்தாளமரர்தம்பதியுறையணங்கே. 45

சந்திரன்புதல்வன் சிறுவனைத்தழுவித் தனயர்களறுவரைப்பயந்த, சுந்தரமலிந்த வுருப்பசியணங்கு துலங்கியபுவியமர்நாளி, னிந்திரனவையின்முராரியூருவினினெழுந்தபூங்கொம்பினைக்காணான், கெந்தருவரைச் சென்றவனியினரிவைக்கிளியினைத்தருதிரென்றுரைத்தான். 16

சசிபதிமொழியாற்சென்றகந்தருவர்தரணியிற்றபனன்போய்மறைய
நிசிபரந்தெழுந்தகங்குலினணைமேனிகரிலாவுருப்பசியுடனே
கசரததுரகவலமனன்சுரதக்கலவியிற்களித்திடுங்காலை
விசையினிற்செச்சைப்பறழிரண்டரற்றவிண்ணிடைப்பற்றியேகினரால்.

அயப்பறழிரண்டு மரற்றியவொலியை யணங்குகேட்டழகதாயுயர்தன், குயத்தினின்வதிந்து கலவியைவிளைக்குங் கொற்றவன்றன்னையெண்டிசையுங், செயித்திடுமெனவென் சிறுவர்போல்வளர்த்த செச்சையைக்களவர்கொண்டேகப், பயத்தையுற்றெதிரா வலியெனவிருந்தா யென்றுபல் விழிவுகள்பகர்ந்தாள். 48

இக்கிரதச்சொல்லேந்திழைவிளம்பவினைமகனுந்தகமெடுத்தே
நக்கினத்தினனாய்ப்பின்றொடர்ந்திடவேநகிலொளிருருப்பசிகவினான்
மிக்கபொன்னாடைபுனைகிலளாகிவெற்றரையாகிப்பின்னடக்க
விக்கிரமத்தாலேகுகாந்தருவர்மின்னவிர்மாயையால்விளைத்தார். 49

மின்னவிரதனாற்புவிவெளியுறவேமெல்லியல்வெற்றரைதன்னை
மன்னவன்பார்க்கவரசனக்கினத்தைமான்விழியுருப்பசிகண்டே
யின்னலினிருபவிருவர்நக்கினமுமிருவருநோக்கினமென்னாச்
சொன்னசொற்படியினவனியையொருவிச்சுரரிறைநகரினைச்சேர்ந்தாள்.

இருவர்நக்கினமும்வெளிசெய்ததெனவேயியம்பிவானுருப்பசியேக
நிருபனொந்தலைந்தரிவையிலாதயர்ந்துவிழுந்தவண்டேடிபேசிரி

லரிமலரணையிற்காண்கிலன்வெருவியகன்மனையெங்கணுந்தேடி.
மருளுறவறிவுபறிபடாகரின்மருங்கெலாந்தேடினன்மயங்கி.

ஓவியமுயிர்பெற்றெனநடந்தெய்தியுவட்டிலாக்கலவியைவிளைத்தென், னாவியுமனமுந்தன்னிடத்தமையத்தினந்தினமற்புதமுறவே, காவிநல்வி ழியா ணகையினான்மொழியாற் கலசமென்னகிலினாவிடையாற், பூவின் மெல்லடியானடையினாலுருக்கும்பொற்கொடியகல்வதேனென்னும். 52

புயல்பிறைகயல்விற்குமிழ்வளையிலவம்பூகம்வேய்காந்தள்பொற்கலச
மியல்புறுந்துடிகட்செவிகவின்கதலியலவனெண்ணிணைவாராற்கமடஞ்[ய்
செயல்புரைகளினமமர்ந்தகொம்பெனவே சிறந்தபின்சேணுறினென்மெ
யுயிரிராததனாலிம்பரினுளளென்றோடியேதேடினானெல்லை. 53

புரவலன்கலங்கிச்சலதியிற்பிறவாப்புதியநல்லமிர்தெனப்பொருந்தி
யிரவுநன்பகலுஞ்சுரதநூற்சுவையையீந்தமின்யாண்டுளாளென்றே
கரிபரியிரதந்துதைந்திடும்புரியிற்காண்கிலானாட்டினையிகழ்ந்து
கிரியரியிரலைகிளர்கறையடிசேர்கிரியடர்பழுவத்தையடைந்தான். 54

வரையிடைக்கானான் பொழிலிடைக்கானான் வாவியின்மருங்கிடை க்கானான், வெருவிவிண்டிறைவில் லெழிலியைக்கண்டு விரியுநீர்மீன்வ ராற்கமட, மரைமலர்குமிழாம் பல்கயல்கதலி வல்லிநீர்ச்சுழியெலாநோ க்கி, யரிவைதன்னுருவைப் புவியினாசினியிற் சிதறினள்கொல்லெனவய ர்ந்தான். 55

நிலமிசையயர்ந்தநிருபர்கோன்றேறிநிகரிலாவரையிடத்தெய்திக்
கலவியின்கனியேயமிர்தினின்சுவையேகவினையேனுடற்குயிரே
புலவிசெய்தகன்றாய்புல்லவாவெனவேயம்மொழிமலைத்தொனிபுகலச்
சிலையெனுநுதலியிவணுளளெனமன்றேடியேகாண்கிலாதலைறவான். 56

அணைக்கவாவெனயா னுரைத்தசொல்லுரைத்த தரிவையோபிறங் கலோவறியேன், மணத்தபூங்கணையோ னிரதம்வாள்கவிகை மாமுரசி யாவையும்பகையாய்ப், பணைக்கைமாவருந்தும் விளாங்கனிபோன்றேன் பரவையின்முளரியென்றெய்யுங், கணைக்குநேர்விழியாய் வருதியென்று ரைத்துக் காசினியெங்கணுந்திரிந்தான். 57

மாறிலாக்குருக்கேத்திரத்தலப்பொழிலின்மங்கையர்குழாம்புடைசூழ
நாறுபூங்குழலாளுருப்பசியவணினண்ணவேபுரூரவாநோக்கி
யூறியகளிப்போடவண்முனரெய்தியுன்மயலுறவரன்விழியா
னீறுறவெரியுமதனனைப்போல்யானிறந்திடாதணைத்திநீயென்றான். 58

மதிசுதன்சிறுவன் மொழிந்திடக்கேட்ட வனமுலையுருப்பசியணங் கு, பொதுமடந்தையர்க்குக் கற்புமெய்யுளதோ புவியினெண்டிசையினை வென்று, மதகரிவெரினின் வருமனமகளீர் மயக்கினைவெள்கிலையென் னாச், சுதைதருமொழியாள் வருடமொன்றொருவித் தோய்குவனுன்னை யென்றகன்றாள். 59

அரிவையர்திலகியிவையெலாமறைந்தேயமரர்தம்பதியினையடைய, விரகவேலையின்வாய் வதிந்திடுபுரூர வாவொளிர்நகரத்தின்மேவி, வருடமொன்றொருவக் கழிந்தநாட்குருக்கேத் திரந்தனின்வயங்குமோடையினிற், பரிவுடனனுக வுருப்பசிமடந்தை பரிபுரம்புலம்பிடவந்தாள். 60

மங்கையர்திலகவுருப்பசிவரலுமனமகிழ்புரூரவாவவடன் [த்
கொங்கைதன்னுரத்திற்குழைவுறக்கமழுங்குங்குமக்கலவைகள்கோட்டி
தகைமெல்லணையிலிருவரோருடல்போற்றழுவியேசுரதநூற்கலவி
பொங்கிடவமுதவாயினீரளித்துப்புரவலன்மயங்கிடப்போனாள். 61

இலவிதழமிர்த ஆறலைப்பருகி யிணைமுலையிறுகுறத்தழுவிக், கலவியைவிளைத்துப் புளகமெய்யரும்பக் களிப்புடன்போகமுற்றுயர்ந்தே, யுலர்பயிரொழிவி பொழிந்திடத்தழைத்த தொத்துளம்வியந்திடுமரசன், மலரணைமிசையினுருப்பசியணங்கைக் காண்கிலான்மாழ்கலுற்றயர்ந்தான்.

மங்கையங்கொருவவலரியின்வெயிலால்வாடியேயுலர்ந்தபாதவங்க
ளங்கிவந்தடற்பவெரிந்திடுசெயல்போலரசன்மெய்யனங்கசாயகத்தால்
வெங்கனன்மடுப்பவிரகவேதனையுள்வெதுப்பவேறொருசெயலறியான்
சிங்கலின்முனிவர்திரளிருப்பிடத்தைச்சேர்ந்தடிபணிந்திவையறைவான்.

அருப்பநுண்ணிடையாளுருப்பசியெனையேயணைந்துயர்விசும்பினையடைய, நெருப்புறுவிரகவேதனை யுளத்தைநிறைத்திடநகரினைநீங்கிப், பொருப்பிணைபுயத்தின் வலியெலாம்பொன்றிப் புவியையாடிறமெலாமழிந்தேன், கருப்புரக்கலவை கமழ்குயத்தவளைக் கலந்திடவருளுவீரென்றான். 64

நிருபனீதுரைப்பநெடுந்தவமுனிவர்நிறைமதிமுகமடந்தையர்மேல்
விரகமுற்றவர்க்கீண்டறநெறியுரைத்துவிலக்கினுந்தவிர்கிலார்பயத்துட்
சிரமமிழ்ந்திடவேயுறுபவர்தம்மைத்தீயினாற்சுடவொண்ணாதுபோற்
பரமனைநினையாதுருசிப்பசிசெயலைப்பற்றினையென்றுறநகைத்தார். 65

முறுவல்செய்முனிவரரசனைநோக்கிமொழிகுவாரித்தலையோடு
நிறையநின்னாட்டிலிரந்திடவலையேனிகரிலாவுருப்பசிநின்றோ
ளுறுவளென்றுரைப்பப்புரூரவாவுவந்தேயுயர்ந்திடுங்கபாலத்தையேந்தி
யறனுறத்தானுளவனியினிரப்பவடைந்தனன்மயலினாலலைந்தே. 66

அரிவைதன்மயலாலறிவழிந்தரசனடவியையொருவியோர்கரத்தின்
விரிவுறுகபாலமேந்தியேதானுள்வளாகத்திற்சென்றவன்வெள்கி
வரையுயர்பழுவத்தெய்தியத்தலையோடுடைத்துருப்பசிமயறன்னு
ளரியமீச்செய்வதறிகிலானயர்ந்தேயருந்தவர்பாற்சென்றதறைவான். 67

தவர்கணீருரைத்தமொழியினாலவனிற்சுட்டியதலையினோடேந்திப், பவமிலாதிலங்கு நாட்டினிற்சென்று பலியெனவெள்கியேவிரைவி, னுவமையில்பழுவத் தெய்தியததலையோ டுடைத்துருப்பசிமயலொருவா; திவ்

ணின்வந்தனன் யானெனனுமாமுனிவர் நகைத்திவை விளம்பலுற்ற
னரால். 68

நீயவனுடைத்தகபாலமோர்மரமாய்நிவர்ந்திமெதனினைக்கடையப்
பாயுதாசனனையெம்முனிற்கொடுவாவென்றவர்பகர்ந்திடப்பாறி
வேயுயர்பழுவத்துடைத்திடுங்கடிஞைபிசுமந்தமாகியேவிளங்கத்
தீயுறவஃதைக்கடைந்துதேயுவினைமுனிவர்பாற்சென்றுசுட்டினனால். 69

முனிவர்மன்கொணர்ந்தகனலினான்மறையைமொழிந்துகாமியமகமுடிப்
கனமணியிலங்குவிமானமேற்கவரியசைந்திடக்கலனெலாமிலங்க [பக்
வனமெனநடைகொளுருப்பசிபுரூரவாவினையங்கையினணைத்துத்
தினகரனவிரைச்செயித்தொளிதிகழுந்தேவர்தம்பதியினைச்சேர்ந்தாள்.

உருப்பசியுடனும்விருப்பமுற்றுயர்ந்தவும்பர்கோனகருறைநிருபன்
றிருப்பொலியுரத்தனழிவிலாப்பதத்திற்சேர்வனென்றருந்தவர்செப்ப
அருப்பநுண்ணிடையாள்கலவியையொருவியவனியினிழிந்துநன்மதியாற்
பொருப்பினிற்றவஞ்செய்தரியமர்பதத்திற்புகுந்தனனுலகெலாம்புகழ.

தூயநற்புரூரவாவுருப்பசியைத்துறந்துநற்கதியுறவவன்சே
யாயுமன்னரசாண்டறநெறிதழைப்பவழகியநகுடனைப்பயந்து
மீயுயர்மவுலிசிறுவனைக்கவித்துவெவ்வினைவேரொடுமெடிய
வாயுமாதவரைப்பணிந்தருந்தவத்தாற்கதியினையடைந்தனனன்றே. 72

பகடெரிரதம்பரியெலாநிறையப்படைஞர்கள்பரவைபோற்றுதைய
விகடராங்கயவர்வேரொடுமெடியவிழுமியவறநெறிவிளங்க
நகுடனுசனத்தின்கவிகைமீதுயரநற்புயத்தழகியநளின
மகளணிந்தயமாச்சதமசமுடித்துமறையவர்சூழவாழ்நாளின். 73

வேறு.

இந்திரன்பீதகன்றன்வரவெழுந்தெதிரிற்சென்று
வந்தனைசெயாமற்செல்வமகிழ்ச்சியாலிகழ்ச்சிசெய்ய
நொந்துபூசுரனுமேகனூறுபத்தாகுநோக்கன்
சிந்தையிற்றளர்ந்துதேவகுருவின்பாற்செல்லும்வேலை. 74

வாசவனெய்தித்தன்னைவந்தனைசெயாதியான்செய்
யாசினைப்பொறுத்தியென்றங்கறைவதன்முனரிற்றெய்வ
பூசுரன்கரத்தலோடும்புரந்தரன்வலிமைபொன்ற
வீசனுமஞ்சவார்த்தேயவுணர்களெதிர்த்தாரன்றே. 75

தானவர்க்காற்றாராகிச்சக்கரன்மொழியினாலே
வானவர்துவட்டாநல்குமகன்மறைநெறியையோம்பி
யீனமில்விசுவரூபன்றனக்கின்சொலியம்பித்தங்கட்
கூனமிலாசானாகென்றுரைக்கச்சம்மதித்தானன்றே. 76

சதமகனுடனேவானோர்தழைத்திடவாசானாகிக்
கதமிலாவிசுவரூபன்காமனுக்கன்பினாலே

சுதைதருமொழிசேர்நாராயணகவசத்தைத் தூய்தா
யிதவுபதேசஞ்செய்யவிலேகர்கள்களித்தாரன்றே. 77

சிந்தையின்மகிழ்ந்துநாராயணகவசத்தைச்செப்ப
விந்திரன்வலிமைசேரவிலேகர்களுடனேதந்த
தந்தியின்வெரினிற்றோன்றித்தானவர்தம்மைநூறிப்
புந்தியின்களிப்பினோடும்போந்தினிதமருநாளின். 78

சுரையுயர்சோமபானந்தூயதாமன்னமெல்லாம்
பரிவுடனுதாரமாரப்பருகியுமருந்தமூன்று
சிரமுளவிசுவரூபன்சிறந்திடத்தன்னைநல்கு
மரிவைநல்லசுரனன்பாலருண்மகளாகையாலே. 79

கிரந்தரம்வேள்விதன்னினிறைந்திடுமவிர்ப்பாகத்தைக்
காந்துநற்றுவட்டாநல்குங்காலைவாளவுணர்க்கீயப்
புரந்தரன்வேலினாலேபொறியுகவவன்றன்மூன்று
சிரந்தனைத்துணித்துவீழ்த்தான்றேவர்கண்மகிழமன்னோ. 80

அன்னவன்சிரங்கண்மூன்றுங்கவிஞ்சிலமழகார்தோகை
துன்னியகலவிங்கந்தித்திரியெனுங்ககமாய்த்தோன்றி
யின்னிலத்தெழலுமப்போதெழும்பிரமகத்திதேவர்
மன்னனையடர்தலோடுமெற்றவன்கரத்தினேந்தி. 81

அருமறையோனைக்கொல்லவடர்பிரமகத்திதன்னைத்
தரைமரந்தோயந்தூயதையலார்தாங்கவீய
வரிவையர்கருப்பமாயும்புணரத்தோண்டவனிமல்கப்
பெருகநீர்தறித்தசாலந்துளிர்க்கவிவ்வரங்கள்பெற்றார். 82

மண்ணினிற்களரேயாகிமரத்தினிற்பிசினேயாகி
எண்ணருந்தோயந்தன்னிலிழிவதாநுரையதாகிப்
பெண்ணினுக்கோராந்திங்கட்பிறந்திடுமிருதுவாகி
நண்ணியவலாரிதன்னைநலிபிரமகத்திதானே. 83

இந்திரன்கரத்தின்மீதினெழும்பிரமகத்தியேக
மைந்தனைக்கொன்றானென்றுமனமெலிதுவட்டாச்சீறித்
தந்தியையூருவோனைவதைக்கச்சத்துருவந்தெய்த
மந்திரநவின்றுநேரின்மகத்தினைவளர்த்தான்மாதோ. 84

இந்திரன்றன்னைக்கொல்வானெழவெனுஞ்சத்தம்பேதித்
தந்தமிக்குயரச்செய்யும்வேள்வியின்றழலின்முந்தி
மந்தரவரையுநாணவிருத்திராசுரன்வானோங்கு
மந்தகாந்தகனைப்போலவவுணர்கண்மகிழநின்றான். 85

தினமொருகாவதந்தானகன்றுயர்ந்தெழுந்துதேவர்
மனமறுகிடவேயோங்கிவிருத்திராசுரன்வான்விஞ்சுந்
தினகரனவிருநாணச்சிறந்திடுஞ்சூலங்கொண்டான்
டனவெரின்மன்னுவோனுமஞ்சிடவார்த்தானன்றே. 86

கண்டகவசுரர்சிந்தைகளித்திடத்தினங்கடோறும்
விண்டலத்துயர்ந்துசூழவகன்றெங்கும்வெளியிலாதா
யண்டமாமுகட்டைமுட்டியார்த்துவந்தடர்க்கவேயா
கண்டலனமரரோடுங்கலங்கிமெய்விதலையுற்றான். 87

விதியரன்வெருவத்தோன்றும்விருத்திராசுரனைநோக்கி
சதமகன்விபுதர்கட்குஞ்சமர்விறன்மாழ்கித்தாமா
பதியினையுலகமெல்லாம்படைத்தளித்தழித்தேயோங்குங்
சதியினையருளுவானைநினைந்தெமைக்காத்தியென்றார். 88

உந்தியிற்பிரமன்றன்னையுதவியேயவன்றானேங்கித்
தந்திமூலகமீதிற்சனித்ததீயவர்களாலே
நொந்தவெந்துயரைநீக்கியவர்களைநொறுக்குமைய
தந்திமுன்வந்தபோல்வந்தெம்மிடர்தவிர்த்தியென்றார். 89

துவாதசாக்கரமுமட்டாக்கரமுநெஞ்சிடையிற்றுன்னக்
குவானிருவடியாற்கொண்டுகொடியகோளரியேயாகிக்
கவான்மிசைக்கனகன்றன்னைவதைத்துக்கட்செவியின்வைகி
யவாவவர்க்ககப்படாதானடிநினைந்தியோகஞ்செய்தார். 90

வெந்துயரதனாலியாக்கைமெலிந்திடயோகஞ்செய்யு
மிந்திரன்விபுதர்தங்களிடரறவிலங்குபேரி
துந்துமிமுழங்கவீணைச்சுரர்முனிநடிப்பத்தூய
சிந்துவினரவையோவிச்சீதரன்றோன்றினால். 91

வேறு.

சனந்தனுஞ்சனாதனுஞ்சனற்குமாரனுஞ்
சுனந்தனுஞ்சனகனுந்தூயநந்தனு
மனந்தனிற்களிப்புறமறையையோதியே
யனந்தன்மீதமருவான்முனர்வந்தாடவே. 92

வேறு.

நீலமாகிரியினம்போருகநிறைந்துச்சிமீதிற்
கோலமார்தவனனெய்துங்கொள்கைபோற்கிரீடமின்ன
கால்கரமுந்திமார்பங்கண்செவ்வாய்கவின்கொண்டோங்கச்
சீலமார்கலுழன்மீதிற்றிகிரிசங்கேந்திவந்தான். 93

சூரியர்கோடிபேர்கடுன்னியவொளிகளான்றங்
கேருறுகிரீடந்தன்னிலெண்ணிலாமணிகடோன்ற
வாரியினிலவுவெய்யோனிளவெயில்பரந்தமான
வாரமுங்கலனுமெய்யினவிருறத்தோன்றினால். 94

கனகபூதரத்தினுற்றகருமுகிலேலமாயோன்
றினகரன்வலவன்றம்பிதோளின்மேற்சேர்தலோடும்
வினைகடிந்துயர்ந்தோமென்றுவிண்ணவர்விபுதர்நாதன்
புனமயில்புயலைக்கண்டபொற்பெனவாடினாரால். 95

ஆடினார்புளகமெய்யினரும்பவாரணத்தின்சொற்கள்
பாடினார்நெடியோன்பாதம்பணிந்தனர்படியிற்கண்ணீ
ரோடத்தம்முளமுமென்புமுருகிடவிருகைகூப்பி
யாடகாந்தகனைநோக்கியமரர்கோன்றுதிக்கலுற்றான். 96

அண்டமெண்ணிலாதவாகியவற்றுள்ளும்புறத்துமாகி
முண்டகத்திறைவனைந்துமுகனுமாதவர்க்குந்தோன்றாக்
கண்டகக்கராவானொந்தகரியுய்யவடைந்ததேலப்
புண்டரீகங்கள்பூத்தபுயலெனவந்தாயென்றான். 97

மந்தரவரைமத்தாகவாசுகிகயிறதாகச்
சிந்துவைக்கடைந்துதூயதெரிவையாயமிர்தமீந்து
மந்தகன்வெருவவெய்துமாடகன்றசக்கிரீபன்
வந்தெமைநலிவார்தம்மைவதைத்திடர்கடிந்தசோதி 98

உருத்தமனியத்தினோங்கல்பொடிபடவுயர்ந்துதோன்றும்
விருத்திராசுரனைக்கொல்லும்விறலிலேன்சுதையினெய்து
மொருத்தியையுரத்தின்வைத்தவொருவனேயவனைவெல்லுந்
திருத்தநீயருடியென்னத்திருமகள்கணவன்செப்பும். 99

கடுவினையகற்றுநாராயணகவசத்தைநெஞ்சிற்
றிடமுடன்செவித்தியோசஞ்செய்யுமாத்ததீசியத்தி
மிடலுறுவயிரமாகுமதுதனையவன்பால்வேண்டிக்
கடையவக்குலிசத்தாலேயவுணனைக்களைதியென்றான். 100

பின்னருங்கமலைகாந்தன்பேசுவான்முனிவனத்தி
தன்னின்மற்றதனையேந்துஞ்சதமகவுன்கைதன்னின்
மின்னெயிற்றவுணனுக்கைவீழ்ந்திடுமெவனிதன்னின்
மன்னுமென்சத்திநீபோய்வதைபுரியவனையென்றான். 101

என்றரியருளலோடுமிந்திரனெழுந்தங்காடி
மன்றலந்துளவினானைவணங்கியேபோற்றவானோ
ரன்றுலகளந்துநுங்கியாலிலையமர்ந்தவையா
வின்றெமையளித்தாயென்றேயிறைஞ்சமாலேகினான். 102

அரிபயோததியினெய்தவமரர்கண்மகவானோடுஞ்
சரியிலாத்ததீசிதன்னைச்சார்ந்தவணிறைஞ்சியம்பொன்
வரைதுகளாகவோங்கும்விருத்திராசுரனைமாய்க்க
வருளுவாய்முனிவவுன்றனத்தியையெமக்கீண்டென்றார். 103

கரிவெரினுயர்வோன்வானோர்கழறிடத்ததீசிகேட்டுச்
சரிரநித்தியமீங்கன்றுசரோருகன்றனக்கென்றாலு
நரைதிரைமூப்புநோய்கணலியுமிக்குரம்பைவேண்டேன்
பரவுபகாரமாகப்பருத்தவென்பளிப்பனென்றே. 104

தேவர்கட்குபகாரத்தைச்செய்திடத்ததீசிதன்மெய்
யாவிபோயரிபதத்தையடையயோகத்தானீங்கப்

பாவமில்விபுதர்கோமான்பழுதிலாமுனிவனத்தி
யாவலிற்கரத்தால்வாங்கியமரரோடேகிஞஞல். 105

உயிரகன்முனிவன்மெய்யினூரமுறுமத்திதன்னைச்
செயலுறக்கடைதியென்றுமகபதிதெய்வத்தச்சன்
கயினுறக்கொடுக்கவன்ஞன்கடைந்தவச்சிராயுதத்தைப்
புயறனைப்பரியாயூரும்புரந்தரன்கரத்தினீந்தான். 106

அத்திவெங்குலிசமாகவகமகிழ்வலாரிவெண்மை
யத்தியின்வெரினிற்றோன்றியமரர்கண்மிடைந்துசூழ்ந்தாண்
டத்தியினொலிபோலார்த்துத்துதைந்திடவவுணனிற்கு
மத்திசைநோக்கிச்சென்றுனதபத்திரமீதோங்க. 107

சுரர்தசரிபுக்கள்சத்தர்துவாதசாதித்தர்தேயு
மருதரெண்வசுக்களேகாதசவிடையமர்ந்தோர்வானிற்
சரியிலாப்பிதுர்க்கடெய்வவைத்தியர்தாழ்வொன்றில்லா
வருகுருவிசுவதேவர்முதலினோரார்த்துவந்தார் 108

துந்துமிபேரிதக்கைதுடிகைகாகளங்கள்சின்னஞ்
சிந்துவினொலியுமஞ்சத்திசைசெவிடுறவேயார்ப்பத்
தந்தியின்வெரினிற்றோன்றிச்சாமரைதடங்கியோங்க
விந்திரனவுணரோடாண்டெதிர்பொரவடைந்தானன்றே. 109

பருத்தவெள்வரையைப்போலும்பகட்டிறைவரலுநோக்கி
விருத்திராசுரனுமெண்ணிலசுரர்கண்மேவவஞ்சக்
கருத்தினனாகிவானோர்கலங்கிடக்கடைநாட்டோன்று
முருத்திரனெனவேசீறியுறுத்தனனுலகமஞ்ச. 110

வேறு.

சம்பரனமுசிபருவரணிடபன்சங்குசிராவயக்கிரீப
னம்பரன்றுவிமூர்த்தனன்புலோமாகியழல்சினவிருடபர்வாவு
மும்பரஞ்சேதியுயர்பிரகேதியுற்கரன்விப்பிரசித்தி
யம்பரவொலிபோலார்த்தனர்சுமாலிமாலியோடரக்கர்வந்திடவே.

வேறு.

எரிசினத்தினர்பிறையெயிற்றினரிறுதியிற்பெயுமுகிலெனச்
சரம்விடுப்பவர்வடவையொப்பவர்தழலெழச்சுழல்விழியினர்
வரைதுகட்படவடிபெயர்த்திடுமறவர்குத்திரரொருகையா
லிரைதிரைக்கடறனையிரைப்பவரெதிரடர்த்திடுமவுணரே. 112

இடிவெடித்திடுகுரலர்முற்கரமெழுமழுப்பலவெறிகுவார்
வடவையொத்திடுவிழியர்கப்பணம்வலயம்விட்டெதிர்மலைகுவார்
கடன்மடுத்திடுமெரியெனக்கதமுறமுரட்கணைகடவுவார்
கொடியர்நக்கனும்வெருவவிற்கொடுகுறுகியத்திரம்விடுகுவார். 113

பறையிடக்கைகடிமிலைசச்சரிபணவமொத்திடுகரடிகை
யறையுநற்சினவொலிமிகுத்திடவடரரக்கர்களவுணரோ

றைவர்மைக்கிரியெனவெதிர்ப்பவருருமிணைப்பொடியுகுகையார்
கறைமிடற்றரனணிபணிப்படைகடவுமுக்கிரர்கடுகவே. 114

விடையினுற்றவரெனவயிற்கொடுமிடைவர்விற்கணைசொரிகுவார்
வடவரைக்குவடுறவுயர்த்தெழுமகுடமெத்தியசிரசினர்
புடவியுட்கிடவடிபெயர்த்திடுபுகைமிகுத்திடுநகையினர்
கிடமிகுத்தவாழனுருக்கணர்தினகரப்படைவிடுகுவார். 115

அறனழித்தவர்திறன்மிகுத்தவரடர்சுடர்க்கதைவிடுகுவா
ரிறுதியுற்றிடுமெரனெனக்கடிதிரவிகற்படைகடவுவார்
மறலியுற்றெனவெதிர்நடப்பவர்வடவனற்கணைசொரிகுவார்
நெறியறுத்தவர்புகையுயிர்ப்பினர்வெடுவெடுச்சொலினிருதரே. 116

முதுசினத்தவர்வயிரமுற்றவர்முகிலெரித்திடுவிழியினர்
திதியளித்தவர்விதிமதித்திடுதிறலர்சக்கரமெறிகுவார்
மதிதனைப்பிளவுறுமெயிற்றினர்வரைபொடிப்படவிடறுவா
ருததியுற்றெனவொலிமிகுத்தவருமைபதிப்படைவிடுகுவார். 117

அருமுகத்தவர்கதமிகுத்தவர்கசியினைத்தருசுழல்கணர்
வரமிகுத்தவர்வரிசிலைக்கையர்வடவையுற்றெனவருகுவா
ரரவுமிழ்ந்திடுவிடமெனப்படியதிரவுற்றிடுமடியினு
ருரனுறக்கரியுதைபதத்தினருரகவத்திரம்விடுகுவார். 118

சிலைபிடிப்பவர்மலையையொப்பவர்சிவனருட்படைவிடுகுவார்
வலனையுற்றவர்நலனையற்றவர்வலயமுட்கரமெறிகுவார்
கலியையுற்றவருலவையொத்தறைகதபதிக்கணைமுடுகுவார்
சலமிகுத்தவர்கொலைமனத்தினர்தழலுகக்கணைபொழிகுவார். 119

வேறு.

தானவப்படைஞ ரடண்டயின்முட்கரம்
வேன்மழுக்கணையம்வில்லேறுவிட்டேகனே
சோனையிற்பதின்மடங்காகவேசொரியவே
வானவர்க்குழுவெகுண்டேமலைந்தாரரோ. 120

குந்தம்வாள்கப்பணங்கூரயில்லெழுமழு
நந்தகம்விட்டுவின்ஞணிகாதுறவளைத்
திந்துவின்பிளவைநேர்கணைசொரிந்தெதிரவே
யந்தரத்தவுணர்தம்படையெலாமற்றவே. 121

சுரர்விடுங்கணையினுற்றிதிதருஞ்சுதர்படை
எரியமாகிருதருமசுரருமெண்ணிலா
வரைகளுஞ்சாலமும்வானமீமறையவே
சொரிதலும்விபுதர்கள்கணைகளாற்றுண்செய்தார். 122

கிருதருமவுணருநெறியிலார்விடுவனா
மரமெலாந்துகளுறவாளியான்மாற்றிசம்

சுரர்நெடும்படைகளும்விசிகமுஞ்சொரிதலுஞ்
சரிநிலாதோடினார்தானவப்பெயரரோ. 123

கடை.யுகக்காலினாற்கடல்கிழிந்தென்னவே
யடல்முனைந்தேயெதிரவுணருமிருதரு
முடைதலுந்நீள்துவட்டாச்சுதனுருமெனத்
தடைசெய்தங்கவரொடுஞ்சாற்றலுற்றனரோ. 124

அதிதிதன்சுதர்களோடமர்செயப்பயமுறத்
திதிதருஞ்சிறுவராந்திரளெலாம்பாறினீர்
மதியிலீர்சமர்செய்திங்குயிர்துறந்தார்கள்வான்
கதியினேறுவரலானிரயமேகாண்கிலார். 125

ஈதுரைத்தஞ்சன்மின்னெனுமுரைகூறியே
யோதையாருவரியினொலிகளுமஞ்சிடப்
பாதவம்வரையகற்படியினிற்பொடியுறப்
போதுவான்றோள்புடைத்தார்த்தனன்பொறியுக. 126

கண்டகன்றோள்புடைத்தார்த்திடக்கவினுறு
முண்டகன்றாரமாமலையுளோன்முனிவரோ
டம்டம்விண்டதுகொலோவெனவுளைந்தாரமர்
மண்மெண்டர்க்குயிர்மாய்ந்தபோன்மாழ்கினார். 127

அரியொலிக்கஞ்சியேயயமமர்ந்தாலெனச்
சுரர்துவட்டாச்சுதனொலியின்மூர்ச்சித்தனர்
கரவெரினுறுமவன்கண்டெண்கனலவே
முரணுறும்வேலையின்முந்திடவீசினான். 128

வேலையிலெழுமழுக்கணையம்விட்டேறுமுட்
கோலடற்கப்பணங்குந்தம்வாளெறிதலுங்
காலனாகியதுவட்டாச்சுதன்கண்டுகைச்
சூலவெம்முனையினிற்றுணிசெய்தேயார்த்தனன். 129

ஆர்த்தவன்செய்கையைக்கண்டவாகண்டலன்
பார்த்துவெஞ்சினமுறப்பாய்பகடுந்தியே
காத்திநீயென்றுவெங்கதைவிசைத்தெறிதலும்
பூத்தலனஞ்சிடவவுணன்மேற்போயதே. 130

சதமகன்விறலினாற்றான்விசைத்தெறியும்வெங்
கதையினையவுணர்கோன்கையினாற்பற்றியாண்
டதிதிசேய்மேலடித்தானையின்மத்தகம்
பிதிரவேமோதினான்பெருமையார்கரமதால். 131

தந்தியின்மத்தகக்குருதிதாரணியுற
விந்திரன்கதையினாலிபமொடேசோர்ந்தவன்
சிந்தையிற்கதமுறத்தேறினான்றன்னுடன்
மந்தரமனையவாளவுணனுமொழிகுவான். 132

கரியினோடென்னையுங்கடுகியேகொன்றெனக்
குரியமாபகைமுடிப்பேனதுவொழியினி
விரைவினிலென்னையும்வதைசெய்தால்வீறயற்
கரியவீடெய்துவேனென்றுபின்னறைகுவான். 133

உனைவெலிற்பகைமுடித்தேனதையொழியினி
யெனைவெலில்யான்சுவர்க்கந்தனையெண்ணிலேன்
முனிவர்பிஞ்ஞகனயனுணரொணாமுண்டக
வணமுறுமார்பினன்பதவியினடைகுவேன். 134

ஆதலாலுன்றனைவதைசெயாதேகின்யான்
சாதலேநலனெனச்சாற்றியேவிபுதர்தன்
ஞூதவுன்கதைகொடேநானடித்தேனெனப்
பீதிகொள்ளேலெனப்பின்னரும்பேசுவான். 135

தூயவிக்கதைபழுதாயபோற்சுடர்கடந்
நாயகவுன்கரக்குலிசநல்லூரனெலா
மோயுமென்றேயுரைக்கலையதற்கேயுறப்
பாயுமத்திறலினைப்பகர்வனென்றுரைசெய்வான். 136

வேறு.

நீதினையகற்றுநாராயணகவசத்தைச்சிரா
யோதியதீசியத்தியுரானுறுகுலிசமாக
கீதரித்ததுவுமன்றிநெடியவன்சத்தியெய்தக்
கோதிலாயுதமாய்த்தோன்றிற்றென்றுபின்கூறலுற்றான். 137

குலமிலரெனினுநோயாற்குறையுளரெனினும்வஞ்சக்
கலரிவரெனினுங்கள்வக்கடியவரெனினுநக்கன்
சிலையிறுத்தருளுமெந்தையளியுறினவரேதீரா
வலனுறப்பகையைச்செற்றுவானவர்க்கதிகராவார். 138

ஆதலாலரிதன்சத்தியமரர்கட்கிறைவவுன்றன்
கோதகல்கரத்தின்மீதுங்குலிசத்துநிறைத்தேயும்பர்
வேதனைதீரவென்னைவதையெனவிளம்பக்கேட்டுப்
பீதிகொண்டிருத்தியென்றுநகையுறப்பேசினானால். 139

நகையுடனவுணர்கோமானவின்றிடுமுரையைக்கேளா
மகபதியுரனற்றேனென்றின்றெனைமதியாதிங்ங
னிகழ்வினைப்பகர்ந்தாயென்றுவெதிர்ந்திடத்துவட்டாமைந்த
னகபதிமருகன்போலநாட்டங்கள்சிவந்தானன்றே. 140

வேறு.

காலனும்வெருவவெதிர்த்தசுரன்கடுவிடமேயா
நீலமுறுங்களனஞ்சிடவெண்கரிகிலனோட
வேலைகிழிந்திடவார்த்துயர்விண்ணவர்பெருமான்மேற்
சூலமெடுத்தழல்சூழவெறிந்தனன்முனிவுற்றே. 141

கண்டைசலித்திடவழலுறமல்கியகதிர்கோடி
மண்டியசெயலெனவவிர்கள்பரந்திடவடலைவத்தீ
மொண்டுபொழிந்தனமூவிலையோரமுமெரிமூள
வண்டர்நடுங்கியரற்றிடவெய்தியதயிலம்மா. 142

சுரர்முறையிட்டனர்முனிவர்பதைத்தனர்துயராலே
யரர்கைவிதிர்த்தனரயன்வெருவுற்றனனெறிமாறி
யிரவிதிகைத்தனன்மதிகனலுற்றனனிமவானும்
வரைபிதிர்வுற்றனவுலகினமுட்கினமறைவற்றே. 143

வேறு.

அந்தகனஞ்சிடமணிகள்கறங்கிடவழலுறவெகிருமயில்
வந்ததுகண்டமரர்க்கிறைகுலிசமெறிந்திடவானின்மிசை
முந்தியமூவிலையொளிர்படையிற்றுகமுகயெர்வாளவுணன்
மந்தரவரைநிகரொருபுயமற்றதுவானவரார்த்திடவே. 144

சிந்துவினணையெனவேயுயர்தோள்படிசிதறவிழுந்திடலு
முந்தியகறைநதியாமெனவோடமுனிந்துபிணுகியென
விந்திரன்மீதொருகைகொடுமோதியிலங்கயிராபதமாந்
தந்திமுகத்திடிபோலவடித்தனனவுணர்கடம்பெருமான். 145

வீரியவசுரனடித்திடவிந்திரன்விறலுறுகுலிசம்விழ
வூறியகறைநதியாமெனவோடவளைந்தயர்வுற்றமரர்
பாறிடவோர்கனல்போயபின்மும்மதநீடுபகட்டின்வெரிந்
தேறியவன்கரவாயுதமேந்தவொணுனிவைசெப்பினனால். 146

நீயிவணென்கரமோதவயர்ந்தனையென்றுநினைந்துபயந்
தேயமர்செய்கிலையென்னவிழ்ச்சிகள்செப்புவராற்பலரு
மாயவனச்சுதன்வாமனன்மாதவன்மாலரிகேசவன்விண்
டாயன்முராரியருட்பெறுநீதளரேலெனவேயறைவான். 147

வென்றவர்தோற்பர்கள்வெருவினர்பயமிலர்வரவிபவத்தினுளே
நின்றவர்நல்குரவாகுவரிரவலர்புரவலராய்நிறைவ
ரன்றுலகுண்டருளாதியற்றியசெயலினிவ்வாறுறுமாற்
குன்றைநிகர்த்திடுமதகரிமேலமர்கோவுணரென்றுசொல்வான்.

மசகமறைந்திடமேருவிழுந்திடுசெயலெனவலனுறுமென்
புசமுனியத்தியைநீவிடவற்றனபுனலுறுவேணியினிற்
சசிதரியரனிடர்களைபவனருளெனவுணருதிசதமகனே
வசையறவமர்செயமுனைகுதியென்றுயர்வாளவுணன்சொலுவான்.

வேறு.

அரியுனைமுனிவனத்தியதினெனைவதைத்தியென்றுண்
டுரைசெய்தானெனுமாங்காரமொழியாலுன்றலென்றன்
சரிரம்வீழ்போதென்னுவிசக்கரந்தரித்தோன்பாதத்
திரவியினதிகமாகவேகுவகாண்டியென்றான். 150

பின்னருமுரைப்பானும்பர்பெருமநீகேட்டியென்ற
னன்னையாம்வேள்வியாகியத்தனுந்துவட்டாவாகி
யென்னரும்பகையாயிங்ஙனெதிர்ந்திடுநீயுமாகி
யுன்னருபதத்தென்னாவியுறவருளொருவனாவோன். 151

சோதியாயுலகமெல்லாம்படைத்தளித்தழித்துத்தோன்றி
நீதியாய்நெறியாய்நாலுமறையதாய்நிறைந்துநிற்கு
மாதியுன்னடியார்தங்கட்கடியர்தம்மடியாரானார்
பாதமேபற்றுவோரைப்பற்றவேயருள்செய்வாயே. 152

தரணியினரசுந்திக்குக்காவலர்விபவந்தானுஞ்
சுரேசனுஞ்செல்வந்தானுந்தூயநான்முகன்றன்வாழ்வு
நரகெனநினைவனுந்தன்பதவியைநத்திலேன்யான்
பரமவுன்பத்தர்க்காளாய்மகிழ்ந்திடப்பணித்தியென்றான். 153

தோர்வையிற்றுயரமில்லேன்செகத்தினிற்சுகமுமில்லே
னோருருபதங்கடம்மையிச்சியேனாழியேந்து
மாரியவுந்தன்பத்தர்க்கடியவர்க்கடியனாகுஞ்
சீரினைச்சநநந்தோறுமளித்தருள்செல்வவென்றான். 154

இருகணீர்புரளவென்புமிதயமுமுருகிநின்றே
யரிதிருமகுணனாயவச்சுதவனந்தமூர்த்திக்
குரியவவுலகமெல்லாமுண்டுமிழ்ந்தளந்துவைகுங்
கரியவவென்றென்றேத்தியவுணர்கோன்கழறலுற்றான். 155

சதமகாபீதியோவிச்சமர்பொரமுனைதியென்று
கதமுறுமவுணன்கூறமகபதிகழறலுற்றா
னதன்மமாரசுரனாயுமந்தகாலத்திற்பூமான்
பதியினைப்பத்திசெய்துபரமபாகவதனானாய். 156

பரகதிநச்சிலேனுன்பத்தர்கட்கடியனாகும்
வரமருளென்றாயஃதேயமிர்தமாம்வாரியோவி
மருளுறக்கூவனீரைப்பருகிமேதியிலார்போ
லரியடியவரைவிட்டங்கவன்பதமிச்சிப்பாரால். 157

ஆதலாலவுணர்வேந்தேயந்தகாலத்தினொப்பில்
சோதிதன்னடியார்க்காளாய்த்துலங்கிடச்சிந்தைசெய்தா
யேதுனக்கரியதென்றேயியம்பியமகவான்மீதிற்
பீதகவரையுமஞ்சப்பெருங்கதையெறிந்தேயார்த்தான். 158

உலகெலாமஞ்சவேதனுளைந்திடவும்பரெல்லா
நிலைகுலைந்தோடவெய்துநெடுங்கதைதன்னைநோக்கிச்
சிலையிருஞ்சிறகைநீக்குந்தேவர்கோன்குலிசந்தன்னை
யிலகியதிருமஞ்சுமவிருறவெறிந்தங்கார்த்தான். 159

தாளினால்வரையையெற்றுந்தானவர்பதிதான்விட்ட
நீளுமாகதைதூளாகவிலத்துறவெறிந்துதானார்

கோளரிநகமேபோன்றகுலிசங்கூற்றஞ்சநின்றான்
றோளினைத்துணித்துவீழ்த்தச்சுரரெங்குந்துள்ளியாட. 160

தரையினைத்தாங்குஞ்சேடன்படந்தடுமாறவோங்கும்
வரையினந்துகளதாகமகபதிகுலிசத்தாலே
யெரிசினத்தவுணன்றோளற்றிருநிலமிசையின்வீழக்
குருதிபோராறுய்ப்பக்கமிரண்டினுங்குரைத்ததன்றே. 161

ஞாலமேலிரண்டுதோளும்விழுந்திடநயனத்தீயைக்
காலவெண்டிசையினெட்டுக்கரியிரிந்தோடவேழு
வேலைசூழண்டம்விண்டதாமெனவவுணரார்த்துக்
கோலகாலந்தானாக்கிவலாரியைக்குறுகினானால். 162

கீழணலவனிதன்னைமறைத்திடக்கிளர்ந்தவானைச்
சூழமேலோட்டம்பற்றச்சுரர்பதியுடனுந்தந்த
வேழமோடகன்றவாயால்விழுங்கிவிண்விபுதரோட
ஊழிகாலத்திற்றோன்றுமுருத்திரனொத்தங்கார்த்தான். 163

கரியுடன்மகவான்றன்னைக்கடியவன்விழுங்கக்கண்டு
சுரரிருகண்ணினெற்றித்துறந்தவரோடுமோட
வரனயன்றிகைப்பவட்டவசுக்களாதித்தர்சித்தர்
மருதரோடனேகரெட்டுத்திசையினுமிரிந்தார்மாதோ. 164

வேறு.

நீடுநாராயணகவசநெஞ்சுறக்
கூடியயோகத்தால்விபுதர்கொற்றவ
னோடைமாலியானையோடவுணனுண்ணவும்
வீடிடாதவனகட்டிடைவிளங்கினான். 165

வளர்ந்திடுமவுணர்கோன்வயிற்றினுட்புகுந்
தளைந்திடுகரிவெரிநமருங்கொற்றவ
னுளந்தளராதவனுதரந்தன்னையே
பிளந்தனன்குலிசத்தாற்பெருமையோங்கவே. 166

அறந்தவறிடக்கடிதவுணனுங்கவங்
இறந்தனனிந்திரனெனவிரங்கிய
துறந்தவராடநற்சுரர்மன்றோலுடன்
பிறந்தனனாமெனப்பெயர்ந்தனன்னரோ. 167

சுரரொடுமுனிவர்கடுதித்துத்துள்ளவே
கரிவெரிநினையுறும்விபுதர்காவல
னுரனுறுமவுணர்கோன்சென்னிமேலொளி
ரிரவிநேர்வச்சிராயுதமெறிந்தனன். 168

கடமுறுகரிவெரிங்காவலன்விட
வடவரைவலம்வருமிரவிமானவே

திடமுடையவுணர்கோன்சென்னிசுற்றநற்
சுடருறுவச்சிராயுதந்துலங்கிய. 169

கருடவாகனன்கையிற்கதிர்கொளாழிபோ
லிருடவிர்குலிசம்வானிலகவேகியே
கிரிடமொன்றவுணர்கோன்கழுத்தைக்கீறித்தான்
வருடமொன்றறுக்கக்கம்மண்ணின்வீழ்ந்தவே. 170

சேடனும்வெருவுறத்தேயுவின்சகாக்
கூடியேயவனிவான்குலையமோதிட
வாடகவரைக்குவடளக்கர்வீழ்ந்தபோ
லீடுதானவன்சிரமிலைத்துவீழ்ந்ததே. 171

இரணியவரைக்குவடிறத்தன்வேரறத்
தரணியின்வீழ்ந்தபோற்றானவனுடல்
சிரம்விழுந்ததற்பினர்திசைக்கணெண்கரி
வெருவிடவரவுமெய்குலையவீழ்ந்தது. 172

ஆடகவரைநிகரவுணன்மாண்டிட
வோடினரவுணர்களிருதரோடுமே
வீடினவினையெனமுனிவர்விண்ணவ
ராடினராவலங்கொட்டியார்த்தரோ. 173

துந்துமிதழுங்கிடச்சுரர்கள்பொன்மலர்
சிந்தினரம்பையர்தீபமேந்தவே
சந்தமன்வபுசுரிமருதர்சாரண
ரிந்திரன்றனைத்துதித்திறைஞ்சுமெல்லையின். 174

வேறு.

தாரணிதன்னின்மாண்டதானவனுடலையோவிப்
பேரொளியாகிச்சீவன்பெயர்களாயிரத்தோன்வைகுஞ்
சீருறுபதத்தினேகச்சிறந்திடுமுனிவர்புத்தே
ளேருறுமரியையேத்தவிந்திரனியம்பலுற்றான். 175

என்றனனவுணன்றன்னைவதைத்திவனுவியுன்னை
யொன்றவிங்கருள்செய்சோதியுன்றனக்குறவுமில்லை
கன்றியபகையுமில்லைகாலயந்தேயுவிண்மண்
ணென்றிவைநிறையுமண்டமெண்ணிலாதளிப்பாய்வீப்பாய். 176

சித்திரகேதுவென்னுந்திறலுடையரசன்கோடி
நித்திலநகையரானதேவியர்நிறையவேட்டுப்
புத்திரயாகஞ்செய்தங்கிராவவிசீயப்பொற்பா
ருத்தமச்சிறுவன்றன்னையுதவினண்மூத்தபாரி. 177

முந்தினதேவிபெற்றபுதல்வனைமுடுகுசீற்றம்
வந்திடமற்றங்குள்ளமனைவியர்மருந்தாற்கொல்ல

கொந்துமன்னரற்றலோடுநாலறியங்கிரசவுஞ்
சந்தம்வீணையேந்துந்தவனும்வந்தடைந்தானன்றே. 178

அறிவுறுமுனிவர்தேற்றவரசர்கோன்றெருளனாகிச்
சிறுவனற்றவர்களாலேயுயிருறச்சிறந்துதோன்றி
மறுவறுமரசநீயோதந்தையான்மகனேவெண்ணிற்
பிறவியினியார்யானாரென்றிவைபேசினானால். 179

மறுவறுசிறுவனிவ்வாறுரைத்தவண்மரித்தலோடு
மறிவுவந்துறவேதேறுமரசனுக்கங்கிராவு
நெறிகொணாரதனுந்தூயநேமிதோத்திரத்தைக்கூறி
யறைதியீதேழுநாளினனந்தன்றோன்றுவனென்றாரால். 180

முனிவரீதோதியேகமுராரிதோத்திரத்தைவேந்த
னினியனாயறையலோடுமேழுநாளுறலுந்தூய
தினகரனவிரைப்பொன்றகலன்களுஞ்சிறந்துதோன்றத்
துனியறவனந்தன்வந்துதோன்றமன்வணங்கினானால். 181

மறையினாலன்பினேத்திமன்னவன்வணங்கலோடு
மிறைவனுமனந்தனோக்கியென்னெழிற்பதத்தினீதா
னுறைகுதிசிலநாளேகியென்றுரைத்தேகலோடும்
பொறைகொளுமரசன்வித்தியாதரனாகிப்போந்தான். 182

தூயதோர்விமானம்வானிற்றுலங்கிடவதன்மீதேறி
வாயுவின்விசையாலெட்டுத்திசையினும்வயங்கியேகு
நீயவையகற்றிஞானந்தெரிந்தவன்றேவர்சூழ
வாயிழையுமையாள்வாமத்தொடையுறுமரனைக்கண்டான். 183

கறைமிடற்றரனைநோக்கிக்கழறுவான்றேவர்சூழ
விறையெனவிருப்பாய்நாணமேகவுன்னூருமீதிற்
பிறைநுதற்றேவிதன்னையிருத்தினைபெரியோர்க்கீது
முறைமையோவென்றுசாலமுறுவலித்திகழ்ந்தானன்றே. 184

முறுவலித்திகழ்ந்தான்றன்னைமுக்கணான்றேவிநோக்கி
யறைகுவாளென்னைநீதானவமதித்துரைத்தசொல்லா
னெறியறுமசுரனாகிச்சனித்தியென்றியம்பநேரி
லறிஞனுந்துவட்டாவேள்வியனவிடையுதித்தானன்றே. 185

கருத்தினிலரியைவைத்துக்கடுவினைகளைந்ததூயோ
னெருத்தமரிறைவன்றேவியியம்பியசாபத்தாலே
விருத்திராசுரனானைவீட்டியபாவந்தானே
இருத்திமநீசியாகிக்கிட்டியவலாரிதன்னை. 186

வேறு.

வரத்தால்விருத்திராசுரனைவலாரிவதைக்கப்பிரமகத்தி
யுரித்தாயடரப்பாதாளத்தோடையயத்துளமிழ்ந்திடவெஞ்

சரத்தாலசுரரடர்த்திடலுஞ்சாயும்விபுதர்தலைவனிலாக்
கருத்தார்துனிகண்மலிந்திடவேகளைகணில்லாதலைந்தனரால். 187

தலைவனில்லாவிபுதரொடுந்தவர்கணூறுமகஞ்செய்து
நிலையாளுநகுடனைத்தானிகரிலமரர்க்கிறையாகக்
கலனெலாமெய்யிலங்கிடவெண்கவரிகவிகைகாட்சியுற
வலர்பூந்தொடையலுரத்தணிந்தேயரியாதனத்தினமர்ந்தனனால். 188

இந்திராணிதனயணைக்கவெண்ணிநரவாகனமேறக்
கந்தர்தாதைநிகர்முனிவர்கனகதண்டைகடாவிடலு
முந்தியடையுமுயற்சியினாற்சர்ப்பமாகவெனமொழியச்
சிந்துநுகருங்குறுமுனிநீசெப்புஞ்சர்ப்பமாதியென்றான். 189

அரவாய்விழுதியெனமுனிவனறையவரசன்மிகநடுங்கித்
தரைமேற்பணியாமுருவொழியச்சாற்றுகென்னத்தவத்தோனுன்
மரபாந்தருமனுட்சுருதிவழுவாதுரைத்திவ்வடிவொருவி
விரிவாஞ்சுவர்க்கத்தடைதியெனவியாளமாய்மன்னிலன்வீழ்ந்தான். 190

வரத்தால்விருத்திராசுரனைவதைக்கவும்பர்க்கிறைமீதிற்
பெருத்தேயடர்த்தபிரமகத்தியொருவப்பெரியதவர்கூடிக்
கருத்தார்மறையாலயமேதமகத்தைமுடிக்கக்கடுவினைபோய்த்
தருத்தார்மாலையுரத்துறவேசசியோடமர்ந்தான்சதமகனே. 191

வியாளமாகியவனிமிசைவீழ்ந்தநகுடனெழிற்புதல்வன்
யயாதிமகுடங்கவித்தழகாரரியாதனத்தின்மிசையேறி
கியாளபடகமுரசினொலிநிறையவயங்குமமரர்பதி
மியாளியெனவேபுவனமெலாமருளோடரசாண்டமர்நாளின். 192

சசியின்கணவன்புரோகிதனைத்தாராதேவியணைத்துதவுங்
கசனொன்சஞ்சீவினியுரையைக்கற்பான்கருத்தினினைந்திடவே
வுசனனடியிற்றொழுதெனக்குங்குருநீயென்னவுவந்தவனும்
பசுவின்குழுமேய்த்திடுதியெனப்பணித்தானிரையைமேய்த்தனனால்.

அசுரராசான்மொழிப்படியினமரர்குருவினெழிற்புதல்வன்
பசுவினிரைமேய்த்தடவியுறும்பலமூலங்கடனையருந்தி
நிசிவந்துறவேயகத்தடைந்துநீதியுடனாயிரம்வருடம்
வசையிலுசனன்மனமகிழவவுணர்பதியின்வைகினனால். 194

பாவமலியுமவுணர்குருப்பயந்தமான்பங்கயவதனி
காவிவிழியாள்சிலைநுதலாள்கனமேபோன்றகருங்குழலா
ளேவியனம்போனடையுடையாடிடிபோன்மருங்கினெழிலுடையா
டேவயானைகசன்மீதிற்சிறந்தவன்பாயமர்நாளின். 195

மகவான்குருவின்சுதனமரின்மடியும்விபுதர்க்குயிர்வரவே
நிகரிலாதவுசனன்மறைநிறைமந்திரத்தைத்தனக்கருளும்
வகையாநிரைமேய்க்குவதறிந்துவடிவாளாலேயசுரர்திரள்
சிதைபோற்கனன்றுகசனுடலைச்செந்நாயருந்தவதைத்தனரால். 196

விசைகொள்பரிபூணிரதமோடுவெய்யோன்மறையமனையிடத்திற்
பசுவின்குழுவந்தடைந்திடவேபவமிலுசனருள்குமரி
கசனைக்காணாதுயிர்விடுவேனென்னவசுரர்கதிர்வாளால்
வசையிலமரர்குருசுதனைவதைத்தசெயல்சுக்கிரனறிந்தான். 197

நியவசுரர்கசன்றன்னைவதைத்துச்செந்நாய்க்கிட்டதெல்லாந்
தூயவுசனனுணர்ந்துயருஞ்சஞ்சீவினிமந்திரஞ்சொல்ல
நேயமிகுகன்னிகைமகிழநிசியில்விபுதர்குருச்சிறுவன்
சீயமெனச்செந்நாயகட்டைப்போழ்ந்துசென்றங்கமர்நாளின். 198

மாறிலுசனன்செவித்திடவேவலாரிகுருவின்மகனுடலி
னூறுமுயிர்வந்தெய்திடவங்குரப்புஞ்செந்நாயுடைவயிற்றைப்
பீறியெழலுங்கொதித்தசுரர்பின்னுமவனைவதைத்தரைத்து
வீறுந்தரையின்றிரைகுரையும்வீரையயத்துட்கரைத்தனரால். 199

ஆவின்குழுவோடழகுடனேயடையுங்கசனைக்காணாமற்
காவிவிழிநீர்ததும்பிடவேகலங்குமகளைக்கண்டுசனன்
றேவர்க்கிறைவன்புரோகிதன்றன்சிறுவனுடலைத்துணித்தரைத்துப்
பாவமலியுமவுணர்கடற்பயத்துட்கரைத்தசெயலறிந்தான். 200

அறிந்தவுசனன்செவித்திடவேயமரர்குருவினழகியசேய்
திகழ்ந்தவடிவமொளிதிகழத்தெய்வயானைமனமகிழ
நிறைந்ததிரைசூழ்சிந்துவினைநீங்கியசுரர்புரோகிதனைச்
செறிந்தகளிப்பினுடன்வணங்கிச்செகத்தாவினத்தோடமர்நாளின். 201

இரையுங்கடலிற்கரைகுரம்பைகூடியெழுந்தாநிரைமேய்க்குஞ்
சுரர்தங்குருவின்மகனுடலைச்சுட்டுச்சாம்பறனைவாரி
விருடபருவாமனையிடத்தின்வேரிமலியக்கலந்தசுரர்
பரிவினுடனேகொடுத்திடலும்பானஞ்செய்தானுசனனம்மா. 202

இருகொம்பொளிரவருநிரையோடிலங்குங்கசனெய்தாமையினா
லரிவையரற்றச்சுக்கிரன்றானவுணரவனைவதைத்துடலை
யெரியினடுக்கியடலைதனையெடுத்துச்சுரைநீரதிற்கலந்து
விரகின்றனக்காண்டளித்ததெலாமறிந்தேமிகவுமுனிந்துசொல்வான்.

மதுவைப்பருகுமசுரர்செயுமாயத்தழுந்திச்சுரைநுகர்வோர்
பதிதராவரெனச்சபித்துப்பவமிலுசனன்செபித்துவரிச்
சுதையையருந்துமிலேகர்குருச்சுதனையழைப்பத்தன்வயிற்றுள்
விதியினியற்றாலுருவுறவேவிஞ்சுங்கசன்கூவென்றனனால். 204

வீறியெழுந்துதரத்தினுளேமிண்டிக்கூவுங்கசன்றனக்கு
மாறிலுசனன்மந்திரத்தையுபதேசித்தென்வயிற்றினையே
பீறியெழுந்துதரையினின்றுபெருமையுறுஞ்சஞ்சீவினிதான்
கூறுமுறையாற்செபித்தெனைத்தானெழுப்புகென்றங்குரைத்தனனால்.

அசுரராசான்மொழிப்படியினவன்சாடரத்தைப்போழ்ந்தெழுந்தே
கசன்சஞ்சீவிமந்திரத்தைக்கழறவெழுந்தசுக்கிரன்றான்

வசைகொளவுணருனையினமும்வதையாமுன்னரேகெனவே
யுசனனடியின்வணங்கியவனும்பருலகினுறுங்காலை. 206

தேவயானைகசனடியின்வணங்கிச்செப்பலுற்றனளென்
னுயிரனையாயெனைவேட்டின்றணைத்தென்னோடுமணைதியெனப்
பாவமகல்வோன்செவிபுதைத்துநீயும்யானும்பழமறையை
நாவினுணர்வோனகட்டுதித்தோநங்காய்நானுன்னனுசனென்றான். 207

நீதையொருவுங்கசனிவ்வாறுரைப்பத்தெய்வயானையென்றன்
றாதையருளுமுவமையிலாச்சஞ்சீவினிமந்திரமுதவா
தேதமுறுதியெனச்சபிக்கவெரியுநயனனேந்திழையை
வேதமுறுமந்தணர்க்காகாய்வேந்தனிலத்தின்வேட்பனென்றான். 208

சஞ்சீவினிமந்திரம்பழுதேயாகச்சபித்ததையறனை
நெஞ்சார்சினத்தினினிருபனின்னையணைவனெனநிகழ்த்தி
மஞ்சார்விசும்பிற்கசனடையமடந்தைவெருவிவரும்விதியை
யஞ்சானனற்குங்கடக்கவரிதென்றேமாழ்கியமர்நாளின். 209

விருடபருவாப்பயந்தமின்னாள்வேலேர்விழியாளுருவமிலாப்
புருடன்விரும்பும்பயோதரத்திபுயலேரைம்பாற்சம்மிட்டை
வருடகாலமொருவிடவேமாதர்சூழவொருநயநங்
குருடனாவோன்குமரியொடுங்குறைவிலிலஞ்சிக்கூலமுற்றாள். 210

மருங்கிற்கலைகடலத்திலஞ்சிமருங்கினெறிந்துநதிபதிபோற்
றரங்கமெறியுந்தடாகமெலாஞ்சந்துநானங்கமழ்ந்திடவே
கருங்கண்சிவப்பக்குழலவிழக்கவினாரதரம்வெளுப்பமின்னார்
நெருங்கிக்கொழுநருடன்கலவிநிறைத்தார்போலப்பயத்தளர்ந்தார். 211

வனசமலர்கள்பறித்தெறிந்துவளைகளொலிப்பக்கரங்கோர்த்துப்
புனலுளமிழ்ந்துவிழுந்தெழுந்தும்பொற்பார்மடவார்மகிழ்வேலை
யனிலன்விசையாலறைந்தவர்களம்பொற்கலைகள்குவித்தேதகக்
குனிவினுதலார்தமனியநற்கொம்புபோலக்கலைந்துடைந்தார். 212

நனையுங்குழற்காலலையவதினாரநிலத்தினருவியுறப்
புனலையகற்றிப்பாறுமவிர்பொற்கொம்பெனவேசம்மிட்டை
யனிலன்விசையாலெழுங்கலைக்குளசுரர்குருவின்மகளழகாய்ப்
புனையம்பரத்தையெடுத்துடுப்பத்தெய்வயானைபுகலலுற்றாள். 218

வேறு.

அந்தணப்பெண்ணினாடையசுரர்கோன்மகளாநீயோ
வந்திவண்புனைவாயென்றுமதிப்பிலாதிகழ்ச்சிகூறச்
சிந்தையிற்கனன்றென்றாதையீயத்தேகியென்றேறப்பான்
றந்தநீயிகழ்ந்தாயென்றசம்மிட்டைமுனிந்தாண்மாதோ. 214

சம்மிட்டைமுனிந்துதோழித்திரள்களுந்தாமுங்கூடிக்
கும்முட்டக்கிழிந்தநீரில்கூவலிற்கோதின்மாதை

யம்மிட்டைச்சிவணமங்கையங்குலியுறவேபற்றிக்
கம்முட்டித்தள்ளவீழ்ந்தாள்கவின்மலிதேவயானை. 215

பாவமுண்மலியும்வெய்யசம்மிட்டைபயமிலாத
கூவலிற்றள்ளவீழுங்கொடியதிற்கொடியைப்பற்றி
யாவெனவரற்றும்வேலையவனியின்யயாதியென்னுங்
காவலன்மிருகவேட்டையாவொன்கண்டானன்றே. 216

ஓவியப்பாவையாவியுற்றிடவயங்கிற்றென்னக்
கூவலிற்கொடியைப்பற்றியரற்றியகோதைகையைச்
சேவினிற்றிகழ்வோன்கண்ணினெறிந்திடாச்சீர்வேலைக்
காவலன்வலக்கைதன்னாற்பற்றியேகரையின்விட்டான். 217

வலக்கையாலரிவைசெங்கையழுந்துறப்பற்றிவாங்கி
யிலக்கணமிலங்குமன்னன்கூவலின்கூலத்தேற்றிக்
கலக்கமுற்றரற்றுமின்மெய்க்கவினெலாங்கண்வெரரி
யலக்குளினமிர்தமின்போலடைந்தநீயாவளென்றான். 218

ஆசகலரசன்கூறவசுரர்கோன்புதல்வியென்றன்
றூசினைப்புனைந்துவையத்துன்மதியென்னைப்பற்றி
வீசவிக்கூவறன்னின்வீழ்ந்தநான்மெலிவுதீர்ந்தேன்
ஏசகலுசனன்பெற்றமானெனவிளம்பலுற்றாள். 219

என்னெழிற்கரத்தைநீயுன்னிலங்கியவலதுகையான்
மன்னவபற்றலாலென்மருணனீமணஞ்செய்கென்ன
வின்னவின்மறையோன்பாவைநீயியானிம்பர்வேந்த
னுன்னையான்புணருநீதியில்லையென்றுரைக்கலுற்றான். 220

அந்தணமின்னீமன்னனாதலான்மணஞ்செய்நீதி
யிந்தமாநிலத்திற்றீதேயென்னினுமுன்னைநல்குந்
தந்தைவந்துதகஞ்செய்யிற்றாரமாய்க்கொள்வேனென்று
கந்தநற்றொடையன்மன்னன்கழறிநன்னகரிற்புக்கான். 221

அசலைமன்னிவைகளெல்லாமறைந்துதன்னகரியேக
வுசனனெண்புதல்வியாங்கோர்வடத்தின்கீழுளைந்துவைக
வசையகல்சுக்கிரன்றன்மகளைப்பாழ்ங்கிணற்றிற்றள்ளி
யசுரர்கோன்புதல்விசெய்தபுள்ளுவமறிந்தானம்மா. 222

மகடனைக்கிணற்றிற்றள்ளும்வஞ்சகிசெயலால்வெள்ளி
மிகமுனிந்தசுரர்கோன்பாலிவையெலாம்வெகுண்டுகூறிச்
சிகியுறுநயனனெஞ்சார்சினத்தினினெழுந்துநின்றே
யிகழ்வுனக்காகவுன்னையொருவுவனென்றுசொன்னான். 223

வெஞ்சினத்துடனும்வெள்ளிவிளம்பவேயசுரர்கோமா
னஞ்சினனிருகைகூப்பியையநீயகலினுங்கள்
விஞ்சுசிந்துவினின்வீழ்ந்துவீவெம்வினையேனல்கும்
வஞ்சகிபிழைபொறுத்தியென்றடிவணங்கினானால். 224

வெந்திறலவுணர்கோமான்வணங்கியேவெள்ளியோடுந்
தந்திவல்லுரகம்வெம்பூதரமமர்வனத்திலுள்ளே
சிந்தைநொந்திருந்ததெய்வயானையைச்சேர்தலோடுந்
தந்தையைத்தழுவியேங்கியிரங்கினாடையலம்மா. 225

தந்தையின்பதத்தின்வீழ்ந்தேயிரங்கியதையறன்னைச்
சிந்தைநொந்தசுரர்கோமான்வணங்கியென்மகளாஞ்சிரில்
புந்தியவிழைத்தவஞ்சம்பொறுத்தியாலென்றுகூற
விந்துநன்முகத்திதெய்வயானைதானியம்பலுற்றாள். 226

வாதம்வந்தறையக்கூடும்வண்ணமார்துகிலினென்றன்
பீதவம்பரத்தைச்சார்த்திப்பெலத்தினாற்கிணற்றிற்றள்ளி
வேதனையுவரிபோலவிளைத்தநின்குமரிதன்னைத்
தாதியாய்த்தருதியாயிற்சார்வனுன்பதியிலென்றாள். 227

சிந்தையிற்கனன்றுதெய்வயானையிவ்வாறுசெப்ப
யிந்திரன்பகைஞனானவசுரனென்புதல்விதன்னைத்
தந்தனன்றாதியாகச்சாருதிபுரியிலென்ன
நந்தொளிர்கரத்திதந்தைதன்னொடுநகரம்புக்காள். 228

உசனனற்புதல்விதன்னோடொளிர்நகரெய்தலோடு
மசுரர்கோன்பரிவினாலேயளித்தசம்மிட்டைதன்னை
வசையின்மான்விழியார்நூற்றுப்பத்துமங்கையர்களோடே
சசிமுகத்தெய்வயானைதனக்குத்தாதியராயீந்தான். 229

தானவர்கோமானீயுஞ்சம்மிட்டைத்தோகைநல்லாண்
மானிகர்விழியார்நூற்றுப்பத்துமங்கையர்களோடு
மீனமேமலியுந்தாதியூழியத்தேவல்செய்ய
ஊனமேயிலாததெய்வயானைதானுவக்குநாளின். 230

பாவமிலுசனன்பாதம்பணிந்தவன்பாவைசொல்வாள்
கூவலின்விழுந்தவென்னைக்குறுகியேவலக்கைதன்னாற்
காவலன்பற்றியென்னையெடுத்திடர்களைந்தானென்ற
னாவியேயனையான்றன்னையணைத்திடவளித்தியென்றாள். 231

உசனன்றன்புதல்விகூறுமுரையினையுள்ளத்தெண்ணிக்
கசனிவண்மறையோர்க்காகாள்காவலர்க்காவாளென்று
சுசியெனமுனிந்துசொல்லுஞ்சாபத்தாற்சூழ்ந்ததென்றே
யசலையாள்யயாதிபாலந்தணர்களையேவினால். 232

அந்தணரழைக்கவந்தயயாதியாமரசனுக்கு
மந்திரவிதியினாலேமங்கையையுதகஞ்செய்யக்
கந்தரக்குழலிதெய்வயானைதன்கணவனோடுந்
தந்தையைவணங்கிப்போனாடாதிசம்மிட்டையோடே. 233

வாயுவின்விசையின்மூந்தும்வையமேன்மடவார்சூழத்
தூயவடேவயானைசம்மிட்டைத்தோகையோடு

பாயுமாகரிதேர்சூழப்பதிதனிற்கோயின்மேவி
யாயிரவருடமன்னேடநங்கசாத்திரத்திஞழ்ந்தாள். 234

மாதரெண்டெய்வயானை தன்னுடன்யயாதிமன்ன
னுதரவுடனேதோய்ந்தங்கவள்சற்றுமறியாவண்ணஞ்
சாதிசம்மிட்டைதன்னைத்தழலின்முன்விவாகஞ்செய்து
போதவிழ்சோலைதன்னுட்காரந்தனுபோகஞ்செய்தான். 235

அசுரர்கோன்மகளோடன்புற்றணைந்திடும்யயாதிசெய்கை
யுசனன்றன்புதல்விசற்றுமுணர்ந்திலளான்புவைத்துச்
சசியுயர்கவிகையான்சகுலிகேதனன்றன்னூலி
னிசையுறத்தழுவித்தோய்ந்துதுருவசுபூருவீன்றாள். 236

முருகவிழ்குழலாள்கோங்கின்முகைநகிற்சம்மிட்டைப்பெண்
பெருகியவன்பினுலேயயாதியையணைத்துப்பெற்ற
துருவசுபூருவென்னுமூவராய்த்துலங்கும்பேரை
யொருகணிலுசனன்பாவைக்கொளித்தவள்வளர்த்தாளன்றே. 237

பெருந்திறலவுணர்கோமான்பெற்றசம்மிட்டைப்போரா
ளருந்தவவுசனன்பாவையவனியினறியாவண்ணங்
கரந்துதான்வளர்க்குமூன்றுதனயரைக்கண்டுநெஞ்ச
மெரிந்திடுந்தெய்வயானையயாதியைமுனிந்துசொல்வாள். 238

ஆதரவுடன்யானுன்னையணைக்கவுமன்புநீத்தென்
றாதியைப்புணர்ந்துமூன்றுதனயரையளித்தாயென்று
வேதனைமலியக்கண்ணீர்வெள்ளமொத்திழியவேகித்
தாதையாமுசனன்முன்னர்த்தளர்ந்தெலாஞ்சாற்றினாளால். 239

இருகணீர்கலுழத்தெய்வயானைவந்திறைஞ்சிநின்றே
யரசரெண்யயாதிசெய்தபிழையெலாமறைதலோடு
மெரியெனமுனிந்தென்பெண்ணையெள்குமன்னிளமையோவி
நரைதிரைமூப்புவந்தேநலியுமென்றுசனன்சொன்னான். 240

முனிவினுலுசனன்சாபமொழிந்திடயயாதிமன்னன்
குனிவிலின்வளைந்துமூப்புக்குறுகிடநரைவந்தெய்த
மனமெலிந்தசுரராசான்மலரடிவணங்கியென்றன்
வினையகல்வரமீயென்னவெள்ளியங்குரைப்பதானன். 241

மன்னவாமைந்தர்தம்மிலொருவனின்மூப்பைவாங்கி
யின்னவிலிளமையீயிலெழிலுறுபுருடனுய்நீ
யன்னமென்னடையினுரையணைந்தவராசைதீர்ந்த
பின்னுன்சேய்க்கிளமையீந்துபெருந்தவமுயறியென்றான். 242

வேறு.

ஏருறுமுசனன்மொழிந்திடநகரினெய்தியென்சரையினைத்தரித்துச்
சீருறுமிளமைதருகுநீரெனவேசிறுவருக்கரசர்கோனுரைப்ப

வீரியவெதுமன்றருவசுதருவும்வசுவிவர்மறுத்திடவிளங்கும்
பூருநல்லிளமையளித்திடயயாதியழகுறப்பொலிந்தனனன்றே. 243

பூருமனிளமையளித்திடயயாதிபொற்புடைச்சம்மிட்டையெழிலார்
பாரியதனத்திற்படிந்துவாயமிர்தம்பருகியேமதனசாத்திரமாம்
வாரியின்வருடமாயிரமழுந்திவெறுத்தபின்மகன்மெயிற்சரையை
நாரியால்வளைந்ததனுவெனத்தரித்துத்தனயனுக்கிளமைநல்கினனால்.

சீருறுசுதனுக்கிளமையையளித்துச்சிறந்தவொண்மவுலியைக்கவித்துப்
பாரினிலரசாண்டிருத்தியென்றெழிந்தசிறுவரைப்பரிவறநோக்கி
யேருறுமகுடமிலாதுநீரிழிவாய்த்திரிதிரென்றவர்களையிகழ்ந்தே
நாரியர்கலவியொழிந்துகானகத்தின்யயாதிபோய்நற்றவம்புரிந்தான். 245

கதமிகும்யயாதிமொழிந்தசொற்படியேகனகநன்மகுடமுமின்றி
யெதுமனன்மரபோரியாதவரானாரியல்பிலாத்துருவசுக்குலத்தோர்
மதமிகுதுருக்கராயினார்துருவின்வழியினோர்போசராயினர்க
ளதன்மமேமலிந்தவசுப்பயந்தவர்தாமிலேச்சர்களாயினாரம்மா. 246

தந்தைதன்முனிவான்மகுடமுமின்றித்தனயர்நால்வருமிகழ்வாகக்
கந்தனைநிகர்த்துக்கனகநன்மவுலிகவித்தெழிற்பூருநன்கமல
விந்தையின்கருணைவளர்ந்திடவவனிவிளக்கவேயிருந்தரசாண்டா
னிந்திரனெனவேபுவியிடையரசர்திறைகொணர்ந்தெங்கணுமிறைஞ்ச.

வேறு.

பூருவின்குமரன்சனனமேயவன்றன்புத்திரன்பிரதிமானவன்சே
யேருறும்பிரவீரனனவன்சுதன்றானிலங்கியநமசியிப்புவியின்
சீருறுமவன்றன்புதல்வனாயெழுந்தோன்சிறந்தசாருபனாமரசன்
பாரினிலவன்றன்சிறுவனாயுயர்ந்தோன்பழுதகலுஞ்சுதத்துய்மன். 248

நீதிசேர்குணத்துச்சுதத்துய்மன்புதல்வனிகரிலாவெருகவனவன்சேய்
கோதிலாயயாதியவன்சுதனியாதியவனருட்குமரனாயுயர்ந்தோன்
மாதவமுடையவுத்திராசுரனாமற்றவன்மகனரிதேயு
பூதலத்தவன்றன்சிறுவனாயெழுந்தான்புலனுறுதத்திரிமனனே. 249

ஆயதத்திரிமன்சுதனெனவயங்குந்தோன்றல்கேதாரியாமரசன்
நீயவரவியச்செயித்திடுமவன்சேய்சிறந்திடும்வலாரியைநிகர்த்தே
காயுமாகரிமாகவினுறுமிரதக்கடலெனநிறைந்திடவதன்ம
மோயவேதருமம்வளர்ந்திடவுலகாளொப்பிலாத்துச்சந்தநிருபன். 250

நீதிமெய்தருமநிறைந்திடவோம்பிநிகரிலாமதனவேள்வடிவாய்ப்
பூதலமிசையின்மடங்கலாசனத்திற்புரந்தரன்போலவீற்றிருந்து
மாதவர்மகிழமலர்மகள்விரும்பமறையவராசிகள்வழங்கத்
நீதறமவுலிபுனைந்துதுச்சந்தன்றிசையெலாம்புகழுறவாண்டான். 251

சிறுவர்தாய்தந்தைசகோதரிவரையிழந்திடுசெனங்களுக்கெல்லாங்
குறைவறவவராயிடரினையகற்றிக்கொழுநனையிழந்தமங்கையர்க்கு

நறுமலரணையிற்புணர்வதேயன்றிமற்றெல்லாநடத்துவனென்றே
பறையறைபுவியினெனவுரைத்தந்தப்படியினிற்படியினையாண்டான்.

தூயதாகியதுச்சந்தமன்னிரதந்துரகம்வெங்கரியினஞ்சூழ
வாயுநேர்புரவிமிசையினின்வயங்கிவயவர்கள்வாரிபோல்வளைய
நாயெலாந்தொடரவலைகொடேசவரர்நடந்திடப்பழுவத்தினண்ணிச்
சியமானுழுவைகிருடியாவிதங்கள்சினமுதிரெண்கெலாம்வதைத்தான்.

எண்ணருங்கலைதோனகாயுதமுழுவையெண்குபூதாரமாவிதங்கண்
மண்ணிடைவிழவேவலக்கைவாளதனால்வதைத்துயரிவுளிமேல்வயங்கி
விண்ணவரரசனெனக்கலனணிந்துவிளங்கியதுச்சந்தமன்னன்
கண்ணுவமுனிவனினிதுவீற்றிருக்குங்கடத்தினாச்சிரமத்தைக்கண்டான்

வேறு.

முனிவனாச்சிரமத்தினெய்திமுண்டக
வனிதைநோக்குளமனன்றனையுளாரெனக்
கனிகள்கொய்திடத்தவன்கடத்தினேகவே
தனியளாஞ்சகுந்தலைத்தையறோன்றினாள். 255

கந்தரம்பிறைசிலைகணையெட்பூவள்ளை
நந்துவண்டிகிரிநற்கோடுநன்குறு
மந்தரம்வடவிலைவயங்குநீர்ச்சுழி
யந்தரஞ்சுமந்தபோலணங்குதோன்றினாள். 256

மின்னிடைதுவண்டிடவெறிகள்வீசவம்
பொன்னிழைவயங்கிடப்பொறியுநாணவே
யன்னமுமொதுங்கிடவணுகுமாமயின்
மன்னனைக்கண்டிவன்மதனென்றுன்னினாள். 257

நீவியுங்காஞ்சியும்வயங்கநேரிலா
வோவியப்பாவைபோலுற்றமங்கையைக்
காவலன்கண்களிற்கண்டுநெஞ்சினோ
டாவியுநையநீயாரென்றோதினான். 258

வண்ணவெம்பரிமனனறையவாட்கணாள்
கண்ணுவன்மகளியான்கனிகள்கொய்திட
வெண்ணரும்வனத்திடையேகினானெனப்
பெண்ணருங்கலமனாள்பேசினாளரோ. 259

அன்னமென்னடையினாளறையமன்னவன்
கன்னல்வின்மதனனைக்காயுங்கண்ணுவ
னுன்னையென்றுதவினானுண்மைகூறென
மின்னனாயென்றிவைவிளம்புவானரோ. 260

வேதியன்பாவைநீயென்னின்மின்னுன்மேற்
காதலுற்றென்மனங்கலங்குமோவகல்

பூதலத்தரசர்தம்புதல்விநீயென
வோதமான்முகிணகையொளிரக்கூறுவாள். 261

அரசனிகேட்டியென்சனனமென்றணங்
குரைசெய்வாளுலகெலாமறைகளோங்கிட
வரிசையார்மடங்கலாசனத்தின்வைகியே
விரைசெய்தார்க்கௌசிகவேந்தனுண்டலன். 262

சுரர்கள்கோனுமெனச்சுவணபீடத்தி
னிருபனுயாள்கின்றநகரில்கோசிகன்
மிருகயாத்திரையினை விரும்பிக்கானிடை
யரிகிரிகரிமரையடங்கச்செற்றனன். 363

வனமுறுமிருகங்கண்மடியமோதிமன்
வினையகல்வசிட்டனாச்சிரமமேவவம்
முனிவன்வந்தாசிகள்மொழிந்துதேனுவை
யினியநல்லடிசிலையிடுதியென்றனன். 264

ஈனமில்வசிட்டனீதுரைப்பவெய்திய
தேனுமன்னவனுக்குஞ்சேனைநாதர்க்கு
மூனமிலடிசிலையுதவவுண்டபின்
ஞானமுஞ்சார்ந்துநன்மலருமீந்தது. 265

அறுசுவையடிசிலையளித்தங்காரமு
நறுமலருடன்கொடுத்திடுநல்லாவினை
மறுவிலாவசிட்டனைவேண்டமண்ணினுக்
கிறைவயானீகிலனென்றனன்றவன். 266

மையகன்முனிவனீதுரைப்பமன்னவன்
றுய்யநற்பசுவினைத்தொடர்ந்துபற்றவா
மெய்மயிர்சிலிர்த்துதறிடலும்வெஞ்சமர்
செய்யவேசோனகர்சினர்தோன்றினர். 267

தேனுவின்மெய்மயிர்சிலிர்ப்பத்தோன்றிய
சோனகர்ப்பபரர்யவனர்சூலம்வாள்
வானகமறையவேயெறிந்துமன்னர்கோன்
சேனையைச்சின்னபின்னங்கள்செய்தனர். 268

மாசறுசுரபியின்மயிரின்வந்தவ
ரேசறுவசிட்டன்வஞ்சனையினுலெழுந்
தாசறுசேனைசெற்றனர்களாமெனுக்
கோசிகன்றனயர்கள்கொதித்துவந்தனர். 269

மாயையிங்கியற்றியமுனிவன்மாளவே
காய்வமென்றயில்கொடங்கடரக்கண்டவன்
றீயெழவிழிக்கமன்சிறுவர்மேலழல்
பாயவங்கெரிந்தனர்படியிற்சாம்பராய். 270

தவன்விழித்தழலினாற்சாம்பராய்விழு
முவமையில்சிறுவருக்கிரங்கியோங்கல்போ
லிவுளிகொண்டெழுமிரதத்திற்கோசிகன்
சிவனெனமுனிந்துவெங்கணைகள்சிந்தினான். 271

காத்திரமுறக்கவுசிகன்கைவில்லினாற்
கோத்தெதிர்விடுத்தெழுங்கோல்கள்வெங்கன
னேத்திரனஞ்சவேவிறைப்பத்தன்கையில்
வேத்திரந்தனைமுனியெதிரவிட்டனன். 272

மங்குல்கள்பொழிந்தெனமன்னனேவிடு
மங்கியம்மிறையயனரனருட்படை
வெங்கனன்மடுத்திடமுனிவன்வேத்திர
நுங்கினவவையெலாநொடிப்பின்முன்னரோ. 273

வேறு.

பாவமில்வசிட்டன்கையிற்பாண்டில்வந்தெதிர்த்துநின்று
தேவர்தம்படையையெல்லாம்விழுங்கலுஞ்சிவனைநோக்கிக்
காவலன்வரத்தாற்பெற்றுக்கடாவியகணையைப்பார்த்து
நாவினால்வளைத்துவேதமுனிநுங்கநெங்கினானால். 274

தவர்களுக்குயர்ந்தஞானமன்றியேசமருக்காகார்
புவியையாளரசர்வென்றிபொருந்தியபுயத்தரென்பர்
தவமருந்தவர்க்கேவெற்றியறிவறநிறையுமஃதே
யுவமையில்வசிட்டனாலேயுணர்ந்தனனென்றுசொல்வான். 275

நிலனையாணிருபர்செல்வநிகரிலாவிளமைசெய்யும்
வலனருந்தவத்தாற்பெற்றபடைக்கலமற்றுமெல்லாஞ்
சலவியாகிமாண்டுசமன்கையிற்படுகைதிண்ணம்
புலனையுள்ளடக்கிஞானம்பொருந்தியதவநன்றென்றான். 276

அவனியாள்விபவம்விட்டானரிவையர்கலவிவிட்டா
னிவுளிதேரணிகள்வீரரிபநிரையெல்லாம்விட்டா
னவமெலாமொருவஞானமடையப்பூருவமாந்திக்கிற்
பவனமேயுணவாயோகம்புரிந்தனன்படியின்மாதோ. 277

நாசியைப்புதைத்தேயுச்சிநடுவுறமூலவங்கி
வீசயோகத்தனாகவிசும்பெலாமழலாய்ச்சூழ
நாசமாமுலகமென்றுநடுங்கினர்விபுதர்தூய்ய
வாசவன்கவுசிகன்செய்தவமெலாமனத்துட்கொண்டான். 278

வானகமெல்லாமூலவங்கிதான்வளையநின்று
கானகத்தியோகஞ்செய்யுங்கவுசிகன்றவத்தைநீக்க
மானகுவிழியாளம்பொன்மலைநகுமுலையளாய
மேனகையென்னுமாதையேவினன்விபுதர்கோமான். 279

காமனங்குரைப்பக்காமன் கடிமலர்க்கணைவிற்கொண்டு
சோமனும்வசந்தன்றானுந் துணையதாய்த்தொடர்ந்துசூழ
வீமனுங்குழலிவேலின் விழியண்மேனகையாங்கொம்பு
பூமனுந்திருவுநாணப்புவிமிசைநடந்துவந்தாள். 280

காசணிகுயங்களம்பொற்கலசமாமெனவேவிம்மக்
கேசமென்மலர்கடென்னக்கேடிலாக்காஞ்சிமாலைத்
தூசுடனிலங்கமின்னுந் துடியிடைதுவளத்தூய்ய
கோசிகன்முன்னர்வந்தாள்கூடெருணுக்கவின்கொள்கொம்பு. 281

பரிபுரமாற்றக்கையிற்பருமணிக்கடகமின்னச்
சுரிகுழலிவளக்காதிற்றோடெகடயங்கமானான்
வரிவிழியிலங்கமுல்லைநகைநிலாவயங்கவார
மிருதனமிசையவாடவெழிலுறநடந்துவந்தாள். 282

சுந்தரவடியாலன்னநடையினாற்றடிமின்னாணு
மந்தரவிடையாலம்பொற்கலசமார்முலையான்மாண்பார்
நந்தெனுங்கழுத்தால்வேலினாட்டத்தாற்பவழவாயாற்
கந்தரங்குழலாற்றூய்யோன்றவமெலாங்கலக்கவந்தாள். 283

வருமவளெழிலைநோக்கிமறந்தனன்யோகமெல்லா
மெரியுறுதுப்பாமென்னவிதையமுமுருகவாசை
பெருகமாமதனன்வாளிபெய்யவேமதிதன்னான்மெய்
கருகநற்கவுசிகன்றான்கண்ணிமையாதுநின்றான் 284

மன்றலங்குழலினாடன்மார்பினின்வயங்குந்தூசைத்
தென்றல்வந்தலைத்துவீசசெம்பொனின்கலசநாணக்
குன்றினைநிகர்த்துவிம்முங்குவிமுலைக்கவினைநோக்கித்
தன்றவமழிந்துவந்துதழுவினான்றடக்கையார. 285

கொங்கையைத்தழுவித்தூய்யகுமுதவாயமிர்தமுண்டு
மங்கைதன்மருங்கிற்காஞ்சிமாலையின்கலிங்கநீக்கிச்
சிங்கலிலாடைதானேசேக்கையாய்மதனநூல்கள்
பொங்கிடக்கலவிசெய்தான்காமத்தால்யோகம்போக. 286

ஆயிரவருடம்பாயலகல்கிலானாகிமங்கை
தூயமென்முலையிற்றோய்ந்துசுரதநூல்விளக்கலோடும்
வேயெனவயங்குந்தோளாண்மேனகைகருப்பந்தாங்கி
மாயிரும்புவியினீன்றாண்மகளதாங்குழவிமாதோ. 287

கானகந்தன்னிற்றன்னைப்புணர்ந்திடுங்கவுசிகற்கு
மேனகைபயந்தசெய்யகுழவியாமின்னைக்காட்ட
வானகத்தரசன்செய்தவஞ்சமென்றறிந்துதூய்யோன்
றேனுகுமொழியினாளைமுனிந்துதென்றிசையினுற்றான். 288

வேறு.

கவுசிகன்றென்றிசையேகக்காரிகை
யவனியிற்றன்பெருமணங்கைவைத்தவ
ளுவமையில்விபுதர்கோன்பதியையுற்றிடப்
புவியிடையழுததப்பொலன்கொணர்சிசு. 289

தந்தைதாயின்றியேதரையின்வைகிய
வந்தமன்குழவிதானழுதவிம்மலுங்
கந்தமார்மலர்ப்பொழிற்ககங்கள்பார்ப்புடன்
வந்துதாஞ்சிறகினான்மறைத்தணைத்தன. 290

அலரியின்வெயிலினாலடர்ந்துபெய்முகிற்
சலம்விடுதாரையாற்றளர்தலின்றியே
நலமுறுஞ்சிறகினான்மறைத்துநாரம்வீழ்
மலையுறுபிரசந்தம்வாய்கொடுத்தன. 291

எண்ணருங்ககக்குலமிரண்டுபோதினு
மண்மிசைக்குழவியைவளர்க்குநாட்டனிற்
கண்ணுவமுனிவனங்கெய்திக்கண்டுதன்
னுண்ணலக்களிப்பினான்மகளென்றோம்பினான். 292

மறுவிலாக்குழவியைவளர்த்தவெண்ணிலாப்
பறவைபேர்சகுந்தமென்றுரைபகர்ந்திடு
முறைமையாற்கண்ணுவமுனிவன்பெண்பெயர்
குறைவிலாச்சகுந்தலையென்றுகூறினான். 293

கானிடைக்கவுசிகன்கலந்தணைக்கவே
மீனகுவிழியண்மேனகைபயந்திட
ஆனமில்ககக்குலங்காப்பவொண்முனி
தான்வளர்த்திடுஞ்சகுந்தலையென்பேரென்றாள். 294

பின்னருஞ்சகுந்தலைபேசுவாளுயர்
மன்னவவுன்பெயரேதுவைகிடு
நன்னகரேதுவெனநவிலுநீயென
மின்னனாள்விளம்பவவ்வேந்தன்கூறுவான். 295

வேறு.

இந்துத்தருபுதனின்மரபுளின்வந்தவனெனதூர்
தந்திக்கடனிறையும்பிரதிட்டானவண்பதிதண்
சந்திற்படிதனத்தாய்பெயர்துச்சந்தமனென்றன்
சிந்தைப்படிமயறீர்க்குதியெனமாதினைசெப்பும். 296

கந்தமகனித்திரளேகொடுகேடிதின்வருமெந்தை
தந்தின்புரினான்மார்பினணைப்பேனெனச்சாற்ற
வந்தைவரத்தாழ்க்கும்மெனதுயிர்போமுனந்தழுவிச்
சிந்தைத்துனிதீர்ப்பாயெனத்திகழ்மாதினையறைவாள். 297

ஓமக்கனன் முனரென்கழுத்தொளிர்நாணினைத்தரித்துத்
தாமப்புயத்தணைப்பாயெனத்துச்சந்தன் சம்மதித்தே
வாமத்திரளெழுவேதியர்சொலுமந்திரப்படியின்
காமற்கபிடேகப்பெணைமணந்தான்களிப்புறவே. 298

இருவோருடலொருமெய்யெனவணைத்தெண்புளினிலைசயுக்
தரவேல்விழிசிவப்பக்கலையொருவப்பதந்தனிலார்
பரிநூபுரமரற்றக்கரவளைபம்பருத்தெனவே
வருவேர்வுகல்வதனத்துறமதனூலினைவிளைத்தார். 299

நந்தக்குறியசாத்துறத்தனமேனகக்குறியு
முந்தக்குழலலையத்தொடைவிழச்சொன்மொழிபதறச்
சிந்தைக்களிப்புறவேயணைத்திருவோர்களுஞ்சிறந்து
கந்தக்கடுகோலெய்மதனூலின்கரைகண்டார். 300

அனுராகவன்கடல்வீழ்ந்தெழுமிருவோருமன்புறமா
பனவியிருமாதேநகரடைவேனெனமடமா
னுனைநான்பிரிந்துயிர்வாழ்கிலனெனவாண்டொளிர்கயனப்
புனருரைகண்முலைமேற்குதிகொளவேபொருமினளால். 301

தன்னுருயிரனையாளயர்கண்டேதலவரசன்
மின்னேபுரியடைந்தேயுனையென்பாலினின்மேவப்
பொன்னூர்வருமிரதம்வரவிடுவேனெனப்புகலா
நன்னுரிதன்னயனப்புனறுடைத்தொண்ணகரடைந்தான். 302

வேறு.

மன்னவன்மணந்துதன்னைத்தழுவியேயொருவமாது
தன்னியபரிவினேடுபரிவுறத்துளங்கியேதான்
என்னன்மூத்துதிர்ப்பதொத்துக்கண்ணினீர்ததும்பகிற்கு
மன்னமென்னடையாண்முன்னர்க்கண்ணுவனணுகினனால். 303

கனியுடன்சந்தங்கொண்டுகண்ணுவனெய்தலோடும்
வனிதைபொற்சிரசநீரான்மலர்ப்பதம்விளக்கிநாணி
முனிவதனத்தைநோக்காண்மொழிகிலாளருகுநிற்ப
வினையறுதவத்தோன்மின்னையணைத்திவைவிளம்பலுற்றான். 304

வனிதைநீநாணிநின்றசெயலெனவனத்தினெய்தி
யுனைமணந்தவன்றன்யாவனுரைத்தியென்றேதமாது
தனைநிகரிலாதசோமன்குலத்திற்றுச்சந்தமன்ன
னெனைமணந்தணைத்துப்போனனென்றனள்வெள்கிவெள்கி 305

அன்னமென்னடையாள்கூறவருந்தவன்மகிழ்ச்சியெய்தி
மன்னவர்திலகனான துச்சந்தன்மணந்தான்செய்ய [த்
வென்னமாதவஞ்செய்தாயுன் றுதரத்தின்னெழில்கொண்டோங்கி
தன்னிகரிலாதவண்மைத்தனயன்வந்திடுவனென்றான். 306

அருந்தவன்மகிழ்வினோடுமருளவேமனத்துட்கொண்டு
கருந்தடங்கண்ணியின்பம்பெருகிடக்களிக்குநாளிற்
பெருந்தவப்பலத்தினாலேபெலனுறுகருப்பங்கற்புத்
திருந்துமின்னுதரத்தின்கட்சிறந்திடநிறைந்ததன்றே. 307

மருடனையொருவிவையம்புரக்குந்தன்மகுணனான
புருடன்மாநகரந்தன்னிற்போந்தபின்பெறுவனென்று
வருடமூன்றுதரத்துள்ளேமகவினைப்பரித்தலோடு
மருடருமுனிவன்மங்கைகருத்தறிந்தறையலுற்றான். 308

மாதுநின்மகுணன்பாற்போய்மகவினைப்பெறுவனென்று
வேதனையுடன்மூவாண்டுபெரிப்பதுவிழுமிதன்றா
லேதமிலுயர்ந்தநாளினீன்றிடுமகவையென்னத்
தாதைசொற்படியேபெற்றாள்சகுந்தலைமதலைதன்னை. 309

ஐந்துகோளுச்சமாகவமரர்கண்மலர்கவே
மைந்தனைப்பெற்றுமாதுமகிழ்தலுமுனிவனெய்திச்
சிந்தையின்மகிழ்வினோடுசாதகவோமஞ்செய்தே
யந்தணருடனுமாசிபகர்ந்தினிதிருந்தானம்மா. 310

உவமையின்மதலைமெல்லத்தவழ்ந்துபின்னடந்தேயோங்கச்
சவுளமுநடத்தித்துய்யதவனுபநயனஞ்செய்து
பவமறுபுராணவேதசாத்திரம்பலவுங்கற்பித்
தவனியினிடர்கடீரவளர்த்தின்பமடைந்தானன்றே. 311

வேறு.

உவமையில்குமரனாகியேவருடமொன்பதோடேழுறப்பலத்தாற்
பவமலிருதராசுரரைப்பிசைந்துபகடுபஞ்சானனமுழுவை [நோக்கித்
யிவையெலாங்கரத்தாற் புடைத்துடலொடித்தே யெதிரிலாதவன்றனை
தவருளங்களித்திங்கிவன்பெயர்சருவதமனனென்றுரைத்தனர்மன்னோ.

வருவிலின்வலத்தாற்பெலத்தினாற்குணத்தான்மண்ணினினிகரிலாக்கும
னரன்விழிக்கனலாலெரிந்திடாமதனனிவனெனவழகமர்ந்திடவே [ர
சரியிலாக்கொழுநன்கலவியைநினைந்துசகுந்தலைதளர்ந்தவளுடலங்
கருகியசெயலைக்கண்ணுவமுனிவன்கண்டிவைகழறலுற்றனனால். 313

மங்கைநின்மகுணனுறையுமாபுரத்தின்மகனொடுமடைகுதியென்று
சிங்கலின்முனிவன்மொழிந்திடவிறைஞ்சிச்சகுந்தலைசிறுவன்றன்னுட
பொங்கியமகிழ்வாலருந்தவர்சூழப்புவியினினடந்துகான்கடந்து [னே
வெங்கயம்பரிதேர்நிறைந்திடும்பிரதிட்டானமாநகரின்மேவினளால்.

புரியிடையடைந்துவயங்குமாதவரைப்போமினாச்சிரமத்தினென்றே
யரிகொளாதனத்தினமரர்கோனிகராயமர்ந்ததுச்சந்தமன்னவனைச்
சரியிலாமகனோடிறைஞ்சியாண்டெழுந்தசகுந்தலைதரியினைச்சார்ந்தே
யிருகணுங்கொழுநன்புயத்தழுந்துறத்தானிமைக்கிலாளாகின்றனளாள்

இரதியிந்திராணியரம்பைமேனகையோடுருப்பசியிவரெலாநாணத்
தரளமாவடங்கடனமிசையலையத்தமனியக்கொம்பெனச்சாரும்
விரன்மனர்வெருவுஞ்சிறுவனோடடைந்தமின்னினைத்துச்சந்தமன்ன
னிருகணோக்கியலவையுளெய்தியநீயெவளெனச்சகுந்தலையியம்பும். 316

அரசநீவனத்தி னடைந்தகண் ணுவனாச் சிரமத்தின னாகியேயென் மேல், விரகமுற்றுயர்நான் மறைவிதிப்படியால் வேட்டனையிவளைக்கயா ன்பயந்த, திருமகனிவனை மவுலியைக்கவித்துச் செம்பொனாதனத்திடை யிருத்தித், தரணியைக்கொடுத்தி யெனச்சகுந்தலைமின் சாற்றமன்னனை த்திவைமொழிவான். 317

யான்வனத்திடையெய்தியேயணைக்கவெனக்குநீபயந்திடும்புதல்வன்
றானிவனெனவேயசத்தியமொழிந்துதரணியைவிடுகுதியென்றே
ஈனமுண்மலியும்பொதுமடந்தையர்போலியம்பினைதந்தைதாயுனக்கார்
நீநவிலெனவாண்டரசர்கோன்கழறநிகரிலாச்சகுந்தலையுரைப்பாள்.

கானகத்திடையிற்கவுசிகமுனியையணைந்திடுங்கவினுறுமணங்கா
மேனகைபயந்தபுதல்வியானெனவேவிளம்பிடமணந்தெனையணைத்த
நீநகத்திவணினசத்தியமுரைத்தாய்நிருபனீயளித்திடும்புதல்வன் [தான்
றானொருவுவனோமவுலியைக்கவித்துதரணியைக்கொடுத்திடென்றனைத்

சுதைதருமொழியாள் விளம்பிடக்கேட்டுத் துச்சந்தன்தவத்தினை யொழிந்து, மதியறுமுனிவன் விரகமுற்றிடத்தான் மயக்கியேயணைத்த மேனகையாம், பொதுமகள்பயந்த புதல்வியாகையினாற் பொய்விளம்பி னையெனப்புகன்று, கதுமெனக்கரங்க ளறைந்துநகைக்கக் காரிகைக ண்சிவந்துரைப்பாள். 320

என்னைநீயிழிவாங் குலத்தியென் றுரைத்தா யிந்துவின்சுதன்புதன ளித்த, மன்னனையணைந்தே யுருப்பசியுதவு மகன்வழிவரும்யயாதிக்கித், தன்னிகரிலாத வுசனனொண்மகடன் றுதிசம்மிட்டைதான்பெறவே, யி ன்னிலத்துயர்ந்தோன் மரபினில்வந்தா யெனையிகழ்ந்தனையென நகை த்தாள். 321

அரிவையர்திலகநகைத்திவைமொழியவரசர்கோனதற்கிழிவறைந்து
தெரிவையேயுனக்கன்பானவரிடத்திற்சிறுவனோடேகெனும்வேலை
சுரரொடுமுனிவர்நிலத்தினிற்றோன்றித்துச்சந்தமன்னனைநோக்கிச்
சரியிலாவடமீனிகர்சகுந்தலையைச்சாற்றலையெள்கலென் றுரைப்பார்.

காவலர்திலகநீவனத்தெய்திக்கண் ணுவமுனிவனாச்சிரம [டே
மேவியிவ்வணங்கைக்கண்டுதான்களித்துவிரகமுற்றனலின்முன்வேட்
யாவியுமுடலும்பொருந்தியபோலவளியுடனணைத்தெழிலாருந்
தேவியையிகழேலிவள்பயந்திடுமிச்செல்வனின்சிறுவனாமென்றார். 323

சுரரொடுமுனிவர் திரளிவைவிளம்பத் துச்சந்தமன்னவனுரைப் பான், மிருகயாத்திரையை விரும்பியான்வனத்தின் மேவியேயிவட்டனை

வேட்டுப், பெருகியகளிப்பான் மணந்துயானணைந்து பிரிந்தென்றார
டைந்ததுமுனமே, யிருநிலத்தவர்கள் பழித்திகழுவரென் றதற்குயானெ
ள்கினேனென்றான். 324

நெறியுறுமரச னிவையெலாமிகழ்த்த நெடுந்தவரிலேகர்களுறைப்பா
ர், மறுவினின்மனைவி யருந்ததிநிகர்ப்பாண் மதனனெண்வடிவநற்குண
த்தாற், குறைவிலுன்குமர னிவனைநீயெள்கே லென்றவர்மறைந்திடக்
கோமான், சிறுவனைத்தழுவி மவுலியைக்கவித்துச் செம்பொனாதனத்தி
டைவைத்தான். 325

சுருதியையறையும்மறையவர்விதிப்பத்துச்சந்தன் சுதன்றனக்குயர்பேர்
பரதனென்றுரைத்துப்பரிவுடன்மவுலிகவித்துப்பாரரசெலாமீந்தே
யிரதியையணையுமதன னுநாணவெழிலுடைச்சகுந்தலையுடனற்
சுரதநூல்வழுவாதவளிணைநகிலிற்றோய்ந்துபல்லாண்டினிதிருந்தான்.

வேறு.

கோசிகனருள்குமரியோடெழில்கொடுச்சந்தன்
வாசமும்புதுமலரும்போலாயிரவருட
மாசைமல்கிடவணைந்தயின்னறிவுவந்துறவே
யேசின்மாதவம்புரியவேவனத்தினேகினனால். 327

விரதமார்தவம்வெஃகியேதுச்சந்தனேகச்
சுருதிநூனெறிதுணையதாய்ப்புவியினையாளும்
பரதமன்னவன்மரபினிற்பருதிபோலெழுந்தா
னிரதிகொண்கனைநிகர்த்திடுமத்திநேரிலாதான். 328

அத்திமன்னவனருணெறியறன்மறைதழைப்ப
வத்திவெம்பரியம்பொனினிரதமாரனிக
மத்தியென்னவேமலிந்திடவரியணைமிசையி
னத்திநன்னகர்தன்பெயராலமைத்தமர்ந்தான். 329

சரியிலத்திமன்மரபினில்வந்தவன்றரணி
யரசர்தங்களையாயுதம்பயிற்றுவித்தமையாற்
குருவெனப்பெயரறைந்திடக்குருகுலமெனவே
யுரைசெயக்குருக்கேத்திரம்படைத்தினிதுவந்தான். 330

காமனேரெனக்களித்துலகாண்டுயர்கவிகை
சோமனென்னவேதுலங்கிடவயங்கியகுருவா
நாமமன்னவன்மரபினினலனுறச்சனித்தான்
வீமசேனமன்விறலுடைவிடையவனெனவே. 331

அத்திமாநகரழகுறவரசுசெய்வீமன்
புத்திரன்பிரதீபனும்பொறையுடையரசன்
சுத்தரெண்மறைச்சொல்வழுவாநெறித்துணையாய்ச்
சித்தசன்னெனச்சிங்கவாதனத்தமர்நாளின். 332

மனுவின்மைந்தனாமிக்குவாகுப்பெறுமன்னன்
றனியகற்றியமகாபிடற்கறநெறிதுலங்க
வினியசொல்வினாவிலங்குசெங்கோலினையோச்சி
வினையறுத்தயமேதமாயிரம்புரிந்தனனால். 333

துரகமேதமாயிரமுடித்ததிதன்சுதனோ
டரியினாதனத்தழகுறவமர்மகாபிடற்குக்
கரியையூருவோன்முதலினோர்களித்துவந்தேத்த
விரைசெய்மாமலர்த்தவனமரவையின்மேவிடவே. 334

வேதன்வானதிமடந்தையைவியந்துறநோக்கித்
நீதினுற்றமாபாதகம்யாவையுந்தீர்க்குங்
கோதையாளிவடனக்குநேரிலையெனக்கூற
மாதுபங்கனார்வேணியின்மருவுவாண்மகிழ்ந்தாள். 335

மலர்மனிம்மொழியறையமந்தாகினியெனைப்போ
னலனையுற்றவரிலையெனும்பாடவநண்ணக்
கலைமின்மங்கைதன்னாயகன்பணியினாற்கங்கை
முலையினிற்றுகிலொருவிடமோதினன்பவனன். 336

சரியில்வானதிமடந்தைதன்றனத்தினைவிரும்பி
யிரவியின்குலமகாபிடனிருகனானோக்க
மரைமலர்த்தவனுணர்ந்துநீர்மண்மிசைச்சனித்தே
சுரதநாவினைவிளைத்திடுவீரெனச்சொன்னான். 337

கந்தநன்மலர்க்கடவுளிவ்வுரையினைக்கழறச்
சிந்தைநொந்துமாபிடக்குமன்செய்தவஞ்சிதையச்
சுந்தரஞ்செறியும்பிரதீபன்றன்சுதனாய்ச்
சந்திரன்குலத்துதித்தனன்சந்தனுவாகி. 338

தனயனாகியசந்தனுத்தரணியாண்டிடவே
வினையறும்பிரதீபன்மாவனத்திடைமேவி
யனிலமேயுணவாயருந்தவஞ்செயுநாளிற்
றனியகற்றிடுஞ்சுரநதிதோகையாய்வந்தாள். 339

சீருறத்தவஞ்செய்பிரதீபன்றெக்கணத்தி
னூருவினுருப்பசியெனவொளிரவேயிருந்துன்
பாரியாமென்றன்பயோதரத்தணைதியென்றுரைப்ப
நாரிதன்னையேநோக்கிமன்னவிலலுற்றனனால். 140

வாமலூருவினிருந்தவண்மனைவியாமென்றுந்
தோமிலாவலத்தொடையிடையிருந்தவள்சுதனுக்
காமெனச்சொலுமாரணமாதலினுனக்கு
மாமன்யானெனவுரைத்தலுமறைந்துபோயினளால். 341

தொடையின்வைகியசுந்தரிமறைந்துபோயிடவே
யடவியேகியவருள்செறியும்பிரதீபன்

கடகரித்திரள்குரகதங்கவினுறுமிரதம்
படிமிடைந்திடவத்தினாபதியினிற்சேர்ந்தான். 342

பதியினெய்தினற்பண்புடைச்சந்தனுப்பெயராஞ்
சுதனைநோக்கியேசொல்லுவான்சுரர்நதிபடியின்
மதியெனத்திகழ்வனிதையாய்வருவணியவளைக்
கதுமெனக்கலந்தணைத்தியென்றகன்றனன்கானின். 343

தந்தையிம்மொழியறைந்துகான்சாரச்சந்தனுமன்
சிந்தையின்மகிழ்வெய்திடச்சிறந்தமர்நாளின்
றந்திரத்துடன்சானவிநதியினிற்சார
விந்தையேலவேபகீரதிமேவிமுன்னின்றாள். 344

அன்னமென்னடையந்தரநுசுப்பிருகொங்கை
பொன்னவிர்தலங்கொளாலிகிரிபந்தண்பூகங்
கன்னன்றோள்சிலைநுதல்விழிகணைதமினுசி
துன்னுமைமுகில்குழலெனக்கொண்டுமுன்றோன்றினளால். 345

வந்துதோன்றியமடந்தைதன்வடிவினைநோக்கிச்
சந்தனுப்பொருமதனசாயகத்தினாற்றளர்ந்தே
யிந்துவெள்கிடுவதனியேயென்றனுருயிருஞ்
சிந்தையுந்திறைகொண்டநீதேவியாகென்றான். 346

நீங்கருங்குணச்சந்தனுச்செப்பவானதிமான்
பாங்கிலாதமாபாவம்யான்செய்கினும்பரிவே
யோங்கவென்னைநீயணைத்தியேலமர்வனஃதோவி
னீங்குவேனெனநிகழ்த்தினளஞ்சுகமெனவே. 347

கோதையிம்மொழியறைந்திடக்குற்றமிலரசன்
பாதகங்களாங்கொலைத்தொழினீபலசெயினு
மேதமென்றுனையிகழ்கிலனிகழ்ந்திடிலேகென்
றோதவானதியுளமகிழ்ந்தவனையுற்றணைந்தாள். 348

தத்தைநாணவேமொழிந்திடுஞ்சானவிதன்னோ
டத்திமாநகரடைந்துமன்னலர்மலரணையிற்
சித்தசன்னுடனிரதிமான்வெள்கிடச்சேர்ந்து
வித்தகத்துடன்சுரதநூற்கலவியைவிளைத்தான். 349

வேறு.

சந்தனுமன்னன்றோளிற்சானவிமடந்தைதோய்ந்து
மைந்தர்களேழுபேரைப்பெறப்பெறமண்ணினோடிச்
சிந்துவையதிரத்தாக்கிச்செல்லும்வானதியிற்போட
வெந்தசிந்தையனாயொன்றும்விளம்பிடாதிருந்தானன்றே. 350

பின்னருங்கங்கைமாதுபெற்றிடுமைந்தன்றன்னைத்
தன்னிருகரத்திலேந்திச்சானவிநதியிற்போடு

முன்னமன்றடுத்துமைந்தரெழுவரைக்கொன்றமூர்க்கை
யின்னமிச்சிசுவைக்கொல்லேலென்றுகண்சிவந்தானன்றே. 351

தனயரைக்கொன்றபாவியென்றுமன்சாற்றமங்கை
யெனைமனுவிகழ்ச்சிசெப்பேலெண்டிசைவசுக்களெல்லா
முனிவனுக்கறைந்தசாபமுடுகவென்னகட்டிற்றோன்றிப்
புனலினுண்மடிந்தவண்ணங்கேளெனப்புகலலுற்றாள். 352

சுகமுனிபிதாவின்றந்தைபிதாமகன்றெருறுவின்பாலை
நுகருவோர்வருடநூறாயிரமெழிலிளமையுற்றுச்
செகதலத்தமர்வரென்பதுணர்ந்தெட்டாம்வசுத்தன்றேவி
பகரொணாப்பெருமையாவைத்தருகெனப்பதிக்குச்சொன்னாள். 353

வனிதையீதுரைப்பக்கேட்டுவசிட்டனாவினைத்தான்பற்றித்
தனிநிகரற்றவேழுவசுக்களுந்தானுமேக
முனிவனீதறிந்தேயட்டவசுக்களைமுனிந்துமண்மேற்
றனியுறச்சனிப்பீரென்றுசபித்தனன்சுசிபோற்சீறி. 354

சீருறுவசிட்டன்கூறத்திகைத்தெட்டுவசுக்களஞ்சி
நேரிலாமுனியேயெம்மைக்காவெனநிறைநூல்வல்லோ
னேருறுமெழுவோர்நீயிர்பிறந்தன்றேயிறப்பீராக்கொள்
பூரியனாரியின்றிப்புவியிடையுழல்வனென்றான். 355

தவமுனிவெகுண்டுகூறுஞ்சாபத்தாலேழுபேரு
மவனியினுனக்குமக்களாகியென்வயிற்றிற்றோன்றிப்
புவியின்வானதியின்வீழ்க்கப்பொன்றினராவைப்பற்று
மிவனெடுங்காலமண்ணினிருப்பனென்றியம்புவாளால். 356

மலரயன்சாபத்தாலேமன்னநின்றேவியானே
னலனுறுங்கங்கையாவேனானென்சொன்மறுக்கையாலே
நிலனையாணிருபநின்னைநீங்குவன்சிறுவன்றன்னைப்
பொலனுறவளர்த்தேயீவனென்றுசேயோடும்போனாள். 357

தனயனைக்கரத்தினேந்திச்சானவிமறைதலோடுந்
துனியுறவெதும்பிநைந்துசுதனொடுந்தேவிதன்னை
நினையுமோய்ந்திருக்கும்வீழுநிருபனாகுலத்தையெய்த
வனைவருந்தழுவித்தேற்றவறிவுவந்திருந்தானம்மா. 358

ஈனமிலரசர்கோமானிடரினின்மூழ்கவேகிச்
சானவிதனயன்றன்னைச்சுரர்குருதன்னால்வேத
மூனமில்புராணமெல்லாமோதுவித்தெழில்கொண்டோங்கு
மானையானனன்பின்னோன்போலையுறவளர்த்தாளன்றே. 359

அரசர்களெழுமூன்றானதலைமுறையடங்கச்செற்ற
பரசுராமன்றன்னாலேபலபடைபயிற்றுவித்து
வரிசையார்குமரனாகவளர்த்துமந்தாகினிப்பெண்
கரைசெயாக்களிப்பினோடுங்கவினுறவருமந்நாளில். 360

சந்தனுத்தந்திருழுத்தமணியத்தேரினேறி
யிந்திரனெழிலைப்போலவிலங்குவானதியைச்சேரச்
சுந்தரக்கங்கைமைந்தன்றூயவில்வளைத்தம்பாலே
சிந்துவையதிரத்தாக்குஞ்செலத்தினையடைத்தான்மன்னே. 361

தரையினிற்கடிதினோடுஞ்சானவிதனையம்பாலே
விரைவினிலடைத்தநின்றவீரன்வில்விநோதநோக்கி
யரசர்கோன்வியப்பினாலவ்வாடவர்திலகனாரென்
றுரைசெயும்முன்னமந்தாகினிவந்தேயோதலுற்றாள். 362

அத்திரமதனாலோடுமெயத்தினையடைத்தநின்ற
வித்தகனிவன்யாளீன்றவீரியனான்றன்மைந்த
னத்தினபுரியையாளுமரசவுன்றேவியாகி
யித்தலத்தமர்ந்தேனென்பேர்கங்கையென்றியம்பினாள். 363

சந்தனுமன்னவுன்றன்றனயன்பேரறங்கண்மேவுஞ்
சிந்தையன்றுய்யதேவவிரதனென்றறியச்செப்பி
யந்தரநதிப்பெண்ணீருண்மறைதலுமரசர்கோன்றன்
மைந்தனோடேகியத்திவளநகர்வாழுநாளின். 364

உத்தரதேசந்தன்னிலரசரிலொப்பிலாதான்
சித்தசன்வெள்குங்காமப்பிரியன்செல்லூருவோனை
யொத்தியாகவத்தின்வெல்லுமொன்னலவசுரர்சாய
வத்திரவருடமெங்கும்பொழிந்தமர்வென்றானன்றே. 365

அவுணரைவென்றகாமப்பிரியனையணைத்தியென்றே
யுவமையில்வலாரிகூறவுருப்பசிமறுக்கச்சீறிப்
புவியின்வானதியின்மீனாய்ப்புகுந்துநீதிரிதியென்று
நவிலமாறோடையின்வந்தாள்வகுலியாய்நாரத்துற்றாள். 366

சுரர்பதிசாபத்தாலேதூயவானதியின்மீனா
யுருவசிதிரியுநாளினுபரிசவசுவாமன்ன
னிரதமீதேறிக்கானின்முனிவராச்சிரமத்தெய்திக்
கரிபரியிரதஞ்சூழக்கவினுறவிருக்குங்காலை. 367

கிரிகையாந்தேவிதன்மேற்கிளர்ந்திடுங்காமத்தான்மன்
னுருகியவிதையனாகவொழுகும்வீரியஞ்சிந்தாம
லரியுறமடலினேற்றுவரியையென்றேவிக்கீயென்
றுரைசெயத்தத்தைவாயாற்கவ்வியங்கோடிற்றன்றே. 368

வன்னிவானேகக்கண்டுவெருகங்கமறைதலோடும்
பொன்னவிர்மடலைக்கங்கைப்புனலினிற்கிள்ளைபோட
வின்னனிலரிவையானவடிவொரீஇவெழுந்தமீனான்
மன்னன்வீரியஞ்சிந்தாமல்வாயுறவிழுங்கிற்றன்றே. 369

உருப்பசிவடிவையோவியொளிருமீன்மடலைக்கவ்வி
விருப்பமுற்றேகுங்கிள்ளைவெருவியேவீழ்ப்பநீரின்

பாப்புவீரியக்குன்றாமற்பதறித்தான்விழுங்கலோடுங்
கருப்பமுற்றிடவேகலைக்கரையருகடைந்ததன்றே. 370

கரையருகாகத்துள்ளிக்குதித்தெழும்வகுலிதன்னைப்
பரதர்தம்வலையிற்பற்றிப்பருப்பதம்போலத்தாங்கி
வரிசையிற்றமக்குக்கோனும்மகிழுறச்சிரவாமுன்னர்த்
தரையினில்வைத்தலோடுஞ்சாலவும்வியந்தானன்றே. 371

வரையெனக்கிடந்தமீனின்வயிற்றினைவகிர்தலோடு
மரிவையர்திலகமானசிசுவுடனரன்றன்சீற்றத்
தெரிகிலாமதனன்போலவிலங்கியமகவுந்தோன்ற
விருகையாலெடுத்துநோக்கித்திமிலர்கோனின்புற்றானல். 372

சலசரம்வயிற்றிற்றோன்றஞ்சரியிலாவாணும்பெண்ணும்
வலையர்கோன்மனைவிசையினளித்திடவளருநாளி
னிலனையாள்வசுமனெய்திரிகரிலச்சேயைக்கொண்டே
நலனுறமறையோரோமம்நடத்தநற்சுதனாய்க்கொண்டான். 373

வசுமனன்மதலைதன்னைமச்சியவரசனாக
விசையவேமௌலிசூட்டியினிதுறத்திமிலர்கோமான்
வசையிலாச்சிறுமிதன்னைவளர்த்திடமடந்தையாக
விசையினீரோடுநாவாய்விடுத்தியென்றுரைத்தானன்றே. 374

தந்தையாம்பரதர்கோமான்சாற்றவேநாவாய்தன்னை
யிந்துவினுதலிசொல்கொண்டிரைஞ்ஞாற்றுவரையேற்றி
நந்தொளிர்கரத்தினாலேநடத்தியேமீளுநாளின்
வந்தனன்விபுதரேத்தும்பராசரமுனிவன்மாதோ. 375

பராசரமுனிவனெய்திப்பாவைதன்னெழிலைநோக்கிச்
சரோருகமுகையோகொங்கைதரளமோதசனமல்கு
லராவினற்படமோசெவ்வாயாம்பலோவனங்கன்வாழ்வோ
விராசர்தம்பெண்ணோவென்முன்னின்றவளென்றணைந்தான். 376

வலையர்கோன்மடந்தைதானும்வலைதனைவளைத்துக்கொள்ளப்
புலனவனிடத்திலெய்தப்பொருமதன்றடக்கையிக்குச்
சிலையினார்பொழியும்பூவின்சிலீமுகஞ்சிந்தைதன்னை
நலியவேமுனிவன்செய்வதறிகிலானவிலலுற்றான். 377

மங்கைநீயென்னைநாவாய்தன்னிலேயேற்றிமாறில்
கங்கைநீர்கடந்துபோகவிடுதியோகழறுங்கூலி
யகலைகயாலளிப்பேனென்னவாயிரம்பேர்களேறு
திகழுநீமுனிவனேகேளேகரிதென்றுசொன்னாள். 378

ஒருவனாயிரம்பேர்ப்பாரமுறவன்யானென்றேயோத
விருபதிற்றன்பதாம்பேர்ப்பாரமாயிருப்பதெங்ங
னுரைசெய்நீயதுசெய்தாலுமோடம்பிக்குக்கூலி
தருதியோவென்றுமங்கைதடக்கையைக்கொட்டிநக்காள். 379

அங்கையோடங்கைதாக்கியரிவைவெண் முறுவல்செய்தே
யிங்குநீயிலம்பாடுற்றாய்வெறிகொடென்சொன்னாயென்ன
வங்கமீதிடையினேறிவருஞ்சதப்பத்துப்பேர்க்குந்
திங்களானனத்திகூலியிஃதெனச்சொரிந்தாள்செம்பொன். 380

செம்பொனைச்சொரிந்துமின்றுசிறந்திடுமுனிவன்றன்னை
யம்பியினேற்றலோடுமோயிரம்பேரிதென்னத்
தும்பவேவியந்துமின்றதுடியிடைகோல்கைக்கொண்டு
நம்பர்செஞ்சடையினண்ணாநதியின்மேனடத்தினாளால். 381

வனிதைகோல்கொண்டுநாவாய்நடத்தலுமறையையோது
முனிவன்மாலெய்தமாரன்முடுகியேகணைதொடுவேக்
குனிசிலைநுதலினாளைக்கூடவேமனத்தினெண்ணிப்
பனியிருநாலுதிக்குமறைத்திடப்பண்ணினானால். 382

வேறு.

விரகமுற்றிடுமுனிபனிவிளைக்கமிக்
கிருவிசும்பவனிதிக்கெலாமறைப்பவவ்
வரிவைகைப்பிடித்தலுமவடன்மேனிசம்
பரசரநாறுமென்றிவைபகர்ந்தனள். 383

சரிரமீச்சலசரநாற்றமின்றியே
மருவுடன்மருவவாய்மலர்ந்தபோதயன்
சரியெனத்தனயனைத்தந்துகன்னியா
முருவொருவாதனைத்தருளென்றோதினாள். 384

காசணிதனத்தினள்கழறலோடுமே
யோசனைகந்தியாயுயர்ந்துநான்மறை
பேசிடுபுதல்வனைப்பெற்றுங்கன்னியா
யாசகன்றிடுதியென்றவளைப்புல்லினான். 385

கரதலாமலகம்போன்ஞானங்காட்டுவான்
பரதர்கோன்மடந்தைதன்பயோதரந்தழீஇச்
சுரதநூல்விளைத்திடச்சுரர்துதிக்கவே
சரதநான்மறைதருந்தனயன்றோன்றினான். 386

ஆசறுமுனிவனையணைந்தநங்கைதான்
யோசனைகெந்தியாயுளமகிழ்ந்தவ
ணேசகல்புதல்வனையீன்றுங்கன்னியாய்
மாசகன்மணியெனவயங்கினாளரோ. 387

வேறு.

முஞ்சிகோவணமுப்புரிநூலினால்விளங்க
மஞ்சனாகிவந்தடிபணிந்துனக்கிடர்வரினீ
நெஞ்சினானினையன்னையேநேர்வனென்றுரைத்து
விஞ்சுதந்தையோடேகினன்வியாதனாம்பெயரோன். 388

தன்னையுற்றணைத்திதெவன்றனயனோடேக
வின்னவின்றியேயிலங்கியயோசனைகந்தி
யன்னமாமெனவலம்பியமணியெனவழகார்
கன்னியாகியேயம்பியிற்கவினுறநின்றாள். 389

கங்கைமீதுகாவாயினைக்கடிதினிற்றிருப்பி
மங்கைமீடலும்வலையர்கோன்மகளெழினோக்கி
யெங்கண்மாதவத்தணங்களுயின்றுதொட்டென்றும்
வங்கநீவிடாயெனவவன்மனைவைகுநாளின். 390

இந்துவின்குலத்திலங்கியசந்தனுவென்பான்
றந்திவெவன்னிடைத்தனிக்குடைநிழற்றிடத்தயங்கு
கந்துசேரும்வானதிக்கரைவருகவவ்வலைப்பெண்
கெந்தமெங்கணுங்கிளர்ந்துமன்னுசியின்மடுத்த. 391

கெந்தமெவ்வழிகிளர்ந்ததென்றதனெறியறிந்தே
முந்திமன்னவன்றந்தியைமுடுக்கிவானதியி
னுந்திநீரினுவாய்விடுமதின்மருங்குறவே
வந்துகண்டனன்மடந்தையைவலையர்வீதியிலே. 392

கலனிலங்கியபுயத்தியைக்கண்டிடுமரச
னிலனில்வானிலிவளைநேராரெனநினைந்தே
யலையுநெஞ்சமென்னுவியைச்சூறைகொளணங்கிவ்
வலையர்வீதியின்வருவதென்னோவெனவுளைந்தான். 393

கயலையுந்தியவிலோசனிகவினெலாங்கண்டு
மயன்மலிந்திடுமன்னவனிவளெனவெனவே
யயலினின்றவரம்பிநாயகன்மகளாம்வான்
புயலைநேர்கொடைப்புரவலவென்றிவைபுகன்றார். 394

வேறு.

அவனியிற்பாதரிறைவனையழைத்துன்மகடனையருளெனக்கெனவு
முவமையிலணங்கையுதவினலவடன்மதலைக்கிவ்வுலகெலாங்கொடுத்து
மவுலியைக்கவித்தற்கிசைதியோவெனவேமறுத்தனன்வலைமகள்சேய்க்கு
புவியினைக்கொடுப்பதவமெனக்கருதிப்புரவலன்புரியிடையடைந்தான்[ப்

புரியிடையடைந்த புரவலன்வலையன்புதல்விதன்வடிவினைநினைந்து, விரகமுற்றணைமேல்விழுந்தெழுந்தயர்ந்துமெலிகின்றவாறெலாமறிந்தே, சுரநதியருளுஞ்சுதன்றனையளித்தோன்றனியறத்திமிலரூரெய்திப், பரதர்கோன்றனையென் பிதாவினுக்குன் றன்பாவையைத்தருதியென் றுரைத்தான். 396

சுரநதிசுதனிவ் வாறுரைத்திடவே தொழுதிடுந்திமிலர்கோனுரைப்பான், அரசனின்பிதாவுக்களிக்கிலேன்மகடான் பயந்திடுஞ்சிறுவனுக்கவனி, தருதியோவென லுந் தந்தனனென்றுஞ்சொற் சாற்றலும்பரதர்கோன்சமனி, னிருபநீகொடுத்தா யெனினுநின்னமர்தர் கொடுப்பரோவென நிகழ்த்தினனவ், 397

உரைசெயுமச்சவரசனைநோக்கியொப்பிலாச்சானவிசுதன்றான்
விரதமாதவர்போலூர்த்தரேதாவாய்மருவுவேனென்றுமுரைவிளம்பச்
சுரரொடுமுனிவர்தோன்றியேயிவன்றான்வீடுமனெனப்பெயர்சொல்லித்
தருமலர்சொரிந்துபுகழ்ந்தனர்விசும்பிற்றேவதுந்துமிதழங்கிடவே. 398

தேவர்கடுதிப்பமுனிவர்கண்மகிழச்சிறந்திடும்வானதிபுதல்வன் [ணர்ந்து
பாவையர்மணம்யான் புணர்கிலேனெனவே பரதர்கோன்மகடனைக்கொ
காவலர்க்கரசனுடுபதிகுலத்துக்கவினுறுசந்தனுதனக்குத்
தேவியாயளித்தேனெனப்பகிரதிசெய்சிற்றவையுடனகர்சேர்ந்தான். 399

வேறு.

ஊனமிலெழிலினாளாமோசனைகெந்திதன்னைச்
சானவியருளுமைந்தன்றந்துமுன்னிறுவலோடு
மீனமிலரசன்சேயையிச்சையாமரணமாகி
மானினைவதைத்தோன்பத்தனாகியேவாழியென்றான். 400

மைந்தனுங்கங்கைசேயைவாழ்த்தினான்மறையையோது
மந்தணரோமஞ்செய்யவணங்கினாடன்னைவேட்டே
யிந்திரைசிறுவன்கேடிலரதியும்வெள்கவேதான்
சந்தனுத்திமிலர்கோமான்றையலைத்தழுவினானால். 401

வேறு.

அத்திமாநகரரசன்யோசனைகெந்தியான
தத்தைதன்னிருதனமெனுந்தடாகத்தின்வாழ்ந்து
வித்தகத்துடன்மதனசாத்திரத்தினைவிளைப்பச்
சித்திராங்கதவிசித்திரவீரியர்செனித்தார். 402

சரியிலாதசந்தனுமனையாடனைத்தழுவி
யிருவரைப்பயந்திடவவரெழிலுடன்வளர
வரிகொளாசனத்திருந்தவனுசையைநீத்து
விரியுங்கானிடைத்தவஞ்செயமேவினனன்றே. 403

மெய்த்தவஞ்செயச்சந்தனுப்பிரியவீடுமமன்
சித்திராங்கதன்சென்னியின்மௌலியைச்சேர்த்தே
யத்திமாநகராளுதிநீயெனவறைந்து
வித்தகப்பரசுராமன்பால்மேவும்வேலையிலே. 404

சித்திராங்கதப்பெயரினாற்சிறந்தகெந்தருவ
னத்திமாநகர்ச்சந்தனுத்தனயனையடைந்தே
யித்தலத்தினிலென்பெயர்விடுவிடாயென்னில்
வித்தகச்சமர்விளைத்திடுவாயெனவிளித்தான். 405

வந்தகெந்தருவனிவைமொழிந்திடமறுவில்
சந்தனுத்தனயன்குருக்கேத்திரஞ்சார்ந்து
முந்திவெஞ்சமரிருவருமூன்றுநாட்பொரவே
மந்தரமெனச்சித்திராங்கதமனன்மடிந்தான். 406

ஆருநேரிலாக்கெந்தருவனடர்ந்திடலுந்
தீரனுகியசித்திராங்கதன்சிதைந்திடவே
வீரனுகியவீமென்கேட்டுநெஞ்சுளேந்து
பாரினேரிலாவத்திமாபதியினைச்சேர்ந்தான். 407

அத்திமாநகரடைந்துசிற்றன்னையைத்தேற்றி
வித்தகன்முடிவிசித்திரவீரியன்சிரத்தின்
வைத்துமன்னுலகாளுதியென்றுரைவழங்கச்
சித்தசன்னெனச்சிறந்தரசாளுநாட்டன்னின். 408

இம்பரோப்பிலாக்காசிமன்பயந்திடவிலங்கு
மம்பையம்பிகையெதிரிலம்பாலிகையெனப்பே
ரும்பரும்விரும்பெழிலுடையோர்களைவேட்கச்
செம்பொனின்முடியரசர்களெண்ணிலார்சேர்ந்தார். 409

அங்கண்ஞாலத்திலரசர்களமருமண்டபத்திற்
கங்கைதன்சுதன்வந்திடக்கண்டவர்விருத்தா
மங்கைமார்கண்மேன்மனம்வையேனென்றநீமருளுற்
றிங்குவந்ததென்னேவெனநகைத்திகழ்வுரைத்தார். 410

இகழ்வுரைத்திமென்னர்முன்னிலங்குகன்னியரை
நிகரில்சானவிசுதனெங்கேர்மிசையேற்றி
யிகல்செய்வீரர்களுளரெனிலெதிர்மின்களென்று
புகலமன்னவர்புணரிபோல்வளைத்தெழுந்தார்த்தார். 411

மன்லரெங்களும்வளைப்பவீமென்றனுவளைத்தே
துன்னுலமமுகில்பொழிந்தெனவாசுகஞ்சொரிய
முன்னர்வந்தடர்வீரர்கண்முடிச்சிரந்துணிய
வென்னிட்டோடினர்வேலைபோற்குருதிகள்விழவே. 412

படியின்மன்னவர்படைஞர்கண்மடிந்திடவெருவி
நொடியின்முன்னரின்வென்னிடறவலுதற்கரிய
மிடல்கொள்வீமென்மின்னிடைக்கன்னியருடனீள்
கொடிகொடேரின்மேலத்தினபுரங்குறுகினனல். 413

வேறு.

நத்தெனுங்கிரிபகாரியர்கடம்மொடு
மத்தினபுரிதனினம்பொற்றேர்மிசை
வித்தகவீமென்மேவவம்பையாந்
தத்தைகாங்கயனுடன்சாற்றுவாளரோ. 414

சாலுவமனனெனைத்தாரமாகவே
ஞாலமேல்விரும்பினனவ்வேந்தன்மேன்
மாலெழுமனத்தினளென்னவானதி
பாலவிவிரும்புவோன்பாவினேகென்றுன். 415

உம்பர்கடுதிக்கும்வீடுமமன்னோதனு
மம்பைசாலுவனிடையடையவேகத்தன்
றம்பியாம்விசித்திரவீரியன்றனக்
கிம்பரினவட்கிளையோரைவேட்பித்தான். 416

அம்பைமின்னேகவம்பிகையம்பாலிகை
பம்பைகள்சச்சரிபணிலம்பம்பவே
நம்பர்செஞ்சடையினினண்ணுவாள்சுதன்
றம்பியைமணந்தின்பந்தழைக்கவைகினான். 417

ஏருறுவிசித்திரவீரியற்கெழி
னாரியரிருவரும்பாரியாகநற்
பாரினிற்கவினுறப்பவமில்வீடுமன்
சீருறுபுராணங்கேட்டமர்தினந்தனின். 418

ஆவிலைவயிற்றினாளம்பையெய்தியே
சாலுவமன்னன்பாற்சார்ந்துமெய்க்குணச்
சீலநீயெனைமணஞ்செய்தியாலெனக்
கோலமார்நிருபர்கோனகைத்துக்கூறுவான். 419

குறைவிலாக்காங்கையன்கொண்டுபோயவன்
சிறையினிலிருத்தவேயிகழ்ச்சிசேறுநீ
மறுவிலாவெனக்குயர்மனைவியாமென்கை
முறைமையோவேகெனமுடுக்கினானரோ. 420

சாலுவன்முடுக்கிடத்தையல்வீடுமன்
பாலடைந்தென்னைநீபற்றுஞ்செய்கையான்
ஞாலமேலரசர்கணத்திலாரெனைக்
கோலமார்சுத்தனேயென்றுகூறினாள். 421

கோதையீதுரைத்தலுங்குறைவில்வீடுமன்
மாதர்தம்மேன்மனம்வைக்கிலேனென
வோதியசபதத்தாலுன்னைம்வட்பது
நீதியன்றேகெனநிகழ்த்தினானரோ. 422

உவமையில்வீடுமெனுரைப்பவம்பைமின்
னவனியினரசரையடைந்தெல்லீர்களும்
பவமறுகாங்கையனென்கைபற்றியே
நவையகன்மணஞ்செயநவிலுவீரென்றாள். 423

அரிவையீதுரைத்திடவவனியாள்கின்ற
புரவலர்கூடியேபுகன்றுவேண்டினும்
வரநதிசுதனுனைமணஞ்செயானெனிற்
றரிவையேசமரினிற்செயிப்பமென்றனர். 424

வித்தகவரிவையோடிவைவிளம்பியே
சுத்தநற்பகிரதிதோன்றல்பாலடைந்

உத்தமவம்பையைமணஞ்செய்துன்னிலின்
வைத்திடுகெனக்கங்கைமைந்தன்கூறுவான். 425

எந்தைதான்பெட்புறமெழில்கொண்மங்கையைத்
தந்திடுஞ்செயலினாற்றையலார்களைச்
சிந்தையாலுந்தொடேனென்றயான்செகத்
தந்தமாரம்பையையணைப்பனோவென்றான். 426

அம்பையையணைக்கிலாயென்னிலாகவ
மிம்பரிற்றாக்குதியென்றுகூறியே
வெம்பியமன்னர்மேல்வெகுண்டுவீடுமன்
றம்பியவருடம்போற்கணைசொரிந்தனன். 427

வீடுமன்வரிசிலைவளைத்துவிட்டிடு
நீடியசாயகநிறைந்துமாகரி
கோடகம்வீரர்கண்மடியக்கொற்றவ
ரோடினரரிவைநெஞ்சுளைந்துபோயினாள். 428

சுத்தநற்பகீரதிதோன்றறன்னொடு
மொத்தியேபொருமன்னரோடவம்பையாந்
தத்தைபோய்ப்பரசுராமன்றன்றாள்பணிந்
துத்தமவென்னிடர்தீரென்றோதுவாள். 429

வீடுமனென்றனைப்பற்றிவிட்டிட
வாடவரிகழ்ந்துநச்சிலர்களாதலின்
காடுறுமாதவவென்னைக்காங்கையன்
கூடுமாறருளெனக்கூறினாளரோ. 430

அரசர்கள்வென்னிடவலையுமம்பைமின்
கரைசெயாவிடருடன்கழறக்கேட்டருள்
பரசுராமன்னதற்கிசைந்துபாரின்மேற்
புரிசையாரத்தினபுரியின்வந்தனன். 431

வந்தருள்குருவினைவணங்கிவீடுமே
னந்தமாராதனத்திருத்தியர்க்கியஞ்
சிந்தையின்மகிழ்வுறவளித்துச்சிரிவே
னெந்தமாதவஞ்செயவெய்தினையென்றான். 432

தேசுலாவுறுமனனிவைகள்செப்பலு
மாசிலாவருந்தவனாசிகூறியே
வேசிலாவீடுமவென்சொற்பேணியிம்
மாசிலாவம்பையைமணஞ்செய்வாயென்றான். 433

குருவிவைமொழிந்திடக்கோதிறுதைபாற்
சரியிலோசனைகெந்திதன்னைச்சேர்க்கையா
லரிவையர்தங்களையணைக்கிலேனென்றே
யுரைசெய்தயானிவணிலுறேனென்றான். 434

வேறு.

கங்கைமாதருளுங் காங்கையனிவைகள் கழறிடப்பரசுராமன்றான், மங்கையம்பையையநீ யென்சொலுமறுத்து மணஞ்செயா யென்னின்மன்னவனே, பொங்குவெஞ்சமரம் மென்னுடன்பொருதி யென்றுவாய் புகையெழவுரைப்பத், திங்களையணிந்த சிவனெனும்விறல்சேர் வீடுமன் செப்பலுற்றனனால். 435

மறனுறுமவநீதியையுமுயலிதுவேமார்க்கமென்றுரைத்திடுமூர்க்க
வறிவிலாவாசானுடனமர்பொரினுமறனெனவீடுமன்றேர்மேற்
பிறையணிசடையிற்சுரர்நதியிலகும்பினாகிபோற்சீறியேயிற்ப [ந்தான்.
மறலிபோற்றவத்தோன் வையமேல்வைகி வருடம்போல்வாளிகள்பொழி

அரியெனமுனிந்தேநெடுந்தவன்விடுத்தவாசுகமெண்டிசைமறைப்பச்
சரியில்வானதிதன்றனயன்வாளிகளாலறுத்துயர்சழற்கணைவிடுப்பப்
பரசுராமன்றான்பகலவன்படையான்மாற்றிடப்படியிலிவ்வண்ண
மிருவருமிருபத்தொருதினஞ்சமர்செய்தெதிர்த்தனரியமனஞ்சிடவே.

இருவிசும்பெரியவிம்பரினுயிர்களரற்றிடவெண்டிசைசுமந்த
கரியினம்வெருவக்கடல்களுஞ்சுவறக்கணைபொழிந்தெதிர்ந்திடுங்காலை
வரிசிலைவளைத்தேவீடுமன்விடுத்தவாளியால்வலவனுமாளப்
பரியுறுமிரதந்துணியவில்லிறலும்பாறினன்பரசுராமன்றான். 438

கோடகமுறுதேர்கொடிசிலையறலுங்குருதிமெய்சொரிந்திடவிலத்தி
னோடியேதளரும்பரசுராமன்பின்னோக்கியேயுருவிலிகணையைச்
சாடியேமறங்கடளரவேயறங்கள்வளரவேசத்தியவிரதத்தும்
வீடுமெவுனக்குநிகரிலையெனவேவிளம்பியாச்சிரமத்தையடைந்தான். 439

உம்பர்கள்வெருவவுருத்திரன்போலவுருத்தெதிர்பரசுராமன்றா
னிம்பரினிவுளியிரதம்வெஞ்சிலையோடிற்றிடப்பாறவங்கிடருற்
றம்பைநெஞ்சுழன்றேயருந்தவம்புரியவரனுமையாளுடனெய்த
நம்பநின்சடைவாழ்நதிசுதன்றனைநான்வதைசெயும்வரநவிலென்றாள்.

மருடருமனத்தண் மொழியவைம்முகத்தோன் மடந்தைநீயெழில்கொள்பாஞ்சால, னருடருமகளாய்ப் பின்னரினியக்க னடவியினளிப்ப மைந்தனுமாய்க், கருடவாகனன்றன் வினோதவாசகத்தின் காங்கயனுயிர் விடக்கணையாம், வருடநீபொழிந்துசமரொழிந்திடுநா ளிரவினின்மாளுதி யென்றான். 441

கந்தனார்தந்தை யறைந்திடமடந்தை யரசரிற்கவின்கொள்பாஞ்சாலன், றந்திடுமகளாய்ச் சனித்தபின்வனத்திற் றனயனும்படிசழல்வீழ்ந் தாள், அந்தரநதிசேய்சரத்தினாற்பரசு ராமனையமரிடைத்தரப்பச், சிந்தையின்மகிழ்வோ டவனியாண்டிளவல் சிறந்தினிதிருக்குநாட்டன்னின்,

வேறு.

அரிவையர்திலகமம்பிகையம்பாலிகை
யிருதனமிசையணைந்தின்பமெய்திய
நிருபர்கோன்சயப்பிணிநீண்டொண்டிட
வெரிகனல்வளர்த்திமுன்னோனிரங்கினன். 443

சிற்றவைதன்னொடுமிரக்கித்தேறிய
கொற்றவன்றனயனைநோக்கிக்கூறுவா
ளிற்றவிக்குருகுலமிறாமனிமனை
முற்றொழிற்சுதர்களையுதவுவாயென்றாள். 444

அனுசர்மாதாவிவையறையவீமென்
வனிதையர்தங்களைமணஞ்செய்யேனென
வுனைமகிழ்தாதைமுனுரைத்தயானினித்
துனியுறவரிவையர்தோளுறேனென்றான். 445

வினையறுவீமென்விளம்பச்சந்தனு
மனைவிநொந்திரங்கியேமறைகடந்திடுந்
தனயனைநினைத்தலுஞ்சமனினான்முக
னெனவினைமுன்னரின்வியாசனெய்தினான். 446

வந்திடும்வியாசனைமகிழ்ந்துநோக்கிநற்
சந்தனுமனைவியென்றனயர்மாண்டனர்
சுந்தரவீமென்றுறவுசேர்ந்தனன்
இந்துவின்குலமறாதருளென்றேசொல்வாள். 447

பாவமில்சந்தனுப்பயந்தமைந்தன்றன்
னாவியேயனையதேவியரையன்புடன்
றேவரநியாயமாய்ச்சேர்ந்துமைந்தரை
நீயளித்தருள்கெனநிகழ்த்தினாளரோ. 448

யோசனைகந்தியாளுரைத்தலோடுமே
யேசின்மாதவனதற்கிசைந்தநெஞ்சனாய்
மாசறுசுரூபமேமலிவிருத்தனா
யாசிலம்பிகைதனையணைத்தங்கேகினான். 449

சந்தனுமனைவிமுன்சார்ந்துமாமுனி
யந்தமிலென்னுருக்கண்டவம்பிகை
முந்தியபயத்தின்வேற்கண்கண்மூடலா
லந்தனாஞ்சிறுவனைப்பெறுவளாமென்றான். 450

அந்தனைப்பெறுவளென்றறிஞன்கூறலுஞ்
சிந்தையினொந்துசந்தனுவின்றேவிதா
ணந்தொளிர்களத்தளம்பாலிகைக்குநன்
மைந்தன்வந்திடவருண்மாதவாவென்றாள். 451

அன்னைநோக்கிம்மொழியறையமாமுனி
மன்னும்பாலிகைநோக்கிமாபயந்
துன்னமெய்வெளுத்திடுமவளைத்தோய்ந்துபின்
றன்னையீன்றவண்முனஞ்சார்ந்துசொல்லுவான். 452

என்னுருக்கொடுமையைநோக்கியேவெழின்
மின்னிடைவெருவிமெய்வெளுத்தசெய்கையாற்
றன்னியபாண்டுவாஞ்சுதனையீனுவா
ளென்னயோசனைகெந்தியியம்புவாளரோ. 453

அந்தனும்பாண்டுமானசேயரைத்
தந்திடிற்பயனிலைச்சமனிலாவெழின்
மைந்தனையம்பிகையுதவமன்னியென்
சிந்தையுளுறுமிடர்தீர்த்தியென்றனள். 454

மாதவனன்னைசொன்மருமலேகவே
யேதமிலம்பிகையேவலாலவ
டாதிவந்தன்புடன்றழுவிக்காமனா
லோதியேயவன்றனையுற்றணைத்தனள். 455

நீதியொன்றியமுனியவளைநீங்கியே
தீதகலன்னைமுன்செப்புவானெனை
யேதமிலம்பிகையிகழ்ந்தங்கேவிய
தாதிநற்குமரனைத்தருவளென்றனன். 456

தாதிநற்குமரனைத்தருவளென்றுயர்
வேதியனாச்சிரமத்தின்மேவவே
நீதிமன்னம்பிகைவயிற்றினீங்கியே
பூதலத்தந்தனும்புதல்வன்றோன்றினான். 457

தீதிலம்பாலிகையென்னுந்தேன்மொழி
சூதகல்பாண்டுவாஞ்சுதனைப்பெற்றன
ளேதமிலம்பிகையில்லினேவல்செய்
தாதிபெற்றிமெகன்சனனஞ்சாற்றுவாம். 458

வேறு.

தீயராஞ்சோரர்சிறந்ததோரரசன்கோயிலிற்றனமெலாந்திருடி
வாயுவின்விசைபோற்பாறிடவறிந்துவளநகர்க்காவலர்தொடரத்
தூயவானவர்கடுதித்திடயோகத்தொழில்செய்மாண்டவ்வியமுனிவ [ர்.
னேயமோடமராச்சிரமத்தினெய்தியே நிதியைவைத்தோடியேமறைந்தா

சோரர்போமடியின்சுவட்டினையறிந்துதொடருவோர்கானிடையேகி
யாருநேரிலாமாண்டவ்வியனிருக்குமாச்சிரமத்தினினிதியை
வீரரானவர்கணோக்கியீண்டெய்துங்கள்வரெங்குளரெனவிளம்பச்
சீருமுனிவன்மௌனமாயிருப்பத்திருடனுமிவனெனப்பிணித்தார்.

சதுர்மறைமுனியென் றறிகிலாவயவர் தனங்கொளுந் திருடனென்
றிவரிப், பதியினிலடைந்தே யரசன்முன் கள்வப் பவன்றனைக் கொணர்ந்
தனமெனலும், விதிவழிதனிலாய்ந் துணர்கிலாநிருபன் வெகுண்டுயர் வ
சியின்வையெனவே, கதுமெனத்தவனை நகரிகாவலர்கள் கழுவினில்வை
த்தனர்களன்றே. 461

வசியுடலுருவவருந்துமாதவன்றனுயிர்விடாதிருந்தவாறறிந்த
வசையிலாமுனிவரனைவருமெய்தியரசநின் புகழ்க்கழிவாகச்
சசிதிகழ்சடையணிகர்தவன் றன்னைத்தரணியிற்கழுவினில்வைத்தாய்
நிசியுறுநிரையத்தழுந்துவாயெனலுநிருபர்கோன் வெருவியேயெழுந்தான்

மறையறிமுனிவர் மறுவின்மாதவனை வசியிடைவைத்தனையெனுஞ்
சொல், லறையமன்னனேங்கிக் கழுமிசையுயர்ந்த வருந்தவன் றனைத்தொ
ழுதிரங்கிப், பிறையணிசடைய னிகர்த்திடுதவவென் பிழைபொறுத்தரு
ளுதியெனலுங், குறைவில்கொற்றவனீ வெருவலையெனக்கு விதிச்செய
லென்றுகூறினனால். 463

விதிவலியெனக்குவெருவலையரசவென் றுதன்விலாப்பக்கத்துருவும்
புதியாகல்வசியினுதியிருந்திடவேபுவியிலார்கழுவினைநறுக்கிச்
சதுமறைமுனிபூங்கூடைதன் னுடலிற்றயங்கியநீள்கொம்புதாங்கக்[தான்
கதுமெனத்துணைக்கை மலர்கொய்துநிறைத்துக் கடவுளைத்தினமரிச்சித்

மறுவிலாவுடலினுறுவசியதனாலானமாண்டவ்வியனென்று
நெறியுறுதவர்கணிகழ்த்திடுமுனிவனிகரிலாமறலிபாலேகி
யெறுழ்வலிப்புயத்தோயான்கழுமீதின் விழுந்திடவிளைத்ததீவினையை
யறையெனவுரைப்பவவன்றனைநோக்கியந்தகன்மொழியலுற்றனனால்.

அறிஞமுற்பிறப்பினறிவிலாதஞ்சுபருவத்தினெறும்புகடன்னைச்
சிறியகோலீர்க்குநுதியினிற்கோர்த்தசெய்கையால்வந்ததென் றுரைப்ப
நெறியுறுமுனிவன்பதினறுவருடநிறைந்திடுங்காறுமண்மிசையிற்
சிறுவர்களிழைத்ததீவினையவர்தந்தைதாய்க்குறுமெனச்செப்பும்.

பூதலமிசையினறிவிலாச்சிறுவனாகியானிழைத்தபுன்மையதாங் [ற்
றீதினையென்னையளித்தவர்க்குறாத்தாதென்றன்மேலிழைத்ததீமையினு
ருதிதன்சுதனாய்ச்சனித்திடுகெனவத்தவன்சபித்திடத்தண்டதரன்பா
ரேதமில்குணத்தம்பிகைமனைச்சேடிவயற்றின்வந்திலங்கினனன்றே.

அம்பிகைசுதனைத்திருதராட்டிரனென்றழைத்தவட்கிளையவண்மகனை
யிம்பரிற்சிறந்தபாண்டுவென்றியம்பியெழிலுறுதாதியாயிலங்கும்
வம்பவிழ்குழலிமதலையைவிதுரனென்றுவீடுமென்குலமைந்தர்க்
கும்பர்கண்மகிழச்சாதகஞ்சவுளமுபநயனமுநடத்தினனால். 468

திருதராட்டிரனைமுடியினைக்கவித்துச்சிறந்திடும்பாண்டுவாமனனைத்
தரணியைக்காக்கவிளவரசாக்கிச்சமனிலாவிதுரன்மந்திரியா

யுரைசெயமறைகளறனெலாந்தழைப்பவுலகினையாளுவித்தனனாற்
பரவைசூழ்புவியின்விசும்பினின்யாருநிகரிலாப்பகீரதிசுதனே. 469

சதுமறைவளரமறையவர்மகிழச்சமனிலம்பாலிகைபயந்த
சுதன்மதியெனவேநிகரிலாக்கவிகைதுலங்கிடவிசும்புறுவிபுதர்
பதியெனவயங்கிவிதுரன்மந்திரியாயிலங்கிநற்படியினையாள
வெதிரில்காந்தாரன்குமரியைவேட்டானெழிலுறுமம்பிகைபுதல்வன்.

வேறு.

யாதவவீரசூரன்கன்னிகைபிரதையென்று
மாதினைக்குந்திபோசன்மகளெனவளர்த்துமண்ணிற்
றீதறக்குந்திதேவியென்றுபேர்சிறந்தாளன்றே
மாதவனவடான்செய்தசெயலினைமறைத்துச்சொல்வான். 471

வேறு.

மாதவரெண்டுருவாசன்வந்துமின்
றீதறப்பஞ்சமத்தேவர்மந்திர
மோதிவித்திடவொன்றைக்குந்தியுன்னவா
னாதவனெய்தியேயவளைச்சேர்ந்ததும். 472

ஆதவன்குந்தியையணைக்கக்கன்னனென்
றோதிடுஞ்சிறுவன்வந்துதையமாகவே
மாதிழிவாமெனச்சுதனைவானதி
மீதொருபேழையினமைத்துவிட்டது. 473

அலரியோன்மைந்தனையளித்துக்கன்னியாய்ப்
பொலனுறவிருத்தியென்றகன்றுபோயதும்
நலனுறுமுனிநவிலாதுகுந்தியை
யிலகியபாண்டுவேட்டனனென்றோதுவான். 474

பின்னரும்பாண்டுமென்பெருமையோங்கிய
மன்னரெண்மத்திரன்பயந்தமத்திரை
யென்னுநாமப்பெணையெதிரிலந்தணர்
சொன்னநான்மறைநெறிதுலங்கவேட்டனன். 475

விழுமியதேவகமனன்விரும்பவே
யழகுறுமிரதிபோலவனைப்புல்லிய
விழிகுலப்பாசவியீன்றமாதுமான்
விழியினுடன்னையேவிதுரன்வேட்டனன். 476

வேறு.

தரணியிற்செங்கோலோச்சியபாண்டுசெமனிலாக்குந்திமத்திரையோ
டரணியவிரதமிசையினினேறியபரிநிரையிவுளிகள்சூழ
வருணமார்கலன்கள்கதிரவனவிரைவழங்கமாவனத்தினிற்சென்றே
யருணமென்குழுவையரிகரிமயிடமாவிதமெல்லவும்வதைத்தான். 477

விரகமுற்றடைந்தசினனவன்மனைவிதன்னுடன்சுரதநூல்விரும்பி
வரைசெறிவனத்தின்மான்கலையாகவணைந்திடமன்னர்கோனறியா
தொருகணைசிலையிற்றொடுத்துறவிடலுமுடலிடைப்பட்டுமெண்வீழ்ந்த
விரலையோடுழையாமுருவினையொருவியிருவருமுனிந்திவையறைவார்.

சாகரஞ்சூழ்ந்த தாணியையாளுந் தலைவநீடடஞ்செறிவனத்தி, னே
மொமிருக வினங்களைவதைப்ப தரசர்க்கணீதியென்றாலும், போகவேளை
யிலின் றெங்களைச்செற்ற புன்மையாற் போந்தரிவையரை, மோகம்விஞ்
சிடவே யணைந்திடின்முடிவா யென்றிவை மொழிந்துயிர்துறந்தார். 479

சதுமறைமுனிவன்மனைவியோடரசைச்சாபமிட்டாருயிர்துறப்ப
விதிசெயலெவர்க்கும்வெலற்கரிதென்றுமெலிந்திடும்பாண்டுவனனத்திப்
பதியினிலிரதம்பரிகரியுடனற்படைஞரையேவியேகிறையு
மதிசிகர்வதனக்குந்திமத்திரையோடிருமாதவஞ்செயப்போனான். 480

இந்துவின்குலத்துப்பாண்டுமென்சென்றேயிந்திரத்துய்ம்மனசரசிற்
செந்திருவனையாரிருவர்களுடனுஞ்சேர்ந்தொருதினமிருந்தப்பான்
மந்தரவரைநேரஞ்சனகூடமலையினின்வைகிச்சின்னாளிற்
சந்திரபதத்தையளவிடும்பிறங்கற்சதக்கொடுமுடியினைச்சார்ந்தான். 481

சிந்தையிற்கதமின்முனிவர்கள்வரலுந்தேவியருடன்மனனிறைஞ்சி
யெந்தமால்வரையினிருந்துநீர்வருதிரெங்ஙனமேகுதிரெனவே
கந்தமாமலரோனுலகினைக்காணக்காவலபோவமென்றறைய
வந்தமாமலையின்மனைவியருடனேயரசர்கோனமர்ந்திடுநாளின். 482

சதுமறைமுனிவர்சரோருகன்பதியைச்சார்வமென்றுரைத்திடப்பாண்டு
மதிவளர்சடையோனிகருமாதவத்தீர்யாங்களும்வருதுமென்றுரைப்பக்
கதமிலாத்தவத்தோர்புரவலசிறுவரிலாதவர்கதிபுகவரிதா
மதனினுற்புதல்வர்தம்மையுண்டாக்கிப்பிதிர்க்கடனகற்றிவாவென்றார்.

மைந்தர்களிலாதார்கதிபுகவரிதென்றறைந்துமாதவர்கடாமேக,நொ
ந்தசிந்தையனுய்க்குந்தியைநோக்கிநுவலுவானென்னையென்மாதாத், தந்
திடுஞ்செயல்போனீயுமோர்தவனையணைத்தொருதனயனைப்பெறுகென்,
றிந்துவின்குலத்தோன் மொழிந்திடமனைவி யிசைகிலாதிவைவிளம்பின
ளால். 484

மன்னயான்கன்னியாயமர்நாளின்மாதவரெண்டுருவாசற்
கன்னம்யானுகர்வித்திடவவன்மகிழ்ந்தேயருளியமந்திரந்தன்னு
ளுன்னியதேவரெய்தினன்மகவையுதவுவாராதலினரச [தாள்.
வென்னையுன்சிந்தைக்குவந்ததேவதையையுள்கெனவியம்புகென்றுரைத்

மைந்தனைத்தரவுன்மனத்தினுக்குவந்ததேவதையுரையெனமன்ன
னந்தமாறனையழைத்தியென்றுரைப்பவருந்தவனருளுமந்திரத்தைக்
குந்திசிந்தையினினினைக்கவேதருமதேவதைகுறுகிவந்தணைப்பக்
கந்தனைநிகராயுதிட்டிரன்றன்னைப்பயந்தனள்பாண்டுமென்களிப்ப. 486

குந்திநன்மகவைப்பயந்திடவிதனைக்கொற்றவனொருதவத்தினினைத்
தந்தையாங்கங்கைசுதன்முனோனனுசன்றுயர்கடாதைதனன்னை
சிந்தைகள்களிப்பவறையெனமுனிவன்சிறந்தவத்தினாபுரிசேர்ந்தே
யந்தன்முன்மொழியவனைவருமேமவளக்கருற்றமிழ்ந்திடும்வேலை. 487

அந்தமன்விரும்பியணைத்திடக்கருப்பமாலிலையுதாத்திற்றுங்கிச்
சிந்தையின்மகிழ்வோடிலங்குகாந்தாரிசிறந்திடுங்குந்திமாவனத்தின்
மைந்தனைப்பயந்தாளென்றவாசகத்தால்வயிற்றினிற்கற்கொடுமோத
கொந்திடுங்கருப்பார்மிசையினில்விழலுநோக்கினார்வீடுமற்குரைத்தார்.

வீடுமன்றிருதராட்டிரன்விதுரன்முதலினோர்விதிவலிதென்றே
வாடியென்செய்வமென்னுமுன்வியாசன்வந்துபார்மிசையுறவிழுந்த
பீடுடைக்கருவைநூறுகும்பத்திற்பிறிவுசெய்தடைத்ததற்பின்னர்ச்
சேடமேபுவியிற்சிதறினசினையைத்திரட்டியோர்கலசத்தின்வைத்தான்.

மாதவன்சதகும்பத்தினிலடைக்கவளர்கருவொருதினங்கழிய
வேதமில்சிறுவனாகவிவ்வழியினீரைம்பதாகியதினத்திற்
பூதலமிசையின்புதல்வர்நூற்றுவர்கள்வயங்கநற்பொற்கலசத்தின் [ன்றே
கோதிலாவனிதை யொருத்திதோன்றிடவே குருட்டுமென்மொழிந்தனன

அந்தமன்முந்துங் குமரனுக்கிசையச் சுயோதனனெனப்பெயரறைந்து, மைந்தர்தொண்ணூற்றோடொன்பதின்மருக்குமவர்க்குறுநாமத்தை வகுத்து, விந்தையைநிகர்க்கு மணங்கனுடன்னைத் துச்சனையாமெனவிதித்துச், சிந்தையின்மகிழ்வோ டிருக்கநற்றவன்போய்ப் பாண்டுவுக்கிவைகள்செப்பினனால். 491

தீயகாந்தாரிவிளைத்திடுஞ்செயலைத்திருந்தியமுனிசொலக்கேட்டுத்
தூயநற்பாண்டுமெலிந்துதிட்டிரனுக்கனுசனாமாத்திரனோன்றோன்ற
நேயமாய்வயங்குங்குந்தியைப்பவனன்றனையழையென்னமின்னினைக்க
வாயுவந்தவளையணைத்திடச்சனித்தான்வலியுடைவீமனாமதலை. 492

சரியிலாப்பாண்டுசெமனிலாவுபயதனயர்கள்வளர்ந்திடமகிழ்வா
லரிவையர்மதிக்குங்குந்தியைநோக்கியழகுறுசிறுவனைப்பெறுவான்
சுரர்பதிதனையேயழைத்தியென்றுரைப்பத்தூயவணினைக்குமுன்வலாரி
தரைமிசையடைந்தேயவடனையணைக்கத்தனஞ்சயன்சனித்தனனன்றே

உத்தமப்பாண்டுவிளம்பிடக்குந்தியுயர்தவன்விளம்புமந்திரத்தை [க்
மத்திரைக்குரைப்பமன்னன்வானவர்கள் வயித்தியர்தமையழையென்ன
குத்திரமிலாதாளந்தமந்திரத்தாலுள்கவவ்விருவருங்குறுகி
நத்துறுகரத்தினவடனையணைக்கநகுலசாதேவர்கள்சனித்தார். 494

நீதகல்பாண்டுசிறுவரைவரையுஞ்சிறந்திடுமந்தணர்மொழியாற்
சாதகஞ்சவுளமுடித்துபநயனஞ்செய்துசாத்திரமறையெல்லா
மோதுவித்துயருங்குந்திமத்திரையோடுவெந்தந்தப்பிறங்கலுற்றமரு
மாதவர்மொழியும்புராணமெய்ப்பொருளைமகிழ்வுடன்கேட்டுணர்நாளின்.

வேறு.

தருமனுட்சனிவாரத்திற்சார்ந்திடக்குந்திதேவி
யருமறையவர்க்குத்தானஞ்செய்யவோராற்றின்கூலத்
தருவுடைச்சிறவரோடுமுறைந்திடப்பாண்டுவேந்தன்
மருவமர்குழலியானமத்திரைதனிப்பக்கண்டான். 496

அத்திரவிழியளல்வினளகத்தாளாம்பல்வாயா
ளித்திலநகையளத்தின்கழுத்தினணிசரிலாத
வித்தருமதத்தின்மெய்யண்மின்னெனுமிடையளாய
மத்திரைசவிலைநோக்கிமன்னவன்விரகமுற்றான். 497

விரகமுற்றெழுந்தமன்னன்விரைகொண்மத்திரையைப்பற்றிச்
சுரதநூல்விளக்கவெண்ணித்தொடரவேதனிகொடஞ்சி
ளரிவைகோவிணைநீசோரவன்னம்போற்பாறியாண்டோர்
வரையருகாசப்பூகாவனத்திறுண்மறைந்தாளன்றே. 498

ஒவியமுயிர்பெற்றேருங்குந்தன்மைபோலொளிகொணங்கை
யாவியும்பதைப்பப்பாறிமறைதலுமரசர்கோமான்
றேவியைத்தொடர்ந்துமாலின்சிகியுறமாள்வதெண்ணான்
காவினின்மறைந்துநின்றகாரிகைதன்னைக்கண்டான். 499

பங்கயத்தாளினூலின்மருங்கினிற்பகட்டின்கோடாங்
கொங்கையிற்குமுதவாயிற்குனிசிலைப்புருவந்தன்னிற்
செங்கயற்கண்ணிமாலின்சிகியுறச்செய்வதோரான்
மங்கையைப்பற்றினான்மன்மறலியுக்குறுகமாதோ. 500

இக்கிரதச்சொன்மங்கையிசைகிலாதுடன்படாளை
நக்கினமாக்வாடைபமித்துநற்குழலைப்பற்றிக்
குக்கிடம்பேட்டைவன்பாற்புணர்வதோர்கொள்கைபோன்று
விக்கிரமத்தின்மன்னனணைத்துயிர்விட்டானிப்பால். 501

தனயர்கள்சூழக்குந்திதானங்கள்செய்துவந்து
மனைதனின்மருணனோடுமத்திரைதன்னைக்காணு
டுனியொடுசுதர்களோடுஞ்சோலையினெய்தித்தங்கை
தனியிருந்தாற்றப்பாண்டுமாண்டிடுந்தன்மைகண்டாள். 502

மருணன்மாண்டிடவேகுந்திவயிற்றினிலெற்றிவீழ
மிகவுமெய்ந்நடுங்கிமைந்தரைவருமரற்றியேம்பச்
சுகனிகர்முனிவரெய்தித்தூயவர்தம்மைத்தேற்றி
யிகழ்விலாபபாண்டுதன்னையீமத்தினிடுவித்தாரால். 503

சதுமறைமொழியின்மன்னைத்தழலிடைவளர்த்தலோடுஞ்
சுவைதகிர்மொழியளாயமத்திரைசுதர்கடம்மை
மதிநிகர்வதனியானகுந்திகைக்கொடுத்துமான்றன்
பதியுடனனலின்வீழ்ந்தாள்பார்த்தவரிரங்கியேங்க. 504

அனலிடையெரிந்ததக்கைதாயினுக்கறன்றன்மைந்தன்
வினையறுமறைநயோர்வேதம்விளம்பிடத்திலநீர்விட்டே
துனியுறுகுந்திபாதந்தொழுதபின்னோர்கள்சூழ
வனைதவரெல்லாம்போதவத்தினபுரியிற்சேர்ந்தான். 505

வேறு.

அன்னையோடைவருமெய்தியந்தமன்
முன்னரின்வணங்கலுமுனிவர்வேந்தரின்
பின்னவன்மத்திரன்பெண்ணினாளுடன்
மன்னியேயணைந்துமாண்டனனென்றோதினார். 506

பின்னவனிறந்தனனென்றபேச்சினான்
முன்னவனிரங்கமூதாதையானவன்
றன்னிருவிழியினீர்தரையினோடவே
வன்னியின்மெழுகெனவாடினாரரோ. 507

விதுரன்முன்னவன்மடிந்தமைவிளம்பிடக்
கதுமெனப்படிமிசைவிழுந்துகண்ணினீர்
நதியெனப்பெருகவேநலன்கொள்குந்திதன்
சுதர்களைத்தழுவியேதுன்பமுற்றனன். 508

குந்தியுடனவள்சுதரைக்கண்டுநெஞ்சங்
கொதித்துவஞ்சக்காந்தாரிதழுவலோடு
மந்தன்மகனைவரைக்கண்டழலுநெஞ்ச
னணைத்திடவேயம்பிகைதானருளுமைந்த
னிந்துவண்ணனனுசன்மகிழ்சிறுவரைவ
ரின்னல்புரிசுயோதனனோடிளையோரெல்லா
மந்தணரின்மிக்கதுரோணன்றன்பாலி
னாயுதங்கள்பயின்றிடவேயமைத்தானன்றே. 509

குந்திசுதருடனந்தன்மைந்தரெல்லாங்
குழுமியேயாயுதங்கள்பயிலுநாளின்
சிந்தையினிற்சினமலிகாந்தாரிமங்கை
சிறந்ததொருகலத்திலன்னநிறைப்பவீமன்
வந்திருந்தங்கருந்துகின்றநயனமில்லான்
மகிழ்சிறுவர்நூற்றுவர்தம்வலக்கையெல்லா
நொந்திடவேயிடக்கரத்திற்பற்றிச்சோற்றை
நுகர்ந்திடலுநோக்கியவருளைந்தாரன்றே. 510

பின்னருமோர்தினத்தினினூற்றைவரெய்திப்
பெருந்தடநீர்குடைந்திடவேவாயுமைந்தன்
பன்னககேதனனையவனனுசர்தம்மைப்
பற்றியப்பானவிடைப்படுக்கத்தன்மன்

பின்னவனை வைதுவிவெிக்கவாவி
பெற்றவர்கண்மிகவெருவிமனையினெய்தி
யன்னையுடனிகழ்ந்தவெல்லாமறையக்கேட்டே
யவன்வீமன்றனைவதையுமென்றானன்றே. 511

தாய்சினத்தினிவைமொழியச்சுயோதனன்றன்
றம்பியரோடைவருடன்சிரமஞ்செய்து
தூயமலருய்யானத்திருக்கவாங்கே
துயில்வீமன்கந்தரத்தினரவைக்கட்ட
வாயினுமிழ்விடமுறவேகடித்தலோடும்
வளையெயிறுமுறிந்திடவங்குணர்ந்துவாயு
சேயதனின்வாறுதியைப்பற்றியெற்றச்
சிரந்துணியவுடல்சிதறிமடிந்ததன்றே. 512

விடவரவுசிரந்துணிந்துமடியக்கண்டு
வியாளகேதனன்சினத்தினொருநாட்டோய
மடுவினிடையயத்திறுவேளமறையவைந்து
வசிபதிப்பமாலரியாயதனின்வைகக்
கொடியசதப்பெயரினர்களதனைத்தப்பிக்
குப்புறவேயவிகளலையாமனிற்பக்
கடிதினுயர்வீமனயர்ந்தியோங்குங்
கழுக்கடமைப்பறித்தெறிந்தான்கரையின்மாதோ. 513

பன்னகேதனனயத்திற்கழுவையெல்லாம்
பறித்தெறியும்பவனன்சுதன்விறலைநோக்கி
யொன்னலர்கணம்மையெல்லாம்வதைக்கநாட்டுங்
கழுக்களைநீபறித்தெறியவுய்ந்தோமென்று
சொன்னவன்றன்விடச்சோற்றையைவர்க்கீயத்
தூயவர்களுகர்வேலைநிகரின்மாய
னின்னவிலாவேதியனுய்வேண்டவன்ன
மீயவிடமறநோக்கியேகினுனல். 514

விடமுறுசோறருந்தியைவருயிர்விடாமல்
விளங்குசெயல்கண்டுசுயோதனன்விண்ணேங்குங்
கடிகொண்மலர்ச்சோலையினிலைவரெய்திக்
கண்டுயிலக்காலாசன்சுதனைப்பற்றி
யிடலுடனேயெடுத்தகன்றபாதாளத்தின்
விழவெறியவீமனுடல்சிதையாமுன்னம்
படமிசையினேற்றவனைப்பாதாளத்திற்
பையவிருத்தினன்பரவைமத்தார்பாசன். 515

வாசுகிதன்படமிசையினேற்றுவாயு
மதலையுடனேகாமற்பையவைத்தே

யேசிலிரசாயனநற்குடங்கள்பத்தங்
கீந்திடலுமவைபருகியெதிரிலாத
வாசுகமன்னருள்குமரனயுதயானைப்
பலத்தினுடனத்தினமாபுரியையெய்தி
மாசுறவாண்டிராங்குகின்றவன்னைமுன்னோன்
மகிழ்ந்திடவேவணங்கியிவையுரைத்தான்மாதோ. 516

அந்தனருள்புதல்வர்செய்ததீமையெல்லா
மறையமெலிந்தன்னைதன்மனணைக்கப்பின்னோர்
வந்தடியின்வீழ்ந்திரங்கக்கங்கைதந்த
மைந்தனயனங்களிலான்விதுரன்மாசி
லந்தணரங்கிவரடியினிறைஞ்சியோங்கு
மாசுகன்சேயரியெனவேயமருநாளிற்
சிந்துபதிக்கெழிலுறுதுச்சளையையீந்து
சிந்தைமகிழ்சுயோதனன்றான்சிறந்தானன்றே. 517

தங்கைமணவாளன்மிகவன்பாய்ச்சேரச்
சகுனியெனுமாதுலனும்வந்துசாரக்
கங்கைதனின்மிதந்துவரும்பேழைதன்னுட்
கண்டுவளர்த்திடுஞ்சூதன்சுதனுங்கன்னன்
பங்கமிலாத்தவர்களெனும்பரசுராமன்
பலபடையும்பயிற்றுவிக்கவவனையோவிச்
சிங்கமெனவந்தவனைச்சகாவாய்க்கொண்டு
சிறந்ததுரியோதனன்றான்மகிழுநாளின். 518

பூதலத்திலுயர்ந்திடுபாஞ்சாலராசன்
புதல்வர்பெறப்புலனடக்கித்தவஞ்செய்வேலை
மாதுபங்கனெய்தியொருசுதனையீந்தே
னென்றுமறைந்திடமன்னனகரியெய்தத்
தீதகலுமவன்றேவிசிறிதுநாளிற்சிறந்ததொருபெண்
சிசுவைப்பெறவேநோக்கிக்
கோதிலுமைநாயகன்சொற்குன்றாதென்று
குமரனெனவளர்த்தனனுங்கொற்றவேந்தன். 519

சாதகஞ்செய்துயர்சிகண்டியெனும்பேரோதிச்
சவுளமுபநயனமறையோர்கள்சாற்றும்
வேதமொழிவிதிப்படியின்முடித்தபின்னர்
வின்முதலாயுதங்கள்பயிற்றுவித்துவீரம்
பூதலமெண்டசாருணமன்றனயடன்னைப்
புதல்வனெனவேவளருமரிவைவேட்க
வாதரவின்முடிகவித்துப்பாரையாள்வித்
தரசனெனும்பாஞ்சாலனமருநாளின். 520

அந்தமிக்கபாஞ்சாலன்பெறவேயோங்கு
மரிவைதனக்கேமனைவியானமங்கை
தந்தைநகரெய்தியிடச்சிறிதுநாளின்
ருதையவண்முகநோக்கிச்சாற்றுவாளி
விந்தையெனுமொழியுடையாய்கொழுநன்றன்பான்
மேவெனுமவணைகைத்துவிறற்பாஞ்சாலன்
மைந்தனெனவளர்த்தபெண்ணுக்கென்னையீந்தாய்
மனைவாழ்க்கைநன்றெனவேமொழிந்தாண்மாதே. 521

காவிவிழிமாதிவைகள்கழறலோடுங்
கடுவெனவேமுனிந்தவளைத்தந்ததாதை
பாவமுறுபாஞ்சாலமன்னவன்றன்
பாவைதனைக்குமரனெனப்பாவித்தேயென்
னுவிசிகர்குமரிதனைவேட்பித்தானென்
றடுசினத்தினுனைபரியிரதஞ்சூழத்
தேவர்பதியெனத்தேரின்வயங்கித்தோன்றி
சிறந்ததுரோபதனகரைவளைத்தானன்றே. 522

மைந்தனெனத்தான்வளர்க்குமாதுக்கென்றன்
மகளைமணஞ்செய்வித்தமன்னன்சென்னி
சிந்துவினில்விழக்கணையாலறுப்பனென்று
சேர்ந்திடவச்சொற்கேட்டுச்சிகண்டியென்பா
டந்தையென்னல்வருந்துமதோவென்றுகானிற்
சார்ந்துபெருங்கூவலிற்றான்வீழும்போழ்தி
னந்தமிகுதாணனெனுமியக்கனெய்தி
யரிவைதனைத்தடுத்திவைகளறைந்தான்மாதோ. 523

கோதகலுங்கொடியிடையாய்பழுவத்திந்தக்
கூவலினீவீழ்கருமங்கூறென்றோதப்
பூதலமெண்பாஞ்சாலன்மகளாமென்னைப்
புதல்வனெனத்தசாருணமன்மகளைவேட்பித்
தாதரவால்வளர்த்திடவச்செய்திகேட்டங்
கவடந்தையமர்பொரவேவந்தானந்த
வேதமறவுயிரைவிடவெண்ணினேனென்
றியம்பியிடவியக்கனிவைபகர்ந்தானன்றே. 524

பூவினுறைதிருவெனவேவயங்குநங்காய்
புருடலிங்கங்கோடியுன்றனுருவைக்கொண்டு
பாவையெனவிவ்வனத்தினிருப்பனீபோய்ப்
பதியணுகியுனைமாதென்றெள்குமுன்றன்
றேவிதனையனுபவித்தோர்திங்கடன்னிற்
சேர்ந்தெனக்கென்னுருவைத்தருதியென்ன

வோவியங்கள்பழுதுறவேயொளிரும்வேளை
யொத்தேகிச்சிகண்டிதந்தைக்கிவைகள்சொன்னான். 525

தெரிவையுருவொழிந்துமகனாகிவந்த
சிகண்டிதனையமர்பொரவேசினத்துவந்த
நிருபன்முனரிரதமொடுவிடுத்தலோடு
நிகரிலவன்றனைநோக்கிநெஞ்சினேயம்
பெருகிடநற்பாஞ்சாலன்றன்பாலெய்தி
பிரியவசனங்கள்சொலிமருகனோடும்
பொருகரிமாச்சில்லியந்தேர்விருதர்சூழப்
புரியினுளோர்மகிழ்ந்திடப்பொற்கோயில்சேர்ந்தான். 526

மருவுறவேமங்கையெனைவேட்டாளென்று
மனங்கருகியுழல்கின்றமாதுகாத
னிறையவெழிலுறவொளிகொள்கொழுநன்றன்னை
நித்திலப்பந்தரின்பூவினணைமேற்சேர்ந்து
வெரிகமழமதனசாத்திரதினோங்கு
வெற்பெனவேபணைத்தமுலையவன்றன்மார்பி
னுறவணைத்துமனமகிழுந்தையறன்னோ
டெற்றனனாற்சிகண்டிதந்தையுறையுமூரின். 527

மனைவிதனையில்வைத்தோர்திங்களேக
மனமெலிந்துசிகண்டியந்தப்பதியையோவித்
துனியுறமுன்னமர்வனத்தினேகும்போழ்திற்
றோகையெனவயக்கியிடுந்தூணன்முன்னர்த்
தனபதிவந்தவனெழில்சான்மடந்தையான
சதுரனைக்கண்டிவ்வுருவுதவிர்ந்தானவை
வினையகலுபாஞ்சாலமைந்தன்போரின்
வீந்திடுநாளெனவிளம்பியகன்றனன்றே. 528

தனபதியிவ்வுரையறையக்கேட்டுநொந்த
சரியிலாவியக்கனெய்துஞ்சிகண்டிதன்னை
யுனைவிரும்புமனைவிதன்பாலிவ்வேடத்தோ
டெற்றணைதிபோதியெனவுரைத்தலோடும்
வனிதையிடப்பாகனருள்வரத்தினாலே
மங்கையுருத்தவிர்ந்தானாய்மகிழ்ந்தேயேகித்
தனையுதவுந்துரோபதனுக்கிவைகளெல்லாஞ்
சாற்றிடவேயவனுரத்திற்றழுவிக்கொண்டான். 529

மகண்மகனாயெழிலுறவேமகிழ்பாஞ்சாலன்
மன்னனொடுவிரோதமுறுதுரோணன்விஞ்சு
மிகல்புரிந்துதுரோபதனைப்பிணித்தென்முன்ன
ரெய்திடுவீரியருளரோவென்றுகூறப்

பகலவன்சேய்சகுனிசிந்துபதியெண்ணில்லாப்
படைஞரொடுபன்னககேதனன்றனோடு
நிகரறவாழ்சிகண்டிதந்தைவிடுநீளம்பா
ணிருபர்திரண்மடிந்திடவேபாறினால். 530

சீறியெழுதுரோபதன்றன்சிலையாற்பெய்யுஞ்
சிலீமுகத்திற்சினக்கரிமாத்தேர்கண்மாள
வீறடங்கிச்சகுனிகன்னன்சிந்துநாடன்
வியாளகேதனனிவர்கள்வெருவிமண்ணிற்
பாறிவருஞ்செயனோக்கிநேர்ந்தவாசான்
பதம்பணிந்துபாஞ்சாலனனிகமெல்லா
நூறியவன்றனைப்பிணித்துவருவனென்றே
நுவன்றுவிசயன்றேர்மேனொய்திற்சென்றான். 531

சுரர்பதிதன்சுதனெய்தித்துரோபதன்றன்
றூரககிரைபோதகங்கள்சூரரெல்லாந்
தரையினுடறுணிந்துவிழச்சிரம்வானேகத்
தரங்கமுறுகுருதிநதியெனவேபாற
வெரியுமிழ்சாயகம்விடுத்தேயிரதம்பாய்மா
விலையில்சிலைதுணித்தவன்றன்புயத்தைவீக்கி
விரைவினிற்சென்றாசான்முன்வைத்தலோடும்
விசயனைத்தன்மெய்யிறுகத்தழுவினனால். 532

விசயனைச்சேர்வுறத்தழுவித்துதித்தபின்னர்
விழுமியநற்பாஞ்சலன்றன்னைநோக்கித்
திசையினுறுதேவர்களுமமரிலென்றன்
சிலீமுகத்துக்கஞ்சுவரென்றுரைத்துநீதான்
வசையுறவேதனஞ்சயனாற்பிணிப்புண்டாயென்
றவன்வளநாட்டிற்பாதிவலுவின்வாங்கி
யுசனனிகர்துரோணனகைத்தேசென்றோத
வுளமெலிந்துதுரோபதன்மாவனத்திற்சென்றான். 533

கந்தமுறுங்காந்தாரத்தடைந்துமன்னன்
காலுணவாய்க்கனல்வளையத்தவஞ்செய்காலை
யிந்துசேகரன்றோன்றியரசயான்றா
னீயுநலனியம்பெனமன்னிலேகர்கோமான்
மைந்தனேனும்விசயனுக்குத்தேவியாக
வடிவுடையவொருமகளுந்துரோணனன
வத்தணனைவதைக்கவொருமகனுநல்கென்
றறையவரம்பெறுதியெனக்கயிலைசேர்ந்தான். 534

கந்தர்தந்தையிவைகழறக்கேட்டுமன்னன்
களிப்புடனேதன்னகரமெய்திப்பின்னர்ச்

சந்தமுறத்தான்வளர்க்கும்வேள்வியின்கட்
டழலிடையின்சங்கரன்றன்னருளினாலே
செந்திருவைநிகர்த்ததுரோபதையுந்துட்டத்
துய்ம்மனெனும்பேருடையசிறுவன்றானும்
வந்திடவேமறையவர்களாசிகூறி
வானவர்கண்மலர்மழைகள்பொழிந்தாரன்றே. 535

அரனருளால்வேள்வியுறுமழலின்வந்த
வரிவளையையுஞ்சிறுவனையுமன்பினாலே
திருபனெனும்பாஞ்சாலன்வளர்த்துநீதி
நெறிநிறையவினிதிருந்தானிப்பாலந்தப்
புரவலன்செய்தனைவென்றதுரோபதன்றன்
புயம்பிணித்ததனஞ்செயன்றன்விறலையுன்னி
யெரிசினத்தாலவரைப்புள்ளுவத்திற்கொல்ல
வெண்ணிமறச்சகுனியுடனிவைசெய்தானால். 536

அரக்கினாறுமனையிடத்துவாரணாசி
தனிலவரன்னையொடுந்தாதைசொல்லாற்
பொருக்கெனப்போயமர்நாளினயமில்லான்
புதல்வன்விடுமறையவன்போய்ச்செபிக்கவங்கி
பெருக்கவிதுரன்னமைத்ததறியைப்பேர்த்துப்
பிலவழியிலவரையுஞ்சுமந்துவீம
னருக்கனெழுமுனமெய்தியிடும்பன்றன்னை
வதைத்தவன்றனிளையாடோளணைந்தானன்றே. 537

வாயுசுதன்கமலவல்லிகொங்கையென்று
மலைகுழையவணைத்திடவோராண்டிலந்த
வாயிழையாள்கடோற்கசனைப்பெறவிட்டேகி
யந்தணர்கடுயரகலப்பகனைச்செற்றுத்
தூயதுருபதனகரியெய்திப்பார்த்தன்
றுலங்கவில்லைவளைத்துயர்மீன்கணையாலெய்ய
மாயன்மகிழ்ந்தருளவிறற்பாஞ்சாலன்றன்
மகளையெழிற்பாண்டவர்கண்மணந்தாரன்றே. 538

குந்தியுடனைவர்களுங்குருடன்வைகுங்
கொடிநிறையுநகரதனிலெய்திமூத்த
தந்தையருளமரர்பதிப்பிரத்தத்தெய்தித்
தருமனாயரிராசசூயத்தைச்செய்ய
வந்தன்மகன்சூதையுறவிதுரன்றன்னா
லழைத்துவஞ்சச்சூதாடிவெல்லவைவ
ரிந்தவனத்தெய்தினர்களென்றுதூய
வியாசமுனியியம்பிடக்காசிபன்றான்கேட்டான். 539

குருகுல மரபுப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 2842.

III - வது, தட்சகப் படலம்.

காருருவவாமனனாமறையோனாகிக்
கவினுறுமாவலியருண்மூவடியினீரும்
பாரினையோர்பதத்தகங்களுள்ளிலேசான்
படிந்திடவேயளந்துநிகழொருதாள்வீசித்
தாரகணமமருமிடமயனூரெல்லாந்
தாழ்ந்திடவானண்டமுகடளவாய்நீட்டிச்
சீருறவாண்டளந்தருளுந்தேவதேவன்
றிருவடியைத்துதித்திறைஞ்சவம்மின்றொண்டீர். 1

ஏகலும்பராசரன்றன்மதலைவிஞ்சு
மிந்துகுலத்தரசர்திறமெல்லாமோதக்
காசிபமாமுனிவியந்துகேட்டுப்பாண்டு
காளையரைநோக்கிமறையாசிகூற
மாசகலுந்தருமனந்தமுனியையன்பால்
வணங்கியபின்வியாசனடிபணிந்துநின்றே
யாசுமலிசுயோதனன்செய்வஞ்சந்தன்னா
லடருமிடரொருவும்வகையருடியென்றான். 2

வேறு.

தூயமாமுனிவன்பாண்டுசுதர்களின்மூத்தோன்சொல்ல
நேயமோடவர்தந்நெஞ்சுறுமிடரைநீக்கித்
தீயரானவர்கண்மாளத்தக்கன்செய்மகத்தைச்செற்ற
நாயகன்றன்னைக்காணினற்கதியீவனென்றான். 3

நிகரிலாமுனிவன்கூறநெறியுறுதருமன்சொல்வான்
புகரிபவுரியைப்போர்த்தான்பொறையிலாத்தக்கன்செய்யு
மகமறச்சிதைத்ததெல்லாமலரயனிகர்க்குமையா
புகலுதியெனலும்வஞ்சப்புலன்களைந்திடுவோன்கூறும். 4

வேறு.

சீருறவயங்குந்தசநவப்பிரசாபதிகளுக்கதிகதக்கனுக்குப்
பாரியாயினசுந்தரப்பிரசூதிபயந்திடுபெண்கள்சோடசரி
லேருறுந்தருமதேவதைதனக்கீராறுடனொன்றுகூடியநற்
காரிகையாரையுதவியக்கினிக்குக்கவினுறவொருத்தியைக்கொடுத்தான்.

பின்னிடைச்சுவதையைப்பிதவுக்குநல்கிவிடையவன்றனக்குநற்சதியை
வன்னியினனெய்வழங்கியேயளிப்பமருவலோன்வடிவுடைப்பாரி
தன்னுடன்மகிழ்ந்தாண்டமர்ந்திடுதினத்திற்சத்திரயாகத்தைமறைநூல்
மன்னுமாமுனிவருறத்தசப்பிரசாபதியர்தாநடத்தினர்மாதோ. 6

சத்திரயாகநடத்துமவ்விடத்திற்சதுமுகன் சங்கரனதி [ன்வாய்
புத்திரன்புத்தேள் பொறையுடைமுனிவர் போந்தமர்ந்திருக்குமெல்லையி
னித்திலநகையாள்சதியினைப்பயந்தநிகரிலாத்தக்கனுண்டெறலு
மதியிற்றுயில்வோன்சிறுவனுமானுமலாதவரெழுந்தடிபணிந்தார். 7

பிரமனைப்பரிவாற்றக்கனும்பணிந்தபின்றருகப்பிரான்றனைமுனிந்தங்
கெரிவிழநோக்கியிமையவர்முனிவர்வியம்புவான்யான்பயந்தளித்த [சான்
வரிவையையைவேட்டென்மருகனுமிவன்றூ னெதிரெழுந்தடிமிசையிறைஞ்
பிரியநல்வசனமுரைத்திலனென்றுபின்னரும்பேசலுற்றனனால். 8

இவனெனைப்பணியாதிருந்தனனென்னும் விரோதத்தாலிலாததிங்கிவம்
னவனியினசுசியாகவெஞ்சுடுகாட்டலகையோடமர்வதுமன்றி [பே
நவைமலிந்திடுமுன்மத்தருக்கினியனுருவான்றனக்குநான்முகனுந் [ல்.
தவனருளிடவென்மகளையுங்கொடுத்தேன் சூத்திரர்க்கறைசதுமறைபோ.

கதமுறவிவையையுரைத்திடுதக்சன் கங்கையார்வேணியன்றனக்குச்
சதுமறைமொழிசூழ்மகத்தினிற்பாகந்தவிருகவென்ச்சபித்தேக
விதியுமஞ்சிடமாநந்திவெஞ்சனல்கண்ணிடைந்திடவேள்வியின்மறையை
யுதவுமாதவரைச்சினத்தினுநோக்கியுருமெனவிவையுரைத்தனனால். 10

அரனைநிந்தித்தன்றிகழ்ந்ததக்கனைத்தான்முனிந்திடாவந்தணர்நீயிர்
சுருதிநூற்கருமநடத்தியுஞ்சனனப்பரவையிற்சூழ்குவதன்றிப்
பரகதியுறவேவயங்குதத்துவத்தின்பயனிலையதறிகிலராகி
யருமறையறிந்துயாசகராகியடைகுதிரெனச்சபித்தனனால். 11

மறையவர்திரளைமுனிந்திவையுரைத்தநந்திதக்கன்சிரமாறி
வெறிமுகமுறுகவெனச்சபித்திடலும்விதியினைநிகர்த்திடும்பிருகு
கறைமிடற்றான்றன்னடியரானவர்கள்கதமுறவேரியைப்பருகி [தான்.
நிறையநீறணிந்திலிங்க மார்க்கசாத்திரத்தி னெறியினிலுறுகெனச்சபித்

பிருகுமாமுனிவனிவையுரைத்திடலுந்நகைத்தரன்பிறங்கியாக
மருமறையதனான்முடிந்ததற்பினரினமரர்கடுதித்திடக்கயிலை
வரையிடையுறவாண்டமர்ந்திடுதினத்தின்மகத்தினைத்தக்கனுநடத்த
வரியரனிவர்களலாதுலகத்தினனைவருமவ்விடத்தடைந்தார். 13

தந்தையாகியதக்கன்மகந்தனக்குச்சரியிலாவுயர்சதிதேவி
யிந்துசேகரனையிறைஞ்சியென்கொழுநவிருவருமேகுவமெனலு
நிந்தையன்றுரைத்தோனிடத்திலெய்திலன்யாணிகரிலாநீயவனுறிற்
சிந்தையிற்கலக்கமுறவுனையிகழ்வனென்றரன்பின்னருஞ்செப்பும். 14

அணங்குகேள்பத்துவிரிஞ்சர்மாமகத்தினன்றெனைத்தக்கனுந்தன்னை
வணங்கிலனெனவன்றிகழ்ந்தனன்றிருவாழ்மார்பகத்தச்சுதன்கமல
மிணங்குதாடொழுவதன்றியேபிறரையிறைஞ்சுமோவெண்சிரமதனுற்[ன்
கணங்கொண்மாதவரோடவன்புரிவேள்வி காணயான்வருகிலேனென்று

அரனிவைமொழிந்துவருகிலேனெனலுமரிவைகண்சிவந்துநீர்ததும்பப்
பருவரன்மிகுத்துக்கணவனைமுனிந்துபயந்திடுந்தாதைமேற்பரிவால்

விரைவினிற்றலைவனடக்கிடவிடையோன்மிகநகைத்தவிருநகலன்ன
டெரிவைமெய்க்கணிந்துபயிரவர்குழச்சிவிகைமேல்விடுத்தனனம்மா. 16
சிவிகையினடைந்துபுவியினையடைந்தசுரிமெயின்மயிர்சிலிர்த்துறநீ
ளவனியிற்குசையாய்ப்பிறந்திடுகெனத்தினருமறைவேள்வியைநடத்து
முவலைமயிருதைதனைப்பணிந்தனையையவணங்கிடவவரிகழ்ந்தொன்று
நவிலுதலிலாதாண்டிருப்பிடங்கொடாமலிருந்திடநற்சதிமுனிந்தாள். 17
அன்றியிம்மகத்தினுருத்திரபாகமளித்திடாதிருந்ததுநோக்கிக்
கன்றியசதியென்கணவனையிகழ்ந்தோன்மகளெனவெனைக்கழறுமற்
பொன்றுவன்சனனமெடுக்கினும்புராரிமனைவியாய்ப்போதுவனென்று
மன்றலங்குழலாள்யோகவக்கினியைவளர்த்துடலெரிந்திடமாண்டாள். ()
சுரார்த்திடவேயோகவக்கினியாற்சுந்தரியிறந்திடநோக்காக்
கருணையற்றிடுதக்கனைவருகதத்தாற்பயிரவர்களைந்திடவடர
வருமறைநெறியிற்செயுமகத்தனவிணுருதியவன்விடவெழுந்த
சரிபிலாரிபுக்களுருத்தெதிர்ந்திடலுஞ்சங்கரன்படைஞர்வென்னிட்டார்.
மகமுறுமனவினைமுந்திடுரிபுக்கள்வரப்பயிரவரிடைந்திடலுஞ்
சகிகரிலாதசதியிறந்திடுஞ்சொன்னெறியுநாரதன்குர
நகமிலைசயிலக்குமரனுடன்விளம்பநயனம்வெங்கனலுறவாயிற்
புகையுறச்சிரசின்சடையினைப்பிடுங்கிப்பூதலத்தடித்தனன்மாதோ. 20
அவனிகம்பிக்கவடித்திடுசடையினுயிரங்கையுடைவீரன்
புவனமுநடுக்கமுகத்தினின்மூன்றுபொறியுகுவிழியுறத்தோன்றச்
சிவனவன்றன்னைத்தக்கன்மாமகத்தைச்சிதையெனச்செப்பிடமுனிந்தே
யுவரியைப்பருகியெழுந்திடுவடவையெனப்படிமிசையெதிர்ந்திருத்தான்.
வடவரையசையத்திசையினின்வயங்குமதகரியினமிரிந்திடநீள்
கடலிடைமுழுகுங்கவிடமெனவுங்கசனமியண்டமாமுகடு
வெடிபடவதிர்த்துவிழியினில்வடவைபிறந்திடவீரபத்திரன்றன்
கடிதினிலுயர்தக்ககன்மகவிருத்துக்களின்சிரங்களைந்துகொக்கரித்தான்.

பிருகுவின்றாடி பறித்துயர்பகனேத் திரந்தனைப்பிடுங்கியேசிகரி, லிரவியின்றசன முதிர்த்துமாமகத்தி னெரியிடைத்தக்கன்வன்றலையை, விரைவினிற்றணித்து வீழ்த்தந்தவழலின் விட்டைமூத்திரமெலாம்விடுத்துச், சுரரொடுமுனிவர் துதிசெயக்கயிலை யாளியனடிதொழுதனனால்.

சிவன்விடுத்திடுமவ்வீரபத்திரனுற்றக்கன்வன்சிரமொடுமகமுந்
தவர்களஞ்சிடவேயம்பலுற்றனவென்றவன்றமர்சதுமுகற்குரைப்ப
வவமையில்சதியன்றிறந்திடவிலக்காதவந்திகழ்ந்திடுதலாலுமப் [ன்.
பமதினிவையோவருவதென்றுரைத்துப் பங்கயன்கயிலையைச்சேர்ந்தா
கயிலையினுலைப்பில்கனககோபுரங்கள்கவினுறநூறுயோசனையி
னுயரமாயெழுபத்தஞ்சுயோசனையினகலமாயொளிர்வடகிழக்கி
ழியலிசையுணருமியாழருந்தவனுக்கிதவுபதேசத்தையருளி
மயர்வறவுயருந்தக்கணாமூர்த்தியாமரனிடத்தயன்வந்தான். 25

அயனரன்முனரினடைந்துகோயில்வாவருந்தவன்கதியினையடைய
வியல்புறவுயர்தத்துவமருளிறைவவுனையவணிகழ்ந்ததக்கன்மேற் [டஞ்
றலையுறக்கதத்தை யொழிந்திடுகெனுஞ்சொற் சாற்றிமாவேள்வியின்சே
செயலுறப்பெறுதியெனமதிவேணிச்சேகரன்முனிவொருவினனால். 26

முனிவினையொருவு முராரியீரிரண்டு முகமுடையவனுடுமேகி,
யனலிடைச்சிரம்வீழ்ந் தெரிந்திடவாக்கை யவனிமேற்கிடந்ததக்கனைத்
தான், வினையகன் றயவோர் வெறித்தலைபொருத்தி யெழுப்பலும்விழி
முகிழ்த்துறங்கிக், கனவுகண்டிடவாண் டெழுபவன்போலக் கவினுறவெ
ழுந்தனன்மாதோ. 27

பின்னருமவணின்மடிந்தவரெல்லாமுயிர்பெறப்பிஞ்ஞகனருளத்
துன்னியவினைகளொருவிடுந்தக்கன்புராரியைத்தொழுதவண்டுதித்தே
யின்னலின்மகத்தைமுடித்தரிபாகங்கொடுத்திடவிந்திரையுரத்தின்
மன்னநற்றிகிரிவளைவயங்கி மாமாயவன்சென்றினன்மாதோ. 28

திருமகள்கொழுநனடைந்திடவலாரிதிசைமுகன்சிவனிவரிறைஞ்ச
வரியரனுடனேயுன்னையெள்கினரேலென்னையுமகற்றினராமென் [தப்
றுரைசெய்துன்றனைத்தான்யானெனவுணரார் சாந்தியையுறுவரெனவோ
பரிவுடன்புராரிதுதித்திடவமலன்பயோததியமர்ந்தனனம்மா. 29

சக்கரந்தரித்தோனிவையெலாமருளிச்சரியிலாப்பயோததியடையத்
தெக்கனுந்தொழுதுமகத்தினிற்சேடமளித்திடத்தேவர்கள்பணிய
முக்கணன்கயிலைவரையிடையடைந்துமுனிவர்கள்போற்றிசெய்திடவே
மைக்களமதனினுரகபூடணங்கள்வயங்கிடவமர்ந்திடுநாளின். 30

சதியெனுமடந்தை யிகழ்ந்ததந்தையின்முன் றன்னுடலெரிந்திட
விளைத்தே, யெதிரிலாவிமவான் மனைவியாமேனை வயிற்றினிலிணையிலா
வுமையாய்ச், சதுமறையொளிரச் சனிததவண்வளரச் சங்கரன்காதலா
லெய்தி, வதுவைசெய்தெழில்சேர் வாமபாகத்தை வழங்கிடவயங்கினண்
மாதோ. 31

தட்சகப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 2873.

---

112 - வது, பற்குனப் படலம்.

இருகையினுழிவலம்புரியொளிரவிருகணீளிரவியும்விதுவு
மருவிடவுரத்திற்றிருவயங்கிடமாமலரயனுந்தியிற்றிகழச்
சுரர்நதிபதத்திற்றுலங்கிடவேதச்சுருதிஞவினிணமரக்
கருவரையெனநீள்பயோததியரவிற்கவினுறுபரன்றனைத் துதிப்பாம். 1

பொறையிலாத்தக்கன்மகத்தினையழித்த சரிதையைப்புகன்றிடக்கேட்டு
நெறியுறுதருமன்மகிழ்ந்திடவியாசனீபகைகளைந்திடவேண்டின் [ன்
கறைமிடற்றிறைவன் கணைதொடுத்தருளக் கடத்திடையேகிநற்பார்த்த
குறைவறுந்தவத்தைச்செயவிடுகெனவேகூறியேமாதவனகன்றான். 2

வேறு.

எண்டவமுனிவன் கூறியேகவிசிதிரன் றன்மைந்தன்
மண்டனிலறத்தின்சேயைவணங்கிமாவனத்தினேகிக்
கண்டபோண்டறுவிசனந்தவனில்லாள்வேண்ட
விண்டலத்தம்பையேவியவனுயிர்மேவப்போனான். 3

கயிலையங்கிரியின்பக்கத்தெய்தியோர்கடியகானி
னுயர்வுறபுயனார்சோலையொருபெருவிரலையூன்றி
மயர்வறவங்கிதன்னைவளைத்திடவானோரஞ்ச
முயலகன்வெரிகினின்றுன்முன்வரத்தவஞ்செய்தானால். 4

ஆசறவொருமைச்சிந்தையரசன்மாதவந்தான்செய்ய
வீசன்மாதேவிதன்னோடேயினனாய்வலைகளெங்கும்
வீசியேமிருகவேட்டைவிரும்பியசவரரார்க்கு
மோசைவானுறவேமாயவுருவுடைக்கிரியின்வந்தான். 5

நாககங்கணத்தன்வெய்யநாய்சொடுவளையப்பாறுஞ்
சூகரம்விசயன்முன்னிற்றோன்றிநீயெனைக்காவென்ன
வாகவத்தாசனஞ்சேலென்றுமுன்னடவியெங்குஞ்
சாகரத்தொலிபோலார்த்துச்சவரர்கோனெய்தினானால். 6

கொடியனாயெதிர்ந்துவந்தவெயினர்கோன்குரோட்டந்தன்னை
விடுதிநீசவனேயென்னவிடாதுயர்விசயன்வில்லாற்
கடவுவெங்கணைகளெல்லாங்கடியுடைமலர்களாகி
வடிவுடைச்சவரர்கோமான்முடிமிசைவயங்கிற்றன்றே. 7

சவரனெய்பணந்தன்மேலழுந்திடத்தானெய்வாளி
யுவமையின்மலர்களாகியவன்முடியுறலும்பார்த்தன்
பவனன்மாவருணைக்கிபஞ்சயன்விபுதர்கோமான்
சிவனிவரியும்வெற்றிப்படைவிடச்சிதைத்தான்வேடன். 8

சோடிவெம்படைகளெல்லாமெயினர்கோனாறுத்துக்கோதி
லாடவர்திலகன்வில்லினாணியையறுக்கவோடுஞ்
சேடன்வெங்கதமேபோலச்சீறிவெஞ்சிலையினாலே
சடினன்விசயன்வெய்யசவரர்கோன்முடியின்மீதே. 9

தும்பையின்மலர்கள்சிந்தத்துரும்பவானதியிற்றோய
மம்பிறைசரியக்கொன்றையலரெலாஞ்சிதறிவீழ
நம்பன்முடியின்மீதினுகர்கோமான்றன்மைந்த
னும்பர்கள்வெருவவோங்கியடித்தனனுயர்வில்லாலே. 10

ஒல்லையிற்கிரீடிசென்றக்குராத்துடனடித்தலோடும்
வில்லினைப்பறித்துவேடன்வீசிடவிசயன்கையால்
மல்லுறக்கட்டமன்மேல்விழுந்திருவருந்தான்வானிற்
செல்லுமுருமுமஞ்சப்புடைத்தனர்தெழித்துவைதே. 11

மந்தரவரைகள்போலவிருவருமற்போர்செய்யக்
கந்தனையருளுந்துய்யகங்கைவேணியன்றன்காலா
லுந்திடவிசயன்வானிலுயரவேயுமைமாதன்ன
னைர்தான்றன்னைவேண்டநற்கரத்தேந்தினானால். 12
கரத்தினில்விசயன்றன்னையேந்தியகாலகாலன்
சிரத்தினிற்றிங்கள்கங்கைசிறந்தசோடீரந்தாழ
வுரத்திடைவயங்குகின்றவுரகபூடணங்களோங்கப்
புரத்தினையெரித்தகோமான்விடையின்மேற்பொலிந்தானன்றே.
அங்கியுமழுவுமானுமங்கையினிலகத்தோளிற்
கங்கணம்வயங்கத்தோடுசெவியுறக்காதினோங்கச்
சிங்கலின்மங்கைவாமந்திகழ்வுறத்தேசவேரா
மங்குல்வாகனன்றான்போற்றமகிழ்ந்தரன்றோன்றினானால். 14
விடையினிற்கங்கைதங்கும்வேணியான்றோன்றலோடுங்
கடலிடையமிர்தங்கண்டுகளிப்பவர்போலச்சிந்தை
யுடலொடுமுருகக்கண்ணீருரத்தினிற்புரளவாடி
வடிவுடைவிசயனெய்திவணங்கியேபோற்றினானால். 15
இந்துவேணியனேபோற்றியிடபவாகனனேபோற்றி
நந்திநாயகனேபோற்றிநடம்புரிதலைவாபோற்றி
சிந்துநேர்காரியுண்டதிரிபுராந்தகனேபோற்றி
யந்தகாந்தகனேபோற்றியரகராபோற்றியென்றான். 16
வாசவன்மதலைநாலுமறைகொடுதுதித்தலோடு
மீசனும்மகிழ்ந்துபாசுபதாத்திரமினிதினீந்து
நேசமோடிருகணோக்கிநிருபனீபோதியென்றே
யேசில்வானவர்கள்சூழவிலங்குமாகயிலைபுக்கான். 17
ஏதமிலான்றன்பாசுபதாத்திரமினிதினீய
நீதகன்றிலங்குகின்றசிறுவனைமகிழ்வானோக்கி
மாதலியிரதங்கொண்டுவருவனீயவன்றன்னோடு
போதுபொன்னகரினென்றேபுரந்தரன்புகன்றுபோனான். 18
நேயம்விஞ்சிடவேயிவ்வாறுரைத்துயர்வலாரிநீங்க
வேயெனுமுன்னரோங்குமெழின்வரைக்கானினேகித்
தூயமாதேவதாரமாரமாச்சோலையெய்திச்
சாயகஞ்சாய்வுளேகித்தனஞ்சயனிற்குங்காலை. 19
மகபதியருளினாலேமாதலிவையங்கொண்டு
திகரிலாவிசயன்முன்னர்சிறுவத்தாளங்குட்டத்தைத்
திகழிரதத்தினூன்றச்சிறந்தசாரதிகோல்கொண்டே
ககனமேல்விசையினோட்டக்கணையில்கோனிமிர்த்துநின்றான். 20
காலினங்குட்டந்தன்னைக்கடிதினோடிரதத்தூன்றிக்
கோலுறாகோவைநோக்கிக்கொற்றவனிற்கக்கண்டே

மாறுமுன்விறலுக்காற்றானென்றுமாதலிதான்கூறச்
சிலைமார்விசயன்பாகசாதனனகரிற்சென்றான். 21

வாசவன்மலர்ப்பாதத்தின்வணங்கியேகுந்திமைந்த
னேசிலிந்திராணிதாளினிறைஞ்சியின்புறுதலோடுந்
தேசுறுமமரர்கோமான்சிறுவனைமகிழ்ந்துபுல்லி
மாசுறுமசுரர்தம்மைவதைத்தென்றனிடர்தீரென்றான். 22

அதிதிதன்குமரன்கூறவருச்சுனன்விரைவினெய்தி
யெதிரிறானவர்முக்கோடியென்பதாயிரம்பேர்தம்மைக்
கதுமெனக்கனல்கொள்பாசுபதாத்திரங்கையின்வாங்கி
மதிகொண்மாதலிதேர்தூண்டவதைசெய்துமீண்டான்மாதோ. 23

தானவர்தம்மைச்செற்றுச்சார்ந்திடுதனயன்றன்னை
வானவரிறைவன்சிந்தைமகிழ்வுடன்மௌலிசூட்டி
யீனமின்மணிகொள்சிங்காதனத்திடையிருத்தலோடு
மூனமினிருத்தஞ்செய்யவுருப்பசிதோன்றினாளால். 24

காலணிஞெகிழியோசைகலின்கலினென்றார்ப்ப
நூலிடைமருங்கிற்காஞ்சிநுண்டுளைமணிகண்மின்ன
வேல்விழியிலகத்தூயமதிமுகம்விளங்கிக்காட்ட
மாலருந்தவர்க்குமெய்தநடித்தனண்மயூரம்போல. 25

தூயமின்னிருத்தஞ்செய்யச்சுரர்பதிசுதன்றானோக்கி
யாயுவின்றந்தையைத்தன்னழகினான்மயல்செய்வஞ்ச
நாயகியிவளோவென்றுநகைத்தலுநடித்தமாது
நேயம்விஞ்சிடவேமையனிறைந்திடநின்றாளன்றே. 26

மயலுறுமாதுதன்னைவலாரியுன்மனைக்கேகென்றே
யியல்புறுவிசயகோயிலெய்துவாயென்றுகூறி
யுயருருப்பசியைவீமற்கிளையவுத்தமன்றன்பாலிற்
செயலுறப்போதியென்றுசிறந்தசாரணசொல்லென்றான். 27

சாரணன்மொழியக்கேட்டுத்தத்தையைப்பழிக்குஞ்சொல்லாள்
பூரணகும்பநாணப்பொற்பமர்பயோதரத்தாள்
காரணிகுழலாடேய்கலனுறக்கவின்கொண்மெய்யாள்
வாரணமனையவீமனனுசன்பால்வந்தாளன்றே. 28

ஓவியப்பாவைமெய்யினுயிருறநடந்ததென்னத்
தூவியோதிமமுநாணத்துலங்குபொற்கலன்கண்மின்னக்
காவிசேர்விழியாளுள்ளங்காமத்தீயுறுதலாற்றா
ளாவிமுன்றூதாயேகவருச்சுனன்பாலிற்சென்றாள். 29

வாசன்முன்றூதரேலமணியுறுசிலம்பினெய்து
மோசைதானெய்தினாளென்றுரைத்திடவுருப்பசித்தே
னாசைமீதூரச்செல்லவருச்சுனனெழுந்துநின்று
தேசுறுமணங்கனாளையிறைஞ்சியேசெப்பலுற்றான். 30

பொன்னகரதனின்வைகுமடந்தையர்தன்னிற்பொற்பார்
மின்னெனுமிடையினாளேவிழுமியபாதநோவ
வன்னைநீயென்பாலெய்துங்கருமமேதறைதியென்று
சொன்னவன்றன்னைநோக்கித்துனியுறச்சபித்தாளன்றே. 31

கயனிகர்விழியாணாணிக்கவிழ்ந்துறுவதனியாக
வயலுறுமடந்தைநல்லாருச்சுனாகேட்டியுன்றன்
மயலுறவந்தமாநின்வருத்தநீயகற்றியுற்றே
யியல்புறவணைத்திடாமலென்சொனாய்மன்னாவென்றார். 32

தேயுநுண்ணிடையார்கூறச்செவியினைக்கரத்தாற்பொத்தித்
தூயமாவிசயனென்றன்றுலங்குமாமரபின்வந்த
வாயுவைத்தந்தான்றேவியாகியாயிரக்கண்ணானை
நேயமோடணைத்தாளிம்மாதெனக்கன்னைநிகராமென்றான். 33

மதியுடைமன்னன்கூறமாயவன்றொடையின்வந்தாள்
பொதுமடந்தையர்க்குமுண்டோபுணர்ச்சியினீதியென்று
சுதைதருமொழியாளென்றன்றுனியறவணைத்தியென்றே.
யிதவுரைபலவுமோதவிசைந்திலனிணையிலாதான். 34

நாடியேயுன்பாலெய்தநறுமலரணையினென்னைக்
கூடியேயணைந்திடாதகொடுமையாலாண்பெணல்லாப்
பேடிநீயாதியென்றேபிறங்கியசினத்தளாகி
யேடவிழ்தொடையினானைச்சபித்தவளேகினாளால். 35

சசிநிகர்வதனியானவுருப்பசிதளர்ந்துசென்று
சுசியுறுவிரகமோவவணையெனத்தொடுத்தலோடு
மிசையின்மன்னவனைநோக்கிப்பேடிநீயாதியென்றே
விசையொடுபெயர்ந்ததன்மைவிண்ணவர்தலைவன்கேட்டான். 36

மகபதிவிசயன்றன்னையழைத்துமாமுனிவரோடு
செகதலம்விண்ணோடெட்டுத்திசையினுமிவனைப்போலச்
சிகியுறுகாமநோயைச்செயிப்பவரியாவரென்று
புகலுமினென்றுகூறிப்புதல்வனைப்போற்றினனால். 37

உருப்பசிதன்னைநோக்கியும்பர்கோனறைவான்றுய்ய
பொருப்பிணைபுயத்தனானபுதல்வனைப்பேடியாக
வருப்பநுண்ணிடையாள்சீறவடுக்குமோவென்னவாரும்
விருப்புறுபுருடனாகவிளங்குதிவிசயவென்றான். 38

அருந்தவர்மகிழப்பேடியுருவினையகலும்பார்த்தன்
வருந்தியாம்பன்னீராண்டுவனத்துறைந்திடுமிவ்வேடங்
கரந்துறைகாலமெய்திக்கழிந்திடவருடியென்னப்
பெருந்தடவிழியினாணிபெறுதியாலென்றுசொன்னாள். 39

நீண்டகல்விழியாள்கூறமகிழ்ந்திநிகரில்பார்த்தன்
பாண்மென்மலர்ப்பாதத்திற்பணிந்திடச்சுதன்மேலன்பு

பூண்டுறவனைத்தநம்மைப்புத்திரராகப்பெற்று
வேண்டியதளிக்குந்தெய்வப்பதத்தினில்வீடுபெற்றேன். 40

மங்குலைநிகர்த்தத்தானம்வழங்கியதருமராசன்
செங்கவின்கோல்கொடோச்சிச்சிறந்தநால்வருநீரிக்கெட்
டெங்கும்வென்றிராசசூயயாகத்தையியற்றவேமுச்
சங்குவின்மதலையெய்தும்பதியினைச்சேர்ந்தேனென்றான். 41

தாதையிவ்வாறுகூறத்தனஞ்செயன்மகிழ்ந்துநோக்கித்
தீதறுமையகேளுன்முன்னவன்சிறுவன்வஞ்சச்
சூதினில்வளநாடெல்லாங்கவர்ந்துபாஞ்சாலன்றாய
கோதையின்குழலைப்பற்றியுரிந்தனன்கூறையென்றான். 42

அருந்ததிக்கற்பாளாயமருகிதன்மருங்கினுடை
யுரிந்தனன்முன்னோன்சேயென்றுரைத்தசொற்பாண்டுமென்று
ளரிந்திடக்கண்ணீர்சோரவரவுயர்வேந்தன்சுற்ற
மெரிந்திடவிறப்பனென்னவியம்பிநொந்திருந்தானன்றே. 43

தந்தைவெந்துயராமாற்றியவன்விடைதரவேபார்த்த
னிந்திரனுடனேயோராண்டிருக்கவேயிணையிலாத
வந்தமாறன்சேய்தூயவனுசனைப்பிரிகையாலே
சிந்தைநொந்திருக்கும்வேலைபராசரன்சிறுவன்வந்தான். 44

சுகனுடைத்தாதையெய்தத்தொழுதிடுந்தருமராசன்
மிகமெலிந்திருந்ததன்மைநோக்கியேவேதங்கண்டோ
னிகரிலாப்புராணமெல்லாநிகழ்த்திவெந்துயரநீக்கி
யிகழ்விலாவிசயனின்முனெய்துவனென்றுபோனான். 45

பற்குனப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 2918.

---

113 - வது, அளகாபுரிப் படலம்.

கறையினிற்காலைக்குந்திக்கரத்தினின்கோலினாலே
யுதிதனிற்பாண்டந்தன்னைப்பொத்திடவொழுகுகின்ற
நிறைமதிநிலவைநேருந்ததிசிலத்துறுதவண்ண
மறையறைவாயாலேற்றமாயனைவணக்கஞ்செய்வாம். 1

விதியினைநிகர்த்தவேதவியாசன்றானேகலோடுஞ்
சதுமறையவர்களென்னத்தருமன்றானிருக்குநாளின்
மதிமுகம்வயங்குகின்றதுரோபதைவாயுசேயோ
டதிதியினொலிபோலோடுநெதியிடையுற்றாளன்றே. 2

ஒடுகிலாலந்தன்னுளொளிர்சுகந்தியகற்பூவை
யேடவிழ்குழலாளொருச்சியிம்மலரைம்பான்மீதிற்

னாடினரன்றேபாரிற்றுலங்கியமாதரென்று
வாடியசெயலைநோக்கிவாயுவின்மதலைசொல்வான். 3

அறனிசருற்றவைம்பாலாயிழாயனைக்செய்தி
வெறிகொண்மாமலரைக்கொண்டுமீண்டின்னளகமீதி
னிறைவுறச்சூட்டுவேனென்றறைந்துநீள்பாதவங்கள்
பறியவேபிறங்கல்விண்டுபடியினிறுதிரச்சென்றான். 4

மஞ்சுயர்விலங்கன்மீதின்மரந்துகளாகவீமன்
வெஞ்சலிலுவணன்போன்றுநெறியிடையெய்தும்வேலை
யஞ்சனைசிறுவன்றுய்யகவுசலையருளவந்த
மஞ்சனையுள்கிவாழைவனத்திடையேத்துவானால். 5

அலரியோன்குலத்திற்றோன்றுமயன்சுதன்குமாரவென்றுஞ்
சலமுறவெதிர்த்துபோர்செய்தாடகைகாலாவென்றுங்
கலரவிந்திடவேவேள்விகாத்தருளிராமாவென்றுந்
தலனுறுகருங்கனாரியாக்கியதாளாவென்றும். 6

கறையடியுரியைப்போர்த்தான்சடுஞ்சிலையிறுத்தாயென்றுஞ்
சிறகறையளிமென்கூந்தற்சீதையைவேட்டாயென்று
மறுவிலாப்பரசுராமன்வரிவில்வாங்கழகாவென்றுங்
குறைவிலாப்புளினர்கோமான்குகன்சகாவானாயென்றும். 7

பரதனுக்கெழிலான்மிக்கபாதுகமீந்தாயென்றும்
வருதிரைக்கடல்போலார்த்தவிராதனைவதைத்தாயென்றும்
விரதமார்சரபங்கற்குமிளிர்பதமளித்தாயென்றுந்
தரையினிற்கரன்றன்பின்னோருடன்விழத்தடிந்தாயென்றும். 8

எருவைமன்னவனுக்குன்றன்பதத்தினையீந்தாயென்றும்
வரைநிகர்கவந்தன்மாளவாளினிற்றுணித்தாயென்றும்
பரிவுடன்சவரிநல்கும்பலம்விருப்புற்றாயென்று
மிரவிசேய்மகிழச்சாலமேழிறவெய்தாயென்றும். 9

மிடலுடைவாலிமார்பிளந்தருள்வீராவென்றுஞ்
சுடர்முடியிரவிசேய்க்குச்சூட்டியமுராரீயென்றுங்
கொடியவாளரக்கன்பின்னோன்குரைகடல்கடந்துநின்றா
ளடையவேயிலங்கைச்செல்வமளித்தருளரசாவென்றும். 10

வாரிவெந்திடவேவெய்யவாளிகள்விடுத்தாயென்று
நீரிறைவணங்கியேத்தவருள்செய்தவிமலாவென்றுந்
தேரிறத்தசக்கிரீபன்சிரமுடியறவேநோக்கிப்
போர்பொரவருதிநாளையென்றருள்புனிதாவென்றும். 11

கும்பகன்னன்றன்சென்னிகுரைகடலிட்டாயென்றும்
வெம்பியவதிகாயன்றன்சிரமறவாளிவிட்டே
யிம்பரினதிகனாயவிந்திரசெயித்தைச்செற்ற
தம்பியையேமத்தோடுந்தழுவியதலைவாவென்றும். 12

கடிகையேழரையின்மூலபலத்தினைக்களைந்தாயென்று
கெடியமோதரன்றன்சென்னியிலத்திடைப்படுத்தாயென்றுங்
கொடியவானரக்கன்கம்பத்தறுத்துக்கோகனகனம்பாற்
கடுவைநேரவன்றன்மார்பைப்பிளந்துயிர்களைந்தாயென்றும். 13

சுடர்முடிவிடணற்குச்சூட்டியசோதியென்றுங்
கடுவமர்களனென்கன்னனேத்துகாருத்தாவென்றுங்
திடமுடைத்தசரதன்பாற்றீயகைகேசிசெய்த
கொடியவல்வினைதீர்த்துய்யவரங்கொண்டகோவேயென்றும். 14

வானரத்தானைசூழவயங்குபுட்பகத்தின்மீதின்
மீனகேதனனைமாறுமிலக்குவவீரனெய்த
வானவர்போற்றவேதன்வாமவூருவினிற்றுய்ய
சானகிவயக்குஞ்சோதித்தசரதராமாவென்றும். 15

நெறியினற்புதங்கடேவிக்குரைத்தசின்மலனேயென்றும்
பொறையுறுபரத்துவாசன்வைகிடம்போந்தாயென்று
மறைநெறிபரதனெய்திவணங்கிடவணைத்தாயென்று
மறனுறுமயோத்திதன்னுளடைந்தருளழகாவென்றும். 16

சுடரொளிமணிகடேண்கடுவெங்குமண்டபத்தினுப்பண்
வடிவுடையாசர்போற்றமடங்கலாதனத்தின்மீதிற்
புடவியினெமுந்தசீதையுடனிருந்தருளிப்பொற்பார்
முடியினைவதிட்டன்சூட்டமகிழ்ந்தருள்முதல்வாவென்றும். 17

மதியிலன்வலனென்றில்லாமற்கடமானவென்னைத்
துதிசெய்தன்றடக்கையாரத்தழுவியுமென்றதோண்மேற்
புதிதலர்கமலமன்னதன்பதம்பொருந்தவைத்த
தெறுவெனவினையுஞ்சோருமேம்பலுற்றெழுந்துசிற்கும். 18

பூவைவமையுதசிகாவிபுயன்மரகதமுநாண்மெய்த்
தேவனிவ்வவனியெங்குந்திரிந்திடுசுவடுகொணு
மாவலிற்புடவியெங்குமடைகுவோனமலன்பாத
மேவியதிவடமென்றேவியந்துகைதொழுதானன்றே. 19

சீதையுக்கூடவெங்குந்திரிந்தவன்கமலமன்ன
பாதமார்தூளியீதென்றிருகணீர்படியினுருய்ப்
போதவப்பொடியையள்ளிப்பூசிமெய்புளகமாக
வேதமில்குணத்தோன்வாலிநீட்டியேயிறைஞ்சினனல். 20

இந்திரநீலமொத்தேயிலங்குகந்தரத்தின்மீது
செந்துகிர்வனப்பாய்மல்கச்சேண்சிலைவயங்கிக்காட்ட
வந்தெழுந்தனபோற்றோன்றமலர்மகள்காந்தன்றன்னைச்
சிந்தையினினையுமையுங்களிக்குமூர்ச்சிக்குந்தேறும். 21

வேறு.

இவ்வழியிராகவனெழிலைநோக்கியே
யவ்வியமவித்தவஞ்சனைதன்செம்மருன்
குவ்வுறப்படிந்துநீள்கூலநீட்டிய
நவ்விசேர்பழுவத்தின்வீமனண்ணிஞன். 22

தாரமார்கிரிதரைதயங்குந்தன்மைபோ
னேரிலாமாருதிவயங்கநீதிநூற்
சோர்விலாவாசுகன்குனுவாகிய
நிரன்மாறனயனைநோக்கிச்செப்புவான். 23

நீநெறியடைத்திவணீட்டும்வாலினை
நாஞெய்தினேகவாங்கென்னவேகைத்
தீனமிலரசயானெடுக்கவாற்றகில்
லேனுன்வலத்தெடுத்தேகென்றனரோ. 24

அஞ்சனைசிறுவனீதறையவாசுகன்
மஞ்சனீமுதியமர்க்கடகின்வாலினைப்
பஞ்செனப்பறக்கவுந்துவதுபாரெனு
விஞ்சியவிடதுகால்விசித்துதைத்தனன். 25

உதைத்தகாஞேகவேயோங்குசாலம்போற்
பதைத்திலாவலத்தினைப்பார்த்துவாயுசேய்
கொதித்துவாமக்கரங்கொடுபெயர்க்கவுங்
கதித்தவாலசைகிலகண்டுசீறிஞன். 26

ஒருகையினெடுக்கிலாதுளைந்துசீறியே
யிருகரவலங்கொடுகெடிதெடுக்கவு
மொருசிறிதசைகிலாவுரனைக்கண்டிவ
னரியலவரியயனரனலயாரென்றுன். 27

கையினெழுபிறங்கலைக்களையும்யானிவ்வான்
மயிர்நுனியசைத்திடும்வலனிலேனிவன்
புயல்வணன்புகலவேபுணரிதாண்டிப்போ
யியல்புறஞ்சனகிபாலேகுந்தூதனே. 28

அக்கனைநிலத்தரைத்தரக்கர்தானையை
யிக்கெனத்துணித்துவீழ்த்திலங்கையெல்லவு
முக்கிரத்தழலினையூட்டிநீண்டுயர்
சக்கரனடியின்வீழ்தவத்தனேவிவன். 29

சரியிஞன்முகன்படைதசக்கிரீபன்சே
யிரவிடைவிடப்படுமெவருமுய்ந்திட
விரைவினின்மருந்துறும்விலங்கலேந்தியே
பொருகளத்துதவிடும்புனிதனேவிவன். 30

என்றிவைபலமொழிந்தியாவனீயென
வன்றிறல்வீமனானுரைப்பமாருதி
யன்றுவாலியைத்தெறுமையன்றூசனா
னென்றலுங்குந்திசேயிறைஞ்சியேத்தினான். 31

வாயுசேயானென வணங்கும்வீமனைத்
தூயமைதுலிதுனிதுணித்ததூதுவ
னேயமோடணைத்தபின்னனுசநீனைச்
சேயமார்பழுவத்திற்செல்வதென்னென்றான். 32

அகந்திகழளி யாடுமெனுசன்கூறமன்
னகந்திகழருவிபாய்நதியினெய்திய
சுகந்தியமலரினைத்தூயளாகிய
சகந்திகழ்துரோபதன்றனயள்கண்டனள். 33

தளவலர்நகையளிம்மலரைத்தாவெனா
வளியொடுமெறந்திடவளகைக்கேகயான்
கிளையுயர்பிறங்கலிற்கிளைக்குங்கானிடைத்
தெளிவுறுமரிஞயான்சென்றதென்றனன். 34

அனுசனீதறையவேயனுமன்கூறுவான்
றனபதிபதியெய்திச்சமர்செய்தேவர
மனவரிதென்னிறுமலையவந்திடுஞ்
சினமுறுவயவரைச்செயித்தியாலென்றான். 35

பின்னருமும்மொடுபெருத்தவெஞ்சம
ரின்னல்செய்சுயோதனனியற்றுநாட்டனிற்
கொன்றுறவிசையன்றேர்க்கொடியின்வைகியா
னென்னலர்மடியவாக்குவனென்றோதினான். 36

வேறு.

தெளிவுறவனுமனிவ்வாறுரைத்துநீசேறியென்ன
வளகையின்வீமனெய்தியமரினுக்கறைதான்கூவி
வளனுறுமணிமாளைச்செற்றியக்கரைமடியநூறிக்
கிளர்வரைமீதினெங்குங்கேசரியென்னவார்த்தான். 37

தனபதிகரின்வீமன்சமனிலாச்சமரஞ்செய்ய
மனமெலிதருமன்முன்னேமலரினாலெய்துந்தன்மை
துனியுறவிரித்தவைம்பாற்றோகைதானியம்பலோடு
நினைவதன்முன்னம்வந்தானிகரிலாக்கடோற்கசன்றான். 38

பாரினில்வயங்குந்தன்மன்பருதிவானெழுவபோலச்
சேருறுகடோற்கசன்றன்னுடனுயர்தேரினேறி
நேரிலாவளகைமேவுமனவினினெட்போர்செய்யு
மாருதியுடனேநிதிமலையப்பிங்கலன்றான்வந்தான். 39

சிந்தையிற்கதத்தினோடுஞ்சேர்ந்திடுங்குபேரன்றய்ய
வந்தமாநறன்சேய்தன்னைநோக்கியேயளப்பிலாத
புந்தியின்மகிழ்ச்சியோடெம்போந்திடுங்கருமங்கேட்டுக்
கந்தமார்பூவைக்கொய்துவையினிற்கொடுத்தேகென்றான். 40

தருமனோடிலங்குமன்றதனையனைத்தழுவிவீம
னொருகொடியிடைமுன்னமுறைந்தமாசோலையெய்தி
யரிவையர்திலகமானதுரோபதையளகமீதின்
மருவமர்சுகந்தியத்தின்மலரினைச்சூட்டினானால். 41

சுகந்தியமலரைவீமன்சூட்டலுமகிழுநங்கை
முகந்திகழ்மூரற்பந்திமுத்தினினிரைக்காட்டச்
சுகந்தினம்புகுந்துபார்ப்புத்தொடர்ந்திடக்கொஞ்சுங்காவி
னகந்துகள்செய்யுங்காலின்சுதனொடுதிரியுநாளின். 42

மத்தமாதங்கம்போன்றவாயுசேய்துரோபதன்றன்
புத்திரியுடனோர்காவிற்போதமந்தாரவாச
முத்தரமாலினுலேயுற்றிடவியந்தநங்கை
யெத்தவஞ்செய்தாரிந்தவெறிமலரணிவரென்றாள். 43

வேறு.

தாதுராகஞ்செறிசலதாக்குழற்
கோதையாளிவ்வரைகூறவாயுசேய்
மாதராயளகையினெய்திவாசமார்
போதையான்றருகுவனென்றுபோயினான். 44

தேவதாரங்குரவங்சஞ்செல்லுறுங்
கோவிதாரங்கிள்ளைகொங்கினோங்கியே
வாவுதாரமெயின்வானரம்மலி
காவிதாரமுறுங்கயங்களோவினான். 45

மரைகரிகிரியரிமயிடங்கட்கமா
னிரலைசார்த்தூலமாவிதமெண்கோடடர்
விரிவுறுகடறுகள்வேய்கடுன்னிய
வரைபலகடந்தனன்வாயுவெள்கவே. 46

சரியில்பிங்கலன்பதிசார்ந்துவாயுசேய்
விரிவுறுபொழிலினைக்காக்கும்வீரர்க
டலைரயினினிரியவேசமர்செய்தேவெறி
புரையுமந்தாரத்தின்பூவைக்கொய்தனன். 47

பாரிடையோங்குமந்தாரப்பூப்பறித்
தேகுறுமளகையையிமைப்பினேவியே
நேரிலாசுகன்சுதனெறியினெய்திநற்
சூர்கிகர்துரோபதைகுழலிற்சூட்டினான். 48

வேறு.

கொந்தமந்தாரப்பூவைக்கோதைதன் குழன்மேற்குட்டி
யந்தமாரறன்சேயோடுமெனிலன்சேயமரும்வேலை
யிந்திரன்விடைதானியவிரதமேலமரர்வாழ்த்த
வந்தவாள்விசயன் றன் மன்மலரடிவணங்கினானால். 49

வந்தடிவணங்கிநின் றமகபதிசிறுவன் றன்னை
யந்தமாரறன்சேயன்பாலனைத்துளமகிழ்ந்துநோக்கிக்
கந்தனைக்கரன் றன்னோடேசயிலையினிலங்கிவாழு
மிந்துசேகரனைக்கண்டவெழிலெலாமியம்புகென்றான். 50

சரியிலாத்தருமன்கூறத்தனஞ்சயன்மொழியலுற்றா
னரனொருசவரனாகியளப்பிலாவெயினர்சூழக்
கிரியினைத்தொடர்ந்தென்னோடுகிளர்ந்துபோர்பொருதுதோன்றி
யிருவினையகலப்பாசுபதாத்திரமீந்தானென்றான். 51

கந்தனார்தக்கைதவெய்யகணைகொடுத்தேகலோடு
மிந்திரனகரினெய்தியெதிர்ந்ததானவரைக்கொன்று
குந்திதன்கொண்கன்பாதங்குறுகிநான்வணங்கியீண்டு
வந்தனனென்னத்தன்மன்மகிழ்ந்தனைத்தமருநாளின். 52

அளகாபுரிப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் — 2970.

114 - வது, சிந்துபதி சிரபங்கப் படலம்.

பகலவன்குலத்திற்றோன் றிப்பரதனுக்கரசையீந்து
குகனொடுங்கங்கைநீங்கிக்கொடியசூர்ப்பநகைமூக்கு
நகிலொடுமிளையோனீக்கநலனிலாக்கரனைச்செற்றே
யிகலிராவணனைக்கொன் றவிராமனைவணக்கஞ்செய்வாம். 1

மாதவனருந்துருதக்கனியையவாள்வீமன்கொய்ய
வேதமாமுனிவந்தெய்திச்சபிப்பனென் றஞ்சும்வேலை
மாதவனெய்தியுங்கண்மனத்துறமியல்பையெல்லா
மோதுதிரென்னமெய்ம்மையுதிட்டிரனுரைக்கலுற்றான். 2

சத்தியமாதாஞானம்பிதாத்தன்மம்பிராதாநீதி
மெத்தியதயையாந்தோழன்விழுமியசாந்தந்தேவி
யுத்தமக்கமைநன்மைந்தனெனக்கென் றதருமனோதச்
சுத்தமாங்கனிமீதேறவாயுசேய்சொல்லலுற்றான். 3

பரதாரமெனக்குமாதாப்பரர்பொருள்பாரினோடு
சரிஞானத்துதயமானசற்குணவுயிர்களெல்லா
மரிதாமென் றுயிர்க்குநேயாமென் றரிமைந்தன்கூறப்
பரிதாமாங்கனிமீதேறப்பற்குனன்பகரலுற்றான். 4

வேதசாத்திரங்களோதவிரும்பியமறையோர்போன்றுஞ்
சோதிலாப்பசும்புற்கானுங்கோவினம்போன்றுங்கொண்கன்
போதவேமெழுநாரிபோன்றும்யான்சமரிற்போவன்
மாதவவென்னமாழைக்கனியெழுமாமன்சொல்வான். 5

உயிர்தனின்மானந்தன்னினதிகமிங்கேதென்றுன்னிற்
புயலுறுமின்னின்யாக்கைபொடிபடவாவிபோகு
நயனமெட்டுடையோன்பொன்றுநாளினுமானம்பொன்றா
தியல்புடையரியேயென்னக்கனியெழவிளையோன்சொல்வான். 6

தேவிசேயிளமைசெல்வந்திரமறத்தினமுங்கால
னுவியைக்கவரச்சேர்வினையமிலழியாவீட்டின்
மேவநல்லறமேயுற்றதுணையெனக்கனிமீதேற
மாவடுநயனமானுந்துரோபதையறைவாண்மாதோ. 7

சுந்தரவடிவுமிக்கதூயவேணிகர்ப்பராகிற்
றந்தைதன்பிராதாமைந்தனென்னினுந்தையலார்க
ணிந்தையென்றிகழார்போகவிரப்பிடாரிணைவரென்னக்
கந்தமார்கனிகொம்பேறுக்கருமத்தாற்கண்ணன்சொல்வான். 8

அரிவைநீமெய்கூறென்னவணங்கினள்பகருவாளென்
னிருநகின்மிசையிற்றேயும்பதியைவரெனினும்பார்த்தற்
சரியுளாரிலாமையாலேதவிர்ந்தனனாசையென்ன
விரைவின்மாங்கனிகொம்பெய்த விமலன்போய்த்துவரைபுக்கான்.

சகுனிதன்மருகன்றுய்யதவரெனுந்துருவாசற்கே
யிகழ்விலாயிரத்தின்வர்க்கப்பதார்த்தமோடன்னமெல்லா
நிகரில்பொற்கலத்தினேரினெய்யொடுநிறைப்பவன்பு
மிகுமுனிபருந்தலோடுவியாளகேதனன்றான்சொல்வான். 10

இரணியக்கலத்தில்யான்றானளித்திடுமெடிசிலெல்லாந்
தருமனுண்டளியானாகிற்சபித்தியென்றுரைத்துவேண்ட
வருமறையவன்றானீதேசெய்வனென்றறைந்துபாரின்
விரைவினிற்குந்திமைந்தர்மேவியவனத்திற்சேர்ந்தான். 11

நெறியுறமந்தணாளர்நீதிசேர்குந்திமைந்தர்
குறைவறவமுதுசெய்தபின்னரிற்குவலயத்தின்
மறுவில்பாஞ்சாலன்பாவையருந்தவேவயங்குபாண்டம்
வெறுமையாயிருக்கும்வேலைவிழுமியதவத்தோன்வந்தான். 12

தீய்மையிலவர்முந்திச்சென்றடிவணங்கலோடுந்
தூயனாமுனிவனோக்கித்துலங்குபொற்கலத்தின்மிக்க
வாயிரம்வருக்கமானபதார்த்தமோடன்னமெல்லா
நேயமோடளியாயாகிற்சபிப்பன்யானென்றுநின்றான். 13

எருறுதவத்தோனிவ்வாறுரைத்திடமுனிவவேகி
நீரினிலாடிவாவென்றறன்சுதனிகழ்ந்தலோடும்

யாரினோடையத்துளெய்திப்படிந்திடநெறியோன்போனான்
சீருறுமைவரஞ்சிச்சிதராகாத்தியென்றார். 14

வீரர்கணினைக்குமுன்னம்விமலனுண்டெய்தியேதா
னேரிலாப்பாண்டத்தன்னிறைத்தயர்காரைச்சாகஞ்
சீருறுமிஞ்சிமேதித்ததியிவைசிறப்பனூறு
வேரிலைக்கலத்தினெய்துமுனிவனுக்கிடுவித்தானால். 15

தூயபொற்கலனோருனுவிலையென்றுந்துருவாசன்று
னாயிரம்பதார்த்தமிஞ்சிகாரையோடளையாமென்று
வேயமோடருந்திச்சிந்தைமகிழ்வொடுநெறியிற்போக
மாயவன்பதியினெய்தமன்னவனிருக்குநாளின். 16

அத்தினபுரியையாளுமரசன்றன்னனுசன்றீய
மைதுனன்மாமன்கன்னன்மறமுறுமிவர்களோடுங்
குத்திரமதியினாலேலருந்திதன்புதல்வர்தம்மை
வத்திரப்பெருமையாலாண்டமர்செய்துவதைக்கவெண்ணி. 17

கரியினம்வேட்டையாடக்கானிடைச்செல்வார்போலச்
சரியிலாப்பாண்டுமைந்தர்சார்விடத்தெழில்வாவிக்கண்
ணரிமலர்ச்சோலைதன்னுளரசர்கண்மிடையப்பொன்னின்
புரியுரமன்னனாவினிரையெலாங்கொண்டுபோந்தார். 18

அத்தினபுரியையாள்வோனானிரைகவர்ந்தசெய்கை
மத்தவெண்களிற்றினேறுமன்னனுக்காயர்கூறச்
சித்திரசேனன்றன்னைச்செருவுறப்பொருதேயந்தன்
புத்திரன்புயத்தைவீக்கிப்போதெனப்புகன்றானன்றே. 19

நிலையில்வலாரிகூறச்சித்திரசேனனெய்தி
யேயெனுமுன்னமாவினிரையெலாமெதிர்ந்துமீட்டு
மாயவெம்படையினாலேமன்னரைமயக்கியந்தன்
சேயிருபுயத்தைவீக்கிச்சேணிடைச்சென்றானன்றே. 20

அத்தினாபுரத்தையாளுமரசன்றன்புயத்தைவீக்கிச்
சித்திரசேனன்சேணிற்சேர்ந்திடுஞ்செய்கையெல்லா
முத்தமத்தருமன்பாலினுரைத்திருகண்ணீர்சோரப்
பத்தியினிறைஞ்சிப்பானுமதிபதைத்தழுதாளன்றே. 21

அரவுயர்வேந்தன்றேவியறைந்திடக்கேட்டதன்மன்
விரைவினிலவனைமீட்கவீமனீபோதியென்ன
வெரியுறுநயனனாகிமறுப்பவிந்திரன்றன்மைந்தன்
சரியில்காண்டீபமேந்திச்சமர்செயச்சேர்ந்தானன்றே. 22

சித்திரசேனன்றன்னைச்செருவிடைவிசயன்வென்று
கைத்தலமவனாற்கட்டுண்கண்ணிலான்புதல்வன்றன்னை
வித்தகத்தருமன்முன்னர்விடுத்தலும்விடுதியென்னக்
கூத்தவான்வடமீனன்னதுரோபதைவந்துசொல்வாள். 23

என்னையன்றிகழ்வுசெய்தவேலைநீயெதிர்த்துப்போர்செய்
யொன்னலன்றன்னூற்கட்டுண்டின்னமுமொருகோலோச்சி
மன்னவனுகிப்பாரையாண்டுநேமதியிலாத
கன்னனேடிருத்தியோவென்றிவையெலாஞ்சழறிநக்காள். 24

நாரியர்திலகமான துரோபதைநகைக்கநாணிப்
பாரினைநோக்கிநின்றபன்னகத்துவசன்றேளின்
வாரினைவிசயனீக்கமறனறநெறியையோம்பி
யேருறுந்தருமனேக்கியுன்னகர்க்கேகென்றுனல். 25

அறனருள்மைந்தனேகென்றறையப்பாஞ்சாலிநங்கை
யுறநகைசெய்தாளென்றேயுளங்கனன்றேகுகின்ற
வறிவிலியுடனேயைவர்தேவியாமணங்கைப்பற்றிச்
சிறையிடைத்தருவனென்றுசெபித்திரதன்றான்சொன்னான். 26

மைத்துனன்மொழியலோடுமெகிழ்ந்திடுமெனத்தனுன
வத்தினபுரியையாள்வோனவடனைப்பற்றியென்முன்
வைத்தியேனலனென்றேதமறனுறுசிந்துநாட
னுத்தமத்தருமராசனுறையுமாவனத்தைச்சேர்ந்தான். 27

பூரியசிந்துநாடன்புடைவருங்கயவராலே
பாரினைண்டவத்தோர்வைகும்பதியினையழித்தலோடு
மேருறுமைவர்சிறியேகனுமெழிற்பாஞ்சால
வீரியன்மகளைப்பற்றிவெய்யவன்றேர்மேனீண்டான். 28

மறுவில்பாஞ்சாலன்பெற்றமங்கையைவையத்தேற்றி
யறிவிலாச்சிந்துநாடனகன்றனனென்றேபாறி
மறையவர்புகலவேகும்வாயுசேயவனைப்பற்றி
யெறுழ்வலிக்கரத்தினுலேபுடைத்தனனிரத்தங்கக்க. 29

புரத்தினையெரித்தோன்போலப்புகையுயிர்த்தனிலன்மைந்தன்
கரத்தினுலுரத்தின்மோதிக்கயவன்றேள்கயிற்றால்வீக்கிச் [ம்
சிரத்தினிற்சிகையையைந்தாய்ச் சிரைத்தொருநொடிப்பின்முன்ன
விரித்திடுங்குழலாளோடுமேவினன்விறலின்மிக்கான். 30

சிரமிசைச்சிகையைந்தெய்துஞ்சீரிலாவரசன்றன்னைத்
தருமன்முன்காட்டவேதன்றங்கைதன்கொழுநனுன
திருபனைவிடுதியென்றுதிகழ்த்தலுமனிலன்மைந்த
னுரமிசைமோதிப்போதியென்னவேயோட்டினுனல். 31

வெருவியேபாறுஞ்சிந்துநாடன்மெய்த்தவந்தான்செய்ய
வரனவணெய்திக்கொன்றைமாலையோடயத்தண்டீந்தே
யொருதினத்தைவர்தம்மைச்செயஞ்செயென்றேதிப்போக
வரவுயர்மன்பாலெய்தியிவையெலாமறைந்தானன்றே. 32

மைத்துனன்றன்னைவீமன்வசையுறச்செய்ததெல்லா
மூத்தமக்கங்கைமைந்தன்முதலினேர்க்குரைத்துவெய்ய

குத்திரமனத்தருனகாளமாமுனியைக்கூவிக்
கைத்தலங்குவித்துநின்றேகண்ணிலான்மதலைசொல்வான். 33

துய்யவகொடியவோமந்தொடங்கிநீமுடித்துக்கானி
னைவரைவதைத்தியென்னவதற்கிசைந்தவன்றனேழ
வெய்யவனுபிசாரம்விளைத்திடச்சூலமேந்துங்
கையுடன்பூதமந்தக்கனலிடையெழுந்ததன்றே. 34

எரியுறுநயனமூன்றுமிருபிறையெயிறுந்தோன்றக்
காலுறுசூலமேந்திக்கனலிடையெழுந்தபூதம்
விரைவினிலுனக்குயான்செய்கருமநீவிளம்புகென்னத்
தருமனோடைவர்தம்மைவதைத்திவண்சார்தியென்றான். 35

இன்னல்கொண்முனிவனண்டதியம்பிடவுயிரினோடு
மன்னவரைவர்தம்மைமண்மிசைக்கண்டிலேனு
னுன்னைநான்வதைப்பனென்றேயுரைத்துயருததிநாப்பண்
வன்னிபோலெழுந்துபூதம்வனத்திடைச்சேரும்வேலை. 36

இந்திரைகொழுநன்றூயவியல்புறுமறனைக்கூவிப்
புந்தியின்முனிவனோமக்கனலிடையெழுந்தபூதம்
வந்துபாண்டவர்கடம்மைவதைசெயாவண்ணநீயே
முந்தியேகாத்தியென்றுமொழிந்தனன்வினைசமர்ப்பான். 37

அரியிவையருளக்கேட்டவறனவண்விரைவினெய்தி
யிரலையினுருவமாகியிருபிறப்பாளர்வேள்விக்
குரியபிண்டத்தைவாயிற்கவ்வியேயோடலோடுந்
தருமனோடைவர்சிறித்தொடர்ந்தனர்தரணிமீதே. 38

கடிதினிரலைநூறுகாவதங்கழிந்துபோயோர்
வடவிருக்கத்தின்கீழ்மறைதலும்பாண்டுமைந்த
ரடவியின்வெம்மையாலுமலரியோன்வெயிலினாலு
முடலுளங்கனன்றேயந்தமரத்திடையுற்றாரன்றே. 39

தூயநீர்தருதியென்றேயறனருள்சுதன்றான்சொல்ல
வேயெனுமுன்னநால்வர்க்கிளையவன்கானினேக
மீயுயரறனங்கேயோர்பொய்கைநீர்விடமதாக்க
வாயவையறிகிலான்மற்றவ்வயமுண்மொண்டான். 40

மத்திரைக்கிளையமைந்தன்வருகிலானென்றுபாண்டு
புத்திரர்மூன்றுபேரும்போயயமுண்மொண்டார்
வித்தகவறன்றன்சேயினுயிரினைவாங்கிவிஞ்சுங்
கைத்தலத்தமைத்துமேனிகரந்தவணிற்கும்வேலை. 41

நீளியசூலமேந்திநிசிகரிலாப்பூதமெய்தித்
தாளுயர்கமலம்பூத்ததடத்தினும்வடத்தின்கீழு
மீளிபோன்மாண்டபாண்டுபுதல்வரைவிழித்துநோக்கிக்
காளமாமுனியைநுங்கிக்கனலிடைப்புகுந்ததம்மா. 42

படியினின்மாண்டுவீழ்ந்தபாண்டவர்தம்மைநோக்கிக்
கடிதினிற்பூதமெய்திக்காளமாமுனியையங்க
நடுவன்றன்சுதனுக்காவிநல்கிடவெழுந்தசன்மன்
கடிதினினிருக்கேகுங்கனிட்டரைத்தேடினானால். 43

படியினிற்கண்ணீர்சோரப்பருவரலுற்றதன்மன்
கடிதினிற்கானினேகிக்கடிமலர்த்தரங்கவாவி
விடசலம்பருகிமாண்டவேந்தரைக்கண்டுவிம்மி
யிடருளந்தரற்றினானாலியாவருமிணையிலாதான். 44

படியினின்மடிந்துவீழ்ந்தபவமிலாவரசரெல்லாம்
விடசலமுண்டுமாண்டாரென்பதையறிந்துவீரன்
கொடியவந்நீரையள்ளிக்குடிக்குமுன்றடுத்துநின்றே
கடிதினின்மறையோனாகியறனிவைகழறலுற்றான். 45

வாவியென்காவன்மன்னயான்சொலும்வசனந்தன்னை
நீவிளங்கிடவேயாய்ந்துநிகழ்த்தியிந்நீரையுண்டேன்
னாவியைவிடுதியென்றேயறைந்திடவருடியென்று
பாவமில்லரசன்சொல்லவறனிவைபகரலுற்றான். 46

அருமறைப்படியேதுய்யவறநெறியடங்கக்கூறத்
தருமனாண்டிசையவெல்லாப்பொருளெலாஞ்சாற்றலோடு
மரசவிந்நீரையுண்டுமாண்டவுன்னனுசர்தம்மி
லொருவனுக்குயிர்தந்தேனென்னமூப்புசென்றுரைசெய்தானால். 47

சுத்தனான்மறையோன்சொல்லத்தூயமாதருமனேகி
யுத்தமமாவலோனையெழுப்பவேயுவந்துநோக்கி
வித்தகவீமன்றன்னைவிசயனையெழுப்பிடாமன்
மத்திரைதனயன்றன்னையெழுப்பியவாறேதென்றான். 48

குந்திதன்சிறுவனாகியானுளேன்கோதிலாத
வெந்தைதன்னுடனேவானினேகியசிற்றவ்வைக்கு
மைந்தனாநகுலன்றன்னையெழுப்பினன்யாசிலாத
வந்தணவெனவேதன்மனறைந்திடவறனுஞ்சொல்வான். 49

நீதியினால்வேதத்தினெறியுறுவாய்மைதன்னிற்
பூதலத்தியாருமொவ்வாப்புகழுடையரசவுன்றன்
னேதமிலிளையோரானமூவரையெழுப்புகென்றே
யோதமன்மலர்க்கைதீண்டவெழுந்தனருவகையோடும். 50

தம்பியர்நால்வரோடுந்தருமனாண்டுவந்துநிற்ப
வும்பரினறன்றன்சிந்தையுவந்துதன்னுருவங்காட்ட
வம்பவிழ்தாரோரெய்திவணங்கலுமவரைநோக்கி
யிம்பரினுமக்கீண்டுற்றவிடர்சொலக்கேளுமென்றான். 51

கடுவரவுயர்த்தோன்கூறக்காளமாமுனிவனென்னுங்
கொடியவனுபிசாரமுடித்திடக்கொண்டன்மீதி

னிடியெனவதிர்த்துச்சூலமேந்தியக்கனலுளெய்த
கொடியபூதத்தையும்மைவதைக்கவேகிழ்த்திவிட்டான். 52

கரியினைவதைத்தகோமானெனக்கிவைகழறலோடு
மிரலையாயாகசாலைப்பிண்டம்யான்கவ்வியேகத்
தரையினினீவிரைந்தித்தொடர்ந்திடச்சரியிலாத
விரிவுறுவடத்தினிழன்மேவியேகரந்தேன்கேண்மின். 53

அடவியினேகியுன்றனனுசர்களைவர்யான்செய்
விடசலம்பருகிவீழ்ந்தார்விழுமியமணிகின்றவி
கடிதினிற்காத்தின்வாங்குவடத்தின்யான்கரந்துநிற்கக்
கொடியவெம்பூதம்வெய்யகூற்றெனவெதிர்த்துவந்த. 54

மாண்டிமெருங்கடன்னைநோக்கியேமறங்கொள்பூத
மீண்டுபோய்முனிவன்றன்னைவிழுங்கவேயிடர்கடீர்ந்தீர்
பாண்டுவின்குமரரோம்பவமிலாவிராடனூரி
னீண்டுநீர்கரந்தோராண்டிருத்திரென்றேகினனால். 55

ஸிந்துபதி சிரபங்கப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - 3025.

115 - வது, பாண்டவர் துசேகுரதவாசப் படலம்.

உருவெனவிளங்கித்தோன்றியுருவிலியாகிப்பூவின்
வருதிருவுக்குக்கொண்கனாகிநான்மறைகளெல்லாந்
தெரிகிலதாகிமாயையியற்றியசெங்கண்மாலை
மருவுறுபிறவியோவவாழ்த்தியேயுய்திநெஞ்சே. 1

அந்தமாரறனீதெல்லாமறைந்திடக்கேட்டவைவ
ரிந்திரைகொழுநன்றீமையகற்றியவியல்பினாலே
சிந்தையின்மகிழ்ந்துதூசுவளர்ந்திடச்சிறந்தாளோடு
முந்தியேகரந்துசெல்லுமுயற்சிசெய்திருந்தாரன்றே. 2

விடசலம்பருகியைவர்வீந்தனரென்றுகூறி
யடைதிரம்பதியையென்றேயந்தணர்தம்மையேவிக்
கடியவெங்கானமோவிக்கதலிவண்கமுகுகன்னன்
மிடையவேவளங்கொண்டோங்கும்விராடமாபுரத்தைச்சேர்ந்தார். 3

தருமன்மாமறையோனாகிமடையனாய்ச்சமீரணன்சேய்
மருளொழிவிசயன்பேடியாகிமாகுலன்பின்னோ
னிருவரும்பரியுங்கோவுமியற்றுவாராகித்தூய
வரிவைதான்வனைதல்செய்யுமணங்குமாயடைந்தாரன்றே. 4

அறுவரும்வடிவுவேறாயடைந்திடவிராடராச
னெறியுறுமறையோன்றன்னைநீயென்பாலிருத்தியென்றே

மறுவிலாமடையனுக்குமாவலோன்றனக்குமண்ணிற்
கறவையாமேய்ப்போனுக்குமவர்தொழிற்கற்பித்தானால். 5

வினையறும்பேடிதன்னைவேந்தன்றான்பெற்றமங்கை
துனியறுமுத்தரைக்குத்தோழியாயிருந்தியென்று
வனைதல்செய்மடந்தைதன்னைமன்னவன்றன்றேவிக்கே
யினியவண்கோலஞ்செய்தீண்டிருத்தியென்றேவினானால். 6

சுந்தரவிராடராசன்றேவியாஞ்சுதக்கணைக்கே
யந்தமார்வனைதல்செய்யுமணங்குவாணியக்கரைவர்
வந்தெனையடைவரென்னைமதிக்கிலாதடர்வார்தம்மை
முந்தியேவதைப்பரென்றுமொழிந்தவளிருக்குநாளின். 7

வசிலாவிராடராசன்றேவிதன்னிளையோனான
கீசகன்வனைதல்செய்யுங்கிளிமொழியழகுநோக்கி
யாசைகொண்டனன்யானென்றேயடர்ந்திடநடுங்கியோடித்
தேசுறுசுதக்கணைக்காண்டிவையெலாஞ்செப்பினாளால். 8

மின்னிடைவிதலையெய்திவிளம்பிடவெருவலென்று
வன்னமென்னடையாளாயசுதக்கணையறைதலோடுந்
துன்னியதுனிகண்மிக்கதுரோபதையமரும்போழ்தின்
முன்னவண்முன்னரெய்திக்கீசகன்மொழியலுற்றான் 9

ஓவியமுயிர்பெற்றன்னவுருவத்தாள்வனைதல்செய்யுங்
காவிசேர்விழியாளென்னைக்கலவிசெய்தணையாளாகி
லாவிபோமவளையென்முன்விடுத்தியென்றறையலோடுந்
தூவியோதிமம்போல்வைகுஞ்சுதக்கணையிசைந்தாளன்றே. 10

சுந்தரவடிவின்மிக்கசுதக்கணைவனைதல்செய்யு
மிந்துவின்வதனத்தாளையெழிலுறுகீசகன்முன்
சந்துநீகொடுத்துமீடியெனவவள்சாற்றலோடுஞ்
சிந்தையில்வெருவிச்சென்றாடீதிலாவடமீன்போல்வாள். 11

விரைவினினெய்திநீசக்கீசகன்முன்னர்மேவி
யரிவைதண்கலவையீந்துமீளுமுன்னறனிலாதான்
விரிகுழலணங்கினாளைத்தொடர்ந்திடவிண்ணினோங்கு
மிரவியைத்தொழுதுநீயேகாவெனவிளம்பினாளால். 12

தியக்கமுற்றோடுகின்றமின்னிவைசெப்பலோடு
மியக்கனையிரவியேவவவனெழுந்திம்பரெய்தி
மயக்கமுற்றடருவான்றன்மார்பிடையிடிபோன்மோதிக்
கயற்கணிதுனியைநீக்கிக்ககனமீதடைந்தானன்றே. 13

மன்னவன்விராடன்முன்னரெய்தியுன்மைத்துனன்றா
னின்னலாமுறைகள்செய்தேயென்னைவந்தடர்த்தானென்று
சொன்னமின்றனக்குத்தீயோன்சொல்லியவசனங்கேளா
னென்னலுமடையன்பாலினெய்தியீதியம்பினாளால். 14

தழலெனவடருங்கற்பாள்சாற்றறுமெழில்கொள்வீம
னழலுறுமனத்தனாகியரிவைநீயவன்பாற்சென்று
பொழிலிடையடைதியென்றுபுகலுதிமயலினாலே
யுழலுநெஞ்சினனைக்கொல்வனியானெனவுரைத்தானன்றே. 15

துனியுறவீமனிவ்வாறுரைத்திடத்துயரையோவி
வினைதல்செய்வனிதையெய்திப்பசலையாய்மயல்கொள்வானை
நனிமலர்ப்பொழிலின்யானேநண்ணுவனீயுமெய்தென்
றனைநடையணங்குகூறமகிழ்ந்தவணடைவனென்றான். 16

கீசகனாடனிவ்வாறுகிளத்தியேவடமீன்போல்வா
ளேசிலாமடையன்றன்னோடியம்பலுமுன்னிந்துவீமன்
வாசமார்பொழிலினுப்பண்மண்டபமிசையின்வைக
நாசமாநீசனந்தநள்ளிருளிடையின்வந்தான். 17

தூயமாமண்டபத்திற்றுயில்கொள்வான்போலுற்றானை
யாயிழையென்றாசையாலணைத்தின்பமறையலுற்ற
நீயனைமூடுவீமன்சினத்தவன்சிரத்தின்மோதி
யேயெறுமுன்னமாங்கேவதைசெய்தேயேகினானால். 18

மடிந்திடுங்கீசகன்றன்னனுசராமறவரெய்திக்
கடந்தருகரியையேயுங்கயவனைக்கனலினிட்டே
மடந்தையர்திலதமன்னவனிதையையனலுட்போடத்
தொடர்ந்தவர்தம்மைவீமனியக்கனாய்த்துணித்துவீழ்த்தான். 19

வினைதல்செய்வனிதையாடன்மயறனாற்கீசகன்றா
னினியதன்னனுசரோடேயியக்கனாலிறந்தானென்றே
துனியுறவிராடனோடுஞ்சுதக்கணையிடரின்வீழ
மனமகிழ்ந்தவரோடுமடந்தைதானிருக்குநாளின். 20

படவரவுயர்த்தகோமான்பாண்டவர்பன்னீராண்டு
கடியவெங்கானினெய்திக்கரந்துறையோராண்டுள்ளே
புடவியிலவரைக்கண்டுவெளிப்படுத்திடப்போந்தூத
ரடையவேயவனியெங்குமடர்ந்திடவேவினானால். 21

கொடியமன்கூறத்தூதர்குவலயமெங்குந்தேடி
வடிவுடையவரைக்காணார்மன்னர்மன்னவன்முனெய்தி
யடவியின்வரையினாட்டினளப்பிலாப்புரியிற்காணேம்
விடசலமைவருண்டுமடிந்ததேமெய்மையென்றார். 22

ஆதுவர்மொழியக்கேட்டுச்சுயோதனன்மகிழ்தலோடு
மேதமில்கங்கைசெம்மலியம்புவான்பாண்டுமைந்தர்
மாதவனருளில்வாழ்வோர்மடிந்திடார்குதிற்றோற்றே
யோதியபதிமூவாண்டுமொருவிடவருவரென்றான். 23

கங்கைதன்மைந்தன்கூறக்கண்ணிலானருளுஞ்செம்ம
லங்கண்மால்சகாயரானவைவர்கள்விடநீருண்டு

மங்கிலாரென்னிலன்றுரையுமாபதியையீயே
திங்களின்மரபின்வந்தாய்செப்புதிதெரியவென்றான். 24

அரவுயர்வேந்தன்கூறவருள்செறிகங்கைமைந்தன்
றருமன்வாழ்வளநாடெல்லாந்தருமமெய்நீதியோங்க
வரிவையர்கற்புண்டாகியாவிரைபல்கியாரு
மிருதியுறவேபைங்கூழெங்கணுமிலங்குமென்றான். 25

ஏசறுகங்கைமைந்தனியம்பலுஞ்சுயோதனன்றான்
மாசறுதூதர்தம்மைநோக்கியேவாரிசூழுங்
காசினிமுழுதுந்தேடித்திரிந்தநீர்கவின்கொண்டோங்குந்
தேசுறுநாடேதென்றுதெரிவுறச்செப்புமென்றான். 26

அரசனீதுரைத்தலோடுந்தூதுவரறைவராற்றின்
கரைசெறிபொழினீள்கன்னல்கதலிபூங்கமுகுசெந்நெல்
விரைசெறிந்திலங்குகின்றவிராடன்மாவளநாடென்றே
யுரைசெய்தோரற்புதங்கேண்மன்னவென்றோதுவாரால். 27

மாசகல்வினைதன்மின்னாண்மீதுறுமயலினாலே
கீசகனுசரோடெங்கிளர்ந்துறுமியக்கனாலே
நாசமுற்றனனென்றந்தநன்னகர்நடுங்குமென்றே
யாசகறூதர்கூறவரவுயர்துவசன்சொல்வான். 28

கீசகன்றன்னைச்செற்றான்கேசரிநிகராம்வீமன்
மாசகல்வினைதன்மின்னாடுரோபதன்மகளேயாகு
மேசகனகரந்தன்னினால்வருமிருப்பரென்றே
யாசறுமனத்தனாகிச்சுயோதனனறையலுற்றான். 29

விறல்செறிமல்லர்தம்மைவிராடன்மாபுரியினேவிற்
றிறலுடையவன்றன்மல்லர்திரளினைச்செற்றபோது
குறைவிலாவீமனங்கேயிருந்திடினிவரைக்கொல்வ
னறிவதற்கிதுவேநல்லகருமமென்றறைந்தான்பின்னர். 30

ஆயிரமல்லர்தம்மையழைத்தவர்க்காடைநல்கித்
தூயமாவிராடனூரிற்றொலைவிலாமல்லர்தம்மை
யேயெனுமுன்னமெய்திவதைத்திடுமென்றலோடு
மீயுயர்வரையுங்கானும்விரைவினிற்கடந்துபோனார். 31

கடிதினினெய்திமல்லர்விராடனைக்கண்டவ்வூரின்
மிடலுடைமல்லர்தம்மோடமர்செய்துவீட்டவீமன்
மடயனாண்டவரையெல்லாம்வதைத்தொருமலனைவிட்டா
னிடையனுக்கவன்றன்சென்னிபின்னுறத்திருப்பிவிட்டான். 32

கடிதினினவன்றானெய்திக்கண்ணிலான்மைந்தனோடு
மிடலுடைமல்லரவ்வூர்மல்லரைவீட்டலோடு
மடையனாண்டவரையெல்லாம்வதைசெய்தேயென்னைவிட்டா
னிடையனென்வதனம்பின்னேயுறத்திருப்பினனீதென்றான். 33

என்றிவைமல்லன்கூறவெதிரிலாச்சுயோதனன்றன்
கன்றியனைத்தனைக்கடுந்திரட்பகைஞர்பாரிற்
பொன்றினரில்லையென்றாப்புன்றவன்விராடனாட்டிற்
றென்றிசையேகிச்சிந்துநாடனீசெருச்செய்யென்றான். 34

சிந்துவுக்கிறைவன்றேரினேறித்தென்றிசையினேகி
வந்தெதிர்பொருதுசீறும்விராடனைவரிவிற்கோலி
நுந்திபகழிதன்னாலொண்சிலையிரதம்பாரிற்
சிந்திடவறுத்துத்தோளைப்பிணித்தனன்சேனையார்ப்ப. 35

விறலுறுஞ்சிந்துநாடன்விராடனைப்பிணித்தலோடு
மறலிபோற்சீறிவீமன்மைத்துனன்றன்னைப்பற்றித்
திறலுடைக்கரத்தினாலேசிரத்தினைத்திருகுமுன்ன
மறன்மகன்விலக்கலோடுமொருயிருய்ந்துபோனான். 36

சிந்துவுக்கிறைவனோடுவிராடனைத்தேரினேற்றி
யந்தமாறன்செய்வீமனருச்சுனற்கிளையவீரர்
தந்திவெம்பரிமாச்சேனைதரணியினிறைந்துசூழச்
சிந்தையின்மகிழ்வினோடுந்தேரிடைச்செல்லும்வேலை. 37

அத்தினபுரியையாள்வோனுநிரைகவர்ந்துகொண்டே
வுத்தரதிசையிலெய்தவுத்தரன்முனிவினோடும்
வித்தகவிசையனேயவீரர்கடம்மையெல்லாங்
கைத்தலக்கணையினாலேவதைசெய்வன்காண்டியென்றான். 38

வசையிலாவிராடராசன்மகனிவைகூறலோடு
மசைவில்கற்புடையளாயதுரோபதையவனைநோக்கி
விசையனுக்குவமைநீயோமின்மினிவெள்ளியாமோ
சசிகுலவலனைத்தாக்காதெள்கல்சாற்றுதியோவென்றாள். 39

வீமன்விதுரன்கன்னன்வேதியனவன்றன்மைந்தன்
கோமகன்முழக்கிவெய்யகொடுஞ்சரம்பொழியும்போழ்தி
னீடியபகழிதாவிநீயெதிர்நிற்கலாற்றாய்
பேடிதேரூரில்வெல்வையென்றிவைபேசினாளால். 40

வித்தகவைவர்தேவியானமின்கூறலோடு
முத்தரன்றங்கையானவுத்தரைதன்னைநோக்கி
யத்தினபுரியையாளுமரசனையமரின்வெல்லச்
சித்திரமணித்தேர்பேடியூர்கெனச்செப்புகென்றான். 41

சிறுமுன்னோன்கூறச்சிறந்தவுத்தரைதானேகி
யேருறும்பேடிதன்னையிருகையாற்றழுவிநோக்கி
நேரிலொன்னலரைவெல்லநீயெந்தைசுதனுக்கின்று
தேரினையூர்தியென்னவிசைந்தவன்சென்றானன்றே. 42

ஓதுதற்கரியபொற்றேருத்தலைதோழியூர
வேதமில்விராடன்சேய்தானேகியேசுயோதனன்றன்

போதகமிவுளிவீரர்புணரிபோலார்ப்பக்கண்டு
பீதியோடோடலோடும்பேடிகைபிடித்துச்சொல்வான். 43

செருவலவொருமைச்சிந்தைசேர்க்கலாய்ப்படியிற்பாற
னிருபருக்கெக்குமோதாவீயின்றுவெருவிலென்று
வரனெறுநெடித்தாள்கோயிலனாவியாயுதங்களெல்லாம்
விரைவினிற்காட்டலோடுமுத்தரன்விளம்பலுற்றான். 44

பாரியகதையும்வில்லும்படைகளுமாரதென்ன
வேருறுபாண்டுமைந்தரெடுக்குமாயுதங்களென்றான்
நேரிலாக்குந்திமைந்தரெங்குளார்நிகழ்த்திடென்ற
வீரவுத்தரன்றான்கூறவிசையனுங்கறையலுற்றான். 45

மறையவன்றருமன்வீமன்மடையன்மாவலவனீதி
யறிவுறுநகுலனையனாகியசாதேவன்றான்
மறுவிலாவுந்தைதன்பால்வயங்கினர்வனைதல்செய்வா
ணெறியுறுபாஞ்சாலன்றன்மகளெனநிகழ்த்தினானால். 46

பீடுடைவிசையன்கூறவுத்தரன்பேசுவாவெண்
ணாடவர்திலகனானவருச்சுனனெங்கேயென்னப்
பேடியாம்யானேபார்த்தனென்றுபேர்பத்தும்பேச
வாடுறுமாலையோடும்வயங்கினன்கிரீடியம்மா. 47

வித்தகவிசையனாகிவிளங்கினானைநோக்கி
யுத்தரன்பணிதலோடுமுவந்தெடுத்தணைத்துக்கொண்டு
சத்துருவெனவேயெய்துநிருபரைச்சமரின்வெல்லச்
சித்திரமணித்தேரூர்திநீயெனச்செப்பினானால். 48

உத்தரன்றேரையூரவுத்தமவிசயனேகிக்
கைத்தலத்துயர்காண்டீபங்கடிதினில்வளையவாங்கி
யத்திரமாரிபெய்தேயாநிரையெல்லாமீட்டாண்
டெத்திசைதோறுமொன்னாரிரிந்திடக்கணைபெய்தார்த்தான். 49

மறையவனவன்றன்மைந்தன்வானதிபுதல்வன்கன்ன
னிறுதியின்மழையையேலவெய்தவரார்ப்பப்பார்த்தான்
மறவிலாவாளியெய்துமாற்றியேயவர்கள்கையி
னுறுசிலைகொடிதேரெல்லாமறுத்திடவோடினாரால். 50

அரவுயர்வேந்தனெய்தியடுகணைசொரியப்பார்த்த
னொருகணையதனைமாற்றியுரத்தொருவாளியேவ
வெருவியேகுருதிவாயின்வீழ்ந்திடநிருபரோடு
மரிவரக்கண்டதோல்போலவனியினோடினாரால். 51

வானதிபுதல்வன்கன்னன்மறையவனிவுளித்தாமா
னூனமேமலியுந்துச்சாதனனுயர்சுயோதனன்றா
னீனமேமலியப்பாறவெழில்கொண்மாவிசயன்பாரி
னானிரையடையமீட்டானமரர்களிப்பவம்மா. 52

ஏதமில்விராடன்சேயோடிந்திரன்செம்மல்சொல்வான்
மாதுதானலாதபேடியாகியேவருவன்போரின்
வேதியன்முதலோர்தம்மைவென்றுநிரைமீட்டாயென்
றோதவேதூதர்தம்மையுந்தைபால்விடுத்தியென்றான். 53

ஈதுறவுரைத்துப்பேடியாகியேயிரதமூரத்
தீதுறுசுயோதனன்றன்சேனையோடிமைப்பின்முன்னம்
பீதியோடோடயானேவென்றனனென்றுபேசித்
தாதைபால்விடுத்தான்றூதர்தம்மையுத்தரன்றான்மன்னே. 54

வீடுமன்முதலினோரைவென்றுன்சேய்மீண்டானென்றே
பீடுடைவிராடன்முன்னரெய்தியதூதர்பேச
நாடுடையரசர்கோமானலனுறமகிழ்வோடெய்தி
நீடியகோடிகள்வானினிறையுமாநகரிற்சென்றான். 55

இரவிசெய்முதலினோரையிமைப்பின்முன்வென்றுமைந்த
னிரையினைமீட்டானென்றுதூதுவர்நிகழ்த்தலோடுங்
கரைசெயற்கரியதாயகளிப்புடன்மறையோன்றன்னோ
டொருவிசைசூதிற்றோற்றமன்னவனுரைக்கலுற்றான். 56

வீடுமன்முதலினோரைவென்றவன்சுதன்போலிச்சூ
தாடியேவெல்லவனென்னவரவுயர்வேந்தன்பாற
நீடியபகழிதூவிநின்மகன்செயிக்கமாட்டான்
பேடியேவென்றானென்றுபேசினன்மறையோன்மாதோ. 57

வேதியனுரைத்தலோடுமெலிவுடனென்றன்மைந்த
னாதவனெனவேயேகியரசரையமரின்வெல்லத்
தீதுறுபேடிவென்றானென்றனையென்றுசீறி
யேதமில்பலகைதன்னிலெறிந்தனன்கவற்றைமன்னன். 58

பற்றியேயெறியத்துய்யபலகையிற்றைத்துமீதி
லுற்றிடுகவறுசென்றேயொளிதிகழ்வேதியன்றன்
னெற்றியிற்றாக்கலோடுநிறைந்திடுகுருதிசோர
விற்றொழில்விராடனுந்தேயினியனவிளம்பும்வேலை. 59

உவமையிலிரதமீதினுத்தரன்பேடியோடு
நவமணிவயக்கும்வீதிநண்ணியேமாதர்வாழ்த்தப்
பவமறுதந்தைபாதம்பணிதலுமைந்தன்றன்னைத்
தவமுறுமன்னனன்பாற்றழுவியேமகிழ்ந்தானன்றே. 60

வேறு.

தாதையோடொளிர்மணிக்கோயில்சார்ந்தவன்
றீதுறுசுயோதனன்சேனையார்ப்பவே
பீதியாலோடினன்பேடியாகிய
வேதமார்விசயனேசெருவென்றானென்றான். 61

வே று.

மறையவன்மடையன்கோலமாவலன்கோவலன்றான்
பொறையுறுபாண்டுபெற்றபுதல்வர்நால்வருமேகண்டாய்
மறுவிலாவனைதல்செய்யுமடைந்தைதானாரோவென்னி
லறிவுறுபாஞ்சாலன்றானருளியவரிவையென்றான். 62

விற்றொழில்விசயன்றன்னோடிவர்களுமேவியேதா
னுற்றனரிவணினென்றேயுவகையார்மைந்தன்கூறக்
குற்றமில்விராடராசன்மகிழ்வொடுங்கோதிலாத
நற்றவத்தருமராசன்முன்னரினண்ணினானால். 63

வே று.

மைந்தனோடெய்தியேவிராடமன்னவ
னந்தமாரறன்சுதனடிபணிந்தெழிற்
செந்திருவனையவுத்தரையைச்சீருறு
மிந்திரன்மதலைக்கின்றீவனென்றனன். 64

தீதிலாவிராடர்கோன்செப்பலோடுமே
நீதிசேர்பற்குனனீயுன்கோதையை
யாதவன்மருகனுக்கீதியென்றுதா
னோதியேயவனருளுதகமேற்றனன். 65

அரிவையையரிமருமகனுக்கன்புறத்
தருதியென்றுயருமாவிசயன்சாற்றலு
மிருவினைதுணியக்காமத்தினெய்திலாப்
பெருமையனிவனெனத்தருமன்பேசுவான். 66

நீதியுந்தருமமுநெறியுமாண்மையு
மாதவர்வியந்திடுமோதர்சுற்றமு
மேதமிலெம்பியாம்விசயற்கெய்துமென்
றோதியேமகிழ்ந்துயர்தருமனுற்றனன். 67

பாண்டவர் துசேகுரதவாசப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் — 3092.

---

116 - வது, உத்தியோகப் படலம்.

தந்தைதாய்மனையுளாடனயரொன்றுறுஞ்
சிந்தையாம்பவமெனுஞ்சிந்துநீந்தொணா
வுந்திடும்பிறப்பிறப்பொழியவேண்டுமே
லிந்திரைகொழுநனையேத்திவாழ்மினோ. 1

சூரர்களைவருஞ்சூதிற்றோற்றபின்
னீரறுவருடமாவனத்தினெய்தியே

வீரியவிராடனூர்மேவியேகரந்
தோரொருவருடம்வெந்துயரந்தள்ளியே. 2

கரந்துறைகாலமொன்றேகவேகவின்
பொருந்தியமெய்யினர்புகலுமாரணந்
திருந்தியமறையவர்திரளினோர்க்கெலாம்
விருந்தினராகியேவெளிசெய்தாரரோ. 3

மாதவவிராடமாபுரத்தின்வைகியே
வேதனையொருவியேவெளிசெய்தோமென
யாதவன்றனக்குநீரியம்புவீரெனத்
தூதரையேவினான்றூயதன்மனே. 4

வாயுவின்விசையெனவழிக்கொடுதுவ
ரேயெனுமுன்னரிற்றுவரையெய்தியே
மாயவனடிமிசைவணங்கியவராந்
தூயவர்செயலெல்லாஞ்சொல்லினாரரோ. 5

மன்னவரைவருமறுவிலாதுயர்
மின்னிடையாளொடும்வெளிசெய்தாரெனச்
சொன்னதூதுவர்க்கெலாஞ்சுவர்ண்ணமீந்தனன்
பன்னகப்பாயலிற்பள்ளியோவினான். 6

மாதவரென்சுபத்திரையென்னுமங்கையோ
டாதவனெனவயங்கபிமன்றன்னொடு
மீதுயர்தேர்மிசைவிளங்கத்தோன்றியே
சிதரன்விராடமாநகரிற்சேர்ந்தனன். 7

மாயவன்றேர்மிசைவரலும்பாண்டவ
ரேயெனுமுன்னரினெய்தியின்புறத்
தூயவனடிமிசைவணங்கச்சோதியோ
னேயமோடணைத்தனனிகரிலவரை. 8

துடியிடைத்துரோபதைதூயகண்ணினீர்
படிமிசைநிறைந்திடப்பணியயாதவன்
கடிமலர்க்குழலியைக்கையினாலணைத்
திடரறவினியசொல்லியம்பினனரோ. 9

வீரியவபிமன்வந்தடியின்வீழ்தலு
மேருநமைவர்மெய்யிறகப்புல்லினார்
சீருறுதுரோபதன்மகடன்சேயரோ
டாரமார்பொளியுறவனுகினனரோ. 10

இன்னவில்விராடனூரிலங்கவைவர்கண்
மின்னிடையாளொடும்வெளிசெய்தாரெனப்
பன்னகப்பாவையும்பாண்டிநாடியுந்
துன்னியமகிழ்வொடுஞ்சுதரோடெய்தினர். 11

தென்னவன்சிருறசோழன்சேரனு
மன்னவன்கேகையன்முதலினோர்கண்மாத்
துன்னியவிரதமேற்றலங்கித்தோன்றியே
யின்னலின்விராடன்மாநகரினெய்தினார். 12

அத்தினபுரியின்மன்னநயமெங்களு
கித்திலமனையிலோதனவிறைத்திட
மத்திரன்மன்னவன்வழியின்றேயவை
மெய்த்தருமன்னொடுவிளம்பியேகினான். 13

நத்தொடுதிகிரிகைதிகழுநாரண
மைத்துனன்மாரொடுமகிழவேதிசை
யத்தியைசிகர்த்திடுமபிமனோரிவா
வுத்தரைதன்னையேயுவந்துவேட்டனன். 14

துன்னுமிங்கலனுறத்தலங்குமைவரா
மன்னவர்தங்களைமாயனோக்கியே
பன்னகத்துவசன்பாற்பாரைவேண்டியே
யின்னலிலொருவனையேவுமென்றனன். 15

மாதவன்மொழிந்திடவுதிட்டிரமனன்
றீதறுசுயோதனனருகுசென்றுயர்
நீதியின்வருமரசளித்தியென்றுநீ
யோதுதியெனவுலூகனையங்கேவினான். 16

வேறு.

அரவுயர்வேந்தன்றன்பாலேகுமந்தணனையூங்கார்
தருமனீயென்பாலெய்தவரவிடுகென்றுசாற்றித்
திருமகள்கணவன்றேரிலேறியேதேவரேத்த
விரைசெறிபொழில்கள்சூழ்ந்துவரையின்மேவினானால். .17

துவரையின்மாயோனெய்தத்தூயவேதியன்றானேகி
நவையுறுசுயோதனன்பானண்ணியேதருமன்பாதி
யவனியையீதியென்னவவன்மறுத்திடலுமீண்டு
பவமறுமறையோன்பாண்டுமதலைக்குப்பகர்ந்தானன்றே. 18

நீயவனுரைத்ததெல்லாஞ்சென்றுநீமறையோய்தூய
மாயனுக்குரைத்தியென்னவறனருண்மைந்தன்கூற
வாயர்நாயகன்முனெய்தியசேதனச்சுயோதனன்றா
னீய்கிலேனவனியென்றானென்றுவேதியனுஞ்சொன்னான். 19

அந்தணனுரைப்பக்கேட்டேயருள்செறிமறையோயேகி
யிந்திரன்சுதனையென்பால்வரவிடுகென்றேயேவி
யந்தமாரிரண்டுபீடமடிமுடியருகினாக்கிச்
சுந்தரன்றுயில்வான்போலத்தூயமெல்லணையிற்சேர்ந்தான். 20

திருமகள்கொழுநன்றுய்யசேக்கையிற்றுயில்கொள்வேலை
யரியையாகவத்துக்காக்குந்துணைகொள்வானாகியாங்கே
விரைவினிற்சுயோதனன்றான்மேவியேயுலகமுண்ட
பெரியவன்முடியின்பக்கப்பீடமேலிருக்கும்வேலை. 21

கடிதினின்மறையோனெய்திக்கவினுறுந்தருமனேனும்
படியினையளந்தோன்றன்பாற்பார்த்தனைவரவிடென்றான்
கொடுமையிலாசவென்றுகூறலும்விசயனெய்தி
வடிவுடைமாயன்பாதமருங்கினோர்பீடத்துற்றான். 22

இயல்புறுவிசயனெய்தலோடெவ்விறைவனுங்கே
துயிலுணர்பவன்போன்முன்னந்தூயவன்றன்னைநோக்கிக்
கயவனையதன்பின்னாகக்கண்டுமெய்யழுந்தப்புல்லிப்
புயல்வணனிருவோரிங்குபோந்தமைபுகலுமென்றான். 23

முற்குணன்மொழிதலோடுமுன்னர்யான்வந்தேனென்று
துற்குணமென்னக்குநீயேசமரிடைத்துணையாகென்னப்
பற்குணன்முன்னரென்னைக்கண்டனைபரமவென்ன
நற்குணன்கயவன்றன்னைநோக்கியேநவிலலுற்றான். 24

முன்னநீயெய்தினாலுமுகிலினையூர்திமைந்தன்
றன்னையான்முன்னர்நோக்கிப்பின்னுனைக்கண்டேன்றாழ்வில்
மன்னயான்முன்கண்டார்தம்வசத்தனாயடைவேனென்று
சொன்னவன்சுதர்கடம்மைச்சுயோதனன்றனக்காண்டீந்தான்.

இந்துசேகரனைநோக்கியான்றவமுயன்றுபெற்ற
மைந்தரோடக்குரோணிமறவிலாச்சேனையெல்லாந்
தந்தனனுனக்கென்றேதச்சக்கரமெடுப்பாயல்லை
நந்தொளிர்கரத்தாயென்றுநவின்றவனேகினால். 36

அரவுயர்வேந்தனேகவருச்சுனனோடுமையன்
விரைவினிலிரதமேறிவிராடமாபுரியினெய்தத்
தருமனோடவரெய்தியிறைஞ்சலுந்தழுவியன்பா
னிருபர்களிறைந்துறுழநேமியோனமருநாளின். 27

சோமனேர்கவிகையோங்கச்சுயோதனன்பதியினெய்தி
மாமன்வானதிதன்மைந்தன்மைத்துனன்கன்னனோடே
காமனார்தந்தைகாமன்காளைதன்வசத்தனாக
நேமிமால்காத்தெடாமனிறத்தினனென்றுசொன்னான். 28

அக்கிரமத்தால்வாழுமரவுயர்வேந்தன்கூற
விக்கிரமத்தான்மிக்கவீமென்விளம்பலுற்றா
னுக்கிரமெய்ப்போர்தன்னினுதிட்டிரனிடைந்தான்மாயன்
சக்கரமெடுத்தநின்னஞ்சமரிடைக்காண்டியென்றான். 29

அஞ்சனவண்ணனாழியெடுத்திடினமரினாற்றாய்
வஞ்சகச்சூதின்வென்றமண்ணினையருடியென்றே

செஞ்சொலாற்கிளைமந்தன்செப்பமன்சிறியேகச்
சஞ்சயன்றனக்குத்தியவந்தமன்சாற்றலுற்றான். 30

விரைவினிற்சிவிகையேறிவிராடன்மாபுரியினெய்தித்
தருமனைநண்ணிநீயேசமர்பொரநினைந்தாயாகிற்
குருவொடுதந்தைசேயையிளைஞரைக்கொன்றேயாளு
மரசினினவதிர்த்தங்களாடுதனன்றென்பாயால். 31

நீதிசெய்தருமராசநினக்கடாச்சமரஞ்செய்தா
லேதமார்கிளையந்தன்னுளெய்துவாயிவையைத்தள்ளி
மாதவம்புரியென்றுன்றன்றந்தைசொல்வழங்கினனென்
றோதியேசமர்மூளாமலொழித்துநீவருதியென்றான். 32

அரவுயர்வேந்தன்றூதையருளவேசஞ்சயன்றான்
றெரிமணிச்சிவிகைமீதிற்றிசைமுகனென்னவேகி
விரைசெறிபொழில்களோங்கும்விராடன்மாபுரியினெய்தித்
தருமன்முனெய்தலோடுமவனிவனடியிற்றாழ்ந்தான். 33

தருமனைநோக்கிநேரில்சஞ்சயன்மொழிவானுந்தை
யுரையினைக்கேட்டிதூயவுறுதவத்தொருவனாகி
யருவினைதுடைத்தநீதானமர்பொரநினைதியாகிற்
குருவதைமுதலாய்வெய்யகொடுமைகள்சூழுமென்றான். 34

இன்னலார்சுயோதனன்றானென்றுமென்வசனங்கேளா
னன்மகனீயேயான்முன்னவின்றவையெல்லாங்கேட்டாய்
துன்னியவினைகடரத்தூய்தவம்புரிதியென்று
மன்னவவுன்றன்றாதைவழங்கியசொல்லீதென்றான். 35

சஞ்சயன்மொழியைக்கேட்டுத்தருமன்வெண்முறுவல்செய்தே
விஞ்சியசமரபூமிமிடைந்துறுபோர்செய்யாம
லஞ்சினவரசரேழாநிகோதத்தினடைவரென்று
செஞ்சொனூன்மறைகளோதும்பொருளினைத்தெரித்தியென்றான்.

ஆதலின்மறைகளோதுமருந்தவகேட்டிவஞ்சச்
சூதினில்வென்றமன்னன்றுவாதசத்துடனோராண்டிங்
கேதமார்வனத்தினேகிக்கரந்திவணெய்தினேர்க்கெம்
பாதிநாடீயானாகிலமர்செயப்பணித்தியென்றான். 37

இயல்புறுதருமனிவ்வாறுரைத்திடச்சஞ்சயன்றான்
செயலுறுசிவிகையேறிச்சென்றிபநகரிற்சேர்ந்து
நயனமில்வேந்தனோடேயிவையெலாநவிலலோடுந்
துயருறுமனத்தனாகியிருந்தனன்றாய்மையில்லான். 38

சஞ்சயனுரைத்தவாறுந்தானதற்கிசைத்ததெல்லா
மஞ்சனவண்ணமாலுக்கறைந்தனன்றருமராசன்
கஞ்சனைக்களைந்தோனுங்கள்கருத்தினைத்தெரியக்கூறு
மெஞ்சன்மன்னவரேயென்னவறன்சுதனியம்புகின்றான். 39

மாதவகேட்டிவெம்போர்மலையும்போதிளைஞர்தம்மை
தாதையைக்குருவையொப்பில்பிதாமகன்றன்னைச்செற்றே
யேதம்வந்தடையாவண்ணமிரவிசேய்ச்சகாயன்முன்னர்
தூதுநீபோகவேண்டுஞ்சுருதிநாயகனேயென்றான். 40

அறன்மகன்கூறலோடுமெடுசினைத்துடனேநோக்கி
விறலுடைவீமன்றுய்யவிசயன்மாநகுலன்வேத
நெறியுறுமிவர்கள்மூவர்நேமியாய்நீதானேகிற்
றிறமையாய்முடியுமென்றேபின்னருஞ்செப்பலுற்றார். 41

மறனுறுஞ்சூதினாலேமண்கவர்ந்ததுமன்றி
யறனுறுந்துரோபதன்றானருளியவணங்கினாளை
நிறைமலர்க்குழலைப்பற்றிநெடுந்துகிலுரிவித்தான்பா
விறைவநீயிரந்தமன்னனாண்டிருப்பதோவீரமென்றார். 42

ஒன்னலனாகிவாழுமுரககேதனனைச்செற்று
மின்னிடையணங்கினுடன்விரிகுழன்முடிக்கவோங்கு
மின்னிலத்தமரின்வென்றேயேகவெண்குடைக்கீழாளா
மன்னவனுடனேயாங்கள்பிறப்பதென்மாலேயென்றார். 43

மிகமுனிந்துழன்றவீமன்விசயன்மாவலவன்கூற
நிகரிலாமாயோனோக்கிநீதிசேர்தருமன்சொல்லை
யிகழ்கிவீர்தருமம்வென்றியீந்திடுமென்றுசொல்லி
நகுலன்பின்னவனைநோக்கிநவிலுநின்கருத்தையென்றான். 44

மாதவன்மொழியக்கேட்டுமெத்திரைக்கிளையமைந்த
னோதுவானையநீதானுரககேதனன்பாலின்று
தூதுதானேகிலென்வாழ்சுயோதனன்மடியவெம்போர்
காதநீநினைந்தாலென்னுன்கருத்தையாரறிவரென்றான். 45

குரகதவலவன்பின்னோன்கூறிடவவனைநோக்கி
முருகவிழ்தொடையாய்நீயுன்முன்னவர்போற்சொலாதே
விரகிவனுரைத்ததெல்லாம்விளம்பெனத்தனித்துக்கூற
நிருகன்றன்வெஞ்சாபந்தீர்த்தகமலனோடுரைப்பானன்றே. 46

அவனியின்பாரநீக்கவரசனாய்நிலத்திற்றோன்றிப்
பவர்களானவரையெல்லாம்படிமிசைவதைத்துவீழ்க்க
வுவமையிலரியேயெம்மையுரககேதனன்றன்னோடே
நவையுறவிரோதஞ்செய்யுமாயம்யானறிவனென்றான். 47

சிருதசாதேவன்றான்செப்பியவிரகுகேளா
வாரியனவனைநோக்கியறைகுவானவனிதன்னிற்
பாரம்யானகற்றுவண்ணமுபாயநீபகர்தியென்னச்
சீரியநகுலன்பின்னோன்றொழுதிவைசெப்பலுற்றான். 48

வரிசிலைவிசயன்றன்னைவதைத்துயர்மங்கைசென்னிக்
கரியமைக்குழலைநீக்கிக்காலினிற்றளையைப்பூட்டி

யிரவிசேயரசையாள்வித்துயானுனைப்பிணிப்பனாகிற்
றரையினின்வதைசெய்வோரைத்தடுக்கலாமென்றுசொன்னான்.

மத்திரர்க்கிளையமைந்தன்மொழிந்திடமாயனோக்கி
யித்தனைவகைசெய்தாலுமென்னைநீபிணிப்பதெங்ங
னுத்தமாவுரைத்தியென்னவுனக்குநானடியனாகிப்
பத்திசெய்மதியினாலேபற்றுவனுன்னையென்றான். 50

குரகதவலவன்பின்னோன்கூறலுமனந்தரூப
மரகதவடிவாய்நிற்கவனத்தினானிரையிற்போங்கன்
றொருகுதிகொண்டதாயையுணர்ந்துறவடைந்தசீர்போற்
பரகதியருளும்பாதத்திணையினைப்பற்றினானால். 51

தூயவன்மனத்தினாலேசோதிதன்றாளைப்பற்ற
மாயனும்மகிழ்ந்துநீயோர்வரத்தினைவேண்டுகென்ன
வாயுதக்குருவின்சேயாலைவரைவதைசெய்யாம
னீயருள்செய்தியென்னநெடியவன்பெறுதியென்றான். 52

மைத்துனன்றன்னைமாயன்மகிழ்வொடுந்தழுவித்துய்ய
மெய்த்தருமன்றன்முன்னரிருவருமேவலோடு
மத்தியினமர்வோன்றீயவரவுயர்த்தவன்பாற்சேர
லுத்தமமென்றுசொன்னானுயர்சகாதேவன்மன்னோ. 53

பின்னவன்கூறலோடும்பிறங்கியநெறியின்மிக்க
மன்னவனெழிலிபோன்றமாயவன்றன்னைநோக்கிப்
பன்னகத்துவசன்றன்னைப்பாதிநாடிரந்துகேட்டி
யன்னவன்மறுக்கிலைந்தூர்கொடேனெனிலமர்வேண்டென்றான்.

தாயமாதருமனிவ்வாறுரைத்திடத்துயரமுற்றே
வேயுறுதோளினுடன்விழியினீரசற்றிமாய
னீயினியிரங்கவேண்டாநின்குழல்முடிப்பிப்பேனென்
றேயெனுமுன்னரத்திப்பதியினினெய்தினானால். 55

நிகரின்மாலெய்துந்தன்மைநிகழ்த்தலுஞ்சுயோதனன்றான்
பகலவன்குமரன்றூயபகீரதிமைந்தன்சிந்தை
மிகமகிழ்விதுரன்சூழவெதிர்கொளமேவலோடுஞ்
சகுனிதானிடைவந்தெய்தித்தடுத்திவைசாற்றலுற்றான். 56

அரவுயர்வேந்தாகேட்டியச்சுதனிவனென்றெண்ணிப்
பரிவுடனெதிர்சென்றாலிப்பாருறுநிருபரெல்லாந்
தருமனுணையினீண்டெய்துந்தூதுவன்றனக்குநீதான்
வெருவினையென்றுசொல்வரென்றவன்விலக்கினானால். 57

மதியிலாச்சகுனிகூறமருளுறவிருத்தலோடும்
விதுரன்மாமறையோன்றூயவீடுமென்கிருதவன்மா
வெதிருறவிவர்களெய்தியிறைஞ்சலுமெழில்கொண்மாயன்
சதுமறையவர்கள்போற்றத்தமனியத்தேர்மேல்வந்தான். 58

மாதவர்மகிழ்ந்துசூழமறையவரின்புற்றேக
வேதமில்லரசரெல்லாமிருமருங்கிலங்கியெய்த
மோதுதுந்துமிகணந்துமுழங்கிடமுரசமார்ப்ப
வேதனைத்தந்தோனத்திப்பதியினைமேவினானால். 59

காண்டிபங்கையினோர்தங்காளைதன்சகாயன்வந்தா
னீண்டபார்வான்பாதத்தினளந்தருணிமலன்வந்தான்
பூண்டவன்புழைக்கைமாமுன்னழைத்திடப்போந்தான்வந்தான்
பாண்டவர்தூதன்வந்தானென்றனபைம்பொற்சின்னம். 60

அதிரதக்குமரர்கள்சூழவமரர்கண்மலர்கவே
விதியினைவிகர்த்ததூயவேதியராசிகூறப்
புதிதலர்கமலம்பூத்தபுயலெனப்பொற்றேர்மீதின்
விதுரன்றன்கோயில்சேர்ந்தான்விழுமியகதியையீவான். 61

மறப்பிலெட்டெழுத்தாவின்வைகுமாமுனிவர்கூட்ட
முறப்பலவேந்தர்சூழவுலகளந்தவன்றானெய்தப்
பிறப்பினையழித்தேயார்க்கும்பேர்க்கொணாவீட்டினெய்த
விறப்பினைப்பிரித்தேயோடியிறைஞ்சினான்விதுரனம்மா. 62

பூதலத்தரசர்தம்மைவிடைகொடுத்தரிபொற்றேரின்
மீதினின்றிழிந்துகோயின்மேவலும்விதுரனெய்தி
யாதவன்னவிரேபோலுமாதனத்திருத்தித்தூய
பாதநீர்தெளித்துட்கொண்டான்சென்னியிற்பவங்கடீர. 63

மஞ்சனமாடிமாழைத்துகிலொளிமருங்கிற்சாத்தி
யஞ்சனவண்ணன்றூயவறுசுவையடிசிலுண்டு
விஞ்சியகலவைபூசிவிளங்கியதெரியல்சூடிச்
செஞ்சொலால்விதுரனேத்தத்திகழ்ந்தினிதிருந்தானன்றே. 64

குடதிசையிரவியேகிக்குணதிசைதோன்றலோடும்
படியினையளந்தமாயோனருக்கியமளித்துப்பார்மேன்
மிடையெரிபரிகடுன்னவிளங்கியதேர்மேலேறிக்
கொடியபன்னகம்வானோங்குங்கொடியன்பாற்சேரும்வேலை. 65

ஏறுகளடர்த்தோனெய்திவிதுரனில்லிருந்தானென்று
சீறியமனத்தனாகிச்சுயோதனன்செம்பொனாரம்
வீறியமணித்தூணெண்ணில்விளங்குமண்டபத்தின்மீதின்
மாறின்மன்னவர்கள்சூழவலரிபோலிருந்தான்மன்னோ. 66

இரவிசெய்பூரிபூரிச்சிராவெழில்விவுளித்தாமாச்
சரியிலாமறையோன்றீயசகுனிசானவிதன்மைந்த
னூரனுறுசோமதத்தன்பகதத்தனொப்பில்சிந்து
கிருபனோடரசர்சூழவிருந்தனனேரிலாதான். 67

முடிகதிரொளிபோற்றோன்றமுடங்குளைப்பீடமீதிற்
குடைசசியெனவேயோங்கவயங்கியகுருநாடாள்வா

னிடையனென்றுழையின்வந்தாலெதிரெழுந்திறைஞ்சக்கண்டாற்
படியுறுநாமொற்றிப்பருந்தளையிவெனென்றான். 68

அரவுயர்வேந்தனிவ்வாறுரைத்தவணிருக்கும்வேலை
திருமகள்கொழுநனெய்தச்சிந்துவுக்கிறைவன்றாய
விரவிசேய்சகுனியல்லாரெழுந்துநின்றிறைஞ்சமாழைச்
சரியிலாப்பீடமீதிருனிந்தனன்சார்ங்கபாணி. 69

எதுகுலமன்னனெய்தியிருத்தலுமெரியுநெஞ்சன்
மதிகுலமன்னனானவாளரவுயர்த்தகோவென்
பதியிடையடைந்துமின்றென்பான்மணிக்கோயின்மேவாய்
விதுரனில்லிருந்ததன்மைவிளம்புதிதெரியவென்றான். 70

நீதுறுசுயோதனன்றான்செப்பியவுரைகள்கேளா
மாதவன்மொழிவான்றன்மன்வரவிடவுன்பால்வந்த
தூதனாயுன்னில்லன்னமருந்திநான்வெறுக்கைதூய்தோ
வாதலால்விதுரனில்வினமர்ந்தனனென்றுசொன்னான். 71

யாதவனிவ்வாறோதவனலுறுநெஞ்சனாகிக்
கோதறுகுணத்தனாயசுயோதனன்கூறலுற்றா
னேதமார்விராடன்றன்பாலிழிதொழில்செய்யுமைவர்
தூதனாய்வந்ததன்மைசொல்லுதிதெரியவென்றான். 72

பன்னகத்துவசனிவ்வாறுரைத்திடப்பரமன்சொல்வா
னுன்னுடன்சூதிற்றோற்றேயுரைத்திபெதிமூவாண்டு
துன்னியவனத்தினெய்திவருந்தியுங்கரந்துதூய
மன்னவர்வெளிசெய்தார்க்குவழங்குநீயவனியென்றான். 73

யாதவனுரைப்பக்கேட்டேயறனருண்மைந்தனன்று
சூதினிற்றோற்றநாட்டைவிரகினிலளிக்கச்சொன்னா
வீதலுக்கிசையேனென்னவியாதவனவர்தந்நாட்டிற்
பாதிதானீதியென்னமறுத்தனன்பவங்கொணெஞ்சன். 74

மதிகுலத்தைவர்நாட்டிற்பாதிதான்வழங்கேனென்ன
வெதுகுலத்திறைவனேந்தூரீதியென்றிரந்துவேண்ட
வுததியின்விடமேபோலவுரககேதனனுஞ்சீறித்
ததிகளவாடுவாயான்றருகிலனென்றுசொன்னான். 75

அந்தமன்சிறுவனேதுங்கொடேனெனவரியிப்பாரை
யிந்துநன்னுதலியானசிற்றவ்வைசுதனுக்கீந்த
சந்தனுத்தனயனுன்றன்குலத்துளனன்றோதாழ்வி
லுந்தைதன்னிளையோன்மைந்தர்க்குரியநாடிதியென்றான். 76

சுந்தரனிவ்வாறோதச்சுயோதனனகைத்துச்சொல்வான்
றந்தையரைவர்தாயுமொருத்தியேதாமெல்லோருஞ்
செந்துவர்வாயாளாயதுரோபதைதன்னைச்சேரு
மந்தமிலிகழ்வினாரோவொருகுலத்தரசரென்றாய். 77

குயின்மொழிமடந்தைசுற்றங்கூறையையவையின்வாங்க
வியல்பறநாணமேசவிருந்துகண்டவருக்காகித்
தயிர்களவினிலுண்பாயுன்சதுரினாலேந்தார்சேட்டாய்
மயிர்நுதிமண்ணுமீயேன்மறுத்துரைசெய்யேலென்றான். 78

மெய்யருணைத்தனனைவியாளகேதனன்றன்சொல்ல
மையறுமலரின்மீதின்மங்கைநாயகனுஞ்சொல்வான்
பொய்யறுகுந்திதேவிபுதல்வரோடமர்கீசெய்யக்
கையறையென்றலோடுக்கனன்றுதானறைந்துசொல்வான். 79

ஏதுகுலவழியிற்றோன்றியிடையர்தம்மில்லினெய்பால்
ததிகளவினிலேயுண்டோம்பினாலடிபட்டோடு
மதியிலியுன்னையோராய்மாசறுபிறப்பாமென்னைப்
பதிதனிசைபோடென்றுபகர்ந்தனையென்றுநக்கான். 80

நீயவனிவைகளெல்லாஞ்சினத்துடன்செப்பலோடு
மாயவன்முறுவல்செய்துமணிமுடிதுளக்கிவானின்
றாயவான்முகிலேபோலக்கலன்மெயிற்றலங்கவேகி
மீயுயர்துவசத்தேர்மேல்விதுரன்றன்கோயில்புக்கான். 81

ஏதுகுலத்திறைவனேகவெரியுறுநயனனாகிக்
கதமுறுமனத்தன்காந்திக்கண்ணிவிமதலைசொல்வான்
பதிசனாமிடையன்னைப்பரமனாமென்றுபோற்றி
விதுரனல்விருந்துசெய்தானென்றுரைவிளம்பலுற்றான். 82

ஒருவனுக்குயிரீவார்போலுருகியேயவனைவிட்டே
யிருசியதிகமாகவீந்தவன்றன்னைப்பற்றும்
வரைவிலாமகடான்பெற்றமதலையாமென்றெல்லோருந்
தெரியவேவிதுரன்செய்தசெய்கைநன்றென்றுநக்கான். 83

வல்லியமெனவேசீறிமதியிலானுரைப்பக்கேளாச்
சொல்லியநாவைவாளாற்றுணித்துநின்சிரம்பார்வீழக்
கொல்லுவன்முன்னேனென்சேயாய்ப்பிழைத்தனையென்றுகூறி
வில்லினைமுறித்துவீழ்த்துவிதுரன்போய்க்கோயில்புக்கான். 84

ஏதமில்விதுரன்வில்லைமுறித்துத்தன்மனையினெய்தப்
பூதலத்தரசர்புன்மைபுகலலாகாதென்றேகச்
சூதுறுமனத்தனெண்ணிச்சூரருள்ளமரும்பொய்யா
மாதனமியற்றிமாலைப்பிணித்திடவழைமினென்றான். 85

தூதுவரெய்தியேசுயோதனனழைத்தானென்ன
மாதவனகைத்தாண்டெய்திவயமருளமரும்பொய்யா
மாதனமிசையினேறியடியுறவுறுத்தித்தாளான்
மீதுயரண்டமெல்லாம்விளங்கிடவிமிர்ந்தானன்றே. 86

முடிபுயம்விழிகபேமுகமெலாமனந்தமாகிக்
கடிமலரிமையோர்தாவக்ககனவான்முகடுமுட்டி

நெடியவனுகின்றகிலவரையதனில்வைகுங்
கொடியவர்தம்மையெல்லாமடியினான்மிதித்துக்கொன்றான். 87

வரையிடையடித்துந்தூயவுகிரினால்வகிர்த்துங்காலாற்
றரையிடையரைத்துங்கையாற்பிசைந்துச்சழக்கர்தம்மைத்
திரையுறுகடலுள்வீழ்த்துந்தீயிடைமடுத்துச்செற்றா
னொருநொடியிலெமுன்னமுலகெலாமளந்துகொண்டான். 88

ஆடகமலர்கடூவியமரர்கண்முனியேலென்ன
வீடுமன்முதலினோர்கள்வெருவினான்மறைகொடேத்த
நீடியமுகடுமுட்டநிமிர்ந்தவனஞ்சலில்லா
மூடனைநோக்கித்தூயமுறுவலோடியம்பலுற்றான். 89

அரவுயர்துவசநின்றோடனுசரைவதைப்பனென்று
விரைசெறிதொடைசேர்வீமன்விளம்பியசபதத்தால்யான்
றரையினில்வதைத்திடாமற்றவிர்ந்தனனென்றுசாற்றி
நிருபர்களிறைஞ்சநீண்டவடியினையடக்கிநின்றான். 90

உரககேதனனையோவியுயர்மறையோன்சேய்தன்னை
யிரவியைப்பரிவேடந்தான்வளைத்தமைபார்த்தியென்னத்
தரையிடைவிடுத்தேயாழிதனையெடுத்திருவான்றன்
னிருகையும்பிடித்துச்சேனாபதியெனவிராதேயென்றான். 91

அந்தணன்சிறுவன்றன்னையிரவியைநோக்கென்றாழி
தந்திடுமுன்னஞ்சேனைகாவனீதவிர்கென்றேகிக்
குந்திமுன்பயந்தகன்னன்கவசகுண்டலத்தைக்கோதி
லிந்திரன்கவரமாயமியற்றினானெழில்வண்ணன். 92

இரவிசேயுன்றன்மைந்தனென்பதுகுந்தியென்னுந்
தெரிவைதானுணர்ந்துகூறச்செங்கதிரவன்றன்சேயை
யரவினைப்பின்னும்வில்லாற்றொடுத்தருச்சுனனைக்கொல்லா
விரதமாதாத்தான்வேண்டவிராடன்மாநகரிற்சென்றான். 93

கரியினைவதைத்தோனெய்தக்கண்டைவரிறைஞ்சலோடு
மரவுயர்வேந்தன்றன்பாலணுகியைந்தூர்தான்கேட்ப
வொருமயிர்தனிதானூன்றுமவனியுமீவேனென்று
வரைவிலானுரைத்துச்செய்தவஞ்சமுமொழிந்தான்மாயன். 94

மயிர்தனியூன்றுமண்ணுங்கொடேனென்றமன்னன்போரி
னுயிர்விடச்செருச்செய்தோங்குமொருகுடைக்கீழின்வைகி
யியல்புறுமவனியாளவியற்றுவனென்றேயைவர்
துயரறவுரைத்தலோடுந்தொழுதனர்பாண்டுமைந்தர். 95

வேறு.

நீதுறுமவருடன்போர்செயக்குருக்கேத்திரத்தின்
மாதவனைவரோடுமணிநெடுந்தேரினெய்தி

யேதமிலனிகமேழக்குரோணிக்குமிறைவனாகச்
சூதறுவிராடன்பெற்றசுவேதனைவிதித்தாரன்றே. 96

திருமகள்கொழுநனைவருடன்செருப்பூமியெய்த
வுரககேதனன்றன்சேனையொன்பதுமிரண்டுங்கூடி
வருதொகையக்குரோணிக்கிறைவனாய்வானோர்போற்று
மிருநிமைந்தன்றனைவிதித்தவனேகினானால். 97

அத்தினபுரியையாள்வோனமரிடைவெல்லவேண்டி
மத்திரைக்கிளையமைந்தன்றனைமாமுகுர்த்தங்கேட்ப
வித்தகவிரவிவில்வின்வெண்மதியுடனேகூடு
மத்தினம்பலியையூட்டின்வெல்லலாமென்றானன்றே. 98

நிகரிலாநகுலன்பின்னோனிதழ்த்தியமுகுர்த்தங்கேளா
விகல்புரிசுயோதனன்றானெதிரிலாவுலூகிபெற்ற
புகழுடையவனைக்கண்டுகளப்பலிக்கிசைத்துப்போகத்
தகமையில்கொடியோன்செய்தசதிரெலாமறிந்தனன்மாயன். 99

சிறுவனுமனுசன்றானுமுட்பகையாகச்செய்தால்
விறலுடையவரையுன்னால்வெல்லலாம்வகைவேறில்லை
பொறையுடைத்தருமயானுந்துவரையிற்போவனென்றே
யறையுமாலடியைப்பற்றியவரில்மூத்தோன்சொல்வான். 100

பாலகனுணர்விலாமற்பகர்ந்திடுந்தீமைச்சொல்லை
யாவிலையமருமையவகற்றிநீயருடியென்ன
மேலவன்சகியினோடுமேவுநாட்பின்னாளாக
ஞாயமேலியற்றுவிப்பேனென்றுநாரணனுஞ்சொல்வான். 101

பன்னகவரசன்பாவைபயந்தவன்பகைஞற்கானன்
யென்னைநீர்சமரம்வெல்லக்களப்பலியிடுமினென்ன
மன்னவர்நடுங்கியாங்கள்வனத்திடைப்போவோமென்று
சொன்னவர்தம்மைநோக்கியுலூகிசேய்சொ[illegible]ன். 102

அரவுயர்வேந்தன்கேட்டதினந்தனிலவனுக்கிவன்
விரைவினிலென்னைமுன்னங்களப்பலியூட்டிவென்மின்
றரணியினென்னமாயன்சதுர்த்தசித்தினத்திற்சோம
னிரவியோடுறவெட்டோயமிறையுமாமறையோரென்றான். 103

சிதரன்மொழியக்கேட்டுச்சதுர்த்தசித்தினத்திற்றாய
வேதியர்திலகரெங்கும்விடுத்திடவிதுத்தானெய்தி
யேதமிலிரவியோடுதருப்பணமறையோரீகை
யோதெனநீயிக்குற்றுலவாவதாமென்றுநக்கான். 104

சரியிலாமாயன்றன்னாற்சதுர்த்தசியுவாவதாக
வரவருண்மடந்தைமைந்தனுருப்பெலாமறுத்தங்கிய
விரைவினிற்சமரபூமியெங்கணும்வீசியேதா
நரபலியூட்டிவந்தார்நற்செயமாகவென்றே. 105

அதிரதக்குழாங்கள்சூழவைவரோடரவுயர்த்தோ
னெதிர்பொருசமரந்தன்னிலியாவருமின்றியேமன்
வதையுறுங்கொடுமைநோக்கேனென்றுமாமதியின்வண்ணன்
விதுரனுந்தானுந்தீர்த்தயாத்திரைவிரும்பிப்போனார். 106

உத்தியோகப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 3198.

---

117 - வது, பாரதப் படலம்.

தூதுசென்றைந்தூர்வேண்டிவிதுரன்விற்றுணியச்செய்து
இதையுமொழிந்துவைய்யமூர்ந்துயர்கெங்கைமைந்தன்
வேதியனங்கபூபன்மத்திரன்விடவியாள
கேதனன்மடியவைவர்க்குதவுகேசவன்றாள்வாழி. 1

அரவருண்மடந்தைமைந்தனுருப்பெலாமறுத்துத்தன்ம
னிருநிலமிசையினெய்திக்களப்பலியூட்டினானென்
றுரைசெயநயனமில்லான்சுதனுளங்கனன்றுதேர்மேற்
கரிபரியிரதஞ்சூழக்கடிதினிற்களத்துள்வந்தான். 2

மன்னவர்விறலையெல்லாமதிக்கும்வானதிதன்மைந்த
னென்னையத்தாதனாகவியம்பினானென்றுசீறிக்
கன்னனிச்சமரந்தன்னிற்கங்கைதன்மதலைவீந்த
பின்னர்யான்பொருவனென்றுபேசித்தன்மனையிற்புக்கான். 3

அங்கமனேகலோடுமணியெலாம்வகுத்துப்பாரி
னெங்குமன்னவர்கள்சூழச்சுயோதனனிலங்கிநிற்ப
மங்குலினிடிகளஞ்சவளையொடுபேரியார்ப்ப
கங்கைதன்மைந்தனின்றான்கதிரவன்றோற்றம்போல. 4

அரவுயர்மன்னன்சேனையார்த்தெதிர்வருதலோடு
முரசுயர்வேந்தன்பேரிமுழங்கிடத்தேரினேறிக்
கரிபரியிரதம்வீரர்கணக்கிலார்மிடைந்துசூழ
கிருபரெண்ணனுசரோடுமடைந்தனனெரிகொணெஞ்சன். 5

திருமகள்கொழுநனம்பொற்றேரிடைவலவனாகிப்
பரியினைநடத்தவானிலரியுறுபதாகையோங்கச்
சரியில்வெண்டரளமாலைவயங்கிடச்சார்ந்தபார்த்த
னரசர்கடிசைகடோறுமவனியினிறையக்கண்டான். 6

குரவரைக்கிளைஞர்தம்மைக்குருவினையனுசர்தம்மை
வரிசையார்முன்னோர்தம்மைமைந்தரைமடியநூறி
யிருநிலமாளும்வாழ்வாற்பெறும்பயனேதென்றன்னி
வரிசிலைநிலத்தின்வீழமலர்க்கணீர்சொரியநின்றான். 7

மனமெலிந்தமரினிந்தமன்னவருடனேயென்ற
னினமெலாமடியநாறினென்ன தாமறமென்றுன்னித்
தனைமறந்திருகணீர்பார்நிறைந்திடத்தனுவும்வீழத்
தனியுறுவிசயன்றன்னைச்சுந்தரனோக்கிச்சொல்வான். 8

இருநிலமிசையின்மன்னரியாரையும்வதையேனென்றே
யுருகியமனத்தனாகியுளைந்திடல்விசயாகேணீ
தரையெரியனிலம்வானஞ்சலமெலாம்யானேபோரி
னரசராயெதிர்வோன்யானேயவர்களைவதைப்போன்யானே. 9

அவனியைத்தவிரிவியளந்தயில்பவனும்யானே
புவனமுண்டுமிழ்ந்துகோட்டாலிடந்துபோற்றுவனும்யானே
சிவனயன்வலாரியிந்துசெங்கதிர்முனிவர்தேவர்
பவமுறுமசுரர்வெய்யவிருதர்பார்மனிதர்யானே. 10

ஓதையாருவரியானேயோங்கியபிறங்கல்யானே
பாதவநிரைகள்யானேபழுவம்யான்பசுக்கள்யானே
வேதநாலுடனேயாறுசாத்திரம்யானேமிக்க
போதியான்மணம்யானுண்ணும்பொறிவரியளியும்யானே. 11

இபமுதலுறவிழாயெழுந்தபல்லுயிரும்யானே
தபனனல்லொளியும்யானேசந்திரன்குளிர்ப்பும்யானே
விபவம்யான்வெறுமையானேமேகம்யானுருவும்யானே
சுபமும்யானசுபம்யானேசுவர்க்கம்யானரகம்யானே. 12

அறனியான்மறனியானேயருப்பம்யான்பெருக்கம்யானே
யுறவும்யான்பகையும்யானேயூழியான்முயற்சியானே
விறலியானிழிவுயானேவெற்றியான்றோல்வியானே
பொறையும்யான்முனிவும்யானேபுகழ்ச்சியானிகழ்ச்சியானே. 13

உருவும்யானருவும்யானேயுறுதல்யான்பிரிதல்யானே
திருவும்யான்றவ்வையானேசெனனம்யான்மரணம்யானே
யரிவையாணும்யானேயலியும்யானெலியும்யானே
மருவும்யான்பரிசம்யானேவயங்கல்யான்மயங்கல்யானே. 14

விடமும்யானமிர்தம்யானேவெளியும்யானிருளும்யானே
யடியும்யான்முடியும்யானேயரணும்யான்முரணும்யானே
நெடுமையான்குறளும்யானேநிழலும்யான்வெயிலும்யானே
கொடுமையான்குணமும்யானேகுறைவும்யானிறைவும்யானே. 15

ஆதலாலெவையுமாகியண்டமோரனந்தமென்னுட்
போதயானதனின்வைகிப்புவனமேலிடர்கள்செய்யு
மேதலார்திரள்கள்வீயயானிருந்தியற்றலாலே
காதியகளத்திற்கொல்வைகணைகளால்விசையவென்றான். 16

விசயநீயானேயுன்றன்வில்லியான்விசிகம்யானே
சுசியுறுகதமும்யானேதணிபுமொன்னலரென்சேட்டை

வசையுனக்கெங்கனெய்தும்வருந்தனீயென்றுமாய
னிசைவுறவிளம்பித்தன்பேருருவம்வானிலங்கின்றான். 17

புயல்வணன்சிரங்களெண்ணிற்பொன்முடிதுலங்கக்கண்டான்
கையினுயர்திகிரிசங்குசணிப்பரும்வளைப்பக்கண்டான்
மெயினுறுகலன்கள்கோடியிரவிபோல்விளங்கக்கண்டான்
மயிர்றனிதோறுமண்டம்வயங்கியமாட்சிகண்டான். 18

இருசுடருடுவான்மேகமெண்டிசைப்பாலர்வேலை
வரைசிவன்முனிவர்வேதனிருதர்தானவர்கள்வானோர்
தரையுறுமனிதர்பல்வேறுயிர்சராசரங்களெல்லா
மொருதனியண்டந்தோறுமுறுவனவெல்லாங்கண்டான். 19

அண்டங்கடோறுந்தேர்மேலரியொடுதன்னைக்கண்டான்
மண்டனில்வயங்குகின்றமன்னரோடனீகங்கண்டா
னெண்டவத்தோர்க்குமெய்தாவிறைவன்றன்னுருவங்கண்டு
விண்டனவினையென்றன்னியிறைஞ்சியேவிளம்பலுற்றான். 20

உலகினைப்படைத்துக்காத்தேயழித்தொருமுதலாயோங்கி
நிலனுடைமுதல்வாபோற்றிநேமிசேர்கரத்தாய்போற்றி
யிலகியதிருவாழ்மார்பாபோற்றியென்றேர்மேல்வைகும்
வலவனேபோற்றியென்றுமகிழ்ந்தெழுந்தாடினானால். 21

இறைவநீயற்றியெல்லாக்கருமமும்முடிக்குஞ்செய்கை
யறிவிலாதியானேசெய்வனென்றயராங்காரந்தான்
குறைவிலாதெழுந்துதோன்றுங்கொடுமையையகற்றினாயென்
றெறுழ்வலிக்கரங்கள்கூப்பியிறைஞ்சிநின்றேத்தினானால். 22

அல்லிறவெழுந்துதோன்றுமலரிபோல்விசயன்முன்னர்ச்
செல்லெனவொளிருமேனிதிசையெலாம்விளங்கநின்றே
மல்லரைவதைத்தகோமான்வலவனாயிரதமூர
வில்லினையெடுத்துப்பார்த்தன்விசிகமாமழைபெய்தார்த்தான். 23

இந்திரன்சிறுவன்விட்டவிசிகமெண்டிசையும்போர்ப்ப
வந்தணனவன்சேய்மந்தாகினிசுதனரசரோடுந்
துந்துமிமுழங்கநந்துசறங்கிடத்துரகம்பொற்றேர்
தந்திகண்மிடைந்தேத்தாக்கச்சாயகஞ்சொரிந்தார்த்தாரால். 24

வாயுவின்மதலையோடேவாளரவுயர்த்தோன்றாக்கி
யேயெனும்முன்னம்வில்லோடிரதமுந்துணியப்பாற
தூயமத்திரைதான்பெற்றசுதன்றனக்கிளையோனம்பாற்
றீயவெஞ்சகுனியோடத்தேர்சிலையறுத்தங்கார்த்தான். 25

ஏசிலாவபிமனோடேயிலக்கணகுமரன்றாக்கி
வாசவனிமையோரெல்லாமதித்திடச்சமரஞ்செய்தா
ராசைகடோறும்விஞ்சுமதிரதர்பொருதுமண்மேல்
நாசமுற்றிடச்செஞ்சோரிநதியெனவோடிற்றன்றே. 26

மத்திரவரசன்றேர்மாமறைந்திடவரிவிலாலே
யத்திரமாரிதூவியசனியுமஞ்சவார்த்த
வத்தான்றன்னையஃகியுமிழ்வுறவாளிதன்னாற்
சித்திரவதஞ்செய்தார்த்தான்சிருறாகுலன்மாமன். 27

தூயமாவிராடன்மைந்தன்மடிந்திடச்சுவேதன்சீறிப்
பாயுமாவிரதந்தூண்டிப்பல்லவமாரிபெய்து
பேயமேபோலவெய்யினைத்தின்மத்திரர்கோன்மார்பி
னாயிரங்கடியவாளியழுத்திடப்பாரினானல். 28

வீமென்சகுனிதய்யவேதியன்விடசேனன்றான்
கோடகத்தாமாபூரிச்சிரவிவர்கொதித்துவந்து
பீடுடைச்சுவேதனம்பாற்பெற்றவிறலழிந்தேயோட
வீடியபிணத்தின்குப்பைவிலங்கல்போலுயர்ந்ததன்றே. 29

நிலைகுலைந்தெழில்கொள்சங்காசுதனிலத்தோடநேரின்
மலைமகள்கொழுநனிந்தவரத்தினாற்சுவேதமன்னன்
சிலைகரத்திருக்கத்தோலானென்றசரீரிசெப்ப
விலகியவிரதமீதினெதிர்த்துவந்தினையசொல்வான். 30

வானுறாதிர்போற்றுய்யவாண்மழுக்கலைதவிட்டார்த்துச்
சானவிபுதல்வன்மச்சன்றனயனைநகைத்துநோக்கி
யூனமில்சிலையின்கல்வியன்றிவேறென்றுங்கல்லா
வீனனீயெனவேவில்லையெதிர்த்துவாவெடுத்துவந்தான். 31

வாளினைச்சுழற்றித்தேரினிழிந்துமாமுழையைவிட்ட
கோளரிபோலவார்த்துக்குறுகியசுவேதனறன்னை
நீளியபாழியாலங்கதப்புயலிலத்தின்வீழ்த்தி
மீளவுமவன்றன்சென்னியறுத்துவீடுமனங்கார்த்தான். 32

கூரானுஞ்சுவேதன்சென்னிதுணித்தவீடுமனைநோக்கி
வீரியவரசரோடுஞ்சுயோதனன்மகிழுமிக்க
வாரியிற்பருதியேகிமறைதலுமன்னரெல்லா
நேரிலாப்பாடிவீடுநிறைந்திடவிருந்தாரன்றே. 33

இரவிவந்துதயமாகவிரண்டதாந்தினத்திற்றன்மன்
பரிவொடுதுரோபதன்றன்பயந்திடுகுமரன்றன்னைக்
கரிபரியிரதங்காலாளனிகக்காவலன்றானாக்கி
விரைவினிற்சமரபூமியிடைந்துவந்தார்த்தாரன்றே. 34

விடவரவுயர்த்தகோமான்வீடுமன்முதலாம்வீரர்
கடகரியிரதம்வீரர்கணக்கிலாருடனேதாக்க
முடியுறுசிரங்கள்வானின்முகடுறக்கவந்தமாடப்
படியினிற்குருதிவெள்ளம்பரந்திடப்பொருதாரன்றே. 35

அதிரதவீரர்தாக்கியகணைசொரிந்துவந்தே
கதமுறுமிபமாவீழக்கடுஞ்சமர்செய்யுங்காலை

மதியொளிதிகழவெய்யோன்மறைதலுமன்னரெல்லா
முதியுள்வாங்குஞ்செய்கையொத்துத்தம்பிருக்கையுற்றார். 36

ஆன்றபேருலகுக்கெல்லாமவிரினையருளும்வெய்யோன்
றோன்றிடத்தூரகங்கைமாச்சூரர்கண்மிடைந்துசூழ
மூன்றதாங்கிலத்தின்வெய்யமுடங்குளைக்குற்றசீற்றம்
போன்றுமாமன்னரெல்லாம்பொறியுறுகணைபெய்தார்த்தார். 37

சங்கைமாதருளுமைந்தன்கடையுகவிறுதிகால
மங்கைபங்காளன்போலமுனிந்துமாவாளிதூவச்
சிங்ககேதனன்மாவல்லோன்சினிசுதன்றேர்விலின்றிச்
செங்கண்மால்விசயன்சேனைவிரிந்தனர்திசைகடோறும். 38

தாலகேதனன்றன்வில்லால்விடுத்தசாயகங்களெங்கு
மாலமாவிடமேபோலவரித்திடவரசரெல்லா
ஞாலமேன்மடியவெண்ணில்கவந்தங்கணடிக்கவோங்கும்
வேலைபோலருணநீர்பார்பரந்தவெள்ளிடையுமின்றி. 39

வாரியைச்சுவறவாங்கும்வடவனலென்னவாளி
யேருறுங்கங்கைமைந்தன்பொழிந்திடவெதிர்கிலாமல்
வீரியர்மடியநோக்கிவிசயன்றான்றடுக்கவில்லா
தாரியன்முனிந்துதுய்யவாழியைச்சுழற்றிச்சென்றான். 40

ஆடகன்றன்னைச்செற்றாழியைக்கரத்தினேந்தி
மோடுடைக்கனமேபோலமுடுகியேகிலத்தினெய்த
வீடுமனோக்கிச்சிந்தைவெருவநாக்குழறவந்து
வாடியமனத்தனாகிவணங்கிநின்றிவைகள்சொல்வான். 41

இரணியனவன்றன்பின்னோனிராவணன்கும்பகர்னன்
முரணுறுநரகன்கஞ்சன்முரனுறுசேதிபன்றன்
றரணியின்மடிந்துவீழத்தாக்கியசோதியென்றின்
கிரணநேராழியேந்திக்கிளர்ந்ததென்மொழிநீயென்றான். 42

மீளியாய்க்கனகன்றன்னைவதைத்திடும்விமலனேயுன்
றாளினையேத்திவாழுஞ்சமனிலாவடியார்பாதத்
தூளியாய்த்திரியுமென்மேற்சுடருறுதிகிரியேந்தி
மூளும்வெஞ்சினத்தனாகிவந்ததென்மொழிதியென்றான். 43

செருவினிற்றிகிரிமாயனெடுக்கயான்சமர்செய்வேனென்
றுரககேதனன்முன்னோதுமடியனென்றுரைபொய்செய்யாக்
கரமிசையாழியேந்திக்கமலங்கொளெழிலிபோலத
தரைமிசைநடந்துவந்ததயாபரவென்றுசொல்வான். 44

தீயவனாகிவைதசேதிபனுயிராஞ்சோதி
மாயவுன்னடியினெய்தமற்றவன்சிரத்தைத்தள்ளுந்
தூயவில்வாழியென்னைத்துணித்திடவிடுதியென்றே
யோய்விலாத்துதிசெய்நாவனுரைத்தடிவணங்கினானால். 45

வீடுமன்வணங்கியேத்தவிமலன்வெண்முறுவல்செய்து
கோடகம்வயங்குந்தேரிற்குறுகலும்விசயன்மாயன்
மோடுடைத்திகிரிதொட்டதெனைமுனிந்திகழ்வாரென்றே
நீடியசரங்கள்வானினிறைந்திடத்தூவியார்த்தான் 46

பரவையெண்டிசைகளெல்லாம்பரந்திவொளிதன்று
னுரககேதனன்றன்சேனைமடிந்துயர்வேந்தரெல்லா
மிரிதலுமிரவியேமறைந்திடவிருபாலுள்ள
வரசர்களனிகத்தோடும்பாடிவீடணுகினரால். 47

மேலவன்குணபாற்றிக்கின்விளங்கியேயுதயஞ்செய்ய
நாலதாதினத்தின்வேந்தர்நண்ணிவெங்கணைபெய்தார்த்துச்
சூலம்வான்முசுண்டியீட்டிதோமரங்குந்தம்வீசி
யாலமாவிடமேபோலவடல்பொருதவிந்தாரன்றே. 48

குருதிமாநதிபோலோடக்கோடகம்வயங்குதேர்மேற்
பொருதும்வீரியர்கண்மாளப்புசரிபமடிந்தவீழ
விருதுறுமரசரெல்லாம்வெஞ்சமர்விளைக்கும்வேலை
பருதிபோய்மறைதலோடும்பாடிவீடணுகினரால். 49

விஞ்சியகுணபால்வேலைவெய்யவனுதயமாக
வஞ்சதாந்தினத்திற்பேரியறைந்திடவரசரெல்லாங்
குஞ்சரங்கொடிகொடேர்கள்கோடகமடிந்துவீழ
வெஞ்சரம்பொழிந்துவானோர்வெருவிடவார்த்தாரன்றே. 50

கரியுரிபோர்த்தோன்போலக்கனன்றுயர்வீமன்றண்டா
னிருபர்கண்மடிந்துவீழநிலத்திடையரைத்துத்தூய
பரியினைப்பதத்தாலெற்றிப்பன்மணித்தேரைவீசி
யரவுயர்வேந்தன்பின்னோரைவரைவதைத்தேயார்த்தான். 51

அனுசர்கண்மடிந்தவீழவரவுயர்துவசவேந்தன்
மனமெலிந்திரங்கிக்கங்கைமைந்தன்றன்னடியின்வீழ்ந்தே
யுனையுறுதுணையாயுள்ளோனிடர்க்கடலுறவோவென்று
துனியுறுமவனைநோக்கிப்பிதாமகன்சொல்லலுற்றான். 52

மன்னவகேட்டிபாண்டுமைந்தர்கள்விறலையெல்லா
முன்னம்யான்மொழியக்கேளாய்மூண்டெழுசமரிலுன்றன்
பின்னவர்போலயாமுமடிவதுபின்னிகாண்டி
கன்னனுஞ்சகுனிதானுங்கழறிடமகிழ்வாயென்றான். 53

உரககேதனனுக்கிவ்வாறுரைத்துயர்வீடுமன்றான்
வரிசிலைவளையவாங்கிவாயுவின்மைந்தன்மீதிற்
கருமுகில்பொழிந்தாற்போலச்சுடுங்கணைசொரிதலோடு
மெரிசகாசுதனுமம்பாலறுத்தனனிமைப்பின்முன்னம். 54

வெந்திறற்கங்கைமைந்தன்பின்னரும்விசிசந்தூவ
விந்திரன்மைந்தன்வீமனிவுளியைநடத்தவல்லோன்

சிந்தியபசழியாலேதேருயர்துவசம்வீழ
முந்திமுதாதைவில்லுமுறிந்திடப்பாதினனால். 55

வரிசிலைப்பார்த்தன்வீமன்மாவலோன்சாதேவன்ற
னுருமெனவதிருந்தேரினுற்றுமாவாளிபெய்ய
வரசர்கண்மடியப்பேய்களாடவேகுருதியோட
விரவிபோய்க்குடபாலேகப்பாடிவீடெய்தினரால். 56

ஆதவனுதஞ்செய்யவாறதாந்தினத்தின்வெய்ய
போதகமிரதமெண்ணில்புரவிகணெருங்கவீர
ரோதையாருவரிபோலவார்த்துயரும்பரிம்பர்
மாதிரமறையவில்லால்வாளிமாமழைபெய்தார்த்தார். 57

விசயனுசுகன்றன்மைந்தன்விறல்செறிகடோற்கசன்றன்
வசுவரிபோல்வில்வாளிபொழிந்திடவயவர்மாண்டு
தசையுறுகுருதிமண்ணிற்றரங்கமார்நதிபோலோட
நிசியுறவிரவிவீழநிருபரில்லடைந்தாரன்றே. 58

இரவியுங்குணபால்வேலையிலங்கவேயேழாநாளின்
முரசொலிகறங்கப்பேரிமுழங்கிடவரசரெல்லாம்
பொருகரிபரிகள்சூழப்புணரிபோலனிகமார்ப்ப
விரைவினிற்களத்தினெய்திவெஞ்சமர்விளைத்தாரன்றே. 59

மிடலுடையரசரெண்ணில்விசிகத்தாற்பரிகள்வீழப்
புடவியிற்புகரிபங்கள்பொருப்பெனவிழவேறிக்
கடலெனக்குருதியோடக்கவந்தங்களாடவெய்யோன்
குடகடலடையப்பாடிவீட்டினிற்குறுகினரால். 60

என்றுயர்குணபால்வேலையிலங்கிடவெட்டாநாளின்
வென்றிகொளரசரெல்லாம்வெஞ்சமர்விளைத்துவிஞ்சு
குன்றெனப்பூழ்க்கைவீழக்குரகதமுருளவீரர்
பொன்றிடக்கணைகண்மாரிபுயலெனப்பொழிந்தாரன்றே. 61

அரவருண்மடந்தைமைந்தனயரினிலனந்தமான
வுருவமாய்த்தீயாய்க்காற்றாயும்பருநடுங்கமோதிக்
கரியினமிவுளியீட்டங்கனகமாத்தேரின்வீரர்
புரவலர்மடியக்காலன்போலவேயமர்செய்வேலை. 62

நகபதிபொருவுமெய்யனலமிலாநிருதர்கோமான்
சிகிபதியென்வேவெய்யசினத்தினலம்புதன்றன்
ககபதியுருவமாகிக்ககனமீதெழுந்துவந்தே
மகபதிசுதன்சேய்தன்னைவாளினாற்றுணித்துவீழ்த்தான். 63

மாசுணமடந்தைமைந்தன்மடிதலும்வெகுண்டுமோது
மாசுகன்குமரன்றய்யவபிமனுங்கடோற்கசன்றன்
றேசுறவிசயனோடஞ்சிலீமுகமாரிபெய்ய
வேசறுமிபமாமாளவிரிந்தனரரசரெல்வாம். 64

கதங்கொளுங்கிருபர்மாளக்கவிறுறுமணியினாலே
விதங்கொளுமிரதம்வீழவிலங்கல்போலிவுளிசாய
மதங்கொளுமிபங்கண்மாயமன்னவர்வெருவியோடப்
பதங்கன்வாரியினின்மூழ்கப்பாடிவீடணுகினானால். 65

பன்னகத்துவசவேந்தன்பாடிவீடணுகியாங்கே
யொன்னலர்விறலையெல்லாமுன்னியங்குவமையில்லாக்
கன்னனையழைத்துநீயுன்கணைகளாமாரிபெய்தே
யென்னிடர்களைந்தவோர்சஞ்சிரத்தினைத்துணித்தியென்றான்.

ஈனமுற்றிராசராசனியம்பிடக்கன்னன்சொல்வான்
சானவிதனயனென்னைச்சமரிலத்தரதனென்ற
வூனமதொழியப்புல்வாயுற்றிடக்கவ்வுவானே
னானமர்பொருதுவென்றுநாடுனக்களிப்பனென்றான். 67

அங்கர்மன்கூறக்கேட்டேவறிவிலாவரவுயர்த்தோன்
வெங்கணானதுச்சாதனனைநீவிரைவினெய்திக்
கங்கைதன்மைந்தனோடென்னானன்னலரைவெல்லப்
பொங்குவெஞ்சமரினாளைப்புக்கவச்சொல்லுகென்றான். 68

முன்னவனுரைப்பக்கேட்டுமுறைமையில்பின்னோன்சென்றே
யின்னலில்காங்கயன்றன்னிணையடியிறைஞ்சிநின்று
கன்னனென்னலரைவெல்லநாளைப்புக்கவ்வுவாயென்
றன்னைமன்சொன்னானென்னப்பிதாமகனுரைக்கலுற்றான். 69

மன்னவற்கிளையோய்கேட்டிவாசவன்மைந்தனாலே
யின்னிலமதனினாளைக்கழியயானிறந்தபின்னர்க்
கன்னனென்னலர்கண்மாளக்கடுஞ்சமர்பொருதுவென்றே
யன்னவனோடுங்கூடியாளுமினரசையென்றான். 70

மறுவிலாக்கங்கைமைந்தன்கூறியவசனமெல்லா
மறனுறுகயவனேகியரவுயர்த்தோனுக்கோத
நெறியுறுமன்னன்கன்னன்றன்னோடுநெடிதுநேர
முறுவனகருமமோதிச்சேக்கையினுறங்கினானால். 71

உததியினவெரிதோன்றவொன்பதாந்தினத்தின்வெய்ய
வதிரதர்மிடைந்துசுற்றவறன்சுதனெய்தவானி
னதிசுதனனிகமார்ப்பநாகமார்துவசனோடெங்
கதுமெனவடர்ந்துவில்லாற்கனமெனக்கணைகள்பெய்தான். 72

சானவியருளுமைந்தன்விடுத்தசாயகங்களெல்லாம்
வானவர்பதிதன்மைந்தன்வாளியாலறுத்துமாற்றிச்
சோனைபெய்வதுபோலெங்குஞ்சுடர்முகப்பகழிதூவச்
சேனைகண்மடியவெய்யோன்மறையத்தம்மிருக்கைசேர்ந்தான். 73

தினகரனுதயமாகத்தசமதாந்தினத்திற்றுய்ய
கனகமாதானஞ்செய்துகருத்தினிலரியைவைத்துத்

துனிகளைந்தனங்கனம்பாற்றுவக்கிலான்றுவசமீதிற்
பனைகவினுறவேதேர்மேற்பரிதிபோனின்றான்மாதோ. 74

முரசுயர்வேந்தன்பின்னோரனிகமுமொய்ப்பவேதி
யரவுயரரசன்சேனைதன்னுடனமர்செய்வேலை
வரிசிலைப்பார்த்தன்மந்தாகினியருண்மைந்தனோடு
சுரர்துதிசெய்யவெம்போர்தொடங்கிமாவாளிபெய்தான். 75

விசயனெய்விசிகந்தன்னைவீடுமென்கணையான்மாற்றிச்
சுசியுறுவாளிமேகம்பொழிவபோற்சொரிந்துவெய்ய
வசுவரிசகாத்தன்மைந்தன்மாவலோன்வெருவியோடச்
சசியுறசடையன்போலத்தானையைச்செற்றானன்றே. 76

உருத்தெழுமுருத்திரன்போலுயர்திரிபதசைபெற்ற
விருத்தனெய்விசிகந்தன்னால்வீடியமனரைநோக்கி
வருத்தமோடணைவனென்றமாதுருத்தவிர்ந்துவந்த
கிருத்திமச்சிகண்டிதன்னைக்கேசவன்பொருதியென்றான். 77

மாதவனருடலோடுமெறனுறுசிகண்டியெய்ய
நீதிசேர்கங்கைமைந்தனிராயுதனாகிநிற்ப
வேதமில்விசயன்வில்லாலிமைப்பின்முன்னெண்ணில்கோடி
யாதவனவிரைமானுமாசுகமழுந்தவெய்தான். 78

மாகவானருளுமைந்தன்வாளிதன்னுரங்கைகாலோ
டாகமுட்டுளையாயேகவாவிதன்னுடலையோவி
யேகுமுன்றடுத்துத்துய்யவிரவிபோய்மகரம்பற்றப்
போகுதியென்றுள்வைத்துவீடுமென்புவியிற்சாய்ந்தான். 79

ஆதியைக்கருத்துள்வைத்தேயாசுகவணையின்மீதின்
பூதலமிசையிற்சாய்ந்தபகீரதிபுதல்வன்பாதத்
தேதமிலவரோடுஞ்சுயோதனனிரங்கிவீழத்
தீதகல்காங்கயன்றான்றேறியேசெப்பலுற்றான். 80

விதியினையாவராலும்வெல்லலாம்வகைவேறில்லை
மதியிலார்போலநீயிர்வாடுமெதிழுக்கென்றோதி
யெதுகுலநாதன்றன்னையிறைஞ்சியேயடியேனுக்குன்
பதமருளென்றுகையாற்றொழுதனன்பவங்கடீர்ந்தான். 81

உரககேதனனைநோக்கிப்பிதாமகனுரைப்பானென்றன்
சிரமிகத்தாழ்கையாலேசிறந்ததோரணையுந்தந்து
பருகநீர்தருதியென்னப்பஞ்சின்மெல்லணையுந்துய்ய
விரைசெறியமுமீயநகைத்திவைவிளம்பலுற்றான். 82

படுகளத்தியல்பலாதபஞ்சின்மெல்லணையோடிந்நீர்
மிடலுடையரசர்தல்விழுமியதன்றென்றோதி
வடிவுடைவிசயன்றன்னைவழங்கெனவாளிமூன்றா
றொளையினாலெழிக்கக்கங்கைசுதன்சென்னிசமர்ந்தனன்றே. 83

சிரசினையெடுக்கமுன்றசிலீமுகம்விடுத்துப்பார்த்தன்
றரையினையுருவவேயோர்சாயகம்விடலுமந்தப்
புரையிலுளயத்தின்றுரைபொக்கிடக்கங்கைமைந்தன்
பருகவவ்வழியினீரையடைத்தனன்பகழியொன்றால். 84

சாயகவணையுநீருந்தந்திடுவோனைநோக்கித்
தூயளாங்கங்கைமாதின்சுதன்மகிழ்ந்தினிமைகூறத்
தீமையில்சகாதேவன்றன்சிலையுறுசரங்களாலே
யேயெறுமுன்னங்கூடமிலங்கிடவமைத்தானன்றே. 85

கன்னன்வந்திறைஞ்சலோடுங்கங்கைதன்மைந்தன்சொல்வா
னின்னிலமதனின்மிக்கவிரதனீயேயாவன்
பின்னைதன்மணாளன்செய்யும்பேர்க்கொணாமாயத்தாலே
யுன்னையத்தரதனென்றிங்கோதினேனென்றுசொல்வான். 86

பன்னகத்துவசன்றன்னைப்பகீரதிமைந்தனோக்கிக்
கன்னையுன்றன்சேனாபதியெனப்பட்டங்கட்டி
யுன்னியகருமஞ்செய்திபோதியென்றுரைத்தலோடு
மின்னலார்மனத்தன்பாடிவீட்டினிலெய்தினானால். 87

தருமனையனுசரோடுந்தழுவியுன்றடக்கைதன்னாற்
பரகதியடையும்வண்ணம்பயந்திலமளித்தியென்றே
யுரைசெய்தங்கவரையேவியுலகளந்தவனைநோக்கிக்
கருவினிற்புகாமலென்னைக்காத்தருண்முதல்வவென்றான். 88

வீடுமெனுரையைக்கேளாவெய்யவன்மகாமுற்றாற்
பீடுடைக்கதியையீவனென்றரிபேசவென்று
நீடியகடலின்மூழ்கநெடுந்தவரெய்தலோடுந்
தோடுடைக்கங்கைமைந்தன்றொல்வழிப்புராணங்கேட்டான். 89

வாரியினலரிகேழ்பால்வயங்கிடப்பதினோராநாட்
பாரினென்றுரோணன்சேனாபதியெனவயங்கித்தோன்றப்
பேரிமாமுரசமார்ப்பப்பெருங்கடற்சேனைசூழ
வீரியவரசரெல்லாம்வெஞ்சமர்விளைத்தாரன்றே. 90

ஆசறவிலங்குகின்றவபிமனத்திரத்தினாலே
மாசுணத்துவசன்மைந்தன்வயக்குதேரழியவோட்டி.
வேசுறமவனைப்பற்றியிருகரம்பிணித்தலோடு
மாசின்மத்திரத்தார்கோமான்வடவைபோன்முனிந்துவந்தான். 91

வடிவுடையபிமன்மேலேவந்தமத்திரத்தார்கோனைக்
கடுவிடமெனவேசீறிக்காலின்மாமதலையெய்தி
மிடலுடைவயிரத்தண்டால்விலங்கன்மேலிடிவீழ்ந்தென்ன
முடிமணிசிதறிவீழமோதியங்கார்த்தானன்றே. 92

காலின்மாமதலையெற்றக்கதையின்மத்திரத்தார்கோமான்
கோலமார்முடியின்மிக்ககொழுமணிசிதறிவீழ

ஞாலமேல்வானினோங்குநகம்விழுந்தெனவேசாய்ந்து
சீலமார்குணத்தான்பின்னர்த்தெளிவுறப்பாரினானால். 93

மாயவன்மருகனென்னோடெதிர்ந்தமத்திரத்தார்கோனை
யேயெனாமுன்னம்யானேசெயிக்குமுன்னெதிர்ந்துவென்றாய்
போயதென்விறலின்றென்றுவீமற்குப்புகலும்வேலை
தூய்மையில்சுயோதனன்றன்சுதனிலனோடினானால். 94

காமுறுபாசத்தோடுமிலக்கணன்கலங்கியோட
விரைவினிலிவுளித்தாமாமேவித்தன்றேரிலேற்றச்
சுரர்பதிசுதன்வில்லாலேசுடுகணைசொரிதலோடு
மரசர்கள்வெருவியோடவருக்கனாழ்கலியினாழ்ந்தான். 95

கடலிடையலரிவீழக்கட்செவியுயர்த்தகோமான்
படியினில்வயங்குகின்றபாடிவீடதனின்மேவி
யிடலுடையபிமனெய்தியிலக்கணன்றோளைவீக்க
விடையினிற்றடுக்கலாதிரிற்றநும்வீரமென்றான். 96

இந்திரன்சுதன்றன்மைந்தனிலக்கணன்றோளைவீக்கு
நிந்தனையொழியநாளைத்தருமனைநீங்கள்பற்றித்
தந்திடில்வென்றியாமென்றரவுயர்வேந்தன்சாற்ற
வந்தணனதனைக்கேளாவிம்மொழியறையலுற்றான். 97

வெறிமலர்த்துளவனோடுவிசயனைச்சமரபூமி
பிறியவேயறையைக்கூவிப்பேர்க்கும்வீரியருளாரேன்
மறனுறுதருமன்றன்னைப்பற்றுவனென்னும்வாய்மை
யறைதலுமந்தன்மைந்தனரசர்வல்லீரோவென்றான். 98

வேறு.

துரியோதனனிவைகூறிடத்துவராபதியாள்வோ
னருள்வீரருந்திரிகர்த்தருமமிர்தாசனர்க்கிறையோன்
றருசூரனையாமேயறைகூவித்தனிசெய்தே
பொருவோமிதுசரதம்மெனச்சபதம்பலபுகன்றார். 99

அரிமைந்தருந்திரிகர்த்தருஞ்சபதம்பலவறையப்
பெரிதின்பமோடரவக்கொடிப்பெரியோனுளமகிழாத்
தரளம்முயர்சசிபோலொளிதருதாவடநல்கி
யிருள்விஞ்சிடத்தத்தம்மிடமெய்தித்துயின்றனரால். 100

இரைவேலையின்மார்த்தாண்டனங்கெழவீரறுதினத்திற்
றிருமாலருள்புதல்வோருடன்றிருகத்தருமேகிப்
பொரவாவிசயாவென்றறைகூவப்புயலெனவே
யரிகோல்கொளுமிரதத்தருச்சுனன்போயினனவர்மேல். 101

அரிதன்னுடன்விசயன்பொரவறைகூறுமன்னவர்பால்
விரைவின்னுறவனிலன்மகன்விறல்விஞ்சியநகுலன்

றருமன்றனொடுசகதேவன்வெம்பரிதந்திகணிறைய
வரிவெஞ்சிலைவிளைத்தாசுகமழைபோலுறப்பொழிந்தார். 102

கறைதங்கியவெரிவன்னெனக்கன்னன்கணைபொழிய
மறைதங்கியகரவன்மழைபோல்வாளிகள்சொரிய
வெஃறிதங்கியதொடைமார்பினன்வீமன்முதனிருபர்
நெறிதங்கியதருமன்முனர்நில்லாதிரிந்தனரால். 103

அரிவந்திடவெருவுங்கரியினமாமெனமரசர்
தரையின்கணினிடைந்தோடிடத்தருமன்னகைசெய்தே
வரிவெஞ்சிலைசிறுநாணொலிவானெண்டிசைமலைப்பச்
சொரியுங்கனநிகராமெனச்சுடர்வாளிகள்சொரிந்தான். 104

சூர்தன்படியளவாயுயர்முரசக்கொடிதுலங்கத்
தருமன்னெழிற்றேர்மேலொளிர்தபனன்னெனத்திரிந்தே
விரைவிற்கணைசொரிந்தார்த்திடவிறன்மன்னர்கண்மடிந்தார்
கரியிற்றனபரியற்றனகவந்தங்கடிதாட. 105

மின்னிப்பொழிமழையாமெனத்தருமன்விடுகணையாற்
பொன்னிற்பொலியிரதஞ்சிலைகவசம்பொடியாகக்
கன்னன்பரித்தாமாவுடனிருகண்ணிலிமைந்தன்
வென்னிட்டனர்மறையோன்விசையோடகிலனோட. 106

அரவத்துவசன்வேதியனருக்கன்மகன்முதலா
கிருபத்திரளிடைந்தோடிடநெறியிற்பகதத்தன்
வரையொத்தடர்கரிசுப்பிரதீபத்தினின்வந்தே
யெரியொத்திடுசுடர்வாளிகளெங்கும்பொழிந்தார்த்தான். 107

மதமுற்றிடுகரிசுப்பிரதீபம்வரையெனமண்
புதைவுற்றிடநடந்தேவிழிபொறியுற்றிடவடர
மிதிபட்டிடனெரிந்தார்பலர்விபுலக்கணின்மிடைந்தே
யுதைபட்டிடவுருண்டார்பலருரங்கால்கரமொடிந்தே. 108

கூற்றம்மெனக்கொலைசெய்திடுங்கொடிதாகியவிபத்தை
யேற்றின்றுரமரன்போன்முனிந்திடும்பாசுரன்மருகன்
காற்றொத்திடும்விசையாம்பதினாயிரங்கரியாய்ச்
சீற்றம்முறப்பலகோடுகளுறக்குத்தினன்றிறலால். 109

பொய்யானைகளாய்மாருதிபுதல்வனுறக்குத்த
மெய்யூறியகுருதிப்புனல்விழவுஞ்சலியாம்தார்
கையாற்கொலைசெய்யுங்கரிமீதிற்பகதத்த
னையானனனெனவேமுனிந்தழல்வாளிகள்பொழிந்தான். 110

நாகன்சுதன்கணையாலடர்நாகத்தொளிர்மருப்பா
லரியுற்றிடுமுலர்காடெனவறத்தின்மகனனிகந்
தலையின்மடிந்திடும்வேலையினெதிர்த்தோர்களைத்தடிந்தே
விரைவின்றுயர்காண்டீபமன்விமலன்றனொடும்வந்தான். 111

சுரர்தம்பதிசுதனெய்திடச்சுடுநீயெனமுனியா
நரகன்சுதன்விடுநாரணன்படையெண்டிசைநடுங்க
வருவெம்மையையறிந்தேயரிமார்பினிடையேற்பத்
தரளம்மொளிர்வடமாயுரமீதிற்றயங்கியதே. 112

நரகன்சுதன்விடும்வெம்படைநாராயணன்மார்பிற்
றரளம்மொளிர்வடமாயிடத்தவத்தோர்மலர்சொரிந்தார்
பொருவெஞ்சிலைவளைத்திந்திரன்புதல்வன்கணைவிடவே
கரிபட்டிடப்பகதத்தமன்மடிந்தான்கனவரைபோல். 113

வேறு.

இந்திரன்சுதனம்பாலேயெதிரிலாப்பகதத்தன்றான்
றந்தியினுடனேமாளத்தபனன்போய்மறைதலோடுஞ்
சிந்தையிற்றுயரமெய்திச்சுயோதனனிருக்கைசேர
வந்தணன்றன்னைநோக்கியங்கர்கோனறையலுற்றான். 114

இன்றுநீதருமன்றன்னைப்பிணிப்பனென்றியம்புஞ்சொற்கள்
குன்றிடநெஞ்சிற்பீதிகொண்டிவண்பெயர்ந்ததன்மை
நன்றெனநகைத்தலோடுநான்மறையுணருநாவோ
னென்றியசினத்தனாகியிரவிசேய்க்குரைப்பதானான். 115

இருநிலமிசையின்வானினெண்டிசையதனின்விஞ்சுந்
தருமன்வில்விறலுக்கொத்தாருளரெனிற்சாற்றுவாய்நீ
செருவிடையவன்றன்முன்னஞ்சிறிதுபோதாற்றுகில்லா
யுரைவலனென்றுசொன்னாலுறும்பயனில்லையென்றான். 116

இருபிறப்பாளனிவ்வாறுரைத்துத்தன்னிருக்கைசேர
வரவுயர்வேந்தன்மன்னரனைவர்க்கும்விடையையீந்து
தெரிமலர்ச்சேக்கைமீதிற்றுயின்றனன்சிறப்பான்மிக்க
தருமன்றன்பாடிவீட்டிற்றானையோடமர்ந்தானன்றே. 117

பருதிநீள்பரவைமீதின்வயங்கிடப்பதின்மூன்றாநாள்
விருதுறவறையிற்கூவும்வேந்தர்மேல்விசயனேகச்
சுருதிநூல்வல்லோனேகித்தொலைவிலாவனிகஞ்சூழ
வருதுனியகலவாழிப்பேரணிவகுத்தானன்றே. 118

சமீரணன்சிறுவன்றன்னைச்சாத்தகிப்பெயரினானைக்
கமையிலாச்சுயோதனன்றன்கனிட்டர்காலிங்கரோடு
மமர்பொரவருதிரென்றேயடர்ந்தறைகூவலோடு
முமையவள்கொழுநன்போலவுருத்தவர்சென்றாரன்றே. 119

ஆழியின்யூபந்தன்னைவகுத்தவந்தணர்தங்கோமா
னாழியினெழுந்துதோன்றுமுருத்திரமூர்த்தியொத்துப்
பாழிகொள்சிலையினாலேபல்லவமென்மேற்றூவி
வேழமாமடிந்துவீழவேந்தரைவதைத்தான்மன்னோ. 120

கறையடியிவுளிவீரர்கணக்கிலார்மடிந்துவீழப்
பிறைமுகவாளிதூவிப்பிஞ்ஞகன்போலத்தோன்று
மறையவனுடனேதாக்கிவரிசிலையறப்பாஞ்சாலன்
சிறுவன்றோழியவோடித்தருமனைச்சேர்ந்தான்மாதோ. 121

தரையினிற்பாறிவந்ததுரோபதன்றனயன்றன்னை
வெருவலையென்றுகூறிவிழுமியதருமனுங்கே
யரிதிருமருகனானவபிமனைநோக்கிநீயே
பொருகுதிநேமிரூபப்பொறியினையழித்திண்டென்றான். 122

வீமன்றன்முன்னோன்கூறவவனடியிறைஞ்சிமிக்க
காமனுநாணுமெய்யிற்கவினுறுமபிமன்றேர்மேற்
சோமனைநிகர்த்தகொற்றக்கவிகைவான்றுலங்கவேதன்
மாமனைப்போலத்தோன்றிமாற்றலர்வெருவப்போனான். 123

சக்கரரூபம்பற்றிப்பொருகின்றதானையெல்லா
மக்கணமடிந்துவீழவதிரதர்வென்னிட்டோடத்
திக்கெலாமறையவொப்பிலிந்திரன்சிறுவன்செம்ம
லுக்கிரக்கணைகள்கோடிபொழிந்தனனுதிரமோட. 124

வேதியனங்கபூபன்விறலுடைமகதன்பூரி
நிதகலிவுளித்தாமாச்செயித்திரதன்காந்தாரன்
பூதலத்திரதமாவிற்பொடிபடத்திசைகடோறும்
பீதிகொண்டோடவெய்யபிறைமுகப்பகழிபெய்தான். 125

மாலின்மாமருகன்வாளிபொழிந்தவன்மலையும்போழ்திற்
காலின்மாமதலைவெய்யசெறுநரைக்கதையான்மோதிக்
கோலமார்தருமன்முன்னிற்குறுகியாண்டிறைஞ்சியந்தோ
பாலனைக்காலன்போன்றபகைஞர்முன்விடுத்தாயென்றான். 126

தருமனோடிவையையோதிச்சமீரணன்சிறுவன்றண்டால்
விரைவினொன்னலரைமோதிச்செலவிடவரவுயர்த்தோ
னுரையினாற்சிந்துநாடனொருகோடியிவெமுன்ன
ரரனருள்கொன்றைமாலையனத்தினெறிந்தானம்மா. 127

சிந்துநாடாளுமன்னன்றிரிபுராந்தகன்றான்முன்னாட்
டந்திடுங்கொன்றைமாலைதன்னினாலெறிதலோடும்
வந்தனைசெய்துவீமன்மைந்தனின்றிறந்தானென்றே
கந்தனார்தந்தைமாலைகடக்கலானிரங்கும்வேலை. 128

விரைவினிற்பொருதிவென்றுமீண்டவாளபிமன்றுய்ய
வரனருள்கொன்றைமாலைதன்னினாலனிலன்மைந்தன்
வருகிலாதிரங்குகின்றவாறெலாமுணர்ந்துநக்கன்
றெரியலையிகழ்தல்செய்யான்செருநர்மேற்றேரைவிட்டான். 129

வேறு.

சுரர்பத்திசெய்யரிமைத்தனனருளுஞ்சுதன்வில்லா
னிருபத்திரண்மடிந்தேயிடநெடுவொளிகள்பொழியக்
குருமற்றவன்றருபுத்திரன்கொடைமிக்கிகென்ன
னிருபத்தொருதரந்தேர்சிலையிறவோடினரிடைந்தே. 130

துரியோதனனருளுஞ்சுதனுடனேபலகுமரர்
பரிதேர்நிறையிபமெண்ணிலவரப்பற்குனன்மைந்தன்
சரமாரியிற்பொருவீரரைத்துணித்துத்தழலம்பால்
வரைபோல்விழவரவத்துவசன்மைந்தனைவதைத்தான். 131

தரைமீதினிற்றுரியோதனன்றனயன்மடிந்திடலும்
வரைபோல்விழுந்தரற்றக்கடிதெடுத்தேமனர்தேற்றிக்
கரிதேர்பரிநிறையக்கடுங்கணைமாரிகள்பொழிந்து
பொருதாருயர்விசயன்றருபுதல்வன்றனைவளைந்தே. 132

கிருபன்விறற்கன்னன்பரித்தாமாகிரிநிகராய்ப்
பொருமத்திரன்மறையோனிவர்புத்தேளிர்களஞ்ச
விரைவிற்கணைபொழிந்தார்த்தனர்விற்றேர்கொடிதுணியத்
தருமன்சுதன்றனயன்மிகுசரந்தூவிடவிரிந்தார். 133

பின்னுஞ்சினமூறுமன்னர்கள்பெருந்தேர்மிசையெய்தித்
துன்றுஞ்சரஞ்சொரிந்தாரபிமன்றேர்சிலைதுணியக்
கன்னன்கணைவிடுத்தார்த்திடக்காமன்சுதனருள்சேய்
மின்னுஞ்சுடர்வாளாற்பொருவிறல்வீரரைவதைத்தான். 134

அரியாமெனச்சுடர்வாளினிலயந்தோலினைத்துணித்துப்
பொருவீரியன்மேற்பொன்மலர்புத்தேளிர்கள்பொழிந்தார்
விரைவோடிரதத்தேவருமறையோன்விசிகத்தான்
சுரர்போற்றிமொயோன்மருகன்கையினைத்துணித்தான். 135

கையற்றிடக்கலங்காதுயரபிமன்களத்திடையோர்
வையந்தனிலுறுபண்டியைச்சுழற்றுவலித்தெறிய
மெய்யோன்றியவரியாழியைநிகர்த்தேவரவெருவி
யுய்யும்படியினியில்லையென்றுடைந்தோடினர்கிருபர். 136

வெருவித்திசைதொறுமன்னவரிரிந்தோடிட்விமலன்
கரம்வைத்திடுதிகிரிப்படையெனவேககனத்தி
னுருமொத்தொலியுறவான்வருமுயர்பண்டியைமறையோ
னிருபத்திரளனைவோரொடுநெடுவொளியிற்றணித்தான். 137

சரத்தால்விடுமுயர்சில்லிமண்கொளாய்விழக்கண்டு
கிரித்தேயெழிலபிமன்கதைகொண்டேவரச்சிவன்பால்
வரத்தாற்பெறுமணித்தண்டினைமறனுர்செயித்திரத
னூரத்தால்விடவிசயன்மகன்சிரமோவியதுருண்டே. 138

வேறு.

சிந்துவுக்கிறைவன்றண்டாற்சிறுவிசயன்பெற்ற
மைந்தனொண்சிரமண்வீழமடிதலும்வாயுசெம்ம
லந்தமார்தருமனோடுமாற்றிடவருக்கன்வானி
னிந்துவிஞ்சிடவேவீழயாவருமிருக்கைசேர்ந்தார். 139

விறலுறவறைகூவிக்கொண்டேயவீரர்தம்மைப்
பிறைமுகப்பகழியாலேவதைத்திடப்பீதிகொண்டு
திறனழிந்தோடலோடுந்தேரின்மேல்விசயன்மீள
விறையவனபிமன்மாண்டானென்பதுதெரிந்தானன்றே. 140

விறலுறுவிசயன்மைந்தன்வீந்தமைகேட்கிலாவி
பிரியவேமாள்வனென்பதறிந்தரிசுரர்பிரானுக்
கறைதலுமாயமானமகன்றனையனலினிட்டே
மறையவனாகிவீழவருமுனர்ப்பார்த்தன்கண்டான். 141

இந்திரன்சிறுவனோக்கியெரியினில்விழுவான்றன்னை
மைந்தன்றன்னுடனேமாளமறையவடாதென்றோத
வந்தணனுனக்குமெய்திற்றடுப்பனென்றசன்றபோக
விந்தைதன்மணாளனோடுமேவினன்பாடிவீட்டில். 142

பல்லியமுழக்கமின்றிப்பண்ணியாழொலியுமின்றிச்
சில்லுழையிவுளிகைமாத்தெருவிடைத்திரிதலின்றி
வல்லியராற்றமோதைமலியவேபார்த்தன்கேளா
வொல்லையினடைந்தான்முன்னோர்க்கிடரென்கொலுற்றதென்றே

தேரினின்றிழிந்துகோயிற்சென்றிடும்விசயன்றன்னை
யாரியன்றழுவியந்தோவபிமன்விண்ணடைந்தானென்னப்
பாரினிற்புரண்டுவிம்மிப்பதைத்திரங்கிடுவான்றன்னோ
டேருறுதருமன்பின்னோருடனெய்தியிரங்கினானால். 144

சுரர்பதிசிறுவனென்றன்சுதனுடன்மாள்வேனீயீண்
டெரியினையிடுதியென்னவிளையவன்வளர்த்ததீயின்
விரைவினின்விழுவான்றன்னாலனலிடைவிழாதோனெய்தி
நிருபநீயொழிதியென்றுநிகழ்த்திடத்தவிர்ந்தானன்றே. 145

அரற்றிடுந்தருமன்றன்னையபிமன்றானிறந்ததன்மை
யுரைத்திநீயென்னப்பார்த்தனோதிடவுன்னைவேறே
பிரித்தெனைப்பிணிக்கவிட்டசக்கரயூபம்பேதித்
திருத்திரனென்னச்சென்றானென்சொலாலுன்றன்மைந்தன்.

அந்தகனெனவேசென்றவபிமனந்தகன்றன்செம்மன்
மைந்தனைக்கொன்றமீளவருதலும்வாயுமைந்தன்
முந்தியேசெலாமன்மிக்கமுக்கணான்மாலைபோட்ட
சிந்துமன்றண்டாலுன்றன்சிறுவனைவதைத்தானென்றான். 147

என்றவனுரைக்ககாளையிரவிபோய்வீழுமுன்னஞ்
சென்றுயர்சிந்துமன்னன்சிரத்தினைத்துணித்திலேனேல்
வென்றிசெய்வில்லினோனெம்வெங்கனலினிடையின்வீழ்ந்து
பொன்றுவனென்றேயெண்ணில்சபதங்கள்புகன்றானன்றே. 148

இந்திரன்சிறுவன்சிந்துக்கிறைவனைவதைத்திடேனேற்
செந்தழலிடையின்வீழ்வனென்றுயர்சபதஞ்செப்பக்
கந்தனார்தந்தைதன்பாற்கணையுடன்பொய்கைவேண்ட
முந்துவன்கைலைக்கென்றுமொழிந்தனன்முராரிமாதோ. 149

அரிகலுழன்மேலேறவருச்சுனன்றன்னையங்கை
விரலிடைத்தாங்கிப்புள்ளின்வேந்தன்றான்செல்லமாயோன்
சுரர்பதிசுதனைநோக்கித்தூயநல்லடிசினீதான்
விரைவினிலருந்துகென்னவிசயன்றான்விளம்பலுற்றான். 150

சிவனையர்ச்சித்தலாதுசிறந்திமென்னந்தன்னைச்
சுவையுறவருந்தேனென்னச்சுந்தரன்முதனாட்டன்னி
லவனிவனெவனுமானவாதியானென்றான்முன்னே
யுவமையிலுருவங்காட்டவுணர்கிலையென்றுசொல்வான். 151

உன்னியதெய்வந்தன்னையுணர்வுறுமந்திரத்தா
லென்னிருகழலினர்ச்சித்தின்னமுதருந்திநீயே
பின்னையானிணையிலாதபிரானென்பதறிதியென்றே
சொன்னமைத்துனனைநோக்கித்தொழுதிவைசெய்தானன்றே. 152

ஞமலிவாகனமாய்க்கோரவயிரவர்நடிக்கநண்ணும்
விமலனைந்தெழுத்தையுள்ளத்துள்கியேவிடமேபோல்வந்
தமலரைச்சாடிமாமன்சிதையவேமிதித்தோன்றாளின்
கமலமுங்கமலமுங்கொண்டருச்சித்தான்காமன்மைந்தன். 153

அரிபதத்தரனையர்ச்சித்தவனனமருந்தமாயோன்
கருடன்மேற்கயிலைக்கெய்தக்கந்தனற்றாதைகண்டே
பரிவறத்தழீஇக்கொண்டண்டர்துதித்திடப்பைம்பொற்பீடத்
திருவருமிருந்தார்நீலக்கிரியுந்தாரக்கிரியுமேல. 154

வடிவுடைவிசயன்மங்கைபங்கனைவணங்கிவானம்
படியளந்தவன்பாதத்தருச்சனைபடியச்சூட்டுங்
கடிகமழ்கமலப்பூவுந்தும்பையுங்கந்தன்றாதை
முடியினிற்கண்டுசோதிமுராரியென்றையந்தீர்ந்தான். 155

அரியினையரன்றானோக்கியெய்தியதருள்வாயென்னச்
சுரர்பதிசுதனொன்னாரைத்துணித்திடவில்லுந்தூணி
சரமுடன்பொய்கைநீயேதந்தருளென்றலோடுந்
திரிபுரமெரித்ததேவன்சிரித்திவைசெப்பலுற்றான். 156

அரவுயர்துவசன்பின்னோனரிவைபாஞ்சாலியாடை
யுரியவேயுளதாய்த்தோன்றவுதவியமுகுந்தாவின்று

சரம்விடுத்தாணிபொய்கைதந்திடவறிகிலாயென்
றுரைசெய்துன்மாயந்தன்னையுணர்வதற்கெளிதோவென்றான். 157

அரனிவைமொழிந்துதூயமவனிலரசாமூழ்கு
விரைவினிலென்றலோடும்விசயனீர்படிந்தங்கேற
வரகமொன்றெழுந்துவாயாலுமிழவோர்மறையோன்றோன்றி
சரம்விடுத்தாணிபொய்கைதருவமந்திரந்தான்சொன்னான். 158

அரவின்வாய்மறையோனெய்தியறைந்தமந்திரந்தான்கேட்டு
வரிசிலைப்பார்த்தனிலகண்டனைவணங்கிநிற்ப
வரகபூடணனையோவியுவணன்மேல்விசயனோடுந்
திருவமர்மார்பன்றன்மனிருப்பிடஞ்சேரும்வேலை. 159

தருமனுசுகன்செய்பெற்றதனயனையழைத்துநீபோ
யரவுயர்வேந்தன்றன்பாலபிமனைக்கொன்றான்றன்னை
யிரவிபோய்விழுமுன்னேவதைத்திலனாயிற்றீயிற்
சுரர்பதிசுதன்றான்மாள்வனென்பதுசொலிவாவென்றான். 160

விறலுடைத்தருமன்கூறக்கடோற்கசன்விரைவினெய்தி
மறனுறுசுயோதனன்றன்மலரடிவணங்கிநின்று
திறலுடையபிமன்றன்னைச்செற்றிடுஞ்சிந்துநாட்டுக்
கிறைவனைப்பார்த்தன்கொல்லவிடுஞ்சபதங்கேளென்றான். 161

மைந்தனைவதைத்தசிந்துமன்னனைநாளைவெய்யோன்
சிந்துவின்விழுவமுன்னஞ்செற்றிலனாகிற்பார்த்தன்
வெந்தழலிடையின்வீழ்வனென்றனன்வீமன்முன்னோ
னிந்தவெம்மொழியைநீபோயியம்பிவாவென்றானென்றான். 162

வித்தகவீமன்மைந்தன்விளம்பியவுரையைக்கேளா
வத்தினபுரியின்மன்னோடங்கர்கோனறைவானுன்றன்
மைத்துனன்றன்னையானேகாப்பன்வாள்விசயன்வானிற்
புத்திரனுடனுங்கூடப்போதுவனெறியினென்றான். 163

அங்கர்கோனுரையைக்கேளாக்கடோற்கசனறையலுற்றான்
சிங்கலில்விசயன்முன்னர்ச்செறுத்தெதிர்பொருவாய்நீயோ
விக்குமையிமைப்பின்முன்னமெந்தைதானருளப்பெற்று
றுங்குவன்யானேயென்றுநவன்றுறநகைத்தானன்றே. 164

விருதுறக்கடோற்கசன்றான்விளம்பிடவந்தன்மைந்த
னிருதநின்னுசாரத்தானெறியலகூறேலென்னக்
குருகுலத்தரசாநின்னைப்போலவேயரக்கர்கோதி
லொருகுலத்துதித்தார்தேவியாடையையுரியாரென்றான். 165

நஞ்சினையனத்தினிட்டுநெற்கயவயத்தினுள்ளே
விஞ்சியவசினையநட்டும்வீடமாளிகைநிலைத்தும்
வஞ்சச்சூதையாடிவளநகர்வாங்கிக்கொள்ளா
றஞ்சலிலரக்கரென்னவறைந்தவனேகினனால். 166

மாருதிமைந்தன்போனபின்னரின்மன்னர்மன்னன்
வீரியவரசர்நீவிர்விசயனைவதைக்கவேண்டாம்
பாரினிலவனைநீயின்விழுந்திடப்பகுந்துகொண்டு
நேரிலாச்சிந்துநாட்டிறைபனைக்காமினென்றான். 167

அரவுயர்வேந்தன்கூறவவனியினரசரெல்லா
மிரவிபோய்மறையுங்காறும்யாங்களேகாப்பமென்றார்
துருமுகனுனதன்மரிடணநாமவனுசன்றாய
வொருபகலளவுங்காப்பேனுரககேதனனேயென்றான். 168

நிருபர்களிவைகளெல்லாநிகழ்த்திடவிராசராசன்
றாளமாவடங்களாடைதமனியக்கலன்களெல்லா
மரசர்கள்பெறவேநல்கியங்கர்கோனுடனுந்துய்ய
விரைசெறியமளிமீதின்விளங்கியேதுயின்றானன்றே. 169

எறுழ்வலிக்கடோற்கசன்றானேகிநற்றருமன்முன்னின்
றறனிலிக்கிவைகளெல்லாமறைந்திடவிகழ்ந்தானென்று
பறைதலும்விசயனேடும்பரமன்வந்தான்றானீந்த
தறைதலுமறன்சேய்சிந்தையையம்போய்த்துயின்றானன்றே. 170

சலதியினிரவிதோன்றச்சதுர்த்தசித்தினத்திற்றாய
மலருறையயனேரோமறையவன்யூபஞ்செய்து
நிலமிசையிருபத்தைந்தாம்யோசனைநீளங்கைமா
விலகியயிவுளிவீரரிரதங்கணிறையவைத்தான். 171

அவனியினிருபத்தைந்தாம்யோசனைக்கப்பாலாகப்
பவமுறசிந்துமன்னைப்பகுழியதனின்வைத்துச்
சிவனெனும்விறல்கொண்மன்னர்திசைதொறும்வளைந்துகாப்பத்
தவமலிமறையோனின்றான்சங்குந்துந்துமிகளார்ப்ப. 172

அறனருண்மைந்தன்பேரிதழங்கவார்கலியையேய
விறலுடையரசர்சூழவெஞ்சமர்விளைக்கும்வேலை
யுறியுறுததியையுண்ணுமுத்தமன்வலவனுக
மறுவிலாப்பார்த்தன்றுய்யவையமேல்வயங்கிவந்தான். 173

செருவிடையெதிர்ந்தபார்த்தன்சிலையினுணெறிதலோடு
மொருபகலளவுங்காப்பன்யானெனவுரைத்துநின்ற
துருமுகனுனதுன்மரிடணன்றான்றுவசத்தேர்விட்
டரசர்கணகைசெய்தார்ப்பவவனியினேடினுனல். 174

உரககேதனன்றன்பின்னேனிடைதலும்பார்த்தன்வில்லாற்
கரிபரியரசர்மாளக்கணைகளாமாரிபெய்ய
வரிசிலைவளையவாங்கிவாளிகள்சொரிந்துமாற்றிச்
சரியிலாமறையோனைந்துநாழிகைதடுத்தானன்றே. 175

நாழிகையைந்துசெல்லநடந்தயோசனையைந்தாக
வாழியினமர்வோன்றேரையந்தணன்காணுவண்ண

ழுழியின்கால்போலோட்டவுறத்தவன்றொடர்தலுந்தண்
பாழிசால்விசயனின்சொல்பகர்ந்திடமீண்டானன்றே. 276

வாரியிராசன்மைந்தன்பொழிந்திடும்வாளியாலே
வீரனொண்விசயன்றுய்யமேனியிற்குருதிவீழக்
கோரவெங்கணையால்வெய்யோன்கொடிகடோரழிக்கத்தண்டா
லாரியன்சிரத்தின்மோதவவனியின்வீழ்ந்தானன்றே. 277

தந்தையாம்வருணன்றுய்யசோதிமேற்றழும்புசெய்யின்
மைந்தநீமடிவாயென்றுவழங்கியவுரையாற்றண்டின்
முந்தியொண்முராரிமீதுமோதியேசதாயுவீய
விந்திரன்சிறுவன்சென்றானெதிர்ந்தவர்தம்மைநூறி. 178

சகிரவாருவெய்தித்தழலுறும்வாளியேவ
மிகமுனிந்தவனைவீட்டிவிசயன்மாகன்னன்மீதி
னுகவிறுதியிற்பெய்மாரியொத்தனல்வாளிதூவிப்
பகலவன்குமரன்றேரையழித்திடப்பாறினானால். 179

அதிரதர்மடிந்துவீழவயங்கரிநிரைகண்மாள
மதிதவழ்வேணியான்போன்முனிந்துவாள்விசயன்வாளி
கதுமெனச்சொரிந்தேயேகக்கிரவனுச்சியெய்த
வெதுகுலவிறைவன்றாண்மெய்வுளிகளிளைத்தவன்றே. 180

பரிகளினிளைப்புத்திரப்பயத்தினையூட்டப்பார்த்தா
வுரகபூடணன்பாற்பெற்றமந்திரமுள்குவாயென்
றரியுரைத்திடலுந்தூயோனந்தமந்திரத்தையுன்ன
விருநிலத்தெழிலார்பொய்கையிமைப்பின்முனெய்திற்றன்றே. 181

கடிகமழ்கமலப்பூவாற்கவினுறுபொய்கைதன்னிற்
குடமெடுத்தாங்கோமான்குரகதங்களைநீரூட்ட
வடவைபோல்வளைந்துமன்னர்வாளிகள்பொழியப்பார்த்தன்
படியின்மேற்காலாளாகிப்பகழியாலறுத்துவீழ்த்தான். 182

பரியினைப்பயத்தையூட்டிப்பான்மணித்தேரிற்பூட்டி
யரியொளிதிகழவெய்தவருச்சுனனிரதமேறப்
புரவலர்திசைகடோறும்பொருதொழின்மறந்துபாற
விருநிலத்தெதிரிலாமலிரண்டுயோசனைதான்சென்றான். 183

விரைவினின்விசயனேகும்வேலையினந்தன்மைந்தன்
குருவினைவணங்கியையாகொண்டல்வாகனன்றன்செம்ம
லரசர்கண்மடியநூறியரியெனவிரைவிற்செல்வா
னொருநொடியின்முன்சிந்துபதியுயிருண்பனென்றான். 184

நவையுறுமனத்தனாயசுயோதனனவிலலோடும்
பவமறுமறையோனீதான்பருவரலொழிதியென்று
தவமுறுபலத்தாலெங்கைதந்திடப்பெற்றேனீதென்
றவமையில்கவசமீயவுயர்ந்தவன்புனைந்துமீண்டான். 185

பூசுரனளித்ததுய்யகவசமேற்புனைந்துகொண்டு
மாசுணமுயர்த்தகோமான்வாசவன்மைந்தன்மீதி
னூசுகமாரிதூவியார்த்திடநகைதாமனெய்தக்
கேசவன்றன்னைநோக்கிக்கிரீடியங்குரைக்கலுற்றான். 186

என்முனினமரினென்றும்யோசனைக்கெதிர்பிலாத
பன்னகதுவசனெய்திப்பகழிதானெய்யுந்தன்மை
யன்னவெந்நற்றான்றூதாயறையெனவரியாசான்பாற்
பொன்னெடுங்கவசம்பெற்றுப்போர்பொரத்துணிந்தானென்றான்.

யாதவனருடலோடுமெழிலுறுவிசையனந்தன்
காதலன்கவசமீதிற்கனலுறுகணையொன்றேவ
வேதியன்குமரன்றுய்யபகழியால்விலக்கலோடும்
பூதலத்தரசரெண்ணில்பகழிகள்பொழிந்துசூழ்ந்தார். 188

சலமுறநிருபர்பாய்மாத்தந்திதேர்நிறையச்சூழ்ந்து
வலனுறவிமையோரஞ்சவாளிகள்பொழியப்பார்த்தன்
நிலைகுலைந்தவரைத்தாங்குநெறியிலாதயரமாயோ
னுலகொடெண்டிசையுமஞ்சவூதினான்றவளச்சங்கம். 189

அண்டம்விண்டனகொலென்றேயமரர்கள்வெருவியோட
வெண்டிசைக்கரிகளஞ்சவெதிருமொன்னலர்களெல்லா
மண்டனிலயர்ந்துபாறவளையினயுலகமெல்லா
முண்டவனுகாந்தகாலத்துருமெனவூதினானல். 190

அரிவளையூதமன்னரவனியின்வெருவியோட
நரகன்மெய்துளைத்தவெய்யகணையினைநல்கவாங்கி
யுரககேதனன்றன்மெய்யினுற்றிடுங்கவசம்பாரின்
விரைவினிற்பொடியாய்வீழவிசையனெய்தார்த்தானன்றே. 191

கவசநீறுறலும்பாரிற்சுயோதனன்கலங்கியோட
வுவணன்மேலுயருங்கோமானுடனும்பர்மதலைதேர்மேற்
சிவனெனமுனிந்தேயேகச்சிறந்திடுந்தருமராச
னவனியையிடந்தானூதும்வளையினோர்ப்பரவங்கேட்டான். 192

பார்த்தனுக்கிடருறுமற்பாஞ்சசன்னியத்தைவேழங்
காத்தவன்முழக்கானென்னக்கலங்கியேதருமன்மூன்று
நேத்திரனிடரைத்தீர்த்தானிகரில்சங்கூதுந்தன்மை
சாத்தகியறிந்துவாவென்றேவினன்றயையான்மிக்கோன். 293

வினையகறருமன்கூறவிளங்கியவிரதமீதிற்
சினியருள்புதல்வனெய்திச்செருநர்கண்மடியநூறிக்
கனமெனக்கணைகள்வீசிக்கன்னனைத்துரத்திப்போரின்
முனையுமன்னவர்களெல்லாமுறிந்திடச்சென்றானன்றே. 194

பின்னருந்தருமராசன்பெருந்துனியுறவேவீமன்
றன்னைமாயோன்றுய்யசங்கினையூதுந்தன்மை

யின்னதென்றறிந்துவாவென்றேவிடவிரதமீதின்
மன்னவர்மடியத்தன்றான்மலைந்தவன்சென்றான்மன்னோ. 195

வாரியைக்கிழியவோமெரக்கலமென்னமண்ணி
னோருமாசலெல்லாமிரிந்திடநெடுந்தேரோட்டி
வீரியக்குருவையத்தின்வின்றுறவெழுந்துமீண்டு
பாரின்மேலுருளவீழப்பற்றியேயெறிந்துபோனான். 196

ஆரவுயர்வேந்தன்பின்னோராறைந்துநவப்பேர்தம்மைத்
தரையினிற்செற்றுவீழ்த்துத்தவனன்சேயுடனேதாக்கி
யிரவிசேய்முறியப்பின்னுஞ்சுயோதனனிளையோர்நால்வர்
விரைவினினுறுபோர்செய்யவவரையும்வீட்டியார்த்தார். 197

அலையுறுகடலேபோலவார்த்தவாசுகன்றன்சேயைச்
சலமுறக்கன்னன்வெய்யசரத்திற்றேரழித்துத்தன்கைச்
சிலையவன்கழுத்திற்பூட்டச்சினத்துடன்வயிரத்தண்டா
லலரிதன்சிறுவன்பாரிலயர்ந்திடவடித்துப்போனான். 198

மூத்தவனேவவந்தமுடங்குளைசிகராம்வீமன்
சாத்தகியுடனுங்கூடித்தமனியத்தேரினேறி
வேத்திரிந்தாசரோடவிரைவினினெய்திப்போர்செய்
பார்த்தனைத்தழுவிமாயோன்பதந்தனிற்பணிந்தானன்றே. 199

துனியுறுவாயுமைந்தன்சுடர்மணித்தண்டிற்கைமா
வினமடிந்திடவேமோதவிந்திரன்சிறுவன்வில்லாற்
கனமெனக்கணைகள்சிந்தக்காவலர்மடியும்வேலை
சினியருள்புதல்வன்பூரிச்சிராவுடன்செருச்செய்தானால். 200

ஆர்த்திருவோருந்தேர்களழிந்திடவாளிதாவிப்
பார்த்தவர்வெருவப்பாரினிழிந்துவாள்கரத்திற்பற்றிப்
போர்த்தொழில்புரியப்பூரிச்சிராசினம்பொங்கத்தாக்கிச்
சாத்தகியுரத்தினேறித்தலையினைத்துணிக்கும்வேலை. 201

சீதரன்கண்டுபார்த்தாசினியருள்சுதனைக்காவென்
றோதலுமிருவர்போரினொருவன்வெங்கணைதானேவ
வீதியோவென்னப்பொங்கிநேமியைவாங்கவானோர்
நாதனற்குமரன்பூரிச்சிராக்கரநறுக்கிவீழ்த்தான். 202

கரம்விழக்கலக்கமெய்துங்காவலன்றன்னைத்தள்ளித்
தரைதனிற்சினிதன்மைந்தன்றன்கையிலுறுவாடன்னாற்
சிரம்விழத்துணிசெய்தார்த்தான்றேருறும்விசயன்வில்லா
லரசர்கண்மடிந்துவீழவாசுகமாரிபெய்தான். 203

நாழிகையிரண்டின்வெய்யோன்மறையவேகுடக்கினண்ண
வூழியினரன்போற்சீறியும்பர்கோன்மதலைவில்லால்
வேழமாவனந்தம்வீழவிறன்மனர்மடியப்பாரி
னாழிபோலுதிரமோடவாசுகம்பொழிந்தானன்றே. 204

அரவுயர்வேந்தன் சிந்துசிருபனையலரிநீளும்
பரவையின் மறையுங்காறுங்காத்திரேற்பார்த்தன்வெய்ய
வெரியினிலிறப்பனென்றேயிருநிலத்தரசர்க்கெல்லா
முரைசெயத்திரண்வொளிபொழிந்தனரும்பரஞ்ச. 205

செருவிடையரசரெல்லாந்திரண்டிடச்சிந்துமன்னே
யிரவிபோய்விழுவமுன்னமெழிலுறுவிசயன்கொல்ல
வரிதெனவரிவெய்யோனையாழியான்மறைக்கமுன்செய்
பெருவினைவளையப்பற்றும்பெற்றிபோலடர்ந்தகங்குல். 206

இரவியத்தமனமாய்த்தென்றெழுகின்றவுவகையோடு
மரவுயர்வேந்தன்றன்னோடனிகங்களார்த்தலோடும்
விரைவினிலெய்திச்சிந்துமன்னவன்விசயன்றன்னைப்
பரிபவம்பேசிநக்கான்பராபரன்முறுவல்செய்தான். 207

தூயவனொருவன்றன்னைச்சூழ்ந்திடும்வினையப்போதின்
மாய்வனபோலமாயனாழியைவாங்கவெய்யோன்
மீயுயர்விசும்பிற்றோன்றவிசயனோர்சரத்தினாலே
தீயவச்சிந்துமன்னன்சிரத்தினைத்துணித்தானன்றே. 208

அந்தமன்மருகன்கம்பாரடையுமுன்னறைவான்மாயன்
சிந்துமன்சிரத்தைவீழ்த்தான்சிதையவேயிவனைத்தந்த
தந்தைதான்றவஞ்செய்கின்றானவன்கையிற்றலைபோய்வீழ
வுந்தெனவீழாவண்ணமுயர்த்தினன்விசயனம்பால். 209

வாயுவின்கணையாற்சிந்துமன்னவன்றலையைப்பார்த்த
னேயெனுமுன்னர்த்தூயசமந்தபஞ்சகத்தினெய்துந்
தாய்மையிறவத்தோன்கையினிடச்சுதன்சிரங்கீழ்வீழ்த்துத்
தீயவன்சிதைந்துவீழ்ந்தான்செய்தவம்பழுதாகாமல். 210

மறைந்திலங்கலரிகண்டான்மைத்துனன்சிரத்தைக்காணு
ணிறந்தனன்றங்கைகொண்கனென்றந்தன்மைந்தனேங்க
வறந்தவருததன்மனனிகங்கண்மகிழ்ந்தேயார்ப்பத்
துறந்தவரரிபத்தர்க்குத்துன்பம்வந்தடராதென்பார். 211

பரவையினிரவிவீழப்பாம்புயர்பதாகைவேந்த
னிரவினிற்பொருவனென்றேயெழிலுறதீபமேற்றத்
திரையுறுமுவரிமீதிற்செங்கமலங்களெல்லா
நிரையுறப்பூத்தபோலத்திசைதொறுநிறைந்தவன்றே. 212

கங்குல்வந்துறவேவெய்யகடோற்கசன்மைந்தன்வாளி
யெங்கணும்விடுத்துவீரரிபமயமெல்லாமாள
மங்குலினுருமுபோலவுரப்பியேவருகின்றானைச்
சிங்கலிவிவுளித்தாமாச்செற்றனன்பகழியொன்றால். 213

மைந்தன்றான்மடியவீமன்மகன்மறையவன்சேய்மீதி
னிந்தவேணியனுமஞ்சவெதிர்ந்துதன்பகழிதூவ

வந்தணன்சிறுவன்றேர்மேலயர்ந்திடவார்த்துச்சென்றே
வந்தடாலாயுதன்பார்மடிந்திடவாளிபெய்தான். 214
விசிரன்றன்னைச்செற்றகடோற்கசனிகரிலாத
வசுவரியாகிக்காற்றாய்மழையதாயனந்தரூபாய்க்
கசாதரகவீரர்கணக்கிலார்தம்மைக்கையாற்
பிசையும்வன்றூகிராலூன்றிப்பிணக்குந்தேயத்துழக்குமன்றே 215
கடகரியிவுளிவீரனேகரைக்கடோற்கசன்றான்
வடவனலெனவேயெண்ணில்வடிவமாய்வதைக்கநோக்கி
விடவரவுயர்த்தோன்சொல்லால்வெய்யவன்சுதன்வேலேவப்
படியினில்வீமன்மைந்தன்பருப்பதம்போலமாண்டான். 216
வரையெனக்கடோற்கசன்றான்மடியவைவோரும்வீழ்ந்து
தரணியினாற்றமாயோன்றடுத்திவ்வேல்கன்னன்பார்த்த
னுரமிசைவிடாமலின்றீண்டிவனெடுமொழிந்ததன்றே
யரசர்நீரிரங்கலென்றேயறைந்திடத்தேறினால். 217
கறையிடற்றானைப்போலக்கனன்றுயர்தேரினேறி
மறையவன்வாளிதன்னால்விராடனைவதைத்துப்பின்னர்ப்
பிறையெனவரிவிற்கோலிப்பிறங்கியவாளிதூவி
விறலுடைப்பாஞ்சாலன்றன்சிரத்தினைத்துணித்துவீழ்த்தான்.
விருசரென்விராடனோடுந்துரோபதன்மடிந்துவீழப்
பரிதிநீள்பரவைமீதின்வயங்கிடப்பதினைந்தாநா
ளிருதிறத்தரசரெல்லாமெதிர்ந்துறவாளிபெய்தே
பொருதனரிவுளிவீரர்புகரிபமடிந்துவீழ. 219
இறுதியிற்பொழியுமேகமெனவிலால்வாளிபெய்து
கறையடியிவுளிவீரர்மடிந்திடக்கவந்தமாட
மறையவன்மறலியஞ்சவாசுகியுமிழவாழி
யுறையுமாவிடமுண்டான்போலுருத்தமர்செய்யும்வேலை. 220
ஆசுகன்மதலைதண்டாலமரிடைமகதனேறும்
பூசுரன்சிறுவன்பேரைப்பூண்டதோர்கரியைச்செற்றே
யேசகலரிமுனெய்தநீகொன்றவிபத்தின்பேரை
மாசகன்மறையோன்முன்னர்நுவன்றவவருதியென்றான். 221
அரியிவைகூறவீமனந்தணன்முன்னரெய்தி
விரைவினிவ்வுளித்தாமாவதமென்றமீடலோடும்
வரிசிலைமறையோன்வாயுமைந்தன்சொற்சடமாமென்று
குருதிகள்பெருகவீரர்குழாங்களைக்கொன்றவீழ்த்தான். 222
வரிசிலைமறையோன்வீமன்வாய்மையைப்பொய்யாயெண்ணா
வரியரன்மைந்தன்றன்னையந்தணன்முன்னரெய்தித்
தரணியினிவ்வுளித்தாமாவதமென்றுசாற்றுகென்றே
யுரைசெயச்செவியைப்பொத்தியுளங்குலைந்திவைகள்சொல்வான்.

தரணியினிமித்தமாகச்சற்குருவிறக்கப்பொய்யை
யுரைசெய்தாற்பழிவந்தெய்துமுலகமுள்ளளவுமோவா
வெரியுறுநிகோதந்தன்னினெய்துவனென்றுதன்மன்
வெருவியேயுரைத்தலோடும்விமலனுண்டுரைக்கலுற்றான். 224

ஒருபொய்யினனந்தம்பேர்களுயிருய்யினறந்தானெய்த
வருநரகடையாரென்றேயரிசொலத்தருமனேயிக்
குருவின்முன்னிவுளித்தாமாவதமென்றுகூறக்கேட்டு
வரிசிலைவிழவேயாவிவாறுறமறையோனின்றான். 225

சிலைநிலன்விழவேநின்றதுரோணனைத்திட்டத்துய்மன்
சலமுறக்கணையொன்றாலேதலையினைத்துணித்தலோடு
மலைவிழுந்ததுபோற்பாரின்மடிந்திடமன்னரெல்லா
நிலைகுலைந்தோடினார்கணீதிகொன்றவர்கள்போல. 226

அறனுறுந்துரோணன்மாளவவனியினரசரெல்லா
நிறைவுறுங்கனிகண்மல்குநிவர்மரம்விழவேயோடும்
பறவையின்குழாங்களென்னத்திசைதொறும்பாறலோடு
மறுவிலாவிவுளித்தாமாவந்துவீழ்ந்தரற்றினனால். 227

தந்தைதன்மீதின்வீழ்ந்தேயிரங்கியதவத்தோன்றன்னை
யந்தமன்மைந்தன்றேற்றியணைத்திடவிறுதிக்காலத்
திந்துவேணியன்போன்மிக்கமுனிவொடுமிவுளித்தாமா
வுந்தினனுலகமெல்லாமுண்டவன்படையையம்மா. 228

செருவிடையிவுளித்தாமாசீதரன்படைவிட்டார்ப்ப
வரிகரிமிசையினேறியறன்சுதன்சேனையானோர்
பரியிபமீதேறுதேபடையெலாமொழிமினென்னக்
கரிபரியிரதமோவிக்கரத்தினாயுதங்கணீத்தார். 229

வசுவரிசகாத்தன்மைந்தனொழியமற்றுள்ளோர்வேயி
னிசையுறவூதுவோன்றானியம்பவாயுதங்கணீக்கச்
சசிபதிவிபுதரஞ்சச்சக்கரன்படைவான்மீதின்
விசையுறவழல்கள்சிந்தவீமன்மேலெதிர்ந்ததன்றே. 230

வாயுவின்மதலைமீதேயரிபடைவருதல்கண்டு
தூயமாதருமனோடுந்துவரையாள்வோனுண்டெய்தி
நேயமோடனிலன்மைந்தன்றனைநிராயுதனாய்ச்செய்ய
மாயவன்படைதீமாறிவானுறப்போயிற்றன்றே. 231

அரிபடைபழுதாய்ப்போகவந்தணன்சிறுவன்சீறிப்
பரவையின்விடமுண்டான்றன்படையினையெடுத்தலோடுஞ்
சுரர்முனிமுதலாமெண்ணிற்றூயமாதவர்களெய்தி
யிருபிறப்பாளர்க்கெய்தாமுனிவினையொழிதியென்றார். 232

தூயமாதவர்களெல்லாந்துரோணன்றன்சுதனைநோக்கி
மாயவனிற்கநீதான்வழங்குமாப்படைகளெல்லா

மோயுமென்றுரைத்தேயோவவுவரியினலறிவீழ
வேயெனுமுன்னர்மன்னர்பாடிவீடெய்தினால். 233

றாயமார்த்தாண்டனெய்தித்துலங்கச்சோடசநாட்டன்னிற்
றியவச்சுயோதனன்வான்றினகரன்சேயைச்சேனை
நாயகனாகச்செய்துநானிலத்தரசர்சூழ
மீயுயர்மவுலிதோன்றவெஞ்சமர்விளைக்கவந்தான். 234

கிருபர்கள்பொதுளிச்சூழநிகரிலாவனிகமார்ப்ப
முரசுயர்வேந்தனெய்திமுனிவர்வானவர்களேக்க
வரவுயர்வேந்தன்முன்னரயங்கரிமடிந்துவீழப்
பொருதனன்கவந்தமாடப்புணரியிற்குருதியோட. 235

தருமன்வெஞ்சினத்தினோடுஞ்சுயோதனன்றடந்தேர்பாரின்
விரைவினிற்றுகளாய்வீழவிசிகங்கள்விடுத்தலோடுஞ்
செருவொழிந்தோடவோனைச்சிறந்திடுங்கதையாலெற்ற
வரவுயர்துவசவேந்தனவனியினயர்ந்துவீழ்ந்தான். 236

அவனியினயர்ந்துவீழ்ந்தவந்தமன்சிறுவன்றன்னைப்
பவமகல்பரிதிமைந்தன்பற்றித்தன்றேர்மேலேற்றிச்
சிவனெனமுனிந்துவெய்யசிலீமுகமாரிபெய்யக்
கவனமாயவர்கண்மாளக்கவந்தங்கணடித்தவன்றே. 237

சரியிலாநகுலன்பின்னோன்றன்னுடன்றுக்கலோடும்
விரைவினிலிரதநூறிவிளங்குமத்திரைதான்பெற்ற
விருவர்கந்தரத்திற்றுய்யசிலையினையிறுகப்பூட்டிப்
பரிபவஞ்செய்தேயோட்டிப்பரிதிதன்மைந்தனார்த்தான். 238

செருவினிலரசர்முன்னர்மத்திரைசிறுவர்தம்மை
வரிசிலைதன்னைப்பூட்டியோட்டவாள்விசயன்சீறி
விரைவினில்வில்லுந்தேருமழித்திடவெருவிக்கன்னன்
றரையினிலோடவெய்யோன்மலறயத்தம்மிருக்கைசார்ந்தார். 239

பரவையிற்பதங்கனெய்தியிலங்கிடப்பதினேழாநா
ளிருதிறத்தரசர்கூடியெதிர்த்தமர்செய்யும்வேலை
யரவுயர்துவசன்றன்னையலரிதன்மைந்தனோக்கி
யிருகையாற்றொழுதுநின்றேயினியசொற்கூறலுற்றான். 240

சூதபுத்திரனாமென்னைச்சுடர்மணிமகுடஞ்சூட்டிக்
கோதிலாவங்கநாடுகொடுத்தெனோடருந்தித்துய்ய
பூதலந்தனிலென்னாணைபொருந்திடத்துணைவனாக்கித்
நீதறச்செய்தநன்றிக்கின்றியான்றீர்ப்பனென்றான். 241

வித்தகவரசகேட்டிவிளங்குமென்னிரதமீதின்
மத்திரவாசனெய்திவலவனாருமாகி
லத்திரமழையைப்பெய்தேயருச்சுனன்றன்னைக்கொல்வே
னித்தலமிசையிலென்றங்கிரவிமாமதலைசொன்னான். 242

அலரிதன்மைந்தன்கூறவரவுயர்ந்துவசன்சிந்தை
நலனுறமகிழ்வினோடுமத்திரன்றன்னைநண்ணித்
தலைமிசையிருகைகூப்பித்தபனன்சேயிரதமீதின்
வலவனூர்தியாகின்மடிவன்வாள்விசயனென்றான். 243

நீதியிலரசன்கூறநிகரின்மத்திரன்றான்சீறிச்
சூதபுத்திரனுக்கென்னைத்துலங்குதேரூர்தியென்றே
யோதினைநீயல்லால்வேறொருவனின்றுரைத்தானவைச்
சேதனைசெய்வனென்றுசெருக்களமொருவிப்போனான். 244

மத்திரன்முனிந்துபோகவாளரவுயர்த்தோன்பின்சென்
றத்திரத்திறலினாலேயரசநின்னொப்பாரில்லை
யுத்தமத்திருமாலேபோலிரதநீயூர்தியென்றேன்
வித்தகபொறுத்தியென்னமகிழ்ந்தவன்விளம்பலுற்றான். 245

நீதிசேர்முகுந்தனோடுநேரெனவென்னைமன்னா
வோதியசெயலாற்பொற்றேரூர்குவனென்றுகூறி
யாதவன்குமரன்வையமமர்ந்தமத்திரனைநோக்கிப்
பூதலமுழுதும்பெற்றான்போலவேமகிழ்ந்தான்மன்னன். 246

இரவிசேயிரதமூருமத்திரன்றன்னையென்றன்
வரிசிலைத்திறலைக்காணமகபதிசிறுவன்மீதின்
விரைவினிற்பொற்றேர்தன்னைவிடுதியென்றுரைத்தலோடு
கிருபரெண்ணகுலன்மாமனைக்கத்திவைகிகழ்த்தலுற்றான். 247

சிவனொடுபொருதுமூன்றுகோடிதானவரைச்செற்றுப்
புவனமெண்டிசையும்வென்றபொற்புடைவிசயன்முன்ன
ரவனியிற்றனிநீசென்றேயமர்பொருங்கருமநன்றென்
றுவமையிலரசன்கூறமுனிந்தங்கனுரைப்பதானான். 248

மத்திரவரசயானேமுனிந்தமர்மலைந்துவில்லா
லத்திரம்பொழியகில்லாதருச்சுனன்மாளுமாறு
முத்தமத்திருமாலாழித்துவரையினோடுமொறும்
வித்தககாண்டியென்றுவிளம்பிடவவனுஞ்சொல்வான். 249

சித்திரசேனனுன்னைச்செயித்தரவுயர்த்தோன்றன்னை
வித்தகவிரதமீதின்வீக்கியேயேகும்வேலை
யத்திரமதனின்வானையடைத்தவன்றன்னைவென்ற
வுத்தமவிசயற்கொப்பாயல்லையென்றுரைக்கலுற்றான். 250

அரியெதிர்நரிநேராகவடையுமாறொக்குநீதான்
சுரர்பதிசுதன்றன்னோடுந்தனிப்பொரத்துணிந்ததென்ன
யிரவிசேயிவனைக்கொல்வனென்றுவாளுருவலோடு
முரணுறுகட்கம்பற்றிமதகிரனுருத்தானன்றே. 251

இருவரும்வாட்கையேந்தியெதிர்தலுமந்தன்மைந்தன்
விரைவினிற்றடுத்துப்பின்னர்விறல்கொண்மத்திரனைநோக்கித்

திரிபுரமெரிக்கத்தேரைச்சிவனுக்குப்பிரமனூர்ந்த
சரிதையையறையக்கோபந்தணிந்தங்கனிரதத்தூற்றான். 252

மத்திரனிரதமூரமகிழ்ந்திடவிரவிமைந்த
னத்திரமாரிதூவியடர்தலுந்தருமராசன்
வித்தகவிருபர்பாய்மாவிளங்கியகரிகள்சூழ
வெத்திசையோருமஞ்சவிருஞ்சமர்விளைத்தானன்றே. 253

நிகரிலாத்தருமராசனெடியசாயகங்கடன்னாற்
சகுனிவெஞ்சிலையைத்தறித்தந்தியினுயிரைச்செற்றுச்
சிகியுறழ்கணையினாலேசோழித்தூரத்தினெய்யப்
பகலவன்குமரன்பாறப்பணிலம்வாய்மூழக்கியார்த்தான். 254

இரவிதன்சிறுவன்வேறோர்ரதமேலேறிமேகஞ்
சொரிவபோற்கணைகடுவத்துரகமேற்சூரார்வீயத்
தருமன்றன்கவசம்பொற்றேர்தனுவொடுந்துகளாய்வீழ
விரைவினிற்பாறலோடுத்தொடர்ந்தனன்வெய்யோன்மைந்தன்.

அறனருள்சிறுவன்பாறத்தொடர்ந்தவாதவன்றன்மைந்த
னறநெறிபொறையுமேவன்மறுதுசெய்யனுசர்தாமு
முறுதுணையாகவாழ்வாய்வறிஞர்போற்செருவிலோடா
திறைவனையணியினுள்ளேயிருத்தியென்றுரைத்துநக்கான். 256

வெந்திறற்கன்னனிவ்வாறுரைத்தவன்மீடலோடு
மந்தமார்தருமன்றுய்யவலரிதன்மைந்தனம்பால்
வந்திடுகுருதிமெய்யின்வழிந்திடக்களத்தையோவிச்
சிந்தைநைந்திருக்கைதன்னுட்டயிலத்திற்சேர்ந்தானன்றே. 257

தூயனுந்தருமன்பாறத்தொடர்ந்திடுங்கன்னன்மீதின்
வாயுவின்மதலையெய்திவரிசிலைவளையவாங்கி
யேயெனுமுன்னம்வாளிவிடுத்திடவிரத்தவெள்ளம்
பாயவேமயங்கிவீழ்ந்தான்பருதிதன்செம்மன்மாதோ. 258

இரவிதன்மைந்தன்றேறியிலங்கியவிரதமேறி
யரிவைபங்காளன்போலமுனிந்தடுகணைகடுவ
முரணுறமனிலன்மைந்தன்றேர்சிலைமுறிக்கவோடப்
புரவலர்வெருவிக்காலாற்புவியிடைப்பாறினாரால். 259

ஏசகவிரவிமைந்தனிமையவாஞ்சவெண்ணி
லாசுகமடர்ந்துதூவியருச்சுனன்மீதினெய்ய
வாசவன்குமரன்கையால்வடிக்கணைதொடாமனின்றே
கேசவவிவன்முனேற்றேனென்றிவைகிளத்தினனால். 260

இரவிதன்மைந்தன்முன்னர்யான்செருச்செய்வதில்லை
விரைவினில்விரதந்தன்னைமீளநீவிடுதியென்றே
யுரைசெயநகைத்துமாயனும்பர்கோன்மதலையோடுந்
தருமன்முன்னெய்தநோக்கியவனிலைசாற்றலுற்றான். 261

சாமுறநோவினாலேதயிலமார்தொட்டிதன்னுண்
மருவியதருமன்வந்தமகபதிமகனைநோக்கிச்
செருவினிலிரவிசேயைச்செற்றுவந்தனைகொலென்றே
யுரைசெயவிலையென்றோதவுளைந்தவன்விளம்பலுற்றான். 262

கன்னனைவதைசெயாமற்கன்னல்போல்வில்லையேந்தி
மன்னவர்நகைப்பவிங்ஙன்வருகலைபோதியென்ன
வென்விலையெள்குவாரைத்தெறுவதென்சபதமென்று
பன்னகமெனவேசீறிப்பார்த்தன்வெஞ்சரந்தொட்டானால். 263

தருமன்மேல்வாளியேவமுன்னரிற்றடுத்துமாயோன்
குரவரைவதைசெய்தானீகொடியவென்னிரையஞ்சேர்வை
யரசவென்றுரைப்பப்பார்த்தனாவியைத்துறப்பனென்ன
விரைகமழ்துளவத்தாரோன்விசயனுக்கிவைசொன்னானால். 264

குரவரையெள்கித்தன்னையுயர்ச்சியாய்க்கூறினானேற்
றரையினிற்சவநேராவரென்றிடத்தருமன்றன்னை
விரைவினிற்பொய்ச்சூதாடிவிறலுடைப்பாஞ்சாலன்றன்
றெரிவையைத்தோற்றேயெய்தாப்பழிவரச்செய்தாயென்றான். 265

அத்தினபுரத்தையாளுமரவுயர்வேந்தன்றன்னைச்
சித்திரசேனன்வீக்கிச்சென்றருஞ்சிறையினுள்ளே
வைத்திடுமுனரினென்னால்வனத்திடைமீட்டுவிட்டே
யித்தனையரசர்மாளவியற்றினையென்றுசொல்வான். 266

புந்தியில்வினையாலென்றன்புதல்வனைப்போரிலேவி
யந்தகபுரத்தினுய்த்தாயமரிலென்விறலிற்கங்கை
மைந்தனைநரகன்சேயைவருணன்றன்மகனைத்தீய
சிந்துவுக்கிறைவன்றன்னைச்செற்றனீயென்செய்தாயால். 267

என்றிவைமுதலாவுள்ளவெள்கலைப்பார்த்தன்கூறக்
குன்றவிற்றருமனோக்கிவிசயனீகூறுமாற்ற
மென்றனாலடைந்ததாமென்றியான்வனத்துறுவேனென்று
சென்றமுன்னவன்றன்பாதத்திறைஞ்சினன்றேவர்கோன்சேய்.

தருமன்றன்றாளில்வீழ்ந்தாண்டிறைஞ்சியேதனஞ்சயன்றான்
பெரியவன்சிறியேன்கூறும்பிழையினைப்பொறுத்தியென்றே
யுரைசெயமாயன்வேண்டவுதிட்டிரன்முனிவையோவிப்
பரிவினினனுசன்றன்னையணைத்திடப்பார்த்தன்சொல்வான். 269

செருவினிலிமைப்பின்முன்னஞ்சென்றுயர்கன்னன்றன்னை
விரைவினின்வதைத்துமீள்வன்விறலுடைத்தருமவென்றே
யுரைசெய்துமுராரியோடுமுயர்ந்திடுமிரதத்தேறி
யரியெனச்சமரபூமியணுகியேசமர்செய்வேலை. 270

மகதராசன்சேய்தன்னைவயமுறுஞ்சோழன்செற்றா
னிகழ்விலாவிவுளித்தாமாவியல்புறுதென்னன்றன்னை

மிகமுனிந்தானையோமெம்விட்டினன்வீமனெய்தித்
தகமையில்சுயோதனன்றன்னனுசரைத்தாக்கினானால். 271

உரககேதனன்றன்பின்னோரொன்பதுபேரைவீட்டி
விரிகுழலணங்கினாடையுரிந்தவெய்யவனைப்பற்றி
கரவிரறணித்துமார்பைப்பிளந்துகந்தரத்தைநீக்கிக்
குருதியைப்பருகுமுன்மாறவெக்கக்கொப்பளித்தேயார்த்தான். 272

செருவிடையரசரெல்லாஞ்சினத்தமர்செய்துமாள
வரவுயர்வேந்தன்றன்பாலந்தணன்சிறுவனேகிக்
குருவின்மாமதலையான்றான்கூறியதிகழ்ந்திடாதே
தருமனுக்குநம்பாரீந்துன்றரணியையாடியென்றான். 273

அந்தணன்சிறுவன்கூறவரவுயர்துவசனென்றன்
மைந்தர்களனுசர்சுற்றம்வானதிபுதல்வனாசான்
சிந்துமன்பூரிபூரிச்சிராபகதத்தன்சேர
வந்தகபுரத்தரானாராரரசான்வரென்றான். 274

வருவிதிவருவதல்லாலியாவையுந்தடுக்கவற்றோ
செருவிடைத்தாழலாமோவென்றுதானிசையச்செப்பி
யரவுயர்துவசன்சீறியனுசனைச்செற்றான்மீதி
னெரிசினத்துடனேவெய்யகணைசொரிந்தெய்தினானால். 275

நகுலன்றேர்சிலையைநூறிநகமெனவெதிர்ந்துவந்த
பகலவன்குமரன்சேயைப்பகழியாற்றணித்துவீழ்த்து
மிகமுனிந்தெய்துநின்றவிசயன்மேல்வெய்யோன்மைந்தன்
சிதையுறுகணைகளெங்குஞ்சிதறியேயடர்ந்தானன்றே. 276

வேறு.

ஆதவனருட்புதல்வன்வெஞ்சிலையினிற்பொழியுமாசுகமெலாந்
தீதில்விசயன்கணையினூறியுயிர்கன்னன்வருதேருருளையிற்
போதின்முகையொப்பதொருவாளியைவிசைத்துவிடவேபுவியிடை
யேதமகலும்மிரதமேழுதகவிற்கிடையிடைந்ததுமனோ. 277

எழுதகவிற்கடையிடைந்தவிரதத்தினெதிரென்றருள்சுத
னாழிதனில்விஞ்சுமரனோந்துவிசயன்னவிர்கொடேருருளையின்
பாழியமர்கைச்சிலையினாலொளிர்கொள்பங்கயமுகக்கணைவிட
வாழியரியூரிரதமேழுசிலையின்கிடையிடைந்தனவரோ. 278

எழுசிலையின்கிடையிலக்குமிரதம்மிடையவெய்தகனனை
வேழம்வதைசெய்தவிறையக்குலிசுழற்றிவிசயன்னொடறைவா
னேழுலகமும்மருளவெய்தநிகரென்னொடிணையுஞ்சுமைகொளு
மாழியுறுதேரினிடைவானில்விமெக்கன்விறலென்றனனரோ. 279

அரிவைமொழிந்திடுமுனங்கர்பதியாசுகனருட்படைவிடச்
சுரர்பதிசுதன்சிலையினப்படைகொடேவ்வைதுணித்துவிடலு

மிரவிசுதனென்றருளும்வெம்படைதொடுக்கவிலமையோர்கள்பதிசெய்
வரிசிலையின்வெங்கனலவன்படைதொடுத்ததனைமாற்றினனரோ. 280

ஆதவனருட்சுதனயப்படைதொடுக்கவமரர்க்கிறைமக
னேதமகனும்வருணனற்படையினாலவையறுக்கவிரவி
காதலன்முனிந்தியமன்வெம்படைதொடுக்கவிசயன்கடிதினி
னோதரியவிந்திரனெடும்படையினாறிவளையூதினனரோ. 281

மேலவனருட்சுதன்முனிந்தயனெடும்படைவிடுக்கவிசய
னாலுமுகன்வெம்படைதொடுத்தவையறுக்கநலன்மேவிரவிசே
யாலநுகரையனருள்வெம்படைதுறந்திடவருச்சுனன்விலாற்
காலனையுதைத்தவிறைதன்படைகொடேயவைகளைந்தனனரோ. 282

கோபமுறவானலரிபெற்றருள்குமாரனுயர்கோளரவினைத்
தூபமொடுதீபமுறவேவிசயன்வன்றலைதுணித்தியெனநீள்
சாபமுறவேவிடுவெபோதினிவைதப்புமுரன்மீவிடுகெனப்
பாபமகன்மத்திரன்மொழிந்திடவுமன்னைமொழிபற்றிவிடவே. 283

தூய்மையுறுமென்றருள்சுதன்சிலையினால்விடவெழுந்தவரவம்
வாயினும்விழும்விடம்வளர்ந்துவடவாவனல்கள்போல்வளையத்
தீயுலகொடெண்டிசையுமுற்றிடமுராரியொடுசேர்விசயனு
மாய்வனெனவண்டரொடுமென்னவர்நடுங்கவெதிர்வந்ததுமனே. 284

விடவரவமண்டர்கணடுங்கிடமேவுதிறனோக்கியரிதன்
னடியினிரதப்பலகையைந்தெழுவிரற்கடையழுத்தவவரா
வடிவுடையபற்குனமன்மாமகுடம்வவ்விவடவாவனலெனக்
கடிதுசெலுமுன்னவன்மடிந்தவிசயன்ககபதிக்கணைவிட. 285

வேறு.

இரவிசேய்விடுத்தநாகமிருதுணியாகிவீழப்
பரசுடையிராமனிட்டசாபத்தாற்பரிதிசேய்க்கே
கருதியசரங்கடானுங்கையுதவாமற்போக
விரதசில்லிகள்பார்வீழமத்திரனேகினால். 286

வலவனுய்வயங்குகின்றமத்திரவரசனேக
நிலனுறுமுருளைதன்னைநிலையுறவைத்துத்தானே
நலனுறவிரதமூர்ந்துநற்கணைதூவியார்ப்ப
மலர்சொரிந்திரவிசேயைச்சூரனென்றுரைத்தார்வானோர். 287

அரவிருதுணியாய்வீழவாசுகமுதவாதாகத்
தரையிற்றேருருளைவீழத்தனிநின்றதபனன்சேய்மெய்
யருவிபோற்குருதிவீழவருச்சுனன்கணைபெய்தார்ப்ப
வரையெனநிலத்துவீழ்ந்தான்விதரணகுணத்துமன்னன். 288

தரையினில்வரைபோல்வீழ்ந்ததபனன்சேயாவிபோமுன்
மருவமர்துளபமாயோன்மறையவனாகிவந்தே

விருநிலத்திலகுமன்னனெழிலரிச்சந்திரன்றான்
சரியிலானுனக்கென்றேயுன்றருமத்தைத்தருதியென்றான். 289

அருமறையவன்றான்கூறவங்கர்கோன்மகிழ்ந்துநோக்கி
பரிவுடனுரத்திற்றைத்தபகழியைவாங்கவெய்துங்
குருதிநீர்காத்தால்வாங்கிக்கொடுத்தனன்றருமமென்னக்
கருடவாகனனாயேற்றான்கமலனோடிமையோர்போற்ற. 290

சங்குசக்கரவாள்சார்ங்கந்தண்டமர்கரங்களோங்க
மங்குலிற்பங்கயங்கண்மலர்ந்ததோர்காட்சிகாட்ட
செங்கண்மாயவன்றான்றோன்றத்தினகரன்புதல்வனாய
வங்கர்கோனெழுந்தானாடிப்பாடினானடியின்வீழ்ந்தே. 291

எரியினிற்புனலிற்கானினிலங்கியபிறங்கறன்னின்
மருவியேயனேககாலம்வருந்தினோர்க்ககப்படாதாய்
செருவிடைவிழுந்தென்னாவிவானிடைச்சேருமுன்னம்
கருமுகிலெனவேநின்றகண்ணனேபோற்றியென்றான். 292

பரிவுடன்றுதிசெய்வோனைப்பரமனீவரம்வேண்டென்ன
விருதிமறையோர்க்கீந்தேனிளமையென்றேவிக்கீந்தே
னரசனுக்குயிரையீந்தேனந்தகாலத்திலுன்னைக்
கருமுகிலெனவேகண்டேன்கழிவினைகாணேனென்றான். 293

தரைகணீருறவேயிவ்வாறுரைத்திடுந்தபனன்சேயை
யரிமகிழ்ந்துன்றன்சிந்தைக்கன்புறும்வரங்கேளென்ன
விருநிலத்திரந்தோர்க்கெல்லாமீயவுமிலைநானென்றே
யொருவரைக்கேளாவண்ணஞ்சனனந்தோறுதவுகென்றான். 294

இரவிசேயிவ்வாறோதவிறைவனவ்வரந்தந்தேனென்
றருளவேயலரிசேயோனன்னைதான்களத்தினெய்திப்
பரிவுடன்முலைப்பாலீந்தபின்னரென்னாவிபாற
வரமருளென்னமாயோனளித்தவண்மறைந்தானன்றே. 295

அரிவரமளித்தேயேகவன்புடன்றொழுதேயேத்து
மிரவிசேய்முன்னினெய்தியிரங்கியேகுந்திதேவி
அரசர்கணிறைந்துகாணமுலையிற்பாலருளியேங்கத்
தருமனோடரசரெல்லாமிரங்கினார்தமயனென்றே. 296

அரவுயர்துவசனெய்தியாற்றலுமங்கபூபன்
பருவரலொழிதியென்றுபகர்ந்தவன்றன்னையேவி
யரியினைமனத்துள்வைத்தேயாவியைவிடுத்தலோடு
மிரவிபோய்மறைபவெல்லாவரசருமிருக்கைசேர்ந்தார். 297

அத்தியினலரிதோன்றவமரினிற்பதினெட்டாநாண்
மத்திரவரசன்சேனாபதியெனவயங்கவந்தன்
புத்திரனரசரோடும்போதலுந்தருமராசன்
வித்தகனுசரோடுமேவிவெஞ்சமர்செய்தானால். 298

மத்திரைக்கிளையமைந்தன்மறமிகுஞ்சகுனிதன்னை
யத்திரமதனால்வீட்டியார்த்தனன்வீமன்போரிற்
சித்திரகாயமென்னச்சென்றந்தன்சிறுவர்தம்முட்
குத்திரமனத்துமுன்னோனொழியப்பின்னவரைக்கொன்றான். 299

முரசுறுதுவசனெய்திமுகிலெனக்கணைகடூவி
யரசர்கண்மடிந்துவீழவவனியிற்குருதிவெள்ளங்
கரைசெறிநதிபோலோடக்கவின்கொண்மத்திரத்தார்கோன்றன்
சிரசினைத்துணித்துவீழ்த்தான்சுயோதனன்றிடுக்கமெய்த. 300

அந்தமன்சிறுவரெல்லாவரசருமடிந்துவீழச்
சிந்தைநைந்திரதந்தன்னைச்செருக்களத்திருத்திக்கானின்
முந்தியோர்மடுவின்மூழ்கிமுகிலினையூர்திசொன்ன
மந்திரமனத்துள்வைத்தான்மடிந்தவருய்யும்வண்ணம். 301

விரைமலர்ப்பொய்கைதன்னின்வியாளகேதனன்றான்மூழ்கச்
சரிபிலாவிவுளித்தாமாச்சமருறும்புடவிதன்னி
னுரககேதனனைக்காணாதுளைந்தமடுவினெய்தி
யரசநீயெழுதியின்றேயைவரைக்கொல்வனென்றான். 302

அந்தணன்சிறுவன்பின்னுமரசகேளயத்தின்மூழ்கி
மந்திரநினைந்தான்மாண்டார்வருவதுமெய்மையன்று
குந்திமைந்தரையானின்றேகொல்வனென்றுரைத்துவாயின்
வந்தனசபதமெல்லாமொழிந்தனன்வன்மைமிக்கோன். 303

அந்தணன்சிறுவன்சொல்லையவமதித்தரவுயர்த்தோன்
மந்திரமொருமைச்சிந்தையாகிவாவியினுள்வைக
விந்தநற்கயத்துண்மன்னனில்லையென்றிவுளித்தாமா
சந்தனுச்சுதன்சேய்சேரும்பதியினைச்சாரும்வேலை. 304

பாரினொன்னலரையெல்லாம்வதைத்துயர்பவனன்மைந்தன்
போரினிற்கண்ணில்வேந்தன்புத்திரன்றன்னைக்காணா
தாரியனுடனேகூறுமளவினிற்கிராதர்சொல்லா
னீருறுபொய்கைதன்னினிருபர்களுடனேசேர்ந்தான். 305

மந்திரமுள்கல்செய்யக்கயமுறுமடுவின்மூழ்க
மந்தமன்சிறுவன்றன்னையாசுகன்சிறுவனெண்ணி
னிந்தைகளுரைத்துக்கையினிகரிலாக்கதையையேந்திக்
கந்தக்கல்லார்வாவிகலக்குவனென்றுபுக்கான். 306

ஆசுகன்மதலையிவ்வாறறைந்துநீர்கலக்கவெய்த
மாசுறுமனத்தனுன்னுமந்திரமறந்துதண்டோ
டேசகல்கயத்தினின்றுமெழுந்துநற்கரையினெய்திப்
பூசலைவிரும்பியாரேபொருதுவரென்னொடென்றான். 307

துனியுறவறைந்துநின்றசுயோதனன்றன்னைநோக்கி
யினநிரைகாத்தசோதியியம்புவானரசவுன்ற

அனுசர்களடையச்செற்றவாசுகன்மதலையோடே
னைமுறப்பொருதியென்றுசெப்பிடவிசைந்தானன்றே. 308

தருமனவ்வெல்லைதன்னிற்சுயோதனன்றன்னைநோக்கி
யிருவர்செய்வினையினாலேயரசர்களிறந்துபோனார்
செருவினியொருவிப்பின்னோர்சேவிக்கவாழ்தியென்றே
யுரைசெயமறுக்கலோடுஞ்சமந்தபஞ்சகத்தையுற்றார். 309

மத்திரைக்கிளையமைத்தன்மணிக்கதைவாங்கியீய
வத்தினபுரத்தையாளுமரசர்கோன்செல்லக்குந்தி
புத்திரருடனேமாயோன்பொலிவுறுமிரதமீதி
னுத்தமத்தவத்தோர்வைகுஞ்சமந்தபஞ்சகத்தையுற்றார். 310

எதுகுலத்திறைவன்றன்மனுசர்களிலங்குமத்திப்
பதியுறுமன்னனோடுஞ்சமந்தபஞ்சகஞ்சேர்வேலை
நதியினாளயத்தையாடிநற்பதியெல்லாஞ்சேர்ந்து
மதிவணன்விதுரனோடும்வந்தமைசாற்றலுற்றான். 311

பாரதப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-3509.

---

118 - வது, பலபத்திராமன்றீர்த்த யாத்திரைப்படலம்.

பகீரதிசுதன்மேற்றிகிரியையெடுத்தும்பகதத்தனெறிபடையேற்று
நிகரிலாச்சதாயுவிடுகதைவிலக்கிநேமிகொண்டிரவியைமறைத்தே
யிகல்புரிகருணன்றொடுபணிபழுதாயேகவேயிரதத்தட்டழுத்தி
மகபதிசிறுவற்குதவிசெய்திருமாலடியிணைவணங்குவாய்மனனே. 1

குருகுலத்தரசிருதிறத்தவருங்கொடியவெஞ்சமர்விளைத்திடவே
பரிகலக்கரிகள்புரவலர்மடிதல்பார்க்கிலனென்றுபால்வண்ணன்
வரிசிலைகடிதின்முறித்திடும்விதுரன்றன்னொடுமாநதியாடத்
தரையினிற்கிரியினகரியினடரும்பழுவங்கடம்மையுங்கடந்தான். 2

தூயதாஞ்சரசுவதிவிந்துசாரஞ்சுதரிசனம்விசாலந்தான்
றீமையில்பிரமதீர்த்தமோடுயர்ந்தசக்கரயமுனைசேர்க்கங்கை
நேயமோடிவையாநதிகளிற்படிந்துநெறியுறுநைமிசாரணியத்
தாயுமாமறைசேருந்தவரடியிற்பணிந்திடவாசிகளறைந்தார். 3

வேதரெண்வியாச னடியனாய்விளக்கும் புராணங்கண் முனிவர்கட்
கோதி, யாதனமிசையி னெழுந்திராதமர்ந்த சூதனையலாயுதன் முனிந்
து, மாதவர்வெருவத் தருப்பையாயுதமா யெறிந்துமற்றவன்றனை வதை
த்தே, போதனேர்தவர்கள் வருந்தலாலவன்றன் புதல்வன்சாத்திரஞ்
சொலப்படைத்தான். 4

நய்மிசாரணியத்தருந்தவரெல்லாநடுங்கவேவற்கலாவசுர
னியமனும்வெருவவிந்துவானிறையுநதியினின்வேள்வியிற்சுரையோ
டயமுறுதலைசேப்பிரசாரங்குருதியிறைத்துவந்தயிலொடுமெதிர்ப்ப
வியல்புறுமிராமனவன்றனையலத்தால்வதைத்திடவிமையவர்துதித்தார்.

மாதவர்மகிழவற்கலாசுரனைவதைத்தவனுருவியேயேகி
நீதிமேவிலங்குங்கவுசிகமடைந்துநிகரிலாச்சரயுவிற்படிந்தே
தீதினையகற்றச்சிறந்திடும்பிரயாகைக்குவந்தெய்திப்பார்திகழும்
போதனென்புலகனடியிணிற்பணிந்துமுனிவர்கடுதித்திடப்போனான். 6

சந்திரவுருவன்றரணியின்வயங்குங்கோமதிகண்டகைதவர்கண்
முந்திடுஞ்சோணநதியினைதன்னின்வதிந்தவண்முனிவர்களேத்த
விந்திரவரையினிலங்கியவிராமனிணையடியிறைஞ்சியேயோவி
விந்தமார்கோதாவிரிபம்பைவிமாநதியினின்விரும்பியாடினனால். 7

தீய்வினையகற்றும்பருப்பதச்சிவனைவணங்கியேதிராவிடநாட்டில்
வேயொடுகேதலிசண்பகம்பூகம்விழுமியவழைபுன்னையாரந்
தூயநற்கோங்கோடிவையெலாந்துலங்கச்சுனையுணீர்சிலம்பியேயோட
நேயமோடரிகள்கனியெலாமுதிர்க்குங்கிரில்வேங்கடமலையடைந்தான். 8

அருவினையகற்ற வயங்குமாகாய கங்கைநீராடியே யனந்தம், பருவர
லொழிக்கும் பாபநாசத்திற் படிந்துயர்குமாரதா ரையிற்போய்ப், பொரு
மியேபெருகும் பயத்தினுண்மூழ்கிப் பொழிலினிற் கிஞ்சுகங்கொஞ்சக்,
குருகினமிலங்கக் குயிலினங்கூவ வயங்குகோ னேரியிற்குடைந்தான். 9

தினகரரனேகர்வயங்கியதெனவேசிறந்திடுமணிகளானகைசெய்
கனககோபுரங்கடிலங்குமண்டபங்கள்கவினுறுகமலஞ்சேர்முகில்போ
லனகனற்புதன்மாலசஞ்சலனலர்மேன்மங்கைநாயகனழகாகுஞ்
சனகிதன்கொழுநனுயர்ந்தவேங்கடவன்றாளிணைவணங்கியேகினனால்.

மங்குலார்சிகரம்வயங்குமாகாஞ்சிநகரினிலுமையெனுமடவா
ளங்கையாற்றழுவக்குழைந்தவர்தம்மைவணங்கியத்திகிரியின்மேவிப்
பங்கயன்மகிழவேள்வியின்வனசமலர்ந்தொளிர்பயோதரமேயச்
சங்குசக்கரங்கைவயங்கியவரதன்றாளினிலிறைஞ்சியேகினனால். 11

அரிமலர்ப்பொழிலின்மிழற்றுமஞ்சுகங்களனமயில்குயிலினமடையத்
திரையுறச்சிலம்பிப்பெருகுகாவேரிசிறந்திருமருங்கினும்வயங்க
விரவிதன்குலவிக்குவாகுவின்றவத்தினிருநிலத்தெய்தியேயரவின்
கருமுகிலெனவேவிழிதுயிலரங்கன்கழலிணைவணங்கியேகினனால். 12

விரைவினிடபவரையினின்மேவிவிளங்கியமாலிருஞ்சோலை
யரியினைவணங்கிமதுரையினடைந்தேயரன்றனையிறைஞ்சிச்சென்றப்பா
வருணனங்குறவேதருப்பையிற்றவஞ்செய்வரிசிலையிராமனைவணங்கி [ல்
யிருவினையகற்றவிலங்குசேதுவினையெய்திநீர்படிந்தனனலத்தோன். 13

சேதுவின்மறையோர்க்கயுதகோதானஞ்சிறந்திடவளித்துவந்தேகித்
தீதறவிளங்குந்தண்பொருநையினைச்சேர்ந்தந்நதியினீராடி.

யேதமின்மலையப்பருப்பதத்தெய்தியிலங்கியகுலாசலவிடத்தி
னுறைதயார்கடலையொருகையால்வாங்கியுண்டமாமுனிவனைக்கண்டான்

நிதறவயங்குந்திராவிடமுனியையிறைஞ்சிடச்சிறந்தவனுசி
யோதவாண்டகன்றுகன்னியாகுமரியுற்றதினுவகையிற்படிந்தே
யாதியாயனந்தசயனத்திற்றுயில்கொளரியினைவணங்கியேயப்பாற்
பாதவமெழிலியுறவளர்ந்தோங்கும்பாற்குனவரையினைச்சேர்ந்தான். 15

கோதில்கேரளதேசத்தினையொருவிக்கோகனங்குறுகியே யோவி
ச், சூதமேகிறைந்து வயங்குருற்பகாரத் தெய்திநீர்த்துறைதொறு மூழ
க்கு, மேதியோடெதிர்ந்து வராலெதிர்பாய விளங்கியகிருவிந்தை மேவி
த், தாதவிழ்மலரான் மலிந்திடும்பொழில்சூழ் தண்டகாவனத்திடைச்
சார்ந்தான். 16

தூயமாநதியுந்துலங்கியபதியுஞ்சொல்லுதற்கரியபன்னூடு
நேயமார்விதுரன்றன்னொடுமெய்திகிரிலாவலாயுதவிராம
னுயுநான்மறையோரமர்ந்துவாழ்பிரகாசத்தயலூழ்கியேவரால்கள்
பாயவேவயங்குஞ்சமந்தபஞ்சகத்திற்பரிவுடனெய்தினனன்றே. 17

பலபத்திராமன்றீர்த்தயாத்திரைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - 3526.

---

109 - வக்ர, துரியோதனன் வதைப் படலம்.

தூயதன்மவெற்றியவன்பதித்தகழுவினிலரியெனத்தோன்றிச்
சாயினைப்பிளந்துதலைகடைமாறிச்சராசந்தன்சமரிடையிட்டுக்
காயுமாத்தாமாவரிப்படைதொடுக்கக்கதைபறித்தெறிந்துசாந்தாரி
சேயிறக்கவானிற்றட்டியவீமற்குதவிசெய்தேவனைத்துதிப்பாம். 1

இருநிலத்திலங்குநதிகளிற்படிந்தேயிராமனும்விதுரனுமெய்த
வரவுயர்துவசன்றருமனோடனுசரனைவருமடிமிசையிறைஞ்ச
மருவமர்துளவோன்மதிவணன்றன்னை வணங்கலும்வரிசிலைமுறித்தோன்
பரிவுடனயனம்புனல்கொளப்படியையளந்தவன்றனைப்பணிந்தனனால்.

எதுகுலத்திறைவன்முன்னவனுடனேயியம்புவானிருதிறத்தரச
ருதிபோன்மலைந்தேயோன்பதிற்றிரட்டிநாளினிலிவர்களேயொழிய
வதிரதர்முதலாயினைவருமடிந்தாரரவுயர்துவசன்வெஞ்சினத்தான்
மதிகுலத்துதித்தவாயுவின்மகனோடமர்பொரவந்தனனென்றான். 3

சதுமுகன்பிதாவிம்மொழியெலாமறையத்தாலகேதனனுடன்விதுரன்
விதிவலியெவர்க்கும்விலக்கரிதென்றவிளம்பியேவியாளகேதனனை
யெதிரமொழிந்துதருமனுக்குரியவியல்புறுநாடளித்தத்திப் [டான்.
பதியினைபாமென் [illegible] பவனன்சேயுடன்பொரமூண்

வேறு.

இருவருக்கதைகரமிலங்கிடவெரியுறுங்கதமுறவெழுந்
தரியிரண்டமர்பொருதபண்பெனவவனியின்கணிடம்வலம்
வருவர்சாரிகைமாறிமீளுவர்வடவைபோலெதிர்நோக்கியே
யுருமுபோலடியறையவோவெருவரிபோலவதிர்ப்பரால். 5

மிகமுனிந்துயர்வரையின்மீதிடிவிழுவபோலவடிப்பரா
னகுவரார்ப்பர்கள்கதைசுழற்றுவர்நயனம்வாரியின்வடவைபோற்
சிகையுறக்கடிதெதிர்வர்நோக்குவர்சேருவாலிசுக்கிரீபர்போற்
பகையுறக்கடிதெதிர்வரொட்டுவரெறிவர்பற்றுவர்கதையரோ. 6

அரவுயர்த்தவனெரிசினத்துடனுலமுண்டவனென்னவே
யுரன்மிகுத்தடர்வீமன்மார்பிடையுருமுபோலவடித்தனன்
விரைவினப்பொழுதரியின்மைத்துனன்வியாளகேதனனுரமிசை
வரையினிற்கனவிடிவிழுந்தெனவயிரவன்கதைமோதினான். 7

எண்ணில்சாரிகையிடம்வலத்தினுமிருகரக்கதைசுழலவே
மண்ணின்மீதமுனிந்துதாக்குமடங்கல்போலெதிர்வேலையின்
விண்ணுளோர்களுமஞ்சவீமனுரத்தினுஞ்சிரமீதினுங்
கண்ணின்மன்னருள்சேய்சினத்தொடுகடிதடித்தனனுரனொடே. 8

அந்தன்மைந்தனடிக்கவேயுயராசுகன்மகன்றிக்குறுந்
தந்திபோலமுனிந்துவந்தெதிர்தண்டுகையிடைசுழலவே
மந்தரத்திடிவிழுவபோலவன்மார்பின்மீதுறுவெங்கனல்
சிந்தவந்தகனுமெனப்புடைத்தார்த்தனன்றிசையொலியுற. 9

அனிலன்மைந்தனடிக்கவுந்தளராதுகண்ணிலியருள்சுதன்
முனிவொடும்படிமிசையின்முந்திமுராரிமைத்துனன்விலாவின்மேன்
மனமெரிந்துயர்வரையின்மேலொருமலைவிழுந்திடவத்துறுந்
தொனியுறக்கதைகொடுபுடைப்பவிழுந்தனன்பவனன்சுதன். 10

வாயுசேயவனடிவிழுந்திடமண்ணின்மீதிடைவிழுந்தெழுந்
தேயெனுமுனரெய்தியேயுயர்தண்டுகொண்டெரிசினமுடன்
சீயமென்னவடர்ந்துதீயவன்முடியுறுஞ்சிரமிசையனல்
பாயவேபுடைத்தார்த்தனன்படவரவுயர்த்தவனஞ்சவே. 11

ஆர்த்துமோதியவாசுகன்மகனானவீரனைமுனிவொடும்
பார்த்துமற்றவன்விலாவின்மேற்படவரவுயர்த்தவன்மோதலும்
வேர்த்தமெய்யொடும்வீமன்வீழ்தலும்வெருவினால்வரும்விமலனுந்
தீர்த்தன்வாண்முகநோக்கியேதுனியுறலுமாலிவைசெப்புவான். 12

பாரின்மிக்கதுரோபதன்றருபாவைகண்ணிலிமைந்தனை
யூருவின்கதையுற்றுமாளுதியென்றுகூறியவுரையினா
லேரின்விஞ்சியதருமனீகுறிசெய்தியென்றலுமிசைகிலா
னரியன்றொடைமீதுதட்டலுமங்ஙன்வீமனதிர்ந்தனன். 13

ஏரின்வீறுதுரோபதன்மகளிட்டசாபமறிந்தவன்
பாரின்மீதுதெளிந்துவீமனெழுந்துபாரியகதையினால்
வாரிபோலவதிர்த்துவானவர்வெருவவந்தமன்மகனிடை
யூருமீதுபுடைத்தலும்படிமிசையுருண்டனனுளைவொடே. 14

வேறு.

வீரனென்வீமனெய்திவிசையினான்மோதுந்தண்டா
லூருவிண்டுளைந்துவீழவுரககேதனன்றான்பின்னும்
பாரிடைச்சமர்செய்வான்போலெழுமுனர்ப்பவனன்மைந்தன்
பேரினம்பொருதியோவென்றுதைத்தனன்மகுடம்போக. 15

கோலமன்னவர்களெல்லாந்தொழுங்குருகுலத்தார்கோவை
ஞாலமேல்வணங்காதான்றன்மகுடந்தான்வீழக்
காலின்மாமதலைகாலாலுதைத்தலுங்கனன்றுபொங்கிப்
பால்வணனெதிர்த்தலோடுந்தடுத்துயர்பரமன்சொல்வான். 16

அடிசிலின்விடத்தையிட்டுமெய்த்திறுட்கழுவைநட்டும்
படியுறுமரக்காமில்விற்பவனன்றன்சகாவைவைத்துங்
கொடியவெஞ்சூதினுடுகொண்டுகொன்றாரத்திமாதி
னுடைதுகிலுரிந்துஞ்செய்தலுன்கலைபோலுமென்றான். 17

அன்றியுமவனிப்பாரமகற்றுதற்கியாந்தாம்வந்தோம்
வென்றிசெய்தவருஞ்சின்னுடனின்மண்ணின்வீவர்நீதான்
கன்றியகருமமேதென்றுரைத்துக்காசினியின்மீது
பொன்றிடுவான்றன்முன்னர்வரவவன்புகலுற்றான். 18

ஆரியநீதானுதியென்றெண்ணுவென்றனெஞ்சிற்
பூரியமதியைத்தந்துபோரில்யாவரையும்வீட்டிப்
பாரினிற்பாரநீக்கியென்னையும்பவனன்சேயா
லூருவிற்றட்டிச்சுட்டிவதைத்தனையுரவோயென்றான். 19

என்னைநீபொறியாய்வைத்தேயியற்றியெலாரையுஞ்செற்று
யுன்னிலென்பேரிற்பாவமொழிப்பதுன்பரமேயன்றே
பின்னைதன்மனுளாவென்றுபேசியேதருமவென்ற
னன்னையைப்பிதாவைக்காவென்றறைந்துநீபோதியென்றான். 20

எதுகுலமன்னன்றன்னையிறைஞ்சியேயேகென்றோதி
மதிவணன்றன்னைக்கையாற்றொழுதுயான்வைதசொல்லை
விதுரநீபொறுத்தியென்றுவிளம்பவின்முறித்தோனுடெஞ்
சதுமறைமுனிவர்பாலிற்றாலகேதனனுஞ்சென்றான். 21

திருவமர்மார்பனைவர்தம்மொடுஞ்சேனையோடு
மரவுயர்வேந்தன்வைகுமிருக்கையின்னனுகியாங்கே
வரிசிலைத்துருபதன்றன்மகளுடைமைந்தரோடும்
புரவலரடையவைத்துப்பூதத்தைக்காவென்றானால். 22

பதியினைப்பூதங்காக்கப்பணித்தரியனுசனொடு
மதிகுலத்தைவரோடும்வாட்கணாளோடுமேகிச்
சதுமறைமுனிவர்வைகாச்சிரமத்தைச்சாரும்வேலை
யுததியினலரிவீழவுலகெலாமிருண்டதன்றே. 23

அரவுயர்துவசன்றன்னையந்தமன்சேரிருக்கைநாட
வரிசிலைமறையோன்மைந்தன்காண்கிலான்மனமுள்வாடிச்
செருவினிலரசன்மாண்டசெய்கையைக்கேட்டாண்டெய்தி
யுரககேதனன்றன்முன்னரிரங்கியீதுரைத்தானன்றே. 24

மாயவன்விரகிற்சேனாபதியெனையாக்காமன்னா
நீயினியருளிலைவர்நெடுந்தலைகொணர்வனென்னத்
தீயவன்சேறியென்றுசெப்பிடச்செல்லும்வேலைத்
தூயனுக்கிருபனெய்தித்தடுத்திவைசொல்லலுற்றான். 25

குந்திதன்மைந்தர்தம்மையின்றுநீகொல்விலந்தன்
மைந்தனின்றுயிர்வந்துய்ந்தேமண்ணினியாள்வானல்லன்
றந்திகோடிறுத்தான்றன்மைதன்னைநீதவிர்க்கலாற்றா
யிந்தவல்விருளிற்சேறல்பவமுறுமென்றுசொன்னான். 26

கொடுமையில்கிருபனிங்ஙன்கூறிடவிவுளித்தாமாப்
படியிற்பாதவத்தின்கீழேயிருந்திடப்பகையாங்கூகை
கடிதினிற்காகந்தன்னைவதைத்துறுங்கங்குறன்னி
லடர்பொரவிதியாமென்றேயனிகத்தோடெய்தினானால். 27

தீதகவிவுளித்தாமாசேனையோடெதிர்த்தலோடும்
பூதம்வந்தனிகமெல்லாம்புடைத்துறவதைத்துக்கையான்
மோதியேபரித்தாமாவைமுடித்தலைமுறிக்கவுன்னி
வேதியன்கொலைக்காகானென்றுரைத்தடித்தோட்டிவிட்ட. 28

செருவிடைப்பூதந்தன்னைச்சேறியென்றடித்தேயோட்ட
வரிசிலையிவுளித்தாமன்மனத்திடைவெந்தீமூள
வரியினைவளர்த்துத்துய்யவரன்வரத்தவஞ்செய்காலை
யெருதினிலிறைவனெய்தியென்னுனக்கீவதென்றான். 29

அறனிவைமொழியக்கேட்டேயந்தணன்சிறுவன்சொல்வான்
செருவிடையைவர்தம்மைச்செற்றிடும்படைதாவென்ன
வெருதுறுமிறைவனின்றிவ்விரவினிலெதிர்த்தார்தங்கள்
சிரமறுத்திடுதியென்னச்சிறந்திடும்வாளையீந்தான். 30

வரத்தினாற்பெற்றவாளையேந்தியேமறையோன்மைந்த
னுரத்துடனுறவேபூதமுற்றெதிர்ந்தடரும்வேலை
கரத்தினிற்படையினாலேகந்தரந்துணித்தேயெய்திப்
புரத்தினிலனிகமெல்லாம்பொருக்கெனவதைத்துவீழ்த்தான். 31

உரககேதனனாமன்னனுறங்குமெல்லணையின்மீதின்
வரிசிலைத்திட்டத்துய்ம்மன்மகிழ்வொடுந்துயிலனோக்கி

யெரிசினத்திவுளித்தாமாவெறும்வலிவாளினாலே
சிரமறுத்தவனைவீட்டிச்சிகண்டியைவதைத்தான்மாதோ. 32

உயர்மறையோன்செய்வாளாலுத்தமோசாவினோடுஞ்
செயலுறவயங்குதாரமனுமனைவதைத்துச்சென்றே
முயலகன்வெரிசின்றான்போன்முனிந்தனிகத்தைவீட்டி
யியல்புறும்வளவன்றன்னையிமைப்பின்முன்வதைத்துவீழ்த்தான்.

துலங்குபாஞ்சாலிபெற்றசுதர்குந்திமைந்தரென்றே
யிலங்கியவாளாலெற்றியவர்சிரங்கையினேந்தி
வலங்கொளுமிவுளித்தாமாவன்னியநகரின்வைத்துக்
கலன்கண்மெய்யிலங்கச்சென்றான்காலெனக்காலினாலே. 34

விரைவினிலிவுளித்தாமாமேவியேபடியின்வீழ்ந்த
வுரககேதனன்றன்முன்னருற்றுயர்குந்திமைந்தர்
சிரமிவைகாண்டியென்றுசெப்பிடவரசனோக்கி
யரிலவைபாஞ்சாலிமைந்தர்தலையிவையந்தோவென்றான். 35

மன்மதன்றந்தைதன்னைமானிடனாகவெண்ணுந்
துன்மதியானவென்னாற்றொலைவிலாவரசர்மாய்ந்தா
ருன்மதியாலேயென்றன்குலத்தினுக்குரித்தாய்நின்ற
நன்மதியினரைக்கொன்றிப்பழியென்மேனட்டாயென்றான். 36

சிறுவரைச்செற்றென்மீதிற்பழிவரச்செருச்செய்தோங்கு
மறையவன்குமரநீயுன்னிருக்கையைமன்றுகென்ன
வறிவறவென்செய்தோமென்றருந்துயர்மனத்தனாகிக்
குறைவிலாப்பரத்துவாசனிருப்பிடங்குறுகிச்சேர்ந்தான். 37

அந்தணன்சிறுவன்போனபின்னரினந்தன்செம்மல்
குந்திதன்மைந்தர்பெற்றகுமாரர்களிறந்தாரென்று
சிந்தைநைந்தழன்றுவாதபித்தசேற்றுடங்கோவித்தே
யந்தகபுரத்தினுவியடைந்திடமாய்ந்தானன்றே. 38

துரியோதனன்வதைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 3564.

120 - வது, பரிட்சித்து ஜநநப் படலம்.

விரவினிலிரவிற்றுரோபதன்சுடரோடைவர்தஞ்சிறுவரைவீட்டிக்
குரகதத்தாமாவிஞ்சயன்மேற்கோலெய்தபாண்டவமென்றுகூறியசொற்
பரிகரித்தபிமன்பாரிதன்னுதரக்கருவினைப்படிமிசைக்கிடத்திக்
கருகியகருநற்குமரனையெழவேமிதித்தமால்கழலிணைதொழுவாம். 1

திருமகள்கொழுநன்மைத்துனருடனேசிறந்தபாஞ்சாலியுமெய்தி
யருமறைமுனிவராச்சிரமத்தினடைந்தவண்டுயின்றெழும்வேலை

யிரவிவந்துதயமாகவேகடிதினெய்தியதாருவனிரவின் [ன்.
விரைவின்வந்திவுளித்தாமன்யாவரையும் வீட்டினனென்றுரைபகர்ந்தா

அந்தணன்சிறுவன்கங்குலினடரவனைவருமாண்டனரென்னச்
சிந்தைநொந்திரங்கிக்குந்திதன்மைந்தர்சிறந்தபாஞ்சாலியோடாற்றி
யிந்திரைகொழுநன்றன்னுடனிமைப்பினிரதமீதேறியேயெய்தி [தார்.
மைந்தர்கள்வளவன்றுரோபதன்சிறுவர் மடிந்திடுங்கொடுமைகண்டுளைந்

துடியெனுமிடையாடுரோபதையாற்றித் துனியுறப்பவளவாய்துடிப்ப,
வடிவுடைச்சுதரை யென்றன்முன்னவரை வல்லிருளிடையினின்வந்து,
கொடுமைசெய்தடர்ந்து கொன்றிடுமிவுளித்தாமன்றன்சென்னியைக்குவ்
விற், பொடியுறமிதியே னெனிலனன்மூழ்கிப் பொன்றுவனென்றுரை
புகன்றாள். 4

அரிவைபாஞ்சாலிமுனிவுடனிவ்வாறறைந்திடவருச்சுனன்வெகுண்டு
திருமகள்கொழுநன்றேரினைக்கடாவச்சென்றுயர்பரத்துவாசன்றன்
பரிவுடனமருமாச்சிரமத்தினெய்தலுமுனிவர்கள்பலரும்
விரைவினினெய்தியிருவர்க்குமாசிவிளம்பிடமாயவனறைவான். 5

தரையினிற்குருக் கேத்திரந்தனிற் பதினெண்ணாளுயர் சமருறப்பொரு
யரவுயர்துவசன்வீமனான்மடியவந்தணன்சிறுவன்வந்தெய்தி [தே
விரைவினிற்குந்திமைந்தர்களருளும்வீரரோடரசரைவதைக்க
வரிவைபாஞ்சாலிமுனிவுடனறைந்தமொழியெலாமருளினனமலன். 6

முனிவர்களிவுளித்தாமனைநோக்கிமுனிவினாலறனிலாக்கொடிய
வினைலைநீசெய்தாயெனக்கடுவிடம்போவிரதமீதேறியேவெதிரச்
சினமுடன்விசையனடுகணைசொரியவிலக்கிமாமறையவன்சிறுவ[த்தான்
னினைவதன்முனரின பாண்டவமென்றேநிகழ்த்திநான்முகன்படைவிடு

மறையவன்சிறுவன்மலரயன்படையைவிடுத்தலுமகபதியருளுஞ்
சிறுவனான்முகன்றன்படையினைவிடுப்பத்தேவர்கடிசைதொறுமிரிய
விறுதியினெழுந்தகனலெனவிரண்டுபடையும்வந்தெதிர்ந்திடவிமையோ
ருறியினிற்றதியுண்ணிறைவநீயுலகமுயவருள்செய்கெனவுரைத்தார். 8

எத்திசையினும்போயனல்பரந்திடவேயிருவர்மெஞ்சமரொழிந்திடுமென்
றத்தியிற்றுயில்வோனயன்படையுபசங்காரவத்திரத்தினாலகற்றும்
வித்தகவிசயவெனவருச்சுனன்றன்விடுத்திடுமெண்கணான்படையை
மெய்த்தவர்மகிழவொருகணையதனால்விலக்கினன்வெம்மைதீர்ந்திடவே. 9

மைத்துனன்விடுத்தவயன்படைவெம்மைமாறியேமீடலுமாயோ
னத்திரித்தாமாநீவிடுபடையையசற்றுதியெனவவன்பிரமன்
மெய்த்தவப்படையைவிலக்குதற்குபசங்காரம்யானறிகிலனெனலு
முத்தரைவயிற்றுக்கருவிதற்கிலக்கென்றேேதியேநகைத்தனன்முராரி.

பின்னரும்விசயனமரினைத்தொடங்கிப்பெருங்கதமுறப்பரித்தாமா
வென்னுறப்பகழியுரத்தினிற்கடவிவில்லிறவிரதத்தையழித்தே

பன்னகப்பகழிதனைவிடுத்தவன் றன்புயத்தினைப்பிணித்துப்பார்மிசையி
னின்னலுற்றவன்றானடந்திடவிரதத்தேறினன்மாயவன்மகிழ. 11

விரைவினிற்றருமன்முன்னரிற்குறுகிவிசயமுன்னிழிகெனவிளம்பி
யரிபினரிழியவயத்தொடும்பொற்றேரெரிந்திடவருச்சுனன்வியந்தி
தனையெனவுரவோர்விடுத்தெய்வப்பகழியுமனலென்கரத்தாழி
யிரதமேற்கடாவாதின்றாகைக்கொண்டிலத்துறவெரிந்ததென்றனனால்.

அரியிவையருளவருச்சுனன்பணிந்தேயமரிலுன்கரப்படைபோல
மருவலர்தமையான்வதைத்தலாலென்றன்விறலினாலேவராவுற்ற
விருவினைகளுந்துன்பத்தினின்யாங்களிடரறவெய்துதற்கருள்வாய்
தரையினில்வயங்குமரசர்போலெளிதாய்நின்றருடலைவனேயென்றான்.

வடிவுடைவிசயன்மொழிந்திடமகிழ்ந்தமாதவன்மறையவன்சுதனை
யடுதியென்றறன்சேய்தனக்குரைத்திடலுமாசுகன்சிறுவனாண்டெழுந்து
கடிவிடமெனவேவதைத்திடவாலுங்கற்புடைத்துரோபதைகருணை
மிடையவேதடுத்தாசாரியன்மதலையிவனெனவிளம்பலுற்றனளால். 14

என்னிளஞ்சிறுவருடன்சகோதரரைவதைத்திடுமிவன்றனைச்செற்றா
லன்னவருயிர்வந்தெழுவரோவிவன்றனன்னையுமென்றனைப்போல
வின்னலுற்றிரங்கிவருவதென்னிவனைவிடுத்திடுமெனவுதிட்டிரனு
மன்னதேநலனென்றறைந்திடவிசயனவனுரத்தறைந்துபோகென்றான்

பாலகர்தமைவெங்காலனைப்போலப்படுத்திடும்பாவிநீகுருவாஞ்
சீலமாமறையோன்புதல்வனாலகையினாற்செற்றிடாதகற்றினமேசென்
றாலமார்மிடற்றோனுடன்பொருமரசன்விடுத்திடவவன்விறலழிந்து
தாலமேற்செல்லத்துரோபதைமுகுந்தன்றாளின்வீழ்ந்தேத்திடும்வேலை.

குண்டலமிலங்கமதிமுகம்வயங்கக்குஞ்சியின்மணிமுடியொளிரத்
தண்டுடைதயங்கச்சதுர்ப்புயந்திகழத்தாமரைத்தாள்களுந்துலங்க
முண்டகன்படையாலபிமனற்பாரியுதரத்திற்கருவெரிமுடுக
வண்டர்நாயகனோரங்குட்டவுருவாயவனுரத்திருந்துகாத்தனனால். 17

சுத்தநான்மறையோன்சுதன்விடுங்கமலன்படையொருநொடிப்பின்
முன்றுலங்கு, முத்தரைவயிற்றிற் கருவினைநிலத்தினிடுதலுமொளிர்கல
த்தலமைத்து, வித்தகவரிமுன் விராடர்கோன்றனையண்மேவியென்கணவ
னுமடிந்தா, னித்தலமிசையின் கருப்பமும்விழுந்த தெரியினினிறப்பன்
யானென்றாள். 18

கருவிலன்விழவேயுத்தரையரற்றக்கண்டைவர்கண்ணினீர்கலுழ, வரி
மலர்ப்பாதத்திடைவிழுந்திரங்க வச்சுதனவர்களையணைத்து, வெருவன்
மின்றரையின் விழுந்தவிக்கருப்ப மெல்லியர்மேன்மனம்வையாப், பெரி
யவர்கழலான் மிதித்திடிற்பிறங்குங் குமரனைப்பிறப்பனென் றுரைத்
தான். 19

இந்திரைகொழுநனியம்பிடத்தருமனிந்திரியத்தினையடக்குஞ்
சிந்தையரெவரென்றியம்பிடமாயோனினைந்திடச்சேர்ந்தமாதவரைச்
சுந்தரமிகுத்தவரிவையரெனினும்விரும்பிடாத்தூயரிக்கருப்ப
மைந்தனுமெழவேகழலினுன்மிதிமினென்றுமாதவன்விளம்பினனால். 20

அரியிவையறையவருந்தவத்தினர்களனைங்கனுர்மேன்மனம்வையா
திருநிலமிசையிந்திரியத்தையடக்கவெங்களாலரிதெனவியம்ப
வருதுனியுறத்தக்கலங்கிடுமைவர்தம்மைநீர்வருந்தன்மினென்றுத்
திருமகள்கொழுநனவர்கடாமகிழமுனிவர்முன்செப்பலுற்றனனால். 21

சுந்தரமிகுத்தவரிவையர்பலர்தோட்டோய்ந்தனனெனினுமுலப்பின்
மைந்தர்கடமையேதந்தயானெனினுமாதர்மேன்மனம்வையாதுயர்ந்த
சிந்தையன்யானிந்திரியத்தையடக்கித்திருந்தியபிரமசாரியும்யா [தான்.
னிந்தநன்மொழிமெய் யென்பதிங்குணர்வீ ரென்றுமால்கருவினைமிதித்

கருமுகின்மிசையேவனசமாமலர்கண்மலர்ந்ததோர்காட்சியைக்காட்டு
முருவினன்சிறந்தநானங்குங்குமங்கத்தூரிமெய்கமழவேயுயர்ந்த
விரவியைநிகர்த்தமுடிசிரமிலங்கவிருநிலன்கலனுறுங்கருவைத்
திருவடியதனின்மிதித்தலும்வயங்குங்குமரனுமெழுந்தனன்றிகழ. 23

அரிதிருவடியின் மிதித்திடுங்கருப்ப மழகியகுமரனுமெழவே, சுரர்
கடுந்துமிசண் முழங்கவொண்மலர்கள் சொரிந்தனர் முனிவர்கள்போற்
றத், தருமனோடனுசர் துரோபதையுடனே தாளினிலிறைஞ்சியேயேத்
தப், பரமன்வாளபிமன் புதல்வனுக்கிசையப் பரிச்சித்துநாமத்தைப் பணி
த்தான். 24

அத்தியிற்றுயில்வோனடியினிற்சனித்தகுமரனையபிமன்வந்தனன்போற்
சுத்தனுந்தருமனனுசரோடெத்திற்றழுவிடத்துரோபதையனைத்தா
ளுத்தரைமுலைப்பாலொழுகிடவுலப்பிலுவகைதன்னெஞ்சினிலுறவே
சித்தசனெனவங்கிலங்கியசுதனைச்சேர்த்தணைத்துச்சியைமோந்தாள்.

உத்தரைவயிற்றின்விழுந்திடுங்கருப்பமுருவநற்குமரனுமெழவே
சுத்தமாதவர்கடுதித்திடமிதித்தசோதிதன்றாளினிறைஞ்சி
யத்தினபுரியாளரசரிற்சிறந்தபாண்டுவின்மனைவியாமணங்கு
பத்தியினிருகண்புனலுறவுரோமம்பொடிப்பவேபகரலுற்றனளால். 26

அன்னையாகியதேவகிமினுளிடத்தி னன்பினிற்றசமடங்காகி, யெ
ன்னுடைச்சுதர்மே லன்புவைத்தரவத் துவசனுலிறந்திடாவண்ண, மொ
ன்னலன்பதித்த கழுவினிலளியா யுயர்ந்தனைவிடவனமுதவ, மன்னவே
யெதியா யிரந்துநஞ்சினைத்தான் மாற்றியேயருள்புரிந் தனையால். 27

அவையினினரற்றுந்துரோபதைமருங்கினம்பரமுவனங்காத்தாய்
சிவனெனுமுனிவாலெழுந்துருவாசன்சபித்திடாதெய்தியேசிறந்த
சுவையுறுகனியோடனங்கடந்தனிற்றுலங்கிடவருந்தவித்தனையாற்
றவனுகர்கனிகொம்பிடையமர்ந்திடவேசார்ந்தைவருயிரினைத்தந்தாய்,

காளமாமுனிவன்கனலிடைவருக்கக்காலனும்வெருவவந்தனற்கண்
முளுமாபூதங்காத்திருலைவர்முடிந்திடாவகைசெய்தங்கரனு
விளுமாவனத்திற்கிருபைசெய்தனையானெறியறுசிந்துமன்மடியக்
கோளுலாங்கனத்திரவிகற்பிரபைகுன்றிடநேமியான்மறைத்தாய். 29

இரவிதன்புதல்வன்விடுத்திடுமரவத்திறந்திடாவண்ணநீயிரதத்
தரையினிலழுந்தப்பதத்தினூன்றத்திச்சதமகன்றனயனைக்காத்தா
யரவுயர்துவசன்மடிந்திடக்குறங்கினடித்துவீமனுயிர்தந்தாய்
குருமகன்விடுத்தபடையினால்விதுவின்குலமறுதருள்புரிந்தனையால். 30

கருவதாய்விழுந்தகருப்பநற்குமாரனுகின்கழலினான்மிதித்தாய்
சருகுகானணவாய்த்தவஞ்செய்வோர்சிந்தைக்ககப்படாத்தத்துவமூர்த்தி
மருகனீயெனவேமதித்திடுமெனைநீவணங்கிடவாசிகள்பகர்ந்தேன்
கரியுரிபுனைந்தோன்கபாலமன்றொழித்தகபடநாடகநமவென்றாள். 31

ஆயரில்லுறியிற் கடநவநீதமருந்தவே யசோதைதன்கரத்தாற், றூய
பொற்றூசு மருங்கிடைதுலங்கத் தொடர்ந்தனைப் பிடித்தடித்திழுத்து,
நேயமோடுரலிற் பிணித்திடநயன நீர்ததும்பிடமையுங்கரையத், தாய்மு
னிற்றேம்பி யழுததேனுலகம் படைத்தளித்தழித்தருடலைவா. 32

அரியரிநமவேயச்சுதானந்தகோவிந்தநமநமவடியேன்
மருகனேநமவேமலர்மகட்கினியமருணனுமாதவநமவே
சுரர்பதிசுதன்றேர்ச்சூதனேநமவேமற்றவன்றோழனேநமவே
யருவினையகலவெனக்குநின்பதத்தையருளுவாய்நமநமவென்றாள். 33

குந்திவந்திறைஞ்சித்துதித்திடமலரான்கொழுநனுந்திருவுளமுவந்து
முந்தியமுறுவலொடுமுகமலர்ந்தேமுடியுடைத்தருமனோடைவர்
மைந்தராயெழவேநலனுமவணிமற்றுனக்கரியதேதெனவே
யிந்தநல்லுரையாலவளுளமுருகவினிதுறப்பகர்ந்தனனம்மா. 34

பரமனற்பாண்டுமைந்தர்களுடனும்பவமறுதுரோபதையெய்தி
யரவுயர்துவசன்மடிந்திடுமவனினடைந்திடவவன்றனையந்தன்
சரியிலாப்பானுமதிமுதலானதேவியர்சார்தலுந்தருமன்
பெரியவத்தாதையடியினினிறைஞ்சியிரங்கினன்பெருந்துனியுறவே. 35

அந்தன்வெந்துயராலனுசன்றன்மகனோடாற்றியபின்னர்க்காந்தாரி
குந்திதன்சுதனையணைத்திரங்குதலுங்கோதிலாத்துரோபதனருண்மின்
னந்தசபுரத்தினுயிருறமடிந்தவரவுயர்துவசன்றன்முனரிற்
சிந்தையினுவந்துவிரிந்திடுங்குழலைச்சிறந்திடமுடித்துநின்றனளால். 36

விரித்திடுங்குழலை முடித்தபாஞ்சாலி விமலனைமகிழ்வட னிறைஞ்
சிக், கருத்தினிலுனையே யிருந்தவார்வினையைக் களைந்துநற் கதியருண்
முதல்வா, துருத்தனுயவையுட் சுயோதனனனுச னுரிந்திடுந்துகில்வளர்
ந்திடவே, யுரைத்தியான்மொழியுஞ் சபதத்தைமுடித்த வுலப்பிலாய்
போற்றியென் றனளால். 37

பரிவுடன்முராரிதனைத்துதிசெய்துதுரோபதைபணிந்தவண்மகிழ
வரவுயர்துவசனொடெங்களிடையேயளப்பிலாமனைவியர்மடியச்
செருவினிலிறந்தாரனைவர்க்குமுரித்தாந்தேவியருடனனலுறவே
சரவணைமிசையின்வணங்கியகங்கைதனயன்பாலெவருஞ்சார்ந்தார். 38

சரசயனத்தின்வயங்கியகங்கைதனயன்மாதவன்றன்னைநோக்கிப்
பரமநின்மனைவியாகிலமடந்தைபரித்திடும்பாரநீயொழித்துன்
றிருவுளத்தின்படியெலாமுடித்தசீதரதேவநாயகனே
யரியரியடியேனந்தகாலத்தினணுகினையென்றிவையறைவான். 39

அரவுயர்துவசன்முனரியான்றிருமாலாழியையெடுத்திடவமரிற்
பொருதுவனெனுஞ்சொற்பழுதுறுவண்ணம்பொற்கலையவிழவுத்தரிகந்
தரையினில்விழநற்றரளமாவடங்களலைந்திடத்திகிரிகைவயங்க
வருகவினயனமகல்கலாமனதுமறக்கலாவெனத்தொழுதனனால். 40

சுரர்பதிசுதனென் னுடனமர்பொரவே துலங்குதேர்த் தட்டினின்
வயங்கப், பரியினைப்பிணித்து நுகத்தினைப்பூட்டிப் பாசமுட்கோல்கர
மிலங்கக், கரியொடுதுரக நரர்மிடைந்திடவே களத்தெழு தூளிமெய்சி
றையத், திருமுகம்வெயர்ப்ப விரதமூரெழிலென் னெஞ்சிடைத்திருந்தி
யதென்றான். 41

திருமகண்மருணமசகமடந்தைகொழுநனுந்தேவனேநமவுன்
னிருபதகினைப்பாருலப்பிலாப்பவங்களிறப்பிறப்பகற்றுவாய்நமவே
யரியரிநமவேயெனவுரைத்திருகணமலன்றன்னழகெலாநோக்கிச்
சுரர்நதிபுதல்வன்றனுவினைத்துறந்துதுலங்குமாதவன்பதத்துற்றான்.

கருமுகிலெனவேயரியினைக்கண்ணுற்கண்டுயிர்துறந்தவீடுமென்றன்
சுரருயர்விமானமேற்றியேமலர்கள்சொரிந்திடத்துந்துமிமுழங்க
விரவிமண்டலத்தினடுவுறுநெறியினிருமருங்கினும்விளக்கெடுப்ப
பரமன்றன்பதியிற்பத்தர்களெதிரேவரப்பரனடியினிற்சேர்ந்தான். 43

சந்தனுமன்சேய்மடிந்திடக்குந்திதனயர்கள்கண்புடைத்திரங்கி
மந்திரவிதியாலழலிடைவளர்த்திமடிந்தமந்தாகினிமகனோ
டந்தமன்மைந்தரனைவர்க்குங்கிளைக்குமறன்சுதன்றவுமியனுரையாற்
றந்திடுநூலிற்கங்கையினுதகக்கிரியையைத்தாழ்வின்றிமுடித்தான். 44

தவுமியநடத்துஞ்சடங்கினினுதகக்கிரியையைமுடித்திடுந்தருமன்
பவமறுமனுசர்புடைவரவயங்குந்துரோபதைமகிழ்ந்திடப்படிமே
லுவமையிலிரதத்தத்திமாநகரினுற்றுயர்மடங்கலாசனத்திற் [ன்.
புவியினையளந்தோ னிருகையால்வாங்கிப் பொன்முடிகவிக்கவீற்றிருந்தா

தவமுயர்தருமனனுசரோடிறைஞ்சத்தரணியையாளெனவிருத்தி
நவையறுசினிதன்சுதனுடன்றேர்மேனாரதாதியர்புடைசூழ
வவனியின்சுமையையகற்றியமுராரியமரர்கண்மலர்பொழிந்தேத்தத் [ன்.
துவரையையடைந்தே தந்தையைப்பணிந்து தாயமாதாவினைத்தொழுதா

முன்னவனிருதாட்பணிந்தெழுமுராரியடிமிசைமுண்டகமடந்தை
மின்னெனவயங்குஞ்சத்தியபாமைமுதலியதேவியரடையப்
பின்னேதன்றுடனேவயங்கிடச்சுதர்கள்பெரிதுவந்திறைஞ்சிடமுராரி
கன்னலொண்மொழியார்மனைவியர்களிப்பக்கவினுறவீற்றிருந்தனனால்.

பரிட்சித்து சநநப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 3611.

---

121 - வது, மிதுலைப் படலம்

இரவிதன்குலத்திற்பிறந்துதாடகையைமடித்தெதிர்சுவாகுவையெற்றிச்
சரியிலாச்சனகன்மகடனைமணந்துசரத்தினால்விராதனைவீட்டி
கரன்முதன்மூவர்கவந்தனிந்திரன்சேய்கந்தசனிவர்களைவதைத்துத்
திருவுடனயோத்திவயங்கிடமீளுந்தெசரதவிராமனைத்துதிப்பாம். 1

சுவைதருமொழியினிமியின்மாகுலத்திற்றோன்றியமதிகுலதிலக, ன
தியினுள்வயங்கும்பகிரதிபோலநலமுறுமரசருளிலங்கு, மிதுலையின்வெ
குலாசுவனெனுமன்னன்வேதமெய்ப்பொருளினையுணர்ந்தே, யெதுகுல
முதல்வனிறைவனென்றறிந்தாண்டிராப்பகலவன்புகழுறைவோன். 2

வேறு.

நயனநீர்மல்கிற்குநாரணநமவென்றோதும்
புயல்வணுபோற்றியென்னும்பொன்மதிற்றுவரைநோக்கி
யியல்புறக்கரங்கள்கூப்புமென்புடனுருகுநையு
மயலொன்றுமறியானடியரியரியரியென்பானால். 3

பரிதிபோலொளிருமன்னன்பரமனைத்துதித்துநாளும்
விரதனாயமருகின்றமிதுலையின்மறையோன்மைந்தன்
சுருதிதேவன்னேரில்லாச்சோதியாமுராரியென்று
கருதியேகலைகளுன்குக்கண்ணனைமறவாநாவான். 4

சதுமறைச்சுருதிதேவன்சனகன்றன்குலத்தின்வந்த
மதியுறமரசனோமொயனைத்துதிக்குநாளின்
றதிகளவாவெலையன்றன்பதமவர்க்குநல்க
மிதுலையினெய்துவானாய்விழுமியவிரதத்துற்றான். 5

மாதவர்க்கிறைந்துருழமன்னவர்மருங்குசுற்ற
யாதவன்வந்தானென்றேயெழிலுறுசின்னமூத
மீதுயரமரரேத்திவிளக்கியமலர்கவேச்
தெரன்சேனையார்ப்பத்தேர்மிசைச்சென்றான்மாதோ. 6

தூயவனிரதத்தேறித்துலங்கியருநாட்டிற்சென்
றேவெனுமுன்னர்த்துய்யவிடங்கர்நாடதனையோவித்

நிமையில்விராடனுடெஞ்சிறந்திகெங்குந்திராடு
மாயவனொருவிக்கோதில்கேகயநாட்டின்வந்தான். 7

கேகயமொருவித்தூயகௌசலைநாடுகெட்டிக்
கோகிலநிறைந்துகூவக்கொழுமுகிலணைவுங்காவும்
பூகமுங்கழையுஞ்செந்நெற்பொலிவுறுமிதிலைதன்னி
னாகமேனாகர்போற்றநடித்தவனேகினானால். 8

அத்திரிவாமதேவனருணிறைகண்ணுவன்றான்
வைத்திநோவனுசிவயங்கியமரீசிகர்க்க
னுத்தமவீணையேந்துமுயர்முனிமுதல்வராய
வித்தகத்தவர்களெல்லாம்விமலனோடடைந்தாரன்றே. 9

இரதமீதமலனெண்ணின்முனிவர்களிலங்கிச்சூழச்
சுருதிதேவன்றன்பாலுந்தூயமாமிதிலைதன்னிற்
பருதிபோலொளிருமன்னன்பாலுமீருருவமாகித்
துரிதமாவினைகண்மாளச்சுரர்மலர்பொழியச்சென்றான். 10

அரசர்கோன்மிதிலைவேந்தனகத்தினுமறையோன்முன்னு
மிருவகையாகவெண்ணின்முனிவரோடேககாலத்
தொருமுதலிருவராகியுன்னுமுன்னடைதலோடும்
புரவலன்மகிழ்ந்துவந்துபுயல்வணனடியின்வீழ்ந்தான். 11

மிதிலைமன்விமலன்றாளினிறைஞ்சியேவிழுமிதான
புதுமணித்தவிசின்மீதினிருத்திப்பொற்பாதந்தன்னைக்
கதுமெனவிளக்கிநீரைக்கம்மிசைதெளித்துட்கொண்டு
சதுமறைமுனிவர்க்கெல்லாந்தமனியப்பீடமிட்டான். 12

அறுசுவையடிசின்மாயனுடனருந்தவர்களெல்லா
நிறைவுறவருந்தலோடுநிகரிலாக்கலவைதுய்ய
நறுமலரளித்துநின்றுநடித்தனனுவமையில்லா
விறையவனென்னிலெய்தியிலங்கினானென்றுமன்னோ. 13

என்புளமுருகிக்கண்ணீர்நிலத்துறவெழுந்தேயாடு
மன்பனைமகிழ்வினோக்கியரசநிற்களவிலாத
வென்பதமளித்தேனென்னச்சரண்மிசையிறைஞ்சித்துள்ளித்
துன்பமோவியமனாடித்துதிசெய்துதொழுதுநின்றான். 14

வேறு.

மிதிலைமன்மனையின்விருந்தனமருந்திவிமலனீண்டிருக்கவேவேறோ
ரெதுகுலவிறைவனாகியதானாயிந்தமாமுனிவருமாகிச்
சதுமறைநெறிசேர்சுருதிதேவன்முன்சார்தலுமவனெழுந்தாடித்
துதிசெய்துபிறிந்ததன்னுடையில்விற்றூயவன்றன்னொடுஞ்சென்றான்.

அரிவரப்பிறிந்தமனையினிற்கொடுசென்றன்புடனாதனமாகப்
பிரியணைபிடவேமிகமகிழ்ந்தருளிப்பின்னைதன்னாயகனிருப்ப

விருவினையகற்றுமுனிவர்கட்கெல்லாமிலங்கியதருப்பையைக்கிள்ளித்
தரையிடையிட்டேயமர்திரென்றுரைப்பத்தவர்வியந்தினிதுடனிருந்தார்.

கதலியின்பழத்தைநுகர்மினென்றளித்துக் கமண்டலத்தயத்தைமுன்வைக்க, வேதகுலவிறைவன் முனிவர்களுடனேயினிதுடனுகர்ந்துநீர் பருகச், சதுமறையறைவோன் றுளசியினிதழைத் தந்திடச்சென்னியிற் சூட்டி, விதியினையருள்வோன் சுருதிதேவனுக்கென் வீட்டினைத்தந்தனனென்றான். 17

வைகாலத்திற்சுருதிதேவனுக்கும்மெழிலுறுமிதுலைவேந்தனுக்கு [திப்
காகணையமர்வோனிருவர்தம்மனையினண்ணித்தன்பதங்கொடுத்திருத்
பூகமார்புரியினிருவகையாகமுனிவருந்தானுமாய்ப்புறப்பட்
டோகையங்குறவேயொருவகையுருவாயேகவானும்பர்கடுதித்தார். 18

இருவகையாகிமுனிவர்களிருபாலிலங்கியதேரிவர்ந்தானு
யாசர்கோனில்லினந்தணன்மனையினடைந்தந்தகரினையொருவி
யொருவகையானவடிவமாய்க்கலந்தேயுவரிசூழ்துவரையிற்சேர
மருவமர்துளவோன்மாயைவல்லவராரென்றுவானவர்மலர்பொழிந்தார்.

சுருதிதேவனுக்குமிதுலைவேந்தனுக்குந்தூயதன்பதத்தினையளித்துப்
பரிதிமண்டலத்தினுறைந்திடும்பரமன்பரவைசூழ்துவரையினெய்தி
விரதமாதவர்க்குவிடைகொடுத்தருளிவிதர்ப்பர்கோன்மகளுடன்மேவிச்
சரதமார்புராணர்தவருளமகிழ்ந்துசாற்றிடவினிதிருந்தனனால். 20

மிதுலைப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 3631.

---

122 - வது, குசேலப் படலம்.

மனைவியேவலால்வறுமையின்வந்தநற்குசேலன்
வினையெலாமறமெய்தழீஇமெல்லணையிருத்திப்
புனையுமாடையிற்றருப்பணம்புசித்தவன்மனைக்கே
வினியமாசெல்வமளித்தருளிறையையேத்துவம்யாம். 1

நெறியையுற்றிடுங்குசேலனுமறையவனிலத்தின்
வறுமையெய்திடவிருத்தனுமருவுவான்மனையி
னுறையுங்கற்புடையருந்ததியொத்தமாமடந்தை
யறம்வளர்த்தவனல்குரவளக்கரினாழ்ந்தாள். 2

இழுக்கில்செய்கையளிருண்டமேகத்துறுமின்போன்
மெழுக்கினிற்பெரிதுரிந்துபொன்சிறிதுறவிளங்கு
மழுக்கில்கந்தரத்தமர்ந்திடுமங்கலநாணள்
புழுக்கிலாதுமாசுறும்பழவாடையைப்புனைவாள். 3

கரங்களிற்பிறர்மனைதொறுநெற்குற்றக்காலின்
குரங்கினிற்சகனம்மென்கைகொப்பளங்காய்ப்பத்
திரங்குதொக்கினையெடுத்தென்புதோன்றிடத்தேயு
மருங்குபோலவேமெய்யெலாமெலிந்திடுமடந்தை. 4

புற்றினுற்றிடுமரவின்வாயுறுமெலிபோல
வுற்றநல்குரவிற்சிந்தையோடுங்கியேயுலர்வா
ணிற்றலும்பிறர்மனைதொறுமேவியேநெல்லைக்
குற்றுகூலியின்றவிட்டினைக்கொழுநனுக்கிடுவாள். 5

வறுமையாகியவளக்கரினமிழ்ந்திடுமடந்தை
யறிவுவிஞ்சியகொழுநனையன்பினானோக்கி
யுறியுறுந்தயிருண்டவன்சகாவெனமுன்னாண்
மறைகளோதினவண்மைநீமறந்தனையென்றாள். 6

தவர்களெண்ணுசாந்திபனிசதுமறையருளத்
துவரைமன்னனுன்றோழனாயோதினையன்றே
யவனியின்னவனரசியல்செல்வத்தையடையப்
பவமுறும்மிலம்பாடுமெக்குற்றதேன்பகர்நீர். 7

குருந்தினாச்சியர்கலைகொடுவெயங்குகோவுடனே
திருந்துநான்மறையோதியேசகாவெனச்சிறந்தாய்
வருந்தவேண்டுவதில்லைநீமாதவனிடத்திற்
பொருந்தினாலுன்றன்வறுமையைப்போக்குவனென்றாள். 8

மனைவியீதெலாமறைந்திடமறையறிகுசேலன்
வினையகன்றிடத்துவரையின்வேந்தனுக்கியானிங்
கினியதாகவேயென்கொடுசெல்வனென்றியம்ப
நனிதவத்தவடருப்பணநல்கியேகென்றாள். 9

அரிவைநல்கியதருப்பணந்தனைத்தையலனேகந்
தெரியவேபலமாலைபோனான்றசிரையிலே
பரிவுடன்முடிந்தேயொருகோலினைப்பற்றித்
தரையினூன்றியேதவறியகால்கொடுநடந்தான். 10

நாரியால்வளைதனுவெனநரைதருமேனி
பாரின்மூப்புறவளைந்துமுந்நூலுரம்பற்றா
வீரைந்தோடுதொண்ணூறுறுபருவம்வந்தெய்தக்
கீரையின்சிறுவிதையெனக்கண்முகங்கிடந்தே. 11

தோலுமார்புறநூலுமெய்துலங்கிடத்தூய
நாலுமாமறைகழறிநோவினனடந்தே
ஞாலமேற்படர்நாளொளிர்நகர்தொறும்வைகி
வேலைசூடுவராபதிமேவினன்குசேலன். 12

துவரையெய்தியேதொல்வினையுதறுவான்போல
நவையறுங்குணன்மூப்பினான்மெய்யெலாநடுங்க

வலைவயுளெய்திடவவனியையிடந்தவன் கண்டே
யுவகைவிஞ்சிடவெதிர்ந்தாமுறத்தழுவினனால். 13

மாதவன் வியந்தென்னுயிர்த்தோழன் வந்தனனென்
றாதரத்துடனணைத்துத்தன் கோயிலிற்கொடுபோ
யேதமற்றபொன்னாதனத்திடையினிருத்திச்
சீதரன் மகிழ்ந்திடுதலுந்தேவியர்பணிந்தார். 14

வேடனைத்தருமின்னனாள்வீசனம்வீசச்
சூடகக்கையிற்றலங்கிடச்சத்தியபாமை
யாடகத்துறங்கவரியைக்கரத்தினாலசைப்பப்
பீடிடைக்குசேலத்தவன்பெரிதுவந்தனனால். 15

சகியனாகியகுசேலனைச்சக்கரனோக்கி
நிகரினான்மறையிருவருநிகழ்த்திடுநாளிற்
றகைமையுற்றசாந்தீபனிமனைக்குநாங்காட்டம்
பகலிடைத்தரவெய்தினம்பழுவத்தினன்று. 16

தரையின்விஞ்சியபழுவத்திற்றளர்ந்திருவோருஞ்
சிரமடைந்திடவிறகினைச்சுமந்துயாஞ்செல்ல
விரவியுங்கடன்மறைந்திடவிடித்துவான்பொழிய
வெருவிநின்றதுமறிதியோவென்றுரைவிளம்பும். 17

வெருவியாமொருமரத்திடைநிற்கவெவ்வரவம்
வருதல்கண்டவனஞ்சிவான்மழைதனினோடித்
தரையினூர்புகுமுன்னர்ச்சாந்தீபனியெய்தி
யிரவினம்பயந்தவிர்த்தமையறிதியோவென்றான். 18

மனையினம்மொடுசென்றுசாந்தீபனிமறையா
னனையுமாடையைநீக்கிநற்றுகிலினைக்கொடுத்தே
யினியவன்னமாண்டிருவர்க்குமளித்தமையெல்லா
நினைதியோவென்றபின்னருநிகழ்த்தலுற்றனனால். 19

சரியிலென்னுயிர்சகாயவுன்றேவிசற்குணத்தாள்
பரிவினாலெனக்கினியதுதந்ததென்பகரென்
றுரைசெய்மாயன்முன்னான்மறையோன்வெள்கவவன்ற
னரையினாடையின்றருப்பணங்கண்டரியவிழ்த்தான். 20

பாவமற்றவனாடையினவிழ்த்திடுபரம
னாவலிற்றருப்பணத்தினின்மூவிரலள்ளித்
தேவர்தம்பதிமுதலியதிடுக்கமுற்றிடவே
நாவிலிட்டிரதம்முறநலனொடுநுகர்ந்தான். 21

பின்னருங்கரவிரலிடையள்ளலும்பிடியா
வன்னமென்னடையுருப்பிணிமாயனோடுறைவாள்
முன்னநீநுகர்தருப்பணமுடிவிலாதளித்த
தின்னநீநுகர்ந்தாலிரணத்தனுமென்றாள். 22

விரைவினிந்திரைகரம்பிடித்தகற்றிடவிமலன்
பரிவொடுங்குசேலன்றனைநோக்கியுன்பாரி
சரியிலுத்தமிதனியளாய்த்தளர்ந்துநித்தலுமுன்
வரவுநோக்கியேவாடுமுன்னேகெனவறைந்தான். 23

வடிவுடைத்திருமணாளன்மற்றவன்றனைத்தழுவிக்
கடிதுசெல்கெனக்கடுவினைதருமருநிதியை
நெடியவன்கொடாதேகெனநிகழ்த்தினனென்றே
முடிவிலாநலனுறமுந்தியேகினன்மறையோன். 24

மறையவன்கடிதேகித்தான்வைகுமூரதனி
னுறையுமுன்னரினுலகமேழுண்டவனருளா
னிறையுஞ்செல்வமுநித்திலமனைகளுந்தோன்றி
மறுவிலாமனையாண்மலராளுருவானாள். 25

பழுவமெங்கணுநாடுகளாகியேபழனங்
கழையுஞ்செந்நெலும்பூகமுங்கவினுறநிறைய
வழைவருக்கைமாமாதவிசெண்பகம்பொழிலா
ரெழிலினோடுமாநதியினுடவரெங்குநிறைந்தார். 26

மறையினூலுயர்குசேலமண்டலமெனத்தோன்றி
நிறையுமாநிரையுண்ணிலநெடும்பொற்றேர்களிமா
வறையும்பேரியோடளப்பிலாவீரர்கண்மிடைந்தே
யிறைவன்றன்னையாண்டெதிர்கொளவடைந்தனரெங்கும். 27

மறையவன்னெதிர்மாமணித்தேர்நிரைமன்னர்
நிறையுமாகரிநெருக்கமுநோக்கியேவெருவி
யிறைவன்யாரெனநினையுமுன்னிரதமுங்கொணர்ந்தே
குறைவின்மாதவவேறெனக்கரங்கள்கூப்பினரால். 28

விரைவினின்னிரதத்திடையேறவேவிளங்கு
மரிவைமார்கள்பல்லாண்டுகளறைந்திடக்கவிகை
சரியிலாநலச்சாமரைதயங்கிடத்தரள
நிரைகொடாவடங்கலன்மெயினிறைந்திடக்கண்டான். 29

கரிகண்மாவணிகனகப்பொற்றேரிதேதெனவே
நரைகண்மல்கிடநடுங்குந்தன்மேனியைநோக்க
வுருவமாரனும்வெள்கிடும்வாமமெய்யோங்க
வரியளித்திடவந்தமையாமெனவறிந்தான். 30

மாதவன்னருடன்னினால்வந்தவாமெனவே
வேதியன்றெரிந்திடவேந்தர்கைகூப்ப
மோதுபேரிகைசங்கொடுதுந்துமிமுழங்க
வேதமற்றமாநகரிடையெய்தினனன்றே. 31

சுத்தநன்பொனாற்றலங்கியகோபுரவணிக
ணித்திலங்களானிறைந்திடுமாளிகைநிரைகள்

சித்திரங்களார்மண்டபஞ்சிறந்தவேதிகைகள்
பத்திசெய்திடும்வீதிகள்பலவெலாங்கண்டான். 32

அரசர்கைதொழவந்தணராசிகள்கூற
முரசுசங்குகாகளஞ்சினமெங்கணுமுழங்க
வரிசையாகியசிவிகைமாதராரேந்த
நிரைசெய்மாமணிக்கோயிலினிகரிலானடைந்தான். 33

ஞாலமேன்மதனுமெனக்குசேலனுநண்ணக்
காலிநூபுரஞ்சிலம்பிடக்கலன்மெய்யினிலங்கக்
கோலமாமலர்வைகியகொம்பெனவயங்கிச்
சீலமாகியதேவிவந்தடியினிற்பணிந்தாள். 34

துலங்குதேவிவந்தடிதொழத்தூயநற்குசேல
னிலங்குமாசனத்தெழிலுறுமனைவியோடிருந்து
நலங்கொளின்னமுதருந்தியேநானமெய்பூசி
யலங்கல்சூட்டியேயமளியினின்பமுற்றமர்ந்தான். 35

மலைவிதன்றெனுமொராறுமிரதியும்போல
வினைகள்வென்றிடுங்குசேலன்வீற்றிருந்திடத்தேவி
துனிகொணல்குரவொழிந்ததேதுலங்கியசெல்வங்
கனவுதான்கொலோசுவர்க்கபோகமுறெனச்சொல்வாள். 36

அருப்பநுண்ணிடையணங்கனையன்றுநீயளித்த
தருப்பணந்தனைச்சங்கொடுசெக்கரந்தரித்தோன்
விருப்பமுற்றனேவிழுங்கிடும்பலத்தினன்மேவுந்
திருப்பொலிந்திடுஞ்செல்வமீதுணரெனவுரைத்தான். 37

தூயனாகியகொழுநனீதறைந்திடத்துலங்கும்
வேய்கொடோளினள்வியந்துதன்கணவன்றன்னுடனே
நேயமாகியேநிறைந்திடும்பெருஞ்செல்வத்தெய்தி
யாயர்பாடியின்வளர்ந்தவன்றனைத்துதித்தமர்ந்தார். 38

குசேலப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - 3669.

---

123 - வது, வைதீகப் படலம்.

ஒருதனித்தேரின் விசயன்வைதிகனொ டேவெலாமுலகமுங் கடந்
தான், டிருவரைகிறத்தி விரசையுங்கடந்தே யெழில்கொள்பே ரொளி
யிடத்தெய்திச், தரையினிற்றான்செய் விரகெலாநடித்து மறையவன் ற
னயரைக்கொணர்ந்து, விரைவினிற்கடிகை யேழகல்வதன்மு னளித்த
ருள் விமலனைத்தொழுவாம். 1

துவரையின்வயங்குந் தூயயாதவர்கோன் றுலங்கியவேள்வியை வளர்ப்பா, னுவமையிலிணையா மதகரிக்கழுத்தி னொளிர்பொனின் கலப்பை யார்நுகத்தி, னவனியினிலங்கப் பூட்டியேவயிரக் கொழுமுனைத் தினிலந் திருத்தி, நவமணியிலங்க வமைத்தசாலையின்கண் ணண்ணினன் றுருப் பிணியுடனே. 2

மாயவன் றுவரா பதியினின்வயங்கு மகத்தினை வளர்த்திடமகிழ்ந்து, னிமையிலரசர் திரளொடுமிபமாச் சிறந்ததின் டேர்களுமிடைய, நேய மோடிரத மிசையினிற்றரும னெறியுறுமனுசரோ டெய்தத், தூயமாத வர்கண மகிழ்வொடுந்துவரைச் சோதிசெய் மகத்திறுக்கடைந்தார். 3

ஆடகன் றன்னை வதைத்திடுமமல னருந்தவர்தங்களி னன்பாற், சோடசவிருத்துக் களையுறவரித்து மகத்தினைத் தொடங்குமவ்வேலை, வாடியோர்மறையோ னிரங்கிடவவன்றன் மனைவிதான் பெறப்பெறவிலங்கும், பீடுடைச்சிறுவர் மூவர்களுடலோ டந்தரமாயையாற் பெயர்ந்தார்.

சதுமறையறைவோன் றனயர்கண்மூவர்பெயர்ந்திடத்தளர்பவன்மனையா
ளுதரமார்கருப்பநிறைந்திடமறையோனுலகளந்தவனுடனுரைப்பான்
கதுமெனச்சிறுவர்மறைந்தபோலிந்தக்கருப்பமார்மதலைபோகுவமுன்
பதனமாய்க்காவாயெனிலுயிர்றுறப்பனென்றிடப்பார்த்தனீதறைவான்.

மறையறைபவவுன் மனைவிதான்மதலை பெறுந்தருவாயிடைவந்தே, யறைகுதிவிரைவிற் காப்பனென்றியம்ப வந்தணனேகித்தன் னில்லாள், பெறவிடருறும்போ துரைத்திடவிசயன் பிஞ்ஞகன் பகழியாற்காப்பச், சிறுவனுய்ச்சனித்தா னிலத்திடைவிழுமுன் னுடலொடுஞ் சேணிடைப் பெயர்ந்தான். 6

மறையவன்சிறுவன்பெயர்ந்திடவிரங்கிமகபதிமைந்தனைநோக்கி
விறலுடையவன்போற்காப்பனென்றுரைத்தவிற்காதகேந்திநீயின்று
யறிவிலியெனவங்கிகழ்ச்சிகளுரைத்தேயந்தணன்மகார்முன்னர்
முறையிடவெருவன்மதலையர்தம்மைத்தருகுவனென்றரிமொழிந்தான்.

சுருதிநாயகனம் மறையவனருளுஞ் சுதர்களைக் கொணர்வனென் றுரைத்து, விரதமாதவரை வேள்விமுன்னிருத்தி யெனுமொழிவிளம்பி யேவயங்கு, மிரதமீதமர்ந்து விசயன்வைதிகனோ டேழுலகியாவையுமொருவிப், பரிதிதான்கடவா துயர்ந்திடுதிகிரிப் பருவரைதன்னையுங் கடந்தான். 8

மாயவன்விரைவினுலகெலாங்கடந்தனவயமேகாதெனநோக்கி
நேயமோடடைந்தவிசயன்வைதிகனையிரதமீதவனுறநிறுவி
மீயுயர்முகட்டினண்டத்தைக்கழிந்துவிரசைமாநதியெதிருறவே
வேயெனுமளவிற்பெயர்ந்துபேரொளியினெய்தினன்கருமுகிலெனவே.

அமானவனலங்கு மலங்கன்மார்புறவே பிப்பிலத்தடியினில் வயங்கி, யமானையோர்கணையால் வதைத்தவனடிய ராகிமண்விட்டுவின் னொரு

விச், சமானமில்விரசை கடந்துவந்தோர்கள் சதுர்ப்புயஞ் சங்குசக்கரமு,
முமாபதியிடனைத் தவிர்த்தவன்போல வுருக்கொளத் தழீஇக்கொளக்
கண்டான். 10

பூருவதிசையின் வாயில்காவலர்சண் டப்பிரசண்டரும் பொலியச்,
சீருறவியமத் திசையினின்வரைபோற் பத்திராசுபத்திரர்திகழ, நேரின்
மெய்ச்செயனும் விசையனுங்குடக்குத் திசையினிற் கதைகொடுநிற்க,
வேருறுந்தாதா வுடன்விதாதாவுத் தரதிசையிலங்கிடக்கண்டான். 11

குமுதனற்குமுதாக் கிடன்சுடற்கதைதலைக் கொண்டபுண்ட ரீகன்
வாமனன்சீர், சமனின்மெய்ச்சங்கு கருணனற்றவஞ்செய் சருவனேத்திர
னெறிபொருந்துஞ், சுமுகன்மாதவர்க ளொண்ணுசுப்பிரதிட் டிதனெனு
மிவரெண்மர்துலங்கிக், கமையுறநாலு வாயில்காப்பவர்க்குந் தாதராய்த்
திரிவனகண்டான். 12

உரகபூடணங்கள்வயங்கிடக்கனகபூதரமொத்துமெய்யொளிர
விருகரங்குவித்தஞ்சிறைவிரித்துயரக்ககபதியிலங்கிடக்கண்டே
தரளமாவடங்களலைந்திடக்கிரீடந்தயங்கிடப்பசும்பொனூர்மணிக்கோ
லொருகையினுறவேதிசைதொறுஞ்சேனைபதிதிரிந்துவந்திடக்கண்டான்

விமலையேருறுமுற்கருடணிஞானை விழுமியகிரியைமெய்யோகை
சமனிலாவமலைபிறகுவியெழில்கொள்சத்தியம்வயங்குமீசானை
சுமைகொள்பூங்குழலார் துவரிதழ்வாயார் துடியெனுமிடையினரிலங்குங்
கமலைநேரிவர்களெண்மர்வெண்கவரிகவினுறக்கரங்களாலசைப்ப. 14

ஆயிரமலிந்தகோடியாதவர்களவிரெனவொளிகொள்வைகுந்தத்
தாயிரம்பணங்கள்விளங்கிடவனந்தன் கவித்திடவவனுடன்மிசையி
னாயிரம்முடிகளொருமுடியாகப்புயங்களாயிரம்புயநாலா
யாயிரம்பதமீரடியெனவிருந்தவாயிரம்பெயரனைக்கண்டான். 15

மழைமுகிலனகமதிநிகர்வதனம்வளைநிகர்கந்தரமுயர்ந்த
கழைநிகர்வயங்குந்தோளிணைகமலமுகைநிகர்பயோதரமிடைநூ
லெழிலுறக்கலன்களிலங்குமாமடவாரெண்மர்களிருமருங்கிருப்ப
வழகினுக்கழகாயமர்ந்தவச்சுதனையன்புடன்யாதவன்கண்டான். 16

அந்தமுமடியுமளப்பரிதாயவசஞ்சலவாதிதன்னடிமேற்
றந்தியைவதைத்தவிறைதனைத்தானேதொழுதலுந்தத்துவமூர்த்தி
யந்தணன்சிறுவர்தமையுனக்களிப்பனவனியிற்றசவவதார
மிந்துவின்வதனத்தெண்மர்தேவியர்கண்மகிழ்ந்திடக்காட்டுதியென்றான்

மாவினைமொழியமகிழ்ந்ததேவகிதன்மைந்தன்மாமலருளோன்மறையி
னூலினைப்பறித்தமதுகயிடவர்களைமுடிப்பினுள்வேலையினெய்த
கோலமார்கமலன்குலைந்தமெய்யரக்குறைவிலாவுவரியினிலங்குஞ்
செல்வடிவுறவாம்பெருந்தவர்தம்மை வதைத்ததுஞ்சிறந்திடநடித்தான்.

வாசுகியுடலைப்பிடித்துவாரியில்கல்வரைசுழன்றிடச்சுரரிசிப்பக்
காசினிமூதுகுநெளித்திடக்கமடவுருவமாய்த்தாங்கியுங்கடைந்து
மீசன்வெவ்விடத்தையருந்திடவமிர்தையிமையவர்க்கரிவையாயளித்து
மாசிலாத்துளபந்திருமணியுரத்தினழகுறவணிந்ததுநடித்தான். 19

கொடியவாடகன்றன்பின்னவனகன்றருவ்வினைத்தாவெனவடர்ப்ப
வடவரைநிகரும்வராகமாயெழுந்துமற்றவன்றனைவதைத்ததுவுங்
கடலிடையமிழும்புடவியையெயிற்றாலிடர்த்ததுங்காசினிமானைத்
தொடையிடையிருத்திமறுவறுபுராணமொழிந்ததுஞ்சுந்தரனடித்தான்.

உரனுறுமறைதயோனிரணியநமவென்றோதெனச்சிறுவனுட்குலைந்தே
யரியரியரியென்றறைந்திடுமவன்றானரவினாலெரியினாற்கரியாற்
பரவையான்மடியாதிலங்கிடவுணன்பரணிலையென்றுதூணறைய [ன்
வரையினைப்பொருவுமடங்கலாயவன்றன்னுரத்தினைவகிர்ந்ததுநடித்தா

காசிபன்றனயனாகியொண்குறளாம்வடிவனாய்க்கடிதினினெய்தி
யேசகலவுணன்றன்னைமூவடிமண்ணீகெனவவனளித்ததுவு
மாசிலாப்பதத்தாலவனியோரடியுமண்டமோரடியதாயளப்ப
வாசமார்மலரோன்விளக்கியகானீர்கங்கையாய்வருவதுநடித்தான். 22

ஏருறவயங்குமிரேணுகைமடந்தைகொழுநனையிருஞ்சுடர்வாளாற்
பாரினின்வதைத்தவரசனாயிரங்கைதுணித்துமப்படியினின்மூவேழ்
நேரிலாநிருபர்குலத்தினைவதைத்துநிறைந்திடுங்குருதியின்மூழ்கிச்
சீருறும்பிதாவுக்கெழிலுடனுதகக்கிரியைசெய்திறலனாய்நடித்தான். 23

இரவிதன்குலத்தினிராமனாய்நிருதிதனையனோடிறக்கவீட்டியதும்
பரிவுடன்சனகிதனைமணந்ததுவும்பழுவத்தின்விராதனைச்செற்றக்
கரனுடனனுசருழையெனவருவோன்கவந்தனிந்திரன்சுதன்மாள [ன்.
வரையொடுமரனை யெடுத்தவன்கிளையோ டவனையும்வதைத்ததுநடித்தா

தேவகியுதரக்கருப்பமாயெழுதிங்கடானமர்ந்துமாயையினாற்
பாவமின்மடந்தையுரோகணிவயிற்றிற்பாய்ந்தவள்பயந்திடுஞ்சுதனாய்ச்
சேவலோனெனவேசினத்தலப்படையாற்றீயவர்திரளினைமடித்து
நாவலோர்புகழத்திசைதொறுநதிநீராடியவிராமனாய்நடித்தான். 25

மதுரையிற்பிறந்துநந்தன்மாமனையின் வளர்ந்துபேய்த்தாயினைவதைத்து
கதமுறுசகடன்காலியன்கன்றன்பகன்றன்னுயிர்களைந்ததுவுந் [க்
ததியிழுதுடனெய்களவினிலருந்தித்தாயுரலிற்றளைப்பிணிப்ப
விதமுறவிரண்டாமருதிறத்தவழ்ந்தவித்தகச்செயலையுநடித்தான். 26

விரைவினிலயன்வந்தொளித்திடுஞ்சிறுவர்விதமுறுபலவிளங்கன்றுந்
தரையினுளவாய்நிறைத்ததுமழையாற்றளர்ந்திடுமாயர்தந்திரளை
வரையினைக்கரத்தாலெடுத்தவர்மடியாவகையுறக்காத்ததுமடுவி
னரவினற்சிரமேற்சிலம்புகள்சிலம்பவழகுறநடித்ததுநடித்தான். 27

கருந்தடவிழியார்துகிலெலாம்விரைவிற்கரத்தினால்வாரியேபாறிக்
குருந்தின்மேல்வயங்கிநகைத்திமெழுகுக்குழலினையூதியேமடவார்

வருந்திடக்காந்தந்தோன்றியும்வசந்தமாடியுங்குரவைகைகோர்த்தும்
பொருந்திடப்படியினிலங்கியிருந்தப்பொற்புமந்தெழிலுறநடித்தான்.

மதுரையினடைந்துவரிசிலைமுறித்துமதமுறுகரிவதைத்ததவு
மதிரதர்மடியமுறிவிலாலடித்தங்கடர்ந்திடுமெல்லரைச்செற்றுக்
கதமுறவுயர்ந்தவஞ்சகக்கஞ்சன்மடிந்திடக்கருமுகில்போலப்
பதமவனுரத்தினிலங்கிடமிதித்துநின்றதும்பரமன்முன்னடித்தான். 29

செருவினிலரசர்திரளிரிந்தோடச்சிலிமுகமழையினைப்பெய்து
விரைவினிலிரதமிசையுருப்பிணியோடேகியேவிளங்கியதுவரா
புரியிடைமணந்துமீ[illegible]நாற்றடனெழுவர்தோள்புணர்ந்து
நரகனைவதைத்தும்பவுண்டரன்சிரத்தையறுத்ததுநலனுறநடித்தான்.30

அரனருள்வரத்தாலுயர்ந்திடுவாணனுபிரங்கைதுணித்ததுவும்
வரையெனவயங்குஞ்சேதிபமறவோன்சாலுவன்றந்தவக்கிரமன்
செருவினிலுருளச்சிரந்துணித்ததுவுஞ்சீரிலாச்சுயோதனன்றன்பாற்
றருமனேவியதூதாகியேயைந்தூரிரந்திடுஞ்சதுரையுநடித்தான். 31

அரவுயர்துவசனுடனெழிற்றருமனமர்பொரவியற்றிவீடுமன்மேற்
காமுறுதிகிரிவயங்கிடவெடுத்தக்கனவளோமுழக்கிநேமியினு
விரவியைமறைத்தேயரவுக்கிடாமலிரதத்தட்டவணியினமுத்தி
யுரகேதனன்றன்மடிந்திடக்காத்தாளுருவினடித்ததுநடித்தான். 32

இந்திரன்சிறுவனுடனமர்பொருதேபெதிரிலாவயன்படைவாங்கி
யந்தணன்சிறுவன்பாண்டவமெனவேவிடுத்திடவபிமன்றன்றேவி
சிந்தையிற்கலங்கவிழுந்திடுகருப்பஞ்சிறந்திடவடிவுடையவனாய்
மைந்தனையெழவக்கழியகழலால்வயங்கிடமிதித்ததுநடித்தான். 33

சிறுவனையிழந்துமறையவனிறங்கிச்சிறந்திடும்யாகசாலையின்வாய்
முறையிடக்கடிதினேகிவானண்டமுடிவினிலிரதமேற்றேவர்க் [தத்
திறைசுதனுடனும்வயங்கும்வைதிகனை யிருத்தியேவெழில்கொள்வைகுந்
துறையுமாதவன்றன்முன்னரிற்றான்வந்துற்றதுமுவப்புறநடித்தான். 34

பின்னரும்பின்னர்வரும்பரியுருவாய்ப்பிறங்கியயாதவனடிப்ப
யின்னெனவயங்குமனைவியருடன்றன்விமலனுண்மிகமகிழ்ந்தருளி
யின்னவின்மறையோன்சுதரிவரென்றங்கீதலுமிறைவனையிறைஞ்சி
யன்னவரோமொலுலிடையிழிந்தேயந்தணன்சிறுவரையளித்தான். 35

காமனைப்பயந்தகருமுகில்வடிவன்கவினுறுமுருப்பிணியுடன்
கோமதிநதியினடைந்தொளிதிகழவவபிரதங்குடைந்தாடி
மாமலரிமையோர்பொழிந்திடவிலங்குமனைவியோடிரதமீவயங்கப்
பூமனன்புராரிபுரந்தரன்போற்றப்பொலிவுறுவனங்களிற்சென்றான்.36

துந்துமிமுரசந்திடிலைசங்கிடக்கைதுயகாகளஞ்சினமுழங்கத்
தந்திதேர்துரகநிறைந்திடவரசர்தானையோடெங்கணுமார்ப்பச்
சுந்தரன்பவளக்கொடியுடன்றலங்குந்துயநீலக்கிரிபோல
விந்திரையுடனேரிரதமேல்வயங்கியெழிலுறுங்கோயிலிற்சேர்ந்தான். 37

தந்தைதாய்முன்னோனவர்தம்மடியிற்றாழ்ந்தெழுஞ்சக்கரத்திருமா
லிந்திரையுடனே வயங்குமீரெண்ணாயிரத்துநூற்றெண்மராவிலங்கும்
கந்தமாரளகத்தியர்தொழுதேத்தவரிவையர்கானங்கள்பாட
நந்தொளிர்கரத்தார்பணவதானங்கண்முழங்கிடநடிக்கவேமகிழ்ந்தான். 38

அருந்தவர்துதிப்பமறையவராசியறைந்திடவரசர்கள்போற்றக்
கருந்தடவிழியார்சோபனமுரைப்பக்கவரிகளசைத்திடநீலப்
பெருந்தடவரையிற்றிகழ்கதிரொளிபோற்பிறங்கியமுடியொளிவயங்க
வரந்தருமுதல்வன்மலர்மகளுடனும்வானவர்வாழ்த்தவீற்றிருந்தான். 39

வைதிகப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - 3708.

---

124 - வது, உபதேசப் படலம்.

அணுவெனச்சிறுத்துமேருவாயுயர்ந்துமாணொடுபெண்ணலியலனாய்ப்
பிணியுறவடர்ந்துமருந்ததாய்த்தவிர்த்தும்பிஞ்ஞகனயனுந்தானாயு
மணிபலவருணமிலங்கிடக்கோர்த்துச்சிதறுமாறெனவயங்கண்டந் [ம்.
தணியவேபடைத்துந்துடைத்துமாமாய மிழைத்தமாலடியர்தாள்பணிவா

மருளில்வைதிகன்மைந்தரானவரைவைகுந்தத்தெய்தியேகொணர்ந்து
மருமறைநெறியான்மகத்தினைமுடித்துமவவிரதங்குடைந்தாடித்
தெரிவையர்பதினாறாயிரத்தொருநூற்றெண்மருஞ்சிறந்தருகிருப்பப்
பரவைசூழ்துவரைப்பதியினின்விமலன்பவமறவீற்றிருந்தனனால். 2

அவனிமின்பாரமகன்றிடவரசரசுரராக்கதர்களைவதைத்துந்
தவமுறுந்தருமனநுசரானிருபர்குலமறச்சாரதியாகி
யிவுளிபூணிரதம்விசயனுக்கூர்ந்தவியாதவனெதுகுலத்துதித்தோர்
துவரையினிறையவிவர்களைவதைக்குஞ்சூழ்ச்சியையுன்னினன்மாதோ.

எதுகுலத்துதித்தோரனைவருமிமையோராகியசெயலினால்யானே
கதுமெனவதைத்தேனெனிலிவராழியாக்கதியினையடைந்துயர்காமன் [ல்
பதியெலாம்வெளியாமிவர்களைத்தெறுக்கும்பகைஏரும்படிமிசையிலையா
விதரிகர்முனிவர்விளம்புசாபத்தால்வீட்டுவெனனினைத்தனனால். 4

எதுகுலத்தரசர்குலமடிந்திடமாவியற்றவொண்டவர்களைநினைப்ப
விதிசிகர்வசிட்டன்கவுசிகன்பிருகுவிழுமியகாசிபனிணையில்
சதுமறையுணருங்கண்ணுவன்வாமதேவனத்திரிதுருவாச [லை.
னெதிரிலங்கிராவொடொளிர்கொள் புண்டரிகவாச்சிராமத்தெய்தும்வே

அரிதிருக்குமரரெழில்கொள்சாம்பனையோர் கருப்பமாரரிவையாய்
வகுத்து, விரைவினினவணினடைந்துமாதவர்முன் விளம்புவாரிந்தமெல்

வியரூன், றனையினிற்பெறுவதிலங்கியவாறோ தையலோசாற்றுமென்
றுரைப்ப, விருடிகண்முனிந்தங்குலத்தினையறக்கு மயத்தடியாமென
விசைத்தார். 6

மாதவர்முனிந்திரரைத்திடச்சாம்பன்வயிற்றினோரயத்தடியெழவும்
பீதியுற்றவர்கவெரையினடைந்துபிறங்கியவுக்கிரசேனற்
கோதிடவவனவ்விருப்புலக்கையினையராவியப்பொடியொடுநதியைச்
செதான்றனக்குநிகழ்த்திடவிலகொன்சிந்துவினழுவத்துள்விடுத்தான். 7

உததியின்விடுத்தவயப்பொடியெவையுமுயர்ந்தவாட்கோரையேயாகி
விதமுறக்கரையினிலங்கிடவராவிமிருநறிதனைவிழுங்கியமீன்
சதுமுகனிழைத்தசெரபினேர்செரதன்றடக்கையினகப்படவவனுங்
கருமெனவவற்றின்வயிற்றினைப்பிளந்துகண்டனன்சிற்றிரும்பதனை. 8

கண்டிடுஞ்சிறியவயத்தினைக்கிராதன்கணைநுதிக்குப்பியாயமைத்து
மண்டனில்வனத்திற்றிரிந்தனனிப்பான்மறுவிலாவுயர்வசுதேவ
னெண்டவர்பணியுமியாழ்முனிநுவரைச்செய்தியாண்டுமனகநாளிருப்ப
முண்டகத்தயனோசிர்தவத்தவனையிறைஞ்சியேமொழியலுற்றனனால். 9

முன்னமோர்சாபவினையினலினையின்முனிவந்தியொருநகர்தன்னின் [னி
மன்னியேபினரோர்தினமவனிராமல்வழிக்கொள்வாயெனச்சொல்வரிவ
னின்னவிவ்யாழ்னையிலகுருவாயடைந்துமனேகநாளிருந்தனையானீ
துன்னவுந்தெரியவரியதாலிதனையோதெனமாதவனுரைப்பான். 10

உத்தமகுணத்தாலுயர்ந்தவுத்தானபாதன்மாமரபிடையுதித்தோன்
வித்தகமலிதக்ககன்சிருட்டியினைவிரும்பித்தான்மகிழ்வொடும்பயந்த
புதிரர்தமையானவனியிற்றணியாவவாவினைப்பொருந்திடாவண்ணந்
தத்துவமறிவித்திடவவருணர்ந்துசாந்தராய்க்கதியினையடைந்தார். 11

அவனியின்சிருட்டியிழைத்திடப்பயந்ததனயர்போய்ப்பரகதியடைய
வுவமையிலரசநுளைந்துபின்னருந்தானுதவியசிறுவர்கடமையும்
பவமறவுயரும்பதத்தினினடையப்பழுதிலாஞானத்தையருளித்
தவர்மகிழ்ந்திடநான்றக்கமனற்குத்தத்துவமுணர்த்திடச்சென்றேன்.

வினையறவுயரும்பதத்தினின்மேவவிளங்கியதத்துவங்கேளென்
றினியவாசகம்யானியம்பிடமுனிந்துதக்ககனிவ்வுலகத்தின்
மனிதர்களுளராஞ்சிருட்டியையவிரும்பிமகிழ்வொடுந்தவத்தினுற்பயந்த
தனயர்களரசாணலனைநீதவிர்த்தாயென்றுபின்சாற்றலுற்றனனால். 13

கிருபையாயுலகாண்டலெப்பிலாச்சிறுவர்சிறைத்திடப்பயந்துவாழ்பவரைத்
தரையிடையுருமற்கதிக்குறவிடுத்தாயாதலிற்சார்ந்திடுநகரி
னொருதினமலாதுமறுதினமிருந்தாலுன்வயிறடைகுதியென்றவ்
வரசர்கோன்முனிவாலறைந்தசாபத்தாலவனிவாலனெங்கணுந்திரிவேன்.

சரியிலாதிருபனறைந்தசாபத்தாற்றளர்ந்துயான்சார்ந்திடுநகரி
னொருதினமிருந்துமறுதினமிராமலுழலுவேனுலகெலாமளந்த

வரிருப்பதியினடைகுவோர்தமைவெஞ்சாபமோடருவினையெவையு
மிரவிகாணிமம்போலொருவிடுமதனாலிவணிருந்தனனெனவறைந்தான்.

சுத்தவிவ்வவனிச்சுமடெலாமகலச்சூரசேனனாண்மனவுன்
புத்திரனாகியவதரித்தருள்வோன்புவனமோடயன்றனைப்படைத்த
வத்தன்வாழ்பதியீதாதலின்வினையாஞ்சாபமோவிடவிவணமர்ந்தேன்
வித்தகவெனமாதவன்விளம்பிடலும்விழுமியவாசலிதறைவான். 16

உத்தமமிகுதேவகியெனுமின்னாளுதவியவிவன்றனையயன்ற
னத்தனென்றுணராவறிவிலேனவன்றானமர்ந்திடும்பதியினினடையத்
தத்துவப்பொருளையுரையெனமுனிவன்சரியிலாமிதிலையினிமிக்கும்
வித்தகவிடபன்மதலையாமொழிந்தவேதநூல்கேளெனப்பகர்வான். 17

மிதிலையினிமியாமரசனோர்மகத்தைவிளைத்திடுமிடந்தனிவிடபன்
சுதர்கவியரியந்திரிக்கனொண்ணசமன்றாயனும்பிப்பலாயனன்வெங்
கதமகல்கறைபாசனனவிர்புத்தன்கவினுறுதிரமிளன்றாய
மதியுறுசிவகோத்திரனிவர்நவப்பேர்திசம்பராராகிவந்தனரால். 18

இடபனற்சிறுவர்யோகிகளாகியிலங்கியவள்ளியர்நவப்பே [வான்
ரடைதலுநிமிமன்னிறைஞ்சியாதனமிட் டருச்சியங்கொடுத்தபின்னறை
படியினிற்பிறவாதுயர்கதியடையப்பரமமெய்ஞ்ஞானத்தையெனக்கு
விடையவனெனவேவிளக்கியதவத்தீர்விளம்புவீரெனவவரறைவார். 19

வேதசாத்திரத்தால்விளங்கியமகத்தைவிளைத்திடின்மந்திரவுலோப
நீதியாங்கிரியாலோபமாதானவுலோபமீதுறிற்கெடும்சிறையப்
பூதலமிசையினியற்றுவாருளரேனிலையிலாச்சுவர்க்கத்திற்புகுவ
ராதலாலழியாப்பதம்பெறமுயல்வாரரிசரணடைவரென்றறைவார். 20

மனதுடன்வாக்குச்சரீரமிந்திரியமறுவிலாப்புத்தியாங்காரந்
தனைநிகரிலாதவரியிடத்திவைகள்சம்மதமாகிடப்பற்றித்
தினமுமொப்பிலாதவவன்றனைத்திருவாராதனஞ்செய்தவனியற்றும்
புனிதமாகதைகேட்டெருவோரவன்றன் பதத்தினிற்பொருந்துவரன்றே

இதரதேவதைமேன்மனத்தினையுறுத்தாதெழிலுறுமச்சுதனியற்றுங்
கதையினைக்கேட்டுநகையுறவழுதுகளிப்புடனடித்துலகெங்கு
முததியைக்கடைந்தோனுளனெனத்துதிக்கும்பரமபாகவதர்களுறுமப்
பதிபவுத்திரமாமவர்களைப்பணிவார்பரகதியடைவரென்றறைவார். 22

உலகினையெல்லாம்படைத்தளித்ததற்பினொடுக்குவதும்மவன்மாய்கை
சலவிபியெனவங்கழிந்திடும்பிறப்பைத்தரித்தவிந்திரியங்களெல்லா
நிலம்விசும்பதனினிலையில்காமத்தைநினைத்துழல்வதுமவன்மாயை
நலனுறுமவரிம்மாயையையொருவநற்குருதனையடைந்துயர்வார். 23

வேதபாரகனாய்ப்பொறையுடையவனாய்விழுமியமறைகள்சாத்திரங்க
ளோதிநற்பரனையறிபவனாகியுண்மையையுணர்த்துமாசான்றன்
பாதமேற்பணிந்தங்கவன்மகிழ்ந்திடத்தான்பணியினைச்செய்பவன்றானே
நீதறவுபதேசஞ்செயும்பொருளைத்திடமதாய்மனத்துறப்பற்றி. 24

அரியடியவரிற்பெரியவர்தமைச்சென் றிறைஞ்சிடவறனுறச்சமனாய்த்
தரையினில்வயங்குமவர்சசாவாகத்தாழ்ந்தபேர்தமக்கருள்புரிந்தாண்
டறைசெயும்வருணத்தருமத்தைநடத்தியொளியுறவிந்தைபண்ணுமற் [வார்
சுரருறைந்திடுஞ்சொர்க்கத்தினைவிரும்பா திலங்குவார்சோதியையடை

திருமதிரேதாயுகந்தனிணுவருணமுமிலைச்செயுமகமும்
பாரினிலிலையவ்வுகந்தனின்வயங்கும்பரன்சுவேதத்தருவாகி
யேருறங்காணலிலங்கிடமுந்நூறிகழநற்றுளவிணாலிழைத்த
தார்வயங்கிடவேமரவுரியுடுத்துச்சடைசிரமுறத்திகழ்குவனால். 26
மாதவர்நிறைந்துவயங்கியதிரேதாயுகந்தனின்வருணநான்குளதாய்
வேதநூனெறியின்யாகமுமலியுமவ்வுகந்தனிலுறும்விமலச்
சோதிசிந்தூரத்திருருவமாயமர்வன் றுவாபரவுகந்தனினிலங்கு
மாதிசாமனாய்வயங்குவனொருங்குமரிச்சனைமலிந்திடுமென்றே. 27
கலியுகமதனிற்கிட்டிணனாகிக்கவினுறுசோதிசங்கீத
நலனினாற்பிரீதியாயமர்ந்திடுவனுலகெலாந்தனிவறநண்ணப்
பொலனுறப்பெருகுந்தண்பொருந்தங்காவிரிநற்பயசுழிபொருந்துந்
தலமிசைச்சனிப்பார்பரமபாகவதரென் றுபின்சாற்றலுற்றனனால். 28
சரியிலாதிலங்கும்பரமபாகவதர்சனித்திடுங்கலியுகந்தன்னைச்
சுரரொடுமுனிவர்விரும்புவரெனுஞ்சொற்றூயயோகியாகியிமனுக்
குரைசெய்தங்கவன்றானிறைஞ்சிடவகன்றானதனாலுத்தமவரசா
திருமகள்கணவனடியினைத்துதித்துச்சேருதிகதியெனப்பகர்ந்தான். 29
சுரர்முனியிவைகளுரைத்தகன்றிடலுஞ்சூரசேனன்சுதனான
திருபனும்பரனைத்துதித்தமர்நாளினிகரிலாத்துவரைமாநகரி
னரயன்முனிவரமரர்கள்வலாரியடைந்தரியடியினின்வணங்கிப்
பரமநீபூமிப்பாரமோவிடவந்தனையெனப்பங்கயன்பகர்வான். 30
விரசைமாநதியையிகழ்ந்தபேரொளியாம்விழுமியவைகுந்தத்துறைவாய்
பரவைநுண்மணலினதிகமாய்ப்பல்கிப்பரந்திடுமெண்டமூன்றுரோம
நிரைதொறுமமரத்திகழுவாயவனிச்சுமட்டினைநீக்கினையிவணின்
வருடநூற்றிருபத்தஞ்சுறவளர்ந்துவயங்கினையென்றுபின்னறைவான்.
உததிருழவனிச்சுமையினையெல்லாமொழித்தனைமுனிவர்சாபத்தா
லெதுகுலமுடியுமிறைவவைகுந்தத்தெய்துவாயென்றயனியம்பத்
ததியளிந்திடுவோன்றமனியப்பொருப்பார் தரையினிற்பாரசேடத்தைக்
கதுமெனவகற்றிவருவனென்றவற்குவிடைகொடுத்தமர்ந்திடுங்காலை. 32
துவரையம்பதியிற்குறைக்கொளியிரத்தவருடம்வெள் ளிடியெலாந்துவத்
திவமதிலுடுக்கள்விழுந்திடத்தூளியெழுந்திடச்செகமெலாநடுங்க
நவையுறவிகலன்முறையிடத்தமகேதுவானண்ணிடக்கூகை
கவலையுற்றிடக்கூவெனப்பரிவேடங்கதிரவன்றனைவளைத்தனவால். 33
புருடர்கட்கிடக்கண் டுடித்திடவலக்கண் பொலன்கொண்மங்கையர்க்கவ
விருடாவுறுமித்துன்னிமித்தங்களெய்தலுமுத்தவனிகரில் [ண்டுடிப்ப

கருடவாகனனையிறைஞ்சியிந்நகரிற்கயினுறுமரசர்கண்மடியு
மருடனைக்கொடுத்துப்பரமநீயுயரும்வைகுந்தத் தடைதிகொலென்றான்.
உத்தவனிவைகள்மொழிந்திடநகைத்தேயுலோகநாயகனிவையுரைப்பா
னத்தியிற்றுவரைப்பதியெழுநாளினமிழ்ந்திடநிறைந்திடுமரசர்
வித்தகத்தவர்களறைந்தசாபத்தால்வீடுவர்நீயிவணிராமற்
சுத்தமாதவர்வாழ்வதரிகாச்சிரமத்தடைகுதிபோவெனச்சொன்னான்.
பின்னைதன்மகுணனாகியேவயங்கும்பிரானிவைகூறவுத்தவன்றா [வா
னுன்னைவிட்டடியேனொருவிலனெனவாண் டுலகிடந்துண்டவன்மொழி
னென்னைநீயுலகமெங்கணுமுளனென்றேத்திநீள்வதரிகாச்சிரம
மன்னியவிடத்தினமர்ந்துபின்கதியின்வருகுதியெனவவனறைவான். 36

ஏதமிலியமமெத்தனைநியமமெத்தனைசற்குணமேது
நீதியாய்வயங்குந்தவமெதுசவுசமெதுநிகரில்பொறையேது
பாதகமகற்றுந்தவமெதுதியாகமெதுதனமெதுபலமேது
வேதமார்வேள்வியெதுமறைநெறியார்விழுமியதக்கணையேது. 37

தயிரியமெதுநற்சவுரியமேதுசத்தியமேதுண்மையேதா
மியல்புறுமிலாபம்மெதுவித்தையேதுநலனுறுவிபவங்களேது
மயர்வறவயங்குந்திருவெதுவண்மைவளர்விதானங்களேது
துயருறுமிலச்சையெதுசுகமேதுதுரிதமாய்வருதுக்கமேது. 38

உறவெதுசுவர்க்கமெரிநரகெய்தாதுயர்ந்திடுமனையெதுநெறிசே
ரறிவெதுவழிவில்லாதனவேதுநல்லறிவிலானெவனெவன்மூர்க்கன்
வறியவனெவன்சம்பன்னனார்வயங்கும்பண்டிதனெவன்மருளகற்றி
யறிவுறுமீசனெவனெவனீசனியம்பெனவரியருள்செய்வான். 39

சத்தியம்பரர்சொத்துறத்தலின்னாவைத்தவிருதல்பிறர்மனையடையாச்
சுத்தமெய்மறையையறிகுதனிலமைதுலங்கிடும்பொறுமைதன்பங்க
ளெத்தனைவரினும்வெருவுதலொழிதல்சஞ்சலம்விடையமற்றிருத்தல்
குத்திரவிடமம்விலக்குதலவச்சொல்குறைப்பதீதியமம்பன்னிரண்டே.

தவஞ்செவமோமஞ்சவுசநற்சிரத்தைதானமாசாரியசேவை
பவந்தனையொருவுந்தீர்த்தயாத்திரையொண்பரமனாமுராரிதன்பத்தி
யவந்தனையகற்றும்பரவுபகாரமறிஞனாயுளமகிழ்ந்திருத்தல்
கவந்தனைக்களைந்தோனருச்சனையிவைதான்றுவாதசங்கலக்கமினியமம்.

பரமனாமெனதுபதத்தினிற்கருத்தைப்பற்றுவித்தமர்தல்சற்குணமாஞ்
சரீரவிந்திரியமொடுக்குதறவமாஞ்சவுசமேகருமத்தையொழித
திருநிலத்திடுக்கண்கமிப்பதுபொறையாமிருடருகாமத்தையொழித்த
லரியமாதவமாந்தியாகமில்வாழ்க்கையகற்றுசந்நியாசமேயாகும். 42

தருமமேதனமாந்தயங்கியபிராணாயாமமேசரியிலாப்பரமாம்
விரிவுறுமவிதோய்வேள்வியேயானாகியவரிவிளம்புதக்கணைதான்
மருளகல்குருவாய்மலருஞானோபதேசமாம்வருதயிரியமாம்
விரகமோடிரதமொருவுதல்கலரைவெறுத்தலேசவுரியமாகும். 43

ஆற்றுஞ்சமமேயவமில்சத்தியமாமறையுநல்வசனமேயுண்மை
தோற்றமாமிலாமுராரியாமெனையேதுதித்திடும்பத்தியாம்வித்தை
சாற்றிடிற்பரமாத்துமாவினையறிதல்சரியிலாவிபவமாவனதா
னேற்றமாயவைகுந்தத்தினிலெங்குமீசுரனிணையடிசேர்தல். 44
ஆசையிற்றிடுதிருவெனலாகுமளித்திடுதானமேதென்னிற்
றேசுறநிலத்திற்பலபிராணியையுந்தண்டியாதொழிதலாமிலச்சை
மாசுறுகருமந்தனின்மனமொழிதன்மறுவிலாச்சுகமின்பதுன்பம்
பாசமற்றிடவேகடக்குகைதுக்கம்பலமுறுகாமநத்திடுதல். 45
உறவுசற்குருவாஞ்சுவர்க்கமாவனதானுயர்ந்தசாத்திகுணமலிதன்
மறலிதன்னுலகினிரையமாவதுதாமதகுணம்வளர்தலொண்மனையே
யறிவுறுகருத்தார்சரீரநல்லளியாவச்சுதனுமெனையடைதல்
வெறியுறுநெறியாவதுமனமெங்கும்விரிந்துருத்திரதெய்வத்தமர்தல். 46
அருளிலாதவனிந்திரியநிக்கிரகஞ்செயுநலனறிவிலாதவனு
மருடருமதிகமூர்க்கனுங்காரம்வளரநான்சமர்த்தனென்றமர்வோன்
றிருவரும்வழியன்சேர்ந்திடும்பொருளிற்சிந்தையிற்பிரிதியில்லவனே
யிருநிதியுறுசம்பன்னனுமவனேயியல்புறுசற்குணமுடையோன். 47
சரியில்பண்டிதனில்வாழ்க்கையிற்பாசந்தவிர்ந்துநற்கதியினையறிவோ
னிருநிலமதனினீசனுமவனேவிடையறப்பற்றுதறவிர்ந்தோன்
மருடருநீசன்சகலபாவத்தின்மருவுவோனிவையெலாஞான
வுருவமாயமருத்தவவுணர்கெனவேயுலகளந்தவன்பினரறைவான். 48
இருநிலமதனிலியற்றுமில்வாழ்க்கையுததியைக்கடந்திடவிலங்கி
வருதருநாவாயாமனிதர்தஞ்சனனமன்னியவ்வோடத்தைவிடுப்பான்
சரியில்சற்குருவாஞ்சார்ந்திடாநெறியைத்தருமனுகூலமாம்பவனன்
ப்ரமனுமியயானிவையறிந்துய்யாப்பாவியர்தம்மைத்தாங்கெடுப்பார். 49

நட்டமாவினின்வாய்நலங்கயமுறவேபிணித்திடுஞ்சுத்திரக்கயிறு, மட்டினையறியாததிகமாய்மெட்டினவமெனமனத்திடையுணர்ந்தே, விட்டுமெட்டிநெல் விரகினைச்சிவன் விடையத்தின் கருத்தினைவிட்டே, யட்டைபோலவைபற்றுவமுனர்திருப்பியென்னிடத்தமைப்பதேயறிவாம்.

அரியிவையெலவுமறைந்திடக்கேட்டவறிஞனுமுத்தவன்பகர்வா
னிருநிலமிசையிற்கருமகாண்டத்தையீரிருமறைகளுமொழிய
நாரதாலவனென்றதினுரைப்படியேயியற்றுவதெவையெனவிலத்
திருமகன்கொழுநனரும்பியமுறுவறெறியவேசெப்பலுற்றனனால். 51
வருபிணியகலுமவுடதநறவாதமுமிளமதலைதன்வாயி
னிரதமுற்றிடநற்குளமிவெதுபோலீரிருமறைகளுமியம்புங்
கருமகாண்டத்திற்சுவர்க்கமெய்திடவுங்காதலர்தமைப்பயந்திடவு
மிருந்திவைவுமிவையினையியற்றியிதரதேவதைகளையடைவார். 52
அருமறையெலவுங்கருமகாண்டத்தையறைந்தபிராணந்தத்தின்
பரமனுகியயானழிந்திடாதுயரும்பதத்திலடையமர்ந்தருளுவது

மிருகிலமிசையினிதரதேவதைகளெண்ணிலரிறப்பதென்பதுவு
மருளகன்றிடவேமொழிகுவமுணராமனிதராசையின்வசமாவார். 53

இலவலர்மலரைக்காத்திடுஞ்சுகம்போற்கருமகாண்டத்தையிச்சித்துப்
பொலனுறுசுவர்க்கத்தரம்பையர்கலிற்போகந்துய்த்திடுகுவமென்று
தலமிசைச்சனித்திலுயர்குலமதனிற்சார்குவமென்றனியாயப்
பலமுறப்பசுவைவதைத்துக்குத்திரதேவதையெனும்படுகுழிப்படுவார்.

ஆதியோனிலைவையறையரின்கதியையடைகுவதெங்ஙனமருளென்
றோதுமுத்தவனுக்கிணையின்மாதவன்றானருளுவானுலகினிலுயர்ந்த
வேதநூற்கருமம்விடிற்பவமுறுமென்பத்தியுற்றிடவவைவிட்டா
லேதம்வந்தடையாக்கதியினையடைவதல்லதுபிறப்பிறப்பிலையால். 55

எரியினைவிரும்பிவிழுந்தவிட்டிலுமிலங்கியபிடியினைநத்தித்
தரையினாழ்ந்துழியிற்படியும்வெஞ்சயமுந்தாமரைமலர்மதுநுகர
விரைவினின்விரசியிரவுறவவைதான்மூகிழ்த்திடவிலங்கொளுவரியும்
பருவரலுறுமப்பவத்தினையுறுமற்பாவையர்கலவியைவிடுதி. 56

வலையினிற்பிணிப்புண்பேட்டுடன்பார்ப்புமடியுமென்றவனுறத்திரிந்து
கொலைஞன்வெஞ்சரத்திலகப்படுபுறவுங்கொடுமையார்தூண்டிலினிரை [யை
நலனெனவிழுங்குஞ்சலசரந்தானுமழிவபோனாரியர்கலவி
நலமிசைவிரும்பியுழன்றிடாதுயருங்கதியினைச்சார்ந்திடவியற்றும். 57

பாடலைவிரும்பிக்கொலைஞர்கள்காத்திற்பழுவத்தினகப்படுமுழைபோற்
கேடுறுவகையினிதரதேவதைநூல்வழிப்படக்கேட்டிடாதொளிகொள்
பீடுடைப்பரத்தையடைந்திடும்படிநீபிழையில்சாத்திகபுராணத்தி
னீடியபொருளைவிருப்பமாய்க்கேட்டுநெறியுறுமவருடனமர்தி. 58

பிரசமிகுத்தங்கிழந்திடுமெதிபோற்பிழையுறுதேயுறுந்தனத்தை
யருமறையவர்கைக்கொடுத்திடுகிருமிதனைக்கரத்தமைத்திருங்குளவி [ப்
யுருவினைப்பார்த்தவ்வடிவுறுஞ்செயல்போலுலப்பிலாவரிபெறுமென்னை
பரிவினுன்மனத்தினிடையெழுந்திடநீபற்றியென்வடிவினையடைதி. 59

வரைமரமெனவும்பரவுபகாரமியற்றுதிவயங்கியதரைபோற்
றருமமெய்யுறநற்கமையுறுபுவனமெங்கணுஞ்சார்ந்தநின்குணத்தை
மருவியுமொருவும்வாதமாமெனச்சேர்மருளுறுவோர்தமையொழித்து
நுரையகல்சலம்போற்றெளிந்தரியாமென்கதையினைநுவன்றுசேட்டித்தி

யாவர்கடமக்குமகப்படாக்ககனமெனப்பவத்தடைகிலாதமர்தி
யாவலினுலகத்தனைத்தையுநுகர்ந்தகொலைதனக்ககப்படாதுயரும்
பாவகனெனவில்வாழ்க்கையின்விழுந்தும்பவித்திரனாகவென்னாம
நாவினின்மறவாதறைகுதிமலைப்பாம்பெனநறும்போசனநுகர்தி. 61

தரையினிற்சலத்தைச்சகசிரகிரணந்தன்னினால்வாங்கியேமீள
வருடகாலத்திற்கனந்தனிற்கருப்பம்வளர்ந்திடப்பெய்திடுவிக்கு
மிரவிபோற்றனத்தைநலனுறத்தேடியிலங்கியமறையவர்தமக்கு
விரைவினிலளியோடருளுதிபனிபோல்வெளிசெயாதேவனத்துறுதி. 62

நதியம்வரவேபெருத்திடாததுதானன்ணிடாமற்சிறுத்திடாத
வுததிபோற்சுகதுக்கங்களையொழிதியுறாகமார்தஸ்லெந்தன்னைக்
கருமெனக்காத்தின்வளைபுடைத்ததனிற்குத்திடுங்கன்னியைப்போல
மதியிலாதவர்தன்றொடர்ச்சியைவிடுத்துமாயனுமெனைநினைந்துய்தி. 63

மழலையோவிலாதமதலையர்தமைத்தாய்வைதிடினுமிகழ்ந்திடாத
வெழிலெனநிலத்தினளப்பிலாவிடர்வஞ்செய்தினுமிறைவனுமென்னை
விழைவுறத்தொழுதவிரும்புதியிலக்கின்விசிகத்தைவிடுவதுபோல
வழகுறுமெனதுதிருவடிமிசையினமுழ்ந்துறமனத்தினையிடுதி.ப 64

கலைவளர்ந்தழியத்தான்குறைவிலாதசவினுறுசோமனைப்போல
நிலையிலாவாக்கையழிந்திடுஞ்சீவனித்தியமெனவறிந்திடுதி
யிலகியவுனாதைவாயினாலதனால்வரைந்துபின்விழுங்கிடுமெழில்போ[தி.
னுலகெலாம்படைத்தங்களியுடனளித்தேயொழிப்பவன்யானெனவுணர்

ஆயிரம்வராகன்றினந்தொறுமுதவுமழகியவிடனடைந்திடாம
னேயுறவிரவிற்றுயிலினைத்துறந்தங்கவன்வருநெறியினைநோக்கித்
தீயவையிவையென்றிகழ்ந்துதன்கருத்துச்சேதனாயவென்கழன்மேற்
பாயவென்பதத்தினமர்ந்தபிங்கலையாங்கணிகைபோற்பற்றெலாம்விடுதி.

ஏதமற்றிடவிங்குனக்கியான்பகர்ந்தவிருபத்தோடஞ்செனுமிவையைப்
போதகமருளுங்குருவெனவேதன்புத்தியாலோர்வதுதாய்தா
மாதியாமெனைத்தானவைகளுக்குறுமக்கருமத்தாலறிந்துயர்பதத்தின்
மீதுபோயினராலஃதுணர்ந்தறிவாம்விளக்கினினுய்தியென்றறைவான்.

அரியெனுமெனைத்தானறிந்திடாதவத்தாலழிவிலாக்கதிதமக்குறுமென்
றிருளுறுமனத்தால்வேதசாத்திரங்களியற்றுவராமையாவினுக்குத்
தரையினிற்பசும்புல்லளிப்பதுஞ்சர்பாத்திரமலார்க்கீந்ததானமுந்தீ
யுரையிடுவிபசாரிக்கிடுமனமுமழிவபோவிடரினினுளைப்பார். 68

ஆதலிற்காமமனைத்தையும்விடுத்தென்னடியினையடைகுதியெனமா
லோதவுத்தவன்றனிறைஞ்சியெக்குணங்களுறுவருன்பத்தர்களதனை
யாதிநீபகர்தியெனமொழிந்திடலுமகிலலோகங்களும்படைத்த [பான்.
நாதனென்னடியாரடைந்திடுநலத்தைநவின்றிடக்கேட்டியென்றனைப்

பொறையுறப்பாரினுவிலாதமர்தல்பொறியினேடிந்திரியங்க
ணெறியுறவடர்த்தல்லுதையற்றிருத்தனிசத்தினைமொழிகுதல்சுத்த
முறுதலாம்புத்தியடைதல்சாத்திகமாயுரைத்தல்காமத்தினையொழித்த
லறனுறத்தயையோடிலங்கல்பொய்ச்சான்றுதலிருதல்பசியினையகற்றல்.

சுகமொடுதுக்கஞ்சமனெனவமர்தல்சோம்பறவிருக்குதல்கருவ
மகலவங்கடர்த்தலதிகசற்காரமியற்றுதலற்பவாகாரம்
புகவிழுங்கிடுதன்ஞானமெய்பொருந்தல்புகழுறுத்திடவிரதங்கண்
மிகவுமேமுனைதல்பரவுபகாரம்விளங்கிடத்தினந்தொறுநடத்தல். 71

நேயம்விஞ்சிடுதலரிகதைகேட்டனிகரில்சாத்திகக்கல்விநிறைத்த
னாயதற்றிடவேதிரவியத்தாசைதுரத்துதலெங்கணுமுளனு

மாயனுமெனைத்தானதிருதல்சருவக்கியனெனவயங்குதன்மனத்திற்[தல்
தீமையற்றிடவேயிறைவனுமென்னைத் தியானமெப்பொழுதிலுஞ்செய்

தரையினிதெனவரும் பரிவினாலியற்றுஞ் சகலமாகியகருமத்தின், மருவுதலொழித லிறைவனாகியவென் மலர்ச்சரணரணென வடைத, லுரைசெய்சற்குணங்க ளிவைகண்முப்பதுமென் னடியர்கட்குறுமென வுரைத்துத், திருமகள்கணவ னிகரிலுத்தவற்குப் பின்னருஞ்செப்பலுற்றனனால். 73

பரனெனுமெனைத்தானறிந்திலராகிப்படியின்மேலியற்றிடுமியோகந்
தருமதானங்கண்மகங்கயம்வாவிதடாகநற்கூவலீதெல்லா
மருளறச்செயினுமவைகளென்பதத்தினடைந்திடுநலத்தினைக்கொடாது
சுரருலகியங்குஞ்சுவர்க்கமீதெய்தித்துலங்கியேபின்னருஞ்சனிப்பார்.

தருமமெய்யுறுமென்னடியரானவர்க்குத்தயங்கியசாதிநாலென்னும்
வருணமும்வேண்டாமிழிகுலரெனினுமவர்கள்வானவர்க்குமேலாகிச்
வாமனனுருக்கொடுவயங்கியிடர்தீர்த்தான். 39

அரசிருபத்தினொருகாலறவறைந்து
கரையிலுவரிப்பெருமைபோலவிசைகாட்டுந்
திரைசெய்குருதிப்புனலின்மூழ்கிகர்தேவன்
பரசுபொலிபாணியெனவேபடியின்வந்தான். 40

மன்னனசன்மைந்தன்மகனுகிமலர்மேவு
மின்னினைமணந்தருளிமீளநகர்மேவி
யன்னவளொடுங்கொடியகானகமடைந்தே
வின்னல்செயிராவணனைவீட்டினனிலங்க. 41

வேறு.

துருவனுக்குயர்ந்தபதத்தினைக்கொடுத்துச்சோதிவேனன்புயத்தெழுந்த
பிருதுவாயவனிவிரைதரவியற்றிப்பிறங்கலையொதுக்கியேசமனுய்த்
தரையினைத்திருத்தியிடவனுய்ச்சலித்துச்சதுமறைநெறியநட்டித்தே
வரிதினவிரதமுருக்குமாங்கதற்கும்பரீடனுக்கும்வீடளித்தான். 42

வேறு.

பூவினிலுறைவோன்றந்தைபூமியின்பாரநீக்கத்
தேவகிவயிற்றிற்றோன்றச்சிறந்திடும்வசுதேவன்றான்
பாவியாங்கஞ்சன்முன்னாட்பகரசரீரிசொல்லா
லாவியைச்செகுப்பனென்றுவாயர்கோன்மனையினெய்தி. 43

இந்திரைகொழுநன்றன்னையிருகையானிலத்தின்வைத்து
நந்தொளிர்கரத்தசோதைநல்விருளதனிற்பெற்ற
வந்தரிதன்னைக்கையாலேந்தியேவரசன்மீண்டு
சிந்தையினிடருற்றெய்தித்தேவகிகையினீந்தான். 44

தூயவந்தரியாமங்கையழுதிடத்துலங்குகின்ற
வாயவருங்கைபெற்றாண்மகளெனவுரைத்தலோடுந்
தீயவனணுகிப்பாரினடிக்குமுன்னாத்திற்சீறி
மாயையாமங்கைகாலாலுதைத்துவானேகிச்சொல்வாள். 45

கஞ்சவுன்னுயிரைக்கொல்லக்கடலினிற்றுயிலையோவி
யஞ்சனவண்ணன்மண்ணினவதரித்தனனென்றேவான்
விஞ்சுமம்பிகைதான்கூறிமறைதலும்வெகுண்டுசீறி
வஞ்சகனியற்றுமாயமன்னகேளென்றுசொல்வான். 46

வேறு.

அந்தமிகுநந்தன்விளைவெய்தவருமாயன்
வந்துநனிபாறயிர்நெய்வாரியெனவீசிச்
சிந்தைகளிகூறவெழில்சேரும்வடிவாய
மைந்தனெழில்கண்டுயரசோதைமகிணாளின். 47

ஆயர்பதிமேவியவசோதைமெலிவெய்த
மாயமுயல்கஞ்சன்விடுவெஞ்சனையில்வந்த
பேயின்முலையுண்டுயிர்பிறித்தருள்செய்தானற்
றூய்மையுறுமாதவர்துதிக்கவருசோதி. 48

மகுடமணிமின்னவுயர்கஞ்சன்விடுமாயச்
சகடுருவமானகிருதன்னுடறகர்ந்தே
துகடறவுதைத்துமகிழ்சோதிசெயும்வீரப்
புகடரணிவிஞ்சியசெயல்புகலலாமோ. 49

காலெனவளைந்துககனத்துறவெழுந்தே
யாலமெனவானுயருவானவணரற்றி
நீலவரைபோலுடனிலத்துறவுதைத்தான்
பாலனெனமெய்யொளிகொள்சோதிபரமேட்டி. 50

மிடைந்துமணியாரமவிர்மேனியுறுசாய்கை
படிந்திவர்பளிங்குநிழல்பற்றுவமெனத்தா
னடைந்துகையின்வந்ததிலையென்றுநலசோதை
யுடன்றொடரவிம்மியழுதோடுமிறைமன்னே. 51

குக்குடமெய்யானகொடியோன் குருதிவாயிற்
றக்கவுயிர்தெற்கணுறுகாலனிடையொல்லைப்
புக்கிடவெடுத்தொருகையாற்றலைபுடைத்து
விக்கிரமம்விஞ்சநகைசெய்தனன் விளங்க. 52

சதங்கைமணிநூபுரமிழற்றவருதாள்கள்
விதம்பெறநடித்தருளியன்னையிலெம்வெண்ணெ
யிதம்பெறநுகர்ந்திரதவாயுளெழுநன்னீர்
ததும்பவொளிர்சோதியினர்ச்செய்தறிதியென்றான். 53

கண்ணனெனவேயுரைசெய்தோழர்களிகூற
நண்ணிமனைசோறுமுறிதாவிநலன்மிக்க
மண்ணினுடன்விண்ணினையுமுண்டவயிறார
வெண்ணெயைநுகர்ந்தருளினான்விமலன்மன்னோ. 54

முத்தினவிர்சுட்டிபிறணெற்றியினின்முந்தி
மத்தினணியுந்தயிர்நெய்வாரியெனவோட
வொத்தியுயர்தாழியையுடைத்தனைதன்முன்ன
ரெத்திநகைசெய்தனனிலங்கியுறுமெம்மான். 55

வேறு.

குதிதாண்டியோடிமனைமேவுகொண்டதிருமேனிகண்டுகுளிரத்
ததிபாண்டன்முந்தியெதிரேதகைந்துதருமுத்தியின்றுதருவா
யுதவாதிருக்கிலுனைநானசோதைகரமீதிலுய்ப்பனெனவன்
றிதமோடுதாழியெழுநாலகங்களுயவீடளித்திலகினான். 56

வேறு.

பரிதியொளிபோலுறுசிலம்பினொலிபம்பச்
சுருதிமொழிதேடரியதாளிணைதுலங்க
மருதுகளிரண்டுமிறவேதவழுவண்மை
கருதுமவர்நற்கதிகலந்துறுதவத்தோர். 57

கருமையுறுமேனிதரளத்தினவிர்காட்ட
மருவியுயர்கிண்கிணிமருங்கிடைதயங்க
வுரலுருளவேமுறுவலோடுதவழ்சோதி
யரவணையின்மீதுதுயிலாதியவனையா. 58

பெற்றசிறைவீதியுறுபேதையர்கள்கையின்
பொற்றளிரையொத்தெழில்கொள்பூவளைகள்பார்மே
விற்றுகவுடைத்தவரியற்றுசிறுசோறுஞ்
சிற்றிலுமழித்துநகைசெய்தனனிலங்க. 59

வேறு.

சென்றேவனைத்துவருவாயெனுஞ்சொல்சினமிக்ககஞ்சன்மொழியக்
கன்றுருவெந்துதிரிவான்மடிந்துவிழவேகரத்தினிவறிக்

குன்றுதுயர்ந்தவிளவொடுமெண்ணில்கனிவீழவீசுகுழக
னன்றுனைமூலமெனவந்தவாதியுயராலிலைக்குளமர்வான். 60

கொள்ளாதவஞ்சமவைசெய்தகஞ்சன்விடவங்கடைந்தகொடியோன்
றுள்ளாவிளங்கன்றுடனேதொடர்ந்துவிளையாடுசோதிதனைவா
யுள்ளேவிழுங்கவனலாகமீளவுமிழ்போதின்மாயவுருவாம்
புள்வாய்பிளந்துவதைசெய்தசோதிபுவனங்கொளண்டமமர்வான். 61

பொற்பாயவாவினிரைதன்றமாயர்புதல்வோரனேகர்புகுத
வெற்பானமேனியுயர்வானிறேயவிரிவால்விழுங்கிவருஞ்
சற்பாசுரன்றனுடல்விண்டுபோகவவன்வாய்பிளந்தசதுரன்
கற்பாவையாகியெழவேமிதித்தகடல்வண்ணனானபரமன். 62

யமுனாநதிக்குண்மணலேகுவால்செய்திடமானசோலைதனிலே
தமரானவாயர்தமையோரனேகர்சமையோதனங்கள்கறிகாய்
சமனாகவங்கைதனிலேயமைத்தயிரோடருந்துநனியை
யிமையோர்துதிப்பவவர்வாய்திணித்துவிளையாடினானெம்மிறைவன். 63

இனிதாகிவேலையிடையேதுயின்றவிறைபாரின்ஞானமிலனோ
வெனவேநினைந்தவயனுயர்கன்றினிறையோடுமேகவெழில்சேர்
மனைதோறுமேவிநிறையாவைநத்திவருகன்றுமைந்தர்திரளோ
றனைவோருமாகியொருகாலமாகவமர்வானுமாதிமுதலே. 64

பலவாகியேகவுருவாயெழுந்தவுயிர்தோறுநின்றபரம
னிலையாண்மைகண்டவயனுயர்கன்றினிரையோடிழிந்துநெடியோய்
சிலையாழிதண்டுவெளைவாடயங்குதிருமார்பவென்றுசிறியேன்
றொலையாதிழைத்தபிழைநீபொறுத்தியெனநின்றசோதியவனே. 65

வேறு.

ஈனநண்ணுமிராவணனேவலாற்
கானினண்ணுங்கடியமாரீசனா
மானையன்றுவதைத்திடுவான்பினோன்
றேனுகன்றனைச்செற்றனன்சேர்ந்தரோ. 66

வேறு.

திரைவீசுபாணிநிறையாறுதனுட்டிராளகமாதர்துதிசெய்
துரவோயளித்தியுயிரென்றுகூறவுயர்வானமீதினுறைவோர்
தருவேயலர்ந்தமலர்தூவமாழையுறுதண்டைதாளினொளிர
வரவானகாளிபடமேனடித்தவவனாழிமேவுமிறைவன். 67

அனலாயெழுந்துநலிபோதினாயரவர்மாதர்கண்டுவெருவப்
புனன்மேவுகொண்டலெனுமேனியண்ணல்விழிநீர்புதைக்கவெரிபோ
மெனலோடுமோவிதமொறவோடியிருகண்கண்மூடவெதிரக்
கனலேநுகர்ந்தகரியோனிலங்குகமலாசனப்பெண்மகிணன். 68

வேறு.

பொலன்கழற்றெரித்தேவென்றபொற்புயத்
திலங்குநாஞ்சிலிறையைக்கொண்டேகிய
பெலம்பன்மாண்டிடமோதுவித்தான்பின்னை
கலன்கண்மன்னுங்குயங்கலந்தானரோ. 69

காரமூழ்கியகாரதன்மன்னனுய்ப்
பாரையாண்டுசிறுவருண்டாய்ப்பகை
வீரராவிகல்வென்னிடக்காட்டினா
னுரியன்கழற்பூட்டியனுகுமுன். 70

வேறு.

இரைந்தேகுநாரமெதிரோடிமண்டயமுனாநதிக்குளியல்பாய்க்
கரைந்தேகுதாதிலுடனேடுதுற்றகழுநீர்நிறைந்துகடல்போல்
விரைந்தேயெழுந்தபுனலாடுமாதர்மிகநாணவாடைகொடுநீள்
குருந்தேறிநின்றுநகைசெய்தசோதிமலர்மேவுமங்கைகொழுநன். 71

கலைசேருமாதர்திரணக்கினத்தர்கனகக்கலிங்கமுதவென்
றிமையோர்துதிக்குமிறையோடுகூறவிருகைகொடேதொழுமெனத்
தமர்காணுழிந்துதொழுமாதருக்கன்றணிகூறைதந்தருளினா
னுமைமாதுநாதர்கையினேர்கபாலமொழிவித்தவாதிமுதல்வன். 72

இடைமாதரெந்தமரபேயழித்தவிவனைப்பிணிப்பமெனநீள்
படியார்குருந்தின்மிசையேறிநின்றுபரமன்கைபற்றியிழியுந்
துடிபோன்மருங்குமடமாதரார்கடொழுமெம்மைமாயவெனவே
முடிமாதர்பாதவிணைதோறும்வைத்துநகைசெய்தனன்முடிவிலான். 73

வேறு.

நந்தன்மைந்தனுக்கன்னங்கொண்டேநடந்
தந்தணாளர்கடேவியராங்கெய்த
வந்துகொண்கன்றடுக்கவோர்மாதராள்
சிந்தைமாலடிசேரக்கதிபுக்காள். 74

வேறு.

ஆவுக்கிரங்குமவரியுமன்னமமலனருந்தியுறவெங்
கோவத்தினேனுமேகவான்விடுக்கவருகொண்டன்மொண்டுபொழியக்
கூவிக்குலைந்துதிரளாயர்கன்றினொடுகோவுமுய்யவருளிக் [ன்.
கோவர்த்தனத்தண்வரைகொண்டுமாரி தடைசெய்தனன்கலைகொள்வா

அருணனெழுந்துவருமுன்னர்நந்தன்யமுனைக்குண்மூழ்குமளவின்
முரனூர்ந்துமாழியரசன்முனிந்துதன்மாளிகைக்கண்முடுகக்
கிரணக்கொளாழிவளைகைகொடேநற்கெருடன்றன்மீதினெறிபோய்
வருணன்பணிந்துதருதாதையோடுநகர்வந்தனன்மறுவிலான். 76

ஆயோர்கண்மாதரனைவோருமேகியளவில்லமாலினனைய
வோயாதுபாயுமுனைசித்ரகாயமுரகங்கள்கோவோடுறைநற்

காயா வின்மிக்ககவினேடலர்ந்தகமலங்கொண்மேனிநிகழ
வேயூதினனென்மலர்தாவிவின் னிறுறைறவோர்கண்மேவிமகிழ. 77

வேறு.

நந்தன் மைந்தன் குழலிசைநண்ணவே
முந்தியேசளிமொய்குழன் மாதினே
வந்தங்கன் னைதடுத்திடமாய்ந்துயர்
சிந்தையந்தியளாய்க்கதிசேர்ந்தனள். 78

தூயமாதர் துருவல்புரிந்துற
மாயமாகிமறைந்தெ"ருமாதின்மே
னேயமாகுவபோனெறிவிட்டகன்
ருயரேறபினும்மவர்முன் னின்ருன். 79

கடமடுத்தவெண்கோட்டுக்களிற்றிறை
யுடனெடுத்திமையோர்மலருந்திடக்
குடமெடுத்தாடித்தனன்கோபர்முன்
கடலிடைத்துயில்கொள்ளுங்கரியவன். 80

அரவினன்மணிநீலமோடாரமும்
விரவுநல்லணிமார்பின் விளங்கிட
மருவுமாதர்மகிழ்ந்துகைபற்றநற்
குரவைகோர்த்தனன் கோவிந்தன் ருனரோ. 81

எண்டவத்தினரெங்கணுந்துள்ளவே
யண்டர்மாதர்களானந்தமாயுற
வண்டுதுன்னியமாலையலைந்தெழச்
செண்டுகைக்கொடுதேவனிலங்கினன். 82

ஒசிந்தநுண்ணிடைமேற்கலிங்கம்முற
வசைந்துமென்னடையாயர்தம்மாதரா
ரிசைந்தநற்பனிநீர்கொணர்ந்தேத்தநல்
வசந்தமாடினன்மாதவன் ருனரோ. 83

வேறு.

வனமேவரர்க்குமகிழோதனங்களணியாடைமாலைபலவு
மினமாயெழுந்தபொதுவோர்கள்கூடியிடுவேலைநந்தன் வெருவ
முனிவோடுவாயினிடையேவிழுங்கிமுடுகிக்கனன் றவரவின்
றனியானசாபமவைதீரமெய்யினடிவைத்தனன் றுணையிலான். 84

அப்பிற்பிறங்குமலையென்னமேருவரையென்னவாலவிடமே
யொப்பென்னமுந்துமிடவங்களேழுமடியக்கரத்தினுதறித்
தப்பின்றிமெய்கொடருமங்கணீதியுயர்கும்பகன் றனயளா
ணப்பின்னைதன்னையிமையோர்துதிப்பநலமாய்மணந்தனனரோ. 85

வேறு.

தூவியன்னங்கடென்னியசோலைவா
யாவொடாயரார்க்கையுற்றேயழப்
பாவகாரியக்கஞ்சன்பணித்திடு
மாவின்வாய்பிளந்தானுயர்மாதவன். 86

உக்கிரத்தனுகஞ்சனுரையினா
லக்குரூரமன்னுயர்கடம்பதி
புக்கபோதுபதேசம்புகன்றனன்
சக்கரக்கைத்தயாபரனானமால். 87

மருதுருட்டியதாளினன்மாநதிப்
பொருமுனீரக்குரூரமன்போயதிற்
சிரமயிழ்ந்துறமூழ்கிடத்தேவன்வாழ்
பரமனற்பதங்காட்டினன்பண்புற. 88

சதுரன்றுமறைக்கண்ணினன்சாமள
மெதிரிலாமெய்யனேழுலகாள்பவ
னிருமும்மதவாரணநிரம்பிய
மதுரைமாநகரெய்திவயங்கினான். 89

தூசின்மையகல்விப்பவன்றற்குண
வாசகத்தினின்மற்றவனிற்றிரு
நாசமாகவதைத்துநல்லாடையை
யீசன்சுற்றிமற்றோர்கட்குமீந்தனன். 90

ஆலமாகியகஞ்சனணிநகர்
பாவினார்வண்ணரசிறோடெய்தியே
மாலைசாற்றினன்வைகுந்தமேறிட
நீலமேனிநெடியவனீந்தனன். 91

இகழ்ந்தபோசனையிக்குவிலோனெனப்
புகழ்ந்துமாதவன்றாளிணைப்போற்றியே
மகிழ்ந்துகூனியுதவியமாசுணச்
சுகந்தமெய்யினணிந்தனன்சுந்தரன். 92

ஊனிவந்தவருவமில்கூனியைத்
தானிவர்ந்துதடக்கைகளாரவே
கூனிமிர்ந்தெழில்கொள்ளத்தழுவினான்
வானிவர்ந்தனந்தேயருண்மாதவன். 93

சாபமெய்தியதாதையைச்செற்றவன்
சாபமெய்திமுறித்தனன்றாழ்விலாக்
கோபநாதன்முதற்குணனிந்திர
கோபசோதரத்திருக்கொண்கனே. 94

போதகந்தெரியாதபுரவலன்
போதகந்தனைப்பொன்றப்புடைத்தனன்
போதகந்தொறும்வெண்ணெயுண்டேநலப்
போதகந்திகழ்பொற்கொடிமார்புளான். 95

சாணூரக்கமுட்டிகர்தம்முயிர்
சேணெருக்கிவதைத்தனன்செம்பொனா
தூணெருக்கியெழுந்தவுணன்சுடர்ப்
பூணெருக்குரங்கீண்டருள்புண்ணியன். 96

வேறு.

மதுரையெய்திவரைவில்லிறுத்துமகமேருவேயிவர்செய்மும்மதத்
தெதிர்மலைந்தகரிகோடிறப்படியினெதிருமல்லரிருவருமுருண்
டுதிரவேதலைகளுடல்சிதைந்துதிரமோடவென்புதகளூறவெழுந்
ததிராதிமுதலோர்மடிந்துவிழவையன்வெஞ்சமர்விளைத்தனன். 97

தங்கமன்னியபசும்பொனாலவிர்கொடரளமாளிகையின்மீதுயர்
சிங்கம்விஞ்சவுயராதனத்தின்மிசையேறியெண்டிசைகடிகழவே
யிங்குவந்தகணனெங்குமாகியுளனேதுமாயமிவையெனவயர்ந்
தங்கணொந்துயிர்கரைந்தகஞ்சன்மனமஞ்சமாயனவனெய்தினான். 98

கண்ணடங்கவிடமேதுடிக்கமதுராபுரிக்குளமர்காவலன்
விண்ணிடங்கொளநிவர்ந்தமாடமிசைமேவியேயுடல்வெதும்பியே
யுண்ணடுங்கவமர்கஞ்சனூருதனிநேரிமைப்பின்முனமுற்றனன்
மண்ணிடந்துபினுமுண்டுமிழ்ந்தளவுகொண்டுநின்றருளுமாயவன். 99

வந்தநீலநிறவண்ணமாயவனைவஞ்சநீவருகையேதென
வெந்தையோடெனதுதாயையுஞ்சிறையிருத்துமாதுலனுநீயெனச்
சிந்தைவேவவிருகண்கனற்கொளுவவிதிரும்வாளொடுசெருத்தெழ
முந்தியேமுடிபிடித்துமற்றவனைமோதினானுயருமாதியோன். 100

கழலவாரமணிசழலநீள்விழிகள்கழலவாகுபுரிகழலவாள்
சுழலவேகுழைகள்சுழலவாகமடிசுழலமாமுடிசுழற்றியே
கழுகுகூளிகொடுமுவெல்சூழவெழுகுருதிவாயொழுகலனுயி
ரழியமார்பினிடையழகுகொண்டமுகில்போலவச்சுதன்மிதித்தனன்.

சிந்துமாமனுடல்பொடியதாகவவன்மார்பினின்றதிருமார்பனை
யந்தமாமுனிவரயனொடிந்திரனுமந்தரததுமலர்சொரியவே
தந்தையானவசுதேவனுமனைவிதன்னொடும்மதலைதன்வயின்
வந்துமார்புறவணைக்கவன்னைமுலையுண்டனனுயருமாதவன். 102

கஞ்சனன்னைமகிழ்தாதைமற்றவர்கிளைக்குழாமவர்களிப்புற
மஞ்சனென்னவவன்வந்தமாயவனைமார்புறத்தழுவிமன்னவர்
செஞ்சொலின்னிதமுரைப்பவெஞ்செயிரகற்றுபோசனருள்சேயதாய்
வஞ்சமில்லவனைமுடிமிலைச்சியருள்செய்தனனுயருமாதவன், 103

வளமலிந்தவசுதேவனுந்தனதுமார்புறத்தழுவிமைந்தனும் [அ
களவின்வெண்ணெய்நுகர்கண்ணனுக்கவிர்கொள்கமலமாமலரின்முனிவி
ரளவிலந்தணர்கள்வாசுதேவனெனநாமமோதியவன்றன்வளர்த்
துளமகிழ்ந்தெழின்முந்நூலணிந்திடவுவந்தனனெவருமொப்பிலான்.

மதுரைமேவிமகிழ்மாயவன்முனம்வளர்ந்தவாயர்பதிதனைமறந்
துதவுநான்மறைகள்பலபுராணமுபதேசமீந்தருளுமுயர்தவர்க்
கிதமதாகவமர்குருவினுக்குமுபகாரமாகவெறிகடலின்வீழ்
மதலையோர்கடமைமுன்கொணர்ந்தருளினானுவப்பினொடுமாதவன். 105

கஞ்சனன்மனையின்மன்னுதேவியர்கட்கெந்தையாகியுயர்காவலன்
விஞ்சுமாமவுலிமகதராசனுடனேவிளைந்ததுவிளம்பிட
வஞ்சமார்மருகனார்மடிந்ததனினெஞ்சுநொந்தெழுமறத்தினா
னிஞ்சிருவெரையின்கண்வந்திடவெதிர்ந்தனனெதிரிலாவரி. 106

இரண்டுபத்தினொடேழுமன்றினக்குரோணியனிகமோடெதிருமகதனார்
திரண்டநற்பரிகடேர்களானைகள்சிதைந்துபோகவுயிரேபிழைத்
தரண்டுபத்தொடெழுபோருமிப்படியலைந்துபாறிடவளக்கர்போற்
புரண்டுசெங்குருதியோடவேயமரின்வென்றனன்புனிதமாயவன். 107

மகதராசனுடையக்கனன்றமதியாதகாலயவன்வந்துதா
னருகியோவெனையும்யாதவாவெனமொழிந்துநஞ்செனமுடுக்குமத்
தகுதியாறுவரியிறையளித்தநகர்தன்னின்மாசதுரங்கமும்
புகுதவேதனியெதிர்ந்தனன்கமலமங்கைமார்பிடைபொருந்தினான். 108

வந்தகாலயவன்மாரதங்கள்கரிமாவும்வீரருமடிந்திடச்
சிந்தியேயவன்முனோடிமால்வரைமுழைக்குட்சேரநகைசெய்தவ
னெந்தவாண்மைபடவிடையர்தங்கள்குலமெய்தினாயெதிர்நிலாயென
வந்தமாமலையினூடுதேடுமெவன்முன்னிலாதவணடங்கினான். 109

வானுளோர்கண்முசுகுந்தனின்னைமதியாதெழுப்புமவனாருயி
ரானியாகுமெனவறையமால்வடிவினந்தமாபிலனுளமர்துயில்
வானையேகடிதினண்ணமாமுனிவினோடுகொலையவ்வஞ்சகன்
றனராவெனவழன்றுமோதிமடிவெய்தவேநகைசெய்தானரோ. 110

துயிலகன்றமுசுகுந்தன்முன்னர்வளைதூயவாளிகதைசுடர்வில்வா
ளியல்பமைந்தகரநாலுமிந்திரையிலங்குமார்பமும்வயங்கிடச்
செயிரகன்றொளிர்கவுத்துவம்மணிசிறப்பமாமவுலிதிகழ்வுற
வயினதேவனடிபரவவேயொளிகொள்மாயவனணுகினின்றனன். 111

வணங்கியாமுசுகுந்தனுக்கினியவாய்மைகூறிவரம்யானுனக்
கிணைந்ததேதருவனென்னலுமிறைவவீடளித்தனமெனாதுநீ
சுணங்கனனவடியேனைவன்பிறவிதுய்க்கவென்னுவதடாதெனப்
பிணங்குமானவனையன்பினோடுமுயர்பிரமர்தாதையிவைபேசினான். 112

வதிரிகாச்சிரமமேவியந்தணர்கள்சனனமாயடைதிமேவிநா
ளிதமதானவுயர்பதமுமீகுவனிருத்தியென்றரியியம்பவே

முதிருஞானமுடனெடியவாவரிமுராரிநீலமுகின்மேனிய
வெதிரில்சிதரவெனுமொழிந்துமுசுகுந்தனுமவணியெய்தினன். 113

கண்ணனோடவிறலுடையகாலயவன்முடுகுமாறதுகருத்தென
நண்ணியேமகதராசன்மாரிலநடுங்கவந்தவன்முனேகியே
வண்ணமேகவரிவரையினேறுதலும்வன்னியிட்டனன்மலையின்வா
ழெண்ணிலார்புளிஞர்மடியமாநகைகொடேகினனிறைவனெதிர 114

ஏகுநாரணமுராரிமால்பரமனீசன்மாதவனியாதவன்
மாகவானுறையுநகரின்வண்மைபெறவருணர்தந்ததுவராபதி
சாகரத்தினிவர்பன்னிரண்டகலநீளயோசனைகொடாரணியின்
போகபூமியைநிகர்த்தநற்புரிபொருந்தினனமரர்புகழவே. 115

மாமணித்திரள்வயங்குகோபுரம்வயங்குவேதிகைகண்மண்டபம்
வீமணத்தகுழலார்களெண்ணிலர்கண்மேவுமாளிகைகள்வில்விட
நாமணத்தமறையந்தணாளர்கணலங்கொண்மாமுனிவர்நணுகமெய்ச்
சாமளத்தரியுறைந்தபொற்றுவரைசாற்றுவார்விபுதர்மகிழ்வுடன். 116

தும்பிவெஃபரிகடேர்கணின்னவவிர்தோமரங்கள்கதைசுரிகைவா
ளம்புறைந்தசிலையாயுதத்தினர்களாழிபோனிறையவந்தரத்
தும்பருந்துமலர்மலியவேதிமிலையுறுமிமும்முரசொலித்திடச்
செம்பொனாருமணிமாடவீதிகள்சிறந்தபொற்றுவரைமாநகர். 117

அந்தநன்னகரடைந்துதூவியுறுமன்னமன்னவுயர்தேவகி
தந்தைசென்னியினுயர்ந்தபொன்முடிதயங்கநான்மறைதழைத்திட
விந்தைமல்கிடவையானனன்முனிவர்விபுதர்பூமழைவிடுக்கநற்
குந்திமைந்தருயவந்தவெந்தையரவிந்தைகொண்கனினிதுற்றனன். 118

இரேவதன்மகளொடேகியிங்கிவடன்னாயகனெனவனியம்பெனச்
சரோருகன்னெதுகுலத்துளானெனவிழிந்துநற்றுவரைசாரவே
யராவுருத்தவிருவோனிரேவதிகழுத்தினிட்டலமிசைத்தவண்
விராவிடக்கடியலங்கல்சூடுமணமேவியங்கினிதிருந்தனன். 119

வேறு.

இரேவதியுடனேதாலகேதனனின்பமெய்தச்
சராசந்தனுருக்குமன்பொற்சாலுவன்சேதிராச
னராமுனேர்கருப்பைபோலப்பாரிடவமரின்வென்று
முராரிசேர்விதர்ப்பன்பெற்றமுண்டகமின்னைவேட்டான். 120

அன்றியுமெண்கின்வேந்தன்பயந்திடுமென்னமன்னாண்
மன்றலராளகபாரச்சத்தியவாமைவாணி
னென்றருள்புதல்விவிந்தைபத்திரையெதிரொன்னாரை
வென்றிடுங்கவுசலன்றன்மகளொடும்வேட்டானன்றே. 121

வேறு.

சரியிலவான்வயங்குஞ்சலசரமதனைத்தனுவுமிழ்சரத்தினாலறுத்து
மருவமராளகவிலக்கணையென்னுமடந்தையைப்புணர்ந்தபின்னரகன்

ரசினைத்துணித்தங்கவனிடுசிறையைத்தீர்த்திடுமரசர்கள்பயந்த
தெரிவையர்பதினாறாயிரத்தொருநூற்றுவரையும்வதுவைசெய்தனனால்.

உரனுறுநரகன்கவர்ந்திடுகவிகையொளிகொளுங்குண்டலமுதலாய்ச்
சுரர்பதிகரினடைந்தவன்கரத்திற்றுலங்கிடக்கொடுத்திருந்ததற்பின்
மருவுறவயங்கும்பாரிசாதகத்தைவண்மையார்கலுழன்மேல்வைத்துச்
சரியிலாதிலங்குஞ்சத்தியவாமைமுன்றிலிற்றயங்கிடப்பதித்தான். 123

சரியிலந்தணனைவதைத்துமுன்படைத்துச்சார்ந்தகண்டாகருணன்றன்
விரைவினினுசனுடன்கதியடையவருளியேவிடையவன்வரத்தா
லரியுருத்தரிக்கும்பவுண்டரன்சிரமுமறவருகாசிமன்றலையு [தான்.
முருளவேதுணித்துச் சுதக்கணன்விடுத்த கிருத்தியோடவனையுமுதிர்த்

அரிவையர்திலகவுருப்பிணிமுதலோரளித்திடுஞ்சுதரெலாம்வயங்கி
திருகன்வெஞ்சாபமகற்றியேவாணன்புயங்களைநேமியாற்றுணித்து
வரைநிகர்மகதன்வலனறச்சாலையவிர்ந்துவீமன்றனல்வதைப்பித்
தரனருள்வரத்தாலுயர்ந்தெதிர்ந்தடர்ந்தவங்கிசடிபிகரைச்செற்றான்.

தருமன்வேள்வியினிலக்கிரபூசைதடுத்திடுஞ்சேதிபராசன்
சிரசினைத்துணித்துச்சாலுவன்றலையைச்சினத்துடனறுத்துறுஞ்சேலே
யரவுயர்துவசனுசனங்குரியவழைத்திடுந்துரோபதைமருங்கின்
மருவியவாடைவளர்ந்திடவருளித்தந்தவக்கிரனையும்வதைத்தான். 126

அரவுயர்துவசனியற்றும்வஞ்சனையாலரசினையிழந்துமாவனத்தின்
மருவுபாண்டவர்தம்மிடரினையொழித்துமற்றவருரையினாற்கண்ணில்
புரவலன்சுதன்பாற்போந்துநாடிரந்துவலவனுய்ப்புரந்தரன்சுதனுக்
கிரதமூர்ந்தவன்றான்களித்திடக்கீதையியம்பியுமுருவுகாட்டினனால். 127

திரிபதைசுதன்மேற்றிகிரியையெடுத்துத்தியனும்பகதத்தன்விடுக்க
வருபடையதனையுரனினிற்றிலத்தின்வலமதாய்வியங்கிடவேற்றுச்
சரியிலாச்சதாயுதலைசிதைந்திடவேவயன்கதைதன்னெழிற்சிரத்தி
னுருமெனவுறவங்கியற்றிவெண்சங்கமுதினனென்னலர்மடிய. 128

சுரர்பதிசுதனங்கியின்விழுந்திடாமற்சுடர்விடுதிகிரியையேவி
யிரவியைமறைத்துச்செயித்திரதன்றன்றலையிறும்படியவணியற்றிப்
பரிதிதன்குமரன்றெடுத்திடுமுரகம்பழுதுறப்படியிடைத்தாழ [ன்.
விரதசில்லியினையழுத்தியங் கவன்றானிறந்திடும் வகையெலாமிழைத்தா

உரகசேதனனைச்சமீரணன்புதல்வன்வதைக்கத்தன் னுருவிற்புடைத்து
குரகதத்தாமாவபாண்டவமெனவேகூறியசொற்பழுதாகத் [க்
தரையினிற்படியுங்கருவினுன்றந்தைசனித்திடமிதித்துயர்குசேலன் [ன்
றருதருப்பணத்தை நுகர்ந்தவன் றனக்குச்சரியிலாவிபவமுங்கொடுத்தா

சதுமறைநெறியாவிணையில்வைதீகன்றனயரைவைகுந்தத்தெய்திக் [ஞ
கதுமெனக்கொணர்ந்துமுனிவர்சாபத்தாற்கடலிடையெழுந்தகோனுயி
லெதுகுலமடியும்வகையினையியற்றியெதிரிறன்மிதெயுங்கிராதன்
சதமனைகரிற்சரீரமோடெய்திவயங்கிடச்சாற்றினன்மன்னே. 131

தாருகன்கொணர்ந்தவிரதமேல்வயங்கித்தன்சரீரத்துடனெய்தி
வேரியங்கமலன்முதலினோர்துதிப்பவிரசைமாநதியினையொருவிப்
பேரொளியாகியுயரும்வைகுந்தப்பதியினெம்பிரானமர்ந்தனனென்
றூர்வமோமொழிப்பவரசனுண்மகிழ்ந்தங்கிறைஞ்சிடமுனிவனுமகன்றான்.

பாரதமுதலாவரிகதையெவையும்பகர்ந்திடுமுனிவனேகியபின்
மாரதர்வணங்கவுலகினையாண்டுமேசம்பலசெய்துமாதானம்
வாரிதன்கரத்திலுகர்ந்திடுமுனிநேர்மறையவர்க்கருளிநல்விசயன்
சாரதியானவிறையினைமறவாதெழிற்செனமேசயனமர்ந்தான். 133

அரிதிருக்கதையா மமிர்தினைச்செவியிற் பருகிநல்லானந்தமுறநீ,
டரையினிற்செங்கோ லோச்சிநற்செனமே சயன்றவர்மகிழ்ந்திட வாண்
டு, சுரர்துதித்திடவவ் வரசினைத்துறந்து துலங்கியமுனிவர்கள் வியப்ப,
மிருகமார்வனத்தி னடைந்துசெய்தவத்தான் விமலன்றன்கதியினைய
டைந்தான். 134

செனமேசெயப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 4124.

---

131 - வது, கர்க்கிப் படலம்.

ஆழிகொடுத்தம்புயமின்னிருந்தனளென்றரியறைய
வாழிகடந்திலங்கைநகாரசனுயிர்களைந்தபின்ன
ராழியினுலலரியவிரகற்றியகிபழுதுறவே
யாழிநிலத்தழுத்திவிசயற்கருண்மாலடிபணிவாம். 1

வேறு.

உவமையில்செனமேசயனேங்கியே
யவனியாண்டபினரசாளுவர்
பவமில்சூதபகர்ந்திடுநீயெனச்
சவுனகன்மொழியவவன்சாற்றுவான். 2

அரந்தையற்றுலகாள்செனமேசயன்
புரந்தபூமிபுரஞ்செயனென்பவன்
றிருந்தவாண்டுதிகழ்பவன்மந்திரி
மருந்தைநேர்வராகச்சுதனுமரோ. 3

தூயவராகச்சுதன்றருசூநுவாந்
தீயனுஞ்சுகனல்லறஞ்சேர்கிலான்
சாய்விலாதபுரஞ்செயன்றன்சிர
மேயெனுமுன்ன றுக்கியெறிந்தனன். 4

விருத்தனுயபுரஞ்செயவேந்தனைத்
துருத்தனுய்வதைசெய்யுஞ்சுகன்சுதன்

பிரத்தியோதனனாரும்பெயரினோ
னருத்தியாயரசாண்டனனாமரோ. 5

வேறு.

அறனிலாப்பிரத்தியோதனன்சுதனாமவமுறாவிசாகயூபன்றான்
மறனறாமவன்சேய்நந்திவர்த்தனமன்வருடமூந்நூற்றுமுப்பதின்மேற்
பறையுமெண்வருடம்படியினையாண்டானவன்மகனேசிசுநாபன்
றிறலுறாமவன்றன்செம்மலோகாகபருணனாய்த்திகழ்வுறாவோனே. 6

கவினுறுகாகபருணன்கான்முளையேகாட்சியார்கேமவன்னன்ற
னவையகலவன்சேய்கேத்திரசனன்மற்றவன்சுதனல்விதிசார
னவமறுமவன்றானருளியபுதல்வனரசசத்துருவவன்செம்மல்
பவமறுபீதனவன்பயந்திடுவோன்பழுதிலாவஞ்சயனாமே. 7

அஞ்சயன்புதல்வன்நந்திவர்த்தனனாமவன்சுதன்மகாநந்தியானோன்
விஞ்சிடுமிவர்கள்வருடமூந்நூற்றோடறுபதும்விபுலையைப்புரந்தார்
வஞ்சமில்லவன்றான்மனைவிசூத்திரிதான்பயந்திடவயங்கியசிறுவ
னஞ்சினைநிகராய்வளர்ந்திடும்பதுமாபதியெனுநாமத்தையுடையோன். 8

அந்தமில்பதுமாபதியருள்புதல்வனயுதவானையினடலுடைய
நந்தனாம்பெயரோனிமமுதற்சேதுபரியந்தநிலனுறுநிருபர்
மைந்தரோடவரைவதைத்தந்தவரசர்மரபினைவேரொடுமறுத்தே
யந்தகனெனவேவருடநூற்றோடொருபத்தேழுறநிலனாண்டான். 9

அருளறுசெனமேசெயன்றவஞ்செய்யவடவியினடைந்தபின்முதலாய்
வருடமாயிரத்தோடொருசதத்தொருபத்தஞ்சினின்மரித்தனனந்தன்
றுரிதனாமவன்சேய்சுமாலிவற்சரந்தொண்ணூறுடன்றசமுறவாண்டா
னரகமாரவன்றான்பயந்திடவுயர்ந்தோனவநந்தனவன்சுதனலவன். 10

நலவனாயுலகினலனெலாமறவேநலிந்தவன்மரித்திடவவன்றன்
குலமறவுயருமவுலியர்மரபின்குவவுதந்தோட்சந்திரகுலத்தி
னிலனெலாம்புரந்தானவன்சுதன்வாரிசிராவணன்பயந்திடநிவரும்
பொலனுறுமசோகவருத்தனனவன்றன்புதல்வனாய்வயங்கினன்சுயேசா.

சரியிலாச்சுயேசாபுதல்வன்சங்கதன்மற்றவன்சுதன்சாலிசூகனனே
யிருநிலமதனினவன்பயந்திடவேயிலங்கின்சததனுவாமன்
றருமமாரவன்றன்றனயனாம்பிரகத்திரதனீங்கிவர்தரையாண்டார்
வருடநூற்றுடனெண்ணாண்டெனமருவார்திறையிடுமொழையேவளர. 12

அருளறுபிரகத்திரதன்றன்புதல்வனக்கினிமித்திரனவன்சேய்
துரிதமுற்றிடுசுசேட்டன்மற்றவன்றன்சுதன்வரமித்திரனாகும்
பரிவுடனவன்றான்பயந்தவனிகரிற்பத்திரகன்னவன்சிறுவன்
சரியிலாவனிந்தனவன்பெறுகுமரன்சற்குணச்சோடனாநாமன். 13

சோடனற்புதல்வன்றலங்கியதேவபூமியிங்கிவர்சுகமுறவே
யாடகந்திரளவவனியைப்புரந்தவருடமோர்நூறதாமவன்றான்

வீடமற்றவன்றன்மரபுமற்றிடவேவிளங்கியகாணவாயனர்கள்
மோடுறுநிலனாண்டனர்கள்வற்சரமுந்நூற்றுடன்முப்பதினைஞ்சே. 14

காணவாயனரிற்காண்வைவதைத்துக் கடியசொல்விடணாந்தெலுங்கன், பாணியாரயிலாற்றிசையினைவென் றுபடியினையாண்டவன்பிராதா, வேணியார்சிவன்போல விளங்குகிட்டிணன்றான் மேதினிமுற்றவும்புரந்தான், றானுவாமவன்சேய்சரியில்சீசாதகருடணனாமந்தனைத்தரித்தோன். 15

சரியில்சீசாதகருணனற்புதல்வன்றருமமார்பவுரனுமரசன்
மருளகலவன்சேய்மறுவிலாலம்போதரனவன்மகன்சிமிலகனு
விரைசெறியலங்கலவன்சுதன்மேகச்சுவாகிமற்றவனருள்விடலை
யருளினாலுயருமண்டமானனவிலருட்டகன்மற்றவன்சிறுவன். 16

அருட்டகன்மகன்சேயாலையனவன்றானருளியசிறுவனுந்திலகன்
பிரட்டகலவன்றானருளியமதலைபிறங்கியபுரீடதன்கலரை
யுருட்டியவயிலையுடையமற்றவன்றானுதவுவோனற்சுதரிசனன் [ன்.
புரட்டியொன்னலரைவதைக்குமற்றவன்றன்புதல்வனுஞ்சகோரநாமத்த

அருள்செறிச்சகோரனருளியசிறுவன்வடமனனவனபுதல்வன்றான்
விரைசெறிதொடையல்விளங்கியவிலவச்சுவாதியாமவன்றருவிடலை
மருளகன்றிகெற்சோமதியவன்சேய்மறுவிலாதுயர்சுதக்கந்தன்
சரியிலாவவன்றன்றனயனும்விசயனவன்சுதன்சந்திரபீசன். 18

இருநிலத்திலங்குஞ்சந்திரபீசனருள்சுதன்சுலோபதியிவன்றன்
மரபுளோர்தரையாள்வருடநானூற்றெண்பத்தாறகன்றவன்மரித்தான்
சரியிலாவவன்றன்குலமிறந்திடவாவீரர்தந்தலைமுறையேழும்
பரிகரிநரர்கண்மிடைந்திடவகன்றபடியினையாண்டனரன்றே. 19

மற்றவர்மடிந்தபினரிற்சேத்தவர்கடசதலைமுறைமனையாண்டே
யிற்றிடத்தருமமிறுத்தகண்ணுவர்களெண்ணிருதலைமுறைபுரந்தே
யற்றிடயவனர்தலைமுறையிருநான் கவனியைக்காத்திறந்திடவே
யுற்றபப்பரர்கள்சதுர்த்தசராள்வர்களுலகினையறநெறிகெடவே. 20

அருளில்பப்பரர்களிறந்திடச்சகுண்டராறுவரோடெழுவருமாள்வர்
தருமமில்லவர்களிறந்தபின்றசமௌநரவர்நாசமாகுவர்கண்
மருளராமிவராயிரத்துத்தொண்ணூற்றொன்பதுவருடமாண்டிறப்பர்
முருடுறுமவுநர்வருடமுந்நூறுமூடுகியாளுவர்பதினொருவர். 21

மவுநர்கண்மடியச்சிலைகளைப்பெயரோன்மண்ணினையாளமற்றவன்சேய்
பவமுறுபூதநந்திதன்செம்மல்பழுதுறுதவங்கிரனவன்றான்
றவமுறப்பயந்தசுதன்பசுநந்தனவன்மகனும்பிரவீமன்
னவையுறுமிவர்கண்மடிந்திடவாழ்வார்நலனில்வாலிகர்பதின்மூவர். 22

வாலிகர்மடியவயங்குபுட்டியமித்திரன்மனனுகுவனவன்சேய்
சீலமில்தசமித்திரனுலகாண்டுகெழியவேயந்தகர்செறிந்து

ஞாலமாளுவர்களதற்பினர்தெலுங்கரெழுவர்நற்பாலரையாளுவர்க
ளாலமேகிகராயடர்ந்திடுவேசரர்பதிகளானவரரசாள்வார். 23

அருளில்வேசரர் பதியகளாண்டதற் பின்னறனிலாநயி டர்களால்வ
ர், தரையினினவர்தங் குலமிறந்திடவே தாருறுவிச்சுவமூர்த்தி, யரசனு
ருவன்மற் றவன்சுதன்பவரோ வருணன்மற்றவன் பெரும்புதல்வ, னிரு
நிலத்திலங்கும் புளிந்தன்மற்றவன்சே யெதுவெனும் பெயரினையுடை
யோன். 24

எதுமனன்சுதனுஞ்சுகனவன்பயந்தோனெதிரிலாவீரியவான்மு
னுதிருமூலகாண்டிறந்தவன்மரபுகழிந்தபின் னுலப்பிலாச்சவுர
ரதன்மமாயரசாளுவரவர்குலந்தானற்றிடவந்தரர்புரப்பர்
மதியிலாவவர்கண்மரித்தபின்மருளாரவந்தியர்மண்ணையாளுவரோ. 25

அறனிலாதுயருமவந்தியர்மரபுகழிந்திடவானிவர்வீரர்
மறனுறுமவர்கண்மடியச்சூத்திரர்தம்மரபினோர்மாண்டிறந்திடவே
திறலுறற்புதர்கள்செகமெலாமாள்வரவர்குலந்தேயந்ததற்பினரிற்
றறுகண்மாளுவர்கடாரணியாண்டிறப்பத்தருமமிலேச்சராளுவர்கள். 26

தருமமின்மிலேச்சர்மரபினோரனேகர்தரையினையாள்வர்தம்மிற்
றரிதம்வந்துறவேயமரிடையனேகர்மடிந்திடச்சூத்திரர்முதலாய்
வருணமற்றுயருஞ்சங்கரசாதிமறுவிலாவனுமிகராள்வ
ரருமறைபுராணசாத்திரமெவையுமருமறைநெறியகன்றிடவே. 27

வருணமுமிலாமன்மறைநெறிப்படியேமணஞ்செயுங்கருமமுமகல
வரிவையர்பலரையணைத்திடவதுவுமறனெனச்சம்மதமாகிப்
பருவமோரெட்டிற்சிசுவைமங்கையர்கள்பயந்திடப்படியிடைநரர்க்குப்
புருடவாயுசுசொல்வருடமுப்பதுமாய்த்தும்பைபோற்குறுகும்பூமரங்கள்.

தருமமெய்பொறைசற்குணமருளீகைதவந்தெய்வம்பேணுதலெல்லா
மிருநிலத்தகலக்கதம்வதைமுயற்சியிகழ்ச்சிபொய்வஞ்சனையதனம
மருளிலவமலியமலர்மகள்வாணியகன்றிடமதியிலாக்கயவர்
திரளுவரியினுமதிகமாய்ப்புவிமான்றிகைக்கிடமிடைகுவாரன்றே. 29

அம்புவியிடரையகற்றிடவருள்செய்தவந்திச்சத்தினின்வயங்குஞ்
சம்பளக்கிராமத்துயர்பிராமணரிற்சற்குணவிண்டுயர்சித்துக்
கின்பமார்சுதனாயெழுந்துகர்க்கியின்மேனிலங்குதன்கையுறுவாளா
லும்பர்கண்மகிழவுவரிசூழுலகினுறுகலர்திரள்களைவதைப்பன். 30

பரிகுரமதனாற்பரவைசூழுலகின்பவமுறுகயவர்களெல்லாந்
தருமமோங்கிடவேதரையினிற்றுகளாய்விழுந்திடத்தயங்கியேதிகழ
திருவினையகன்மெய்ப்பரிமளமதனாற்சேடித்தமனிதர்களெல்லாந்
தருமமோங்கிடவேகலியுகமொருவசற்குணமாகுவரன்றே. 31

சரியிலாக்கிரேதாயுகம்வரவதற்குச்சற்குணநரர்களாய்நிறைய
விரவிதன்குலத்துக்குயர்மறுமருவுமிலகுதன்மரபினுக்கிசைய

மருளகன்றிசெந்தனுப்பிராதாவாய்வயங்குதேவாலியென்பவனும்
புரவலராயவ்வுகத்திறுக்கமர்வோர்முராரியைப்போற்றிசெய்குவரால்.

சுரரொடுவலாரிவிடையனெண்கண்ணன்றுறந்தவர்நுதித்துநின்றுடி
விரைசெறிதருவின்மலர்பொழிந்திடுவர்விசும்புறமுருப்பசிமுதலா
மரிவையர்நடிப்பவளேசின்னமறையவந்தரதுந்துமிமுழங்கப்
பரிவெரிங்வயங்குமுராரிதன்பரமபதத்திடைவயங்குவனன்றே. 33

அநந்தனற்சநகாதிபர்க்கருள்செய்யவவர்கள்சாங்கியாயனர்க்கறையச்
சினந்தவிரவர்நற்பராசரர்க்குரைப்பச்சிறந்திடுமெயித்திரேயர்க்குக்
கனந்தருதவஞ்சேர்சத்திதன்குமரன்கழறிடவவன்விதுரனுக்கு
மனந்தனின்ஞானமுறப்பகர்ந்திடவேமருளறவோங்குபாகவதம். 34

நிகரில்வாளபிமன் சுதனெழுதினத்தி னிவரரிபதந்தனிலுறவே, சுகமுனியருளத் துலங்குபாகவதப் பொருளதாஞ் சுவைநலனுறவே, பகர்கதையிதுவென் றுரைத்திடேஞ்சூதன் றனையெங்கள்பவமுன்றன் சொல்லாற், றகரநற்பதஞ்சேர்ந் துயர்ந்தனமெனவே சவுனகரொடுந்தவருரைப்பார். 35

வேறு.

ஆசகல்சுகனங்கோதவபிமனற்சுதன்றுன்கேட்டு
மாசகல்வாசுதேவன்சரிதையைவரைந்துசீராய்ப்
பேசுவோர்கற்போர்கேட்போர்பெருமிதமெய்திப்பின்னர்க்
கேசவனடியராகிக்கிளர்பதத்தணுகுவாரே. 36

கர்க்கிப் படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 4160.

---

132 - வது, வைநதேயப் படலம்.

அத்தினபுரியையவராளவேவலவணுகி
யுத்தியையணிந்தோன்கையிற்சடிஞையயகற்றிப்பாலா
ரத்தியினமர்ந்துவெய்யகராவினுலலைந்துகூவு
மத்தியினிடரைத்தீர்த்தவத்தனையடைதிநெஞ்சே. 1

நத்தொடுதிகிரியேந்துநாரணன்வயங்கிவாழு
முத்தமம்விளையுபூமிநைமிசாரணியத்தோங்குஞ்
சத்திரயாகமீராறுண்டுறமறைகள்சாற்றுஞ்
சுத்தமெய்த்தவர்கள்சூதன்சுதன்றனைநோக்கிச்சொல்வார். 2

விரதமாதவரின்மிக்கவியாசன்றன்னருளினுலே
சரதநான்மறையின்சொல்லைச்சார்ந்திடுபுராணமெல்லாங்
கரதலாமலகம்போலக்கழறிடுமெறிஞமாயோன்
பரிதனுற்சொல்லுநல்லசரிதையைப்பகர்தியென்றான். 3

பாரிடைமனிதருய்யப்பங்கயன்மகிழ்ச்சிகூரச்
சீருடைவினதேயன்செப்பிடச்சிறந்தசொல்லாற்
காருடபுராணந்தன்னைக்கடியவெவ்வினைகளெல்லாம்
வேரொடுமொடியவையாவிளம்பெனச்சூதன்சொல்வான். 4

சரியின்மாதவத்தீர்நேரில்சாத்திகபுராணமாக
வருமறையுருவமானககபதியருளிச்செய்த
பரமனற்சரிதைதன்னைப்பகரெனப்பணித்தீர்யான்செப்
பரியமாதவத்தின்செய்கையாமெனப்பேசலுற்றான். 5

துனிவினையொருவித்துய்யசோதியையுளத்தில்வைத்துத்
தினகரனெனவேபாரிற்சிறந்தசெங்கோலையோச்சிக்
கனகமாதானஞ்செய்தேகனவினாகுதிகள்பெய்து
சனகர்கோனியற்றும்வேள்விதனிற்சுகன்றந்தைவந்தான். 6

சிரத்தையார்சனகராசன்செய்திடும்வேள்விநோக்க
விரத்தியார்வியாசனெய்திவியந்துளமகிழ்ந்துஞானக்
கருத்தனாயவாசமிக்ககமலமாமங்கைசேரு
முரத்தனுமொருத்தன்றன்னையுளத்தமைத்திருக்கும்வேலை. 4

சவுனகன்வாமதேவன்சதானிகன்கும்பயோனி
கவுதமன்வசிட்டன்வீணைமுநிகவுசிகன்சாபாலி
யவமிலத்திரிவான்மீகியங்கிராநாகதந்தன்
பவமில்சாங்கிலியன்மார்க்கண்டயனொடும்பலரும்வந்தார். 8

அத்திரிமுதலாயுள்ளவருந்தவரெல்லாமெய்தி
யுத்தமவரியைநெஞ்சினுருத்தியேயோகஞ்செய்யுஞ்
சத்தியவதிதன்மைந்தன்றாண்மிசையிறைஞ்சலோடும்
பத்திசெய்திருத்திரென்றேயினியசொற்பகர்ந்தானன்றே. 9

முனிவருக்கினியசொல்லைமொழிந்திடுசுகனற்றந்தை
யனைவருமேககாலத்தடைந்ததேனதுவமின்றி
மனதினோர்கருமமுன்னிவந்ததிங்கறையுமென்றே
துனியகல்வியாசன்கூறவிருடிகள்சொல்லலுற்றார். 10

சதுர்மறைக்கடலைநீந்தித்தத்துவஞானங்கண்டே
சுதைசுரர்க்களித்தோன்றன்னைச்சோதியென்றறியும்வண்ண
மிதவுபதேசஞ்செய்தாயெமக்கின்பமுறவேபுள்ளின்
பதியறைசரிதைதன்னைப்பறையெனப்பகர்ந்தாரன்றே. 11

மாதவரிவைகள்கூறமறைசரைசண்டவள்ள
லோதுவான்றக்கன்வேள்விதனிலுயர்முனிவரெல்லாம்
போதகத்திடர்தீர்த்தானைப்புயத்தினிற்பரிப்போனெய்த
வாதரவுடனேசாமகீதங்களறையும்வேலை. 12

வேறு.

எழொடேழுறுலகமெங்கணுமிருசிறைவிரித்தறையுமூர்தியே
ஊழியின்னடர்காலின்மும்மடியுந்தவும்பர்களுந்தூமாமலர்
சூழவெண்டிசைவாசம்வீசிடவேதுலங்கியதும்புராதியர்
யாழ்களோதிடவீணைகந்தருவோரிசைத்திடுமிசைகள்விஞ்சவே. 13

சாமகோடமெண்டிசைபரந்திடவேதயங்கியதபனன்மேருவின்
வாமமல்கிடவைகுமாறெனமணிவயங்கியமகுடமாண்புற
வேமரூபமிலங்கவக்கிரதுண்டநல்லொளியெங்குமுந்திட
வீமனும்வனமாலைமுத்தினமாலைமாமணிமார்பின்விஞ்சவே. 14

வரையெனத்திரள்பீனவம்புசமீதுமாவிருஊருவின்குறி
தெரியவிந்துவின்வகிர்நிகர்த்திடுதந்தநல்லவிர்திக்கினுற்றிட
வுரமதினுபவீதம்வாசுகியாகவோங்கிருபதுமரு
மிரவியின்னவிர்பரவுகுண்டலமாகியேகுழைதனினிலங்கவே. 15

பொலனுறுஞ்சிரமீதுசங்கனிலங்கவொண்குளிகன்புயந்தனின்
வலயமாகவனந்தன்வாமநற்கடகமாகிவயங்கநேரிலா
நலனுறுங்கடிசூத்திரம்மெனவோங்குதக்ககனண்ணமாழையின்
கலனெனக்கடுவிடமிடைந்தகார்க்கோடகன்கவினுறுமோர்புற. 16

வருணமல்கியவுரகபந்தனமணிகளெங்கும்வயக்கவொப்பிலா
வருணவம்பரமீதுகாஞ்சியின்வயிரமாரவினங்களாரவே
தருணமல்கியதாளினூபுரத்தரிசுவாணிடிபோன்முழங்கிட
விருணவிந்திடுகதிரவன்னெனவயினதேயனங்கெய்தினனரோ. 17

யூகம்வானரமெண்குமுற்றவுமருள்தசரதன்மைந்தன்மேற்
றேகைபாகர்தம்வரையெடுத்தவன்சுதன்முனிந்துவில்வளையவிட்டிடு
நாகபாசமன்றேடநண்ணினோனரர்தனந்தரையாசைநாரியர்
போதபாசம்விட்டகலமற்றவர்புனிதராகவேபுவியினெய்தினன். 18

சுரர்தருத்தருமலர்சொரிந்திடத்தும்புராதியர்பாடியாடவே
யருமறைத்தவருளமகிழ்ந்துசென்றடியிறைஞ்சிடவச்சுதன்றன
துரமிகுத்திடுபுயத்தடத்தினிலொளிரவேபரித்தருளுமுத்தமன்
சரியிறக்கனல்வேள்வியின்மறைதங்குமுத்தரவேதிசார்ந்தனன். 19

வேறு.

மெய்த்தவர்சூழத்தக்கன்செய்திடும்வேள்வியின்க
ணுத்தரவேதிமுன்னருதயமாங்கதிரவன்போல்
வித்தகவிகங்கராசன்விண்ணவர்நடிப்பவெய்தச்
சுத்தமாதவர்பணிந்துதொழுதிவைதுதிக்கலுற்றார். 20

இருதயமிருக்கேயாகவிருசிறைசாமமாகப்
பிரணவஞ்சிரசேயாகப்பிறங்கியநான்குதோளுஞ்

சரியினால்வேதமாகத்தருப்பையேயுரோமமாக
விருவிழியிலங்குகாயத்திரியதாமுருவவென்றார். 21

உதரம்வேதாந்தமாகரூபமேயெயிறதாக
வதரநாத்திரிவேதங்களாகவங்குலிகளெல்லாஞ்
சதுர்மறைலிபியதாகச்சாமகானங்களேரின்
மதியெனநாலாம்வேதமருங்கினம்பரமாய்ச்சேர்ப்பாய். 22

சர்ப்பமேயணையதாகத்தயங்கியவிறைக்கரத்தா
யற்புதவனந்தசத்தியமர்புயக்காசிபன்றன்
புத்திரவட்டதிக்கிற்புயங்கபூடணசாத்திக
வுத்தமவிகங்கராசபோற்றியென்றுரைத்தாரன்றே. 23

அருந்தவர்மகிழ்ந்துபோற்றியடியினிலிறைஞ்சநோக்கித்
திருந்தியமறையையோதுங்காசிபமுனிவன்செம்மல்
கரந்தைவேணியனையொப்பீர்கழறிடுமுமக்கியானோர்
வரந்தருவேனாலென்னமாதவர்விளம்பலுற்றார். 24

ஆருநேரொப்பிலாதவச்சுதன்சரிதைதன்னைப்
பாரினாமுய்யும்வண்ணம்பகரெனவிகங்கராசன்
காருடபுராணந்தன்னைக்கழறியேவிசும்பினேக
வேருறுபிரமன்றக்கன்மகந்தனிலேகினானால். 25

அயனவணெய்தலோடுமருந்தவரிறைஞ்சித்துய்ய
வயினதேவன்றானிந்தமகந்தனினெய்திமாயோன்
செயலுறுசரிதைதன்னைச்செப்பியேயேகினானென்
றுயருமெண்கணனுக்கந்தக்காதையையுரைத்தாரன்றே. 26

பவமறவிகங்கராசன்பகர்ந்தகாருடபுராணந்
தவர்விளம்பிடவேகேட்டுச்சதுர்முகன்மகிழ்ந்திக்காதை
யுவமையில்வேதாந்தத்தினுபநிடப்பொருளாய்ப்புள்ளின்
றுவசநற்பதியையீயுமென்றுபின்சொல்லலுற்றான். 27

சிவனுயர்சாபந்தன்னைத்தீர்த்தசீதரனுக்கென்றுந்
துவசவாகனனுமாகித்துலங்கியவிகங்கராச
னுவமையினால்வேதத்தினுருவமாயொப்பிலாமா
தவன்வடிவாகுமென்னத்தவரிவைசாற்றலுற்றார். 28

ஈசற்குமீசனாகுமெம்பிரான்சத்தியாக
மாசகனால்வேதத்தின்வடிவமாம்புள்ளின்வேந்தன்
காசிபன்சிறுவனானகாரணங்கழறுகென்ன
வாசநாண்மலரோனந்தமாதவர்க்குரைக்கலுற்றான். 29

அரிதரையதனின்வெய்யநயவரையரிக்கவேண்டு
முருவனாயெழுந்தபோலவுவணனுங்காசிபன்றன்
பெருமகனாகிவந்துபிறந்தனனவன்றான்செய்த
சரிதைநான்மறையின்ஞானசாரமென்றுரைத்துப்போனான். 30

மலரயன் மகிழதக்கன் மகந்தனின்வயினதேய
னலனுறநவின்றகாதைநாகதந்சன்றான்கேட்க
விலகியமுனிவர்க்கொப்பில்வியாசனன்றியம்புஞ்சொல்விற்
றொலைவிலாப்பொருளைக்கேண்மினென்றுரைசெய்வான்சூதன். 31

அருவமாயுருவமாகியளப்பிலாவண்டந்தம்மைச்
சரீரரோமத்திற்றாங்குந்தலைவன்றன்மாயையாலே
வருபிரகிருதியின்கண்மானுறவதினாங்காரந்
தெரியவேயதனிற்பையத்திகழுமுக்குணங்கடாமே. 32

அந்தமுக்குணத்திற்றாமதத்திலாகாயம்விஞ்சி
வந்திடவதனில்வாயுவயங்கியேயனலோன்றன்னைத்
தந்திடவதனினாரஞ்சனித்திடவதனிற்பூமி
முந்திடப்பொறிகளைந்துமுளைத்திடத்தசமாமன்றே. 33

இருமையாமிராசதத்தின்ஞானவிந்திரியமைந்துங்
கருமவிந்திரியமைந்துங்கருதிடுமனமுந்தோன்றச்
சரியில்சாத்திகமிதற்குத்தந்திடுதசமாமென்றே
வுரைசெயவுரனேயுற்றங்குறுமதிதெய்வந்தன்னை. 34

பூதமும்பொறிகளைந்தும்புகலுமிந்திரியம்பத்து
மோதிடுமனமுமாயமுயர்பிருகிருதிதானு
மேதுவின்மானாங்காரஞ்சீவனோடிருபத்தைந்தாய்
வாதுசெய்தத்துவத்தான்மாலண்டம்படைப்பன்மாதோ. 35

புயலெனவயங்குமேனிப்புனிதன்றன்றொப்புளோங்கிச்
செயலுறுகமலந்தன்னிற்றிகழ்ந்திடுமண்டத்தோடு
மயனையங்குதவவேதானவனண்டர்நரர்களெண்ணில்
வியனுறுகிரிக்கோடுத்தாபரம்விதித்தானன்றே. 36

வடவரைநடுவதாகவயங்கியவேழுதீவுங்
கடலதினிடையேதோன்றக்காசினியதனைமுற்றுந்
திடமுறுநேமியோங்கச்சிறந்திடுமண்டப்பித்தி
மிடையப்பஞ்சாசற்கோடியெனநிலன்விரிந்ததன்றே. 37

வேறு.

மானசோத்திரத்தின்வரையினினிரவிவையமோடிடவதினச்சின்
மேனுனிசுவணப்பொருப்பினுச்சியின்மேல்விளங்கிடவாயுபாசத்தாற்
றானதுபிணித்துத்துலங்கியதுருவன்சதிரினாற்சோதிசக்கரத்தை
வானவர்மகிழக்கரத்தினாற்றிரிப்பவடவரைசுற்றவோர்தினமாம். 38

பரமன்றன்னவிராயிலங்கியசிஞ்சுமாரப்பிரசாபதிபைம்பொன்
கிரிமசைச்சிரங்கீழாகவேயுயரக்கிளர்ந்திடுமிரவியேமுதலாஞ்
சுரருடுவினங்கண்முனிவர்களெழுவர்துருவனோடனைவருந்துலங்கச்
சரியிருதாவிதர்தாவெனுந்தேவிருவருந்தயங்குவாரன்றே. 39

அதலமொண்விதலசுதலமொப்பிலாதராதலமகாதலமகன்ற
விதமுறவிரசாதலமகாபுகழால்விளங்குபாதாளமோடேழுங்
கதைதருகடலார்புவிபுவலோகஞ்சுவர்க்கலோகமகாலோக
மிதமுறசனலோகந்தவவுலகஞ்சத்தியலோகமோடேழே. 40

செயலுறிவ்வகையாற்சதுர்த்தெசபுவனஞ்சிறந்திமெண்டமாயிரமாம்
புயமுடையனந்தன்கருபோலேகசிரத்தினிற்பொருந்திடப்பரிப்பன்
வியலுறுமண்டந்தனையங்கனல்கால்விசும்பெலாந்தசதசமடங்காய்
மயர்வறவளைக்கும்பிரகிருதியிலிவ்வண்டம்போலனந்தம்வதிமோல். 41

பிரகிருதியினிலனந்தவண்டங்கள்பிறங்கிடவரியதற்குரனாய்
மருவுவனதனுக்கப்புறம்விரசைமாநதிவயங்கிமேப்போ
யிரவியரனந்தமெழுந்தனரெனவேயிலங்கியவைகுண்டமதனிற்
றிருவுடன்றிகிரிவலம்புரிதிகழச்சிதரன்சிறந்துவீற்றிருப்பன். 42

அரியரனெனவேதெளிந்திடவரைந்த மண்டத்தின்செயலெல்லாமொழி
சரியிலாவியாசன்றனையடியிறைஞ்சிச்சதிருநாகதந்தன்குரன் [த
மரைமலரயனாகிர்த்திமுனியேமாநிப்பெருமையுமதனிற்
பரவியேபடிவார்கதிபெறுவனவும்பகரெனத்தவன்பகர்ந்திவோன். 43

சதுர்மறைதனிலுமுயர்ந்திமெட்டாக்கரமதாஞ்சகலதேவதைக்கும்
விதிதருபுருடோத்தமவிறையதிகம்விபுலையிற்பலபலபெயரா
நதியினிற்பகிரதிலன்விருந்தாவனத்தினினந்தகோபன்றன் [வான்.
சுதன்விளையாட்டின் யமுனைமாநதியின் றுறைகளுன்னதமெனச்சொல்

மாதவன்விளையாட்டெறவிலங்கியமாயமுனையிற்காளிந்திமகெற்
பாதவமடர்கோவத்தனகிரிகோகிருதங்கோபாலம்புண்டரீக
மாதவர்துதிகோதனம்பிரயங்கோமதிபுராணம்வற்சபாலம்
போதிலங்கியவித்துறையுளிற்படிவார்பவமறப்புனிதராயுயர்வார். 45

எதிரிலிந்நதிகள்பலவினுமதிகமிணையிலாக்கற்புடையாடன் [போற்
பதியினைநெகோட்பிரிந்தவன்வரவே பணைக்கையாற்றழுவுபான்மையைப்
சதுமுகன்பிதாவாமரங்கநாதன்வாழ்தமனியவிமானத்தைச்சூழ்ந்து
கதுமெனவுபயபக்கமும்வளைகாவேரியாம்புண்ணியநதியே. 46

முத்தியைக்கருதிமுனிவர்களிமையோர்முராரிவாழ்சிரங்கநகரின்
பத்தியுற்றுயர்தாபரங்களாய்ச்சனித்துப்பரனைநெஞ்சிருத்துவரன்றே
வித்தகவியாசன்மொழிந்திடக்கேட்டவிழுமியநாகதந்தன்குரன்
சத்தியவதிதன்புதல்வனையன்பாலிறைஞ்சியேசாற்றலுற்றனனால். 47

அரிதிருவரங்கனுகியேவிமானத்தமர்ந்துகாவேரியினுப்பண்
வருசெயலதனைவிரித்துரையெனவேவயினதேவன்றவர்க்கருள்செய்
சரியிலாச்சரிதைதனையுணர்ந்திநொரதற்கரன்சாற்றியபொருளை
யருமறையுணருநாகதந்தத்தகேளெனவறையலுற்றனனால். 48

சுரர்முனியுமையாள்கொழுநனைத்தொழுதூயவைகுண்டத்தினமரும்
பரன்வசுந்தரையிற்பரவுகாவேரிநாப்பணிற்பையராவணைமே

விரவியினவிர்போல்வயங்கியவிமானத்திலங்கியசெயலினையருளென்
றுரைசெயவுரகபூடணன்மகிழ்ந்தேயுயர்தவகேளெனவுரைப்பான். 49

ஆதியாம்பரமனளினநாபியினிலண்டமீரேழ்பொழிலுடனே
வேதனுற்பவமாய்வெருவிநாற்றிசையும்விழிக்கவேயானனநாலாய்த்
தீதறவியற்றுஞ்செயலறியாமற்றிகைத்திடவவன்முனர்த்துலங்கு
மோதிமவுருவாயுலகளந்தவன்றானுதயமாயிவையுரைத்தனனால். 50

அரியெனும்பரமனானுனையென்றனுபியினிலம்போருகத்தளித்தேன்
பிரமனென்றுனக்குப்பெயரினையறைந்தே னென்றலும்பிதாமகன்றொ
கருணையங்கடனீவிதித்திடுமெனக்குக்காணவுபாயமேதெனவே [ழுது
விரிவுறுசிருட்டிவரப்பிரணவத்தைவிளம்பெனப்பறந்துபோயினதால்.

அரியனவுருவாய்ப்பிரணவம்விளம்பென்றறைந்தவண்பறந்துபோய்மறை
பிரமனும்மகிழ்ந்துபிரணவந்தனையுள்ளமைவுறப்பேணியவ்விடத்தி [யப்
னுரைசெயற்கரியவுலப்பிலாக்காலமொழியவேதவஞ்செயச்சிருட்டி
வரவிமையவர்கணரர்பசுப்பறவைவரைகடாபரமெலாம்வகுத்தான். 52

பரவையேழுடனேசதுர்த்தசபுவனத்தனைத்தையும்படைத்திடும்பிரமன்
மருவுமிராசதத்தாலிறைவனானெனத்தன்மனத்தினுங்காரம்வந்துதிப்ப
வரியயன்மதமதகற்றிடவினோதமியற்றவேயவ்வமலன்றன்
னிருசெவிதனினுர்மலமதின்மதுகயிடவரங்கெய்தினரன்றே. 53

அரியிருசெவியினெழுந்திடுமெதுகயிடவர்களண்டம்விண்டிடவே [லுற்றுப்
வுருமெனவதிர்த்தார்த் தொருநொடியிடுமுன் னுகாந்தவெவ்வடவைபோ
பிரமனையடர்த்துமறைகளைப்பறித்துப்பெயர்ந்துநீராழியிற்புகுத
வெருவிநெஞ்சுளைந்துமனதினுக்காரம்பழுதறவிதியலைந்தனனால். 54

மனதினுங்காரமடிந்திடப்பிரமன்வறியனாய்ஞானம்வந்துறவே
யனவுருவமைந்தவரிதனையளித்தபிதாவென்பதறிதிலனாகிக்
கனவனமுடையோனுதரநாபியினிற்கமலநாளந்தனிலிறங்கி
யினலுறவதின்முள்ளுடறகையறக்கவிழ்ந்திரங்கினன்பலகாலம். 55

எண்ணருங்காலமிழிந்துமுள்ளறுக்கவிரங்கியகமலத்தினடியைக்
கண்ணிணையிருநாலுறவிழித்திடலுங்காண்கிலனாய்மதிகலங்கி
யுண்ணடுக்குறவேமீளவுநளினத்துச்சியினேறிமூர்ச்சித்து
நண்ணியென்னிடரைக்களைபவராரென்றிரளயநாப்பணின்விழுந்தான்.

களைகணாயெனைக்காத்திடுமெவரெவரென்றரற்றியேசயந்தனின்மூழ்கி
யுளையுமெண்கணன்முன்சலசரவுருவாயுனக்கியான்பிதாவென்றுமுராரி
கிளர்சினமதுகயிடவரைவதைத்துக்கிரீடகேயூரங்களொளிர
வளமலிந்திடவேயுயரயக்கிரீவனாகியேமறையவர்க்கறைந்தான். 57

சரியிலாவயனுக்கிருக்குடனெலவுஞ்சாற்றியவயக்கிரீவன்றன்
கருடவாகனனாய்ச்சுதன்முனர்த்தோன்றிக் கழறுவானென்னுடவுரையி
வருசதுமறையைவருமந்தணர்கள்படிக்கலாமற்றிவையறியா [ன்
திருநிலத்துழலும்பிராமணர்மகாபாதகரெனப்பின்னருமிசைப்பான். 58

அருமறையறைந்தமதினுறம்பொருளையறிகிலாவந்தணன்வனத்தின்[ம்
மிருகமொத்திவென்வேதநான்கினையும் விளம்பியெகருத்திலானெனினு
பாவையுட்லெங்கும்புருடனாகியவென்பத்திசேர்புத்தியையுள்ளா [ன்
னிருநிலம்விசும்பினு மூறுமவர்க்கதிகனென் றருள்செய்தவன்மறைந்தா
சுத்தசாத்திகனுமிறையிவையுரைத்தமறைந்திடத்தொழுதெம்பிரமன்
சத்தியவுலகத்தமர்ந்தவனெனையுந்தன்பதத்தோடிறுமெனத்தன்
புத்தியுறுணர்ந்துதுவாதசாக்கரத்துப்புனிதனைக்கருத்தமைத்துப்பா
லத்தியினுறுகியுலப்பிலாக்காலமருந்தவஞ்செய்தனனம்மா. 60

அரிவரவநேகவுகங்கழிந்திடவேயருந்தவஞ்செயுமயனகன்ற
பரவையுட்பரமன்கமடமாமுருவாயிலங்கிடநோக்கியேபணிந்து
சரியிலாவிறைவவெனதுளங்களிப்பத்தற்சொருபந்தனைக்காட்டென்
றுரைசெயவிமலனவன்றனைநோக்கியுளமளியுறவிவையுரைப்பன். 61

இருநிலமதனிற்கயவரையரிக்கயானெழுந்திடப்பலவிதமா
முருவமாங்கெவரும்வெளியுறக்காண்பா ரெழில்கொள்வைகுண்டத்தின
சரியிலாவெனதுதற்சொருபத்தைச்சதுமுகனின்னுடனரனுஞ் [மருஞ்
சுரருயர்வலாரியிவர்களுங்காண்டற்கரியதென்றேயிவைசொல்வான். 62

சலசரநோக்கச்சரியிலாக்கடடர்தியானிக்கச்சுருந்தமெய்ப்பரிச
நலனுறவிவையின்சிக்கடான்வளருநன்குபோனனமீனு
யிலுகிங்குயர்ந்தகமடமாய்வயங்கியானுனையளியினாற்காத்தேன்
மலர்மிசையவிர்கொள்பிதாமகவெனவேமாதவன்பின்னருமொழிவான்.

சீலமார்புருடோத்தமனெனும்யானிசிறந்திடவெனதுதற்சுருபக்
கோலமார்விமானமுடன்வெளியுறவேகோகனகந்தனினமர்வாய்
மூலமந்திரம்வேதத்தினுக்கதிகமோட்சகாரணமென்றன்மனது
சாலவுமுவப்பவட்டவக்கரத்தாற்றவமுயல்வாயெனவகன்றான். 64

கூருமவுருவமுராரியிவ்வசனங்கூறியேமறைதலும்பிரம
னாரணனுவப்பவட்டவக்கரத்தைநலனுறக்கருத்திடையிருத்தி
பாரினிற்பரவும்பயோததிமருங்கிற்பவமறவைம்புலனடக்கிச்
சீருறத்தெய்வவருடமாயிரமுங்கழிந்திடத்தவஞ்செயுந்தினத்தின். 65

விரசைமாநதியின்மீயுயர்பரமபதத்திலும்விமானமேல்விளங்கிச்
சிரசின்மீக்கிரீடந்திகழமார்பகத்திற்றிருவுபவீதமுஞ்சிறப்ப
விரைசெயுங்கமலத்தடியினூபுரங்கள்விளங்கப்பீதாம்பரவுடைநாண்
பரிசமார்மருங்குவயங்கவேயனந்தனணையதாய்ப்பணங்கொடுகவிப்ப. 66

கனமிசைநளினக்காடுபூத்தெனவேகண்கைவாயுந்திகாலிலகத்
தினகரனவிர்போற்றிகழ்மணிவலயஞ்சிறந்தவாமக்கரநீட்டி
கனகமார்முடியார்சிரசணையெனவேகவினுறுவலக்கரமமைத்தே
யனகனாரணன்மாலச்சுதனனந்தசாயியாமரங்கன்வந்தனனால். 67

சுரர்மலர்பொழியத்துந்துமிமுழங்கச்சுனந்தனந்தனுயர்சனந்தன்
சரியிலொண்சனகன்யாழுறுமுனிவன்சசிபதியுமாபதியெனுநா

விருமருங்குறச்சாமரை தினகரனுமிந்துவும்வீசிடச்சேடன்
றானவெண்கவிகைகவித்திடத்தூபங்கமழத்தீபிகைகளுந்தயங்க. 68

பிரணவவுருவாய்விளங்கியவிமானம்பிறங்கவந்தரிகரிமுகனு
மருவிடச்சிகரந்தனிலுயரமரர்வயங்கிடமகுடத்தின்மறைக
ளுருவமாயொளிரப்பதந்தனின்வேள்விபூருவினிட்டியீங்கொளிரக்
கருடனற்சிரசிற்கொடுவரவரங்கன்கண்விழித்துறங்கிவந்தனனால். 69

எண்ணரும்பிரமரிறைஞ்சிநத்திடுவாராதனஞ்செயவரங்கேசன்
கண்ணிணைகளிப்பவிமானமேல்வரலுங்கமலனானந்தநீர்விழியி
னண்ணவேநடித்துச்சதுமறைப்பொருளார்நாவினாற்றுதித்திசைபாடி
மண்ணணங்கொளிகொண்ணளினமின்வருமெலரடிவணங்கியீதனைவான்

சிரசுநற்சுவர்க்கஞ்சோத்திரந்திக்குத்தினகரன்சந்திரனயந
மிருதயங்காமநாபியாகாசமிலங்கியபாதமேபூமி [ப்
வருணன்மேட்டிரம்பூமகள்வசுந்தரைமின் மனைவியர்மறைகளுன்வாக்கு
பரவுவெங்குரோதமுருத்திரனாகப்பள்ளிகொள்பரமனென்றான். 71

அயனிவைதுதிக்கவழகியமணவாளப்பெருமாளுடனழகார்
புயலெனவிமானந்தனினரவணைகொள்புனிதன்புத்திரன்றனைநோக்கி
யயமுதாசனன்பவனன்விசும்புடனாங்காரமானசல்பிரகிருதி
யியல்புறுமிவையேயிலங்கிடுமேழாவரணமாயமர்வனென்றிசைப்பான். 72

சரியிலாப்பரமபதத்தினின்வயங்குந்தத்துவமூர்த்தியும்யானே
யருவினையகலவரிச்சியாமவதாரத்தினுக்கியான்பிரதானம்
பரவையுட்டிரைபோற்றிலதயிலம்போற்பரவுவனண்டங்களனைத்துந்
திருவவதாரமனந்தகற்பகங்கடோறுஞ்செனித்திடுவெனென்றிசையின்.

சனனமாவனவென்னிடத்தினாவேசந்தனையன்மித்திரன்சகோதரன்வெ
சினமலிபகைஞனெனநிலன்றோன்றிச்சிட்டரைக்காத்துத்தீயவர்தம் [ஞ்
மினரொடுமெடியவதைப்பனென்சரிதையியம்பியேபத்தரீடேற
வினையறத்தவஞ்செய்துயர்ந்திடுகமலவிளம்புவன்கேளெனவறைவான்.

இரவிமண்டலத்தும்பயோததியிடத்துமிந்திரன்குபேந்திரனாயு
மருவுமென்செயலாவெதிரதரமருவென்றினக்குப்பெயர்வகுத்தென்
றரையினினரங்கம்வேங்கடமுட்டஞ்சாளக்கிராமம்புட்கரம்வான்
சுரர்துதிவதிரிநைமிசாரணியஞ்சிங்காத்திரியிவையெட்டுஞ்சுவயம். 75

உவமையிலயனிமகஞ்செயுமறவிலுத்தரவேதியினாப்பண்
டவர்வியப்புறவேவரதனாயெழுவன்றருமதேவதைபணிந்திடவே
பவமறவிடபப்பருபதத்தழகார்பரரனாயிலகுவனனந்த
நவையறப்பதிட்டைசெயவவண்பதுமநாபனாய்வயங்குவனானே. 76

நிலமகடவத்திற்றிருக்கணபுரத்தினெடியவனாகிவீற்றிருப்ப
னலனுறுமறைகள்பதிட்டைசெய்திடநாராயணபுரந்தனினமர்வன்
வலனுறும்வலாரியுடனுதாசனனும்வணங்கிடவருணமாவரையி
னிலகுவன்சிபிமன்னிறைஞ்சிடநந்திபுரவிண்ணகரதனினெழுவன். 77

வருணன்வந்தனையாற்றிருக்கணமங்கைநகரிடைவயங்குவன்மரீசி
யரனெனவெனதுசரணடைந்திடவேயமருவன்மந்தாரத்தலத்தின்
விரணமற்றுயர்காவேரிசெய்தவத்தால்விளங்குவன்சேறையம்பதியாந்
தருணமார்திருவோடிலங்குவனறையூர்தனிற்சதாகதிபணிந்திடவே. 78
சுரரொடுமவுணர்தொழுதலாற்கும்பகோணத்திற்றலங்குவன்கயிலை
யரனெடுந்தவத்தாற்குசலமாவரையினமருவனகத்தியன்பணியச்
சரியிலாதுயருந்தாம்பிரபரணிநதியுறுந்தலத்தினிற்சார்வன்
பரவைசெய்திறைஞ்சிப்பதிட்டைசெய்கும்பத்துவாரந்தனிலெழுவன்.
இந்திரத்துய்மனிறைஞ்சிடத்திருமெய்யந்தனினிலங்குவனிணையி
லந்தரம்பணியவிட்மொநதிதீரந்தனிலமருவனனலோன்
வந்தனைசெய்யத்துவாரகைமேவும்பதஞ்சலிசெய்யுமாதவத்தா
லிந்துவேணியன்கூத்தாடுசித்திரகூடந்தனினிலங்குவனன்றே. 80
விச்சுவக்கருமாச்செய்யுமாதவத்தால்விளங்குவன்விண்ணகரத்தி
னச்சுதனென்றுமெனையிறைஞ்சிடவேயமருவன்கொங்குதேசத்திற்
பச்சிலையுறுபாதவகிறைபாண்டுசெயிலமாதலந்தனிற்படியி
னிச்சயமாவியங்குவன்சாளக்கிராமமாய்மனைதொறுநிறைந்தே. 81
இறைவனாகியயானிலங்கியவிமானந்தனக்கிரண்டியோசனையெலவு
மறுவிலாமோட்சத்தலமதாம்யான்றன்மருவியகோவிலுமிலாது
நெறியையீசாளக்கிராமநற்சிலையுநீங்கியதேசஞ்சண்டாள
குறுபுலச்சேரிதனைநிகர்த்திடுமென்றுயரரிபின்னருமுரைப்பான். 82
சிகரமண்டபங்கள்சிறந்திடும்விமானச்சீரங்கப்பதியிடைச்சேரும்
விகனமசண்டாளர்திரிகட்குமுதலாய்வீடுபெற்றுயர்குவர்மறையான்
மகமெனில்கோடிசெய்தவப்பலமாதானநற்பலமிவையெல்லா
நிகரில்காவேரிபடிவர்நற்பலத்திற்சகசிரத்தினொன்றுநேர்நிலாது. 83
பரமனுமெனையாராதனஞ்செய்யுங்கிரியையைப்பகர்ந்திடினியமஞ்
சரியிலாநியமமுறவிழுமியதாந்துவாதசாக்கரங்கொடுசலத்தால்
விரையுறைமலராலருக்கியமளித்துவிளங்குசோடசவுபசாரம்
பரிவுடனியற்றிப்பவத்தினையறுக்கும்பத்தரென்பதியிடையமர்வார். 84
இருநிலமதனிற்பாஞ்சராத்திரபூசனையெனக்கிட்டமென்னடியார்
கிரியையீனத்தோடியர்ந்தமந்திரலோபம்பவக்கீழ்மைகளெவையு
மருவினாரெனினுமுவருறவொருக்கால்வைக்கும்வெள்ளாவிமாசறக்கச்
சரியிலாதிலங்கம்பரமெனவவர்க்கோர்சனனங்காட்டிப்பதந்தருவன். 85
பரமனாகியவெற்குவப்பதாம்பஞ்சராத்திரநூலையென்பதியாய்ச்
சரியிலாதிலங்கும்விமானரங்கத்தைத்தவர்மகிழ்துவாதசாக்கரத்தைப்
பரவுமென்னடியாரிழிகுலரெனினுமவர்களைப்பழித்தவர்மறையோர்
மரபமைத்திடினும்புலையரேயவர்காத்தணித்திடின்மறைகள்சம்மதமாம்.
இவையெலாமருள்செய்தென்னரும்பிரமரிறைஞ்சிடுமென்றனையுன்ற
வமறத்திருவாராதனஞ்செய்யென்றளியுறப்பகர்ந்தரங்கேசன் [ன்

மவுனனாயிலங்கமலரயன்மகிழ்வால்வணங்கியொண்மணியுறுவிமானந்
தவர்துதித்திடத்தன்சிரசின்மீப்பரித்துச்சத்தியவுலகத்தைச்சார்ந்தான்.

வேதனன்மொழியால்விழுமிதாயுயர்விச்சுவகருமாகதித்திடவே
யேதமற்றிலங்கேழாவரணத்துளிரவிநீடொலாந்தனினிலங்கு
மாதம்வான்மதிதேய்வுறுதுவாதசியினவயங்கியரோகணிமருவ
வாதியாய்விமானத்தமராரியணையிற்சத்தியவுலகத்தினமர்ந்தான். 88

அத்தநாட்டுவசரோகணமாகியழகியவோணமேமுகிவாய்
வித்தகவிமானத்தமரரங்கேசன்வீதியெங்கணுமெழுந்தருளி
சுத்தமாதவர்கடுதித்திடப்பிரமன்றுலங்குவானதிப்பயந்தன்னா
னித்தியத்திருவாராதனநடத்திநெறியுறவமர்தினமதனின். 89

இரவிதன்சுதனாயிலங்கியவைவச்சுதமனுநீதியிம்பரிற்றான், மருவ
வேயுலகாணலனெலாமுணர்ந்துமலரயன்றன்பதியதனின், விரைவினி
ற்கொணர்ந்து விழுமியோய்விமானத்தமலனைப்பணியெனவிளம்ப, விரு
கணுங்களிப்பவிமலனைவணங்கியிணையிலானயோத்தியையடைந்தான்.

இரவிதன்சுதனாகியமனுநிகரின்மைந்தனாமிக்குவாகுடனே
யரிமணிவிமானத்தயனுறுபதியினமர்ந்திடுமெழகெலாமறையப்
பரிவுடனவனும்யானுமவ்விமானப்பரமனையிறைஞ்சவேயருளென்
றுரைசெயவவனையிருகணானோக்கியுருமார்த்தாண்டன்சேயுரைப்பான்.

கமலன்வாழ்பதியைக்காண்குவதரிதுகண்டதுண்டாயினும்விமானத்
தமலனையிறைஞ்சவருந்தவர்தமக்குமரிதெனமனுவிளம்பிடவே
யிமகரனெனவேயளியுறவயங்குமிக்குவாகுத்துயரெய்திக் [ல்
கமையுறுவதிட்டன்கழலிடைப்பணிந்துகரங்குவித்திவைமொழிந்தனா

அயனுறுபதியையடைகுவதரிதேயாயினுமவணமர்விமானத்
துயராரியிணையானிம்பரின்வணங்குமுபாயமேதருளெனவுரைப்ப
தயையுடைவசிட்டனவன்றனைநோக்கிச்சரியிலாவிராமன்வித்தாரச்
செயல்சதகோடிவிரிவதாமதனோர்கதைகேளென்றுசெப்புவனால். 93

இயல்புறுமிராமன்சரிதையிற்பரமபதந்தனிலிலங்கியமுராரி
செயலுறுநிலத்திற்பரவுகாவேரிவளைந்திடச்சிறந்திடுவிமானத்
துயர்வுறவணங்கியயனிராவரவேயயன்பதமுற்றண்டமொழியின்
புயனிகரெனுமெய்ப்புனிதன்வைகுந்தம்பகுதவனென்றுசாற்றிமொல்.

ஆதலினயன்வாழ்பதியினின்விமானத்தமரரங்கேசனிந்நிலத்திற்
றீதறவருவன்வரத்தவஞ்செய்யத்திறலுனக்கன்றிவேறிலையா
லீதுநிச்சயமேயெனுமொழியியம்பியியல்புறுவசிட்டமாமுனிவன்
வேதன்மந்திரத்தையிதவுபதேசமாகவேவிளம்பினனன்றே. 95

பாவமில்வசிட்டனிவைபகர்ந்திடவேபழுதகன்மனுப்பயந்தெடுத்த
காவலன்விமானத்திலங்கரங்கேசன்கடிதினினெய்திடக்கவினார்

தேவியுந்தானும்வனத்திடையெய்தித்திசைமுகன்மந்திரத்தியான
காவிடையமரச்சுரரொவெலாரிகெங்கிடக்கடுந்தவஞ்செய்தான். 96

நீமைவோறவேவிமானமீதிலங்குஞ்சிதரன்வரமனுப்பயந்த
கோமனத்தெழுமைம்பொறியினையடக்கிக்குறைவறவருந்தவஞ்செயவே
காமனுண்ணெக்கியுருப்பசியரம்பைகவிறுறுதிலோத்தமைகாமன்
சோமனல்வசந்தனிவரைமுற்பவம்போற்றுழுமென்றேவினன்மாதோ.

சுரரிறைவிடுக்கவுருப்பசிமுதலாய்த்துலங்குமங்கையர்சுருளளகத்
தரியினமுரலப்பரிபுரமாற்றவம்பரமருங்கிடையசைய
காவளையொலிப்பத்தரளமாவடங்கள்கலசநேர்தனமிசைப்புரள
விருவிழிகுழையையிடரிடவனம்போனடந்துவந்தெங்கனும்வளைந்தார்.

வரைமாமுனிவர்மதிமயங்கிடவேமங்கையரான்மதன்சிலையால்
விரைபுரைமலரின்சிலீமுகந்தொடுக்கமெல்லெனவசந்தனும்வரவே
சரியிலாமனுவின்றனயன்வந்தெதிரேதமையுடனிருத்திரென்றுரைத்து
விரகவேதனையிலழுந்திலான்பலமூலங்கடந்தருந்துமினென்றான். 99

மாதவம்பெருகமனன்விரகத்தின்வலியினையறுத்துநீரிருமென்
றாதரவுடனேயருக்கியமளித்தேபலங்கிழங்கருந்துமென்றறையப்
பீதியுமகிழ்வுஞ்சிமித்தலும்பிறங்காச்சிரியமும்பிறங்கிடக்காம [ல்
னேறிமடையாருடன்மனுத்தனயன்றனைப் பணிந்திவையுரைத்தனரா

அரனெனைமுனிவாற்செயித்தனனிணையிலரசவுன்சாந்தியினாலே
விரகமுமொருவியெமையெலாம்வென்றாயென்றவர்வெள்கியேயேகிச்
சுரரிறைதனக்கிச்செயலெலாம்விரிப்பத்துயரமுங்குரோதமும்விளைய
வரைநிகரயிராவதத்தின்மீதிலங்கிவச்சிராயுதங்கொடுவந்தான். 101

இருநிலமதனினிமையவர்நடுங்கத்தவஞ்செயுமிக்குவாகுவின்மே
லரனெனமுனிவோடிலங்கும்வச்சிரத்தையமரர்கணாயகன்கடாவச்
சரியிலாவரசன்றிகிரியையினைக்கச்சக்கராயுதம்வரவெருவிக்
கரியுடன்விழுந்துகடிதினிற்பாறிக்கமலனேடிவையெலாம்பகர்ந்தான்.

இரவிதன்சிறுவன்புதல்வன்மாதவத்தையிந்திரனியம்பிடக்கேட்டே
மரைமலருறுவோன்விமானமேலிலக்குமரியினையருச்சனைசெய்ய
வரியமாதவஞ்செய்மனன்செயலறிந்தேயருந்துயரெய்திமூர்ச்சிக்க
விரைவினினிறைவின்னுறுமசரீரியாகியேயிவைவிளம்பினனால். 103

திசைமுகவெனையுன்றிவாவினிற்றிருவாராதனஞ்செய்தனையதனால்
வசையிலாவயோத்திநகரினிற்சதுருயுகமிருந்ததற்பினர்மலரி
னிசையுறுமணிசேர்ந்திலங்குகாவேரித்தலத்திடைமருவியிவ்விடத்தி
னிசியுறமிரவாம்போதுவந்தடைவனீயெனைமனனுக்கியென்றான். 104

அரியவையருளவயன்றயரொருவியம்பொனின்விமானமீதமரும்
பரமனைக்கருடன்சிரசினின்வயக்கப்பரித்திடத்தவஞ்செயுமனன்முன்

விரைவினினடைந்த பணிமிசையிலங்கும் விமலனையருச்சியென் றுரை
திருகையின் விமானத்தொளிருமாதவனையிக்குவாகுக்காத்தீந்தான்[செய்

அரியுடன் விமானமளித்தயன்மறையவரசனும்மகிழ்ந்தெழுந்தாடி
விரைவினிற்றனதுசிரமிசைவிமானம்விளங்கவானரிவையர்நடிப்ப
மருமலர்மாரிபொழிந்திடப்பேரிவாரியின் மும்மடிமுழங்கச்
சரையுமாநதிசேரயோத்திமாநகரிற்றவரெலாம்வியப்புறச்சார்ந்தான்.

சரியில்காவேரிநதியிருமருங்குஞ்சார்ந்திடச்சரியில்சிரங்கப்
புரியடைந்துயருஞ்சிகரக்கோபுரங்கள்பொருந்தவேழாவரணத்து
ளரவணைமிசையினகல்விமானத்தினச்சுதன்வயங்கிடவிறைஞ்சித்
தெரிவையர்நிருத்தங்கீதமுந்திகழச்சிறந்தவாராதனஞ்செய்தான். 107

மீனமாதத்திற்சனியுரோகணியின்விளங்குகம்பத்தினிற்றுவசந்
தானுறத்திருநாணடத்தியேமனுவின்றனயன்றான்மகிழ்ந்திடவவன்றன்
குருவின்வழியிற்றுலங்கியவசமன்சுதன்றசாதனெனுமரசர்
வானவர்மகிழவயங்குபுத்திரயாகந்தனைவளர்த்தனன்மாதோ. 108

தயரதனிடத்துமகந்தனிற்சோளகுலம்வருதருமவன்மாத்தா
னியல்புறவடைந்தேயிணையிலாவிமானத்திலங்கியபரமனையிறைஞ்சி
செயலுறுமனன்றான்மருவுதேசத்திற்றிருவரங்கேசனாய்வரவே
மயர்வறத்தவஞ்செய்குவனெனமதியோன்மருவுபுட்கரணியின்வந்தான்.

இமகரனுறுபுட்கரணியின்மருவுமெதிரிலாமுனிவரையிறைஞ்சிக்
கமையுடையரசன்கழறுவானயோத்திகவினுறவிளங்கரங்கேச
னமரர்கடுதிப்பவிவணின்வந்தடையவருந்தவம்புரிவோனெனவே
சமனின்மாதவர்களவன்றனைநோக்கிச்சாற்றுவமுளதெனமொழிவார்.

சுரர்பயமுறவே முனிவரைத்துறத்து துன்மதிவியாக்கிரா சுரன்றா
ன், மருவிடுநீலி வனத்திடையடைய வவன்றனைக் கருடவாகனனாய், வ
ருமிறைதிகிரிப் படைகொடுவதைத்து மறுவிலாத் தார்ப்பியன்வைகுஞ்,
சரியிலாச்சிரமத் திலங்கவேயவன்றான் பணிந்தனம் யாஞ்செய்மாதவத்
தால். 111

முத்தியையளிக்குமுதல்வனைத்தொழுதுமுகுந்தவுன்றனையருச்சித்துப்
